# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

தொகுதி - 1

# திருக்குறள்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

## தொகுதி - 1

## திருக்குறள்

முதன்மைப் பதிப்பாசிரியர்
தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 1999
இரண்டாம் பதிப்பு : மார்ச், 2005
திருவள்ளுவர் ஆண்டு : 2036
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்

**விலை : ரூ. 90.00**

பதிப்பாசிரியர் குழு :

**தமிழாகரர் தெ. முருகசாமி**

**நா. சுப்பிரமணியம்**

**குன்றக்குடி பெரியபெருமாள்**

**க. கதிரேசன்**

**மரு. பரமகுரு**

செயலர் :
நினைவில் வாழும்
பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பன்**


கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

சிதம்பரம், சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சி

---

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021
தொலைபேசி : 25954528



தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
1925 - 1995

- ‘மணிமொழி’ என்னும் பெயரில் இயக்கப் பத்திரிக்கை வெளியிடல்.

1953 • ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.

- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954 • இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.

- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955 • அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.

- ‘தமிழ்நாடு’ நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956 • அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.

- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958 • குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959 • ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960 • மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962 • சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ 4000 தருதல்.

- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965 • இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966 • தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967 • திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.

- திருக்கோயில் கருவறைக்குள் சிலமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போர்தொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968 • இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - ‘திருக்குறள் உரைக்கோவை’ நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல் - திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.

- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.
- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுதல்; புத்தாடை வழங்குதல்.

1969
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;
- தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர் பொறுப்பேற்றல்.
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1970
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.

1971
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.

1972
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.

1973
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.
- "கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்" என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.

1975
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.
- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.

- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982 • குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.

- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு. எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984 • பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985 • நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.

- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- **மணிவிழா**

1986 • தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்

- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப்பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது.

1989 • இவர் எழுதிய "ஆலயங்கள் சமுதாய மையங்கள்" என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.


- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991 • இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.

- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993 • மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995 • இறைநிலையடைதல்.



# அடிகளாரின் குறள் பணிகள்

## பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்கூறு நல்லுலகில் சமய மறுமலர்ச்சிக்கு வழிகண்டவர். அடிகளார் பூர்வாசிரமத்தில் செட்டிநாட்டில் எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைக் கல்வி பயின்றார்கள். எங்கள் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்களும், அடிகளாரின் அண்ணன் அவர்களும் விநோபா பாவே வாசகசாலையைத் தொடங்கினர். அடிநாள் தொட்டு அடிகளாரை நான் நன்கறிவேன். அடிகளார் திருவண்ணாமலை ஆதீனத்தில் பொறுப்பேற்ற பின்னர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்கள். முதன்முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அடிகளார் அவர்களும் நாங்கள் நடத்திய தமிழர் திருநாள் திருக்குறள் விழாவில் ஒரே மேடையில் பேசினர். அப்பொழுது ஆத்திகமும் நாத்திகமும் ஒரே மேடையில் சந்திக்கின்றன என்ற செய்தியை வியப்புடன் நாளிதழ்கள் வெளியிட்டன.

50, 60களில் அடிகளார் தமிழ்மேடைக்குத் தம் பேச்சால் புதிய வலிமை சேர்த்தார்கள். தமிழகம் முழுவதும்

அடிக்கடி பயணம் செய்யும் நான் அடிகளாரின் நூற்றுக்கு மேற்பட்ட பொழிவுகளைச் செவிமடுக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன். அடிகளார் நூல் பலவற்றைப் படிக்கும் பேறு பெற்றேன். அப்பொழுதெல்லாம் சிந்தனைகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற வேணவா என்னுள்ளத்தில் முகிழ்த்தது. அது இன்று கைகூடுகிறது.

புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அடிகளார் அவர்களுக்கு டாக்டர் பட்டம் (D.Litt) வழங்கிய போது அவர்களிடம் வாழ்த்துப்பெற்று, அடிகளார் நூல் வரிசைத் திட்டத்தை விரிவாக விளக்கினேன். "நான் நினைக்கவில்லை. நல்ல திட்டமாக இருக்கிறது. செய்யலாம்'' என்று சொல்லி இசைவளித்தார்கள். அடிகளார் எழுதிய 50-க்கு மேற்பட்ட நூல்களையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களை நேரில் சந்தித்து ஆசிபெற்று நூல்வரிசைத் திட்ட அறிக்கையைப் பணித்தேன். மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்தி இசைவு தந்தார்கள். பதிப்புக்குழுவை உருவாக்கினார்கள். கட்டுரைகளை வகைப்படுத்தும் பணி தொடங்கிற்று.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்கள் கொண்ட 10 தொகுதிகளாக வெளியிடும் திட்டத்தில் இன்று முதல் தொகுதி வெளிவருகிறது.

1. திருக்குறள்
2. இலக்கியம்
3. சமயம்
4. சமுதாயம்
5. பொது

என 5 நிலைகளில் இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மறைமலைஅடிகளுக்குப்பின் 1960-90களில் சைவ உலகில் அடிகளார் பெரும்புரட்சி செய்தவர். சைவ சமய

மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவர். சமயக்காழ்ப்பின்றி சைவசமயத்தின் கோட்பாடுகளை, தத்துவக் கூறுகளை பொதுமக்களும் உள்ளம் கொள்ளும்படி விளக்கியவர் தமிழ்மாமுனிவர். சைவசமயத்தை நடைமுறைச் சமயமாக்கவும், சீர்திருத்தக் கருத்துக்கள் செயற்படவும் அல்லும் பகலும் அயராது உழைத்து, புதியதொரு விடியலைக் கண்டார்கள். பெரியாரும் போற்றும் வண்ணம் பெருமிதமாக வாழ்ந்தார்கள். தமிழ்நாட்டில் பெரிய சைவத்திரு மடங்கள் 18 இருந்த போதிலும் குன்றக்குடி ஆதீனமே மக்களால் பெரிதும் அறியப்பட்டிருந்தது. தமிழ் மறுமலர்ச்சியின் ஒரு கூறாகிய சமய எழுச்சி, திருமுறை எழுச்சி, திருக்குறள் இயக்கம் முதலியவற்றின் வாயிலாக, எழுச்சி மிக்க புதிய தமிழகத்தை உருவாக்கினார்கள்.

அடிகளார் அவர்களை

புரட்சித்துறவி

சிந்தனையாளர்

நூலாசிரியர்

சொற்பொழிவாளர்

நிறுவனர்

என ஐந்து நிலைகளில் வைத்து அடிகளாரின் பங்களிப்பை நாம் விளக்கலாம்; மதிப்பீடு செய்யலாம்.

**புரட்சித்துறவி :** தத்துவ தரிசனங்கள் அனைத்தையும் கற்றதோடு மார்க்சியமும் கற்றவர். சமூக இயலில் ஆழங்கால் பட்டவராதலால் தமிழ்ச் சமூக மாற்றத்திற்கு சைவ சமயம் வழியாக எவ்வாறு மேம்பாடு காணலாம் என உழைத்தார். தமிழ்வழிபாடு, ஆட்சிமொழி, பயிற்றுமொழி, இந்தி எதிர்ப்பு முதலிய அனைத்து இயக்கங்களுக்கும் தலைமையேற்று தமிழகத்திற்கு வழிகாட்டினார். அவருடைய எழுத்திலும், பேச்சிலும், புதுமைகள் பூத்துக் குலுங்கின. திருமடத் தலைவர்கள் பல்லக்கில் பவனிவந்த போது பட்டி தொட்டிகளுக்கெல்லாம் அடிகளார் சைக்கிளில் சென்று சமயம் பரப்பினார். புரட்சித்துறவி

அடிகளாரின் புரட்சிச் சிந்தனைகளை இந்த 10 தொகுதிகளிலும் நாம் காணலாம். நடைமுறைக்கு ஒத்துவராத சமயக் கருத்துக்களைத் துணிவோடு எடுத்துக்கூறிய சமயப் புரட்சியாளர்.

**சிந்தனையாளர் :** தமிழ்ச் சிந்தனைக்குப் புதுவளம் சேர்த்தவர். திரு.வி.க. நெறியில் சமுதாய நோக்கில் சமயச் சிந்தனைகளை வழங்கியவர். பன்னூற் பயிற்சியும், பேரறிஞரின் நட்பும், தொடர்ந்த மேடைப்பொழிவுகளும், பட்டறிவும் அவருக்குப் பல்வேறு புதிய சிந்தனைகள் தோன்ற வாய்ப்பளித்தன. துறவியாய், தமிழறிந்த, சான்றோராய் மட்டுமல்லாமல் மானுடம் மேன்மையுற வேண்டும் என்ற வேணவாவினால் எவர்க்கும் அஞ்சாமல், எதனையும் எதிர்பாராமல் புதிய சிந்தனை விதைகளைத் தூவினார்கள். அவை இன்று பூத்துக் குலுங்குகின்றன. அவரின் சிந்தனைகள் தனி நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

**நூலாசிரியர் :** பல்வேறு காலங்களில் பல்வேறு இதழ்களில் அடிகளார் எழுதிய கட்டுரைகள் நூல்வடிவம் பெற்றுள்ளன. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் அவர் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அறிஞர் பெருமக்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுகின்றன. சிறியனவும், பெரியனவுமாய் 54 நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் அடிகளாரின் சிந்தனைத் தெளிவும் விளக்கும் திறமும், விரித்துரைக்கும் வகையும் நூலாசிரியர் இயல்புகளாய் அமைந்துள்ளன. ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு நூலிலும் சமூகப் பார்வையுடன் கூடிய புதிய சிந்தனை, புதிய செய்தி ஒன்று இருக்கும்.

**சொற்பொழிவாளர் :** 1960-90களில் தலைசிறந்த சொற்பொழிவாளர் ஐவரைச் சுட்டினாலும், மூவரைச் சுட்டினாலும் அடிகளார் பெயர் முதல் வரிசையில் நிற்கும். புதுமைச் சிந்தனையாலும், புரட்சிக் கருத்துக்களாலும் தமிழக இளைஞர்கள் மத்தியில் பாராட்டப் பெற்றவர்.

**நிறுவனர் :** அருள்நெறித் திருக்கூட்டம் : அடிகளார் தொடங்கிய இந்த இயக்கம் தமிழ்ச்சைவ உலகில் புத்தார்வத்தையும், புத்துணர்ச்சியையும், புத்தெழுச்சியையும் உண்டாக்கியது. சிற்றூர்களில், பேரூர்களில் கிளைகள் முகிழ்த்தன. திருமுறைகள் வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றன. ஊர்தோறும், திருக்கோயில் தோறும் உழவாரப்பணி ஊக்குவிக்கப் பெற்றன. நாள்வழிபாடு ஒழுங்கு செய்யப் பெற்றது. வார வழிபாட்டுக்கூட்டம் வளர்ந்தோங்கியது.

தெய்விகப் பேரவை : தமிழக அரசின் இந்து அறநிலையத்துறையின் வழி தொடங்கப் பெற்ற இந்த அமைப்பு பேரியக்கமாகப் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது. சமய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இறைஉணர்வு நாளும் பெருக நல்லதொரு இயக்கமாக வளர்ந்தது.

திருக்குறள் பேரவை : தமிழ்மாமுனிவர் தோற்றுவித்த அமைப்புக்களில் இன்றும் இளமை குன்றாது மாநாடுகள் நடத்திவரும் பேரியக்கம் இது. தமிழறிந்தோர் எல்லோரும் திருக்குறள் அறிந்திடுதல் வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் திருக்குறள் கருத்தரங்கு நடைபெறுதல் வேண்டும். ஆண்டுதோறும் மாநில மாநாடுகள் நடத்துதல், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் திருக்குறள் மாநாடு நடத்துதல் முதலியன இதன் செயல்திட்டங்கள்.

திருக்குறளைத் தேசியநூல் எனப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று அடிகளார் எழுப்பிய குரல் இன்று நாடு முழுவதும் ஒலிக்கிறது.

# அணிந்துரை

## முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

உலகில் இன்று இல்லெனினும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் புகழுருவாய் என்றென்றும் நிலைத்திருப்பவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். பூ என்றால் தாமரை, ஊரென்றால் உறையூர் என்றாற்போல, 'அடிகளார்' என்று சொன்னால் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கிக் குன்றக்குடி அடிகளார் அவர்களையே குறிப்பதாயுள்ளது. 'வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திலள்' என்று கண்ணகியை இளங்கோவடிகள் குறிப்பது போல, மடங்களின் தளத்தை விடுத்து மண்ணில் கால் வைத்தறியா ஆதீனத் தலைவர்கள் பலரும் உள்ள இக்காலத்தில் கல்லிலும் முள்ளிலும், காட்டிலும் மேட்டிலும், கழனியிலும் புழுதியிலும் மக்களோடு மக்களாய் ஒன்றிப் பழகியும் மக்கள் நலப் பணிகளாற்றியும் வந்த ஆதீனத் தலைவர் குன்றக்குடி அடிகளார் ஒருவரேயெனில் மிகையன்று.

Leigh Hunt என்பார் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்று 'Abu Ben Adhem, may his tribe increase' எனும் முதலடியுடன் தொடங்குகிறது. ஒரு நாள் இரவில் அபூ பென் ஆதம் தன் அறையினுள் நுழைந்த ஒளிக்கற்றையில் தேவதை ஒன்று தங்கத் தகட்டில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து, 'என்ன எழுதுகிறீர்?' என்று கேட்டான். தேவதை, உலகில் கடவுளை யார் மிகுதியும் பூசை செய்கிறார்களோ அவர்கள் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதாகக் கூறியது. அப்பட்டியலில் அவன் பெயர் இல்லை. 'மக்களுக்குத் தொண்டு செய்யும் ஒருவன்' எனத் தன் பெயரை இறுதியில் சேர்த்துக் கொள்ளுமாறு அவன் வேண்ட, தேவதையும் அவ்வாறே எழுதிச் சென்றது. மறுநாளும் முன் நாள் போலவே தேவதை தோன்றியது. அதன் கையில் ஓர் ஏடு இருந்தது. அதில் கடவுள் யாரை மிகவும் நேசிக்கிறார் எனும் பெயர்ப் பட்டியல் இருப்பதாகத் தேவதை கூறியது. அபூ பென் ஆதம் தன் பெயர் அப்பட்டியலில் உள்ளதா என்று கேட்டபோது, அவன் பெயரே முதற்பெயராக இருப்பதாகத் தெரிவித்துத் தேவதை மறைந்தது. மக்கள் தொண்டே இறைவனுக்குச் செய்யும் உண்மையான பூசை என்பதை இக் கவிதை விளக்குகிறது.

"உழவன் உழவு செய்யும் இடத்திலே, சாலை அமைக்கத் தொழிலாளி கல்லுடைக்கும் இடத்திலே இறைவன் இருக்கிறான். அவர்களுடன் வெயிலிலும் மழையிலும் காய்கிறான். நனைகிறான். அவன் ஆடையில் தூசி படர்ந்திருக்கிறது. இறைவன் அங்கேயிருக்க, தாளிட்ட அடைபட்ட கோயிலில் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கிறாய்? வெளியே வா! அவன்போல நீயும் புழுதியில் இறங்கு; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் இறைவனைக் கண்டுகொள்" என்பது இரவீந்திர நாத தாகூரின் கீதாஞ்சலி பாடல் ஒன்றின் கருத்து. மக்களுடன் மக்களாக ஒன்றி உழைப்பதே உண்மையான இறைவழிபாடு என்பது இதன் கருத்து.

"உங்களுடைய பக்தியும் முக்தியும் யாருக்கு வேண்டும்? உங்களுடைய சாத்திரங்கள் என்ன சொல்லுகின்றன என்பது பற்றி யாருக்குக் கவலை? என்னுடைய நாட்டு மக்களை உயர்த்துவதற்காக நான் ஆயிரம் முறை வேண்டுமானாலும் நரகத்துக்குச் செல்லத் தயார் ..... நான் யாருடைய ஊழியனும் அல்லன். தன் முத்தியைப் பற்றி நினையாது பிறருக்கு உதவிபுரிந்து பணிசெய்பவனுக்கே நான் பணியாள்" என்பது சுவாமி விவேகானந்தர் வாக்கு. மக்களுக்கு உதவுதலே மெய்யான முத்தி என்பதை இது விளக்குகிறது.

ஏசு, தன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களிடம், "தாழ்ந்த நிலையிலுள்ள என் உடன்பிறந்தார்களாகிய மக்களில் ஒருவருக்கு நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதை எனக்கே கொடுக்கிறீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். அதேபோல அவரால் ஏற்கப்படாதவர்களிடம், "மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள என் உடன்பிறந்தவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். எனின் ஏழைக்குக் காட்டும் அன்பே, இறைவனுக்குச் செலுத்தும் அன்பு என்பது விவிலியக் கருத்தாகிறது.

இத்தகைய கொள்கைகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பே நம் அடிகளார். அவருடைய எழுத்துகள் அனைத்தையும் பல தொகுதிகளாக வெளிக்கொணரும் சீரிய பணியை மணிவாசகர் நூலகம் மேற்கொண்டிருக்கிறது. திருக்குறள் பற்றி அடிகளார் ஆற்றிய உரைகள், அவர் எழுதிய கட்டுரைகள், தனித்தனிக் குறளுக்கு அவர் தந்த விளக்கங்கள் கொண்டதாக இம் முதல் தொகுதி அடிகளாரின் வள்ளுவச் சிந்தனைகளை உள்ளடக்கியிருக்கிறது.

அடிகளார், திருக்குறளை அற நூலாக, நீதி நூலாக மட்டும் காண்பதோடு நின்றுவிடக் கூடாது; அதனை வாழ்வியல் நூலாகக் கொண்டு, வள்ளுவர் வழியில் நடந்தால் வையகம் தழைத்தோங்கும் என வலியுறுத்தி வந்தவர். "திருவள்ளுவர் நெறியில் இந்த வையகம் நடைபோடுமானால் இன்று இந்த உலகத்தை வருத்தும் துன்பங்கள் அனைத்தும் அகலும்; அன்பு வளரும்; அறம் வளரும்; பண்பாடு வளரும்; இந்த உலகம் இடையீடின்றி இயங்கும். இந்த உலகம் அழியாது; என்றும் நிலைபெற்று விளங்கும்'' என வள்ளுவர் வழியில் நடையிடுவதுதான் உலகம் உய்ய வழி என உறுதிபடக் கூறுகிறார்.

''இன்னமும் திருக்குறளுக்கு உரையெழுதிக் கொண்டிருக்கின்றோம்; அல்லது விவாதங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம்! ஆனால் திருக்குறள் நெறியை வாழ்வியல் நெறியாக்கச் சமூகம் முயலவில்லை" என வேதனைப்படுகிறார்.

"திருக்குறளை ஒரு சிறந்த இலக்கியம் என்றே பலர் கருதுகின்றனர். அஃது உண்மையேயானாலும் திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமன்று; திருக்குறள் பல்துறை தழுவிய ஒரு முழு நூல்;– அறிவியல் சார்ந்த நூல். திருக்குறளை இதுவரையில் யாரும் அறிவியல் முறையில் அணுகவில்லை'' என அங்கலாய்க்கிறார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - இது திருவள்ளுவர் காலத்தின் உயரிய கோட்பாடு. இக்கோட்பாடு உலகில் இடம் பெற்றால்தான் வெள்ளையர், கறுப்பர், தீண்டத்தகாதவர் என்று மனித குலத்தினை ஆட்டிப் படைக்கும் தீமைகள் மாயும். கடவுள் அருச்சனைகளால், ஆராதனைகளால், படையல்களால் திருப்தி செய்யத்தக்கவரல்லர் என்ற வள்ளுவத்தின் கொள்கை இடம் பெற்றால்தான் வாழ்க்கையோடியைந்த அறிவியல் சமயம் உலகில் வளரும். வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த வழிபாடு என்ற வள்ளுவத்தின் சமயநெறி வெற்றி பெற்றால்தான் சமுதாயத்தில் புரோகிதர்கள் உலவமாட்டார்கள்; சமய நிறுவனங்கள் தோன்றா; அவைகளுக்குள் ஆதிக்கப் போட்டிகளும் இரா. வள்ளுவத்தின் சமயம் வெற்றி பெறுமானால் தொண்டு நிறுவனங்கள் எங்கும் தோன்றும்; தொண்டர் குலம் தழைக்கும்; மனித குலமும் தழைக்கும்; எனவே வள்ளுவத்தின் சமயம் உலகப் பொதுச் சமயமாக மலரும் நாளே மனித குலத்திற்குப் பொற்காலம் படைக்கும் நன்னாளாகும்! - அடிகளார் கூறியுள்ள

அடிகளார், திருக்குறளை அற நூலாக, நீதி நூலாக மட்டும் காண்பதோடு நின்றுவிடக் கூடாது; அதனை வாழ்வியல் நூலாகக் கொண்டு, வள்ளுவர் வழியில் நடந்தால் வையகம் தழைத்தோங்கும் என வலியுறுத்தி வந்தவர். "திருவள்ளுவர் நெறியில் இந்த வையகம் நடைபோடுமானால் இன்று இந்த உலகத்தை வருத்தும் துன்பங்கள் அனைத்தும் அகலும்; அன்பு வளரும்; அறம் வளரும்; பண்பாடு வளரும்; இந்த உலகம் இடையீடின்றி இயங்கும். இந்த உலகம் அழியாது; என்றும் நிலைபெற்று விளங்கும்'' என வள்ளுவர் வழியில் நடையிடுவதுதான் உலகம் உய்ய வழி என உறுதிபடக் கூறுகிறார்.

''இன்னமும் திருக்குறளுக்கு உரையெழுதிக் கொண்டிருக்கின்றோம்; அல்லது விவாதங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம்! ஆனால் திருக்குறள் நெறியை வாழ்வியல் நெறியாக்கச் சமூகம் முயலவில்லை'' என வேதனைப்படுகிறார்.

"திருக்குறளை ஒரு சிறந்த இலக்கியம் என்றே பலர் கருதுகின்றனர். அஃது உண்மையேயானாலும் திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமன்று; திருக்குறள் பல்துறை தழுவிய ஒரு முழு நூல்;— அறிவியல் சார்ந்த நூல். திருக்குறளை இதுவரையில் யாரும் அறிவியல் முறையில் அணுகவில்லை'' என அங்கலாய்க்கிறார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - இது திருவள்ளுவர் காலத்தின் உயரிய கோட்பாடு. இக்கோட்பாடு உலகில் இடம் பெற்றால்தான் வெள்ளையர், கறுப்பர், தீண்டத்தகாதவர் என்று மனித குலத்தினை ஆட்டிப் படைக்கும் தீமைகள் மாயும். கடவுள் அருச்சனைகளால், ஆராதனைகளால், படையல்களால் திருப்தி செய்யத்தக்கவரல்லர் என்ற வள்ளுவத்தின் கொள்கை இடம் பெற்றால்தான் வாழ்க்கையோடியைந்த அறிவியல் சமயம் உலகில் வளரும். வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த வழிபாடு என்ற வள்ளுவத்தின் சமயநெறி வெற்றி பெற்றால்தான் சமுதாயத்தில் புரோகிதர்கள் உலவமாட்டார்கள்; சமய நிறுவனங்கள் தோன்றா; அவைகளுக்குள் ஆதிக்கப் போட்டிகளும் இரா. வள்ளுவத்தின் சமயம் வெற்றி பெறுமானால் தொண்டு நிறுவனங்கள் எங்கும் தோன்றும்; தொண்டர் குலம் தழைக்கும்; மனித குலமும் தழைக்கும்; எனவே வள்ளுவத்தின் சமயம் உலகப் பொதுச் சமயமாக மலரும் நாளே மனித குலத்திற்குப் பொற்காலம் படைக்கும் நன்னாளாகும்! - அடிகளார் கூறியுள்ள

இந் நன்னாள் மலர அவர் கூறியுள்ள கருத்துகள் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

கொடுமை தீர்க்க மாந்த குலம் போராடவும் வேண்டும் எனும் புரட்சிகரச் சிந்தனை கொண்டவராய் அடிகளார் விளங்கினார். சாணக்கியர், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் அரசியல் கருத்துகளுடன் வள்ளுவத்தை ஒப்பிட்டு அவர்களுடைய கருத்துகளைவிட திருக்குறள் நெறி மேம்பட்டிருப்பதை அடிகளார் நன்கு விளக்கியுள்ளார். கார்ல் மார்க்ஸ், 'மூலதனம்' எனும் நூலை எழுதியுள்ளார். அதில் நன்கு தோய்ந்த அடிகளார், "இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை விரும்புகின்றவர்கள், வள்ளுவத்தையும் மூலதனத்தையும் ஒரு சேரக் கற்றுத் தெளிய வேண்டும். வள்ளுவமும் மார்க்சீயமும் காட்டும் புதியதோர் உலகத்தை அமைக்கும் பணியில் போர்க் குணத்துடன் ஈடுபடவேண்டும். போரிட வேண்டும். சுகவாழ்வுப் போக்கிலிருந்தும் நுகர்பொருள் சந்தைகளிலிருந்தும் வெளியேறி சமூக சிந்தனையைப் பெற்று,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்

என, பாரதியார் கனவை நனவாக்கப் போரிடவேண்டும்" என எழுச்சி கொள்ளச் செய்கிறார்.

குறட் பாக்களுக்கு அடிகளார் தரும் விளக்கங்கள் எளிய நடையில் பொருட் செறிவுடன் விளங்குகின்றன. "செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். நாம் செய்யும் செயல்கள் பலவற்றில் தூய்மை காணவேண்டும் என்று தனித் தனியாக முயல்வதைவிட செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி மனத்தை மாசின்றி வைத்துக் கொள்வது நல்லது; சிறந்தது. இதன் மூலம் நாம் செய்யும் அறங்களும் மிகச் சிறந்து விளங்கும்" - இது 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்னும் குறளடிக்கு அடிகளார் தந்துள்ள விளக்கம்.

அடிகளாருடைய எழுத்து நடை தனித்த தன்மையுடையது. எளிய தொடர்கள். எதிரிலிருந்து பேசுவதுபோன்ற உணர்வைத் தோற்றுவிப்பது; பேச்சும் எழுத்தும் ஒன்றுபோலவே அமைந்த பாங்குடையது. சான்றுக்கு ஒரு பகுதி: "உன்னுடன் பழகியவர்கள் உனக்குக் கொலையனைய கொடுந் துன்பங்களைச் செய்யும் பொழுதும் செய்பவர் மீது சினவற்க;

பகை கொள்ளற்க; யாதொரு தீமையும் செய்யற்க; அந்த நேரத்தில் அவர் செய்த ஏதாவது ஒரு நன்மையை நினைத்துக் கொள். அந்த நினைப்பு கொடுமை செய்தார்மாட்டு அன்பைக் காட்டத் தூண்டும்; பகையை மாற்றும்; பண்பாடு வளரும். இத்தகு வாழ்வே மானுடத்தின் சிறந்த வாழ்வு; சால்பு மிகுதியும் உடைய வாழ்வு".

நகைச் சுவையே பேச்சு என்றுள்ள இக்காலத்தில் அடிகளார் பேச்சில் நகைச்சுவை மிகமிக அருகியே தோன்றும். ஆனாலும் மக்கள் கூட்டத்தின் சிந்தனையைச் சிறிதும் சிதறவிடாது தன்பால் ஈர்த்துத் தேனில் படிந்த வண்டுபோலத் திளைக்கச் செய்யும் திறமை அவருடைய கருத்துச் செறிவான பேச்சுக்குண்டு.

தக்க எடுத்துக்காட்டுகள் வாயிலாக அவர் செய்திகளை விளக்குவது ஒரு தனிப்பாங்கு. "அன்பு எப்போதும் உலகத்தைத் தழீஇயது. உலகையே உறவாகக் கொண்டது. தேநீர் அருந்துபவர்கள் 'கப்-சாசர்' பார்த்திருப்பீர்கள். கப்பில் தேநீர் சூடாக இருக்கும். சாசரில் ஊற்றினால் சூடு ஆறிவிடும். ஆதால் சூடான தேநீரை சாசரில் ஊற்றிக் குடிப்பது அன்றாடக் காட்சி. சுருங்கியவெல்லாம் துன்புறும்; அழிவுறும். விரிந்த எல்லாம் வளரும்" - அவருடைய எடுத்துக்காட்டு விளக்கத்திற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

அடிகளாருடைய பேச்சிலும் எழுத்திலும் வரையறை களாகப் பலவற்றைக் காணமுடியும். சான்றுக்குச் சில:

"அறம் என்பது மனித வாழ்வின் தீமையை அகற்றித் துன்பங்களை விலக்கி இன்பத்தைத் தருவது".

"நாகரிகம் என்பது உலகை இடையறாது உய்த்து நடத்தும் ஒரு சிறப்புடைய உணர்வு வழிப்பட்ட ஒழுக்கமாகும்"

"துறவு என்பது ஒரு வாழ்க்கை முறை. எந்த ஒன்றின்பாலும் அளவற்ற ஆசை வைப்பின் தீதாக முடியும்"

"ஒருவரின் சாதனையை அனுபவித்த ஒருவர் மகிழ்ந்து, தம் உள்ளம் நெகிழ்ந்து மொழியும் சொற்களே புகழ்"

வறுமை, பசிக்கொடுமை பற்றி நினைக்க நேர்ந்தால் அடிகளாருடைய கண்களில் துன்பக் கண்ணீர் மளமளவென வழியும். உணர்ச்சி வயப்பட்டு அவருடைய பேச்சும் அப்போது கலங்கும். 'அந்த வேளை அந்த ஞானிக்குள்ளும் ஒரு தேம்புதல்' உண்டாகும். வறுமை தீரவில்லையெனில் கடவுள்தான் எதற்கு என்று கூடக் கேட்கிறார். "கடவுள் புரோகிதர்களிடத்தில்

*சிக்கிவிட்டார்; சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தருவதில்லை. காரணம் பூசாரிக்குப் பணப்பெட்டி நிறைய வேண்டும். அவர் வல்லார் பக்கம் சார்ந்து, மாட்டாதாரை ஒதுக்கி, வல்லாரின் செல்வக் குவிப்புக்குக் கடவுளைக் காட்டி நியாயம் கற்பித்துக் கொடுத்து வளர்கின்றார். கடவுள் நம்பிக்கையுடையோரின் நீதிக்குப் புறம்பான இச்செயல்தானே நாத்திகத்தைத் தோற்றுவித்தது? கடவுள் தோன்றிய பிறகு, 'இன்றும் வருவது கொல்லோ?' (வறுமை இன்றும் வருமோ?) என்றால் கடவுள் நெறி எதற்காக?" - கடவுள் பெயரால் ஏய்த்துப் பிழைப்போர் மீது அடிகளார் ஏவுகின்ற வினாக் கணை இது. சமய நிலையங்களே வழிமாறியுள்ள நிலையையும் சாடுகிறார். "இன்று நம்முடைய சமய நிலையங்களில் சூழ்ந்திருக்கின்ற குறைகளில் தலையாது மடைப்பள்ளியின் ஆட்சியேயாகும். ஐம்புலன்கள் ஆர அருளாரமுதத்தை அனுபவிக்க வேண்டிய திருக்கோயில்களில் பொறிகளுக்குத் தீனிபோடும் சூழ்நிலை" - இது அடிகளாரின் கவலை.*

*கள்ளங் கபடமற்ற உள்ளம்; தெளிந்த சிந்தனை; கேட்பவர் காதுகளில் சென்று தைக்கும் எடுப்பான குரல், உடல் குலுங்கக் 'கட கட' எனச் சிரிக்கும் இயல்பு. காண வருபவர்க்குக் கையில் பழம் கொடுக்கும் இயல்பு. கூட்டங்களை முடித்துக்கொண்டு திரும்பும்போது இரவில் வழியில் எங்காவது ஒரு மரத்தடியில், கட்டித் தந்த இட்டளிப் பொட்டலத்தைத் தானே விரித்து, உடனிருக்கும் நண்பர்களுக்கும் தந்து தானும் உண்ணும் எளிமையோடியைந்த ஒரு துறவியை குன்றக்குடி அடிகளாரைத் தவிர வேறு எவரையேனும் காண முடியுமா? இல்லை. எண்ணித்தான் பார்க்க முடியுமா? வள்ளுவ நெறி, தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கை, கார்ல் மார்க்சின் பொருளாதாரச் சிந்தனை ஆகியவற்றின் ஒன்றிணைந்த வார்ப்பாக அடிகளார் திகழ்ந்து வந்தார்.*

ஏறு விடாமல்! ஏறு மென்மேல்!....
அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!....
உலகம் உண்ணஉண் உடுத்த உடுப்பாய்
புகல்வேன் உடமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து பொதுவில் நடத்து
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

தி.2.

எனும் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல், அடிகளாரின் நெஞ்சம் கவர்ந்த பாடல்களில் ஒவ்று. புவியைப் பொதுவில் நடத்த வேண்டுமானால் வள்ளுவமே ஆட்சிமுறையாக வேண்டும் என்பதை அடிகளார் அழுத்தந் திருத்தமாகக் கூறிவந்துள்ளார். "குரு நானக்கின் சீக்கிய வேதம் இன்று பாஞ்சாலத்து மக்களை வழி நடத்தும் மறை; அந்தச் சட்டத்திற்கு முரணில்லாமல்தான் இந்திய அரசியல் சட்டம் செயற்பட வேண்டும். இது அவர்கள் பெற்ற வெற்றி. முகமதியர்கள் அத்தகைய வெற்றி பெற்றுள்ளார்கள். கிறித்துவர்களும் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழ் மக்கள் இழிநிலையில் கற்பித்துக் கூறும் இந்து சட்டத்தின்படிதான் இன்று நடத்தப்பட்டு வருகிறார்கள். வள்ளுவத்தின் வழியில் அல்ல" என வள்ளுவர்வழி நம் ஆட்சிமுறை அமையவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறுகிறார். இந்நூலில், அவர் கூறியுள்ள கருத்துகள் வள்ளுவ ஆட்சி முறையைத் தோற்றுவிக்கத் துணை செய்யும் எனும் துணிவோடு செயற்படுவோம்!

அடிகளாருடைய அனைத்து எழுத்துகளையும் ஒரு சேர ஒரே இடத்தில் , ஒரே வேளையில் காணும் வகையில் பதிப்பிக்க முன்வந்துள்ள மணிவாசகர் பதிப்பக உரிமையாளர், **பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன்** அவர்களைத் தமிழுலகு நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. மேலை நாட்டுப் பதிப்புகளைப் போல அடிகளாரின் நூல்களை அழகிய கட்டமைப்புடன் பேழையினுள்ளே தொகுதி-1, தொகுதி-2, .. எனும் வரிசையில் காணுகின்ற வாய்ப்பினை உருவாக்கியுள்ள திரு. மெய்யப்பன் அவர்களை உளமாறப் போற்றி மகிழ்கிறேன்.

பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்கள் முனைவர் தெ. முருகசாமி, நா. சுப்பிரமணியம், குன்றக்குடி பெரியபெருமாள், மரு. பரமகுரு, க. கதிரேசன் ஆகியோர் நற்பணியாற்றியுள்ளனர். நிறைந்த பாராட்டுகள்.

மணி மாலையின் முதல் மணி - ஒளி பெறுவோம்! நலமடைவோம்!

**அன்புடன்,**

**சு. செல்லப்பன்**



*தவத்திரு*

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

# முன்னுரை

## தவத்திரு பொன்னம்பல அடிகளார்

அருள்நெறித் தந்தை, தமிழ்மாமுனிவர் இருபதாம் நூற்றாண்டின் அப்பரடிகள், மனிதநேய மாமுனிவர், காவி உடுத்திய கார்ல் மார்க்ஸ் எனப் பலவாறு அழைக்கப்பெற்ற நம் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுதிய பல்வேறு நூல்கள் இன்று தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. திருக்குறளைப் பற்றிய பல்வேறு சிந்தனைகள் இன்று செறிவாகச் சீர்செய்யப்பட்டு சிறப்புடன் நமது கரங்களில் தவழ்கின்றது. பேச்சே வாழ்க்கை, வாழ்க்கையே பேச்சு என்று உலக உபதேசியாக மட்டும் இராமல் பேசியதை வாழ்வில் நடைமுறைப்படுத்திச் சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத செயற்கரிய செயல்களை ஆற்றிய அருந்தவ வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

உலக உயிர்கள் நலம்பெற உபதேசித்த அப்பர் அடிகளும், சுவாமி விவேகானந்தர் பெருமானும், வள்ளலார் பெருந்தகையும் எந்த அடைப்புக் குறிகளுக்குள்ளும் தம்மைச் சிறைவைத்துக் கொள்ளவில்லை. மடங்கள் என்ற நிறுவனங்களில் தங்களைச் சிறைவைத்துக் கொள்ளாமல் சுதந்திர வானில் சுடர்விட்டுப் பிரகாசித்தார்கள். பட்டு, பீதாம்பரங்களை அணிந்துகொண்டு பல்லக்கில் பவனிவரும் - காலத்திற்கு ஒவ்வாப் பரம்பரை மரபுகளை மறுதலித்துவிட்டு, தம் கடமைக்குரிய மரபுகளை வழுவாது நிறைவேற்றி, தம் பாதங்கள் நோகப் பாலைவனத்தில் பயணம் செய்து பாமர மனிதனின் வாழ்வை வளப்படுத்தச் சிந்தித்துச் செயலாற்றிய சமய சமுதாய உலகில் முதல் திருமடத்தின் தலைவர் நம் அருள்நெறித் தந்தையேயாவார். சுவாமி விவேகானந்தர் பெருமானும், வள்ளலார் பெருந்தகையும் மடாதிபதிகளாய் இருக்கவில்லை! திருமடத்தின் பொற்கூண்டுக்குள் மரபுகள் எனும் கத்திரிகள், சுதந்திரச் சிறகுகளை வெட்டிய பொழுதும் அதையும் தாண்டி, உலக

மக்களின் ஆன்ம விடுதலைக்கு வித்திட்டு, வேதம் புதுமை செய்த மடாலயத் தலைவர் தாம் நம் மகாசந்நிதானம்! வளர்ந்து வருகின்ற உலகில் பேச்சும் எழுத்தும் வாழ்க்கை வாணிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது, சமுதாய மாற்றங்களுக்கு விதைக்கின்ற நாற்றங்காலாக அவற்றை மாற்றிக் காட்டினார்கள். உருவமும், கோலமும் அடையாளமும் மட்டும் அல்ல துறவு நெறி! எண்ணும் எண்ணத்தால் நினைக்கும் உள்ளத்தால், வாழும் வாழ்க்கை முறையால் வாழ்வதுதான் உண்மைத் துறவுநெறி என்று துறவிகளிடம் மிக்க கண்டிப்பாக இருந்த திருவள்ளுவப் பெருந்தகையின் குறள்நெறியை, குவலயம் எங்கும் பட்டிதொட்டி எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டு, குறள்நெறிக்கு இயக்கம் கண்ட முதல் துறவி நம் மகாசந்நிதானமே ஆவார். குறள்நெறி பற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், ஆய்வுச் சிந்தனைகள், வானொலிச் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்களில் மலர்ந்த மலர்கள்தான் இன்று திருவள்ளுவர் சிந்தனை பற்றிய நூல் தொகுப்பாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

சீனத்தில் கன்பூஷியஸ், கிரேக்கத்தில் சாக்ரட்டீசு, பிரெஞ்சு தேசத்தில் ரூஸ்ஸோ, சோவியத்தில் மார்க்சியம் புரட்சியை - மாற்றத்தை விளைவித்ததைப் போலத் தமிழ் மண்ணில் தமிழ் நிலத்தில் திருவள்ளுவப் பெருமானின் சிந்தனைகள் ஏன் புரட்சியை, மாற்றத்தைத் தோற்றுவிக்கவில்லை? என்ற நியாயமான வினாவினை மகாசந்நிதானம் எழுப்புகின்றார்கள். சிந்தனையைக் கிளறும் இந்த ஆழமான வினாவிற்கு அற்புதமான விடையையும் தருகின்றார்கள். "தமிழ் நிலத்தை, தமிழ் மண்ணை ஆண்ட அரசர்கள் அருளரசர்களாக இருந்தார்கள். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று புறநானூறு பாடும். "உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்" என்று கம்பன் தசரதனைப் பாடுவான்! முடி ஆட்சிக் காலத்தில் மன்னன் உடம்பாகவும் மக்கள் உடம்பை இயக்குகின்ற உயிராகவும் வாழுகின்ற ஆட்சிமுறை இருந்தது. புறாவிற்காகத் தன்

தசையை அறுத்த சிபிச் சக்கரவர்த்தியும் கன்றை இழந்த பசுவிற்காகத் தன் மகனைத் தேர்க் காலில் இட்ட மனுநீதிச் சோழனும், அநீதி இழைக்கப்பட்ட அபலைப் பெண்ணிற்காக உயிர்நீத்த பாண்டியன் நெடுஞ்செழியனும், கொழுகொம்பின்றி வாடிய முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளலும், தண்தமிழுக்குத் தலைஈந்த குமணவள்ளலும் போன்ற அருளரசர்கள் ஆண்டமையால் உயிர்க்குலம் துன்பத்தைச் சந்திக்கவில்லை! நலம் செய்யாத அரசுகள் சில வாய்த்தபோதிலும் அவை மனிதகுலத்திற்குத் தீங்கு இழைக்கவில்லை. நலம் செய்யாததோடு தீங்கிழைக்கும் அரசுகளை நோக்கித்தான் புரட்சிகள் தோன்றும். இடையிடையே இருள் கவிந்தாலும் வள்ளுவர் வழித்தோன்றியவர்கள் இலக்கிய மாணவர்களாகவே அமைந்துவிட்டோம்! பரிமேலழகர் காலம் முதல் இன்றைய உரையாசிரியர்கள் வரை பாட்டுக்குப் பொருள்வரையும் உரையாசிரியர்களாக வளர்ந்து விட்டோம். திருக்குறள் நெறிக்கு எழுத்தில் உரை கூறுகின்றோம். வாழும் வாழ்க்கையில் உரைசெய்யத் தவறிவிட்டோம்! திருவள்ளுவரை வழிபாட்டுக்குரிய பொருளாக மாற்றிவிட்டோம்! வழிகாட்டுப் பொருளாக ஏற்கத் தவறிவிட்டோம்!" என்று அருள்நெறித் தந்தை திருக்குறள் வாழ்வியல் நூலாக வெற்றி பெறாமைக்குக் கூறும் விளக்கம் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்ற திருக்குறள், கொல்லாமை எனும் அதிகாரத்தில் ஏன் வைக்கப்பட்டுள்ளது? என்ற வினாவினை எழுப்புவார்கள்! ஈகையில் வைக்கப்பட்டிருக்கலாம், ஒப்புரவறிதலில் வைக்கப்பட்டிருக்கலாம், விருந்தோம்பலில் கூறி இருக்கலாம். கத்தி எடுத்துக் கொன்றால் மட்டும் கொலை என்பதன்று. பெற்ற செல்வத்தைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்து, பலரையும் பேணி வளர்க்காமல் சோறிட்டு மருந்து முதலியன வழங்கிப் பலரையும் பேணி வளர்த்துப் பாதுகாக்காமல்

சாகடித்தலும் கொலைக் குற்றமே என்பதனை உணர்த்தவே இந்தக்குறள் கொல்லாமை அதிகாரத்தில் அமைந்திருக்கின்றது என்ற அரிய விளக்கம் அருமையானது.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

என்னும் குறளுக்கு அறிவியல் பார்வையில் தருகின்ற விளக்கம் அற்புதமானது. ஊர் நலம் போற்றுபவனின் விளைநிலம் உரிமையால் தனி மனிதனுடையதாக இருப்பினும் நிலம் பேணப்படுவதில் பொதுவுடைமையாகப் போற்றிப் பேணப்படும். உரிமையாளர் விவசாயம் செய்ய மறந்திருந்தால்கூட ஊரார் அவருக்காக வேளாண்மை செய்து விளைச்சலை வீடு கொண்டுவந்து சேர்ப்பர் என்ற விளக்கம் பாராட்டுக்குரியது.

"அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானொ(டு) ஊர்ந்தான் இடை"

என்பதற்கு, சமய ஞானியாய் இருந்துகொண்டு கூறும் விளக்கம் அடிகள் பெருமான் சமய உலகின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட புரட்சித்துறவி என்பதனைப் பறைசாற்றுகின்றது.

மரபு வழிப்பட்ட சமயவாதிகள் வறுமைக்கும் ஏழ்மைக்கும் காரணமான பழியை, பரம்பொருள் மீதும் விதி - ஊழின் மீதும் போட்டுத் தப்பித்துக் கொள்ளும் பொழுது, "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்று வாழ்க்கை வழித்தடத்தில் உரை கூறிய வள்ளல் பெருமான்தாம் நம் அடிகள் பெருந்தகை!

அறிவு என்பது செய்திகளின் தொகுப்பு அல்ல! நூல்களின் இருப்பிடம் அல்ல. கற்றதைத் திரும்ப, கூறியது கூறும் கிளிப்பிள்ளை மொழி அல்ல! துன்ப நீக்கத்திற்குரிய மருந்து! நேற்றையத் துன்பத்தை இன்றைய இன்பமாக மாற்ற உதவும் கருவிதாம் அறிவு என்ற விளக்கம் புதுமையானது; உலகம் முழுமைக்கும் பொதுமையானது.

வள்ளுவ மருத்துவர் உயிரைத் தேடுகின்றார். வாழ்பவனை எல்லாம் அவர் உயிர் உள்ளவனாக ஏற்றுக் கொள்ளவில்லை. இடுகாட்டில் எரியும் பிணங்கள்! நடுவீட்டில் நடைபோடும் பிணங்கள் என்று கூறுகின்றார். சுவாசிப்பதாலும் இதயம் துடிப்பதாலும் உடல் இயங்குவதாலும் உயிர் இருப்பதாக ஒத்துக் கொள்வதில்லை. இயந்திரங்களும் தான் இயக்கினால் இயங்குகின்றன. கடிகாரமும் பெண்டுலம் அசைந்தால் ஓடுகின்றது. இயந்திர மனிதனும்தான் இன்று இயங்குகின்றான். இதயம் இல்லா மனிதனும் இயங்குகின்றான். எவன் இதயத்தில் அன்பு துடிக்கின்றதோ அவனே உயிர்த் துடிப்புடைய மனிதன் என்று வகைப்படுத்துவது இதுவரை உலகம் எண்ணிப் பாராத சிந்தனை ஆகும்.

நட்பு, காதல், ஒப்புரவில் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் காணுகின்ற வாழ்க்கைப் போக்கோடு எண்ணிப் புதிய சிந்தனையைத் தந்திருப்பது எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

"குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்"

என்ற குறள் நெறிக்கு பொது வாழ்வில் - பொது நன்மைக்குப் போராடும் பொழுது மான அவமானம் பார்க்கத் தேவை இல்லை என்ற விளக்கம் சிந்திக்கத்தக்கது. இந்தக் குறளுக்கு வாழும் வாழ்க்கையால் உரை சொன்னவர் பேரறிஞர் அண்ணா என்பதைச் சுட்டிக்காட்டி இருப்பது இளைய தலைமுறைக்கு வழிகாட்டுவதாகும்.

வள்ளுவம் கடவுளை நம்புகின்றது. அது ஆணும் அல்ல; பெண்ணும் அல்ல. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள் - கோட்டைகள் இல்லை. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை; அது பேரறிவு! தூய்மையான அறிவு! குணங்களின் திரு உரு!

இன்பத்தின் திரு உரு! அன்பின் திரு உரு! அறத்தின் திரு உரு! என்ற வரிகள் உண்மையான, போலித்தனம் இல்லாத சமய உலகை அடையாளம் காட்டுகின்றது.

திருக்குறள் ஒரு சமயத்திற்காகத் தோன்றிய நூல் அன்று! அது சமயச் சார்பற்ற நூல். ஆயினும் மனித குலத்தைச் சிந்தனையில் - அறிவியலில் - வாழ்க்கையில் வழிநடத்தும் நூல். திருக்குறள் கொள்கை சமயமாக உருப்பெறுகின்றது. அறிவின் வழிப்படும் பொழுது அன்பு கருக்கொண்டு அருள் உருப்பெறுகின்றது என்ற வைர வரிகள் சமயம் உறைந்துள்ள இடத்தை நமக்கு அடையாளம் காட்டுகின்றது.

முறை செய்து காப்பாற்றும் மன்னவனுக்குச் செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பும் அறிவுறுத்தும் நல்ஆலோசகர்களும் தேவை என்கிறார். உயிர்க்குலம் துன்புறும் போரை, விரும்பாத போக்கும் எதிர்பாராத தாக்குதலும் எதிரிகளால் ஏற்படலாம். எனவே நல்ல படை பலமும் தேவை என்கிறார்.

ஆண்டவன் வரம் கொடுத்தாலும் பணப் பெட்டியின் மீது பித்துக்கொண்ட பூசாரிப் புரோகிதர்கள் எனும் நந்திகள் சமய வாழ்க்கையைச் சடங்கு தன்மையுடையதாக மாற்ற வல்லார்க்குச் சாமரம் வீசுகின்றனர்.

'நியாயம் வழங்க வேண்டிய அரசியல், வாய்ப்புடையார் வாயிலில் காத்துக்கிடக்கும் சேவகத் தொழிலாக மாறிவிட்டது. எங்கு நாட்டின் நீதியியலை முறைப்படுத்தி நிர்வகிக்கின்ற அரசு தோன்றவில்லையோ அங்கு அரசை ஆட்டிப்படைக்கின்ற தனியார் நிதிக்குவியல் தோன்றும்' என்ற சிந்தனைக்குரிய வாக்கு நினைவிற் கொள்ளத்தக்கது. திருவள்ளுவ நெறிவழி மனிதகுலத்தை மேம்படுத்துவதற்கு அக வாழ்விலும் புற வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கக் கூறுகளை ஆழமாகச் சிந்தித்து. அற்புதமாக நமது மகாசந்நிதானம் தமிழ்ச் சமுதாயத்திடம் ஒப்படைத்துள்ளார்கள். இந்தச் சிந்தனைப் பெட்டகத்தைச் செயலாக்க வேண்டியது நமது கடப்பாடு.

பல குழுக்களாக விரவிக்கிடக்கின்ற தமிழ் இனத்தை ஒருமைப்படுத்த திருவள்ளுவப் பெருமான் முயன்றதைப் போல, பல பொழிவுகளாக விரவிக்கிடந்த கருத்துப் பெட்டகங்களைத் தொகுப்பு நூலாக மாற்றும் முயற்சியில் மணிவாசகர் பதிப்பகம் வெற்றி கண்டுள்ளது. பதிப்புக் கலையில் முத்திரை பதித்த வித்தகர் மெய்யப்பன், இதிலும் முத்திரை பதித்துள்ளார்.

இந்நூல் எழுத்துக் கருக்கொண்ட நாள் முதல் இன்றுவரை அல்லும் பகலும் அயராது உழைத்த பெருமை நம் ஆதீனக் கவிஞர் மரு. பரமகுருவைச் சாரும். பலவகைகளில் இந்நூல் தொகுக்கும் களத்தில் கடமை ஆற்றிய இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் தெ. முருகசாமி, பேராசிரியர் நா. சுப்பிரமணியம், ஆதீனப் புலவர் க. கதிரேசன், எழுத்துச்செம்மல், பெரியபெருமாள் போன்றவர்களின் பணிகள் அளப்பரியன; எண்ணி எண்ணிப் போற்றும் கடப்பாட்டுக்குரியன.

இந்நூலுக்கு அரியதொரு அணிந்துரை நல்கிய திரு. சிலம்பொலி செல்லப்பனாருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வரிய நூலின் கருத்துக்களை, சிந்தனைப் பெட்டகங்களைச் செயலாக்க மகாசந்நிதானம் திருநாமத்தைச் சிந்தித்துப் பயணம் செய்வோம்!

இந்நூலை வாசிப்பதோடு நிறுத்திவிடாது அருள்நெறித் தந்தையின் சிந்தனைகளைச் செயலாக்குவதே, இந்நூலுக்கு அணிவிக்கின்ற பொன் அணியாகும். அருள்நெறித் தந்தையின் கனவு, நனவாகக் கற்றவழியில் கடமை ஆற்றுவோம்.

# உள்ளுறை

| | | |
|---|---|---|
| 1. | திருக்குறள் பேரவை - வெள்ளை அறிக்கை | 27 |
| 2. | வள்ளுவர் நெறி | 38 |
| 3. | திருவள்ளுவர் திருநாள் சிந்தனைகள் | 47 |
| 4. | அழுக்காற்றை அகற்றுவது எப்படி? | 53 |
| 5. | திருக்குறளில் அரசியல் சமூகவியல் | 60 |
| 6. | திருக்குறள் நெறிசார்ந்த அறிவியல் | 93 |
| 7. | வள்ளுவமும் மார்க்சியமும் | 97 |
| 8. | சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள் | |
| | திருவள்ளுவர் - வாழ்வியல் | 103 |
| | திருவள்ளுவர் - சமயவியல் | 138 |
| | திருவள்ளுவர் - அரசியல் | 170 |
| 9. | குறட்செல்வம் திறனாய்வு | 219 |

அச்சும் அமைப்பும்
தமிழவேள் ச. மெய்யப்பன்
மணிவாசகர் பதிப்பகம்

# 1

# திருக்குறள் பேரவை வெள்ளை அறிக்கை

**திபி. 2021, வைகாசி, 5 (19.5.1990), சென்னை.**

திருக்குறள் தோன்றிய காலத்தில் மானிட உலகம் முடியாட்சியின் கீழ் அமைந்திருந்தது. ஆனால் மக்கள்நலந் தழீஇய முடியாட்சிகளாக இல்லாமல் கொடிய கொடுங் கோலாட்சிகளாகவே அமைந்திருந்தன. ஆயினும் தமிழகத்தில் மட்டும் கொடுங்கோலாட்சியாக அமையாமல் ஓரளவு மக்களுக்கு நலம் பயக்கும் ஆட்சியாக அமைந்து விளங்கியது. அதனால்தான் தமிழகத்தில் இங்கிலாந்தில் நடந்த புரட்சி போலவோ, பிரெஞ்சுப் புரட்சி போலவோ உண்டாகவில்லை. அதனால்தான் சமுதாய நலம் தழீஇய, அரசியற் சிந்தனை சார்ந்த வாழ்வியலை விளக்கும் திருக்குறள் தமிழகத்தில் தோன்றியது.

திருக்குறள் நெறியில் மாந்தர் ஒரு குலம். இனம், மொழி, சமயம், சாதி, நாடு வேறுபாடுகளற்ற ஒரு குல அமைப்பே இது. நாட்டுப்பற்றுக் கூடத் தன்னாட்டு வளர்ச்சியை மையமாகக் கொண்ட அளவுக்குட்பட்டதுதான். நாட்டுப் பற்றின் காரணமாக ஒரு நாடு பிறிதொரு நாட்டுடன் போராடுதல், அழித்தல் முதலிய கொடிய போர்க்களங்

களைப் பற்றிய செய்திகள் வரலாற்று ஏடுகளில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளன என்பதை ஆழ்ந்த சிந்தனையுடன் ஏற்று, "வரலாறு திரும்பி வரும்" என்ற பழமொழியைப் பொய்யாக்கும் வகையில் ஏற்படும் நாட்டுப்பற்று வரவேற்கப்படும். அஃதன்றி, நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையேயுள்ள எல்லைகளைப் பெரிதுபடுத்தி, பிரிவினை உணர்வுகளையும் ஆக்கிரமிப்பு உணர்வுகளையும் வளர்க்க நாட்டுப்பற்று கருவியாக அமைதல் கூடாது. நாட்டுக்கும் நாட்டுக்கும், இடையேயுள்ள எல்லைகளை அகற்றி மானிடத்தை இணைக்கவே திருக்குறள் நெறி முயற்சி செய்யும். காலப்போக்கில் உலக அரசு காண்பதே திருக்குறட் சமுதாயத்தின் இலட்சியம்.

திருக்குறட் சமுதாயத்தில் எந்தவித வேறுபாடுகளுக்கும் அங்கீகாரம் இல்லை. வேறுபாடுகளை வற்புறுத்துகின்ற, வளர்க்கின்ற எந்த ஓர் அமைப்பும் இயக்கமும் திருக்குறட் சமுதாயத்தில் இருத்தல் இயலாது; இருக்காது. சமயம், ஆன்மாவைச் சார்ந்த, வளர்ச்சியின்பாற்பட்ட அறிவியல் சாதனமாக அங்கீகரிக்கப் பெறும்; ஆன்மாவின் - உயிரின் தரப்பாடு, அறிவு, சால்பு, பண்பாடு ஆகியவைகளால் அறியப்பெறும். இத்தகு உயரிய விழுப்பங்களையே ஆன்மிகம் என்று திருக்குறள் கருதுகிறது. திருக்குறட் சமுதாய ஆன்மிகம் - கடவுள் நம்பிக்கை, குணங்கள் அடிப்படையில் - "எண் குணத்தான்", "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்ற நிலையிலேயே ஏற்றுக்கொள்ளப்பெறும். திருக்குறள் நெறியில் கடவுள் வழிபாடு என்பது "பொய்தீர் ஒழுக்க நெறி" நிற்பதேயாகும்.

ஆன்மிகம் என்ற பெயரில் மத வேற்றுமைகளையும் மூடப்பழக்கங்களையும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ எந்தவோர் அமைப்பும் பரப்ப முடியாது. அத்தகைய முயற்சிகள் திருக்குறட் சமுதாயத்தில் முற்றாகத் தடை செய்யப்படும். கடவுள் நம்பிக்கையின் பெயரால் மனித குலத்தில் பிரிவினைப்படுத்துதலும் ஒதுக்கல் கொள்கை

களும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு நியாயம் கற்பிக்கும் முறை அல்லது மனப்போக்கும் முற்றாக வெறுத்து ஒதுக்கப்பெறும். வலிமைக்கும் வலிமையின்மைக்கும் இடையி லுள்ள இடைவெளி, தக்க பயிற்சியின்மூலம் குறைக்கப் பெறும்; காலப்போக்கில் முற்றாக அகற்றப் பெறும். வலிமையின்மை முழுமையான அனுதாபத்திற்குரிய சாதன மாகவோ, வலிமையுடைமை வெறுக்கத் தக்கதாகவோ கருதப் பெறாது.

இச்சமுதாயத்தில் ஒவ்வொரு பகுதியினரின் அறிவுத் திறனும் சமுதாயத்தின் சொத்தாகும். ஆனால், அந்தத் தனித்திறமையை, உயர் மனப்பான்மையுடன் ஒதுக்கவும், சமுதாயத்திலிருந்து சமுதாயத்தின் ஒரு பகுதியினரை ஒதுக்கவும், ஆதிக்கம் செய்யவும், சுரண்டவும் கருவியாகப் பயன்படுத்த உரிமை இருக்காது. சமுதாய மேம்பாட்டுக்கு அவர்களுடைய அறிவும் திறனும் பயன்பட வேண்டும். அதுபோலவே, வலிமையற்றவர்கள் தொடர்ந்து வலிமை யின்மையைப் பட்சாதாபமாக்கித் தொடர்ந்து சலுகைகளில் திளைத்துச் சவலையாக வாழவும் அனுமதிக்காது. வலிமையில்லாதவர், திட்டமிட்டுச் சில ஆண்டுகளுக் குள்ளாகவே வலிமை பெறும்படி வளர்க்கப் பெறுவர். பொதுவாக, "ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காகவும்" என்னும் சமுதாய நியதி ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் இடம் பெறும்; நடைமுறைப்படுத்தப் பெறும்.

மனித குலத்தில் தனியுடைமைச் சமுதாய அமைப்புத் தோன்றிய பிறகும் பொருளியற் சார்பு கொண்ட பிறகும் உரிமைகளின் எல்லையைப் பராமரிக்கும் நோக்கத்தில் அரசியல் தோன்றியது. அரசியலும் ஒருவகை விஞ்ஞானமே. மானுடத்தின் சீலம் பொருந்திய நல்வாழ்க்கைக்கு அரசியல் தேவை. திருவள்ளுவரும் பொருட்பாலில் அரசியல் எனும் தலைப்பில் 25 அதிகாரங்கள் எழுதியுள்ளார்.

மானுடத்தின் அனைத்துச் சிறப்புக்கும் அரசியலே அடிப்படை என்கிறார் திருவள்ளுவர். நாட்டு மக்களிடத்தில்

நல்லொழுக்கம் வளர வேண்டுமென்றால் அரசியலில் ஒழுக்கம் இருக்க வேண்டும். திருக்குறள் கூறும் ஆட்சிமுறை மக்களாட்சி முறையேயாகும். திருக்குறள் தோன்றிய காலத்தில் அரசுகள் இருந்தும் குடியாட்சி முறை தழுவிய முடியாட்சியைத்தான் அது கூறுகிறது. இம்முடியாட்சியில் குடியாட்சிக்குரிய தன்மைகளையே கூறுகிறது. இதனை,

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (544)

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்" (448)

என்ற திருக்குறள்களால் அறியலாம். திருக்குறள் தோன்றிய காலத்தில் முடியாட்சி யிருந்தமையால் திருவள்ளுவர் இங்ஙனம் கூறினார். எனவே, திருக்குறள் நெறியில் அரசியல் அமைப்பு, குடியாட்சியமைப்பேயாம். வரலாற்றுப் போக்கில் உலக அரங்கில் முடியாட்சிகள் சடசடவெனச் சரிந்து விட்டன.

திருக்குறள் நெறி வழி அமையும் குடியாட்சி, முறையில் மட்டுமே குடியாட்சியாக இருக்காது. உண்மையிலேயே உணர்வாலும் மிகச் சிறந்த குடியாட்சியாக அமையும். இன்றைய குடியாட்சி முறையில் மக்களிடமிருந்து வாக்குகள் வாங்கப்படுகின்றன; மக்கள் வாக்களிப்பவராக வளர்க்கப் பெறவில்லை. இன்றைய குடியாட்சி முறையில் - குறிப்பாகத் தேர்தல் முறையில் சாதி, மதம், பணம் ஆகியவை செய்யும் அராஜகங்கள் எழுதிக் காட்ட முடியாதவை. திருக்குறள் ஆட்சியமைப்பில் - தேர்தல்களில் சாதி, மதம், பணம் ஆகியவற்றின் ஆதிக்கங்கள் ஒழிக்கப் பெறும்; வாக்களிப்பதென்பது கட்டாயக் கடமையாக்கப்பெறும். தேர்தல் ஆணைக்குழு முழுச் சுதந்திரமுடைய தன்னாட்சியமைப்பாக இயங்கும். வேட்பாளர்களின் தேர்தல் செலவை, தேர்தல் ஆணைக்குழுவே ஏற்கும். அரசியற் கட்சிகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மிகச் சிறந்த ஒழுங்கியல்முறை

உருவாக்கப்பெறும். இப்போதுள்ளதைப் போல, ஆதிக்கப் போட்டிகளாலும் கோபதாபங்களாலும் அரசியற் கட்சிகள் தோன்ற இயலாது.

திருக்குறள் சமுதாய அமைப்பில் குறிக்கோளற்ற அரசியற் கட்சிகள் தோன்ற அனுமதிக்கப்பட மாட்டா. திருக்குறள் வழி தோன்றும் அரசியற்கட்சிகளைச் சார்ந்தவர்கள் மனித நேயம், சுயக்கட்டுப்பாடு, கடுமையாக உழைத்தல், சலத்தால் பொருள் செய்யும் விருப்பின்மை, எளிமை, தனக்கென முயலாது பிறர்க்கென முயலும் நோன்பு ஆகிய தகுதிகளைப் பெற்று விளங்குவர்; பெற்று விளங்கச் செய்வர்.

நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் ஆகியன "அளவிறந்த பெரும்பான்மை" பெற்ற ஒரே காரணத்திற்காகச் சிறுபான்மையினர் கருத்து மதிக்கப் பெறாதிருக்க அனுமதிக்க மாட்டா; கருத்தின் பயன்பாடு நோக்கி எடுத்துக் கொள்ளும். பொதுமைக்கு இடையூறில்லாத வகையில் தனி ஒருவரின் சுதந்திரம் மதிக்கப் பெறும். ஒப்புறுதி வழங்கப் பெறும். தனி ஒருவரின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதன் மூலமே சமுதாயத்தின் பொதுக்கடமை நிகழ்வுறும். "பொதுமைக்கு ஊறில்லாத தனிமனித உரிமைகள்" என்ற கோட்பாடு உறுதியாக நடைமுறைப்படுத்தப் பெறும். பெரும்பான்மை யின் காரணமாகத் தோன்றும் முரட்டுத் தனத்திற்குத் திருக்குறளின் குடியாட்சிமுறை கடிவாளமாக அமையும்; எந்த ஒரு கருத்தும் அலட்சியப்படுத்தப்பட மாட்டாது. கருத்து வேற்றுமைகள் காழ்ப்பாகவும் பகைமையாகவும் வளர இடமளிக்கப் பெறமாட்டா; குற்றம் சுமத்துதல், பழி தூற்றுதல் போன்றவைகள் திருக்குறள் நெறியில் சிறுமை என்று புறக்கணிக்கப் பெறும்; விதிமுறைகளாலும் கட்டுப்படுத்தப் பெறும். ஆனால் பயனுடைய விமர்சனங்கள் வரவேற்கப் பெறும்; ஊக்குவிக்கப் பெறும்.

திருக்குறள் காட்டும் ஆட்சியில் அரசுக்கும் மக்களுக்கு மிடையேயுள்ள இடைவெளி குறையும். திருக்குறளரசு

எப்பொழுதோ ஒரு தடவை பயன்படுத்துவதற்குரிய அதிகாரங்களை மட்டுமே பெற்றிருக்கும். அரசின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பெற்று, ஆங்காங்கு ஆட்சி உறுப்புக்களாகிய ஊராட்சி, நகராட்சி, கூட்டுறவு அமைப்பு முதலிய பல்வேறு அமைப்புகளைக் கண்டு, ஆங்காங்கு உரிமைகளும் அதிகாரங்களும் பரவலாக்கப்பெறும். இன்று இருப்பதைப் போல் அரசு, மக்களைத் தாங்காது; மக்கள் தாம் வளர்வது மட்டுமின்றி அரசைத் தாங்கும் ஆற்றலாக விளங்கி, அரசின் பொறுப்புக்களை ஏற்பார்கள்; அரசை இயக்குவார்கள்.

மக்கள் வாழ்வுக்கும் அரசுக்கும் பொருளே அடிப்படை. திருக்குறள் காட்டும் பொருளியல் நுட்பமானது. திருக்குறள் தனியுடைமைச் சமுதாயத்தை மறுப்பதன்று; ஆயினும், தனியுடைமைக்குச் சில அறநெறிகளை – விதிகளை விதிக்கிறது.

1. "வெஃகாமை வேண்டும் பிறன் கைப்பொருள்" (178)

2. "பழிமலைந்து எய்திய ஆக்கம்" (657)

3. "தாழ்விலாச் செல்வர்" (731)

4. "தீதின்றி வந்த பொருள்" (754)

ஆகிய தொடர்கள் தாம் உழைக்காது உழைப்பவரின் பங்கைத் திருடிச் சேர்க்கும் செல்வத்தின் மதிப்பின்மை யையும், அச்செல்வமுடையாரின் மதிப்பின்மையையும் கூறுவதுடன் இவற்றின் எதிர்மறைகளையும் கூறுவதாக அமைந்துள்ளமையைத் திருக்குறட் சமுதாயம் உய்த்துணர்ந்து நெறிப்படுத்தும். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்", "இரப்பின் கரப்பார் இரவன்மின்" என்று வரும் தொடர்கள் ஒப்புரவு நெறி மேற்கொண்டு ஒழுகுதலைக் கூறி நெறிப்படுத்தும் மாட்சிமையை உணர்க. ஆயினும் கடந்த கால வரலாற்றுப் போக்கைக் கூர்ந்து நோக்கினால், எந்தத் தனியுடைமை யாளரும் எந்த நெறிமுறையையும்

பின்பற்றியதாகத் தெரிய வில்லை. அதுமட்டுமன்று. தனியுடைமையாளர்கள் எந்த நெறிமுறையையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்பது போல அரசியல் ஆட்சிமுறைகளும், மதத் தலைவர்களின் சாத்திரங்களும் அமைந்துள்ளன.

எத்தகைய கொடிய சுரண்டல்காரர்களும் மதச் சடங்குகள் மூலம் புனிதமாக்கப்படுவர் என்ற இழிநிலை அமைந்துவிட்டது. அதுபோலவே, ஆள்கிறவர்களுடைய ஆசாபாசங்களுக்கு இரைபோடும் தனியுடைமை முதலாளிகள் மேலும் மேலும் கொழுத்து வளரும் வகையில் சட்டங்கள் தளர்ந்தன; அல்லது தளர்த்தப்பட்டன. இதுவே வரலாற்றின் படிப்பினை. இன்றும் இந்த நிலையே தொடர்கிறது. ஆதலால், இன்றைய சூழ்நிலையில் திருக்குறள் காட்டும் சமுதாயத்தில் தனியுடைமைச் சமுதாயத்திற்கு ஏற்பு வேண்டுமா என்பதை நாம் கவனமாக மறு ஆய்வு செய்தாக வேண்டும். அங்ஙனம் ஆய்வு செய்யும்பொழுது நம்மைப் பொறுத்தவரையில் தனியுடைமைச் சமுதாய அமைப்பு அவசியமில்லாதது என்றே தோன்றுகிறது. தனியுடைமைச் சமுதாயத்தில் பொருள், தீங்கு தருவதாக வளர்ந்திருக்கிறது. மனித மதிப்பீடு குறைந்து பணமதிப்பீட்டுச் சமுதாயமாக வளர்ந்திருக்கிறது. பரம்பரைச் சொத்துரிமை யின் காரணமாக உழைப்பின் ஊற்றுக்கண்கள் அடைபட்டு, விட்டன. ஆதலால், பொதுவுடைமைச் சமுதாயமே ஏற்புடையது. பொதுவுடைமைச் சமுதாய அமைப்பைத் திருக்குறள் உடன்பட்டிருக்கிறது என்பதற்கும் சான்றுகள் இருக்கின்றன. பொதுவுடைமைச் சமுதாயத்திலும் கூட உற்பத்திக் கேந்திரங்கள், கருவிகள் மட்டுமே பொதுவுடைமை யாகும். உற்பத்தி செய்யும் மனிதன், உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவதற்கும் தேவைக்குரியவற்றைப் பெறுவதற்கும் முற்றிலும் உரிமையுடையவன். ஆக, பொதுவுடைமைச் சமுதாயத்திலும் கூட உழைப்பின் ஆற்றலிலும், வாழ்வின் நுகர்விலும் தவிர்க்க இயலாத நிலையில் உறுத்தல் தராத

வேற்றுமைகள் இருக்கலாம்; இருக்கவும் கூடும். ஆயினும் காலப் போக்கில் இவையும் கூடத் தவிர்க்கப்படுதலே மனித குலத்திற்கு நல்லது. எப்பொழுது? திருக்குறள் கூறும் நெறியில் அறிவறிந்த ஆள்வினையுடைமை மானுடத்திற்கு அழகென்று உணர்ந்து, உளமார உழைக்கும் உள்ளப்பாங்கு ஏற்படும் நிலை வரும் வரையில்! உழைக்காமல் உண்பது வெட்ககரமானது என்று உணரும் நிலை வரும் வரை ஊதியத்தில் வேறுபாடிருக்கும்; ஊதிய வேற்றுமைகளுக்கேற்ப நுகர்விலும் வேறுபாடு இருக்கும். இந்த வேறுபாடு, வளரும் சமுதாயத்திற்கு உந்து சக்தியாக அமையும். எந்தச் சூழ்நிலையிலும் உற்பத்திக் களங்களையும், உற்பத்திக் கருவிகளையும் எவரும் தனியுடைமையாக்கிக் கொள்ளும் முயற்சிகள் முளையிலேயே ஒடுக்கப் பெறும். மனித குலத்திற்குத் தீங்கிழைக்கும் சுரண்டும் தன்மையுடைய பொருளாதார ஆதிபத்தியம் உருவாக இடமளிக்காது.

திருக்குறள் தோன்றிய காலத்தில் வேளாண்மைத் தொழிலும் கால்நடை வளர்ப்பும் தொழிலாகக் கொண்ட சமுதாயம் இருந்திருக்கிறது. உலோக அடிப்படையில் அமைந்த தொழில்களும் உழு கருவிகள் செய்தலும் ஊக்குவிக்கப் பெற்றன.

குழல், யாழ் முதலியன திருக்குறளில் பேசப் பெற்றிருப்பதால் இசைக்கருவிகள் செய்யும் தொழில்களும் வளர்ந்திருக்கின்றன என்று தெரிகிறது. “அறு தொழிலோர்” என்று திருக்குறள் குறிப்பிடுவது உழவர், நெசவாளர், தச்சர், கொல்லர், வணிகர், படை வீரர் ஆகிய தொழில்கள் செய்தோரையேயாகும். இத்தொழில் பிரிவுகள் இன்றும் தொடர்ந்து வருகின்றன; இனியும் தொடர்ந்து வருவன.

மனித சமுதாயத்தின் சிறந்த தொழில்களில் ஒன்றாகிய வாணிகம் திருக்குறட் காலத்தில் இருந்திருக்கிறது. ஆயினும் தொழிற்புரட்சி ஏற்படவில்லை. இன்றைய மக்கள் தொகை அனைத்திற்கும் நல்வாழ்க்கை வழங்கவும் காலத்தொடு வளர்ந்துள்ள நுகர்வுப் பொருள்களின் வளர்ச்சிக்கும்

வளர்ச்சிக்கு இசைந்தவாறு மக்களின் நுகர்வுத் திறனை வளர்ப்பதற்கும் தொழில் வளர்ச்சி இன்றியமையாதது. "உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்" என்பது பழங்கால நாகரிகம். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி" என்பது கொழுத்த நிலப்பிரபுத்துவ காலத்தில் எழுந்த மொழி. இன்றைய சூழ்நிலையில் நுகர்வுத் திறன் வளர்வது வரவேற்கத் தக்க ஒன்றேயாம். நுகர்வுத் திறன் வளர வளரத் தொழில்கள் வளரும்; மானுடத்தின் வாழ்க்கையும் நலமுற அமையும். ஆதலால், திருக்குறள் காட்டும் சமுதாய அமைப்பில் நிலம் பொது; விளைபொருள்களும் பொது. வேளாண்மைத் துறையில் கூட்டுச் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப் பெறும்; வளரும் புத்தம் புதிய தொழில்கள் கூட்டுறவு முறையில் அமையும்; வாணிகம் முழுவதும் கூட்டுறவு முறையில் அமையும்; நடைபெறும். கட்டுப்படுத்தப் பட்ட முறையில் வர்த்தகம் செய்யச் சில தனி நபர்கள் உரிமை பெறலாம். திருக்குறட் சமுதாய அமைப்பில் செல்வச் குவியல் கட்டாயம் தவிர்க்கப் பெறும்.

மானுட வாழ்க்கை சிறப்புறப் பல்வேறு நலன்கள் தேவை. அவற்றுள் சிறப்பானவை உடல் நலம், ஆன்ம நலம் ஆகியனவாம். இவையிரண்டும் பல்வேறு நலன்களை உள்ளடக்கியவை. காற்று, தண்ணீர், உணவு, உழைப்பு, குடியிருப்பு, மருந்து ஆகியவற்றால் உடல் நலம் அமையும். கல்வி, கேள்வி, அறிவு, மண வாழ்க்கை, பிரார்த்தனை ஆகியவற்றால் ஆன்ம நலம் அமையும். இவைகளை மக்கள் அனைவரும் எளிதில் பெறத் திருக்குறள் கண்ட ஆட்சி, வழி வகை செய்யும். ஆற்றல் துடிப்புடைய மக்கள் தம் தேவைகளைக் கூட்டுறவால் உருவாக்கிக் கொள்ளும் சூழலும் வாய்ப்பும் உருவாக்கப் பெறும். அரசு துறைதோறும் முழு அளவில் துணை நிற்கும்.

கிராம, நகர அளவில் நலன்களுக்குரிய அனைத்து நலப் பணிகளையும் மக்களே கூட்டு முயற்சியில் அமைத்து நிர்வாகம் செய்வர். கோட்டம், மாவட்டம் அளவில் – பெரிய

அளவில் செய்யவேண்டியவற்றை அரசு அமைத்துச் செய்யும். அனைவருக்கும் கட்டாயமாக, மேல் நிலைக் கல்வி வரையிலும் மற்றும் தொழிற்கல்வியில் மேல் நிலை வரையிலும் கல்வி வழங்குவது சமுதாயத்தின் - அரசின் பொறுப்பும் கடமையுமாகும். கல்வித் தரம் பேணப் பெறும். கல்வித்துறையில் மாணவர்கள் தரத்திற்கும் நாட்டின் தேவைக்கும் ஏற்பக் கற்க அனுமதிக்கப் பெறுவர். அதாவது, இளைஞர்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த கல்வியிலேயே ஊக்குவிக்கப் பெறுவார்கள். எனினும், விருப்பார்வங்கள் புறக்கணிக்கப் பெறமாட்டா. மனித நலத்திற்குத் தேவையான கலை, இலக்கிய, கலாச்சார, பொழுதுபோக்கு வசதிகள் அனைவருக்கும் எளிதில் கிடைக்க வழி வகை செய்யப் பெறும்.

அனைத்து மட்டத்திலும் அனைத்துப் பணிகளையும் கண்காணித்து நெறிமுறைப்படுத்த அரசு அலுவலர்களும் மக்கள் பிரதிநிதிகளும் அடங்கிய "மக்கள் குழு"க்கள் அமைக்கப் பெறும். இம் மக்கள் குழுக்களே பணியாளர் தேர்வு, பணியாளர்களின் பணிக்காலக் கண்காணிப்பு முதலிய பணிகளை மேற்கொள்ளும். அனைத்து மட்டத்திலும் பணித்திறன் கண்காணிக்கப் பெறும்; வளர்க்கப் பெறும். முதியோர் இல்லங்கள் அமைக்கப் பெறும்.

ஒரு சிறந்த சமுதாயத்தில் நீதிமன்றங்கள் தேவைப்பட மாட்டா. ஆயினும் மானுடம் முழுமையான, ஆன்ம நலத்தை அடையும் வரை இங்கும் அங்குமாகச் சிற்சில மோதல்கள் இருக்கவே செய்யும். அதனால், குறைவான எண்ணிக்கையில் குறைவான அளவுக்கு முறைமன்றங்கள் அமைந்து இயங்கும். முறை மன்றங்களுக்கு எடுத்த எடுப்பில் சென்று விடாதவாறு நடைமுறைகள் கடினப்படுத்தப் பெறும். தொடக்க நிலையில், நகர, கிராம அளவில் மக்கள் முறையீட்டு மன்றங்கள் தனிமனித, குடும்பச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் அமைக்கப் பெறும்.

திருக்குறட் காலம் முடியாட்சிக் காலம். அதனால், திருக்குறளில் 'படை', 'அரண்' பேசப் பெற்றுள்ளன. திருக்குறள் ஆட்சி சமூக நலன் பேணும் குடியாட்சியாத லாலும், உலக முழுவதும் இந்த ஆட்சியே அமைய வேண்டும் என்பதாலும் திருக்குறட் சமுதாயம் படை வலிமையைப் பெருக்காது. அதுபோலவே, எந்தவொரு நாடும் படை வலிமை பெறாதபடி போராடும். அவசரத் தேவைக்கு மக்கள் குலத்துக்குப் பாதுகாப்பாகப் பொதுவான படையை - வலிமையான படையை அமைத்துக் கொள்ளத் துணை செய்யும்; அதற்காகத் தொடர்ந்து போராடும்.

திருக்குறள் ஆட்சி, ஒவ்வொருவரும் மூன்று மொழி கற்பதை வலியுறுத்தும். தாய்மொழி, நாட்டுமொழி, உலகப் பொது மொழி என்பவை அவை. ஐ.நா. பேரவை உலகப் பொதுமொழி ஒன்றைத் தேர்வு செய்யவேண்டும். இந்த உலகப் பொதுமொழியை உலகிலுள்ள அனைத்து நாட்டு மக்களும் கட்டாயமாகப் படிக்கவும், எழுதவும், பேசவும் கற்றுக்கொள்ள வேண்டும். விருப்பமுடையவர்கள் அறிவு வளர்நிலையில் வரையாது கற்கலாம்.

பிறப்பினால் எல்லாரும் ஒத்த நிலையினர்; ஒரே உரிமை உடையவர்கள். சிலர், தனித்திறன்கள் பெற்றிருந்தாலும் அவற்றுக்கெனத் தனி உரிமை ஏதும் இல்லை. எல்லாருக்கும் கல்வி; உழைப்பாளர்க்கு உயர்வு; தாழ்விலாச் செல்வர் பலர் ஆவது; மலரினும் மெல்லிய காமம் கலந்து மகிழும் வீடுகள்; பிறை வளர்வது போன்ற நட்பு; முறை கெடாது காவல் புரியும் அரசு; செந்தண்மை பூண்டொழுகும் அத்தண்மை முதலியன கொண்ட சமுதாய அமைப்பே திருக்குறட் சமுதாய அமைப்பு.

இத்தகைய சமுதாயத்தை அமைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு தொடர்ந்து பணி செய்வதென்று திருக்குறள் பேரவை உறுதி கொள்கிறது.

# 2

## வள்ளுவர் நெறி

திருவள்ளுவர் ஒரு பிறவிச் சிந்தனையாளர். திருவள்ளுவர் மனித குலத்தின் மேம்பாட்டுக்காகவே திருக்குறளை இயற்றினார். திருக்குறள் தோற்றத்திற்குரிய களம், அந்தக்காலச் சமுதாய அமைப்பு முறையேயாம். திருக்குறள் தோன்றிய காலம் பொற்காலம் அல்ல. தமிழின வாழ்வியல் செப்பமாக இல்லை. ஏன்? உலக மாந்தரினமே சிறப்புடன் வாழாத காலம் அது. அதனால் மனித சமூகம் சிறப்புடன் வளர, வாழத் திருவள்ளுவர் வழிகாட்ட விரும்பினார்.

திருவள்ளுவர் காலத்திலேயே கடவுள்கள் பலர் வழிபடு பொருளாயினர். சிந்தனையில் சிறந்த வழிபாடு இல்லாமல் ஆரவாரத் தன்மையுடைய சடங்குகள் அதிகமாயின. கடவுள் வழிபாடு பொறி, புலன்களைப் பக்குவப் படுத்துதற்குரியது. ஆனால், திருவள்ளுவர் காலத்திலிருந்து இன்றளவும் கடவுள் வழிபாட்டில் சிந்தனை ஒன்றியிருத்தல் முதலியனவற்றிற்குப் பதிலாக எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் ஆசை, அகந்தை, தீனி ஆகியவற்றிற்குரியனவாக வழிபாட்டு முறைகள்

அமைந்து விட்டன. திருவள்ளுவர் இறைநெறி சார்ந்த ஒழுக்கமாகப் பொறிவாயில் ஐந்தவித்தலையே கூறுகின்றார்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்." (6)

என்பது குறள். இந்தத் திருக்குறளுக்குப் "பொறிகளை அடக்குதல்" என்று அறியாதார் பொருள் கொள்வர். இது தவறான கருத்து. இயற்கைக்கு முரண்பட்டதும்கூட. "அடக்கு அடக்கு என்பர் - அம்மா பொருளொன்றும் அறிந்திலனே!" என்று சான்றோர் அருளியுள்ளமை காண்க! பொறிகள், புலன்களில் இயக்கத்தை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி வாழ்ந்து பயன் கொள்ளுதல் என்பதே முறை.

உயிரியற்கை சென்றவிடத்தெல்லாம் செல்வது. அதனை அங்ஙனம் செல்லவிடாது தடுத்துச் செலுத்தி மடைமாற்றம் செய்து நன்னெறிப்படுத்துதலே திருக்குறள் நெறி. சுவையும் பயனும் இல்லாதனவற்றைச் சமைத்தல் வழிப் பக்குவப்படுத்துதல் போல, அதாவது கிழங்கு அவித்தல் என்று சொல்வதைப் போலப் "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்ற சொல்லுக்குப் பொருள் கொள்ள வேண்டும். அதாவது மானிடப் பரப்பாகிய சமுத்திரத்தில் மனிதன் சங்கமம் ஆவதற்குரிய தகுதியைப் பெறவேண்டும். அந்த வாழ்க்கையே பொறிவாயில் ஐந்தவித்தான் ஒழுக்க நெறிநிற்கும் வாழ்க்கை. திருக்குறள் காட்டும் சமய வாழ்க்கை. இறைவழிபாடும் இதுவே.

மானுடம் வெற்றி பெறத் திருக்குறள் எழுந்தது. மானுடம் வாழ்வாங்கு வாழத் திருக்குறள் நெறி வழி காட்டுகிறது. வாழ்வாங்கு வாழ்தல் என்றால் பொருள் என்ன? மானுடத்திற்கு வாய்த்த பொறி, புலன்கள் ஆற்றல் உடையவை; படைப்பாற்றல் உடையவை. ஐந்தவித்தான் ஆற்றல் அளப்பரியது என்றும் திருக்குறள் கூறும். இங்கும் பொறி, புலன்களை அறிவார்ந்த நிலையில் - பயனுறு

நெறியில் செலுத்தித் திறம்பட வாழ்தல் என்பதே கருத்து. எல்லாரும் உடல் தாங்கி உலா வரலாம்; உண்ணலாம்; உறங்கலாம். ஆனாலும் அவர்கள் எல்லாரும் வாழ்பவர்கள் அல்லர். "வாழ்கின்றாய், வாழாத நெஞ்சமே!" என்ற மாணிக்கவாசகர் அருள்வாக்கிற்கு ஏற்ப வாழாதவர்கள், பிழைப்பு நடத்துபவர்கள் பலர். வாழ்கின்றவர்கள் என்று கணக்கெடுத்தால் ஆயிரத்தில் ஒருவர்கூடக் கிடைத்தல் அரிது. வாழ்கின்றவர்கள் புவியை நடத்துவார்கள்; பொதுவில் நடத்துவார்கள்; போர்க்குணம் உடையவர்களாக இருப்பார்கள்; ஓயாது ஒழியாது நலம் செய்வார்கள்; நன்றே செய்வார்கள்; காலத்தை வென்று விளங்குவார்கள். இவர்கள் பூமிமேல் புகழத் தக்கவர்கள். புகழ்பட வாழும் நெறி திருக்குறள் நெறி.

மனிதன் சாதாரணமாகத்தான் பிறக்கிறான். ஆயினும் அவனுடைய வளர்ச்சிக்குரிய கருவிகள் - வாயில்கள் ஏராளம்; "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்று தேவாரம் கூறும். மானுடம் வளர, வாழத் திருவள்ளுவர் காட்டும் நெறி கற்கும் நெறி! ஆம்! 'கற்க' என்றார் திருவள்ளுவர். நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தொடர்ந்து கற்கவேண்டும். கற்ற நூலின் கருத்துக்களை அசைபோட்டு ஜீரணித்து அறிவாக்க வேண்டும். அறிவினைச் செயலாக்க வேண்டும். அறிவுடையார்க்கு அழகு "என்ன தெரியும்" என்பதல்ல; "என்ன செய்யத் தெரியும்" என்பது தான், அதனால் திருவள்ளுவர் அறிவைச் செயலுடன் தொடர்புடைய கருவியாக்கினார். "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்றார். கருவி என்றால் Instrument என்பது பொருள். துன்பமும் துயரும் இயற்கையுமல்ல; நிலையானவையுமல்ல. அறிவினைக் கருவியாகக் கொண்டு துன்பத்தினை வெல்ல வேண்டும். நல்ல நிறைவான - பாதுகாப்பான - மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அறிவு கருவியாகப் பயன்படுதல்வேண்டும். அறிவைக் கருவியாகக் கொண்டு

பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் திருவள்ளுவர் காட்டும் நெறி. அறிவு இருக்கிறது. அறிவைக் கருவியாகவும் அறிந்திருக்கிறோம். ஆனால் அறிவைக் கருவியாகப் பயன்படுத்த, வாழ்க்கையை இயக்க உந்து சக்தி ஒன்று வேண்டுமே, அந்த உந்து சக்தி எது?

அந்த உந்து சக்திதான் ஊக்கம். ஊக்கம் உள்ளத்தைச் சார்ந்தது. சோர்வும், பயமும் ஊக்கத்திற்குப் பகை. "உள்ளம் உடைமை உடைமை" என்றார் திருவள்ளுவர். உள்ளம், ஊக்கத்தின் களமாதலால் உள்ளத்தையே ஊக்கம் என்றார். ஊக்கம் என்பது ஒரு நுண்ணுணர்வு. ஊக்கத்தின் வெளிப்பாடு முயற்சி; உழைப்பு. திருவள்ளுவர் முயற்சியை "ஆள்வினை" என்று குறிப்பிடுகிறார். 'அறிவறிந்த ஆள்வினை' என்பது திருக்குறள். 'அறிவறிந்த ஆள்வினை' என்று கூறியதால் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பம் என்று பொருள் படுகிறது. அறிவறிந்த ஆள்வினையே ஆகூழ். அறிவறிந்த ஆள்வினையே பயன் தரும். இதுவே திருவள்ளுவர் நெறி!

வாழ்க்கையின் இயக்கம் நுகர்வுப் பொருள்களா லாகியது. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று திருக்குறள் கூறுகிறது. இந்த உலகியலில் "கடவுள் முதல்", "கருத்து முதல்", "பொருள் முதல்" என்ற தத்துவங்கள் பயிலப்படுகின்றன. இவற்றுள் திருக்குறள் பொருள் முதல் வாதத்தைச் சார்ந்தது என்று எண்ண இடமளிக்கிறது. "பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை" என்பதால் பொருளைச் சார்ந்தே வாழ்வியல் அமைகிறது. உடலோடு கூடிய உயிர் வாழ்க்கை இயங்க வேண்டுமாயின் நுகர் பொருள் தேவை. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்று பிறரும் கூறுவர். திருக்குறள் "செய்க பொருளை" என்று கூறுகிறது.

"யாஅம் இரப்பவை பொன்னும் பொருளும், போகமும் அல்ல" என்ற பரிபாடல் வரி, 'பொன்' வேறு

'பொருள்' வேறு என்று பிரித்துக் கூறியுள்ளமை அறிக. உண்பன, தின்பனவாகிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து குவிக்கவேண்டும். "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்றான் பாரதி; மேலும் ஒருபடி மேலே போய்,

*"தனியொருவனுக்கு உணவு இல்லை யெனில்*
*சகத்தினை அழித்திடுவோம்"*

என்றும் கூறினான்.

திருவள்ளுவர்,

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக வுலகியற்றி யான்"* (1062)

என்று கூறுகிறார். ஆதலால் திருக்குறள் நெறி, நுகர்பொருள் உற்பத்தி குவிக்கும் நெறி.

பசியும் பட்டினியும் இல்லாத நாட்டைக் காண்பதே திருவள்ளுவர் நெறியின் நோக்கம்.

கடவுள் இருக்கிறார்; பக்தி இருக்கிறது; மனிதன் இருக்கிறான். மனிதப் பிறப்பு உயர்ந்தது; மிக மிக உயர்ந்தது. மனிதனுக்கு வாய்த்த பொறி புலன்கள் அளவற்ற ஆற்றலுடையன; படைப்பாற்றலுடையன. இவ்வளவு இருந்தாலும் மனிதனை மனிதனாக்கும் அன்பு இல்லையேல் வெறும் என்பு தோல் போர்த்த உடம்புதான். மனிதனுடைய உயிர் நிலை அன்பில்தான் நிலை பெற்று இருக்கிறது. "அன்பின் வழியது உயிர் நிலை" என்றது திருக்குறள். திருவள்ளுவர் நெறி, அன்பு நெறி. அன்பு நெறியே அறநெறி. அன்பு பிறர் நலத்தையே நாடும். தியாகம் செய்யும்.

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"* (72)

என்பது திருக்குறள். மானுட வாழ்வு தியாகத்திற்கே உரியது. மலர் மலர்ந்து மணம் பரப்பி உதிர்வதைப் போலத்தான் மானுட வாழ்க்கையும் அமையவேண்டும். திருவள்ளுவர் நெறி ஒப்புரவு நெறி. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் நெறி. ஒத்தது அறிந்து செய்து வாழும் நெறி.

திருக்குறளில் விருந்தோம்பல், ஈகை, ஒப்புரவு ஆகிய அதிகாரங்கள் அமைந்துள்ளன. இம் மூன்றும் ஒன்றிற்கு ஒன்று தொடர்புடையன. ஆனால், பரிணாம வளர்ச்சியில் ஒன்றைவிட ஒன்று வளர்ந்தது. இலட்சியத்தின் எல்லை ஒப்புரவேயாம். விருந்தோம்பல் மிக அரிய பண்புதான். ஆயினும் இயல்பாக நிகழக்கூடியது ஓரோ வழிதான். இழப்பு நேரினும் ஈதல், கொடுத்தல், உதவி செய்தலாகிய பண்பு எல்லோர் மாட்டும் இயல்பாக வருவதில்லை. ஆனால், ஈதற் பணியில் புகழ் பெற்றவர்கள் தமிழக வரலாற்றில் உண்டு. ஈதல் இயலாத நிலையில் சாவைக்கூட வரவேற்றுள்ளனர்.

"சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" (230)

என்பது திருக்குறள். ஆயினும் ஈதற் பண்பிலும் விழுமியதாக, சிறந்ததாக விளங்குவது ஒப்புரவுப் பண்பே. ஒப்புரவு நெறியில் நம்பிக்கை, நல்லெண்ணம் கால்கொள்கிறது. ஈதற் பண்பில் கொடுப்பார் உண்டு; வாங்குவார் உண்டு; இரு வேறு நிலை உண்டு. ஒப்புரவு நெறியில் அஃது இல்லை. ஒப்புரவு உரிமையும் கடமையும் இணைந்த நெறியாகும். கொள்வார் - கொடுப்பார் என்ற நிலை ஒப்புரவு நெறியில் இல்லை. மாமுனிவர் மார்க்ஸ் இலண்டனில் தங்கியிருந்த காலத்தில் அவர் வீட்டில் பண்டத்தை வைத்துப் பூட்டும் பழக்கம் இல்லை. மேசையின் டிராயரில் பணம் இருக்கும். கார்ல் மார்க்சின் நண்பர்கள் பலர் அங்கு வருவர். அவர்களில் யாருக்காவது பணம் தேவையானால் எடுத்துக்கொண்டு போவார்கள். திரும்பக் கிடைத்தபொழுது கொண்டு வந்து

வைப்பார்கள். இதுபற்றி மார்க்ஸ் கண்டுகொள்வதில்லை; கண்டுகொள்ள முயற்சி செய்ததில்லை. இது ஒப்புரவு நெறிக்குச் சான்று. ஒப்புரவு நெறிக்குத் திருவள்ளுவர் எடுத்துக்காட்டும் உதாரணங்கள் அனைத்தும் கடப்பாடுடையனவேயாம். ஊருணி, பயன்மரம், மருந்து மரம் ஆகியன கைம்மாறு கருதாது மனித குலத்திற்குப் பயன் படுகின்றன. அவற்றினுள்ளும் மருந்து மரம் தனக்கு வரும் தீங்கினையும் ஏற்றுக்கொண்டு வாழ்வளிப்பது.

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கண் படின்," (217)

என்பது திருக்குறள். இதனை வலியுறுத்தியே,

> "ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
> விற்றுக்கோள் தக்க துடைத்து" (220)

என்றார். நிர்வாணமான சுயநலமும் பணவேட்டையும் நிலவும் இந்தக் காலத்திற்குப் பொதுவுடைமைச் சமுதாயத்தை நிகர்த்த திருவள்ளுவரின் ஒப்புரவு நெறியே சாலச்சிறந்தது.

இன்று நாகரிகம் என்ற சொல் கொச்சைப்படுத்தப் பெற்று வருகிறது. இன்றைய நாகரிகம் நம்முடைய தோலைக் கூடத் தொடவில்லை. புறத்தோற்றங்களே நாகரிகம் என்று கருதப்பெறுகிறது. திருவள்ளுவர் நெறியில் நாகரிகம் என்பது அதிநுட்பமானது. மனித சமூகத்தில் எல்லோரும் ஒரு மாதிரியாக நடந்து விடுவதில்லை. நாட்டில் சமூக அமைப்பு மகாபாரதம் போலத்தான் அன்றுமுதல் இன்று வரை தொடர்ந்து இருந்து வருகிறது. அதாவது, நல்லவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உரியவர்களை வலைபோட்டுத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை. நம்முடன் பல நாள் பழகிய நட்பினராயினும் ஒரு சின்னச் செய்திக்கும் கூட மனம்

புழுங்கிப் பகைமை உள்ளம் கொண்டு பழிவாங்க நினைத்து நஞ்சு கொடுப்பர். அப்படி நஞ்சு கொடுத்தாலும் நஞ்சை உண்பதே நனி நாகரிகம் என்று நற்றிணை பேசும்.

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்பது நற்றிணைப் பாடல்.

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (580)

என்று திருக்குறள் கூறுகிறது. தன் கண் முன்னாலேயே தனக்கு நஞ்சைக் கொடுத்தாலும் மனத்தில் சலனமின்றி வெறுப்பும் பகை உணர்வும் இன்றி அந்த நஞ்சை மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் குடித்துச் சாகாமல் வாழ்பவர்கள் நாகரிகமுடையவர்கள் என்று திருக்குறள் கூறுகிறது. தூய செங்குருதி ஓடும் உடலில் நஞ்சின் தாக்கம் பலிக்காது; நஞ்சு வலிமை இழக்கும். ஆதலால் "நஞ்சுண்டு அமைவர்" என்றார் திருவள்ளுவர்.

நன்றே செய்யும் கடப்பாட்டு நெறியே திருவள்ளுவர் நெறி. ஒருவர் ஒருவருக்கு நன்மையே செய்யாமல் இருந்திருக்க மாட்டார். ஏதாவது ஒரு நன்மை எந்தக் காலத்திலாவது செய்திருப்பார். பின், எழுந்த கருத்து வேற்றுமைகளால் கச்ப்புணர்வு வளர்ந்த காரணத்தால் கொலை நிகர்த்த கொடிய துன்பங்களைக் கூடச் செய்யலாம்; செய்யக்கூடும். அந்தச் சூழ்நிலையில் என்ன செய்வது? நாமும் எளிதில் பகை கொள்வதா? நாமும் கெடுதல் செய்வதா? வம்புகளை வளர்ப்பதா? இவையெல்லாம் திருவள்ளுவருக்கு உடன்பாடல்ல. பின் இந்த இடர்ப்பாடான சூழ்நிலையில் திருவள்ளுவர் நெறி என்ன? உன்னுடன் பழகியவர்கள் உனக்குக் கொலையனைய கொடுந்துன்பங்களைச் செய்யும் பொழுதும் செய்பவர் மீது சினவற்க; பகை கொள்ளற்க; யாதொரு தீமையும் செய்யற்க! அந்த நேரத்தில் முன்பு அவர்

செய்த ஏதாவது ஒரு நன்மையை நினைத்துக் கொள்! அந்த நினைப்பு கொடுமை செய்வார் மாட்டு, அன்பைக் காட்டத் தூண்டும்; பகையை மாற்றும்; பண்பாடு வளரும். இத்தகு வாழ்வே மானுடத்தில் சிறந்த வாழ்வு. சால்பு மிகுதியும் உடைய வாழ்வு.

திருவள்ளுவர் நெறி எளிதானது; ஆனாலும் அருமையானது. திருவள்ளுவர் நெறியில் இந்த வையகம் நடை போடுமானால் இன்று இந்த உலகத்தை வருத்தும் துன்பங்கள் அனைத்தும் அகலும்; அன்பு வளரும்; அறம் வளரும்; பண்பாடு வளரும்; இந்த உலகமும் இடையீடின்றி இயங்கும்; இந்த உலகம் அழியாது; என்றும் நிலைபெற்று விளங்கும்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்" (996)

என்றும் திருக்குறள் கூறுகிறது. திருவள்ளுவர் நெறி மானுடத்திற்கு நிலையான வாழ்வளிக்கும் நெறியுங்கூட! திருவள்ளுவர் நெறி மண்ணில் விண்ணகத்தைப் படைத்துக் காட்டும் நெறி! உலகப் பொது நெறி!

# 3

# திருவள்ளுவர் திருநாள் சிந்தனைகள்

**மதுரை வானொலி ஒலிபரப்பு: 15.1.94**

தமிழருடைய மறை, திருக்குறள். திருக்குறள் தமிழர் வாழ்வியலை விளக்குவது; அரண் செய்வது; பாதுகாப்பது; வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது. திருக்குறள் ஒரு முழு நூல். வாழ்க்கை முழுவதும் தழீஇ வழிகாட்டும் நூல்.

சமுதாயத்திற்கு நான்கு அடிப்படைத் தேவைகள் உள்ளன. அவற்றைத் திருவள்ளுவர் பாயிரமாகச் செய்துள்ளார். கடவுள் நம்பிக்கை, மழை, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர், நீத்தார், சான்றோர் கூறும் அறிவுரைகள் – அறன் வலியுறுத்தல் ஆகியன. இந்நான்கும் மானுடம் வளர, வாழ வாயில்களாக அமைந்துள்ளன. மனிதன், மிருகமல்ல; மனிதனுமல்ல; விலங்குத் தன்மையிலிருந்து விலகி மனிதனாக வேண்டியவன். மனித நிலையிலிருந்து இறைமைப் பண்பு நிலைக்கு வளர வேண்டியவன் என்று திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

மானுடம் வளர, வாழ, இல்லறம் உதவி செய்கிறது. ஆதலால், நாம் வழிபடும் கடவுள்களும் கூட இல்லறமே

நடத்தி வருகின்றனர் என்று கூறுவது மரபு. ஆதலால், திருவள்ளுவர் தமது நூலை, இல்லற நெறியில் தொடங்குகின்றார். "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று வலியுறுத்துகின்றார். இல்லற இயலில் பெண்ணினத்தைப் பெருமைப்படுத்துகின்றார். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்று வினா எழுப்புகின்றார். பெண், பெருமைக்குரியவளாக அமையாவிடின் ஆணுக்கு, "இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை இல்லை" என்று கூறுகின்றார். இல்லறத்தின் அச்சாக விளங்கும் வாழ்க்கைத் துணை நலத்திடம் பொறுப்புக்களை ஒப்படைக்கின்றார். குடும்பத் தலைவியை "வாழ்க்கைத் துணை நலம்" என்று குறிப்பிடுவதன் மூலம், திருவள்ளுவர், இல்லற வாழ்க்கையில் தலைவனுக்குத் தலைவி துணை; துணை மட்டுமல்ல நலமும் கூட என்று அறிவுறுத்தும் பாங்கறிக. இல்லறத்தின் சிறப்பைத், தலைமுறை தலைமுறையாக வரும் குடும்பப் புகழை - ஏன்? கணவனின் கற்பைக் கூடப் பெண்ணே காப்பாற்ற வேண்டும் என்று தலைவியின் கடமையை உணர்த்தும் பாங்கு அறநெறியின் பாற்பட்டது.

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்,"
>
> (56)

என்பது திருக்குறள்.

இல்லத் தலைவி, மனைமங்கலம். அதன் நன்கலம் நன்மக்கட் பேறு. மானுடத்தின் வரலாறு சிறக்க, குடும்பங்கள் தலைமுறை தலைமுறையாக வளர நன்மக்கள் தேவை. மக்கட் பேறு இயற்கை. நன்மக்கட்பேறு குடும்பத் தலைவனும் தலைவியும் நோன்பிருந்து பெற வேண்டிய ஒன்று. நல்ல தாய், நல்ல தந்தை என்று புகழ் பெற நன்மக்களை ஈன்று புறந்தருதல் வேண்டும். தந்தை, கல்வி தந்து வளர்க்க வேண்டும்; சான்றோனாக்க வேண்டும். அந்த இளைஞன்

வாழ்க்கைக் கடமைகளைப் பொறுப்புணர்வுடன் இயற்ற வேண்டும். இது திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை முறை.

திருக்குறள், இல்லறத்திற்கு முதன்மை கொடுத்தாலும் துறவறத்தை ஒதுக்கவில்லை. இல்லறத்தின் முடிவுநிலையில் துறவைக் கூறுகின்றாரா? தனித்துறவைக் கூறுகின்றாரா? இது ஆய்வுக்குரியதாகவே விளங்குகிறது. ஆனால், ஓர் உண்மை உணரப்படுதல் வேண்டும். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் துறவும் கலந்திருத்தல் வேண்டும். துறவைத் தொடர்ந்து துய்ப்பு. இயற்கை, அன்பின் பிணைப்பும் அர்ப்பணிப்புணர்வு மாய் விளங்கும் தன்மையது. ஏன் பிறந்தோம்? வளர்ந்தோம்? வாழ்ந்தோம்? வீடு கட்டியாச்சு; சொத்துச் சேர்த்தாச்சு; பிள்ளை குட்டிகள் பெற்றாச்சு! இவை மட்டுமல்ல இல்லறம்! புகழ் பெற வேண்டும். நல்ல குறிக்கோளுடன் நாட்டின் வரலாற்றுடன், சமுதாயத்துடன் இணைந்த செயற்பாடு களால் புகழ் கிடைக்கும். புகழ்மிக்க வாழ்க்கை எளிதில் அமையாது.

புகழ் புரியும் வாழ்க்கைத் திசையில் அடியெடுத்து வைக்கும் பொழுதெலாம் நம்முடைய ஊழ் தலை காட்டும். அதாவது, முன்னேற்றத்துக்குத் தடையான நமது பழக்க வழக்கங்கள், நாம் வாழும் சமுதாயத்தின் சூழலாக உருவாகும். அல்லது, எடுத்துக்கொள்ளும் பழக்கவழக்கங்கள் தடையாக அமையும். இவைகளை எதிர்த்து நின்று பழக்கம் தவிரப் பழகினால்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழலாம். புகழ் பூத்து வாழலாம்; வரலாற்றில் இடம் பெறலாம்.

இன்று, திருவள்ளுவர் திருநாள்! எப்படி வாழ்வது? சிந்தனை செய்க! வள்ளுவம் காட்டும் வழியில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்க!

## மதுரை வானொலி ஒலிபரப்பு: 16.1.95

இன்று திருவள்ளுவர் திருநாள். திருவள்ளுவர் மனிதன் மனிதனாக வாழ அருளிச் செய்தது திருக்குறள். வாழ்தல்

என்பது ஒரு கலை. அதனால் திருக்குறள் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" என்றது. வாழ்வாங்கு வாழ்தலாவது, மண்ணில் வாழும் பொழுது வளமுடன் வாழ்தலும், மரணத்திற்குப் பின்னும் மக்கள் மனத்தில் நிலை நிற்பதற்குரியவாறு புகழ்பட வாழ்தலுமாகும். அதனால் திருக்குறள் "புகழ்பட வாழ்தல்" என்றே கூறுகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ அறிவு தேவை. துன்பத்திலிருந்து மனிதத்தைக் காப்பது அறிவு என்ற கருவி என்று திருக்குறள் கூறும். "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்பது திருக்குறள். மேலும் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றும் திருக்குறள் பேசுகிறது. கற்றல், கேட்டல்; கற்றனவற்றையும் கேட்டனவற்றையும் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பயன் காணல் - அறிவுடைமை.

இந்த உலக வாழ்வு நுகர்வுகளால் ஆயது. உண்டு, உடுத்து, உறங்கி வாழ்தலுக்குரிய பொருள்களைச் செய்து குவிக்க வேண்டும். "செய்க, பொருளை" என்று திருக்குறள் ஆணையிடுகிறது. அறிவும் பொருளும் இருந்தாலும் கூடி வாழக் குடும்பம் வேண்டும். நல்லதொரு சமூக அமைப்பு வேண்டும் என்பதை உணர்த்த இல்லற இயல் கூறிப் பின் சமூக இயலுக்குரிய பொருளியல் கூறுகின்றார். இடையில் துறவற இயல் அமைந்துள்ளது. துறவு என்பது நுட்பமான ஒரு வாழ்க்கை முறை. எந்த ஒன்றின் பாலும் அளவற்ற ஆசை வைப்பின் அது தீதாக முடியும். "அவா வெள்ளம்" என்பார் மாணிக்கவாசகர். பொருளியலில் திருவள்ளுவர் வாழ்க்கையைப் பயனுடையதாக்கும் ஊக்கத்தை "உள்ளம் உடைமை உடைமை" என்றும், "அறிவறிந்த ஆள்வினை" என்றும் கூறுகின்றார். பொருளியலுக்குள் நுழையும் முன் ஊழ் பற்றிப் பேசுகின்றார். அறத்துப்பால் தொடங்கி இல்லறஇயல், துறவற இயல் பேசிப் பின் ஊழியலைத் தனி அதிகாரமாகப் பேசுகின்றார். காரணம், முன் கூறிய இல்லற இயல், துறவற இயல் சார்ந்த வாழ்க்கைகளில் ஏற்பட்ட

பழக்கங்கள், வழக்கங்கள் ஊழாக உள்ளத்தினின்றும் முகிழ்த்து வருகின்றன! மனிதன் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டவன்; எளிதில் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள மாட்டான். "பழக்கம் தவிரப் பழகுமின்" என்று ஆன்றோர் கூறியும் நமது வாழ்க்கைத் தடம் மாறவில்லை! ஆனால் தோல்விகள், துன்பங்கள், துயரங்கள் இவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் அறைகூவலாக ஏற்றுக்கொண்டு, நாள்தோறும் உழைப்பின் அளவும் திறமும் தரமும் கூடினால் தான் பழக்கங்களை - வழக்கங்களை மாற்ற இயலும்; மாற்ற முடியும். இதனைத் திருக்குறள்,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்." (620)

என்று கூறுகிறது. ஆயினும் நமது நாட்டு மக்களுக்கு ஊழ், தலைவிதி இவற்றின் மீதுள்ள நம்பிக்கை சற்றும் தளரவும் இல்லை; குறையவும் இல்லை.

அதனாலேயே நமது நாடு வறுமையிலிருந்து விடுதலை பெற இயலவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வறுமையை எதிர்த்துப் போர்க்கொடி தாங்கினார் திருவள்ளுவர்.

> "நெருப்பினுள் துஞ்சலும் ஆகும், நிரப்பினுள்
> யாதொன்றும் கண்பா டரிது"; (1049)

> "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்" (1062)

என்று கடிந்து கொண்டார்! ஆனால் இன்னமும் நாம் திருக்குறளுக்கு உரையெழுதிக் கொண்டிருக்கின்றோம்! அல்லது விவாதங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம்! ஆனால், திருக்குறள் நெறியை வாழ்வியல் நெறியாக்கச் சமூகம் முயலவில்லை.

பிறப்பின் அடிப்படையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைத் திருக்குறள் மறுக்கிறது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று வலியுறுத்துகிறது. ஆனால், இருபதாம் நூற்றாண்டு வரையில் கூட நாம் தீண்டாமையினின்றும், சாதி வேறுபாடுகளினின்றும் விடுதலை பெறவில்லை! திருக்குறள் நெறிக்கு மாறாக நாட்டில்,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு" (735)

என்று திருக்குறள் விலக்கிய தீமையே நாளும் வளர்ந்து வருகிறது.

திருவள்ளுவர் திருநாளாகிய இன்று உறுதி எடுத்துக் கொள்வோம்! கற்போம்! நாளும் கற்போம்! அறிவைத் தேடுவோம்! அறிவை வாழ்க்கைக்குக் கருவியாகப் பயன்படுத்தி ஊழின் வலிமையை முறியடித்து வெற்றி பெறுவோம்! வறுமையிலிருந்தும் ஏழ்மையிலிருந்தும் நாட்டை மீட்டு "நாடென்ப நாடா வளத்தன" என்ற திருக்குறளுக்கு ஏற்ப நாட்டை அமைப்போம்! எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவோம்! பொறிகளைப் பக்குவப்படுத்திக் கொண்டு வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்! வாழ்க, திருக்குறள்! வளர்க, வள்ளுவத்தின் வாழ்வியல்!

# 4

# அழுக்காற்றை அகற்றுவது எப்படி?

திருவள்ளுவர் இனியவை கூறலுக்கு இலக்கணம் வகுத்தவர். ஆயினும் அவர் வகுத்துக் கூறிய விதிமுறைகளுக்கு ஓர் இடத்தில் தாமே கட்டுப்படமுடியாமல் திட்டி விடுகிறார். "அழுக்காறு என ஒரு பாவி" என்று அழுக்காற்றினைத் திட்டுகிறார்! ஆம்! அழுக்காறு அவ்வளவு கொடுமையானது. அழுக்காறு என்றால் என்ன? அழுக்காற்றினால் விளையும் தீமைகள் என்ன? அழுக்காற்றினை அகற்ற முடியுமா? அழுக்காற்றினை அகற்றும் வழிகள் எவை எவை? என்றெல்லாம் சிந்தித்தல் பயனுடைய சிந்தனையாகும்.

அழுக்காறு என்ற தீமை மக்கள் மத்தியில் மக்கள் மொழியில் 'பொறாமை' என்று வழங்கப்படுகிறது. அதாவது தம்மையல்லாத பிறிதொருவர் அடைந்து அனுபவிக்கும் புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகிய பதினாறு பேறுகளைக் கண்டு பொறுத்துக்கொள்ளாத இழிகுணம் பொறாமை. பொறாமை ஒரு தீய பண்பு. அத்தீய பண்பே இயங்கும் நிலையில் அழுக்காறு என்று பெயர் பெறுகிறது என்று கருதலாம். அதாவது மற்றவர் அடைந்துள்ள பேறுகளைச் சிதைக்க,

தட்டிப் பறிக்க, அல்லது பழிதூற்றச் செய்யும் முயற்சிகள் அழுக்காறு ஆகும். அழுக்கு ஆறு அழுக்காறு அசுத்தமானது; தூய்மையில்லாதது. நெறியல்லாத நெறி. பேறுகள் அடைந்தாரைப் போலத் தானும் அடையவேண்டும் என்னும் எண்ணம் அழுக்காற்று நெறியில் தோன்றும்; ஆர்வமும் முயற்சியும் தலையெடுக்காது. அழுக்காறுடையார் தேளின் கொடுக்கு போலத் தனக்குத்தானே விஷமிட்டுக் கொண்டு அழிவது உறுதி. அதனால் தாம் அடைய முடியாததை அடைந்திருப்பவர்களைப் பார்த்துப் பழிகூறி, இயன்றால் பறிக்க முயற்சி செய்வது அழுக்காற்றின் இயல்பு. அழுக்காறுடையார் உயர்ந்ததாக உலக வரலாற்றில் சான்றே இல்லை. ஆயினும், அழுக்காறு என்ற இயல்பை அறிந்து உணர்தல் வேண்டும். அழுக்காற்றின் வாயில்களைக் கண்டறிந்து அகற்றுதல் வேண்டும். அழுக்காற்றிலிருந்து விடுபெறுதல் ஒரு தற்காப்பு முயற்சி மட்டும் அல்ல; வளர்ச்சிக்குரிய வித்துமாகும்.

அழுக்காறு இரண்டு களங்களைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் அமைத்துக் கொண்டு தோன்றும். அவற்றுள் சமுதாய அமைப்பு முறையில் உள்ள உடையார்-இல்லாதார் என்ற நிலை. வாய்ப்புக்கள் அனைவருக்கும் உரிமையாக்கப் படாமை ஆகியன அழுக்காற்றைத் தோற்றுவிப்பதில் முதன்மையான களங்கள். மேலும் பேறு பெற்றோரின் அடக்கமின்மையும் எளிமையின்மையும் அழுக்காறு வளர, எரி நெருப்புக்கு எண்ணெய் போலத் துணை செய்யும். நமது நாட்டில் அன்றாடத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் இன்னமும் எல்லாருக்கும் கிடைக்கவில்லை. பலர் ஒருவேளை உணவுக்குக்கூட அல்லலுறுகின்றனர். வாய்ப்புக்கள் அனைத்தும் வாழ்வோர் பக்கமே! வாழ் விழந்தோர் மேலும் மேலும் வாய்ப்புக்களை இழக்கின்றனர். அழுக்காறு எங்கும் எல்லாரிடத்திலும் வளர்ந்து வருகிறது. அது மட்டுமல்ல. பணம், பதவிகளைப் பெற்றவர்கள்

சமுதாயத்தில் செருக்குடன் நடந்து கொள்கின்றனர். இல்லாதவர்களுக்கு எளிதில் அவை கிடைப்பதில்லை. இதனால் அழுக்காறு வளர்ந்து எங்கும் குற்றங்காணும் படலங்களே சுறுசுறுப்பாக இயங்குகின்றன! நாலு பேர் கூடும் சமுதாயக் கச்சேரிக் கூடங்கள், மேடைகள் எங்கும் பழிதூற்று காதையே அரங்கேற்றம்! நுகர்வில் ஏற்பட்ட வித்தியாசம், கம்யூனிஸ்டுகளிடம் ஆள்வோர் என்ற எண்ணத்தில் ஏற்பட்ட இறுமாப்பு ஆகியனவே சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயின. உடுத்த முடியாமலும் உண்ணமுடியாமலும் அல்லலுறும் நிலையில், மற்றவர் வயிறார உண்ணுவதை, உடலார உடுப்பதைக் காணும் மனிதரில் தாழ்ந்தோர் அழுக்காறு கொள்வர். இதனைத் திருக்குறள்,

> "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
> வடுக்காண வற்றாகும் கீழ்" (1079)

என்று கூறி விளக்குகிறது. ஆதலால், அண்ணல் காந்தியடிகள் கூறியதைப் போல, மக்களுக்கிடையில் நுகர்வில் 20 விழுக்காட்டுக்கு மேல் வித்தியாசமில்லாமல் கட்டுப்படுத்தினால் அழுக்காற்றைத் தவிர்க்கலாம். அதுபோல எல்லாருக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய சமுதாய நடைமுறை வேண்டும். அப்பொழுதுதான் அழுக்காற்றைத் தோற்றுவிக்கும் சமுதாயம் இல்லாது ஒழியும். இந்த நெறிமுறை உருவாக "எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பதான" சமுதாய அமைப்பு தவிர்க்க இயலாததும் கட்டாயமானதும் கூட! அதோடு பேறு பெற்றார் - செல்வம் பெற்றார் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புநராகவும் பணிவுடையவராகவும் இன்சொல்லினராகவும் வாழ்ந்திடின் அழுக்காற்றினைத் தவிர்க்கலாம்.

அடுத்து, மனிதன் எந்தச் சூழ்நிலையில் அழுக்காற்றுக்கு இரையாகிறான்? அழுக்காறு கொள்வோரின் பெரும்பாலோர் சோம்பேறிகளாக இருப்பர்; ஆனால்

ஆசைப்படுவர். அறிவறிந்த ஆள்வினை இயற்றி அடையக் கூடியனவற்றை அடைய ஆசைப்பட மாட்டார்கள். கடின உழைப்பு என்பது அவர்கள் கனவிலும் கருதாதது. இத்தகையோர் வாழ்க்கையில் பெறவேண்டியவைகளைப் பெற இயலாதுபோதல் இயற்கையே! ஆனாலும் அவர்கள் தங்களை நொந்து கொள்ளமாட்டார்கள். தாங்கள்தான் தங்களுடைய இழிநிலைக்குக் காரணம் என்பதையும் உணர மாட்டார்கள். உணர்த்தினாலும் உணர மாட்டார்கள். அவர்கள் நன்றாக வாழ்பவர்களையும் கடவுளையும் விதியையும் காரணங்காட்டி நொந்து கொள்வார்கள்; பழி தூற்றுவார்கள்.

மேலும் அழுக்காறுடையவர்க்குத் தன்னம்பிக்கையும் இருப்பதில்லை. தாழ்வு மனப்பான்மை யுடையவராகவும் அல்லது தாழ்வு மனப்பான்மை வழி வளர்ந்து பொய்ம்மை நடிப்பும் உடைய உயர்வு மனப்பான்மை யுடையவராகவும் உருவாகலாம். இதனால் மற்றவர்களைப் போல் இவர் வளர முடியாது, வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்து விடுவர். ஆயினும் தன்குறையை மறைக்க, பேறு பெற்றாரின் வாழ்க்கையில் குற்றங்களைக் காண்பர். பிறர் வாழ்க்கையில் குற்றங்களைக் காணுதல் என்ற இயல்பு, குற்றங்களைச் சுமந்து திரியும் இழிபிறவிகளுக்கே உண்டு. அதனால் அறிவும் ஆள்வினையும் அறியாதான் - வாழ்வாங்கு வாழும் முறை யறியாதான் தன் இழிவினை மறைத்துக்கொள்ள அழுக்காற்றின் வழி குற்றமே தூற்றித் திரிவான். அழுக்காறு இலாது வாழ அறிவறிந்த ஆள்வினை வாழ்வு தேவை. முயற்சியும் உழைப்பும் தேவை. பழகும் பாங்கறிந்து பழகும் இயல்பே வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தகுதியல்லாதனவற்றை அடைய விரும்பாத மனப்பான்மை அல்லது துறவு மனப்பான்மை வேண்டும். தகுதி வழி உரிமை இல்லாத ஒன்றை அடைய விரும்புவோர் பழி பாவம், ஏளனம் ஆகியவற்றை அடைந்து ஆராத் துயரத்தில் ஆழ்வர் என்பதை மாணிக்கவாசகர்,

"சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சம்அஞ்சி
ஆவஎந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேஎம் பிரானொடும் எண்ணிவிண் ணாண்டுமண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன பாவந் திரிதவரே"

(திருச்சதகம் 4)

என்ற திருவாசகப் பாடலால் தகுதியில்லாதவரெல்லாம் தகுதிக்கு ஆசைப்பட்டு அடைந்த அவலத்தை விளக்குகிறார்.

அடுத்து, அறவே அழுக்காற்றினின்றும் விலக வேண்டுமானால்,

"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர்"

என்ற வள்ளலாரின் வாக்குப்படி ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்டொழுகி வாழ்ந்திடில் மற்றவர்கள் அடையும் பேறுகள் மகிழ்வையே தரும்; மனநிறைவையே தரும்; தியாக சீலத்தைத் தரும். மற்றவர்களை–அவர் தம் இயல்புகளை உளமாரப் பாராட்டுவதின் மூலம் அழுக்காற்றைப் போக்கலாம். எங்கு நெஞ்சு கலந்த உறவும் பாராட்டும் இருக்கிறதோ அங்கெல்லாம் அழுக்காறு கால் கொள்ளாது. தலை காட்டாது.

அடுத்து, சங்கத் தமிழ் வலியுறுத்தியவாறு, "தனக்கென முயலாது பிறர்க்கென முயலும் நோன்பு"டையாரை அழுக்காறு அணுகாது. ஏன்? பிறர்க்கென முயலும் நோன்புடையார் வாழும் நாட்டில் "இலர்" இல்லை என்று திருக்குறள் கூறுகிறது.

"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்" (270)

என்பது குறள்.

திருமூலர், "யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்று மந்திர மொழியாக ஆணையிட்டார். பாவேந்தர் பாரதிதாசன்,

"உலகம் உண்ண உண்டு உடுத்த உடுப்போம்."

என்றார்.

இங்ஙனம் பிறருக்கென முயலும் தவம் செய்வாரை அழுக்காறு அணுகாது. அவர்கள் வாழும் நாட்டிலும் அழுக்காறு என்ற பாவி நடமாடமாட்டான்! இத்தகு பண்பில் சிறந்து வாழ்பவர் பிறர் பெற்றுள்ள ஆக்கம் கண்டு மகிழ்வர். அவர்தம் ஆக்கத்திற்கு அரணாக நின்று பேணுவர். இத்தகையோரை அழுக்காறு அணுகாது; அகன்றுவிடும்.

பிறர் எல்லாம் வாழ்தலால் தன் வாழ்க்கை ஒருபொழுதும் தாழாது என்ற நம்பிக்கை வேண்டும். எவர் ஒருவரும் அவரவருடைய அயர்விலா உழைப்பும் வளர்ச்சியும் மாற்றங்களும் பொருந்திட வாழ்க்கையை நடத்துவாராயின், அவர்தம் நிலை என்றும் தாழாது. அதுமட்டுமின்றி மேலும் மேலும் உயரும். இந்த அறிவு இருந்தால் தற்காப்பின் காரணமாக அழுக்காறு கொள்ளார்.

அழுக்காறு பற்றி ஒரு தவறான கருத்து மக்களிடையில் நிலவுகிறது. இது முற்றிலும் தவறு. அது என்ன? அதாவது கல்வியில், நற்பணிகள் செய்தலில் அழுக்காறு கொள்ளலாம் என்ற கருத்து. இந்தக் கருத்து முற்றிலும் தவறானதாகும். நன்றாகக் கற்கும் மாணவனைப் பார்த்து மந்தமாகக் கற்கும் மாணவன் அழுக்காறு கொள்வதன் மூலம் நன்றாகக் கற்க முயலலாம் என்பது இவர்கள் கருத்து. இல்லை; அழுக்காறு பற்றிய உள்ளம் நல்லன எண்ண ஊக்குவிக்காது; நன்முயற்சிகளில் ஈடுபடுத்தாது. மாறாக, நன்றாகக் கற்கும் மாணவனின் தரத்தைக் கொச்சைப்படுத்தும் செயலையே செய்யும். இதுபோலவேதான் பணிகளுக்கும் எந்த வகையாலும் எந்தச் சூழ்நிலையிலும் அழுக்காறு ஆகாது.

அழுக்காறு உயர் பணிகளைக் கெடுக்கும். துறவிகளும் இதற்கு விதி விலக்கு இல்லை.

அழுக்காறு உடையவனின் மனம், புத்தி முதலியன பிறருடைய குற்றங்களைக் காண்பதிலும் பழிதூற்றுதலிலும் நோக்கமுடையதாயிருப்பதால் அவனுடைய காலமும் சக்தியும் அவற்றிற்கே செலவாகும். தன் முயற்சியில் ஈடுபட மாட்டான். அதனால் அழுக்காறுடையான் முன்னேறுவதற் குரிய வாயில்களும் அடைபட்டுப் போகின்றன. ஆதலால் வாழ்வாங்கு வாழ ஆசைப்படுகிறவர்கள் அழுக்காறு கொள்ளலைத் தவிர்க்க வேண்டும்.

அழுக்காறு தீது; முற்றிலும் தீது; மனித சமூகத்தை அழிக்கும் தீய சக்தி; பாவத்தின் உருவம். ஆதலால் அழுக்காற்றினை அறவே நீக்குக; விலக்கு. பெற்றது கொண்டு மன நிறைவு பெறுக. பெறாதவைகளை அடைய முயலுக; குறுக்கு வழிகள் வேண்டாம்.

அழுக்காறு சுயமரியாதையையும் கெடுக்கிறது. வாழ்க்கையில் யாதொரு பணியும் செய்யாமல் பழிதூற்றியே வாழ்வதால் எவரும் நம்பமாட்டார். "பொறாமைப் பிண்டம்" என்று பழிப்பர்; ஒதுங்குவர். இதனால் மானம் போகும்; செல்வம் கெடும்; சுற்றத்தை இழக்க நேரிடும். அதனால் அழுக்காறு கொடிது; கொடுமையிலும் கொடுமையானது.

அழுக்காறு அகன்றால் பல பண்புகள் வளரும். அழுக்காறு அழுக்காற்றினைத் தோற்றுவித்தும் வளர்த்தும் கேடு செய்யும். அவா, அவா நிறைவேறாமையினால் பெறும் சினம், சினத்தின் காரணமாக மொழியும் கடுஞ்சொற்கள் – ஆகியவைகளை அறவே அகற்றுவோம்! பிறர் நலம் பேணுவோம்; முயற்சியுடன் வாழ்வோம்.

**5**

# *திருக்குறளில் அரசியல் சமூகவியல்

மனித குலம் உய்வதற்காக இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவரால் திருக்குறள் இயற்றப் பெற்றது. இன்று திருக்குறள் ஒரு சிறந்த இலக்கியம் என்றே பலர் கருதுகின்றனர். இது உண்மையேயானாலும் திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமல்ல. திருக்குறள் பல்துறை தழுவிய ஒரு முழுநூல். திருக்குறளை இலக்கியமாகக் கருதிப் பாராட்டிக் கொண்டு வந்தாலும் திருக்குறள் ஒரு இலக்கியம் மட்டுமல்ல; அறநூல்; நீதிநூல். ஏன்? அறிவியல் சார்ந்த ஒரு நூல். ஆனால், திருக்குறளை இதுவரையிலும் யாரும் அறிவியல் பார்வையில் பார்க்கவில்லை. திருக்குறள் "இந்திய நீதி நூல்களில் மிகச் சிறந்தது" என்று சர் ஆல்பர்ட் சுவைட்சர் கூறினார். டாக்டர் ஜி.யூ. போப் திருக்குறளைப் படித்து அனுபவித்து ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார்.

திருக்குறளைப் போற்றித் திருவள்ளுவ மாலை என்று ஒரு பாராட்டு மாலை எழுந்தது. சங்க கால அறிஞர்கள் திருக்குறளைப் பலபடப் பாராட்டியுள்ளனர். இறையனார் என்பவர் ஒரு புலவர். இறையனாரை மதுரை ஆலவாயண்ணல் என்று கூறுவாரும் உண்டு. திருக்குறள் காலங்கடந்தும் நின்று விளங்கும்; "கற்கக் கற்க என்றும்

இன்பம் தரும்" என்ற பொருள்படப் பாராட்டியுள்ளார். சங்ககாலப் புலவர்களுள் கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பெரும்புலவர்கள் திருக்குறளைப் பாராட்டியுள்ளனர். திருவள்ளுவ மாலையில் திருக்குறளை மிகச் சிறப்பாகப் பாராட்டும் பாடல் மாங்குடி மருதனார் பாடியது.

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கி – தீதற்றோர்
உள்ளுதோ றுள்ளுதோ துள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

என்பது அப்பாடல். திருக்குறள் இனிய எளிய நடையில் அமைந்தது. உரையாசிரியர் துணையின்றிப் படிக்கக் கூடிய ஒரே நூல் திருக்குறள்தான். எளிமை என்பதால் பொருளாழமில்லாதது என்று கருதுதல் கூடாது. நடை எளிது. உணர்த்தும் பொருள் அரியது. "வேதங்கள் வேதங்கள்" என்று மிகைபடப் பாராட்டுகிறார்களே அந்த வேதங்களின் உட்பொருள் முழுதும் அடங்கியது. "திருக்குறளை இந்திய தேசிய நூலாக்க வேண்டும்" என்ற குரல் நான்கு புறமும் இன்று கேட்கிறது. அப்படியானால் இராமகாதை, மகாபாரதம், பண்டை மறைகள் முதலியவற்றுக்கு அந்தத் தகுதி இல்லையா என்று கேட்கலாம். இவைகள் திருக்குறளுக்கு ஈடான இலக்கியங்களேயல்ல என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். ஆதலால் இந்திய மொழிகளில் தோன்றியுள்ள நூல்களில் திருக்குறளுக்கு ஈடான ஒன்றில்லை; திருக்குறளுக்கு ஒப்பச் சொல்லக் கூடியதாக இல்லை என்று தெரிய வருகிறது. திருக்குறளுக்குப் பிந்திய நூல்களிலும் திருக்குறள் எடுத்தாளப் பெற்றிருக்கிறது. "செய்ந்நன்றியறிதல்" என்ற அதிகாரத்தைப் புறநானூறு பாராட்டுகிறது.

* காரைக்குடி மெய்யம்மை பதிப்பகம் (இராமசாமி தமிழ்க்கல்லூரி) 13ஆவது ஆண்டு மீனாட்சி ஆச்சி நினைவுச் சொற்பொழிவு 20.2.95

'செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே" (34)

என்ற புறநானூற்றுப் பாடலில் திருக்குறள் "அறம்" என்றே பாராட்டப் பெறுகிறது. செய்ந்நன்றியறிதலாகிய இந்த அறம் இன்று மறைந்து வருகிறது. ஆனால் நன்றி கூறல் என்ற சடங்கு மேவி வளர்ந்து வருகிறது. திருவள்ளுவர் நன்றி கூறலை எடுத்துக் கூறவில்லை. ஒரு நல்ல சமுதாய அமைப்பிற்கு நன்றி கூறலும் தேவைப்படாது. ஏன்? மனிதராய்ப் பிறந்தோர் ஒருவருக்கு ஒருவர் கடமைப் பட்டிருக்கின்றோம். ஆதலால், நன்றி கூறும் அவசியம் எழ நியாயமில்லை. நன்றியறிதல் என்பது ஒருவர் சொன்ன - செய்த நல்லதை நினைந்து நினைந்து மகிழ்தலும், அந்த நல்லதை வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டு ஒழுகுதலுமேயாம்.

அப்பரடிகளும் திருக்குறளைத் தமது திருமுறையில் எடுத்தாண்டுள்ளார். திருக்குறளில் இனியவை கூறல் என்ற ஓர் அதிகாரம் இருக்கிறது. அதில்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (100)

என்பது குறள். இதனை அப்பரடிகள், "கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வ னேனே" என்று கூறுகின்றார். இன்னும் திருக்குறளை மையமாகக் கொண்டு பல நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றுள் சிறந்தது முதுமொழி மேல்வைப்பு.

திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் ஏறக்குறைய 86 மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. உலகம் இன்று திருக்குறளைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டிருக் கிறது. அதனால்தான் பாரதி,

"வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாராட்டினான்.

திருவள்ளுவர் தந்த திருக்குறள் ஒரு அரசியல் நூல்; சமூகவியல் நூல். திருக்குறளுக்கு முன்பு பல அரசியல், சமூக பொருளாதார நூல்கள் தோன்றியுள்ளன. இவ்வகை நூல்கள் செய்தவர்களில் கன்பூஷியஸ் (கி.மு. 557–478), பிளேட்டோ (கி.மு. 427–347), அரிஸ்டாட்டில் (கி.மு. 384–322), சாணக்கியர் (கி.மு. 323–272) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இந்த அரசியல் ஞானிகளில் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோர். சீன தேசத்தைச் சேர்ந்தவர் கன்பூஷியஸ். இந்தியாவின் வடபுலத்தைச் சேர்ந்தவர் சாணக்கியர். இவர் மௌரிய சாம்ராஜ்யத்தை நிறுவியவர். அரிஸ்டாட்டில் மகா அலெக்ஸாண்டருக்கு ஆசிரியர்.

திருவள்ளுவருக்கு முன்பு தமிழ்நாட்டில் திருக்குறள் போல ஒரு அரசியல் சமூக, பொருளியல் நூல் தோன்றிய தில்லை. ஏன்? உலகில் மற்ற நாடுகளை விடத் தமிழ்நாட்டு மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு வரலாற்றுக் காலந் தொட்டே குறைவுதான்! அந்த நிலை இன்னும் தொடர்வது வருந்தத்தக்கது. திருக்குறளுக்கு முன் உலக அரங்கிலும் இந்திய நாட்டளவிலும் பல அரசியல், சமூக, பொருளாதார நூல்கள் தோன்றியிருந்தாலும் திருக்குறளைப் போல அவை அறந்தழீஇய அரசியல் கூறவில்லை. மக்கள் நலந்தழீஇய அரசியல் சொல்லவில்லை என்பது அறிந்தோர்கூறும் உண்மை. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரமும் பிளேட் டோவின் குடியரசும் அரசனின் ஆதிபத்தியத்தை அரண் செய்வன. ஆனால் திருக்குறள் மனித உரிமைகளையும் மக்கட் சமுதாய நலன்களையும் காத்து நிற்பது.

திருக்குறள் தனி மனிதன், குடும்பம் முதலியவற்றை மையமாகக் கொண்ட அறத்துப்பாலை முதலாவதாகவும் மக்களை மையமாகக் கொண்ட சமுதாயம், அரசியல், பொருளாதார இயல்புகளைக்கொண்ட பொருட்பாலை இரண்டாவதாகவும் நல்லதொரு சமுதாயத்திற்கு

அடிப்படையாக அமையும் காமத்துப்பாலை மூன்றாவ தாகவும் கொண்டு விளங்குகிறது. இந்த முறை வைப்பில் அமைத்தவர் திருவள்ளுவரா? அல்லது பின்னேவந்த உரையாசிரியர்களா? என்று ஒரு விவாதம் நடந்து வருகிறது. நாம் அந்த விவாதத்தைப் பற்றி அக்கறை காட்ட விரும்ப வில்லை. ஆனால் இலக்கிய அமைவிலும் சரி, சமுதாய அமைப்பு முறையிலும் சரி இப்போதுள்ள அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முறை வைப்பு சிறந்தது; இயற்கையானது என்பதே நமது கருத்து.

திருவள்ளுவர் நூல் செய்யத் தொடங்கும் முன்பே முப்பாலாகச் செய்யத் திட்டமிட்டிருப்பாரா என்பது நமது ஐயம்; ஆய்வுக்குரிய செய்தி. மற்ற அறிஞர்களைப் போல 'அறம்' பற்றியே நூலியற்ற எண்ணியிருப்பார். ஆனால் அறத்துப்பாலின் முடிவில் "ஊழ்" என்ற அதிகாரம் வந்தமைகிறது. இஃது இயல்புங்கூட. செய்யும் அறத்தைப் பொறுத்து ஊழ் அமைவதில்லை. அறம் செய்யும் நோக்கத்தைப் பொறுத்தே ஊழ் அமைகிறது. அறம் செய்யும் போது அறத்தைத் தற்சார்பின்றி அறத்திற்காகச் செய்யாமல், சமுதாய மேம்பாட்டிற்காகச் செய்யாமல் பற்றுடன் செய்வது ஊழிற்கு அடிப்படையாகிறது.

அறிவும் சமுதாய உணர்வும் கலந்த நிலையில் செய்யப் பெறும் எந்த ஒரு செயலும் ஊழ் ஆக உருப்பெறாது. ஆக, வாழ்தல் செயல் இயக்கமே! அதுவும் அறவழிப்பட்ட செயல் இயக்கமே! அந்த அறம், அறியாமை காரணமாகவும் சமுதாய அமைப்பின் காரணமாகவும், பொருளியல் குறைபாடுகள் காரணமாகவும் அமைவான அரசு அமையாமையின் காரண மாகவும் ஊழாக உருப்பெறுகிறது. தெப்பம் வெள்ளப் பெருக்கின் வழிப்பட்டுச் செல்லுதல்போல, மனிதன் ஊழின் வழிச் செல்ல லாகாது. ஊழை எதிர்த்துப் போராட வேண்டும். ஆதலால், ஊழை எதிர்த்துப் போராடுவதற்குரிய கருவி, கரணங்களை மனிதனுக்கு அறிமுகப்படுத்தப்

பொருட்பாலை இயக்கு கின்றார். ஆயினும், பொருட்பால் இயக்கத்தின் முடிவில் சமுதாயம்-அன்று வாழ்ந்த சமுதாயம்-திருவள்ளுவர் வழித் தடத்தைப் பின்பற்றி வராமையின் காரணமாக மனநிறைவு பெறாத நிலையில் பொருட்பாலைக் கயமை அதிகாரத்தில் முடிக்கின்றார்.

ஆயினும் மனிதத்தின்பால் திருவள்ளுவருக்கு உள்ள ஈடுபாட்டால் புதியதோர் தலைமுறையையாவது தம் வழிக் காண விரும்பி, காமத்துப்பால் செய்கின்றார். சிலர் இதனை இன்பத்துப்பால் என்றும் கூறுவர். ஆரிய மாயைக் கலாச்சாரப் படையெடுப்பிற்குப் பின்தான் "காமம்" என்ற சொல் கொச்சையாயிற்று. சங்க காலத்தில் "காமம்" என்ற சொல் நல்ல பொருளிலேயே வழங்கப்பெற்று வந்துள்ளது.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி" (தொல். நூற்பா: 1138)

"காமம் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந்தொகை, 2)

என்பனவற்றைக் காண்க. காமத்துப்பாலிலும் ஆங்காங்கே அறமும், பொருளும் வலியுறுத்தப்படுகின்றன. அதுமட்டு மின்றிக் காமத்துப்பாலில்தான் திருவள்ளுவர் அமைதியாகப் பேசுகின்றார்; திருவள்ளுவர் வெகுண்டும் நொந்தும் இயற்றிய குறட்பாக்கள் இல்லை. அது மட்டுமல்ல. திருவள்ளுவர், மக்கள் தம்மை அந்நியராகக் கருதுகிறார்கள் போலும் என்றும், நாம் சொன்னதைக் கேட்கவில்லை போலும் என்றும் கருதி மக்களுடன் ஒன்றிய உறவுள்ள பாத்திரங்கள் வாயிலாகப் பேசுகின்றார். சுவையிலும், பொருளிலும், பேசும் பாங்கிலும் காமத்துப்பால் சிறந்து விளங்குகின்றது. கொச்சைத்தனமில்லாமலும் விரசம் வராமலும் காமம் பற்றிக் கூறும் நூல் திருக்குறளன்றி வேறில்லை.

திருக்குறள் இலக்கிய வடிவில் அமைந்ததொரு அறிவியல் நூல். திருக்குறளின் நிலத்தியல், தாவரஇயல், உளவியல், சமூகவியல், அரசியல், பொருளியல் முதலிய

பல்வேறு அறிவியல் துறைகளைத் தழுவிய கருத்துக்கள் உண்டு.

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது" (16)

என்ற திருக்குறளில் நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மண்கண்டம், பசுமைக் கரு தாங்குதற்குரியது என்னும் மண் பாதுகாப்பு அறிவியல் பற்றிக் குறிக்கின்றார். அனிச்சம்பூ, பயன்மரம், மருந்து மரம் என்று தாவரவியல் பற்றியும் பேசுகின்றார்.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"; (314)

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்" (109)

என்ற குறட்பாக்கள் மூலம் உளவியல் உணர்த்துகின்றார். அரசியல், பொருளியல் எல்லாரும் அறிந்ததே. ஆதலால் திருக்குறளை அறிவியல் சார்ந்த ஒரு வாழ்வியல் நூலாகக் கருதவேண்டும்.

திருக்குறள் தனி மனிதனில் தொடங்கி, குடும்பத்தை உருவாக்கி, சமூகத்தைக் கண்டு, பின் சமூகத்தை நெறிப்படுத்தும் அரசைப் பற்றிப் பேசுகின்றது. சமூக அமைப்பு உருவாகின்ற போதுதான் ஊர், நகரம், நாடு முதலியன தோன்றுகின்றன. "பல குடும்பங்கள் தோன்றிய பிறகு அவை ஒன்று கூடித் தினசரித் தேவைகளைத் தேடித் தருவதுடன் நிற்காமல், அதற்கும் மேலான ஒரு பலனை அடையவேண்டும் என்று முயற்சி செய்யுமிடத்துச் கிராமம் உருவாகிறது" என்பது அரிஸ்டாட்டிலின் கருத்து. திருக்குறளில் சமூகம், சாதி என்ற சொற்கள் இல்லை. குலம், குடி என்ற சொற்கள் உள்ளன. குலம் வேறு; சாதி வேறு. குலம் ஒழுக்கத்தின் வழி வருவது. "குலம் சுரக்கும் ஒழுக்கம்

குடிகட்கெல்லாம்" என்பான் கம்பன். "ஒழுக்கம் உடைமை குடிமை" என்பது திருக்குறள். ஆயினும் "உலகம்" என்று பல குறட்பாக்களில் திருவள்ளுவர் கூறுவதால் சமூக அமைப்பையும் விட எல்லை கடந்த பெரிய உலக சமுதாயத்தைப் பற்றியே திருவள்ளுவர் சிந்தித்துள்ளார். ஒழுக்கம் என்பதற்குப் புது இலக்கணம் கண்டுள்ளார்.

*"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்"* (140)

என்றார். கள்ளுண்ணாமை முதலிய பல்வேறு ஒழுக்க நெறிகளை - ஒழுகலாறுகளைத் திருவள்ளுவர் கூறினாலும், "உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலை" வலியுறுத்துகின்றார். மீண்டும்,

*"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு"* (426)

என்றும் வேறோரிடத்தில் கூறுகின்றார். 'சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார் கள் உண்க' - என்றதால் சான்றோருக்கு அளித்த முதன்மை புலனாகிறது.

உலகத்தைத் தழுவிநின்று ஒழுகி உலகத்தவரை நட்பாக்கிக் கொள்வது அழகு என்றும், அங்ஙனம் பெற்ற நட்பை மலர்தலும் குவிதலும் இன்றி ஒருநிலையாகப் பேணுதல் அறிவுடைமைக்கழகு என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

*"உலகந் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்*
*கூம்பலும் இல்லது அறிவு".* (425)

ஆதலால் உலகந்தழீஇய நட்புடையராக வாழ்தலைத் திருக்குறள் வலியுறுத்துகிறது.

மானுட வாழ்வு செயல் இயக்கத் தொடர்புடையது. செயலாக்கத்தின் வளர்ச்சி பற்றிக் கூறும் வாழ்க்கை நூல்கள்

பல உண்டு. அந்நூல்கள் செயல்களைப் பற்றி என்ன சொல்லி யிருந்தாலும் அதைப்பற்றிப் பொருட்படுத்தாமல் உலக நடைமுறையினை அறிந்தே செய்ய வேண்டும் என்று திருவள்ளுவர் ஐயத்திற்கு இடமின்றிக் கூறுகின்றார்.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்" (637)

என்பது திருக்குறள். அதனால் திருவள்ளுவர் உலகமாகிய சமுதாயத்திற்கு அளித்த மாட்சிமை உணரப்படுகிறது.

திருவள்ளுவர் மாந்த உயிரினத்தில் வேறுபாடே பாராட்டவில்லை; இன்றைய உலக நாடுகள் சபை வலியுறுத்தும் மனித உரிமைகளை அன்றே வலியுறுத்தி யுள்ளார். பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ரூஸோ, "மனிதன் பிறக்கும் பொழுது சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் அவன் பிறந்து வளரும் பொழுது நூற்றுக்கணக்கான விலங்குகளை மாட்டிக் கொள்கிறான்" என்று கூறுகிறார். திருவள்ளுவர் பிறப்பின் அடிப்படையில் எல்லாரும் சம உரிமை உடையவர்கள் என்று கூறுகின்றார். ஓரோ வழி செய் தொழிலின் வேற்றுமைகளால் அல்லது அறிவால் திறமை யான வர்கள் சிலர் இருந்தாலும் அந்தச் சிறந்த இயல்புகள் எல்லாம் சமூக அமைப்பின் வழி ஒருவருக்குக் கிடைத்த பரிசுகளே யாம். இதனை,

"மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துளது ஆகும் அறிவு" (454)

என்று கூறி விளக்குகின்றார் திருவள்ளுவர். அதன் காரணமாக, அதாவது சிறப்புத் தகுதிகள் பெற்றிருப்பதன் காரணமாகத் தனித் தகுதிகள் அல்லது உயர்வுகள் கிடையாது என்று மறுக்கின்றார். இஃது ஒரு தீவிரமான தனித் தன்மையுடைய கருத்து. தெருக் கூட்டும் துப்புரவுத் தொழிலாளியும் கோயிலில் பூசை வைப்போனும் ஒத்த

உரிமை உடையவர்களே என்பது திருக்குறள் கருத்து. இதனைத்தான் பாரதி,

"சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்"

என்று பாடினான்;

"சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம்"

என்று தெருக்கூட்டும் பணிக்குப் புகழ் சூட்டுகின்றான்.

குடும்பம், சமூகம், சமுதாயம் என்ற அமைப்புக்கள் தோன்றிய உடனேயே அரசு தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது. ஏனெனில் பலர் கூடி வாழும்பொழுது சிக்கல்கள் தோன்றாமல் இருக்க இயலாது. அது மட்டுமல்ல. சொத்துடைமை வேறு உருவாகிறது. சொத்துடைமை தோன்றிய உடனேயே ஆக்கிரமிப்புகள் நிகழாமல் பாது காக்கவும், சொத்துடைமைகளைப் பாதுகாக்கவும் அரசு தோன்றுகிறது. சொத்துடைமையைப் பாதுகாக்கத் தோன்றிய் அரசுகள் இன்றுவரை சொத்துடையவர்களுக்கும் சொத்துக்கும் பாதுகாப்புக் கொடுக்க இயங்கியுள்ளனவே யன்றிச் சாதாரண மக்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. இங்கும் அங்குமாகச் சில அரசுகள், சொத்துடைமை பெற்றிருக்கின்ற வர்க்கத்தினருக்கு உழைப்பவர்கள் வேண்டுமே என்ற கவலையில், உடலில் உயிர் தங்கி வாழ்ந்து உழைக்கச் சோறு முதலியன போடுகின்றன. இன்னமும் ஏழைகளின் எண்ணிக்கை கூடுதலாகத்தான் உள்ளது. பலர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். திருவள்ளுவர் உழைப்பவர் உலகத்தை-தொழிலாளர் உலகத்தைப் பாராட்டியவர்; போற்றியவர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" (1033)

என்றார். திருக்குறள் உழைத்து வாழ்வதையே வாழ்வு என்று வலியுறுத்துகின்றது.

> "பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்
> தாள்வினை இன்மை பழி" (618)

என்பதறிக.

ஊழ்த் தத்துவத்திற்குத் திருவள்ளுவர் உடன்பட்டவர். ஆயினும் ஊழின் வலிமையை-ஊழின் வழியது வாழ்க்கை யமைவு என்பதைத் திருவள்ளுவர் உடன்படவில்லை. ஊழை வெற்றி பெறலாம் என்பதே திருவள்ளுவர் கண்ட முடிவு. இது, தமிழகத்தில் வழி வழியாக வற்புறுத்திக் கொண்டு வந்த ஊழை, மறுத்துக் கூறிய புதுமையாகும்.

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்" (620)

இடைவிடாது சோர்வின்றி உழைப்பது உழைப்பு என்று உழைப்பிற்குரிய இலக்கணம் வகுக்கின்றார் திருவள்ளுவர். அது மட்டுமா? உழைப்பில் தவமும் திறமும் நாள்தோறும் குறையாமல் வளர வேண்டும் என்பதைத் தாழாது உஞற்றுதல் என்று கூறியதன் மூலம் விளக்கிக் கூறுகின்றார்.

வாழ்க்கை பொருள்களால் ஆகியது. உடலோடு கூடிய உயிர் வாழ்க்கை வாழ்வதற்குப் பொருள் இன்றியமையாதது. திருவள்ளுவர் கருத்துப்படி பொருள் என்றால் உண்ணும் உணவு, மருந்து முதலிய நுகர்பொருள்களேயாம்.

> "அருள்இல்லார்க்கு அவ்வுலக மில்லை; பொருளில்லார்க்கு
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (247)

என்றார். இந்த உலகத்தில் உண்பனவும் தின்பனவும் கிடைக்காதவர்கள் வாழ்தல் அரிது. அதுபோலவே யார் மாட்டும் அன்பு காட்டி ஒழுகாதவர் சமுதாயத்தால் விரும்பப்பட மாட்டார்கள். இங்கு "அவ்வுலகம்" என்பதற்கு

வீடு பேறு என்ற உரை தவறு. வீடு பேறுபற்றி இரண்டு இடத்தில் – கடவுள் வாழ்த்திலும், துறவு அதிகாரத்திலும் கூறுகிறார்.

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" (346)

என்று அருளியுள்ளமையை அறிக.

திருக்குறளை ஒரு பொருள் முதல் வாத நூல் என்று கூறினும் தவறில்லை. இந்த உலகமும், மானுடமும் கடவுள் படைப்பு என்று திருவள்ளுவர் கூறவில்லை. இந்த உலகிற்கு முதலாக – முதலாவதாக வைத்தெண்ணப்படுபவரே கடவுள் என்பது திருவள்ளுவர் கருத்து. ஆதலால், திருவள்ளுவர்,

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்" (759)

என்று ஆணையிட்டார். திருவள்ளுவர் காலத்தில் வேளாண்மைத் தொழிலும் வாணிகத் தொழிலும் மட்டுமே இருந்தன என்று தெரிகிறது. வேளாண்மைத் தொழில் பற்றிய அறிவியல் சார்ந்த செய்திகள் பல கூறுகின்றார்.

'செய்க பொருளை' என்பது வேளாண்மைத் தொழிலைச் செய்து உற்பத்தியைப் பெருக்குக என்பதேயாம். பொருட் செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்துப் பலருக்கும் கொடுத்து உண்டு வாழ்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து.

திருவள்ளுவர் காலத்திற்கு முன் ஈதல் – ஏற்றல் செயல்முறைதான் நிலவின. திருவள்ளுவரும் ஈதல் – ஏற்றல் பற்றிக் கூறியுள்ளார். ஆயினும் சங்ககால மரபுகளில் இல்லாத ஒப்புரவுப் பண்பைப் பற்றிப் பேசுகின்றார். ஒப்புரவறிதல் என்பது கூட்டுறவுப் பண்பை ஒத்தது. "கூட்டுறவு, எல்லாரும் எல்லாம் பெறுதலுக்குரிய சோஷலிச சமுதாயத்தின் முதற்படி" என்றான் லெனின். லெனின், கூட்டுறவு இயக்கம்

பற்றி நிறைய எழுதியுள்ளான். "இன்று நம் முன்னுள்ள ஒரே பணி கூட்டுறவு இயக்கத்தில் மக்களை அணிதிரளச் செய்வதுதான்" என்று மேலும் கூறினான் மாமேதை லெனின். இன்றோ நம்முடைய நாட்டில் கூட்டுறவுத்துறை அலட்சியப் படுத்தப்படுகிறது. ஒரு குடியரசு நாட்டில் மக்களுக்கு நாட்டுப் பற்றும் பொறுப்புணர்வும் கடமை உணர்ச்சியும் வேண்டும் என்ற அடிப்படையிலேயே ஊராட்சிமன்றங்களையும் கூட்டுறவு இயக்கங்களையும் தோற்றுவித்தனர். இன்றோ எதிரிடையான அணுகுமுறை உள்ளது. ஒப்புரவு நெறி பேணும் சமுதாயத்தில் "எல்லாரும் ஒருவருக்காகவும், ஒருவர் எல்லாருக்காகவும்" என்ற சமுதாய ஒழுகலாறு நிலவும். ஒப்புரவு நெறி நிற்கும் சமுதாயத்தில் எடுத்துக் கொள்ளும் உரிமையும் உண்டு; கொடுக்கும் கடமையும் உண்டு. ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் நலம் செய்து கொள்ளும் பண்பாடு நிறைந்த வாழ்க்கை அது. ஆண்டான் - அடிமை முறைச் சமுதாயத்தில் தோன்றிய நன்றி, கடப்பாடு என்பன ஒப்புரவுச் சமுதாயத்தில் இல்லை. ஆதலால்தான் உள்ளூரில் பழுத்த பயன் மரத்தையும் மருந்து மரத்தையும் திருவள்ளுவர் ஒப்புரவுக்கு உவமைகளாகக் கூறினார்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"; (216)

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்" (217)

என்றார். பிறர் நலத்திற்காகத் தமக்கு வரும் தீங்கினையும் ஏற்றுக்கொண்டு அர்ப்பணிப்புணர்வுடன் உதவிகளைச் செய்தல், மருந்து மரமனைய வாழ்க்கையாகும். ஒப்புரவு வாழ்க்கை மலருமானால் உடைமைகளால் - சொத்துடைமைகளால் வரும் அவலங்களும் சீரழிவுகளும் வரா.

திருவள்ளுவர் நேரிடையாகத் தனிச் சொத்துடைமையைக் கூறினார் என்று கூறப் போதிய சான்று இல்லை.

"ஊக்கம் உடைமை" என்றே கூறுகின்றார். அதாவது, உழைக்கும் உணர்வே மூலதனம். ஆதலால் திருவள்ளுவர் பிற உடைமையை ஆதரிக்கவில்லை என்றே தெரிகிறது.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்" (1039)

என்பது திருக்குறள். நிலத்தை இல்லாளுக்கு ஒப்பிடுகின்றார். இல்லாளை - மனைவியைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட இயலாது; விடவும் மாட்டார்கள். ஒரோவழி எவனேனும் ஒருவன் அப்படிச் செய்தால் அவன் கயவன்; கீழ்மகன். ஆதலால் நிலம் உழும் தொழிலாளருக்கே உரிமையுடையதாக இருப்பதைத் திருவள்ளுவர் விரும்புகின்றார். அதுபோலவே சுரண்டும் பொருளாதாரத்தையும் மறுக்கின்றார்.

"சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று" (660)

"தாழ்விலாச் செல்வர்" (731)

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" (659)

என்று வரும் திருக்குறள்களும் "பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள" என்று கூறியுள்ளமையும் அறியத்தக்கன. இந்த உலகத்தில் செல்வம் ஓரிடத்திலும் செல்வத்தைத் திரட்டும் அறிவறிந்த ஆள்வினைத் திறன் வேறோரிடத்திலும் இருப்பதைக் கண்டு திருவள்ளுவர் ஆச்சரியப்படுகிறார்.

"இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" (374)

என்றார். அதுமட்டுமா? உழைக்கும் நல்லவன் ஏழ்மையிலும், உழைக்காது வாழும் ஒருவன் ஆக்கத்திலும் இருப்பதைக் கண்டு பொறுக்க முடியாமல் பொது மக்களையும் அரசையும் ஆய்வு செய்யும்படி ஆணையிடுகின்றார்.

*"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்"* (169)

என்பது அந்த ஆணை.

மக்கள் கூட்டமாகக் கூடி வாழத் தலைப்பட்டதனாலும், உற்பத்திகள் தொடங்கப்பெற்றுத் தனியார் சொத்துக்கள் பெருகி வளர்ந்ததாலும், சொத்துக்கள் அடிப்படையில் மோதல் ஏற்படாமல் தனியாரின் சொத்துடைமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தை அமைத்தனர். முதல் அரசு, சொத்துடைமை வர்க்கம் அமைத்த அரசேயாம்! அதனால் இன்றுவரை சொத்துடைமை வர்க்கத்துக்குச் சாதகமாகவே அரசுகள் இயங்கி வந்துள்ளன! காலப்போக்கில் அரசுகள் வலிமையுடையன ஆயின. பல அரசுகள் கொடுங்கோல் அரசுகளாகவும் அமைந்தன; சில அரசுகள் மக்கள் நலம் நாடும் அரசுகளாக அமைந்தன. திருவள்ளுவர் நல்லரசைச் செங்கோல் அரசு என்றும் நலம் பயக்காத அரசைக் கொடுங்கோல் அரசு என்றும் குறிப்பிடுகின்றார். கி.பி. 1789முதல் 1799வரை நடந்த பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகும், கி.பி. 1917ஆம் ஆண்டில் நடந்த சோவியத் புரட்சிக்குப் பிறகும் அரசுகளின் நடவடிக்கைகளில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. பிரிட்டனில் பாராளுமன்ற ஆட்சிமுறை கொண்டு வரப் பட்டு அரசனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. பிரிட்டனின் ஆட்சிமுறை, முடியாட்சி முறை ஜனநாயக ஆட்சிமுறை இரண்டும் இணைந்தது. கிரேக்க நாடு, பிரதிநிதித்துவ ஆட்சிமுறை இருந்த நன்னாடு! பொதுவாக உலக வரலாற்றில் மன்னர் ஆட்சியும், ஜனநாயக ஆட்சியும், இரண்டும் கலந்த ஆட்சிமுறைகளும் இருந்து வந்துள்ளன. நாம் இப்போது சில ஆட்சிமுறைகளைப் பார்ப்போம்.

கி.மு. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாணக்கியர் அர்த்தசாஸ்திரம் கண்டவர். சிறந்த அரசியல் ஞானி.

மௌரிய சாம்ராஜ்யத்தை நிறுவியவர். சாணக்கியரின் அரசியல், பொருளியல் மிகவும் சிறந்தவை. ஆயினும் இவர் கூறும் சிற்றரசியல் பேரரசியல் இரண்டும் குறையுடையன வேயாம். சாணக்கியரின் அரசு, அப்பட்டமான முடியாட்சியேதான்! எனினும், பல கோணங்களில் திருக்குறளுடன் ஒத்திருக்கிறது. சில வேறுபாடுகளும் உண்டு. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்திலும் அரசனுடைய அதிகாரம் அல்லது அரசு நடைமுறை அமைச்சர்களின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டும் என்று கூறுகின்றார். அமைச்சரின் உதவி பெற்றுத்தான் அரசு நடைபெறுதல் சாத்தியம். அரசன் மந்திரிகளை நியமித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டும் என்பது சாணக்கியரின் வாக்கு. அவர் அரசனது அன்றாடப் பணிகளை முறைப்படுத்தித் தந்திருக்கின்றார். இதைத் திருவள்ளுவர் செய்யவில்லை. காரணம் சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் சாத்திரம் மட்டுமல்ல. நடைமுறையும் வகுத்துத் தந்தது. திருக்குறள் அரசியல் சாத்திரம் மட்டுமேயாம்.

ஒரு நாளில்

| | | |
|---|---|---|
| காலை | 6–00 – 7–30 | நாட்டினர் வரவு செலவு களைக் கவனித்தல் |
| காலை | 7–30 – 9–00 | மக்களைக் காணல் |
| காலை | 9–30 | அரசனின் தனது பணிகளும் நூல்கள் படித்தலும் |
| முற்பகல் | 10–30 – 12–00 | அதிகாரிகளுடன் சேர்ந்து நிர்வாகக் காரியங்களைக் கவனித்தல் |
| பகல் | 12–00 – 1–30 | மந்திரிசபைக் குறிப்புகளைக் கவனித்தல்–ஒற்றர்களிடம் செய்தியறிதல் |

| | | |
|---|---|---|
| பகல் | 1–30 – 3–00 | பொழுதுபோக்கு (விருப்பம் போல்) |
| பிற்பகல் | 3–00 – 4–30 | படைகளைப் பார்வையிடல் |
| பிற்பகல் | 4–30 – 6–00 | படைத் தலைவர்களுடன் ஆலோசித்தல்–பின் தனது கடமைகள் |
| மாலை | 6–00 – 7–30 | ஒற்றர்களுடன் |
| இரவு | 7–30 – 9–00 | தனது கடமைகள் |
| இரவு | 9–00 – 1–30 | ஓய்வு |
| இரவு | 1–30 – 3–00 | சாத்திரம் படித்தல்; மறுநாட் பணி பற்றிச் சிந்தித்தல் |
| | 3–00 – 4–30 | ஒற்றர்களுக்கு ஆணையிடுதல் |
| | 4–30 | புரோகிதர், ஆசாரியர் ஆகியோருடன் பேசுதல்; ஆஸ்தான வைத்தியன், ஜோசியன் இவர்களைக் கண்டு கொள்ளல்; மடைப் பள்ளித் தலைவனுடன் பேசுதல்; பசுவை வலம் வருதல். |

அரசன் எப்போதும் சான்றோர் சேர்க்கையில் இருக்க வேண்டும். அறிவை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும் என்று கூறுகின்றார். சாணக்கியர் கண்டது மௌரிய சாம்ராஜ்ய ஏகாதிபத்தியம் என்றாலும் அவர் காலத்திலும் குடி அரசுகள் பல இருந்தன.

சாணக்கியர் அரசனுடைய கடமைகளில் ஒன்றாக நீர்நிலைகளைப் பேணுதலைக் குறிப்பிடுகின்றார்; ஒரு அரசு நிலைத்திருக்க வேண்டுமானால் பொருள் வலிமை பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

சாணக்கியர் அரசனுக்குத் தண்டநீதி வழங்கும் உரிமையை வலியுறுத்துகின்றார்.

அரசன் மக்கள் வரியாகக் கொடுக்கும் பணத்தையும் ஈட்டும் பொருளையும் தனது பொருளாகக் கொள்ள வேண்டும். அரசு எக்காரணத்தை முன்னிட்டும் குடிமக்களிடமிருந்து நன்கொடை வாங்கக்கூடாது என்று தடை விதிக்கிறார்.

அடுத்து, நாம் அறிந்து கொள்ளவேண்டிய பெரிய அரசியல் ஞானி பிளேட்டோ. பிளேட்டோ கிரேக்க தேசத்தைச் சேர்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி.மு. 427 கி.மு. 347க்கும் இடைப்பட்ட காலம். பிளேட்டோ கண்ட அரசின் உயிர்நாடி நீதி. திருவள்ளுவருக்கு இது உடன்பாடே. ஆனால் ஆண் - பெண் உறவு, குழந்தைகள் பாதுகாப்பு முதலியவற்றில் பிளேட்டோ முற்றிலும் மாறுபடுகின்றார். குடும்பம் என்ற அடிப்படை பிளேட்டோவின் அரசில் இல்லை. பிளேட்டோவின் ஆட்சி தலைமைக்குத் தகுதியுடையவன் மன்னன்தான் என்பதல்ல.

பிளேட்டோவினாலேயே பாராட்டப் பெற்றவன் அரிஸ்டாட்டில் என்ற அரசியலறிஞன். இவனுடைய காலம் கி.மு. 384 — கி.மு. 322. மகாவீரன் அலெக்ஸாண்டருக்கு ஆசிரியன். அரிஸ்டாட்டில் குடியாட்சியையே விரும்புகின்றான்.

அண்மைக்காலத்தில் (கி.பி. 1818—83) வந்தது மாரக்கியம். மாமுனிவர் காரல்மார்க்ஸ் “மூலதனம்” என்ற ஓர் அரசியல் பெரு நூலை எழுதியுள்ளார். காரல்மார்க்சின் தத்துவம் பொருள் முதல் வாதமாகும். சோஷலிசம், பொதுவுடைமைச் சமுதாயம் முதலியன காரல்மார்க்சின் கொள்கைகள். சமுதாய மாற்றத்திற்குப் புரட்சி தேவை என்பது மார்க்சின் கொள்கை. காரல்மார்க்சின் பொதுவுடைமை அரசின் தொடக்கத்தில், கட்டுப்பாடுகள்

அதிகமாக இருக்கும். காலம் செல்லச் செல்ல அரசியலே இல்லாத - ஆட்சிமுறையே இல்லாத சமுதாய அமைப்பு உருவாகும் என்பது மார்க்சின் கருத்து.

திருவள்ளுவர் பொருட்பாலை இறைமாட்சியில் தொடங்குகின்றார்.

*படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு* (381)

என்கிறார் திருவள்ளுவர். இதனையே சாணக்கியர் "அங்கங்கள்" என்ற பெயரில் குறிப்பிடுகின்றார். இவ்விருவரின் கருத்துக்களில் சில வேற்றுமைகள் உண்டு. திருவள்ளுவர் அங்கங்கள் ஆறு என்கிறார். சாணக்கியர் அங்கங்கள் ஏழு என்கிறார். திருவள்ளுவர் அரசைப் பற்றிக் கூறுவதால் அரசை ஓர் அங்கமாகக் கூறவில்லை.

திருவள்ளுவர்,

*"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவர்க்கு"* (383)

என்று கூறுகின்றார். ஆனால் சாணக்கியர் தாம் கண்ட அரசனுக்கு ஆறு குணங்கள் வேண்டும் என்கிறார். (1) சந்தி, (2) விக்கிரகம், (3) யானம், (4) ஆதனம் (5) சமாச்சிரயம் (6) துவைதீபாவம். இவற்றை முறையே நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், கூட்டல், பிரித்தல் என்று கூறுவார் பரிமேலழகர்.

திருவள்ளுவர் கண்ட ஆட்சி முடியாட்சியே. ஆனாலும் குடியாட்சியில் மக்களுக்குள்ள உரிமைகள் அதில் குறிக்கப்படுகின்றன. முடியாட்சியில் மன்னன் குடிகளைத் தழுவிய அரசு செலுத்த வேண்டும். சர்வாதிகார மனப்பான்மை கூடாது. இதனைக் "கொடுங்கோல்" என்று திருவள்ளுவர் விளக்குகின்றார். அடுத்து அரசை,

அரசாட்சியை விமர்சிக்கும் உரிமை மக்களுக்கு வேண்டும். திருவள்ளுவர் இந்த உரிமையை மக்களுக்கு வழங்கியுள்ளார்.

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்". (448)

அரசை, குறைகண்டவிடத்து இடித்துக் கூறுவார் இல்லையாயின் அரசு கெடும் என்கிறார். மேலும்

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" (389)

என்றும் கூறுகின்றார். மக்களின் விமர்சனம் கேட்க முடியாத அளவுக்குச் செவி கைக்கக் கூடியதாக அமையினும் நாடாளும் அரசனுக்குக் கேட்கும் பொறுமை வேண்டும் என்பது கருத்து. நாட்டை முறையாக நெறிமுறை பிறழாமல் அரசன் ஆட்சி செய்யாவிடின் அவன் அரச பதவியை இழக்கக்கூடிய நிலையும் வரும். அதாவது மக்கள் அந்த அரசை அகற்றுவார்கள் என்பது கருத்து.

"கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு" (554)

என்பது திருக்குறள். உலகில் சில நாடுகளில் அரசன் தெய்வத்தின் பிரதிநிதி என்ற நம்பிக்கையிருந்தது. அரசனின் ஆணை தெய்வத்தின் ஆணைபோலக் கருதப் பெற்றது. ஆனால், திருவள்ளுவர்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (388)

என்று உபசார வழக்காகக் கூறுகிறார். அதாவது மன்னவன் இறையல்லன்; இறை என்று வைக்கப்பெறும் என்பது கருத்து.

அரசின் அங்கங்கள் பற்றி முன்பு பேசினோம். அரசின் அங்கங்களுள் ஒன்றாக அமைச்சை எடுத்துக் கூறியிருப்பதற்குப் பழந்தமிழக அரசுகளில் ஐம்பெருங்குழு,

எண்பேராயம் முதலிய குழுக்கள் இருந்தன என்று வரலாறு கூறும்.

திருவள்ளுவர், நாடாளும் அரசன் காட்சிக்கு எளியனாக இருக்க வேண்டும்; இனிய சொற்கள் கூறுபவனாக இருக்க வேண்டும்; கொடையாளனாக விளங்குதல் வேண்டும் என்று கூறுகின்றார். தமிழ்நாட்டு அரசர்கள் கொடைமடம் மட்டுமே படுவர்; படைமடம் பட மாட்டார்கள் என்று சங்க இலக்கியம் கூறும். அரசன் கருணையுடையவனாக இருக்க வேண்டும். அரசன் தனது குடிகளைப் பாதுகாத்துப் பேணுபவனாக விளங்குதல் வேண்டும்.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி". (390)

அரசன் கல்வியிற் சிறந்து அறிவுடையோனாக விளங்க வேண்டும். திருவள்ளுவர் கல்வியை அரசியலில் வைத்த தற்குக் காரணம் இரண்டு. ஒன்று நாடாளும் அரசனுக்குக் கல்வி இன்றியமையாதது என்பது. இதைச் சாணக்கியரும் கூறுகின்றார். இரண்டாவது நாடாளும் அரசன் தனது குடிமக்களைக் கல்வி அறிவில் தேர்ச்சியுடையவர்களாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது. மக்களுக்குக் கல்வி தருவது அரசனின் கடமை; அரசனின் பொறுப்பு.

நாடாளும் அரசன் மற்ற அறிஞர்கள் வாயிலாக ஆட்சித்திறன் நுட்பங்கள் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். அரசன் ஒரோவழி தவறு செய்யும் சூழல் ஏற்படின் ஒழுக்க முடையார் மாட்டு அவன் கேட்ட சொல் அவனைத் தவறு செய்யாமல் காப்பாற்றும் என்பது திருக்குறள் கருத்து.

"இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்". (415)

நாடாளும் அரசனைச் சுற்றிப் பலரும் சூழ்வர். பலரும் பலவும் கூறுவர். அவை யெல்லாவற்றையும் அரசன் கேட்டுத்தான் ஆக வேண்டும்; மறுக்க இயலாது; மறுக்கக் கூடாது. ஆயினும் கேட்டவற்றையெல்லாம் நம்பாமல், கேட்டவற்றையெல்லாம் ஆராய்ந்து அவற்றின் உண்மையை ஓர்ந்துணர வேண்டும். இது அரசனின் பொறுப்பு; கடமை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு". (423)

நாடாளும் அரசன் அண்டை அயலிலுள்ள அரசுகளுடன் நட்புப் பேணவேண்டும். அங்ஙனம் கொண்ட நட்பை அளவற்ற நிலையில் மலர்தலும் குவிதலும் இல்லாமல் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.

உலகந் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. (425)

"நாடாளும் அரசன் அன்றாடம் உலகத்தின் நடைமுறையைப் புரிந்து கொண்டு அந்த உலக நடைமுறைக் கேற்ப நடந்து கொள்ளவேண்டும்" என்றும் திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

நாடாளும் அரசன் அரசின் பொருள் வளத்தை நாளும் பேணிக் காத்துக் கொள்ள வேண்டும். அரசன் தனது பொருள் வருவாய்க்கு ஒரே வழியை நம்பிக் கொண்டிருத்தலாகாது. புதிய புதிய வழிகளைக் கண்டாக வேண்டும். பழைய வருவாயையும் புதிய வருவாயையும் பிழையின்றி ஈட்டுதல் வேண்டும். அங்ஙனம் ஈட்டிய செல்வத்தை - முதலை மூலதனம் ஆகக்கூடிய அளவுக்குக் காக்க வேண்டும். அச்செல்வத்தைப் பல்வேறு நல்ல காரியங்களுக்கு — மக்களுக்குப் பயன்படும் காரியங்களுக்குச் செலவிட வேண்டும் என்பது திருவள்ளுவர் கண்ட அரசின் பொருளாதாரம்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

(385)

நாடாளும் அரசன் குற்றங்களினின்றும் விடுதலை பெறுதல் வேண்டும். இந்தக் கருத்தில் எல்லா அரசியல் ஞானிகளும் ஒத்த கருத்து உடையவர்கள். ஒரோவழி அரசனுக்குக் காதல் ஏற்படுமாயினும் அந்தக் காதல் அனுபவத்தைக் கூடப் பிறர் அறியாமல் அனுபவிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

நாடாளும் அரசன் குற்றமற்றவனாக இருப்பின் மக்களும் குற்றமற்றவர்களாக இருப்பார்கள். அரசன் தனது குற்றங்களை நீக்கிக் கொள்ளாமல் மக்களிடத்தில் குற்றங்களைக் காணலும் தண்டித்தலும் ஆகாது, கூடாது என்பது திருவள்ளுவரின் அரசியல் கோட்பாடு. குற்றம் செய்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் உரிமை அரசுக்கு உண்டு. ஆயினும் குற்றம் திருந்துவதற்குத் தண்டனையே தவிர, ஒறுத்துத் துன்பம் தருவதற்கு அல்ல.

"கடிதோச்சி மெல்ல எறிக" என்பார் திருவள்ளுவர். மேலும் "கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்" என்பார். கண்ணோட்டம் என்பது பழகினவரிடத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் மறுத்தற்கு இயலாமல் மீண்டும் பழகுவது; தொடர்ந்து பழகுவது.

விரிந்து பரந்த நாடாகவும் மக்கள் தொகை கூடுதலாகவும் உள்ள நாட்டையுடைய அரசனுக்கு ஒற்றர் தேவை. திருவள்ளுவரின் அரசு நெறியில் ஒற்றர்நிலை பன்முகப்படுத்தப் பெற்றது. திருவள்ளுவர் அரசியலில் நாட்டுநிலை பற்றி அறிந்து கூறுதலும் ஒற்றன் பணியாம். அதுபோலவே நண்பர்களின் நடைமுறை, பகைவர்களின் நடைமுறை முதலியவற்றையும் அறிந்து அரசனுக்கு அவ்வப் போது தெரிவித்தலும் ஒற்றர்களின் கடமை. அதனால்

திருவள்ளுவர் ஒற்றரையும் நீதி நூலையும் அரசனுடைய இரண்டு கண்கள் என்று கூறுகின்றார்.

அரசன் நல்ல நண்பர்களைத் தேர்வு செய்து கொண்டு பழகவேண்டும். நட்பு நன்னடை நல்கும்; உற்றுழி உதவும். மனித வாழ்வின் உறுப்புக்களில் சிறந்த உறுப்பு நட்பேயாம். பழகிய நண்பர்களிடமிருந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிரியக்கூடாது.

மனிதப் பிறவி கூடி வாழப் பிறந்தது. கூடி வாழ்தலுக்குத் தடையாகிய பகையுணர்வு அறவே கூடாது. பகை, நோய் போன்றது. கூடி வாழும் பண்பை வளர்த்துக் கொள்ள இயல்ாமல் போனால் பகை என்ற நோயைச் சுமந்து துன்பப்பட்டுச் சாவதைத் தவிர வேறு வழியில்லை. பகையினால், பகையின் வழிப் பொருதலினால் புகழ் வரும் என்பது ஒரு மாயை. பகையில்லாத வழிதான் புகழ் வரும். துன்பமே தரும் பகையை நீக்கின் இன்பத்துள் இன்பம் கிடைக்கும். வலியாரிடம் பகை கொள்ளலாகாது. தம்மின் மெலியாரிடத்தும் பகை கொள்ளலாகாது. பகை வாழ்க்கை யையே கெடுத்து விடுகிறது. நன்னெறிவழி ஒழுகும் இயல்பறியான், நல்ல பல செயல்களைச் செய்வதற்குரிய வாய்ப்புக்கள் கிடைத்தாலும் செய்யான், பழிக்கு அஞ்சான்; பண்பில்லாதவன் முதலியோர் பகை இனிதேயாம் என்று புறநடை கூறுவார். விளையாட்டாகக்கூடப் பகை கொள்ளக் கூடாது. நாடாளும் அரசன் பகை கொள்ளாமலும் பகை கொள்பவன் தன்னைவிட்டு ஓதுங்காமலும் வைத்திருப்பது நல்லது. பகையில் உட்பகை மிகவும் கொடியது. நிழலில் கிடக்கும் தண்ணீர் குடிக்க நன்றாகத் தான் இருக்கும். ஆனால், பின் நோய் தரும். அதுபோலத்தான் உட்பகையுடையவனின் தொடர்பு நன்மைபோல் காட்டித் தீமை செய்யும். ஆதலால் உட்பகையைத் தவிர்க்க வேண்டும்.

திருவள்ளுவரின் அரசியலில் விவாதத்திற்குரியது பெண் வழிச் சேறல் ஆகாது என்பது. "மனை விழைவார் மாண் பயன் எய்தார்" என்றார்.

"பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து" (907)

என்றும் கூறுகிறார். இதனால் பெண்ணடிமைத் தனத்தைத் திருவள்ளுவர் ஆதரித்தார் என்பது பொருளன்று. நாடாளும் அரசன் ஆட்சித் திறனுக்குரிய நுட்பங்களும் கல்வியறிவும் இல்லாத மனையாளுக்கு அஞ்சி நடத்தல் கூடாது; அரசியல் நடத்தக் கூடாது என்பது திருவள்ளுவர் கொள்கை. அதுபோலவே வரைவின் மகளிரும். வரைவின் மகளிருக்கு அன்பு கடுகளவும் இல்லை. பணமே அவர்களது குறிக்கோள். அந்தக் காலத்தில் அப்படி ஒரு வடிகால் தேவைப்பட்டிருந்திருக்கும் போலும். அதுபோலவே நாடாளும் அரசன் கள்ளும் குடிக்கக் கூடாது; சூதாடக்கூடாது. பசிக்கு உண்டு, உண்டது செரித்த பிறகு உண்ண வேண்டும். நாடாளும் அரசனுக்கு ஆகாத பழக்கங்களைக் கள்ளுண்ணாமை, சூது எனப் பல அதிகாரங்கள் கூறி விலக்குகின்றார். நாடாளும் அரசன் நன்னெறி நின்றொழுக வேண்டும் என்பது திருவள்ளுவரின் அரசியல் நெறி.

திருவள்ளுவர் பிறப்பினால் உருவான பிற்காலச் சாதிமுறையை ஏற்றுக் கொண்டாரில்லை. ஆயினும் குலம், குடி ஆகியன திருவள்ளுவரால் அங்கீகரிக்கப்படுகின்றன. நாட்டு மக்கள் நல்லவர்களாக இருந்தால்தான் அரசு சீராக இயங்க முடியும். நாட்டின் குடிமக்கள் இயல்பு எப்படி அமைய வேண்டும் என்ற செய்தியைக் குடிமை அதிகாரத்தில் விதித்துக் கூறுகிறார். நாட்டுக் குடிமக்கள் சொல்லும் செயலும் மாறுபடாத நிலையினராக இருத்தல் வேண்டும். பழி பாவங்களுக்கு அஞ்சியவர்களாக இருக்க வேண்டும். பிறரை இகழாமையும் ஈகையும் இன்சொல்லும் உடையவ ராகவும் வறுமையுற்ற பொழுதிலும் பண்பின் தலைப்பிரியாத வராகவும் இருப்பர் சிறந்த குடிமக்கள்.

நற்குடிப் பிறந்தார் பணிவுடன் விளங்குவர். மானம் என்பது ஒழுகலாறு தொடர்புடையது. ஆனால் இன்றோ பெரு வழக்காக "மானம்" என்பது மற்றவர் மதிக்காமையே என்று பேசப் படுகிறது. நாட்டு மக்கள் ஒழுகலாற்றை உயிர் போலப் பாதுகாக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் கொலையும் கொள்ளையும் இருக்கும். நாடு அல்லற்படும். அதனால் நாட்டு மக்கள் நன்னெறி சார்ந்த ஒழுகலாற்றைப் பேணவேண்டும். அதேபோழ்து பொய்மையான மானம் கருதி ஒரு குடிக்குள் உள்ள ஒற்றுமையைச் சீர்குலைக்கக் கூடாது. உற்றார், உறவினரிடையே பெருமை பாராட்டு தலினால் குடி கெடும். அதனால்,

> "குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
> மானம் கருதக் கெடும்" (1028)

என்றார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் நெறியில் சாதிகள் இல்லை. குடி செயல் வேண்டும்; ஒருவருக்கொருவர் உற்றாராகி, உறவினராகி, மதிப்பு - அவமதிப்புப் பாராமல், பெருமை - சிறுமை பாராமல் தம்மைச் சார்ந்த குடிமக்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

இங்ஙனம் தாம் பிறந்த குடியின் மேம்பாட்டுக்கு உதவி செய்பவர்களே பெருமைக்குரியவர்கள். உயிர் வாழ்தலுக்குச் சான்று, பிறரால் செய்ய இயலாத காரியங்களைச் செய்தலேயாம். எச்செயலும் செய்யாதிருத்தல் சாவை நிகர்த்தது. திருவள்ளுவர் நெறியில் பிறப்பில் அனைவரும் சமமே. சிறப்புடைய தகுதிகளால் சிறப்பான தொழில்கள் செய்திருந்தாலும் அச்சிறப்புக்காக எந்த ஒரு தனித் தகுதியும் பெறுதற்குரியரல்லர். சாத்திரம் கற்றோராயினும் சந்தி பெருக்குவோராயினும் ஒரு குலத்தவரேயாம்; ஒரே தகுதி யுடையவரேயாம். வரலாற்றின் நிற்கத்தக்க அருமை யுடைய செயல்களையே செய்வர் பெரியர். பெரியோருக்குரிய

வாய்ப்புக்கள் சிறியோரிடம் வாய்த்துவிடின் மிகவும் தருக்கி நடப்பர். பெருமையுடையவர்கள் மற்றவர் குற்றங்களைக் காணார். கண்டாலும் அதை மறைத்து விடுவர்.

நற்குணங்களில் சிறந்து விளங்குவோர் சான்றோர்கள். செய்யத் தக்கன அறிந்து செய்பவர்கள் சால்புடையவர்கள். தகுதியில்லாதார் மாட்டும் தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல் சால்பின் இயல்பு. சராசரி மனிதர்கள் தகுதி மிகுதியும் உடைய பெரியோர் மாட்டுத் தோற்பதை வரவேற்பர். தமக்குக் கீழ்ப்பட்டவர்களிடத்திலும் தோல்வியைச் சகித்துக் கொள்வார்கள். இந்த அடிப்படையில்தான் "குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும்" என்ற பழமொழி பிறந்தது. சான்றாண்மையுடையோர் எல்லா ருக்கும் நன்மையே செய்வர். சான்றாண்மையுடையவர்கள் வறுமைக்கு ஆளாகி இருப்பதைக் கண்டு ஒருபொழுதும் நாணார். இத்தகு சான்றோர்கள் திருக்குறட் சமுதாயத்தில் பல்கி இருந்தனர் என்பது புலனாகிறது. அதுபோல வறுமையுடையோரும் பலர் இருந்திருக்கிறார்கள்.

பண்பாடு, செயல் அடிப்படையில் வருவது. இன்றளவும் இந்த உலகம் இயங்கி வருதற்குக் காரணம் பண்புடையோர் பலர் வாழ்வதினால்தான்! "பண்புடை யார்ப் பட்டுண்டு உலகம்" என்பது திருக்குறள். திருவள்ளுவர் ஓர் அதிசயமான செய்தி கூறுகிறார். பகலில் இருள் வந்து சூழ்ந்துவிட்டதாம். யாருக்கு? நெஞ்சில் பகை கொண்டு, கண்டும் காணாமல் நகைத்துப் பேசிக் கலந்துரையாடி மகிழாமல் செல்பவருக்குப் பகலும் இருளாம்.

பண்பில்லாதவனிடத்தில் செல்வம் இருக்காது. ஒரோ வழி விபத்து காரணமாக இருப்பின் நஞ்சு கலந்த பாலாம். அச்செல்வம் நன்றியில் செல்வம். பொருள் ஒரு கருவி; பொருள் ஒரு வாழ்க்கைச் சாதனம்; அவ்வளவுதான். எல்லாமே பொருளால் உண்டாகும் என்று நம்பிப்

பொருளை ஈட்டிச் சேமித்து உண்டும் உதவி செய்தும் வாழாதார் செத்த பிறகு என் செய்வர்? ஓர் இளம் பெண், கன்னிப் பெண்; எழில் நலம் மிக்குடையவள்; திருமணமின்றித் தனியே மூத்து முதுமையானது போன்றது அச்செல்வம். நாலு பேரால் நண்ணி அனுபவிக்கப் பெறாத செல்வம், நச்சப்படாத செல்வம் நடுவூருள் பழுத்த நச்சு மரம் ஒத்தது.

திருவள்ளுவர் காட்டும் சமுதாயத்தில் சிறியன சிந்திக்கவும், சின்னத்தனமான காரியங்கள் செய்யவும் நாணுவர். அதாவது வெட்கப்படுவர். உடை, உணவு, இனப் பெருக்கம் எல்லா மக்களுக்கும் பொதுவானவை. சிறப்புடைய மாந்தருக்கு நாணமே பெரிது. நாணமற்றோர் மரப்பாவை யனையர். இது திருக்குறள்.

திருவள்ளுவர் சமுதாயச் சிந்தனையாளர். ஒப்புரவு நெறி நின்று ஒழுகித் தாம் பிறந்த குடியை மேம்பாடு செய்து வளப்படுத்துவதில் நற்குடிப் பிறந்தார் ஈடுபடுவர். பிறந்து வளர்ந்த குடியை மேம்பாடுறச் செய்பவருக்குத் தெய்வமும் துணை செய்யும். தாம் பிறந்த குடியை மேம்பாடுறச் செய்ய விரும்புபவர்கள் "இன்று நன்று, நாளை நன்று" என்று காலம் கடத்தமாட்டார்கள். நாள் பார்த்துக் கடமைகளை ஒத்திப் போடுதல் சோம்பேறித்தனத்தில் கொண்டு போய்விடும். சோம்பேறிகள்தான் சமூகத்தின் மதிப்பு - அவமதிப்பு பார்ப்பார்கள். தாம் பிறந்த குடியை மேம்பாடுறச் செய்பவர்கள் மதிப்பு - அவமதிப்பு பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். தாம் பிறந்த குடியை ஆளாக்குதலே அவர்தம் குறிக்கோள். ஒரே குறிக்கோள்!

*"குடிசெய்வார்க் கில்லை பருவம்; மடிசெய்து*
*மானம் கருதக் கெடும்"*

(1028)

என்பது குறள்.

திருக்குறள் காலச் சமுதாய மக்கள் உழவுத் தொழிலிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தனர். மக்களியல் கூறி முடித்த திருவள்ளுவர் அடுத்து அவர் செய்த உழவுத் தொழில் பற்றி விரிவாகவே பேசுகின்றார். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று உழுவோரை உச்சிமீது வைத்துப் பாராட்டுகிறார். திருவள்ளுவர் உழவியல் துறைத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கினார் என்று புலனாகிறது. தொழிலில் சிறந்தது உழவு. மனிதருள் சிறந்தவர்கள் உழவர்கள். வளம் சேர்ப்பதில் உழவுத் தொழிலே தலையாயது; நன்னெறித் தொடர்புடையது. உழவுத் தொழில் நுட்பத்தைத் திருவள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார். நாள்தோறும் கழனிக்குச் சென்று பயிரைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடப்பாட்டுணர்வினை,

> "செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
> இல்லாளின் ஊடி விடும்" (1039)

என்று கூறி விளக்குகின்றார். உழவுத் தொழில் கடப்பாடுகளை முறைப்படுத்திக் கூறுவது வியப்பைத் தருகிறது.

> "ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு" (1038)

என்ற திருக்குறள் கூறும் உழவுத் தொழிலின் நெறிமுறைப் பாடுகள் என்றைக்கும் உரியன என்பதை உணர்க. உழவும் 'தெள்ளு புழுதி' என்பார்களே அதுபோல அமைய வேண்டும் என்பார் திருவள்ளுவர். அதனால் அந்தக் காலத்திலேயே இருந்த "கோடை உழவை"த் திருவள்ளுவர் அறிமுகப்படுத்தி யுள்ளார். நிலமகள் தன்னொடு தொழில் புரிந்தாருக்கு இல்லை என்று சொல்லுவதில்லை; அள்ளிக் கொடுப்பாள். நிலம் இருந்தும் செயற்படாத சோம்பரைக் கண்டு நிலமகள் நகுவாள் என்பதனை,

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" (1040)

என்ற திருக்குறள் விளக்குகிறது.

இனி, திருவள்ளுவர் சமுதாயத் தீமைகள் சிலவற்றையும் விவரிக்கின்றார். சமுதாயத் தீமைகளில் முதன்மையானது நல்குரவு. நல்குரவு என்றால் வறுமை. அதாவது உண்பன உடுப்பன இன்றித் துன்புறுவது. ஒரு நாட்டில் நல்குரவு நிலவுவது அந்த நாட்டின் வளத்தைக் கெடுக்கும்; ஒழுக்கக் கேடுகளை உருவாக்கும்; பண்பாடுகளைச் சிதைக்கும். அதனால்தான் திருவள்ளுவர்,

"இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது" (குறள் 1041)

என்றார். வறுமை, இம்மை வாழ்வையும் கெடுக்கும்; மறுமை வாழ்வையும் கெடுக்கும்.

நல்குரவு பற்றித் திருவள்ளுவர் புது இலக்கணம் வகுக்கின்றார். இயல்பாக உள்ள வறுமை வேறு; ஆசை காரணமாக வரும் வறுமை வேறு. அதாவது வாழ்க்கைக்குத் தேவை இல்லாதனவற்றை விரும்பி அது கிடைக்காத நிலையை வறுமை என்று கருதி அழுது புலம்புவாரும் உண்டு. அதுபோலவே, ஒருவகை வறுமையினை வரவேற்கவும் செய்கின்றார். அறஞ்சார்ந்த வறுமையை வரவேற்கின்றார். அதாவது பிறருக்கு வழங்கிய வழி வந்த வறுமையைப் புண்ணியம் சார்ந்த வறுமை என்கிறார். புண்ணியம் சாராத வறுமையைத் தாயும் வேண்டாளாம். நெருப்பிற்குள் தூங்க இயலும்; வறுமையுடன் கூடி வாழ்தல் அரிது என்று வறுமையின் கொடுமையைக் கூறுகின்றார்.

இன்று நமது நாட்டில் வறுமையுற்று வாழ்வோர் 43% இருந்து வருகின்றனர். அதிலும் கிராமப்புற வறுமை கொடியது. கிராமப்புற வறுமையை அகற்ற நமது மாநில,

மைய அரசுகள் பல திட்டங்கள் தீட்டின. ஆனால் அந்தத் திட்டங்களைப் பல மக்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை; சிலர் முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டனர். கிராமப் புற மக்களின் மனோநிலை - குணாம்சங்கள், பழக்க வழக்கங்கள் மாறினால்தான் கிராமப்புற வறுமை அகலும்! கிராமப்புற மக்களுக்கு வாழ்வியல் சார்ந்த அறிவியல், பொருளியல் அறிமுகப்படுத்தப்படவேண்டும். அது அவ்வளவு எளிதான காரியமல்ல. அவர்கள் "தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்" என்று நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்; எளிதில் கேட்கமாட்டார்கள். ஆனாலும் போராடியாக வேண்டும். இது படித்த மனச்சாட்சியுடை யோரின் கடமை.

வறுமைக்குப் பசி பயப்படுமா? வறுமையின் காரணமாக வயிற்றுப் பசி வராதா? உடலில் உயிர் உள்ள வரை பசிப்பிணி யகலாது. வயிற்றில் பசி. வீட்டில் வறுமை! என்ன செய்வான்? பிச்சையெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் 'நல்குரவு' அதிகாரத்தைத் தொடர்ந்து 'இரவு' அதிகாரம் வைத்தார். இரந்து வாழ்தல் ஒரு வாழ்வா?

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" (1062)

என்றது திருக்குறள். ஆனால் திருவள்ளுவர் இரத்தலையும் முழுமையாக விலக்கிப் பேசாதது ஏன் என்பது ஆய்வுக்குரிய செய்தி. மானுட வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் இரத்தல் வராமல் போகாது என்று எண்ணினாரா? அங்ஙனமாயின் வறுமை காரணமாக இல்லாமல் பிற காரணங்களுக்காக ஒருவரிடம் கேட்டுப் பெறுதலை இரத்தல் என்று கூறுவானேன்? உதவிக்குள் அதனை அடக்கக் கூடாதா? அறிஞர்கள் ஆராய்க. 'இரவு' அதிகாரத்தில் இரவின் இழிவையே திருவள்ளுவர் கூறவில்லை. அதற்கு மாறாக "ஈவாரைப் பார்த்து இரக்க!" என்றும் "கரப்பாரிடம்

இரக்கம் வேண்டாம்" என்றும் கூறுகின்றார். ஏன்? "இரத்தலும் ஈதலே போலும்" என்றுகூடக் கூறிவிட்டார்.

இரவச்சம் அதிகாரத்தில்தான் இரவின் இழிவு பற்றிப் பேசுகின்றார். இரவச்சம் அதிகாரத்தில்,

"கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்" (1061)

என்று கூறுகின்றார். ஆனால் இரவு அதிகாரத்தில்,

"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்புமோர் ஏஎர் உடைத்து" (1053)

என்று கூறுகின்றார். இது என்ன? முன்னுக்குப்பின் முரணா? அல்லது இயல்பாய தேவைகளுக்கு அல்லது அறஞ்சார்ந்த வறுமைக்குத் தந்த விதிவிலக்கா? அறஞ்சார்ந்த வறுமைக்குத் தந்த விதிவிலக்கு அதிகாரமே இரவு.

மக்கட் சமுதாயம் இரந்து வாழும் நிலையில் வாழின், அந்த நாட்டில் அரசு இருந்து என்ன பயன்? கடவுட் கோயில்கள் இருந்து என்ன பயன்? திருவள்ளுவருக்குக் கோபமே வருகிறது.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" (1062)

என்று பேசுகிறார்.

திருவள்ளுவர் நல்ல மக்கட் சமுதாயத்தைப் படைத்து உருவாக்கவே திருக்குறள் இயற்றினார். ஆயினும் அவரால் அது முடிந்ததா? முடியவில்லை என்பதே வரலாற்று முடிவு. அதுமட்டுமல்ல, திருக்குறளின் முடிவும் கூட. ஏன் எனில், திருக்குறட் பொருட்பாலின் கடைசி அதிகாரம் கயமை. அரசு, நட்பு, பெரியோர், சால்புடையோர் இவ்வளவு பேர் முயன்றும் திருத்த முடியாத கயவர்கள் என்றும் சமுதாயத்தில் இருப்பர் என்று திருவள்ளுவர் நம்புகின்றார்.

ஆம்! உண்மை! நமது சொந்த அனுபவமும் கூட! நாம் என்னதான் பரிவு காட்டினாலும் குடும்பத்தையே கட்டி வளைத்துச் சோறு போட்டாலும்கூட, ஆயிரம் தடவை புத்திமதி சொன்னாலும்கூட கேட்காமல் குடித்துச் சீரழிபவர்கள் பலர்! சின்னத்தனங்களும் அராஜகங்களும் செய்தல், நன்றி மறத்தல், பிறருடைய பொறுமையை - மன்னிக்கும் மனப்போக்கை அலட்சியமாக - பயந்தாங் கொள்ளித் தனமாக நினைத்தல் ஆகிய தீய பழக்கங்களி லிருந்து மீள முடியாமல் தவிப்பவர் பலர். திருவள்ளுவரே விரக்தியுடன்,

> "ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
> போஓம் அளவும்ஓர் நோய்" (848)

என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கயவர்கள் வாழ்ந் திருக்கின்றனர்; வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்தகு கயவர்கள் "கரும்புபோல் கொல்லவே பயன்படுவர்" என்பது திருவள்ளுவர் கருத்து. கயவர்கள் தம்மைச் சில காசுகளுக்கு விற்றுவிட்டு விவஸ்தையின்றி நன்றிகெட்ட செயல்களைச் செய்வர்.

அண்மைக் காலமாக நமது நாட்டில் இந்தக் கயமைக் கூட்டம் பெருகி வளர்ந்து வருகிறது என்பது உண்மை. கயமைக் கூட்டத்தை அறவே ஒழித்தால்தான் வீட்டில் அமைதி; உலகில் அமைதி. இந்தப் பணி எப்போது நடக்கும்?

# 6

# திருக்குறள் நெறி சார்ந்த அறிவியல்

திருக்குறள் வாழ்வியல் சார்ந்த ஓர் அறிவியல் நூல். திருக்குறள் "கண்டது மட்டுமே உண்மை; அனுபவம் மட்டுமே உண்மை" என்று கூறும் அரை வேக்காட்டு நூல் அன்று. திருவள்ளுவரின் அறிவு, அறிவிற்கு அவர் கூறும் இலக்கணங்களுடன் நூற்றுக்கு நூறு பொருந்தும்; "நுண்ணறிவு"ம் திருவள்ளுவருக்கே உரிமை உடையது. எந்த ஒரு கொள்கையையும் ஆழ்ந்து ஆய்வு செய்து ஐயத்திற் கிடமின்றித் தெரிவிக்கின்றார் திருவள்ளுவர்.

உயிர், உள்பொருள். உயிர் படைப்புப் பொருளன்று. மன்னுதல் என்றால் நிலை பெறுதல் என்பது பொருள். அதாவது அழியாமை. உயிர்கள் தோன்றியனவுமல்ல; அழிவனவுமல்ல. உயிர்கள் படைக்கப்பட்டனவுமல்ல; அழிக்கப்படக் கூடியனவுமல்ல. இதனைத் திருவள்ளுவர்,

> "தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
> மன்னுயி ரெல்லாம் தொழும்" (268)

என்பதால் அறியலாம். மன்னுயிர் - நிலையான உயிர் என்பது கருத்து. அடுத்து, நாம் இருப்பது மட்டும் உண்மையல்ல. மற்றவர்களும் வாழ்கிறார்கள் என்பதும் உண்மை. ஏன்? எண்ணற்ற உயிர்கள் வாழ்கின்றன. ஆதலால் உயிர்

ஒன்றல்ல; ஒரு தன்மைத்து அல்ல. உயிர்கள் பலப்பல; பலவகைப்பட்டன. உயிர் உண்டு என்ற கொள்கையும், அவை ஒன்றல்ல, பலப்பல என்பதும் திருக்குறள் கருத்து.

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது". (68)

இந்தக் குறளில் மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்பதை அறிக.

உயிர் உய்தல் வேண்டும்; அஃது உய்தலுக்குரியது என்பதும் திருக்குறள் கொள்கை. உய்தலாவது வளர்தல். வளர்தலாவது துன்பத் தொடக்கிலிருந்து விடுதலை பெறுதல். "உய்வர்" என்ற சொல்லையும் திருவள்ளுவர் ஆள்கின்றார்.

"எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும் (207)

என்பதறிக.

உயிர்க்கு உற்றது என்ன? எத்தகைய உய்தல் உயிரடைதல் வேண்டும்? உயிரியற்கை, செயல்—செயற் பாடுறுதல் என்பது. உயிர் செயற்பாடுறாது போனாலும் துன்பம் வரும். பயன்படுத்தப் பெறாத இரும்பு துருப்பிடித்து அழிவது போல, வினைப்பாடுறுதலில் — செயற்பாடுறுதலில் உயிர் ஈடுபடவில்லையானாலும் உயிர்க்கு நல்வாழ்வு அமையாது துன்புறும். அதுபோலவே, நல்லதன் நன்மை யையும் தீயதன் தீமையையும் ஆய்ந்தறிந்து செயற்பாடுறுதல் வேண்டும். தவறாகச் செயற்பாடுறுதலும் கூடத் துன்பந்தரும். உயிர்க்குரிய பகை, வினைப்பகை யென்பதேயாகும். வினைப் பகையினின்று உயிர் மீளுதலே உய்தல். வினைப் பகையினின்று உயிர் மீள உயிர் அறிவுபெறுதல் வேண்டும்.

உயிருக்கு அறிவு பிறப்பினா லமைவதன்று. உயிர் பிறந்து வளரும் பொழுது கற்றல், கேட்டல் மூலமும் பட்டறிவினாலும் அறிவு பெறுகிறது. அறிவுடையராதல் இயற்கையன்று. அறிவுடையராதல் முயற்சியின் பயன். "கற்றனைத் தூறும் அறிவு" என்றது திருக்குறள். அறிவு

வாயில்களில் ஒன்று கற்றல். "கசடறக் கற்பவை கற்றால்" அறிவு பெறலாம். கற்பதனால்மட்டும் அறிவு வாய்ப்பதில்லை. கற்ற கருத்துக்கள் வாழ்க்கையில் இடம் பெறுதல் வேண்டும்.

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (140)

என்றும் திருக்குறள் கூறுகிறது; "எனைத்தானும் நல்லவை கேட்க" என்றும் கூறுகிறது. கேட்பனவெல்லாம் அறிவினைத் தாரா. கேட்பனவற்றில் மெய்ப்பொருள் தேர்ந்து தெளிதல் வேண்டும். காணப்படும் - நுகரப்படும் பொருள்களை நுகர்வின் மூலம் நுனித்தறிதல் வேண்டும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"; (423)

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (355)

என்றும் திருக்குறள் கூறுகிறது.

அறிவு, உயிர்க்குத் துன்பம் வராமல் பாதுகாக்கிறது. அறிவு எனும் கருவி பெற்று வினைப் பகையை வென்று விளங்க வேண்டுமாயின் உயிர்க்கு உயிரொழுக்கமாகிய அன்பு தேவை. உயிரின் இருப்பு அன்புக்காகவேயாம். உயிர், உடம்பாகிய ஒரு கருவியைப் போர்த்துக் கொண்டது அன்புடையராக வாழ்தலுக்கேயாம். "அன்பின் வழியது உயிர்நிலை" என்பது திருக்குறள்.

உயிர், அன்புநலம் செறிந்தால் நல்லறிவினை நாடும். நல்லறிவு பெற்றால் உயிர் செயற்பாடுறும். நல்லறிவின் துணையால் உயிர், தீவினை - தீய செயல்கள் செய்யாது; நன்னெறி சார்ந்த செயல்களைச் செய்யும். அதனால் உயிர் துன்புறாது. உயிர் வாழ்க்கை துன்புறாது; உயிர் உய்திநிலை அடையும்.

அன்பு, உயிர்க்குலத்தைத் தளிர்க்கச் செய்து வளர்த்து வாழவைக்கும் அற்புத ஆற்றலுடைய பண்பு. அன்பு, எப்போதும் உலகத்தைத் தழீஇயது; உலகையே உறவாகக்

கொண்டது. தேனீர் அருந்துபவர்கள் "கப் - சாசர்" பார்த்திருப்பீர்கள். 'கப்'பில் தேனீர் சூடாக இருக்கும். "சாச"ரில் ஊற்றினால் சூடு ஆறிவிடும். ஆதலால், சூடான தேனீரைச் "சாச"ரில் ஊற்றிக் குடிப்பது அன்றாடக் காட்சி. சுருங்கியனவெல்லாம் துன்புறும்; அழியும். விரிந்தன வெல்லாம் வளரும்.

> "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு". (72)

உயர்ந்த அன்புநெறியில் நிற்பதுவே வாழ்க்கை. உயிர் உய்திக்கு அன்பு தேவை. அன்பு உள்ள இடத்திலேயே வாழ்வு இருக்கும்; வாழ்வு சிறக்கும். அன்பு உயிரையும் உடலையும் இணைத்து வாழ்விக்கிறது.

அன்பு, இயக்கத்தன்மை உடையது. அன்பு, ஆற்ற லுடையது. 'ஆற்றல் மிக்க அன்பு' என்று அப்பரடிகள் கூறுவார். ஆதலால் அன்பு செயற்பாட்டிலும், தியாகத்திலும் இடம்பிடித்து வாழ்கிறது.

அன்புநெறியில் நிற்க விரும்புபவர்கள், தங்களை நேசித்துக் கொள்வதில் அளவற்ற அக்கறை காட்டக் கூடாது. அன்புடையவர்கள் தங்களைக் கடைசியாகவே நேசிக்கத் தொடங்குவர். அன்பு என்பது செயற்பாட்டுக்குரிய வாய்ப்புக் கருதிக் காத்துக் கொண்டிருக்காது. பள்ளந்தாழ் உறுபுனல்போல, அன்பு செயல்களைச் செய்ய வலியச் சென்று வாய்ப்புக்களை நாடும்; தேடிப் பிடிக்கும். இதுவே உயிர் உய்யும் நெறி; திருக்குறள் நெறி.

திருக்குறள் நெறி, உயிர்நிலை போற்றும் நெறி. உயிர்நிலையின் களம் அன்பு; உயிரின் உயிர்ப்பு அன்பு. அன்புடையராதலின் பயன் நல்லறிவு பெறுதல்; நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் தெளிந்து துணிதல்; செயற் பாடுறுதல். இதுவே, திருக்குறள் நெறி சார்ந்த அறிவியல்.

7

# வள்ளுவமும் மார்க்சியமும்

மனித உலகம் சிந்திக்கத் தொடங்கிய நாளிலிருந்து தனியுடைமைச் சமுதாயம் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். காவல் என்ற பெயரில் வேலிகளும் சுவர்களும் முறையே தோன்றியிருக்க வேண்டும். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பூர்வ காலத்தில் மனித குலத்தில் பொது வுடைமைச் சமுதாய அமைப்பே நிலவி இருந்தது. அதுவே இயற்கை வழிப்பட்ட சமுதாயம். பிறகுதான் முறையே தனி உடைமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் என்ற அமைப்பு முறைகள் வளர்ந்து வந்துள்ளன.

நிலப்பிரபுத்துவ சமுதாயம் ஈன்றெடுத்த நஞ்சனைய தீண்டாமை மற்றும் சாதி, குலம் முதலிய இழிவுகள், பல முனைப் போராட்டங்களுக்குப் பிறகும் அகன்ற பாடில்லை. ஏன்? மானுடத்தைப் பற்றியுள்ள வறுமை, சாதிப் பிரிவினை முதலிய இழிவுகளை அரசியலுக்குத் துணையாகக் கொள்ளும் போக்கு அண்மையில் வளர்ந்து வந்திருப்பதை - வளர்ந்து வந்துகொண்டிருப்பதை மறுப்பது எளிதன்று. அதுவும் பண மதிப்பீட்டுச் சமுதாய அமைப்புத் தோன்றிய பிறகு மனிதம் மெள்ள மெள்ள இழிதன்மையை அடைந்து கொண்டு வருகிறது.

எங்கும் மனிதன் மதிக்கப்படுவதில்லை. மனிதனின் வளர்ச்சிக்குரிய பணிகள் நடப்பதில்லை. இலவசங்களே நடக்கின்றன! இலவசங்களால், தான தருமங்களால் உள்ளத்தில் ஏற்படும் ஊனங்கள் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. ஒருபுறம் உடல் ஊனமுற்றோருக்கு உதவிகள் பற்றிய ஆரவாரம்! நடப்பது என்ன? நமக்குத் தெரியாது. ஆனால், நாளும் மனித குலத்தில் பாதிப்பேர் நியாயவிலைக் கடைகளில் முன்னும், வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்னும், அரசு மருத்துவ மனைகளிலும், காவல் நிலையங் களிலும், வட்டிக் கடைகளின் முன்னும், கடவுள் சந்நிதிகளிலும் நின்று அவர்கள்தம் உள்ளம் ஊனப்படுவது பற்றி எத்தனை பேர் கவலைப்படுகின்றோம்.

மனிதன் வாழப் பிறந்தவன். வாழ்வது அவனது உரிமை! மனிதனை வாழவைக்கும் கடமையை நிறைவேற்றவே சமூகம் என்ற கூட்டமைப்பு - கூட்டு வாழ்க்கைமுறை தோன்றிற்று! ஆனால், இன்றோ சமூகம் மனிதனை வாழ வைப்பதில்லை! அவனுடைய தோள்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு அவனுக்கு மேலும் சுமையாக இருக்கிறது. சமயம் மானுடத்தை வாழ்விக்கவே தோன்றியது. கடவுள் சாட்சியாகச் சமயத்தின் முதற் கடமை மானுடத்தை வாழ வைப்பதுதான்! ஆனால், மதங்களோ கடவுளைக் காப்பாற்றப் போரிட்டுக் கொண்டுள்ளன. மதங்கள் மனிதத்தை மறந்தே விட்டன. மதத்தின்பின் மனிதனை வாழ்விக்க, அவனுடைய உரிமைகளைப் பாதுக்காக அரசு தோன்றியது. ஆனால் இன்றைய அரசுகள் அதிகாரத்தையே மையமாகக் கொண்டுள்ளன. தேர்தல் என்ற ஒன்று வந்து தொலைப்பதால் ஆள்கின்றவர்களுக்கு மனிதனைப் பற்றிய கவலை கொஞ்சம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் பயன்தரத் தக்கவாறு இல்லை.

இந்தச் சூழ்நிலையில் மானுடம் இன்னமும் வறுமையி லிருந்தும் ஏழ்மையிலிருந்தும் விடுதலை பெறவில்லை. அச்சத்திலிருந்தும் விடுதலை பெறவில்லை. ஏன்? தனி மனித

நிலையில் இருந்த சுரண்டல்கள், கடன்கள் நாடுகளைத் தழுவியனவாக உலகந்தழீஇயனவாக வளர்ந்துவிட்டன. ஊழல் தேசியமயப்படுத்தப் பெற்றுவிட்டது. இன்றுள்ள நிலையில் நாடு நலம் பெற என்ன செய்யவேண்டும்?

தமிழ்த் தந்தை திரு.வி.க. அவர்கள் தமது நூல்களில் கார்ல்மார்க்ஸை 'மாமுனிவர்' என்றார்; இந்தியா திருக்குறளும் மூலதனமும் காட்டும் திசையில் நடந்தால் வளரும் என்று நம்பினார். ஆதலால் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை விரும்புகிறவர்கள் வள்ளுவத்தையும் மூலதனத்தையும் ஒரு சேரக் கற்றுத் தெளிய வேண்டும். உணர்தல் வேண்டும். வள்ளுவமும் மார்க்சியமும் காட்டும் புதியதோர் உலகத்தை அமைக்கும் பணியில் போர்க் குணத்துடன் ஈடுபடவேண்டும்; போரிட வேண்டும். சுகவாழ்வுப் போக்கிலிருந்தும் நுகர்பொருட் சந்தைகளிலிருந்தும் வெளியேறிச் சமூக சிந்தனையைப் பெற்று,

> "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
> வாழும் மனிதருக் கெல்லாம்"

என்ற பாரதியின் கனவை நனவாக்கப் போரிட வேண்டும்.

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் எழுதப் பெற்றது. கார்ல்மார்க்ஸின் மூலதனம் 150 ஆண்டுகளுக்கு முன் எழுதப் பெற்றது. இரண்டு நூல்களும் சமூக இயல், பொருள் இயல் துறைகளில் ஒருமைப்பட்டுள்ள மாட்சிமையை உணர முடிகிறது. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற திருக்குறள் மூலதனத்தின் பொருள் முதல் வாதத்திற்கு அரண் செய்கிறது. மூலதனம், உழைப்பை, உழைப்பாளியை ஊக்குவிக்கிறது; உழைப்பாளிகளே ஆட்சி செய்ய வேண்டும் என்று கூறுகிறது. திருக்குறள்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்," (1033)

என்று கூறுகிறது. மீண்டும்,

*"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்*
*தாள்வினை இன்மை பழி,"* (618)

என்று கூறுகிறது.

மூலதனம் ஊழை மறுக்கிறது. திருக்குறள் ஊழ்த் தத்துவத்தை உடன்பட்டு மறுக்கிறது. மதவாதிகள் கூறும் ஊழின் வலிமையைத் திருக்குறள் ஏற்றுக் கொள்வதில்லை. மனித குலத்தால் ஊழினை வெற்றி பெறமுடியும் என்பது வள்ளுவத்தின் முடிவு. ஊழ் என்பது நேற்றைய வாழ்க்கையின் தொடர்ச்சி. நேற்றைய பழக்கங்களின், வழக்கங்களின் முகிழ்ப்பே ஊழ். "பழக்கம் தவிரப் பழகினால்" ஊழின் நிலை மாறும்; அகலும். ஆக இரண்டு நூல்களுமே ஊழின் வலிமையால் இந்த உலகத்தில் உள்ள சாதிமுறைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அமைய வில்லை என்ற கருத்தில் ஒத்து நிற்கின்றன.

மக்கள் பிறப்பில் எந்த வேறுபாடுகளுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் ஊழ் காரணமில்ல. இக்கருத்தினை மார்க்சியம் வலியுறுத்துகிறது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று திருக்குறளும் வலியுறுத்துகிறது. பிறப்பால் எல்லா உயிர்களும் சம உரிமைகள் உடையன. ஒரோவழி சுற்றுப்புறச் சூழ்நிலையின் காரணமாக, வாய்ப்புகளின் காரணமாகச் சிறப்புடையோராக விளங்கினாலும் அதற்காக எந்தவிதச் சிறப்பினையும் தனி உரிமைகளையும் பெற இயலாது; பெறக்கூடாது. அந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலையும் வாய்ப்புக்களும்கூட வரலாற்றுப் போக்கில் சமூகம் படைத்தளித்தவைதாம்.

சுரண்டும் பொருளாதார அமைப்பை மார்க்சியம் அடியோடு மறுக்கிறது. திருக்குறளும் சுரண்டும் பொருளா தார அமைப்பைச் "சலத்தால் பொருள் செய்தல்" "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம்" என்றெல்லாம் மறுத்துரைக் கிறது.

*"சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்*
*கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று",* (660)

என்ற திருக்குறள், சூது செய்து பிறர் பங்கைத் திருடிச் சேர்க்கும் பொருளைக் குறிக்கிறது.

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்" (169)

என்ற திருக்குறள், கெட்டவன் பொருளாளி யாதலும் நல்லவன் (உழைத்துப் பிழைப்பவன்) வறுமையாளி யாதலும் சமூகத்தின் குற்றம்; ஆட்சியின் குற்றம். நம்பாமல் ஆராய்க; மாற்றுக என்று வழி நடத்துகிறது.

பொருள் உற்பத்தி செய்யும் தொழிலே சிறந்த தொழில் என்பது மார்க்சியம். திருக்குறளும் 'செய்க பொருளை' என்று கூறுகிறது.

பல்வேறு உடைமைகளைப் பற்றி வள்ளுவம் எடுத்துக் கூறுகிறது. ஆயினும் தனியுடைமை பற்றித் திருக்குறள் எதுவும் கூறவில்லை. உடைமையைப் பற்றிக் கூறவரும் பொழுது திருக்குறள், உழைப்பிற்குரிய ஊக்கத்தையே 'உள்ளம் உடைமை உடைமை' என்று கூறுகிறது.

ஏழ்மையையும் வறுமையையும் மனித குலத்தின் சாபக்கேடு என்று மார்க்சியம் கூறுகிறது. திருக்குறளும்

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்," (1062)

என்று கூறுகிறது.

மார்க்சியம் கடவுளை நம்பவில்லை. ஏன்? மனிதன் தன்னுடைய வாழ்க்கையை உருவாக்குவது தன்னைவிட மேலானவராக இருக்கும் கடவுள் பொறுப்பு என்று நம்பினால் மனிதன் முன்னேற்றத்திற்குரிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டான் என்பது மார்க்சியம். திருக்குறள் கடவுளை ஒத்துக் கொள்கிறது. ஆனால் கடவுள்தான் மனித வாழ்வின் மேம்பாட்டுக்குப் பொறுப்பு என்ற மதவாதத்தை மறுக்கிறது. கடவுள்

உலகத்திற்கு முதல். அவ்வளவுதான்! அவன் படைப்பாளியும் அல்ல. மானுடத்தின் வாழ்வியல் அமைவுகளுக்குக் கடவுள் பொறுப்பேற்பதில்லை; பொறுப்பேற்கவும் மாட்டார். இந்த வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வது மனிதன் பொறுப்பு; கடமையுமாகும்.

மார்க்சியம் உலகம் தழீஇயது. ஒவ்வொரு நாடும் தற்சார்புடையதாக விளங்கவேண்டும். நாடுகளுக்கிடையிலும் சுரண்டல் கூடாது என்று கூறுகிறது. "பன்னாட்டு மூலதனம்" என்ற பெயரில் சில நாடுகளின் பொருளாதார ஆதிபத்தியம் வளர்வது மார்க்சியத்திற்கு உடன்பாடன்று. திருக்குறளும் "நாடென்ப நாடா வளத்தன" என்று கூறுகிறது. இன்று நமது பாரதத்தைப் பன்னாட்டு மூலதனம் விழுங்கப் பார்க்கிறது. பொதுத் துறை நிறுவனங்கள் தனி உடைமைகளாக்கப் படுகின்றன. நாட்டையே சுரண்டும் தீய குணம் பரவி வருகிறது. 'காட்' ஒப்பந்தம் நம்மை மேலும் பல்வீனமாக்கு கிறது. இந்தச் சூழ்நிலையில் பாரதநாட்டு மக்கள் விழித்தெழ வேண்டும்.

பாவேந்தன் கூறியபடி நாம் - மக்கள் இந்தப் புவியை நடத்த வேண்டும்! பொதுவில் நடத்தவேண்டும்! புவியை நடத்துதல் எளிய பணியன்று. புவியை நடத்த முதலில், கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்க்க வேண்டும். எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பதான உலகத்தை நோக்கி இந்த உலகத்தை நடத்த வேண்டும். எட்டுத் திசையும் சென்று பொதுவுடைமைக் கொள்கையைச் சேர்க்க வேண்டும். அதைப் புனிதமுடன் உயிர் போலக் காக்க வேண்டும். சோவியத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளை-சரிவுகளைப் படிப்பினையாக ஏற்றுக்கொண்டு மார்க்சியத்தை வாழ்வாக்க வேண்டும். மார்க்சியம் தோற்காது! மார்க்சியம் தோற்றால் மானுடத்திற்கு எதிர்காலம் ஏது? மார்க்சியம் தோற்க அனுமதிக்கமாட்டோம். வள்ளுவமும் மார்க்சியமும் மலர்க.

# திருவள்ளுவர் – வாழ்வியல்

## (முதல் நாள் சொற்பொழிவு)

### திருக்குறள் சிறப்பு

*நல்ல இலக்கியங்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டு தோன்றுபவை. வாழ்க்கையை முறையாக வளர்க்கும் இயல்பின சிறந்த இலக்கியங்கள். உலக மொழி களில் இலக்கியங்கள் காடென மண்டிக் கிடக்கின்றன. இவற்றுள் இலக்கியத்தின் தரத்தை பிரான்சிஸ் பேக்கன் என்ற ஆசிரியன் முறைப்படுத்தும்போது "சில இலக்கியங்கள் கற்கத் தக்கன. சில இலக்கியங்கள் கற்று உணரத்தக்கன. சில இலக்கியங்கள் கற்று உணர்ந்து வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தத்தக்கன"* ``Some books are to be tasted, others to be swallowed, and some few to be chewed and digested, that is, some books are to be read only in parts, others to be read but not curiously, and some few to be read wholly, and with deligence and attention. Some books also may be read by deputy, and extracts made of them by others." - (Essays on Studies - Francis Bacon.) *இந்த இலக்கிய வரிசையில் திருக்குறள் கற்று, உணர்ந்து வாழ்க்கையில்*

பின்பற்றத்தக்க சிறப்புடைய இலக்கியம். "நூல்கள் கற்கும் முயற்சியைவிட எந்த நூலைக் 'கற்பது? என்று தேர்ந் தெடுப்பதில் வாழ்க்கையில் வெற்றிக்குரிய பகுதி மிகுதியும் அமைந்துவிடுகிறது" ``How long most people would look at the best book before they would give the price of a large turbot for it" - என்கிறார் ரஸ்கின். இங்ஙனம் இந்த இலக்கிய வரையறைக் கேற்றவாறு சிறந்து விளங்கும் நூல் திருக்குறள். திருக்குறள், கடவுளை நம்புகிறது; ஆனால் கடவுளுக்காகச் செய்யப் பெற்றதன்று. திருக்குறள் மனிதனை வளர்ப்பதற்காக மனிதனையே மையமாகக் கொண்டு செய்யப்பெற்ற நூல். மனிதராகப் பிறந்தோர் பேசுகிற வேறு எம்மொழியிலும் திருக்குறளைப் போன்றதோர் வாழ்க்கை நூல் இதுவரையில் தோன்றவில்லை.

## வாழ்வாங்கு வாழ்தல்

வாழ்க்கை என்பது நோக்குடையது; பயனுடையது. வாழ்க்கை என்பது தற்செயலாக வந்த ஒன்றன்று. அது தற்செயலாக நீரிற் குமிழிபோல மறைந்து விடுவதுமில்லை. வாழ்க்கைக்கு அளப்பரிய நோக்கங்கள் உண்டு. வாழ்தல் என்பது எளிதன்று. வாழ்வாங்கு வாழ்தல் அருமையுடைய முயற்சி. வாழ்க்கையில் வெற்றி பெறுவோர் கோடியில் ஒருவரே. மற்றவர் வாழ்க்கை பாழுக்கிறைத்த நீரைப் போலப் பாழாகிறது. சிலர் வாழ்க்கை, பாழாவது மட்டுமின்றி மற்றவர்களுக்குத் துன்பமும் பழியும் தருவது உண்டு. வாழ்க்கை யென்பது கட்டி முடிக்கப்பெற்ற மாளிகையன்று. வினாடிக்கு வினாடி எண்ணங்கள் என்ற கற்களை அடுக்கி, ஊக்கம் என்ற சாந்து கூட்டி, அன்பு என்ற நீரில் கலவை செய்து, ஆள்வினை யென்ற கொற்றாள் துணைசெய்யக் கட்டி முடிக்கப்பெறும் மாளிகையாகும். ஆதலால் வாழ்க்கையில் அதிகக் கவனம் தேவை. வாழ்க்கை, நமக்குரிய ஒவ்வொரு வினாடியும் நாம் பயன்படுத்தும் முறையினைப்

பொறுத்து ஆக்கத்தினை அல்லது அழிவினைத் தரும். உலகில் எல்லாப் பொருள்களுக்கும் காலத்துக்குமிடையே ஓயாத இழுபறிப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போரில் காலத்தை வெற்றி கொள்பவர்கள் ஆயிரத்தில் ஒருவரே! காலம், வெற்றி பெறுதலே மிகுதி. காலம் மானுடச் சாதியை வெற்றி பெற்றுவிட்டால் மூப்பு, நோய், அழிவு ஆகிய முத்திரைகளைப் பொறிக்கும். மனிதன் விழிப்பாக இருந்து காலத்தைப் பயன்படுத்தி வெற்றிகொண்டால் ஆக்கம், இன்பம், புகழ் என்ற முத்திரைகளைக் காலத்தின்மீது பொறிப்பான். ஆதலால் வாழ்க்கையில் வெற்றிக்கு முதல் தகுதி காலத்தைப் போற்றிப் பயன்படுத்திக்கொள்ளுதல்.

## அறிவு என்பது எது?

உயிர், அறிவுப் பொருள்; அறிதற்குரியது; அறிவு மயமாய் விளங்குதற்குரியது. ஆயினும் அறியாமையைத் தழுவிக்கிடக்கிறது. வாழ்வியல் வெற்றிக்கு முதல் தேவை, அறிவு. அறிவுக்குப் பின்தான் பிற தேவைகள்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (430)

என்று பேசுகிறது, திருக்குறள். எது அறிவு? அறிவுடைமைக்கு அடையாளம் என்ன? தெளிவாக உணர வேண்டும். தமிழக வரலாற்றுப் போக்கைக் கூர்ந்து நோக்கினால் நம்மில் பலருக்கு நேற்றும் இன்றும் அறிவே இல்லையோ என்று ஐயப்படத்தக்க அளவுக்கு வரலாற்று நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இன்றைய தமிழகத்தின் நிலையும் அதை உறுதிப்படுத்துகிறது. விவரங்கள், தகவல்கள் தெரிந்து வைத்திருப்பது அறிவன்று. நிரந்தினிது சொல்லும் திறமை பெறுதல் அறிவன்று. அவற்றிலும் சிறந்த மாட்சிமையுடைய உயரிய பணி ஒன்றுளது. அது என்ன? மனித உலகம் துன்பத்திலிருந்து காக்கப்பெற வேண்டும். நேற்றும் துன்பம், இன்றும் துன்பம்; நேற்றும் தோல்விகள், இன்றும்

தோல்விகள்; நேற்றும் சாதிச் சண்டைகள், இன்றும் சாதிச் சண்டைகள்; அப்படியானால் இரண்டாயிரம் ஆண்டுக் காலமாக என்ன நடை பெற்றிருக்கிறது? தனிமனித நிலையிலும் சமுதாயப் பொது நிலையிலும் அனுபவித்த வறுமை முதலிய கொடிய துன்பங்கள் மாற்றப்படவில்லை. ஆதலால், அறிவின் இயக்கம் இல்லை என்பது தானே பொருள். அறிவு என்பது அகராதிக்கு மறுபதிப்பன்று. புத்தகங்களில் உள்ள செய்திகளை ஒலிப்பதிவுத் தட்டுப்போலப் பதிவு செய்து திருப்பித் தருதலன்று. அறிவு, நுண்மையதாக உணர்விற் கலந்து வாழ்க்கையின் துறைதோறும் துணை நிற்பதாகும்.

*"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்"* (140)

என்று கூறுகிறது. ஆதலால் கற்றவர்களில், கல்லாதவர்களும் அறிவிலிகளும் உள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதனுக்குக் கல்வியை இயக்கமாக்கித் தந்த பெருமை திருக்குறளுக்கு உண்டு. திருக்குறள் "கற்க" என்று விதிக்கிறது. வள்ளுவம் மிக மிக இன்றியமையாத இடங்களில் தான் இவ்வாறு விதிக்கிறது. அவற்றுள் "கற்க" என்பதும் ஒன்று; எத்தகைய நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்? உடல் நோய்க்கு உரிய மருந்தைத் தேடுதல் போல, உயிர்க் குற்றம் அல்லது மனக் குற்றத்திற்கு மருந்தென விளங்கக்கூடிய நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும். மனக் குற்றங்கள் கருத்துக்களால்தான் மாறும். ஒவ்வொரு வரும் தம்தம் மனக் குற்றம் இன்னதென அறிந்து அக்குற்றம் நீங்குகிற வரை கற்க வேண்டும்; குற்றம் நீங்கி நன்னெறி வாழ்க்கைக்கு வந்தபிறகு அந்நிலையில் மீண்டும் சோர்வு படாமல் நிலைநிற்க வேண்டும்.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"* (391)

என்பது குறள். வாழ்க்கையென்பது, குறைகள் அவ்வழிப் பட்ட குற்றங்கள் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்று நிறைபெறுதல் என்று கண்டோம். அதற்கு அறிவு தேவை. அறிவு எது என்றும் கண்டோம். ஆனால்அந்த அறிவினைப் பெறுதல் எங்ஙனம்? கற்பதன் மூலம் மட்டும் அறிவு வராது என்று முன்னர்க் கண்டோம். அறிவின்னைப் பெறுவதற்குக் கற்பதும் ஒரு வாயிலாக அமையும் ஆனாலும் கற்பதனாலேயே அறிவுடையராகி விடமுடியாது. உலகப் பரப்பு அகலமானது. அனுபவங்களுக்குரிய பரப்பும் அகல மானது. உலகம் முழுதும் அறிஞர்களும் பரவிக் கிடக் கின்றனர். உலகத்தில் தோன்றும் எல்லா நூல்களையும் ஒருவர் கற்று வல்லவராதல் அரிது. அதனால் கற்கும் வாய்ப்பை இழந்தவர்கள் கேள்வி முறையிலாவது அறிவைப் பெற முயற்சி செய்ய வேண்டும். கற்றல் கேட்டல் இரண்டும் அறிவினைப் பெறுதற்குரிய தொடக்க வாயில்கள். ஆனாலும் கற்ற, கேட்ட கருத்துக்கள் அறிவாக மாறி வாழ்க்கைக்குத் துணை செய்யவேண்டுமானால், அந்தக் கருத்துக்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு கருத்தை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பொழுதுதான் அது விஞ்ஞானமாக - அறிவாக உருமாற்றம் பெறுகிறது. இத்தகைய அறிவையுடையோரே எல்லாம் உடையார். எத்தனையோ பேர் கற்று, கேட்டு நம்புகின்ற கருத்துக்களை நடைமுறைப்படுத்த முடியாமல்-வாழ்க்கையில் காட்ட முடியாமல் தத்தளிக்கின்றனர்; தோற்கின்றனர். இத்தகை யோர் வாழ்க்கையைப் பார்த்துத்தான், “கலைமகளுக்கும் திருமகளுக்கும், சண்டை; கலைமகளுக்கும் வெற்றித் திருமகளுக்கும் சண்டை; ஒன்றோடொன்று பொருந்தாது” என்ற வழக்குப் பிறந்தது போலும். ஆதலால், “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்ற வள்ளுவத்தின்படி கற்ற, கேட்ட கருத்துக்களை வாழ்க்கையில் ஒவ்வொருவரும் சோதனைப் படுத்திப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் வள்ளுவம் நம்முடைய வாழ்க்கையில் அறிவாக இடம் பெறும்.

வாழ்க்கையில் அன்றாடம் ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளைச் சந்திக்கின்றோம். அவற்றில் இன்பந் தருபவையும் இருந்திருக்கலாம்; துன்பம் தருபவையும் இருந்திருக்கலாம். அவைகளை எண்ணிக் கவலைப்பட்டுப் பன்னிப் பன்னிப் பேசுதல் பலருடைய வழக்கம். நேற்று நடந்தது, நடைபெறக் கூடாத ஒன்று தான்! ஆயினும் என்ன செய்வது? நடந்தது நடந்ததுதான்! இனி, நேற்று நடந்ததைத் தவிர்க்க முடியுமா? கவலைப்பட்டு அழுவதில் என்ன பயன்? சென்றதை மறந்து இனி வருவதை எதிர்நோக்க வேண்டும்.

*"சென்றதினி மீளாது மூடரே நீர்*
*எப்போதும் சென்றதையே சிந்தை செய்து*
*கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து*
*குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா:*
*இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நெஞ்சில்*
*எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு*
*தின்றுவிளை யாடிஇன்புற் றிருந்து வாழ்வீர்'*
*அஃதன்றிச் சென்றதையே மீட்டும் மீட்டும்*
*மேன்மேலும் நினைந்தழுதல் வேண்டா"*

(பாரதியார் கவிதைகள், சுயசரிதை: 32–33–1)

சென்றதை நினைந்து கவலைப்பட்டு அழுதுகொண்டிருந்தால் எதிர்காலமும் வருந்துதலுக் குரியதாகிவிடுகிறது. சிறப்புடைய நிகழ்காலமே சிறப்புடைய எதிர்காலத்தைத் தோற்றுவிக்கும். ஆதலால், சென்ற காலத்தை நினைந்து வருந்தாது, சென்ற காலப் படிப்பினைகளை ஏற்று அறிவாக மாற்றிக்கொண்டு இனி எதிர்வருங் காலத்திற்கு உரியனவற்றை நாடிச் செய்ய வேண்டும். அதுவே சரியான வாழ்க்கைமுறை.

*"அறிவுடையார் ஆவதறிவார் அறிவிலார்*
*அஃதறி கல்லா தவர்"* (427)

என்று திருக்குறள் பேசுகிறது.

## ஆள்வினை

வாழ்க்கையின் உயிர்ப்புடைய செயல் தொழிற்படுதல். அறிவு, அன்பு, ஈதல், ஒப்புரவறிதல், சான்றாண்மை, நாகரிகம், பண்பாடு முதலிய பல்வேறு நற்பண்புகளையும் இயக்கிச் செயற்படுத்தித் தாமும் வாழ்ந்து உலகையும் வாழ்விக்கச் சிறந்த தொழில்திறன் தேவை. உழைப்பு என்பது உயிரின் இயற்கை. உழைக்காது சோம்பியிருத்தலே செயற்கை. அயர்விலாது உழைத்தல் நல்வாழ்வு, உழைத்திடாது சோம்பியிருத்தல் நோய். உழைத்தல் தெய்வத் தன்மையுடையது. உழைப்பே உலகை இயக்கும் ஒப்பற்ற சக்தி. மனித குல வரலாற்றின் எழுச்சிக்கு அடிப்படையாக அமைவது உழைப்பேயாம். உழைக்கும் சக்தி என்றும் எப்பொழுதும் செலாவணியாகக் கூடிய ஒப்பற்ற செல்வம்; உடைமை. உலகில் புதிய புதிய புனைவுகளும் படைப்புகளும் உழைப்பின் படைப்பு அல்லவா? அதனால் தான் திருக்குறள்,

*"உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை*
*நில்லாது நீங்கி விடும்"* (592)

என்று அறுதியிட்டுக் கூறுகிறது.

ஆக்கம், மந்திரத்தில் வருவதன்று. ஆக்கத்திற்குரிய திருமகள் வந்து சேர்தலுக்குரிய முகவரியை அடையாளம் காட்டிவிட்டால் போதும். ஆக்கம் வீடு தேடி வந்து சேரும். அது என்ன முகவரி? அஞ்சலக முகவரியா? அதுதான் இன்று எல்லாருக்கும் இருக்கிறதே: வேறோர் அடையாளமுமல்ல! இவன் ஊக்கம் உடையவன். இவனை நாம் சென்றடைந்தால் நமக்குரிய விலையைக் கொடுப்பான் என்ற அடையாளத்தைக் காட்டவேண்டும்.

*"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்கம் உடையான் உழை"* (594)

என்பது திருக்குறள். வள்ளுவம் பிறந்த தமிழகத்தில் இன்று உழைப்பாற்றல் முழுமையான அளவுக்கு வளர்ந்து பயன்பட வில்லை. அதுவும் படித்தவர்கள் மத்தியில் முழுமையாக இயங்கவில்லை. வாழ்க்கையில் ஏமாற்றங்களும் மனநிறை வின்மைகளும் மலிந்து வருகின்றன. இன்றைக்குக் கடவுள் சந்நிதியில் பிச்சைக்காரர்களே மிகுதியும் கூடுகின்றனர். வள்ளுவம் ஊக்க சக்தியினை வழங்கும் ஊற்று. அறிவுக்கு ஒத்துவராத மூடநம்பிக்கைகளில் முடம்பட்டு மனிதகுலம் அழிவதை வள்ளுவம் விரும்பவில்லை. அது நாள்தோறும் புதிய வரலாறு படைக்கத் தூண்டுகிறது. ஆனாலும் இன்று உழைப்பாளர்கள் இல்லையா? என்று கேட்கலாம். ஏன்? நம்முடைய நாட்டுத் தலைவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள், "கடுமையாக உழைத்தால் முன்னேறலாம்" என்று. வேறு சிலர் – வசதிவாய்ப்புகளை நிறையப் பெற்றவர்கள் – உழைப்பைக் குறைந்த விலைக்கு வாங்கி வளர்பவர்கள் முணுமுணுக் கின்றனர். சமுதாயத்தின் கடைமட்ட உழைப்பாளிகள் முன்போல வேலை செய்வதில்லையாம். நிறையக் கூலி கேட்கிறார்களாம், அதனால் தான் நாட்டில் வறுமை வந்துவிட்டதாம். சமுதாய வீதியில் எங்கு வேண்டு மானாலும் கை விளக்கை எடுத்துக் கொண்டு போய்த் தேடுங்கள்! இன்று வறுமையில் வாடுபவர்கள் உழைக்காத வர்கள்தானா? என்று பாருங்கள்! மனச்சாட்சிக்கும் கொஞ்சம் வேலை கொடுங்கள்! இந்த அவலநிலை ஏன்? வெறும் சோற்றுக்காக நாள்தோறும் எட்டு மணி நேரத்திற்கும் மேலாக ஆண்டு முழுதும் கடுமையாக உழைக்க வேண்டிய திருக்கிறது. அந்த உழைக்கும் வர்க்கத்தினிடத்தில் இலக்கியங் களை எடுத்துச் சென்றதுண்டா? கடவுள் நெறியை எடுத்துச் சென்றதுண்டா? இல்லை; திட்டங்கள்தான் அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டுகின்றனவா? யாதொன்றும் நடைபெறவில்லை. அத்தகைய அதிசயங்கள் இப்போதைக்கு இந்த நாட்டில் நடக்காது; நடக்கப்போவதுமில்லை.

உழைத்தால் மட்டும் போதாது; குறைந்த சக்தியில் நிறைந்த பணிகளைச் செய்து முடிக்கும் திறனைப்பெற வேண்டும். அப்பணியின் பயன்பாட்டினைப் பெருக்கி வளர்க்க வேண்டும். சிலர் விடிய விடிய மாய்ந்துமாய்ந்து வேலை செய்வர். ஒட்டு மொத்தத்தில் அந்தப் பணியின் பயன் என்ன என்று கணக்கிட்டால் வட்டங்கள் தான் கிடைக்கும். ஏன்? உழைப் பாற்றலோடு அறிவை இணைப்பதில்லை. இன்னதை, இப்படி, இவ்வளவு ஆற்றல் செலவழித்துச் செய்தால் இவ்வளவு பயன் விளையும் என்ற அறிவேயிருப்பதில்லை. நம்முடைய நாட்டுத் திட்டங்களே எண்ணியபடி இலட்சியத்தை நிறைவேற்றித் தரவில்லை என்றால் நம்முடைய சமுதாயத்தில் உழைப்புக்கும், அறிவுக்கும் தொடர்பில்லாமல் நீண்ட இடைவெளி கிடப்பதை அறிக. அதனால் வள்ளுவம் அறிவையும் உழைப்பாற்றலையும் ஒருங்கிணைத்துத் தொழிற்படக் கற்றுக்கொடுக்கிறது.

> "பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
> ஆள்வினை இன்மை பழி" (618)

> "ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
> நீள்வினையால் நீளும் குடி (1022)

என்ற அறிவறிந்த ஆள்வினை வழி நமது வாழ்வியல் சிறப்பதாக!

## அன்பு

மனித உலகத்தை இணைத்து வாழச் செய்யும் அற்புதசக்தி அன்புக்கே உண்டு. விண்ணையும், மண்ணையும் இணைக்கும் பேராற்றல் அன்புக்கே உண்டு. உலகத்தின் குற்றங்குறைகளை, கொடுமைகளைக் கழுவித் தூய்மை செய்யும் ஆற்றல் அன்புக்கே உண்டு. அப்பரடிகள் 'ஆற்றல் மிக்க அன்பு' என்று பாராட்டுவார். திருமூலர் 'அன்பே சிவம்' என்று பாராட்டுவார். அம்மம்ம! இந்த அன்பிற்குத்தான்

எவ்வளவு ஆற்றல்! கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்கிறது! “தேவர்கோ அறியாத தேவதேவ” னையும் தெருவில் நடமாட வைக்கிறது. அன்புத் தேவதையின் முன்னே ஆதிக்கச் சக்திகள், ஆதிக்க அரசுகள் நிற்கமுடியா. பணத்தாசை முதலியனவும் அன்புத் தேவதையின் பிரவேசத்தால் மாறும். மண் குளிர மனித குலம் தழைக்க அன்பின் ஊற்று தடையின்றிப் பொங்கிப் பெருக்கெடுத்து ஓடவேண்டும். இன்று தடையிலா அன்பு இந்த உலகத்திற்குத் தேவை. இத்தகைய உயரிய அன்பியலை வாழ்வியலில் ‘உயிர் நிலை’யாகக் காட்டுகிறது வள்ளுவம்.

உயிர் எங்கிருக்கிறது? சிலர் உடம்பில் தேடுவர். உடம்பில் இந்த இடத்தில் இருக்கிறது என்பர். அஃது யார்க்கு? உடல் வாழ்க்கை மட்டுமே வாழ்பவர்க்கு! சிலருக்கு உயிர் பணத்தில் இருக்கும். பணத்திற்கு இழப்பு வந்தால உயிர் பிரியும். அய்யோ ‘பாவம்’ மனிதன் பணத்தைப் படைத்தான். அவன் படைத்த பணமே அவனுக்கு ஆண்டவனாகி அவனை ஆட்டிப்படைக்கிறது. அவன் உயிரையும் கொள்ளை கொள்கிறது என்றால் என்னே இழிநிலை? இவ்விரண்டு நிலையினரும் இழி மக்கள். வேறு சிலருக்கு மானத்தில், மரியாதையில் உயிர் நிலை இருக்கும். இது நல்லதே. ஆனாலும் இழந்த மானத்தைத் திரும்பப் பெறாமல் இறப்பது, வாழ்க்கையின் நோக்கத்தை முறியடிப்பதாகும். ஆதலால் தவறில்லையாயினும் இதனைப் பாராட்ட முடியாது. காதலில், நட்பில், கடமையாற்றுவதில் உயிர்நிலை வைத்துப் போற்றுவோர் நம்மால் போற்றுதற்குரியோர். காதலில் உயிர் நிலை வைத்திருந்த பாண்டிமா தேவியும், நட்பில் உயிர்நிலை வைத்திருந்த பிசிராந்தையாரும், முறை வழங்கும் அரசுக்கடமையில் உயிர்வைத்திருந்த பாண்டியன் நெடுஞ்செழியனும் வானும், நிலனும், நீரும், தீயும், வளியும் உள்ளளவும் நினைந்து நினைந்து போற்றப்படுவர். ஆம்! அவீர்கள் - வாழ்வதற்காக வாழவில்லை; அன்பிற்காகவே

வாழ்ந்தார்கள்; கடமைக்காகவே வாழ்ந்தார்கள்; அவற்றை இயற்ற இயலாதபொழுது மாறாக உயிரை விலை கொடுத்தார்கள். வள்ளுவம் இத்தகைய அன்பினையே போற்றுகிறது.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (80)

எவ்வளவு கடுமையாக அன்பின்மையை வள்ளுவம் விமர்ச்சிக்கிறது என்பதை அறிதல் கடமை. ஒருவர்க்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்பதை அவர் சுவாசிப்பதிலிருந்து நம்ப வள்ளுவம் தயாராயில்லை. அவன் வாழ்க்கையில் அன்பின் விளக்கமிருந்தால் தான் அவனுக்கு உயிர் உண்டாம். இல்லையானால் உயிரற்ற உடம்பு ஒன்று உலாவருகிறது என்று வள்ளுவம் கூறுகிறது. அது மட்டுமா? உயிர், உடலோடு தொடர்புகொண்டு பிறந்ததே அன்பு செய்தற்குத்தானாம். உடலோடு கூடிய உயிர் அன்பு செய்தல் என்பது தான் வழக்கம். அது மாறியிருந்தால் வழக்கமில்லாத ஒன்று.

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு" (73)

என்று வள்ளுவம் அன்பியல் வாழ்க்கையை இயல்பு ஆக்குகிறது; வழக்கம் ஆக்குகிறது. அன்பு எத்தகையது? வாயினால் 'அன்பு' 'அன்பு' என்று உச்சரிப்பது அன்பாகுமா? அன்பினைப்பற்றி ஆயிரம் பாடல்கள் பாடி அரங்கேற்றிவிட்டால் அது அன்பாகுமா? பட்டி மண்டபங்களில் 'அன்பே உயரியது' என்று உரக்கத் தீர்ப்புக் கூறினால் அன்பாகிவிடுமா? ஆகாது! வாழும் மானிடச் சந்தையில் அன்பை அடையாளம் கண்டு கொள்ள வள்ளுவம் வழி காட்டுகிறது. அன்பிற்கு உருவம் இல்லை. அன்பைக் காண முடியாது. அன்பு "குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் போல இதுதான் அன்பு என்று போதத் திறந்து காட்டலாகாது" என்று கூறியவரும் உண்டு. ஆனால்

வள்ளுவம் அன்பிற்கு உருவம் காட்டுகிறது. அதைக் காணமுடியும் என்றும் கூறுகிறது. வள்ளுவம் அன்பிற்குத் தந்த உருவம் என்ன? அடையாளம் என்ன? தனக்கு நெருங்கிய கேண்மையுடையாருக்கு யாதானும் இடையூறு ஒன்றுற்றபொழுது அவ்விடர் தமக்கே வந்துற்றது போல நினைந்து வருந்தி யாருடைய கண்கள் கண்ணீரைச் சிந்துகின்றனவோ- அவர்களுக்கு அன்புண்டு. அக் கண்ணீரே அன்பின் வடிவம்.

> "அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்"
>
> (71)

என்ற வள்ளுவம் காட்டும் அன்பியல் நமது வாழ்க்கையில் துறைதோறும் பொருந்துவதாக.

இன்று மனிதகுலத்தைப் பிடித்திருக்கும் பீடைகளுக்கு எல்லாம் இந்த அன்புநெறி மூலம்தான் முடிவுகாண முடியும். அன்பு சில பொழுது இயங்கும்; செயற்படும். ஆனாலும் வணிகப் பாங்கில் தன்னயப் புணர்வுடன், தற்காப் புணர் வுடன் இயங்கும். இது ஒரோ வழி இருப்பாலும் பயன் விளைவிக்குமாயின் அன்பு, முதிர்ந்த அன்பு. பழுத்த அன்பு யாதெனில் தன் னயப்பின்றி, தற்காப்புணர்வின்றி இடர்கள் பல வரினும் தன்னையே அழித்துக்கொண்டு மற்றவர்க்கு அன்பு காட்டுவது தான்! 'இதனை

> "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பு முரியர் பிறர்க்கு"
>
> (குறள் 72)

என்று குறள் விளக்குகிறது.

இத்தகைய தூய அன்பியல் வையகத்தில் வாழ்வு நெறியாக மலரவேண்டும்.

## ஒழுக்கக் கட்டுக்கோப்பு

மனித வாழ்க்கையை முறையாக வளப்படுத்தி வளர்ப்பது ஒழுக்கம். ஒழுக்கம் என்பது மருந்துமன்று; பத்தியமுமன்று. ஒழுக்கம் வாழ்வாங்கு வாழும் பாங்குடைய வர்க்கு எளிதாக இனிதாக அமைவதேயாகும். மனிதன் பெற்றுக்கொண்ட, வளர்த்துக்கொண்ட அறிவு, ஆள்வினை யாற்றல், அன்பு முதலியன சிதறிச் சிறு நெறிகளில் சென்று வீணாகாமல் தடுத்து நிறுத்தி அவனை அக நிலையில் வளர்த்துப் புறநிலையில் உயர்த்திச் சிறப்பிப்பது ஒழுக்கமே யாம். ஒழுக்கம் என்பது ஓர் உயர்நெறிச் சொல். அதற்குப் பல்வேறு பொருள்கள் உண்டு. இன்று ஒழுக்கம் என்ற சொல் அங்ஙனம் பல்வேறு பொருள்களை உணர்த்தாமல், ஒன்றையே குறிக்கும் சொல்லாகப் பெரும்பாலும் வழங்கப் பெறுகிறது. மனிதன் செய்யும் முயற்சிகள் அனைத்திலும், மற்றவர்களோடு பழகும் வாயில்களிலும் ஒழுக்கம் சிறப்புறுதல் வேண்டும். மனிதனின் புலன்கள் - பொறிகள் அனைத்தின் வாயிலாகவும் ஒழுக்கம் சிறப்புற்று விளங்க வேண்டும். காலம் போற்றுதலிலிருந்து கடமையை முறையாகச் செய்வது வரையில் ஒழுக்கநெறிக் கால்கள் பரவியுள்ளன. கண்கள், களங்கமுள்ள காட்சியை நோக்கக் கூடாது; எரிப்பான பார்வை எப்போதும் கூடாது. செவிகள், கோளும் தீக்குறளும் கேட்டல் கூடாது. மூக்கு, முல்லை மலர்கள் மணமன்றிய சூரணங்களின் நெடியை முகரக்கூடாது. வாய், பல தவறுகளைச் செய்யும்; புறங்கூறும். பொய்புகலும்; பயனில பேசும். வள்ளுவம் இவையனைத்தும் கூடாது என்று எதிர்மறை முகத்தால் மறுக்கிறது. பின் மனத்தால் - உள்ளத்தால் நெகிழக்கூடிய ஒழுக்கக்கேடு களையும் உணர்த்திக் காட்டுகிறது. அழுக்காறு! அம்மம்ம! ஒழுக்கக்கேடுகளுள் எல்லாம் கொடியது அழுக்காறுதான்! "கல்வி, புகழ் போன்றவற்றில் அழுக்காறு கொள்ளலாம்" என்று சிலர் விதிவிலக்கு வகுக்கின்றனர் இப்பொழுது. கூடவே கூடாது! திருவள்ளுவர் இரண்டு கொடிய

தீமைகளைப் பாவி என்று உருவகம் செய்கிறார்; ஒன்று வறுமை; பிறிதொன்று அழுக்காறு. இவ்விரண்டுக்கும் கூடத் தொடர்பு இருக்கிறது. அழுக்காறே வறுமையையும் வழங்கும்.

*"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்*
*தீயுழி உய்த்து விடும்"* (168)

அழுக்காறு, நன்னெறியில் மனத்தைச் செலுத்தாது; மற்றவர் பெற்றிருப்பதைத் தாமும் பெறும் முயற்சியில் வழி நடக்காது; தூண்டித் தொழிற்படுத்தாது. அதற்கு மாறாக மற்றவர்கள் பெற்று இருப்பதற்குக் களங்கம் கற்பிக்கவும், அவற்றை அவர்கள் இழப்பதற்குரிய தீமைகளைச் செய்யவும்தான் அழுக்காறு தொழிற்படுத்தும். மற்றவர் கல்வியில் சிறந்திருந்தால் தானும் சிறக்க வேண்டுமென்ற உணர்வை வழங்காது. மற்றவர் பெற்றிருக்கிற கல்வித் திறனை அற்பப்படுத்தியும், குற்றங்கள் கண்டும் தூற்றவே மனம் வரும். அதோடு அழுக்காறு தனித்து வருவதில்லை. அதற்கொரு படையே உண்டு. அழுக்காற்றின் முதல் படை அவா; உரிய தகுதியில்லாமலும், அத்தகுதியினைப் பெறாமலும் ஒன்றைப் பெற விரும்புவது அவா. அந்த அவா கூடத் தனக்குத் தேவை தேவையென்று அவாவுது. தெளிவாகக் கூர்ந்து நோக்கின் இவர்களுக்குத் தேவைய்யும் இருக்காது. அவா இருந்தால் போதுமா? அவாவை அடைதற்குத் தகுதி வேண்டாமா? தகுதியின்மையாலும், தகுதியைப் பெறும் முயற்சியின்மை யாலும் அவாவை அடைய இயலாது. உடன், வெகுளி வரும். வெகுளி வெடிச் சத்தங்களுடன் கேட்பதற்கு இயலாத, இனியன அல்லாத, இனியன தர இயலாத கடுஞ்சொற்களைக் கொட்டும். ஆதலால் அழுக்காறு தீது! தீது! இன்று எங்கும் அழுக்காறு, அலங்கார நடை நடப்பதுபோல் தெரிகிறது. தெருவில் விளையாடும் பாப்பாவின் கன்னத்தில் கறுப்புப் பொட்டு! புதியதாகக் கட்டும் வீட்டின் முகப்பில் கரும்புள்ளிகள் இட்ட பூசணிக்காய் தொங்குதல்! வைக்கோல் மனிதன் நிற்றல்! காய்த்துக் குலுங்கும் தோட்டத்தில் கறும்புள்ளி செம்புள்ளி

இட்ட பானைகளைத் தாங்கிய கம்புகள்! இவையெல்லாம் என்ன கூறுகின்றன? இவை அழுக்காற்றைத் தாக்கிக் காக்கும் காப்புச் சாதனங்களாம்! அவை காக்கின்றனவோ இல்லையோ, இன்று அழுக்காற்றின் விளையாட்டுக்கள் நம்முடைய நாட்டு அரசியலையும் தாக்குகிற அளவுக்கு வளர்ந்துள்ளன. ஆனால், அழுக்காறு அரசியலிலிருந்து தானே புறப்பட்டு மக்களை நோக்கி வருகிறது என்று சிலர் கூறுவர். அதிலும் உண்மையில்லாமல் இல்லை. சிறந்த அறிவோ, பொருட் செல்வமோ, பதவிகளோ பெற்றால் அவைகளால் விளையக்கூடிய பயன்களை வேறுபாடின்றி மற்றவர்களோடு பகிர்ந்து மகிழ்ந்து வாழ்ந்தால் அழுக்காறு தோன்றாது. மற்றவர் அறிவை மதிக்கின்ற பாங்கு தோன்றினால் அறிவில் அழுக்காறு தோன்றாது. செல்வம் பெற்றவர், "ஈதல் இசைபட வாழ்தல்" என்று வாழ்ந்தால் செல்வத்தின் காரணமாக அழுக்காறு தோன்றாது. பதவிகளைப் பெற்றோர் அவற்றின் பயனைத் தாம் துய்க்காமலும் பதவியைத் தாம் பெற்றிருக்கிறோம் என்பதை மற்றவர்கள் காண வேண்டுமென்பதற்காக அடக்கமின்றி ஆரவாரமாக நடந்து கொள்வதாலும் பதவியின் பயன்களைத் தன்னைச் 'சார்ந்தவர் சிலர் பெறவும், சாராதவர் பெற முடியாமற் போவதாலும் அழுக்காறு தோன்றுகிறது. ஆதலால் அழுக்காறு கொள்ளுதல் எங்ஙனம் தீதோ அதைவிடத் தீது மற்றவர் நெஞ்சத்தில் அழுக்காறு கொள்ளும்வண்ணம் நடப்பது என்பதை மறந்து விடக் கூடாது. அழுக்காறு தோன்றா மைக்குரிய அணைகள் - ஆள்வினையுடைமையும் வெஃகாமையும் ஆகும். ஒன்று, ஆள்வினை யுடைமை உடன்பாட்டில் துணை செய்வது; எதிர் மறையில் துணை செய்வது வெஃகாமை. தீயொழுக்கம் இல்லாதிருந்தால் மட்டும் போதாது. தீமையை நேரடியாக அகற்றும் முயற்சி மட்டும் பயன்தராது. ஒளியை ஏற்றுகிறார்கள்! 'இருள் இரிந்து ஓடுகிறது'. இருளை ஓட்டுவார் யாருமில்லை, நன்மையைக் கொண்டுவரும்

முயற்சி களில்தான் தீமை அகல வேண்டும். நல்லொழுக்கங்களை மேற்கொண் டொழுகுவதன் மூலம் தான் தீயொழுக்கத்தைத் தவிர்க்க முடியும். நல்லொழுக்க நெறிகள் பலவற்றை வள்ளுவம் முறைப்படுத்திக் காட்டுகிறது. அவை ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புடையன. ஒன்றற்கு ஒன்று வாயிலாக அமைவன, அரண் செய்வன. இத்தகைய ஒழுக்க நெறிகள் யாவும் வாழ்க்கையில் பொருந்தி அமைகிறபோதுதான் வாழ்க்கை வளமும் பொலிவும் உடையதாக அமையும்.

திருக்குறள் கூறும் ஒழுக்க நெறிகளில் யாதொன்றிலாது போனாலும் வாழ்க்கை முழுமையுறாது. அதுமட்டுமின்றி மற்ற நெறிகளால் பெற்ற பயன்களை அடைய முடியாமற் போனாலும் போகும். ஆதலால் வள்ளுவத்தின் ஒழுக்க நெறிகள் உறுதி பெற்றால் வாழ்வு சிறக்கும்; வையகம் பயனுறும். வள்ளுவம் ஒழுக்கம் என்ற சொல்லுக்கு விரிந்த பொருளைக் கண்டது; காட்டுகிறது. ஒழுக்க நூல் ஆசிரியர் களுள் முதன் முதலாக "உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலும் ஒழுக்கம்" என்று எடுத்துக்காட்டியவர் திருவள்ளுவரே. சிலர் தன்னளவில் சூதாடாதவராக - கள்ளுண்ணாதவராக - களவு செய்யாதவராக இருப்பர்; ஆனால் அவரிடம் இனியவை கூறல், ஒப்புரவறிதல் ஆகிய நல்லொழுக்கங்கள் இல்லாமற் போகும். ஒரு மனிதனின் ஒழுக்க நெஞ்சத்தை உணர்த்துவது இனியவை கூறுதலும் ஒப்புரவு மேற்கொண்டு ஒழுகுதலும் தானே! ஆதலால் வள்ளுவத்தின் வழியில் ஒழுக்கநெறிக் கற்களை அடுக்கி, வாழ்க்கை என்ற மாளிகையை எழிலுடையதாக அமைப்போமாக. பலரோடு பழகுதல், அவர் காலத்தில் வாழும் சமுதாயத்தின் உணர்வு களை, தேவைகளை, அறிந்து கொள்ளுதல் ஒழுக்க வாழ்க்கையின் மணி முடியாகும், இதனை வள்ளுவம்,

> "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்"

என்று விளக்குகிறது. இன்று ஆசாரம் என்ற பெயரில் அன்னை மொழி பேசாமலும் அனைவருடனும் பழகாமலும் ஒதுக்கியும் ஒதுங்கியும் வாழ்வது ஒழுக்கம் அல்ல என்று வள்ளுவம் ஐயத்திற்கிடமின்றிக் கூறுகிறது. மக்களின் உணர்வறிந்து பழகுதலே ஒழுக்கத்தின் சிறப்பு.

## நட்பு

மனித வாழ்க்கையை வளப்படுத்திச் செழிப்பூட்ட நிறை முயற்சி தேவை. அவரவர் முயல்வதோடு மட்டுமின்றி அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தித் தூய்மைப்படுத்திச் சிறப்புடையதாக அமைக்க வேறு சில துணை உறுப்புகளும் தேவை. துணை உறுப்புகள் உயிர்ப்பும், உணர்வுமுடைய மனிதர்களாகவே அமைவது அல்லது அமைத்துக்கொள்வது என்பது வாழ்வியல் நடைமுறை. அவற்றில் முதல் உறுப்பு நட்பு. நட்புப் பயிலுதல், நட்புப் பெறுதல் இரண்டும் அருமையான முயற்சி. நட்புத் துறையில் எளிதாக வெற்றி பெற முடியாது. கெழுதகை நட்பு, உணர்ச்சியால் அமைவது; நலம் தருவது. நட்பு, ஒருவனின் அகவாழ்க்கை வளர்ச்சிக்கும் புற வாழ்க்கை வளர்ச்சிக்கும் துணையாய் அமைவது; உடன் நின்று உஞற்றுவது; நன்மையை வழங்குவது; தீமையிலிருந்து காப்பது. இத்தகைய நட்புநெறி, தோழமை பாராட்டப் பெறும். தோளொடு தோளாகத் துணை நிற்பவர் தோழ ரானார் போலும்! சோவியத்து புரட்சியைக் கண்டு வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக அமைந்த மந்திரச்சொல் 'தவாரிஷ்' என்பதாகும். உருசிய மொழியில் இச்சொல்லுக்குப் பொருள் "தோழர்" என்பது. வாழ்க்கையில் நட்பே சிறந்த உறுப்பு. ஒருவர் வாழ்க்கைக்கு உருக்கொடுக்கும் படைப் பாளன் நண்பன்தான். தாய்க்கு அடுத்து நண்பன்தான். நன்மை தீமை ஆகிய அனைத்துக்கும் பொறுப்பேற்று வாழ்க்கைப் பயணத்தின் உடன் வருபவன் அவன். நண்பன் அற்புதமான பாத்திரம். அதனால்தான் போலும் "காதலிக்

காமற்கூட இருக்க முடியும், நட்புச் செய்யாமல் இருக்க முடியாது" என்று வாழ்க்கை வல்லுநர்கள் கூறுகின்றனர். ஒருவர் வாழ்க்கை முற்றாகச் சிறப்புற்று விளங்கிச் செயற்கரியன செய்ய நட்பே தேவை. அதனாலன்றோ வள்ளுவம்,

*"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்*
*வினைக்கரிய யாவுள காப்பு"* (781)

என்கிறது. செயற்கரிய யாவுள? என்று வினாக் கேட்டு, நட்பே என்று முடித்துக் காட்டுகிறது. நட்பு உருவாக்கப் பெறுவது, பழக்கங்களில் உருவாவது. அஃது இயற்கையில் அமைவதன்று. நட்பமைவுக்கு, இயற்கைத் தேவை எதுவு மில்லை. ஆனால் வாழ்க்கையில் முதலில் பெறுவது ஓடிவிளையாடும் பருவத்திலிருந்து நாடி நாடிப் பெற்று வளர்ப்பது நட்பேயாம். இயற்கைத் தேவையின் பாற்பட்ட உறவுகள் இருபாலின் தேவைகருதி நீடிக்கலாம். அவற்றில் முறிவுகள் ஏற்படின் இருபாலரின் வாழ்க்கையும் பாதிக்கும். ஆனால் நட்பு அத்தகையதன்று. நட்பிற்குத் தேவை கிடையாது. ஆனால் இலட்சியங்கள் உண்டு. நட்பு, உடனிருந்து ஒரு தட்டில் உண்டு சிரித்துப் பேசிப் பழகி னால்தான் வளரும் என்பதில்லை. நட்பின் வ்ளர்ச்சிக்குக் காலம் தடையில்லை; இடம் தடையில்லை; இன்பமோ துன்பமோ தடையில்லை.

*"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்"* (785)

*அந்த ஒப்பரிய அருள்நலம் சான்ற நட்பு நெறி வளர்க! வளர்க! வாழ்க! வாழ்க!*

**காதல் வாழ்க்கை**

வாழ்க்கையின் வளர்ச்சிக்கு இரண்டாவதாக அமையும் உறுப்பு, காதல் மனைவி. நட்பிற்குப்பின்தான் காதல். இடம் காலம் வரிசையில் மட்டுமன்று; அமைவும்

அப்படித்தான். காதல் இயற்கையில் அமைந்தது: மலர்வது; ஒருவர்க்கொருவர் தேவையானது. நட்போ அப்படியன்று. நட்பில் ஒருபால் இன்பமும், ஒருபால் துன்பமும்; ஒருபால் ஆக்கமும் ஒருபால் இழப்பும் நேரிடக் கூடும். அங்ஙனம் நேரும்பொழுதும் தடம் புரளாமல் நிற்கும் நட்புணர்வே முழுமையான நட்பு; வளர்த்த நட்பு; வாழ்விக்கும் நட்பு. காதலுக்கு அத்தகைய விழுமிய வாய்ப்புக்கள் இல்லை. காதலிலும் தியாகம் உண்டு. தன்னல மறுப்பு உண்டு. ஆனாலும் இயற்கை அமைப்பு அப்படியல்ல. காதல் வாழ்க்கையில் இன்புறலும் இன்புறுத்தலும் உடன் நிகழ்வன. ஆதலால், நட்பிற்கு அடுத்ததே காதல். அங்ஙனம் கூறுவதால் காதல் வாழ்க்கை எளிதென்று கருதற்க. பால்வேறுபட்ட இருவர் கூடி வாழ்தல் எல்லாம் மனையறம் ஆகிவிடாது. ஒரு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நேரமும் விளைந்த பயிரை அறுவடை செய்யும் காலமும் சிறு பொழுதேயாம். ஆனால் மாளிகையைக் கட்டி முடிக்க நீண்டகாலம் பிடிக்கும். அதுபோலத்தான் - வாழ்க்கையின் பல்வேறு உணர்வுகளைச் செழுமைப்படுத்தி வளர்க்கப் பலகாலும் முயற்சி செய்ய வேண்டும். ஆதலால் இல்வாழ்க்கையென்ற மனையறம் சிறக்க, அவ்வழி சமுதாயம் செழிக்கக் காதல் வாழ்க்கை சிறப்புற அமையவேண்டும் என்பதனால் தனியே 'காமத்துப்பால்" என்றே ஒரு பாலை அமைத்து ஓதிய வள்ளுவத்தின் அருமை அறிக.

காதல் வாழ்க்கை அருமையுடையது; சிறப்புடையது; செவ்விய தன்மையுடையது. எளிதில் காதலராதல் இயலாது; காதலின்பத்தினை முழுதுணர்ந்து துய்த்தல் அரிது; இத்துறையில் வெற்றிபெற்றார் சிலரே! இது வள்ளுவத்தின் கருத்து.

"மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்."

(1289)

காதல் தோன்றி மறைவதன்று; இடையீடின்றி வளர்வது; உயிரில் கலந்து சிறந்து விளங்குவது; பிறப்பு இறப்பைக் கடந்தும் தொடர்வது; பிரிவிலாதது. பிரிவு நேரிட்டபோதும் பிரியாமல் நினைவில் உணர்வில் கலந்து கரைந்து வாழ்வது காதல்.

"இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்" (1315)

என்பது குறள். காதல் வாழ்க்கை நினைந்து பார்த்தற்குரிய தன்று. காரணம் ஆங்கு மறப்பு இல்லை. இத்தகைய உயர்ந்த காதல் நெறியில் நழுவாமல் வாழ்ந்தால் மணவிலக்கு, மறுமணம், பெண்ணின் உரிமை போன்ற பேச்சுகளுக்கு இடம் வந்திருக்காது. வள்ளுவர் கூறும் காதல் வாழ்க்கை தடம் புரண்டு, கலியாணங்களாக மாறி வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு உடைமைகளுள் பெண்ணும் ஒன்றாகி, அனைத்து உரிமை நலங்களையும் அவள் இழந்தபிறகு வள்ளுவத்திற்கு மாறான குரல்கள் இன்று ஒலிக்கின்றன. காதல் வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் பிரிக்கப்படாத உரிமையுடையவர்கள்; உறவுடையவர்கள்; நலமுடையவர்கள். இதனை விளக்க வள்ளுவம் எடுத்துக் காட்டியுள்ள உவமை நினைந்து நினைந்து இன்புறத்தக்கது.

"உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு" (1122)

உடம்பு - உயிர் இணைப்பு பிரித்தற்கு இயலாதது. உடம் பின்றேல் உயிர்க்கு இயக்கமில்லை; துய்ப்பில்லை. ஆதலால் உடம்பும் உயிருமாக வாழும் மனை வாழ்க்கையில் உரிமைப் பாகுபாடு ஏது? உயர்வு தாழ்வு ஏது? செயற்கைப் பிரிதல் ஏது? இயற்கைப் பிரிவுகளையும் கூடத் தேடிப் புதுமைப்படுத்தி ஏற்றுக் கொள்ளுதல் தானே உயர் தனி மரபு! வள்ளுவம் காட்டும் காதல் வாழ்க்கை வெற்றி பெறுமானால் தலைமகன் சிறப்பான்; புகழ் ஒளியில்

தோய்வான். தலைமகள் மனைமங்கலமாகத் திகழ்வாள்; வற்றாத வளமனையாக ஆக்குவாள். நன்மக்கட் பேற்றின் மூலம் நாடே பயன்பெறும். அது தானே மனை வாழ்க்கை. வாழ்க்கைக்குத் துணையாக அமையும் தலைவியை வள்ளுவம் "வாழ்க்கைத் துணை" என்று வாழ்த்துகிறது. வாழ்க்கைத் துணை மட்டுமல்ல, வாழ்க்கையின் நலமாகவே விளங்குவதால் "வாழ்க்கைத் துணை நலம்" என்கிறது. வள்ளுவத்தின் தலைவி கற்புக் கடம் பூண்ட தெய்வம். அவள் தன் கற்பை மட்டும் தானா காத்துக் கொள்கிறாள்? தன்னுடைய தலைவன் கற்பையும் காத்துக் கொள்வதில் சோர்வடையாள் என்பதைத் தலைவன் உணர்கிறான். பரத்தமை வழி தலைமகன் செல்லாது தலைவி தடுத்தல் வேண்டும். புத்திளம் தன்மைமிக்க இன்ப உணர்வுகளை அவன் துய்க்குமாறெல்லாம் வழங்கி இன்பப் பெட்டகமாக அமைந்து அவன் புறத்தே செல்லாமல் தடுக்கிறாள். ஒரேவழி, தன் தலைவன் சோர்வு உடையவனாக விளங்கினாலும் புறத்தே தூற்றாமல் அயலறியாவண்ணம் மறைத்துத் தலைவனின் புகழைக் காப்பாற்றுகிறாள். வள்ளுவத்தின் தலைவி, "தன் குடும்பம்" என்ற சிற்றெல்லைக்கு ஆளாகித் தலைவனின் கொடை வளத்தைத் தடுத்து நிறுத்துவதில்லை. அவன் வாக்களித்த சொல்லைத் தனது சொல்லென எண்ணிக் காத்து வழங்குகிறாள். அதாவது குடும்பப் புகழைக் காக்கிறாள். இதனை,

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (56)

என்று வள்ளுவம் விளக்கிக் காட்டுகிறது. இத்தகைய மனையற வாழ்க்கை எளியது போலத் தோன்றுகிறது. ஆனாலும் அந்த மனையறம் வள்ளுவத்தின் வழி சிறக்க அரிய முயற்சிகள் தேவை. இல்வாழ்க்கை பொறுப்புடையது என்கிறார் திருவள்ளுவர். பலரைப் புரந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பை இல்லறம் ஏற்றுக் கொள்ள

வேண்டும். அறநெறி அறிந்த மூத்தவராக, உயிர்க்குலம் அனைத்துக்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவராக, அந்தணராக, தென்புலத்தில் வீற்றிருந்து தம் அருள்ஞானப் பெருக்கால் உலகை வாழ்வித்து வரும் அந்தணாளர்க்கு உரியன வழங்குதல் வேண்டும். தெய்வத்தைப் பராவித் தொழுதல் வேண்டும். நாடுவிட்டு நாடு அறிவுச் செலவினும், அருட் செலவினும் பயணிகளாக வரும் புதியவர்களை விருந்தினர்களாக ஏற்றுப் போற்றுதல் வேண்டும். இதுவே விருந்தோம்பல். "இன்று வாடகைக்குத் தங்கும் விடுதிகளும் உணவை விற்கும் சிற்றுண்டி, பேருண்டிச் சாலைகளும் மலிந்துள்ளனவே, இந்த அறம் இன்றைக்கும் பொருந்துமா?" என்று சிலர் கேட்பர். தங்கும் விடுதிகளும் சிற்றுண்டிச் சாலைகளும் வாணிகக்கூடங்களே தவிர அன்புப் பணிமனைகள் அல்லவே! அந்த உண்டிக் கடைகளால் ஒருவர்க்கு உவப்பன செய்ய இயலாதே; உறவு கலத்தலும் நிகழாதே. அதனால் நாட்டுக்கும் நாட்டுக்குமிடையே நிகழ வேண்டிய உறவுகள், உணர்வுப் பரிமாற்றங்களும் நடைபெறா அல்லவா? எந்த ஒரு நிகழ்வும் உணர்வைத் தொடுவதாக அமையவேண்டும். வாணிகக் கடைகள் இலாப நோக்குடை யன. ஆங்கு அன்பின் ஆக்கமும் உறவின் வளர்ச்சியும் நாடுகளை இணைக்கும் பாங்கும் வளரா. இல்லத்தில் தலைவியில்லாது போனாலே விருந்தெதிர் கோடல் செய்தற்கியலாது என்ற மரபு, செய்யக் கூடாது என்று மாற்றம் பெற்றுவிட்டது. ஏன்? அகங்கனிந்த உணர்வால் அந்த விருந்தினை ஏற்றுப் போற்ற முடியாது என்பது தானே பொருள். உணவுக் கடைகள் விற்பனையே செய்கின்றன. அதை விருந்தோம்பலோடு ஒத்துப்பார்க்க முடியாது. ஆதலால் விருந்தோம்புதல் என்ற விழுமிய பண்பு வளர்ந்தே யாகவேண்டும்.

இவை மட்டுமா, இல்லறத்தாரின் பொறுப்பு? மேலும் வள்ளுவம் வகுத்துக் கூறுகிறது.

'துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (42)

அருமையான குறள்! துறந்தார்க்கு இல்லறத்தார் துணை! 'ஆம்' அவர்கள் யாதொரு உடைமையும் இல்லாதவர்கள். (வள்ளுவர் காலத்தில்) அவர்கள் வீடும் ஊரும் உலகமும் வளர்ந்து வாழத் தவம் இயற்றுகிறார்கள். ஆதலால் அவர்களைப் புரத்தல் - இல்லறத்தார் கடன். இல்லறத்தில் வாழ்ந்தவர்கள் குறிப்பிட்ட காலம் துய்த்து மகிழ்ந்து பின் மக்களுக்குப் பொறுப்பைத் தந்து துறவறம் பயிலுதல் தமிழர் மரபு. அங்ஙனம் வாழும் துறவிகளை உண்டியும், உறையுளும், உறுநோய்க்கு மருந்தும் தந்து காப்பாற்றுதல் இல்லறத்தார் கடன்.

அடுத்துவரும் கடமை நெஞ்சைத் தொடுகிறது. வள்ளுவத்தின் மாட்சி மலையென உயர்கிறது. உலகில் துய்ப்பதற்குரிய பொருள்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலப்பல. இவற்றில் பலவற்றைப் பலர் துய்க்கமுடியாமல் ஏக்கமுற்றிருப்பர். தாம் துய்க்காததை, மற்றவர் துய்ப்பது அறிந்து அலமரலாம்; அழுக்காறு கொள்ளலாம்; அதனால் தீவினைகள் செய்யத் தலைப்படலாம். ஆதலால் துய்க்க வேண்டியவற்றைத் துய்க்காமல் இருப்பவர்க்குத் துய்ப்பன வழங்க வேண்டும். துய்ப்பன வழங்குதல் தீவினை செய்வதைத் தடுத்து உய்யும் நெறியில் ஆற்றுப்படுத்தி அறத்தினில் ஊக்கும். அப்பரடிகள்,

"துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ" (தேவாரம் அடங்கல் 7173) என்பார். இன்றைய உலகியலோ வள்ளுவத் திற்கு முற்றும் முரணாக இயங்குகிறது. துய்க்கும் பொருள் களை நிறையப் பெற்றிருப்போருக்கு . விருந்து உபசாரம், மரியாதை என்ற பெயரில் திரும்பத் திரும்பக் கிடைக்கிறது. மருத்துவ இயலார் கூற்றுப்படி அவர் உண்ணக் கூடாதனவும் ஒதுக்கப்பெற்றனவும் கிடைக்கின்றன. ஆனால் துய்க்கும் வாய்ப்பினைப் பெற்றும் வசதியற்றவர்க்கு யாதொன்றும்

கிடைப்பதில்லை. ஒரோவழி கிடைத்தாலும் அவர்கள் துய்த்துத் துய்த்து அலுத்துப்போன சோறும் புளிக் குழம்பும்தான் கிடைக்கும். அறுசுவை உணவு அவர்களுக்கு அட்டிப்போட்டால் கட்டுப்படியாகாதாம். இது பெரிய இடத்து "பாஷை". ஆதலால் இல்லறத்தார் துவ்வாதவர்கள் துய்க்குமாறெல்லாம் தேடி வழங்க வேண்டும்.

அடுத்த கடமை வியத்தற்குரியது. "இறந்தார்க்கும் இல் வாழ்வான் துணை" என்பது. இறந்தார்க்கு எப்படி இல்வாழ்வான் துணை ஆகமுடியும்? நீத்தார் கடமை என்ற பெயரில் இறந்தாரை நினைத்துச் செய்தல் என்பர் சிலர். அக்கருத்து தவறுடையதில்லையானாலும் நெறியுடையதென ஏற்றுக்கொள்ள இயலவில்லை. நம்மோடு சிலர், இலட்சிய உணர்வோடு வாழ்ந்த சிலர் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இலட்சியப் பயணத்தில் இறந்திருப்பர். அவர்கள் நமக்காக வாழ்ந்தவர்கள். அவர்கள் தமக்கென வாழாது மற்றவர்க்கென வாழ்ந்து இலட்சியப் பயணத்தில் இறந்து போனவர்கள். அவர்களுடைய இலட்சியத்தைத் தொடர்ந்து நாம் பயணம் செய்து அந்த இலட்சியத்தை நிறைவு செய்தல் அவர்களுக்குத் துணை செய்வதாகும். வேறு சிலர் தமது குடும்பத்துக்கு, குழந்தைகளுக்கு உரியன செய்து வைக்காமல் பச்சிளங்குழந்தைகளை விட்டு இறந்து போயி ருக்கலாம். அங்ஙனம் இறந்தார்க்கு நாம் செய்யக் கூடிய துணை அக் குடும்பத்தினை வளர்த்துப் பாதுகாத்து நிலை நிறுத்துதல். இவ்விரண்டும் இறந்தார்க்குச் செய்யும் துணை என்று கருதுகிறோம். வேறு சில கடமைகளையும் வள்ளுவம் கூறுகிறது. விரிவஞ்சி விடுக்கின்றோம்.

வள்ளுவம் காட்டும் இல்லற வாழ்க்கை இத்தகைய பொறுப்புகள் உடையது என்பதை உலகம் உணரவேண்டும். அது மட்டுமா? இல்லறம், வளரும் வரலாற்றுக்கும் கூடப் பொறுப்பேற்க வேண்டும் என்பது வள்ளுவத்தின் ஆணை. தலைமுறையின் தோற்றத்திற்கு அடிப்படையாக, வாயி லாக

அமைவது மனையறம். அத்தகைய மனையறத்தில் அறிவறிந்த காதல் வாழ்க்கையில் தோய்ந்து நன்மக்கட்பேறடைதல் வேண்டும் என்று வள்ளுவம் எடுத்துக் கூறுகிறது. ஒரு குடும்பத்தின் இல்வாழ்க்கை சிறப்புற்று விளங்கியதா? பெற்றோர், வரலாற்றில் இடம் பெறத்தக்க நல்ல தாயா? நல்ல தந்தையா? என்பதனை உறுதிப்படுத்தத் துணை செய்பவர் அவர்களுடைய மக்களே! நாடறிந்த, புகழ்மிக்க குடும்பங் களில் கூட, தந்தை தாய்க்கு நற்புகழ் வாங்கிக் கொடுக்கக் கூடிய பிள்ளைகள் தோன்றவில்லை. இதனைப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருக்குறள் எச்சரித் திருக்கிறது. மனையற வாழ்க்கை பெயரும், புகழும், சிறப்பும் பெறுவது அம்மனையற வாழ்க்கையின் பயனாகத் தோன்றிய மக்கள் மூலமேயாம். ஒரு குடும்பத்தின் செல்வமும், புகழும் விரிவடைய வேண்டிய ஒன்று. அது தேய்ந்து குறுகுதல் கூடாது. ஒரு குடும்பம் வளர்ச்சிக்குரிய இயற்கை நியதிகளின் படி வளர்ந்து வருமானால் குடும்பத்தின் முன்னோரை வைத்தோ மூத்தோரை வைத்தோ அந்தக் குடும்பம் அறிமுக மாவது சிறப்பன்று. இன்றைய வாழ்க்கைக் களத்தில் புகழ் பூத்திருக்கும் தலைமுறையைப் பொறுத்து அறிமுகம் ஆகவேண்டும் என்பது திருவள்ளுவர் குறிப்பு. அதாவது பாட்டனை வைத்துப் பெயரனுக்கு அறிமுகம் வருதல் வளர்ச்சியன்று. தந்தையை வைத்து மகனுக்கு வரும் அறிமுகம் வளர்ச்சியின் சின்னமன்று. மகனை வைத்துத் தந்தைக்கும் பாட்டனுக்கும் கிடைக்கும் அறிமுகமே சிறப்புடையது; போற்றுதலுக்குரியது; புகழ்ச்சிக்குரியது.

> *"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை*
> *எனநோற்றான் கொல்லெனும் சொல்"*
>
> **(70)**

என்பது குறள். "இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்ற குறட் சொற்றொடரைத் திரும்பத் திரும்பச் சிந்தனை செய்து உணர்க. இங்ஙனம் புகழ்மிக்க வரலாறு

படைக்கும் தலைமுறையினரை நமது நாடு பெற்று மகிழத்தக்க வகையில் வள்ளுவத்தின் வழி மனையறம் சிறப்பதாக.

## சமுதாய வாழ்க்கை

மனிதன் கூடி வாழப் பிறந்தவன். மனிதனை ஒரு சமூகப் பிராணி (Social animal) என்பர். மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் கூடிவாழ்தல் தவிர்க்கமுடியாதது மட்டுமன்று தேவையும் கூட. சமுதாயம் என்ற அமைப்பு உயிர்ப்புள்ள ஒன்று. அந்தச் சமுதாயக் கூட்டமைப்புக்குள்ள சக்தி, மகத்தானது. அந்தச் சக்தி ஆக்கவும் செய்யும்; அழிக்கவும் செய்யும். ஆனால் அப்படியொரு உயிர்ப்புள்ள, உணர்வு பூர்வமான சமுதாய அமைப்பு இன்னும் தோன்றவில்லை. வரலாற்றுக்கு முந்திய தொன்மைக் காலத்தில் அத்தகைய சமுதாய அமைப்பு இருந்ததாக மார்க்ஸ் கூறுகிறார். சமுதாய அமைப்பு, கட்டுக் குலைந்து நெகிழ்ந்து போகும்பொழுதுதான் ஒழுக்க நெறிகள் கற்பிக்கப்படுகின்றன; சட்டங்கள் தோன்றுகின்றன; தண்டனைகள் தரப்படுகின்றன; ஆனால் இந்த முறையும் காலப் போக்கில் தடம் புரண்டது. ஆட்சியாளர்கள் மக்களிடத்திலிருந்து பெற்ற அதிகாரத்தை மக்களுக்கு எதிராகவே பயன்படுத்திச் சுதந்தரத்தைப் பறித்துக் கொத்தடிமையாக்கி விடுகின்றனர். இவை, வரலாற்று நிகழ்வில் காணப்பெற்ற உண்மைகள். இன்று இருப்பது ஒரு கூட்டமைப்பே! சமுதாய அமைப்பன்று! ஓர் உயர்ந்த சமுதாய அமைப்புக்கு எடுத்துக்காட்டு எவ்விதக் குறையுமில்லாது விளங்கும் ஒரு நல்லுடம்பாகும். உடம்பில் அமைந்துள்ள பொறிகளுக்கு, புலன்களுக்கு வேறு வேறு பணிகளுண்டு. அவை தம்முள் ஒத்திசைந்து விளங்கும். ஒன்றோடொன்று மோதா; ஒன்றினைப் பிறிதொன்று பாதுகாக்கும். இந்தக் கூட்டு நிகழ்வில் பிழை ஏற்பட்டு

விட்டால் அந்த உடம்பு நோயுற்றது என்பது பொருள். இன்றைய சமுதாய அமைப்பு இங்ஙனமா அமைந்திருக்கிறது? சமுதாயத்தைச் செப்பமுற அமைத்துக் கொண்டால்தான் தனிமனித நலம் சிறக்கும்; பாதுகாப்புக் கிடைக்கும். சமுதாய அமைப்புத்தான் ஒரு மனிதனின் குறையை நிறையாக்கத் துணை செய்கிறது. இந்தச் சமுதாய அமைப்பைத் தோற்று வித்துப் பாதுகாக்கும் பணியில் முதல்பணி ஈதல். அது முதலுதவி போன்றது. அது நிலையானதன்று. சமுதாய அமைப்பிற்கு - கூடி வாழ்வதற்கு வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி ஒப்புரவாகும். ஒப்புரவுத் தத்துவம் மிக உயர்ந்தது. ஒப்புரவு வாழ்வில் கொடுப்பாரும் இல்லை; கொள்வாரும் இல்லை. ஒப்புரவு வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் உரிமைகளும் உண்டு; கடமைகளும் உண்டு. "ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக் காகவும்" என்ற தத்துவமே ஒப்புரவின் சாரம். தம்மிடம் மற்ற வர்கள் எப்படி நடந்து கொண்டால் மகிழ்ச்சியும் இன்பமும் ஏற்படுமோ, அதுபோலவே தாம் மற்றவர்களிடம் நடந்து கொள்வதே உயர்ந்த ஒழுக்கம். மற்றவர்களின் இயல்பறிந்து, ஒத்ததறிந்து நாம் ஒத்துப்போதலே ஒப்புரவு வாழ்க்கையின் சிறந்த இலக்கணம்.

> "ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
> செத்தாருள் வைக்கப் படும்"
>
> (214)

என்பது குறள். அறிஞர் அண்ணா அவர்கள் ஒத்து வரவில்லை என்று கூறுகிறவர்களை நோக்கி "மற்றவர்கள் ஒத்துவருவது அப்புறமிருக்கட்டும்; முதலில் நீங்கள் ஒத்துப்போங்கள்" என்று கூறினார். இது வள்ளுவத்திற்கு உரை விளக்கம் போல இருக்கிறது ஒப்புரவு நெறியை வள்ளுவம் பல்வேறு உவமைகள் வாயிலாக விளக்கும் அருமைப்பாடு அறிதற்குரியது. தற்சார்போடு மற்றவர் களுக்கு உதவும் ஒப்புரவுக் கொள்கை ஒன்று; தன்னை மறந்து

தி.9.

மற்றவர்களுக்கு உதவுவது தன்னுடைய நீங்காக் கடமைகளுள் ஒன்று என்று கருதி உதவுதல் பிறிதொன்று; தன்னயப்பில் லாமல் தன்னைமறந்து தனக்கு வரும் இடர்களையும் ஏற்றுக்கொண்டு உதவிசெய்தல் - ஒப்புரவு இயற்றுதல் மற்றொன்று என்று ஒப்புரவுச் செயற்பாட்டைத் தரப்படுத்தி, 'ஊருணி', 'பயன்மரம்', 'மருந்து மரம்' என்று ஒப்புமைப் படுத்தி விளக்கிக்காட்டுகிறார். இந்த மூன்று குறள்கள் ஒரு சொற்பொழிவுக்குரிய செய்திகளையுடையன; அருமை வாய்ந்த செய்திகளை உடையன. அறிஞர்களாகிய நீங்கள் அறிந்து அனுபவித்திருப்பீர்கள்.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு"* (215)

*"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கட் படின்"* (216)

*"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கட் படின்"* (217)

இத்தகைய ஒப்புரவு நெறிதான் உலக அரங்கில் கூட்டுறவு இயக்கமாகப் பின்னர் வளர்ந்தது. ஆனால் அந்தக் கூட்டுறவு இயக்கம் அதனுடைய நோக்கங்களுக்கு ஏற்றவாறு மக்கள் மன்றத்தில் காலூன்றவில்லை. சமுதாய அமைப்பில், அதுவும் மக்களாட்சி நிலவும் நாட்டில் திட்டங்களை இயற்றுதல், மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குரிய பணிகளைச் செய்தல், ஒருவரிடம் இருக்கும் செல்வம் இழப்பில்லாமல் மற்றவர் முன்னேற்றத்திற்குப் பயன்படுதல் ஆகிய பணியைக் கூட்டுறவு இயக்கம் மேற்கொள்ள வேண்டும், "கூட்டுறவு இயக்கமும் இருக்கிறது" என்பதுபோலத்தான் நம்முடைய நாட்டில் கூட்டுறவு இயக்கம் இருக்கிறது. தமக்குத் தேவையிருந்தாலும் தேவையில்லாது போனாலும் கூட்டுறவில் சேர்த்து நாட்டுமக்களுக்குரிய பணியைச் செய்யவேண்டும் என்ற ஆர்வத் துடிப்பு, படித்தவர்கள்

வசதியுடையவர்கள் பக்கலில் தோன்றவில்லை. நாட்டில் எத்தனை வாக்காளர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேரும் கூட்டுறவாளர்களாக மாறினால் தானே கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக முடியும்! ஏழை மக்களின் வரியில் கல்வி கற்றுப் பதவிக்கு வருபவர்கள் திரும்ப அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுகிறார்கள். கடமை என்ற சொல் கடன் என்ற சொல்லிலிருந்துதான் வந்தது. வாங்கும் ஊதியத்திற்கு ஏதோ என் வேலையைச் செய்தேன் என்றிருப்பது கடன் செலுத்தியது ஆகாது. ஏழை உழைப்பாளிகள், உழைப்பால் படைத்த பொருள்களைச் சுவைத்து மகிழ்கிறவர்கள் அது போலத் தம்முடைய உழைப்பால் அந்த ஏழை மக்களின் மனம் மகிழத்தக்க ஒன்றைப் படைத்து வழங்கும் பொழுது தான் அறநெறியின் அடிப்படையில் கடன் நிறைவு பெறுகிறது. இன்று இந்த மனப்போக்கு எங்கிருக்கிறது? வசதியற்ற, பின்தங்கிய மக்கள் நல்வாழ்வுக்காகத் துணிவுடன் கூட்டுறவுகளைத் தொடங்கி, அவர்களின் நல்வாழ்க்கைக்குத் துணை செய்வதற்கு வசதியுடைய சமுதாயத்திற்கு மன மில்லை, எங்கே, எதிலிருந்து ஆபத்து வந்துவிடுமோ? என்று பயப்படுகிறார்கள். செயல் முனைப்பு இல்லை. கோழைத்தன மான தற்காப்புணர்ச்சி தான் இருக்கிறது. ஒரு சிலர் துணிந்து கூட்டுறவு இயக்கத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூட்டுறவுத் தத்துவங்களை முழுமையாகச் செயற்படுத்துவதில்லை. அவர்கள் பெற்றிருக்கிற பல்வேறு பதவிகளின் வரிசையில் இதுவும் ஒன்று. அவர்கள் ஒரு "தனிக் கடை" நடத்துகிறார்கள். ஆனால் கூட்டுறவு என்று பெயர். நாட்டிலுள்ள எல்லாக் கூட்டுறவுகளும் இந்த நிலையின என்று கூறவில்லை. சிறந்த கூட்டுறவு நிறுவனங்களும் உள்ளன. அந்தக் கூட்டுறவு நிறுவனங்களில் பங்கேற்று உழைப்பவர்களைப் பாராட்டுகின்றோம். கூட்டுறவு வாழ்க்கையில் ஒரு மனிதன் வெற்றி பெற்று விடுவானானால் அவன் அகநிலையிலும் புறநிலையிலும் நல்ல வளர்ச்சி

பெற்றவன் எனலாம். கூட்டுறவில் சமுதாயம் வெற்றி பெற்று விடுமானால் நாட்டில் உழவும் தொழிலும் பெருகும்; வளம் கொழிக்கும், ஆங்கு வறுமை இருக்காது. மார்க்சும் லெனினும் "சோஷலிச சமுதாய அமைப்பின் முதற்படி கூட்டுறவே" என்று கூறியுள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவம் காட்டிய ஒப்புரவு வாழ்க்கைதான் கூட்டுறவு வாழ்க்கை. அதுவே சோஷலிச சமுதாயம். ஒப்புரவுநெறி எளிதில் பொதுமைச் சமுதாயத்தைப் படைத்துத் தரும்; உலகுக்கு ஒரு தனி நெறியாக விளங்கும். வள்ளுவம் தந்த ஒப்புரவு நெறி வையகத்தின் உரிமை நெறியாகுக.

## குடியியல்

திருவள்ளுவர் தனி மனித வாழ்வியல் சிறக்கவும், சமுதாயம் சிறப்புற்று விளங்கவும் நூல் செய்தார்; நூல் முழுதும் தனிமனிதனை வளர்த்துச் சமுதாயத்தோடு அவனை இணைத்துச் சமுதாய அமைப்பை வளமும் வலிமையும் உடையதாக அமைக்கும் ஆர்வலராக விளங்கு கிறார். அந்தக் கங்குகரையற்ற ஆர்வத்தின் காரணமாகப் பல்வேறு அதிகாரப் புனைவுகளில் நல்ல சமுதாய அமைப்புக்கு வடிவம் கொடுத்து உறுதிப்படுத்துவதற்கு முயல் கிறார். அங்ஙனம் தணியாத ஆர்வத்தின் தூண்டுதலாகப் பிறந்த அதிகாரங்கள் "குடிமை", "குடி செயல்வகை" என்பன போலும்! முன்னர்ப் பல அதிகாரங்களில் விரித்துரைத்த செய்திகளிற் பல "குடிசெயல்வகை"க்கு உரியன. அங்ஙனம் இருந்தும் மீண்டும் "குடிமை". "குடிசெயல்வகை" அதிகாரங்கள் அமைக்கக் காரணம் என்ன? குடிமைப் பண்பைக் காப்பதிலும் குடிசெயல்வகை இயற்றுதலிலும் சோர்வு படக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகவே! தாம் பிறந்த குடியை வளர்த்துப் பாதுகாப்பது தான் மனிதனின் முதற் கடமை. எவ்வளவு சோதனைகள் வந்தாலும் குடிமைப் பண்பை இழக்காது குடிசெயலில் தயங்காது செயற்படுதல் வேண்டும் என்பது வள்ளுவத்தின்

ஆணை. குடி செய்து வாழ்கின்ற வாழ்க்கை புகழ்மிக்க வாழ்க்கை. தமிழ்க் குடியினருக்கு இந்தப் பண்பு வழக்கமாகக் குறைவு. தமிழ்க் குடியினர் குடியைக் காப்பதிலும் குடி மேம்பாட்டுக்குரியன செய்தலிலும் அடிக்கடி சோர்வுபட்டுக் குடி செய்தலுக்கு மாறாகத் தம்முள் குழுக்கள் அமைத்துக்கொண்டு போராடி நிறைதமிழ்க்குடியின் புகழ் பூத்த வாழ்க்கையை இழக்கச் செய்திருக்கின்றனர். தாம் பிறந்த குடியின் மேம்பாட்டுக்குரிய பணிகளைச் செய்வதில் பருவம் முதலிய பார்த்து நாள்களைத் தள்ளக் கூடாது. குடி செய்தற்குரிய பணியைச் சோம்பல் காரணமாக "இன்று" "நாளை" என்று கடத்தக்கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக, மான் அவமான உணர்ச்சிகளுக்கு ஆளாகித் தம்முடைய குடியைச் சார்ந்தவர்களிடத்தில் பகை பாராட்டி ஒதுங்குதல் கூடாது; ஒழிக்கும் முயற்சியும் கூடாது. தாம் பிறந்த குடியின் மேம்பாட்டுக்காகத் தம்முடைய மானமே பெரிதென்று கருதாமல் இனமானம், குடிமானம் காத்துத் தம்மைப் பழித்துரைத்தாரிடத்தும் பகைபாராட்டாது அன்பு பாராட்டி உறவு கொண்டு •குடி சிதறாமல் காக்கவேண்டும்.

*"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து*
*மானம் கருதக் கெடும்"* (1028)

என்பது திருக்குறள். இந்தத் திருக்குறளுக்கு மிகப்பலர் உரை எழுதியிருக்கிறார்கள். ஆனால், ஒருவர்தாம் வள்ளுவத்தை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி வாழ்க்கை விளக்கத்தில் உரை கண்டவர். அந்த அற்புதமான மனிதர் நம்முடைய காலத்தில் வாழ்ந்தவர். அவருக்குத் தமிழ் மூச்சு; தமிழ் இனம் அவருடைய சுற்றம். தமிழ் இனத்தின் பாதுகாப்புக்காக, முன்னேற்றத்திற்காகப் பணி செய்த ஓரியக்கத்தில் தலைவருக்குக் கட்டுப்பட்டுப் பணி செய்தவர். இடையில் தவிர்க்க முடியாமற் பிரிவு தோன்றியது. பிரிந்தவர் சோர்ந்து போகாமல் பேரியக்கம் கண்டார். பிரிவதற்குக் காரணமாக இருந்தவர்கள் பிரிந்த இப்பெருமகனாரை இழித்தும் பழித்தும் பலப்பல பேசினார்கள். அம்மம்ம 'அவர்களின் ஏச்சுக்கு

மறுவார்த்தை பேசவேண்டுமே'. "துறந்தாரில் தூய்மை யுடையார்" போலத் தம்மைப் பழித்தாரைத் தாம் பழிக்காமல் வாழ்ந்தார். ஓர் இயக்கத்தையே வளர்த்தார். இப்பெரு மகனாரின் முன்னேற்றத்தை எப்படியும் தடை செய்து ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற முனைப்பு எதிர்த் தரப்பில் இருந்தது. ஆனால் இவருக்கு ஆத்திரமும் இல்லை; காழ்ப்பும் இல்லை. தம்மை எதிர்த்தாரையும் உள்ளடக்கி மகத்தான வெற்றி பெற்றார்; வெற்றிக் களிப்பில் அகங்காரம் கொள்ளவில்லை; தமது வெற்றிக்குத் தடையாயிருந்தவர்களை பெற்ற அதிகாரத்தைக் கொண்டு துன்புறுத்த நினைக்கவில்லை; 'கமிஷன்'களை நியமித்து விசாரிக்க வில்லை; ஏசியவர்கள் இருந்த இடம் நோக்கிச் சென்று பணிவைக் காட்டினார்; பண்பாட்டைக் காட்டினார். இவ்வாறு பகையையும் உறவாக்கிக்கொண்டு இனம் காத்த ஒப்பற்ற தலைமகனைப் போன்ற மற்றொருவனைத் தமிழக வரலாறு கண்டதில்லை. அவரும் வாழ்ந்து மறைந்துவிட்டார். அந்த ஒப்பற்ற தலைமகன் - தமிழ்த்தாயின் தவப்புதல்வன், இனத்தைக் கட்டிக் காப்பாற்றிய அருமைப்பாட்டை நினைத்தால் நெஞ்சு நெகிழும். எனதருமைத் தமிழ்ப் பெருங்குடி மக்களே! வள்ளுவத்திற்கு விளக்கமாகக் குடி செயற்பண்பின் இலக்கணமாக வாழ்ந்த அத் தலைமகனை இனம் கண்டு கொள்ளுங்கள். அவர் போற்றிய இன நலம் காக்கும் பணியை உறுதியுடன் செய்யுங்கள்.

## நாகரிகம்

மனித வாழ்க்கை, நாகரிகம் உடையதாக அமைய வேண்டும். நாகரிகம் என்பது உலகை இடையறாது உய்த்து நடத்தும் ஒரு சிறப்புடைய உணர்வு வழிப்பட்ட ஒழுக்க மாகும். நாகரிகம் என்பது உடலில் கலந்து, உயிரில் கலந்து, உணர்வில் கலந்து, வாழ்க்கையின் விளக்கமாக அமைவது, மனிதச் சந்தையில் வாழ்கிறோம். மனிதச் சந்தையில் எவர் நல்லவர்? எவர் தீயவர்? என்று எளிதில் காணமுடியாது.

நல்லவர்களாக இருப்பவர்கள் எதிர்பாராமல் கெட்டுப் போதலும் உண்டு. கெட்டவர்கள் எதிர்பாராமல் நல்லவர் களாக மாறி வளர்வதும் உண்டு. முன்னையதுதான் பெரும் பான்மை. உருவங்களை வைத்து மக்களை மக்கள் நம்பக் கூடாது. ஆம்! சிலர் மனிதர்களாகத்தான் நடமாடுகிறார்கள்! ஆனாலும் மக்கள் நன்மையுடையவராக அல்லாமல் பசுத்தோல் போர்த்த புலியென நடமாடுபவர்களும் உண்டு. திருவள்ளுவர் சிரிக்கவும் சிந்தனை செய்யவும் தக்கவகையில்,

> "மக்களே போல்வர் கயவர் அவரன்ன
> ஒப்பாரி யாம்கண்ட தில்" (1071)

என்று கூறியிருப்பதை ஓர்க. சந்தையில் வாங்கப்படும் விலங்குகள், காய்கள் தோற்றத்தைப்போலவே அவற்றின் பண்பும் இருக்கும்; ஆனால் கயவர் மேற்கொள்ளும் வாழ்க்கையில் தோற்றத்திற்கும் நடப்பிற்கும், சொல்லுக்கும் செயலுக்கும் யாதொரு இயைபும் இருக்காது, ஒரோவழி நாம் பழகியவர்களே, இத்தகைய கொடுமை யுடையவர்களாக மாறி நமக்குத் தீங்கு விளைவித்தால் என்ன செய்வது? நஞ்சைக் கொடுக்கிறார்கள். அந்த நஞ்சையும் கூட மனவேறுபாடின்றி வாங்கிக் குடித்தால் மரணம் வாராது. நஞ்சு கொடுத்த நண்பனும் கூட நாணமுற்றுத் திருந்துவான். அத்தகைய உயர்ந்த நாகரிகப் பண்பு மனித குலத்தில் வளர வேண்டுமென்பது வள்ளுவத்தின் இலட்சியம்.

> "பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்". (580)

பகை கொள்வதற்கும் பிரிவதற்கும் வாய்ப்பில்லாமற் போகாது. அந்த வாய்ப்புக்களையும் கடந்து அன்பை, உறவைக் கட்டிக் காப்பாற்றுவதுதான் நாகரிகம். அத்தகைய நாகரிகப் பண்பு மனித குலத்தில் வளருமானால் மனிதன் மனிதனோடு போராட மாட்டான். போரற்ற சமாதான உலகம் தோன்றும். மனித சக்திகள் முழுதும் பொருள், கலைப்

படைப்புகளுக்குப் பயன்படுவதால் மக்கள் இன்புற்று வாழ்வர்; மண்ணகம் விண்ணக மாகும்.

## புகழ்

மானிட வாழ்க்கையின் பயன் புகழ். எது புகழ்? விளம்பரம் வேறு; புகழ் வேறு. முகமன் வேறு; புகழ் வேறு. இரப்பார் கொடுப்பாரைப் பாராட்டிக்* கூறும் உரைகள் புகழாகா. புகழ் உயர்ந்தது; உலகில் உயர்ந்தது. ஒருவரின் சாதனையை அனுபவித்த ஒருவர் மகிழ்ந்து, தம் உள்ளம் நெகிழ்ந்து மொழியும் சொற்களே புகழ்! புகழ் அஃது ஒரு வேள்வி. புகழ் எளிதில் கிடைக்காது. வள்ளுவத்தின் வாழ்க்கைநெறிகள் அனைத்தையும் பின்பற்றி நெறிமுறை பிறழாது வாழ்ந்தால் புகழ் வந்து பொருந்தும். அஃதென்ன எளிய காரியமா? புகழ்பட வாழ விரும்பினும் நம்முடைய பழையபழக்கம் இழுத்துத் தள்ளுகிறது. தன்னயப்பு உணர்வுகள், தன்னலமறுப்புக்குத் தடை செய்கின்றன. தட்டுத்தடுமாறிச் சமுதாயச் சந்தையில் வீழ்ந்து அதன் துணை கொண்டு புகழ் வேள்வி நிகழ்த்தலாம் என்றால் அங்கே பேரிரைச்சல்! பச்சை நிர்வாணமான சுயநலக்கூட்டம் பேயாட்டம் ஆடிக்கொண்டு இருக்கிறது. அரசுப் பணிமனை முதல் ஆண்டவன் சந்நிதி வரை மனிதன் தன் உரிமைகளைப் போராடிப்பெற முடியவில்லை. பரிந்துரைச் சீட்டுகள், கையூட்டுகள் எங்கும் மலிந்து கிடக்கின்றன. ஏன் அம்மையாக, அப்பனாக விளங்கும் ஆண்டவனையே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஆரத்தழுவி உச்சிமோந்து வழிபாடியற்ற அவன் உரிமையில்லாதவனாக இந்திய உயர்நீதி மன்றம் செய்து இருக்கிறது. இந்தச் சமுதாயத்தில் அவன் எப்படிப் புகழ் பெறுவான்? கழனியில் வேளாண்மை செய்யவரும் உழவன் காடு வெட்டி நிலந்திருத்த வேண்டும். அதுபோலச் சமுதாய நன்மைக்கு எதிராக இருக்கும் தீமைகளை அடியோடு களைந்திடல் வேண்டும்.

தீயவர்களோடு சமாதானம் கூடாது. அவர்களோடு ஒட்டும் உறவும் கூடாது. தீமை, தீயைவிடக் கொடியது.

*"தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்."* (202)

தீமை இருபாலும் கேடு செய்யும். தீமை எளிதில் மாற்ற முடியாதது. தீமை ஒரு தலைமுறைக்கு மட்டுமல்லாது பல தலைமுறைக்கும் கேடுசெய்யும். ஆதலால் சமுதாயத்தில் புகழ் பூத்த வாழ்க்கை வாழ வேண்டுமானால் தீமையை எதிர்த்துப் போராடும் மனப்போக்கும் உறுதியும் வேண்டும். தீமையைத் தவிர்ப்பதற்குரிய சிறந்த வழி, தீமையை எதிர்ப்பது மட்டுமல்லாமல், தீமையை முற்றாக மாற்றக்கூடிய நல்லன இயற்றும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு, நன்மையைச் சமுதாயத்தில் படைக்க வேண்டும். அப்பொழுது புகழ் பூத்த வாழ்க்கை கிடைக்கும். புகழ், ஒரு போதைப் பொருள் அல்ல. புகழ், போதைப் பொருளாகவும் கூடாது. அது நெடி இல்லாத மெல்லிய மணம்! உயிர்ப்புள்ள மணம்! மேலும் மேலும் மனித குலத்தை அது வளர்க்கும். அத்தகைய புகழ்மிக்க சமுதாயத்தைப் படைப்பதே வள்ளுவத்தின் வாழ்வியல். உலகுக்கு ஒரு பொதுநெறியைச் சொன்னதால் திருக்குறள் உலகப் புகழ்பெற்றது. உலகப் பொதுமறையைத் தந்ததால் தமிழ் உலகப்புகழ் பெற்றது. உலகப் பொதுமறையைத் தந்ததால் திருவள்ளுவர் உலகம் தழீஇய புகழ் பெற்றார். திருவள்ளுவரை ஈன்றெடுத்துத் தந்ததால் தமிழகம் உலகு தழுவிய புகழ்பெற்றது. இன்று திருவள்ளுவர், திருக்குறள் என்ற பெயர்கள் புகழைச் சேர்க்கும் மந்திரங்களல்ல. வள்ளுவத்தின் வாழ்வியலைத் தமிழினத்தின் வாழ்வியலாகச் செய்தாலேயே இன்றைய தமிழினம் புகழ்பெற முடியும். வள்ளுவம் வளர்க! வெற்றி பெறுக!

# திருவள்ளுவர் — சமயவியல்

## (இரண்டாம் நாள் சொற்பொழிவு)

### முன்னுரை

*திருக்குறள் ஓர் அறிவு நூல்; திருக்குறள் ஓர் அற நூல்; அறத்திலும் சிறந்து விளங்கும் ஞானத்தை — பேரறிவை வழங்கும் ஞானப் பனுவல், திருக்குறள், மெய்யுணர்வில் திளைத்த அருள்ஞானச் செல்வராகிய திருவள்ளுவர் தந்தது. திருக்குறளைப் பிற்காலத்தவர்கள் வடமொழி நான்மறை யோடு ஒத்தது என்பர். இல்லை, இல்லவே இல்லை! சிறு தெய்வங்களையும், இயற்கை ஐம்பூதங்களையும் அஞ்சித் தொழும் நெறிகளைக் கூறுவன அந்நான்மறைகள். ஆனால், அச்சமின்றிப் பரம்பொருளைத் தொழும் ஞானநெறியைக் காட்டியது, காட்டுவது திருக்குறள். திருக்குறள், சமயச் சான்றோர்களால், ஞானிகளால் ஏற்றுப் போற்றப் பெற்றிருப்பதனாலேயே அதனுடைய அருமை விளங்குகிறது. உமாபதி சிவம், திருக்குறளை உளங்குளிரப் பாராட்டுகின்றார்.*

> *"...................... நிலைத்தமிழின்*
> *தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த*
> *மெய்வைத்த சொல்"* (நெஞ்சுவிடு தூது, 25–26)

என்று கூறியிருப்பதறிக. "இவ்வளவு உயர்ந்த ஞானத்தைச் சிறந்த முறையில் கூறும் திருக்குறள் போன்ற அறநெறிக் கோவை உலக இலக்கியங்களிலேயே வேறு இல்லை" (சர் ஆல்பெர்ட் சுவைட்சர் — இந்திய நாட்டின் சிந்தனையும்

அதன் வளர்ச்சியும்) என்பர் சர் ஆல்பெர்ட் சுவைட்சர். ஆதலால், திருக்குறள் ஓர் இலக்கியம்! இல்லை, அஃது இலக்கிய அமைப்பில் சிறப்புற்று விளங்கும் அறநூல். இலக்கியம், அறநூல் ஆகிய தகுதிகளோடு அஃது ஒரு சிறந்த அரசியல் நூலாகவும் விளங்குகிறது. மேலும் சிறந்த ஞானத்தின் கருவூலமாகவும் திகழ்கிறது. திருக்குறள் ஒரு மறை. மனித வாழ்க்கையை அறிவியற்பார்வையோடு அணுகி ஆராய்ந்து வழி நடத்தி வாழ்விப்பது திருக்குறள். திருக்குறளைப் போன்ற ஒரு முழுநூல் மக்களாகப் பிறந்தார் பேசும் வேறு எம்மொழியிலும் இல்லை

## மனித வாழ்க்கை

மனித வாழ்க்கை அருமைப்பாடுடையது. அது பழிக்கத் தக்கதன்று; சாவை விரும்பிச் செல்வதன்று; பழந்தமிழகத்தின் கொள்கை, வாழ்க்கையைப் போற்றுவதாகும். தமிழகத்தில் தோன்றிய அனைத்துச் சமயச்சான்றோரும் வாழ்க்கையை வரவேற்றுப் போற்றியுள்ளனர்.

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்"

(அப்பரடிகள், கோயில்–5)

என்று திருமுறை, வாழ்க்கையைப் போற்றும்படி அறிவுறுத்துகிறது. போற்றத்தக்க இப்பிறவி இன்னும் வேண்டும் என்பதை,

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

(அப்பரடிகள் கோயில்–4)

என்று அப்பரடிகளின், அருந்தமிழ் கூறும்.

மானிட வாழ்க்கை வெற்றிக்குரியது என்பதைக் கம்பன் உணர்ந்து "மானுடம் வென்றதம்மா" என்று உளங்குளிர வியப்புணர்ச்சியுடன் பாராட்டுவான். ஆம்! மானுடம் பிண்டமன்று; மானுடம் ஒரு வாழ்க்கை.

*"காயமே இது பொய்யடா!*
*காற்றடைத்த பையடா!"*

என்று பாடுவது முழுமையான மானுட வாழ்க்கையைக் குறிக்காது. அஃது உடம்பு நிலையாமையை மட்டுமே குறிக்கும். வாழ்க்கை யென்பது உடலை மட்டும் சார்ந்த தில்லையே! எழுதும் பேனாக்களில் மை வற்றலாம்; பேனாவே கெட்டுப் போகலாம். ஆனால் பேனாவால் எழுதிய காவியங்கள் நிலையில்லாதனவா? ஆதலால், வாழ்க்கை நிலையானது; அழியாதது, பௌத்த, சமண மாயாவாதக் கலப்புகளுக்குப் பிறகு வாழ்க்கையை இழித்தும் பழித்தும் பேசும் வழக்கம் தமிழகத்தில் இடம் பெற்றது. அத்தத்துவங்களின் விளைவால் நாடு செயலற்று வறுமையில் துஞ்சியது; அந்நியர்க்கு அடிமைப் பட்டது என்ற உண்மை உணரப்படுதல் வேண்டும். வள்ளுவத்தின் பார்வையில் வாழ்க்கை அருமையுடையது; பயனுடையது; புகழ் மிக்கது என்பதறிக.

உயிரினத்தின் வாழ்க்கையில் சமயம் கால்கொண்டது. சமயத் தோற்றத்திற்குக் களன் விண்ணுலகமன்று; மானுடச் சாதியின் சமயம் யாரோ ஒருவரால் தயாரிக்கபெற்று இறக்குமதி செய்யப் பெற்றதுமன்று. மானுடச் சாதியின் இயல்பான வளர்ச்சியில் (Evolution) பரிணாமத்தில் தோன் றியது சமயம். மேலை நாட்டவர் அச்சத்தின் காரணமாகச் சமயத்தைக் கண்டனர். Fear is the beginning of God என்பது ஒரு பழமொழி. ஆனால் வீரத்திற்கும் தறுகண்மைக்கும் ஊற்றுக் கண்ணாக விளங்க வேண்டியது சமயம்.

*"ஈர அன்பினர் யாதும் குறைவிலார்*
*வீரம் என்னால் விளம்பும் தகையதோ"*

(பெரியபுராணம் 5 : 9)

என்று சேக்கிழார் பெருமான், சமய நிலையினர்தம் வீரத்தைப் போற்றுகின்றார். ஆதலால் அஃது அச்சத் தினின்று பிறத்தற்கில்லை. அச்சத்தில் தோன்றிய சமயமும்

மானுடச் சாதிக்குப் பயன்தாராது. அச்சம் கொச்சைத் தனமானது; கீழ்மையானது; ஆக்கத்தின் வழி நடத்தாது. அதனாலன்றோ வள்ளுவம்,

*"அச்சமே கீழ்களது ஆசாரம்"* (1075)

என்று அச்சத்தை இழித்துப் பேசுகிறது. சமய வாழ்க்கையில் மேம்பட்டு விளங்கிய ஞானிகள் "அஞ்சுவது யாதொன்று மில்லை; அஞ்ச வருவதுமில்லை" என்று உரைத்த உயர் ஞானமொழி உணரத்தக்கது. தேசியக் கவிஞனாகவும் சமய வாழ்க்கையுடையவனாகவும் விளங்கிய பாரதி "அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே" என்று பாடியதையும் அறிக. ஆதலால் அச்சம், அறிவியல் முயற்சிக்கு முரணானது; ஆக்கத்திற்கு மாறுபட்டது; அன்பு நெறிக்கு இசைவிலாதது; அருளியலுக்கு உடன்பாடிலாதது. எனவே அச்சத்தில் பயத்தில் சமயம் தோன்றாது; தோன்றமுடியாது; தோன்றக் கூடாது. அச்சத்தின் வழிப்பட்ட சமயங்கள் ஆனவை மானிடச் சாதியை அடிமையாக்கும்; குற்றவாளிகளாக்கும்; பிச்சைக்காரர்களாக்கும்; காலப்போக்கில் அழித்துவிடும். அப்படியானால் அப்பரடிகள்,

*"அஞ்சியாயினும் அன்புபட்டாயினும்*
*நெஞ்சம்வாழி நிலைநின்றி யூரை நீ"*

(திருவொற்றியூர்த் தேவாரம், 10)

என்று அருளிச் செய்துள்ளாரே என்ற வினா எழும். அது, அவர் காலத்தில் வந்த வழக்கினைச் சார்ந்த நிலை. அப்பரடிகள் உலகு தழுவிய சிந்தனையுடையவர். ஆதலால், தம் காலத்தில் வழக்கில் இருந்த செய்திகள் சிலவற்றைத் தம் பாடல் வழி நினைவு கூர்கிறார் அஃது ஒரு நினைவு கூர்தல் என்ற அளவிலேயே அமையும்.

*"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"*

என்றும்

"வடமொழியும் தென்தமிழும் ஆனான் கண்டாய்"

என்றும் அருளிச் செய்துள்ளமையால் அவர் காலத்தில் நிலவியவற்றையும் எடுத்து இயம்பித் தம் நிலையில் நின்றார் என்பதே கருத்து. அது மட்டுமன்று. அஞ்சுதல். அன்பு எனும் இவையிரண்டும் இருவேறு இயல்பின என்பதையும் அவர் உணர்த்தாது உணர்த்துகிறார். மேலும் அஞ்சியாயினும் என்பதற்கு அச்சத்தினாலாயினும் என்று பொருளே தவிர, அஞ்சி வழிபடுதலை முழுமையாக ஏற்றுக்கொண்டார் என்பது பொருளாகாது. அவருக்கு உண்மையான நோக்கம் அன்பினால் வழிபாடு நிகழ்த்துதல் என்பதேயாம். திருக்குறள் தோன்றிய தமிழினத்தின் சமயம், அறிவு ஆற்றல்களின் எல்லையைக் காணும் ஆர்வத்தில் பிறந்ததேயாம். இயல்பின் மனித அறிவு, எல்லைகளுக்கு உட்பட்ட அறிவாக விளங்குகிறது. ஆற்றலும் அப்படித்தான்! ஒரு மாபெரும் செயலைச் செய்து முடிக்க விரும்புபவர் தமது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள ஆர்வம் உடையரா யிருத்தல் இயற்கை. நெடுந்தூரம் கடக்க வேண்டியவர் விரைந்து செல்லும் பயண ஊர்திகளையும், நெடுந்தொலைவு காண விரும்புபவர் ஆற்றல்மிக்க தொலைநோக்கியையும் பயன்படுத்துவதைக் கண்கூடாகக் காண்கிறோம். அதுபோல உயிரின் அறிவை ஆற்றலைப் பெருக்கி வளர்த்துக்கொள்ள வேண்டும்; அதற்குப் பேரறிவாளனாக — வரம்பிலாற்றல் உடையானாக விளங்கும் இறைவனை நாடவேண்டும் என்கிற மனப்போக்கிலேயே உயர்சமயம் தோன்றியது. பிறிதொரு களமும் உண்டு. உயிர்கள் துய்த்து மகிழ்ந்து இன்புற்று வாழ எத்தனையோ கோடி இன்பங்கள் இந்த உலகத்தில் உள்ளன. அவைகளைக் கூர்ந்து நோக்குங்கால் மனித ஆற்றலை விஞ்சிய ஆற்றலின் தொழிற்பாடு தெரிகிறது.

"கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு"

(திருமுரு 1 : 17)

என்பார் நக்கீரர். இவ்வின்பத்தையெல்லாம் துய்த்து மகிழும் உயிர், நன்றிப் பெருக்கோடு அந்த ஒப்பரிய பேராற்றலை வாழ்த்த முனைவதும் ஒரு காரணம். இவைதாம், தொன்மைக் காலத்தில் தமிழ்ச்சமயம் தோன்றுவதற்கமைந்த களங்கள். காலப்போக்கில் மனித குலத்தில் பொதுமையும் சான்றாண்மையும் குறையக் குறையப் பொய்யும் வழுவும் வந்தமைய, அறத்தை வற்புறுத்தவும், நீதியை நிலைநாட்டவும் சட்டங்கள் தோன்றுவதற்கு முன்பு, இம்மை மறுமை நலன்களைக் காட்டித் தடம் பிறழ்ந்த மனித சமுதாயத்தை நன்னெறியில் நிறுத்தச் சமயநெறிகள் முயன்றன. அப்போது சமயத்தின் தோற்றக்களன் விரிந்து, ஆட்சி முறையினைத் தழுவித் தேவைக்கேற்பப் புனைந்துரைகளை நாடியது. இப்படி விரிந்தமையினால் சமயவுலகு நன்மைகளும் பெற்றது; தீமைகளும் பெற்றது. சமயத் துறையின் நிலையியலுக்கு எடுத்துக் கொண்ட விரிவை, மருந்தாகப் பயன்படுத்தாமல் உணவாகப் பயன்படுத்தியதால் சில தீய விளைவுகளும் தோன்றின. அதனால் "மனித உலகத்தின் முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை" — "சமயம் முட்டுக்கட்டை", "சமயம் மக்களுக்கு அபின்" என்றெல்லாம் எடுத்து விளக்கக்கூடிய அளவுக்குச் சமயநெறியினைச் சார்ந்த நிறுவனங்கள் முறைபிறழ்வில் நெடியதூரம் சென்றுவிட்டன என்பதை மறுப்பதற்கில்லை; மறுக்கவும் இயலாது. ஆக, சமயத் தோற்றத்திற்குக் காரணம் அறிவின் வேட்கையேயாம்; ஆற்றலின் பாற்பட்ட நாட்டமேயாம். அமைதியை நாடும் இன்ப அன்பினைத் தழுவும் பேரார்வமே, சமய நெறியின் தோற்றத்திற்கு ஊற்றுக் கண்.

மதம் — சமயம் ஆகிய சொற்கள் ஒரு பொருள் உடையன போல வழங்கப் பெறுகின்றன. ஆனாலும் "மத'த்திற்கும் சமயத்திற்கும் வேறுபாடு உண்டு. 'மதம்' என்பது,

"எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேல் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர்நூற் குற்றம் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் தன்மதம் கொளலே"

(நன்னூல் பொதுப்பாயிரம் : 11)

என்று வகைப்படுத்தப் பெறுகிறது. இங்கு 'மதம்' என்ற சொல்லுக்குக் கொள்கை என்பதே பொருள். இந்நூற் பாவில் வரும் மதம் என்ற சொல் உணர்த்திய பொருளோடு கடவுள் தொடர்பு இல்லை. அஃதொரு கருத்தினை, கொள்கை யினைக் குறிக்கும் சொல்லாகத் தானிருக்கிறது. இஃது உணரத்தக்கது. பின், ஒரு கொள்கை யுடையார் பிறிதொரு கொள்கையுடையார் மீது கொள்கையைத் திணிக்கக் கடவுட் கொள்கையையும் சேர்த்துப் பயன்படுத்தி யிருப்பார்கள் போலும்! அப்பொழுது மதம் என்ற கொள்கை அமைப் போடு கடவுள் சம்பந்தப்பட்டது. கொள்கை வெறியில் கொள்கையின் தராதரத்தை ஆராய்ந்தறியாமல் கொள்கையைத் திணித்து விடவேண்டும் என்று வெறிபிடித்து அலையும் 'பெரியவர்'களுக்கு "மதம் என்னும் பேய் பிடியா திருக்க வேண்டும்" என்று தன்மீது வைத்து வள்ளலார் அறிவுறுத்துகிறார். தமிழ் இன வாழ்க்கையில் சமயம், முன்னர்க் குறிப்பிட்டதைப்போல வாழ்க்கை செப்பமாக அமைய, குறைகளை நிறைகளாக மாற்றிக்கொள்ளத் தோன்றியதேயாம். மதம் என்ற சொல்லுக்கும் சமயம் என்ற சொல்லுக்கும் உணர்வில், பொருள் விளக்கத்தில் நடைமுறையில் நிறைந்த வேறுபாடுண்டு. இன்று நாம் விரும்புவது மதமன்று; சமயமேயாம்.

வாழ்க்கை அருமையானது; பெருமைக்குரியது என்றால் எந்த வாழ்க்கை? இன்று பலர் வாழவே இல்லையே! ஏன்? அவர்களுக்கு வாழத் தெரியாதே! அது மட்டுமா?

அவர்கள் வாழவேண்டுமென்று ஆசைப்படக்கூட மறுக்கி றார்கள். ஊனுடலுடன் உலா வந்து, உண்டுடுத்திச் செத்துப் போதலும் வாழ்க்கையோ? இது பிழைப்பு. பிழைக்க யாருக்குத்தான் தெரியாது? தெருவுதோறலையும் ஊர் நாய் கூடத்தான் பிழைத்து விடுகிறது. வாழ்க்கையென்பது ஒரு அருமையான கலை நுணுக்கம் உடையது; நெடிய வரலாறுடையது; உயர் இலக்கு உடையது. வாழ்க்கையின் அருமைப்பாட்டினை உணர்த்து வாழ்தலே வாழ்க்கை. நல்லதோர் வீணையானாலும் அதனை மீட்டத் தெரிந்தால் தானே இசை இன்பம்! அதுபோல வழியோடும் வகை யோடும், அறிவோடும் தெளிவோடும், உயிரோடும் உணர் வோடும், படைப்பாற்றல் நோக்கோடும் வாழும் வாழ்க்கையே வாழ்க்கை. இதனை வள்ளுவம்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (50)

என்று கூறுகிறது. வாழ்வாங்கு வாழ்கிற வாழ்க்கைக்குத் துணை செய்வது சமயம், அகநிலைச் சார்புடையது; புலன் களைத் திருத்தத் துணைசெய்வது; சமயசீலங்கள் பொறிக ளோடு தொடர்புடையன அல்ல, பொறிகளின் தூய்மைக் கேட்டுக்கு அரசுகளே பொறுப்பேற்க வேண்டும். புலன்களின் தூய்மைக்குச் சமயம் துணை செய்கிறது. "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று சங்க காலப் பாடல் சமய வாழ்க்கையைக் குறிப்பிடுதலை உணர்க. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற இவற்றின் வகைதெரிந்து வாழ்வோரே சமயநெறி நிற்போர்.

"சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" (27)

என்ற வள்ளுவம் அறிக. புலன்கள் தூய்மையானால் பொறிகள் தூய்மை நெறியில் இயல்பாக இயங்கும். அதனாலன்றோ,

*"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற"*

(34)

என்று வள்ளுவம் கூறுகிறது. ஆதலால் மானிடரின் புலன்களைத் தூய்மை செய்து, சீலம் பெருக்கி மனத்தின் கண் தூய்மையைச் சேர்த்து அகவாழ்க்கையை வளர்த்து, அவ்வழி புறவாழ்க்கையையும் வளர்த்து வழி நடத்தி வாழ்விப்பது உயர் சமய நெறியின் நோக்கம்; பயன்.

உயிர், துய்த்தலுக்குரியது; இன்புறுதலுக்குரியது. ஆதலால், சமய வாழ்க்கையின் அடிப்படையில் துய்த்தல் நெறிக்கு மாறான — துய்த்தல் நெறியை அடக்குகின்ற— பொறிகளை, புலன்களை அழிக்கின்ற — வறட்சித் தன்மை யுடைய துறவை உயர்ந்த சமயம் ஏற்பதில்லை. அதனால், சமய நெறியில் துறவேயில்லையென்று பொருள் கொள்ளற்க. துறவு உண்டு; எல்லாருடைய வாழ்க்கையிலும் துறவு இருத்தல் வேண்டும். துய்ப்பு வாழ்க்கை துறவுடன் தொடர்பு கொண்டிருந்தால்தான் சிறக்கும்; இன்பம் கிடைக்கும். உயிர்கள் தத்தம் வளர்ச்சி எல்லைக்கண் நின்று வாழ்தல் வேண்டும். இயற்கையோடு இசைந்த வாழ்க்கையே இறைநெறி சார்ந்த வாழ்க்கை. ஆதலால் தமிழர்தம் வாழ்க்கையில் மேற்கொண்டொழுகிய சமயநெறியில் பெண்ணை வெறுத்தலும், மனையறத்தை வெறுத்தலும் இல்லை. தமிழர் போற்றிய பெண்ணின் பெருமைக்கும் அகனைந்திணை வாழ்க்கைக்கும் புறச்சமயங்கள், அயல் வழக்குகள் முரண்பட்டு இருந்ததனால்தான் நம்முடைய நாயன்மார்கள் அந்தப் புறச்சமயங்களை எதிர்த்துப் போராடித் தமிழினத்தின் சமயநெறியை — அகனைந்திணை ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாத்தனர். ஆதலால்தான் இல்லறத்தை அறத்துப்பாலின் முதனிலையில் வைத்து ஓதுகிறார் திருவள்ளுவர்.

"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று ஐயத்திற்கு இடமின்றி அழுத்தமாக இயம்புகிறார். ஏன்? வாழ்க்கையின் பேறுகளை வேறு வேறு நெறிகளில் பெற முயல்வார் வெற்றி பெறுதல் அரிது.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (47)

என்று இல்லறத்தைப் பாராட்டுகின்றார். எனவே மனை யறத்தைச் சிற்றின்பம் என்று பறிப்பதும், அது இறவாத இன்ப அன்பினைப் பெறுதற்குத் தடை என்பதும் — உண்மையறியாதார் கூற்று.

மனையற வாழ்க்கையில் நின்று வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்று வள்ளுவம் உறுதி கூறுகிறது. உயிர், படிப்படியாக அன்பில் வளர மனையறம் துணை செய்கிறது. உயிர்கள் துய்த்தலினால் துன்புறுவதுமில்லை; கேடுறுவதுமில்லை; இன்பத்திற்குத் தடையுமில்லை; வீடு பேற்றுக்குத் தடையுமில்லை. ஆனால் துய்த்தலில் ஏற்படும் உள்ளத்தின் விருப்பு — வெறுப்பு உணர்ச்சிகள் துன்பத்தைத் தருகின்றன. தூய்மையான துய்த்தல் நெறி, அளவிலாத இன்பத்தைத் தரும். பொருந்தா உணவைப் பெருந்தீனியாகத் தின்பது துய்த்த லன்று. பொருந்திய சுவைமிக்க உணவைச் சுவைத்து உண்பதே துய்த்தல். இங்ஙனம் உணவைச் சுவைத்துத் துய்ப்பதால் உடல்நலம் பெருகும்; உயிர் நலம் பெறும்; உணர்வும் சிறக்கும். உண்ணாது பட்டினி கிடப்பது சமயம் வகுத்த நோன்பன்று. 'உண்க', வாழ்வதற்காக 'உண்க', வகையறிந்து 'உண்க', அற்றது அறிந்து 'உண்க'–இதுவே சமயம் காட்டும் துய்த்தல் நெறி.

காதல் வாழ்க்கைத் துய்ப்புக்கும் இந்நெறியே பொருந்தும். 'பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு' போற்றிய நலத்தை வாழ்க்கையில் வளர்த்துத் தம்முள் மாறி அன்பு

செய்து, தற்சார்பைத் தன்னலத்தைத் தீரத்துறந்து, இன்புறுத்தும் இல்லற நெறியை ஏற்று ஒழுகின் அஃது இறைநெறியாம். வாழ்வாங்கு வாழ்தலே இல்லற வாழ்க்கையென்று வள்ளுவம் வரையறை செய்கிறது. இத்திருக்குறளுக்கு உரைவிளக்கம் செய்வார் போல உய்யவந்த தேவநாயனார்,

*"பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாயங்கே*
*முற்ற வரும்பரிசு உந்தீபற*
*முளையாது மாயையென்று உந்தீபற"* (திருவுந்தியார் 33)

என்று கூறுவார்.

திருவள்ளுவர் துறவறத்தையும் கூறுகிறார். திருவள்ளுவர் காட்டும் துறவறம் பெண்ணை வெறுத்த துறவறமா? மனையறத்தை வெறுத்த துறவறமா? என்று அறியப் போதுமான அகச்சான்றுகள் வெளிப்படையாக இல்லை. பல ஆண்டுகள் இல்லறம் இயற்றிய பிறகு, உயிர் நலம் கருதியும் பொதுநலம் கருதியும் மனையறத்தைத் துறந்து தவ வாழ்க்கை இயற்றுதலைத் துறவறம் என்று தொல் காப்பியம் கூறுகிறது.

*"காமஞ் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்தவன் பயனே —*

(தொல் பொருள்; கற்பியல் 51)

என்பது தொல்காப்பியம். இத்தகைய வாழ்க்கையைத் தான் வள்ளுவம், துறவறத்தில் எடுத்துக்கூறுகிறது என்று கருத இடமிருக்கிறது. துறவறவியலில் கூறப்பெற்றுள்ள அதிகாரங்களை நோக்கி ஒரோவழி இல்வாழ்க்கையின் சூழ்நிலைகளால் தோன்றும் தவறுகளையும் முற்றாகத் தவிர்த்து வாழ்தல் என்பது பெறப்படுகிறது. இல்வாழ்க்கையிலும் கூட வெகுளா திருத்தலும், வாய்மை போற்றுதலும் வேண்டற்பாலனவாம். ஆயினும் அறியாதாரை அறநெறியிற் செலுத்தவும் தற்காப்

புக்கும் ஒரோவழி மேற்கூறிய தவறுகள் செய்யவேண்டிய கட்டாயங்கள் தோன்றலாம்; செய்யவும் நேரிட்டுவிடலாம். அங்ஙனம் செய்தாலும் இல்லறநெறியில் அவை தவிர்க்க முடியாத தவறுகள் என ஏற்றுக் கொள்ளப்பெற்றுச் சான்றோரால் ஒப்புறுதி அளிக்கப்பெறும். ஆனால் துறவறத் தில் அத்தகைய தவறுதலை எக்காரணத்தை முன்னிட்டும் மறந்தும் செய்யக்கூடாது என்பது துறவறவியலின் முடிவு. இல்லற வாழ்க்கையில் பொருள் செய்யும் முயற்சி தேவை. அதற்குரிய அவா தேவை. ஆனால் துறவற வாழ்க்கையில் அது கூடாது. துறவற வாழ்க்கையில் மற்றவர் வழங்கும் துய்ப்புக்களைக் கொண்டு வாழ்ந்து, மனவமைதி பெறுதல் வேண்டும். உடைமைகளைச் சேர்த்தல் கூடாது; பாதுகாக்கவும் கூடாது. வள்ளுவம் துறவற வாழ்க்கைக்கு எந்த ஒரு உடைமையும் கூடாது என்று தெளிவாகக் கூறுகிறது. அப்படியொரு உடைமை இருக்குமாயின் மயக்கத்தைத் தரும் என்று தெளிவாக வரையறுத்துக் கூறுகிறது.

> *"இயல்பாகும் நோன்பிற்(கு) ஒன்(று) இன்மை; உடைமை*
> *மயலாகும் மற்றும் பெயர்த்து"* (344)

என்று திருக்குறள் கூறும்.

ஆனால் அதுபோலப் பெண்ணைத் துறத்தல் வேண்டும் என்று யாண்டும் கூறவில்லை. பண்டைத் தவமுனிவர் வாழ்க்கையிலும் பெண்ணைத் துறந்ததாக வரலாறில்லை. ஆனால் பின்னே தோன்றிய துறவு நெறிகள் — வள்ளுவத்திற்கு மாறான துறவு நெறிகள் நடைமுறைக்கு வந்தன. ஆசைகளை மூவகைப்படுத்துவர். மண், பொன், பெண் என்று. இம்மூன்றில் வள்ளுவம் துறக்கச் சொன்னது முன் இரண்டையும், காரணம் அவையிரண்டும் அன்பினை வளர்க்காது; வழிபாட்டு நெறியில் வழி நடத்தாது; இவறிக்கூட்டும் இயல்பினை வளர்த்து மனிதனின் தூய

அன்புணர்வைக் கெடுக்கும். கேடு செய்வதில் இவையிரண்டுக்கும் ஈடு எதுவுமில்லை. இவ்வுலகத்தில் சிறைக்கூடங்களைப் பெருக்கிவளர்த்தவை இவ்விரண்டும்தானே! பெண், மண்ணும் பொன்னும் செய்யும் தீமையைச் செய்ய மாட்டாள். இரக்க உணர்ச்சியைத் தூண்டிவளர்க்கும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டு. ஆனால் தமிழகத்துத் துறவு வாழ்க்கையில் மண்ணையும் பொன்னையும் துறக்காமல் பெண்ணை மட்டுமே துறக்கும் நெறி மேற்கொண்டதால் துறவிலும் முழுமையான வெற்றி பெறவில்லை. உடைமைகளின் பெருக்கத்தால் ஒழுக்க நெறியிலும் காலூன்ற இயலவில்லை. அதன் விளைவாகத் துறவிகள் வாழும் மடங்களும் பூட்டுக்கள் உடையனவாக, தணிக்கைகளுக் குரியனவாக, வழக்குகளுக்கு உரியனவாக வளர்ந்துள்ள அவலநிலையை நினைந்து வருந்த வேண்டும். ஒரு சாதிக்குச் சமயத் தலைவராக விளங்குபவர் — 'சகத்குரு'வாகி விடுகிறார். கிறித்துவத் துறவுநெறி சற்றுப் பரவாயில்லை. ஏன், அங்கு நாடுகளை — இனங்களை — சாதிகளைக் கடந்த துறவிகள் பல்லாயிரவர் கூடிக் கூட்டு வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்களில் யாருக்கும் சொந்தத்தில் உடைமையில்லை. நீதியியலில் தனி ஒரு துறவிக்கு உரிமை இல்லை. அவர்களுக்கு ஓருரும் கிடையாது; ஓர் இடமும் கிடையாது. அத்தகையதொரு துறவுநெறி போற்றுதலுக்குரியது; தவறுகள் நிகழாமல் தற்காப்பதற்குரிய வாய்ப்புகள் நிறைய உண்டு. ஆயினும் அதுவே ஏற்புடையதாக, சிறப்புடையதாக அமையவில்லை; குறைகளும் குற்றங்களும் மலிந்து விட்டன. பதினைந்தாம் நூற்றாண்டில் செருமனியில் தோன்றிய மார்ட்டின் லூதர் மனையறவாழ்க்கை மேற்கொண்ட புதிய கிறித்துவ சமயத்தைத் தொடங்கி வெற்றி பெற்றுள்ளார். இன்றைய தமிழகத்தில்கூடத் தென்னிந்தியத் திருச்சபை வழி அவர்கள் செய்யும் தொண்டு பாராட்டுதலுக்குரியது. அதுபோல இந்த நாட்டில் சமய நம்பிக்கையுடைய படித்த இளைஞர்கள்

மாற்றம் காண முயலவேண்டும். ஆதலால் வள்ளுவம் காட்டும் சமயநெறியில் துறவு வாழ்க்கை, உள்ளத்தை மாசுபடுத்தும் தன் நலத்தைத் துறந்து, பொது நலத்தை நாடித் தவம் செய்தலாகும். தவம் என்பது உடலால் உயிரால் உணர்வால் செய்யக் கூடியது. உடலில் அகநிலை, புறநிலை உறுப்புகள் தத்தம் நிலையில் நிற்காமல் துய்க்கும் வேட்கை தணிந்து மற்றவர்களை இன்புறுத்தவேண்டும் என்ற பெருநெறியில் செல்லுதலே துறவறம். இதுவரையில் தன்னலம் கருதியும் சுற்றத்தார் நலம் கருதியும் நாட்டின் நலம் கருதியும், மேற்கொண்ட ஒழுக்கங்களை நிறைவு செய்து கொண்டு அதனினும் விஞ்சிய மெய்யுணர்வு நாட்டத்தில் தவம் மேற்கொள்ளுதலை வள்ளுவம் வாயாரப் போற்றுகிறது.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு" (81)

இதுவே திருவள்ளுவர் கண்ட சமய வாழ்க்கையின் துறவறம்.

சமயநெறி, முன்னர்க் குறிப்பிட்டதைப் போல அகநிலையைச் செழுமைப்படுத்துகிறது; புலன்களுக்குச்சீலம் சேர்க்கிறது; அவ்வழி, அது பொறிகளையும் தூய்மை செய்கிறது ஆதலால் சமயம் சார்ந்து வாழும் சமுதாயம் அன்பினால் தழைத்து வளரும்; இன்பம் துய்க்கும்; ஆங்கு மறந்தும் ஒழுக்கக் கேடுகள் தலைகாட்டா; களவும் காவலும் இல்லை; உடையாரும் இல்லாரும் இல்லை; சிறைச்சாலைகள் இல்லை. எங்கும் அறச்சாலைகளே உண்டு; மனித குலத்தை வேறுபடுத்துகிற வேறுபாடு இல்லை; பகையும் இல்லை; போரும் இல்லை. இங்ஙனம் வாழும் சமுதாயமே சமயம் சார்ந்த சமுதாயம்.

வாழ்க்கையில் இயல்பாக மலர்ந்த சமயம், காலப் போக்கில் அறிவாராய்ச்சியில் தலைப்பட்டு மெய்ஞ் ஞானத்தை வளர்க்கும் விஞ்ஞானமாக வளர்ந்தது. சமயத் தத்துவங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியன

அறிவியல் உணர்வோடு அணுகப்பெற்றன. அறிவியல் பாங்கில் அடித்தளமும் அமைக்கப் பெற்றது. உலகு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஞாயிறு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உலக இயக்கத்தில் அடிப்படை உறுப்புகளாக அமைந்துள்ளன எவை? எவை? உலக இயக்கத்தால் அந்த உறுப்புகள் அடையும் பயன் என்ன? என்று ஆராய்ந்தறிதல் சமயத்தின் இயல்பாக அமைந்தது. உலகில் படைக்கப் பெறாமல், என்றும் உளவாகத் தாமே இயல்பியல் அமைந்த பொருள்கள் மூன்று. அவற்றுள் பொருள்கள் இரண்டு; பொருளின் தன்மை ஒன்று. இம்மூன்றும் யாவை? ஒன்று கடவுள்; மற்றொன்று உயிர்; பிறிதொன்று உயிரைப் பிணைத்துள்ள அறியாமை. இவை மூன்றும் படைக்கப் பட்டனவுமல்ல; தோன்றியனவுமல்ல; அழியக் கூடியனவு மல்ல.

> *"பதிபசு, பாசம் எனப்பகர் மூன்றில்*
> *பதியினைப் போல்பசு பாசம் அனாதி"*
>
> (திருமந்திரம் 1 : 159)

இது தமிழினத்தின் மெய்யறிவுக் கொள்கை.

இம்மூன்று பொருள்களும் என்றும் உண்பொருள்கள் என்பது வள்ளுவர் கொள்கை. கடவுள் பிறப்பிறப்பில் லாதவன் என்பதனை உணர்த்த அவன் பிறவிக்கடல் நீந்துவதற்குத் துணையானவன் என்று வள்ளுவர் விளக்குகிறார், மேலும் 'தனக்கு உவமை இல்லாதான்', 'எண் குணத்தான்', 'பொருள் சேர் புகழுடையான்' என்றெல்லாம் கூறுவதால் கடவுள் என்றும் உள்ள பொருள். அவனுடைய தனக்குவமையில்லாத் தகுதியும், குணமும், புகழும் இயல்பாய் அமைந்தவை. இவை மட்டுமன்றித் தன்னைச் சார்ந்தாரின் மனக் கவலையையும் மாற்றுவான்.

> *"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்*
> *மனக்கவலை மாற்றல் அரிது".* (7)

திருவள்ளுவர் கண்ட கடவுளுக்கும் உருவமில்லை. 'யான்', 'எனது' என்னும் செருக்கற்ற உயிர்களைத் தாங்கும் தகுதிமிக்க திருவடியைத் தாள்கள் என்கிறார். இது வள்ளுவர் காட்டும் கடவுளியல்.

## உயிர்

உயிர்! அருமையான தமிழ்ச்சொல். உய்தற்குரியது உயிர். உய்யும் தகுதியுடையது உயிர். உயிர்கள் கடவுளாலோ, மற்றும் யாராலோ படைக்கப்பட்டன அல்ல. கடவுளைப் போலவே உயிர்களும் என்றும் உள்ளவை.

"என்று நீ அன்று நான்"

என்பர் தாயுமானார். உயிர்கள் தோற்றமும் அழிவுமில் லாதன. கடவுள் ஒன்று; உயிர்கள் பலப் பல. உயிர்கள் என்றும் உள்ளன என்பதே திருக்குறளின் கொள்கை.

"மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது" (68)

"தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" (190)

"மன்னுயிர் ஓம்பி" (244)

"மன்னுயிர் எல்லாம் தொழும்" (268)

"மன்னுயிர்க்கு இன்னா செயல்" (318)

என்ற குறட்பாக்களில் திருவள்ளுவர் உயிர்களை 'மன்னுயிர்' என்றே குறித்தல் காண்க. மன்னுதல் என்பதற்கு நிலைபெறுதல் என்று பொருள்.

"புரத்தல், துஞ்சல், அற்கல், மன்னல்
நிலைத்தல் ஐந்தும் நிலைபே றாகும்".

(சேந்தன்திவாகரம்: செயல் தொகுதி: 5)

என்பது சேந்தன் திவாகரம். ஆதலால் உயிர்கள் என்றும் உள்ளன என்பதே திருக்குறளின் கொள்கை.

உயிர், அறிவுப் பொருள்; உயிர் அறிவு பெறுதற்குரியது. ஆயினும் அது இயல்பில் அறியாமையைத் தழுவிக் கிடக்கிறது. உயிர், தான் தழுவிக் கிடக்கும் அறியாமை யினின்றும் விலகி அறிவினைப்பெறும் முயற்சியே வாழ்க்கை. உயிர்க்கு அறியாமை இயல்பு என்பதை,

*"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்பது அறிவு"* (358)

*"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணியது உடைத்து"* (353)

*"அறிதோறு அறியாமை கண்டற்றால்"* (110)

ஆகிய குறள்வழி அறிய முடிகிறது. உயிரைப் பிணித்துள்ள இந்த அறியாமையை விளக்குவதற்குத்தான் கல்வி, கேள்வி, அறிவுடைமை மெய்யுணர்தல் போன்ற பல்வேறு அரிய முயற்சிகளையும், பிற வாழ்க்கை முயற்சிகளையும் அமைத்துக்காட்டுகிறது திருக்குறள். உயிர் அறியாமை உடையது; கடவுள், அறிவே திருவுருவானவன்; அறியாமை யுடைய உயிர், அறிவே திருவுருவான கடவுளின் துணையை நாடி, அறிவினைப்பெற்று வளர்தற்குத் துணை செய்தலே வழிபாடு. அதுவே வாழ்க்கையின் பயன். கடவுள் வாழ்த்தில் திருவள்ளுவர் இறைவனை 'வாலறிவன்' அதாவது 'தூய்மையான அறிவினன்' என்று பாராட்டுகின்றார். வாலறிவன்வழி நின்று அறிவைப் பெறுதலே வழிபாடு; வழிபாட்டின் பயன், உயிர் முற்றாக அறியாமையினின்றும் விடுதலை பெற்று, அறிவு நிலையை அடைதலே இறுதி நிலை. அந்நிலையிலேயே அவா அற்றுப்போகும். அந்நிலையே இன்ப நிலை; அந்நிலையே அன்பு நிலை. அதுவே ஞான நிலை. அதுவே வள்ளுவம் காட்டும் சமய வாழ்க்கையில்.

*"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்"* (370)

## வினைகள்

உயிர்கள் தொழிற்படும் திறத்தன. உயிர்கள் தொழிற் படுதல் இயற்கை. உலக இயக்கமே தொழிற்படுதலில்தான் அமைந்து கிடக்கிறது. உயிர், உயிர்ப்போடு உள்ளமைக்கு அதன் தொழிற்பாடே அடையாளம். உயிர் தொழிற்படாது சோம்பிக்கிடத்தல், பிறப்பின் நோக்கத்திற்கு முரண்; உலக இயக்கத்திற்கு மாறுபட்டது; இயற்கைக்கு இசைவில்லாதது. இம்மையில் துன்பத்தைத் தந்து மறுமை இன்பத்தையும் இழக்கச் செய்வது சோம்பிக்கிடத்தல். ஆதலால், ஓயாது தொழிற்படுதல் உயிர் செய்தற்குரிய தவமாகும். தொழிற் படுதலை வினைசெய்தல் என்று தமிழ்மரபு கூறும். வினை செய்தல் நன்மையும் தரும்; தீமையும் தரும். நன்மையும் தீமையும் செய்யும் வினைகளிலா? வினை செய்யும் நோக்கங்களிலா? வினை செய்தலின் பயனை, அது நன்றாயினும் தீதாயினும் அவரவர்களே அடைந்து அனுபவித்தல் வேண்டும் என்பது வள்ளுவத்தின் கோட்பாடு. இந்த நியதி இருந்தால்தான், தீவினைசெய்ய அஞ்சுவர்; நல்வினையில் நாட்டம் செலுத்துவர்.

> *"எனைப்பகை யுற்றாரும் உய்வர்; வினைப்பகை*
> *வீயாது பின்சென்று அடும்"* (207)

என்ற திருக்குறள் கருத்தினை உணர்க. அவரவர் செய்த வினைப் பயன் அவரவர்களை வந்தடைதல் தவிர்க்க முடியாதது என்பதை,

> *"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
> *வீயாது அடியுறைந் தற்று"* (208)

என்ற குறள்வழி உணர்தல் நன்று. வினைகள் பயனைத் தருமா? வினைகளியற்றும் நோக்கங்கள் பயனாகப் பரிணமிக்குமா? வினைகளுக்குப் பயனில்லை. வினைகளை இயற்றும் நோக்கம், வினைகளைச் செய்யும் பொழுது

உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகள் இவைகளுக்குத்தான் பயன். செயலால் நல்வினை போலத் தோன்றும். கட்புலனுக்கு நல்லன போலத் தோன்றுவன — பூசை செய்தல், கொடை, ஈதல் முதலியன; ஆனால் பூசை செய்யும் ஒருவன் இன்ப அன்பு நிலையைத் தவிரப் பிறிதொன்றைப் பெற விரும்பிச் செய்வானானால் அவன் எல்லையற்ற இன்பநிலை யடையமாட்டான். அவன் எதை நினைத்துச் செய்தானோ அதுதான் பயனுக்கு வரும். மீண்டும் அது அவன் நினைப்பிற் கேற்ற நல்வினையாகவோ தீவினை யாகவோ பயனுக்குவரும்; நல்வினை வழிப்பட்ட பயனை— இன்பத்தைத் துய்க்கும்பொழுது ஏற்படும் உணர்வு மாறுபாடுகள், தீவினையாகவும் உருமாற்றம் பெறலாம். நோயின் கொடுந் துன்பத்தால் ஒருவன் துன்புறுகிறான். அதனைக் கண்ணுறும் மருத்துவர், அறுவை முதலியன செய்யும்போது நோயாளி இறந்து விடலாம். காட்சியளவில் இது கொலை போலத் தோன்றும். ஆனால் நோக்கம் மருத்துவம்; ஆதலால் கொலையாகாது; இது தீவினையாகாது. ஆனாலும் தக்க ஊதியம் பெறவில்லையென்ற காரணத் தாலோ பணியின் சோர்வினாலோ அறுவை மருத்துவத்தைக் கவனமாகச் செய்யாது இறப்பு நேரிடுமானால் அது தீவினை யாகும். அவ்வழிப்பட்ட துன்பத்தைத் துய்த்தேயாகவேண்டும். இஃதொரு நியதி. புவி ஈர்ப்பு ஆற்றலைப் போல இஃதொரு இயற்கை நியதி. கோள்களின் இயக்கம், எங்ஙனம் நியதிப்படி நடக்கிறதோ அதுபோல வினைகளை வினைகளின் பயனை வினைகளைச் செய்தார் துறத்தல் வேண்டும் என்ற நியதி செயற்படுகிறது. இந்த முறைபிறழாத செயற்பாட்டுக்குக் காரணம், உயிர்செய்யும் வினைகளுக்குரிய உணர்வுகளில் அழுத்தங்கள் அல்லது பதிவுகள் உயிருக்குள் அடங்கிக் கிடப்பதேயாகும். அவை உரிய காலத்தில் ஊழ்த்து வெளிப்பட்டுச் செயற்பாட்டுக்கு வருகின்றன. அந்த நிலையில், துய்ப்புக்கு — பயனுக்கு உரிய வினையை "ஊழ்",

என்று குறிப்பர். ஊழின் பயனைத் துய்த்துக் கழிக்காமல் அதாவது ஊழிற்குக் காரணமாக அமைந்த உயிரில் பதித்த உணர்வுத் தடத்தை அழித்து எழுதாமல் வேறு ஒரு வகையாக வாழ்தல் அரிது; இயலாது. அதனால் ஊழின் வலிமையைப் பெரிது என்பர். அதன் பொருள் ஊழின் பயனைத் தட்டிக் கழிக்க முடியாது என்பதேயாம். ஆனால் ஊழின் நடத்தை அழித்து எழுத முடியாது என்பது பொருளன்று. முன்னர்ச் செய்த வினைகளின் வழியாக அமைந்த தீயூழ், நல்லூழ் இவைகளிலும் விஞ்சிய நல்வினைகளை நன்னோக்கத் துடன் அயர்விலாது செய்தால் ஊழின் தடத்தையும் அழித்தெழுதலாம். அனுபவத்திற்கு வந்த ஊழின் விளைவு களையும் எளிமையாகத் துய்த்து நீக்கமுடியும். ஆதலால் சமயத்துறையில் ஊழைப் பயன்படுத்தி முன்னேற்றத் திற்குரிய தடை உணர்வை உருவாக்குதல் நெறியும் அன்று; முறையும் அன்று.

வினைகளின் பயன் மீண்டும் சுழற்சியாக வாராமல் தடுத்து நிறுத்தி உயிரை இனிய அன்பில் நிறுத்துவதற்குரிய ஒரே வழி வினைகள் செய்யாதிருத்த லன்று. வினைகளைச் செய்யாதிருத்தலும் ஒரு வினையாகும். ஓயாது வினைகள் இயற்றி உயிர்ப்பாக வாழ்தலே வாழ்க்கை. சமய வாழ்க்கையில், இறைநெறியில் நின்று மனித உலகத்தை நேசித்துத் தூய்மையான நோக்கத்துடன், "இறைவனின் கருவியாகத் தொழிற்படுகிறோம்" என்ற உணர்வுடன் வினைகளைச் செய்தும் அவைகளின் பயனை இறை வனுக்கும் மக்களுக்கும் என்று அர்ப்பணித்தால் அவ்வினை கள் அருள்சேர் வினைகளாகும். இத்தகு வினைகளுக்கு உயிரைக் கறைப்படுத்தும் குணம் இல்லை. ஆதலால் வாழும் ஊழும் வாராது. இதுதான் வள்ளுவத்தின் ஊழியற்கொள்கை.

ஊழின் வலிமையை வள்ளுவம் வலியுறுத்துகிறது; "ஊழிற் பெருவலி யாவுள!" என்று வினவுகிறது. ஊழிற்குத் திருக்குறள், எந்தக் குறளிலும் வெற்றியைச் சேர்க்கவில்லை.

ஆனால் ஆள்வினையுடைமை அதிகாரத்தில் ஊழை எதிர்த்து மானுடம் வெற்றி பெற முடியும் என்பதனை,

> "மெய்வருத்தக் கூலி தரும்" (619)

> "ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்" (620)

என்று கூறுதல் அறிக. ஊழ் அனுபவத்திற்கு வருவதற்கும் உயிர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் தொடர்பில்லை. ஊழிற்குக் காரணமான பழைய பழக்கம் அதாவது உழுதகால் வழி உழுதல் போன்ற பழக்க வாசனை காட்டும். கற்றல், கேட்டல், சிந்தித்தல், முதலிய முயற்சிகள் மூலமும், புத்தறிவைப் பெற்றுப் புதிய பழக்கங்களை ஏற்றுக் கொள்வதன் மூலமும், பழைய பழக்கத்தை மாற்ற முடியும். ஊழுக்குக் காரணமான பழைய உணர்வு ஊழ்த்து வெளிப்படுகிறது. உயிர் பெற்றுள்ள பொறி புலன்கள் தன்னியல்பில் சிந்தித்தும், அதைவிடச் சிறப்பாகப் புறத்தே இருந்து புதிய கொள்முதல் செய்தும் ஊழ்த்துவரும் ஊழின் ஆற்றலை அடக்கியும் வெற்றிகாணமுடியும். இதற்குத் தேவை புதியன நாடும் ஆர்வம், தற்சலுகையின்மை, தன்னயப் பின்மை ஆகியனவாம். இந்த உணர்வுகள் மேலோங்கினால் ஊழ் அதற்குள் அடங்கும்; செயற்பாட்டைக்கூட இழந்துவிடும். ஆனால் அது எளிதான காரியமன்று. அதற்கு விலை கொடுக்க வேண்டும். எளிதில் செரிக்காத உணவைச் சுவையூற்றத்தின் காரணமாக உண்டுவிட்டால் கொஞ்சம் வயிற்று வலியைத் தாங்கித்தான் ஆகவேண்டும். ஒரு வேளைக்கு உணவை மறந்து வாயைக் கட்டிப்போடத்தான் வேண்டும். இது நடைமுறைப் பழக்கம்தான். நேற்றைய பழக்கத்தின் வழித் தவறுகளை இன்றைக்குத் திருத்தமுறச் செய்ய வேண்டுமானால், கடுமையான விலை கொடுத்தேயாக வேண்டும். ஊழை மாற்றும் ஆற்றல் நேரிய உழைப்புக்கே உண்டு. அதனால் 'மெய் வருத்தக் கூலி தரும்" என்றார். இந்த இயற்கை நியதி உணர்வுகளுக்கும்

அவ்வழிப்பட்ட ஒழுக்கங்களுக்கும்தான் பொருந்தும். சாதிக்கும், கடவுளுக்கும் செல்வத்திற்கும் ஊழிற்கும் யாதொரு தொடர்பு மில்லை. ஊழின் காரணமாக இன்ன சாதியில் பிறந்தான் என்று கூறுதல் பிழையான கருத்து. அவன் ஒழுகும் ஒழுக்கத்தின்வழி வேண்டுமானால் கீழ் மேலாகும்; மேல், கீழாகும். இத்தனையாண்டுகள் வாழ்தல் என்பது ஊழின்பாற்பட்டதன்று. அஃது உடல்நலம் பேணிய பாங்கையும் பொறுத்தது. ஊழின் காரணமாகப் பணக்காரன் ஆனான் என்பது நெறிமுறை பிறழ்ந்த கொள்கை. ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு மனிதரின் ஏற்பாடே என்பது வெளிப்படை. இந்தத் தீவினையைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். பரம்பரைச் சொத்து உரிமைக்குத் தடை ஏற்பட்டுச் சுரண்டி வாழ்கிற சமுதாயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால் செல்வம் பெறுதற்குரிய ஆகூழ் இன்று ஏழைகளாக இருப்பவர்களுக்கே இருக்கும். இன்றைய செல்வந்தர்களில் பலர் வறுமைக்கு ஆட்படுவர். ஏற்றதாழ்வு உலகியல் நடைமுறையின் பிறழ்வு. செல்வத்தைப் படைப்பதற்குரிய அறிவறிந்த ஆள்வினை பெற்றிருக் கின்றனரா? இல்லையா? என்பதுதான் ஊழ் பற்றிய ஆய்வு. ஆதலால் ஊழியல் தத்துவத்தை உலகியல் முறைப்பிறழ்வு களுக்கு நியாயப்படுத்தக் கூடாது.

## பிறப்பின் தத்துவம்

உயிர்கள், பல்வேறு பிறப்புக்கள் உடையன என்பது வழிவழி வரும் ஒரு கொள்கை. உயிரைப்பற்றிய விளக்கத்தில் உயிருக்குத் தோற்றமும் இல்லை; அழிவும் இல்லை என்று பார்த்தோம். அப்படியானால் பிறப்பு என்பது உயிர் தன்னுடைய நிகழ்கால நோக்காகிய இன்ப அமைதியைப் பெறுவதற்குரிய முயற்சியில் ஈடுபட உடுத்திக் கொள்ளும் ஒன்றே உடல். உடம்பு என்ற சொல்லில் முதல்நிலை 'உடு' என்பது. உயிர் இந்த உடம்பினைப் பொருத்திக் கொள்ளும், உடுத்திகொள்ளும் நிகழ்வுதான் பிறப்பு. தன்னுடைய

நோக்கத்திற்காக உயிர் எடுத்துக்கொண்ட உடம்பு, பல்வேறு காரணங்களால் பயன்படாதொழியும்போது அதை நீக்குதலை இறப்பென்றும் புதிய உடம்பைப் பெறுதலைப் பிறப்பென்றும் அறிக. பொறிகள் உடம்பினைச் சார்ந்தவை; புலன்கள் உயிரினைச் சார்ந்தவை. செயற்படும் கருவிகள் உடலினைச் சார்ந்தவை; இக்கருவிகளை இயக்கிச் செய்விக்கும் அறிவுக் கருவிகள் உயிரைச் சார்ந்தவை. உயிரினைச் சார்ந்த புலன்களும் அறிவுக் கருவிகளும் என்றும் உடலுறுப்புகளாகும்; பிரிக்க முடியாதனவாகும்; அதுவே நுண்ணுடம்பு. திருக்குறள் எழுவகைப் பிறப்பு என்று எடுத்தோதுகிறது.

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து"* (398)

*"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்"* (62)

*"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்*
*விழுமம் துடைத்தவர் நட்பு"* (107)

ஆகிய குறள்கள் நினைவுக்குரியன. 'ஏழு பிறப்பு' என்பது வழி வழி வழக்கத்தில் கூறப்பெறும் ஒரு தத்துவம். ஓர் உயிர், தன் குறைகளினின்று நீங்கி நிறைபெற்று வளர்ந்து இன்ப அன்பினில் நிலைபெற ஏழு தடவை பொதுவாக முயற்சி செய்கிறது என்பது பொதுவிதி; நியதி. ஒன்றிரண்டு கூடுதலும் ஒன்றிரண்டு குறைதலும் நிகழக்கூடும். உயிரின் படிமுறை வளர்ச்சியில் ஆறுவகைப் பிறப்புகளைப் பொதுவாகத் தொல்காப்பியம் கூறும். அவையாவன:

*ஒன்றறி வதுவே உற்றறி வதுவே*
*இரண்டறி வதுவே அதனொடு நாவே*
*மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே*
*நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே*
*ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே*

*ஆறறி வதுவே அவற்றொடு மனனே*
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.*

(தொல். மரபு 27)

படிமுறை வளர்ச்சியில் உயிர் ஓரறிவில் தொடங்கி ஆறறிவுவரை வளர்ந்து அதனைக் கடந்த பெருநிலை எய்துதல் ஏழாவது நிலை. இந்தப் படிமுறைகளை நினைவிற்கொண்டு 'ஏழுபிறப்பு' என்றார்களா? வள்ளுவம் 'எழு' என்றே குறிப்பிடுகிறது. ஆதலால் புதிதாகத் தோன்றி வரும் பிறப்பு என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால், எழு பிறப்பு என்றால் இனிவரும் பிறப்பு என்பது தெளிவாகப் புலப்படுகிறது. திருவள்ளுவர் தெளிவாகவே உயிர், உடலை நீக்கிப் புது உடலைப் பெறும் என்று கூறுகிறார்.

*"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே*
*உடம்போடு உயிரிடை நட்பு".* (338)

குடம்பை என்ற சொல்லுக்கு முட்டை என்றும் கூடு என்றும் இரு வேறு பொருள் கொள்கின்றனர். இப்பொருள் வேறுபாடு அடிப்படைக் கொள்கைக்கு ஒன்றும் பெரிய வேற்றுமை தந்துவிடவில்லை. உடம்பை விட்டு உயிர் பிரிகிறது; பிறிதொரு உடம்பைச் சார்கிற தென்பதுதானே பொருள்! அதுமட்டுமன்று. ஓருடம்பில் நின்று தொழிற்பட்ட உயிர் அந்த உடம்பு எய்த்துக் களைத்துப் போனதால் இறப்பைக் களைப்பு நீக்கத்துக் குரிய உறக்கம் போலவும், உலகியல் அனுபவத்திற்குரிய பிறப்பை உறங்கி எழுவது போலவும் என்று விளக்க,

*"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு"* (339)

என்கிறார். உயிர்க்கு இறப்பு என்பது களைப்பாறும் பணியே தவிர அதுவே முடிவன்று. களைப்பு நீங்கிப் புத்துணர்ச்சி யோடு எழுந்து நடமாடுதலே புதிய பிறப்பு. பல்வேறு பிறப்புகளில் உயிர் வளர்ந்து வளர்ந்து முதிர்ச்சியடைந்து வருவதை உயிரியலில் காண்கின்றோம். சிலரிடத்தில்

இயல்புக்கு மாறான நுண்ணறிவு தொழிற்படுகிறது. சிலரிடத்தில் இயல்பாகவே சான்றாண்மை குடிகொண்டிருக்கிறது. இவையிரண்டும் உயிரின் இயல்பானவையல்ல. அவை எடுத்த பிறப்புக்களில் எல்லாம் ஈட்டியவையே! எடுத்த அந்த ஒரு பிறப்பிலேயே ஈட்டப் பெற்றவையல்ல என்பதும் நமக்குத் தெரிகிறது. பல்கலைக் கழகங்களின் வாயிற்படிக்கே போகாதவர்கள் கூட சீரிய சிந்தனைத்திறனுடனும் செயல் திறனுடனும் விளங்குவதன் அருமைப்பாடு என்னே! முன்பே அவர்கள் கற்றுத் தேடிவைத்திருக்கிறார்கள் என்பதே உண்மை. பலகாலம் சிந்தித்துப் பழகியிருப்பதால் சிந்தனைப் புலன் எளிதில் தொழிற்படுகிறது என்பதுதானே அறிவியல் உண்மை. ஆதலால் திருக்குறள், பலபிறப்பு உண்மையை நம்புகிறது. அதனை மறுத்துரைக்கக்கூடிய மார்க்சியம் தோன்றியுள்ளது. மார்க்சியம் பொருளியல் விஞ்ஞானநூல். ஆயினும் உயிரியல் பற்றிய அறிவியல் உலகம் இன்னமும் தெளிவாக உயிரின் பல பிறப்பு உண்மையை மறுக்கவில்லை. வள்ளுவத்தின் கொள்கை உயிர்கள் பல பிறப்புடையன; அவை பல்வேறு பிறப்புகளில் படிமுறையில் வளர்ந்து வருகின்றன என்பதேயாம்.

## கடவுள் உண்மை

இன்றைய உலகியலில் அடுத்துப் பெரிய விவாதத்திற் குரியது கடவுளேயாம். "கடவுள் இல்லை; இல்லை! இல்லவே இல்லை" என்று கூறி இந்த நூற்றாண்டின் வரலாற்றைத் தலைவர் பெரியார் எழுத முயன்றார். தலைவர் பெரியாரின் பல்வேறு கொள்கைகள் வெற்றி பெற்றிருந்தாலும் கடவுள் மறுப்புக் கொள்கை எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பது ஆய்வுக்குரியது. திருக்கோயில் எண்ணிக்கைப் பெருக்கமும் உண்டியல் பெருக்கமும் இதற்கு எதிரிடையான விடையே தருகின்றன. 'மூலதன'த்தின் முதல் ஆசிரியராகிய மாமுனிவர் கார்ல் மார்க்ஸ் கடவுள் மறுப்புக் கொள்கை உடையவர். பொதுவுடைமைத் தத்துவம் கடவுள் மறுப் பிலிருந்து பிரிக்க முடியாதது. கடவுள் மறுப்புத்தன்மை

யுடைய இந்தப் பொதுவுடைமைத் தத்துவம் உலகில் ஐந்தில் ஒரு பகுதி மக்களைக் கவர்ந்திருக்கிறது; ஆட்சியில் அமர்ந் துள்ளது. இந்திய நாட்டிலும் கூட மத ஆசாரங்களுக்கும் மந்திரங்களுக்கும் பெயர் போன கேரளத்தை இக்கொள்கை பெரிதும் கவர்ந்திருக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் சமய உலகத்திற்குப் புத்தொளி காட்டிய இராமகிருட்டிணர் — விவேகானந்தர் முதலியோர் தோன்றி விளங்கிய மேற்கு வங்கத்திலும் இக்கொள்கை பெருவாரியாக வளர்ந்துள்ளது. அக்கொள் கையை ஏற்பளித்து வாக்களித்துள்ளனர். இவையெல்லாம் கடவுள் உண்டு என்பார் நினைவிற்கொள்ள வேண்டிய வரலாற்றுச் செய்திகள். மக்கள் மன்றத்தில் நிகழும் வரலாற்று நிகழ்வுகள், தத்துவங்கள், கொள்கைகள் தோன்றுதலுக்கும் மாறுதலுக்கும் அல்லது மறைதலுக்கும் அடிப்படையாக அமையும் என்பதை மறந்து விடுதல் கூடாது. இன்றைய நிகழ்வுகள், நேற்றைய வரலாற்றில் வாழ்ந்தவர்களின் தகுதிப்பாட்டினை இயம்புகின்றன. இன்றைய நிகழ்வுகள் எதிர்வரும் வரலாற்றுக்கு உந்துசக்திகள். எதிலிருந்தும் ஒதுங்கி வாழலாம். ஆனால் வரலாற்று நிகழ்வுகள் அவற்றின் பின் நிகழ்வுகள் இவைகளிலிருந்து ஒதுங்கி வாழலாம்; தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தால் அதைவிடப் புத்திசாலித்தனக் குறைவானது வேறொன்றுமில்லை. அது நிற்க, கடவுள் உண்டா? இல்லையா? தெளிவான அறிவு பூர்வமாக உறுதிப்படுத்தக் கூடிய விடையை யாரால் கூற முடியும்? உண்டு என்பார்களும் கண்டு காட்டவில்லை. நம்பிக்கை அடிப் படையிலேயே உண்டு என்கின்றனர். அல்லது, தர்க்கவியல் அடிப்படையில் விவாதித்துச் செல்லும்போது விவாதங்கள் படுக்கும் எல்லையில், அதைக் கடந்து நிற்பதாகக் கூறுகின்றனர். அது ஒருபுறம் இருக்க, இல்லையென்பவர்கள் தாம் எங்கே பார்த்து, எவ்வழிப் பார்த்து இல்லையென்று கூறுகின்றனர்? உலகம் விரிந்தது; பரந்தது; பருமையுடையது; நுண்மையுடையது. ஓர் அணுவிற்குள் ஓராயிரம் கோள்கள்

(நுண் அணுக்கள்) நெருங்கிக் கிடக்கின்றன என்று விஞ்ஞானம் கூறுகிறது. கண்ணுக்குப் புலனாகாத ஓரணுவில் ஆயிரக்கணக்கான அணுத்திரள்கள்; அவற்றிற்கு ஆற்றல் இருப்பதாக அணு அறிவியல் கூறுகிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகச் சிந்தனை எல்லைக்கும், செவிப்புலன் எல்லைக்கும் பாடல்கள் வாயிலாக வந்த நிலவை எட்டிப் பிடிக்கவே இவ்வளவு ஆண்டுகள் ஆகிவிட்டன. கடவுள் நம்பிக்கையுடையவர்கள் கடவுளைப் பற்றிச் சொல்லும் இலக்கணத்தைப் பார்த்தால் அதனை ஆராய்ந்து அறிந்து 'உண்டு' அல்லது 'இல்லை'யென்று எளிதில் கூற இயலாது. "ஐயா, என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" என்பது திருவாசகம். இந்த இலக்கணத்தின்படி வானியல், நிலத்தடியியல் உயிரியல் அனைத்தும் கடைபோக ஆராய்ந்து முடிவுகளைக் கண்ட பிறகுதான் இல்லையென்று கூறுவதை அவர்கள் உறுதிப் படுத்த முடியும். அதற்குரிய அறிவாற்றலை, தகுதியை இன்னும் மானிட சாதி பெறவில்லை. ஆதலால் இங்கொருவர் அங்கொருவர், தாம் அறியாததனாலோ வாழ்க்கையில் ஏற்பட்ட அதிருப்தியாலோ இல்லையென்று கூறியதை நம்பக்கூடாது. கடவுள் இல்லையென்று கூறுவோரில் பெரும்பான்மையோர் உலகியலில் பொருளியலில் உயிர் இயலில் இருக்கும் வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் காட்டி இம்முரண்பாடுகளுக்குக் காரணமாக உள்ள பொருள், கடவுளாக, இருக்க முடியாது என்று கூறி மறுக்கின்றனர். இந்தக் கருத்து கடவுள் உயிர்களைப் படைத்தார் அல்லது தோற்றுவித்தார் என்ற கொள்கையுடைய வளர்ச்சி பெறாத சமயங்களைச் சார்ந்த பிழையான கருத்தால் தோன்றியதாலும், திருவள்ளுவரின் சமயம் உயிர் ஒரு படைப்புப் பொருளன்று, உயிர் இயற்கையாகவே உள்பொருள் என்று கூறுவதால் இந்தக் கொள்கைத் தோற்றத்திற்குரிய களமே இல்லாமல் போகிறது. கார்ல் மார்க்ஸ் கடவுளை மறுப்பதற்குக் காரணம் கடவுள் நம்பிக்கையுடைய ஒரு சில சமயத்தினர் உயிரின் இயல்பினை — ஆற்றலை—

சுதந்தரத்தை மறுத்து உயிர் அப்பட்டமான மையொட்டித் தாள் அல்லது கடவுளின் உயிருள்ள ஒரு விளையாட்டுப் பொம்மை என்று கூறுவதேயாகும். திருவள்ளுவர், உயிரின் திறனையும் அறிவுப்பாங்கினையும் ஆள்வினைத்திறனையும் ஐயத்திற்கிடமின்றி விளக்குவதால் அதற்கும் இடமில்லை. அது மட்டுமன்று. வள்ளுவம் காட்டும் கடவுள் 'வாலறிவ'னேதவிர ஆதிக்க சக்திகளின் தலைவனல்லன். அவன், வழி நடத்துபவனே தவிர, ஆட்டிப்படைப்பவ னல்லன்; அவன் கையூட்டுகளைப் பெற்றுக்கொண்டு, கையூட்டு வழங்கியவர்களுக்குச் செல்வத்தையும் துறக்கத் தையும் வழங்குபவனல்லன்; கையூட்டுத் தரமாட்டாதாரை ஒதுக்குபவனுமல்லன். வள்ளுவம் காட்டும் கடவுள், தூய்மை யான அறிவேயாம். தனக்குவமையில்லாத தன்மையேயாம். எண் குணங்களின் உருவமேயாம். அஃது ஒரு பண்பு. அஃது ஒரு குணம். அந்தத் தன்மையை — பண்பை — குணத்தைத் திரும்பத் திரும்ப உயிர் நினைத்தலின் மூலம் அத்தன்மை களையெல்லாம் தனக்கு உரிமையாக்கிக் கொண்டு வளரும் நெறிதான் வழிபாட்டு நெறி. வழிப்படுதல் (வழிப்படுதல் — வழிநிலை நிற்றல்) என்பது மருவி வழிபாடானது. ஆனால் அகத்தொடு தொடர்பில்லாத பொறிகள் மட்டும் தொழிற்படும் வழிபாடும், அதற்குக்கூட வாய்ப்பில்லாத தரகர் முறை வழிபாடும் நாட்டில் மலிந்தன. சமயத்தின் முறை பிறழ்வு இங்கேதான் தொடங்குகிறது. இம் முறை பிறழ்வு, முறையாகவளர்ந்து நெடியதூரம் விலகி வந்து இன்று கடவுள் மறுப்புக் கொள்கைகளுக்கு இடம் கொடுத்துள்ளது. வள்ளுவம் கடவுள் வாழ்த்தில்,

> "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல" (4)

> "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார்" (6)

> "அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> பிறவாழி நீந்த லரிது" (8)

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (9)

என்ற குறள்கள் நேரிடையான வழிபாட்டு முறையை வலியுறுத்துகின்றனவேயன்றித் தரகர் முறை வழிபாட்டைப் பற்றிக் கூறாமையை உய்த்துணர்க.

பொறிவாயில் ஐந்தவித்தலாவது யாது? அது நுண்ணிய பொருளாக்கமே உடையது. பொறிகள் ஐந்தின் உணர்வுகளை அழித்தல். இயற்கைக்கு முரணான செயல்முறை, முறையற்ற வழியில் அடக்குதல் இயலாது. முறையற்ற வழியில் அடக்க முயன்றால் புறத்தோற்றத்தால் அடங்கியதுபோலத். தோற்ற மளித்து, ஓரோவழி முறைபிறழ்ந்த வழிகளில் மேவிச் செல்லும். எந்த ஒன்றையும் போக்கிடமில்லாது அடைத்து அடக்குதல் இயற்கையறிவியலுக்கு முரணானது; நடைபெறக் கூடியதுமில்லை. அது போலவே அழித்தல் என்பது இயற்கைக்கும் அறநெறிக்கும் இசைந்த கருத்தன்று. அளித்தல் என்ற சொல் பக்குவப்படுத்துதல் என்ற பொருள் தரும். நெல், கிழங்கு முதலியனவற்றைப் பக்குவப்படுத்தும் முறைக்கு 'அவித்தல்' என்பது வழக்கு. அந்த வழக்கை ஒப்பு நோக்குக. சுவைத்துப் பயன்படுத்துவதற்குத் தக்கவையாக இல்லாத பொருள் களைச் சுவைத்துப் பயன் கொள்ளத்தக்கவாறு பக்குவப்படுத்துதலை அவித்தல் என்று கூறுவது வழக்கம். அதுபோல உயிர், பயன்கொள்ளத்தக்கவாறும் அவ்வுயிரைச் சார்ந்து வாழும் மற்றவர்கள் அண்ணித்து நின்று சுவைக்கு மாறும், பயன்படுத்துமாறும் இல்லாமல் கரடு முரடாக இருக்கும் புலங்களையும் பொறிகளையும் பக்குவப்படுத்தி நிறைநலமும் நிறை இன்பமும் பொதுளும் தன்மையதாக மாற்றியமைத் தலே அவித்தல் என்பது. மனிதனின் இந்தக் குணமாற்றச் செயல்முறையை — பண்பாட்டுப் பக்குவமுறையைப் பெற ஆர்வங்களையும் ஆவல்களையும் தன்னை நோக்கியதாக அல்லாமல் உயிர்க்குலத்தை நோக்கியதாக, உயிர்க் குலத்திற்குத் தண்ணளிதருவதாக

விளங்கும் கடவுளை நோக்கியதாக மடைமாற்றம் செய்தலே உரிய வழி.

இறைவன் அல்லது கடவுள் என்பது எல்லா உயிர்களும் இன்புற்றமரும் பெருநிலையின் எல்லையையே குறிக்கும். அப்படியானால் "நற்றாள்", "மாணடி", "அடி", "தாள்" என்றெல்லாம் திருவடிகளை மட்டுமே குறிப்பிடு கிறாரே! ஏன்? பிற்காலத்தில் பொய்ம்மை நிறைந்ததாகவும், மனிதகுலத்துக்குத் தீமை செய்வதாகவும் புகுந்த நால்வருணத் தோற்றத்தின்படி பார்த்தால் திருவடிகள் 'சூத்திரர்'களையே தந்தன; இழி மக்களையே தந்தன என்று கூறுகிறது.

*ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜன்ய; க்ருத:*
*ஊருத தஸ்ய யத் வைச்ய; பத்ப்யாம் சூத்ரோ அஜாயத;*

(புருஷஸூக்தம் 1 : 13)

(இவருடைய முகம் பிராம்மண ஜாதியாக ஆயிற்று; கைகள் க்ஷத்திரிய ஜாதியாகச் செய்யப்பட்டன; இவருடைய தொடைகள் எவையோ அவை வைசிய ஜாதியாக ஆயிற்று; பாதங்களினின்று சூத்திர ஜாதி உண்டாயிற்று.)

உண்மையான சமய அனுபவமிக்க எந்த ஞானியும் இறைவனின் தலையை நினைந்துருகிப் பாடியதில்லை. ஆனால் சூத்திரன் பிறந்ததாகக் கூறப்படும் திருவடிகளையே திருவள்ளுவர் முதலிய சான்றோர்கள் போற்றியுள்ளனர். திருவள்ளுவர் 'தாள்' — திருவடி என்று இறைவனை உருவகம் செய்தது ஒரு மாறிலாத் தத்துவத்திற்குக் கொடுத்த உருவகமேயாகும். உலகைத் தாங்குவது தாள். தாள், உழைப்பின் சின்னம்; தாளாற்றுதல் என்பது உழைப் பியற்றுதல். தாளாற்றித் தந்த பொருளால் வேளாண்மை செய்தல் வேண்டும். வேளாண்மை செய்தலுக்கு 'யான்', 'எனது' என்ற உணர்வுகளைக் கடந்த உழைப்புத் தவம் செய்யும் உத்தமநிலையேயாம். இதுவே வள்ளுவத்தின் தெளிவு!

வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் அது ஆணும் அல்ல; பெண்ணுமல்ல. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக்

கோபுரங்கள், கோட்டைகள் இல்லை வள்ளுவத்தின் கடவுளுக்கு கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை. அது பேரறிவு; தூய்மையான அறிவு; குணங்களின் திருவுரு; இன்பத்தின் திருவுரு; அன்பின் திருவுரு; அறத்தின் அடையாளம்! அஃது ஓரூரில், ஓரிடத்தில் இருப்பதன்று; எங்கணும் நீக்கமற நிறைந்து நிற்பது! உய்த்துணர்வார்க்கு உள்ளத்தின் துணையாய்த் தோழமையாய் நின்று தொழிற் படுத்துவது; வெற்றிகளைத் தருவது; இன்பங்களைத் தருவது. இத்தகைய வள்ளுவத்தின் கடவுள் நெறியை மறுப்பார் யார்? வள்ளுவத்தின் கடவுள் நெறி வையகத்திற்கு உரிமையாக வேண்டும்! மனித குலத்தில் சமய நெறிகளில் மண்டியிருக்கும் புறச் சமயப் புதர்க்காடுகளை அழித்து வள்ளுவத்தின் சமய நெறியை உலகப் பொதுச் சமயமாக்க வேண்டும்.

இன்று, உலகெங்கும் சமய வேறுபாடுகள் மலிந்து காழ்ப்புணர்ச்சிகளைத் தோற்றுவித்திருக்கிறது. சென்றகால வரலாற்றில் சமயம் மனித உலகத்தின் அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் செய்த பணிகள் நினைவிற்குரியன; போற்றுதலுக்குரியன. ஆனாலும் இடையிடையே சமய அமைப்புகள் மக்களிடையே பரப்பிய மூட நம்பிக்கைகளும் சமயநிறுவனங்களுக்கிடையே நிகழ்ந்த போர்களும் அந்த நற்பணிகளை மறைத்து விட்டன. விஞ்சியது சமயநெறிக்குப் புகழும் பெருமையுமல்ல; பழியாகவே அமைந்துவிட்டது. சமய நம்பிக்கையுடையோர் இதனை நினைந்து வருந்த வேண்டியிருக்கிறது. மீண்டும் இந்தத் "துன்பியல் வரலாறு" தொடர்ந்து நிகழாமல் தூய சமய நெறிவழியே சமுதாயத்தை வழிநடத்தி வாழ்விக்க விரும்பினால் மனிதகுல வேறு பாடுகளை, சமய வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளாத வள்ளுவத்தின் சமயம் உலகப் பொதுப்பெருஞ் சமயமாக இடம் பெறச் செய்யவேண்டும். மனித குலத்தின் உரிமைகள் இயற்கையில் அமைந்தவை. அந்த உரிமைகளை நாடுகளின் அமைப்பின் மூலமோ அரசியல்களின் மூலமோ சமய

அமைப்புகளின் மூலமோ, புன்மையான சாதி குல அமைப்புகளின் மூலமோ யாருக்கும் பறிக்க உரிமையில்லை. உயிர்கள் பிறப்பிலேயே ஒத்த உரிமையுடையன.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (972)

இது திருவள்ளுவர் சமயத்தின் உயரிய கோட்பாடு. இந்தக்கோட்பாடு உலகில் இடம் பெற்றால் தான் வெள்ளையர், கறுப்பர், தீண்டத்தகாதவர் என்று மனித குலத்தினைப் பிரித்து ஆட்டிப்படைக்கும் தீமைகள் மறையும். கடவுள் அருச்சனைகளால், ஆராதனைகளால், படையல் களால் திருப்தி செய்யத்தக்கவரல்லர் என்ற வள்ளுவத்தின் கொள்கை இடம் பெற்றால்தான் வாழ்க்கையோடிசைந்த அறிவியல் சமயம் உலகில் வளரும். வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த வழிபாடு என்ற வள்ளுவத்தின் சமயநெறி வெற்றி பெற்றால்தான் சமுதாயத்தில் புரோகிதர்கள் உலா வர மாட்டார்கள்; சமய நிறுவனங்கள் தோன்றா; அவைகளுக் குள் ஆதிக்கப் போட்டிகளும் இரா. வள்ளுவத்தின் சமயம் வெற்றிபெறுமானால் தொண்டு நிறுவனங்கள் எங்கும் தோன்றும்; தொண்டர் குலம் தழைக்கும்; மனிதகுலமும் தழைக்கும். எனவே வள்ளுவத்தின் சமயம் உலகப் பொதுச் சமயமாக மலரும் நாளே மனித குலத்திற்குப் பொற்காலம் படைக்கும் நன்னாளாகும்.

திருவள்ளுவர் தந்த திருக்குறள் ஒரு சமயத்திற்காகத் தோன்றிய நூலன்று. அது சமயச்சார்பற்ற நூல், ஆயினும், மனித குலத்தைச் சிந்தனையில், அறிவியலில், வாழ்க்கையில் வழி நடத்தும் பொழுது திருக்குறட் கொள்கை சமயமாக உருப்பெறுகிறது. வள்ளுவத்தின் சமயம் நெகிழ்ந்து கொடுக்கக் கூடியது; நம்பிக்கையுடன் கூடியது; நல்லெண்ணத்தின் பாற்பட்டது; இயற்கைக்கு இசைந்தது; மெய்யுணர்தலின் பாற்பட்டது; ஒரு வாழ்க்கை முறையாக அமைவது! வள்ளுவத்தின் சமயம் வையகத்திற்கு உரிமையாகுக.

# திருவள்ளுவர் — அரசியல்

## (மூன்றாம் நாள் சொற்பொழிவு)

மனித குல வரலாறு உயிர்ப்புடையது; இடையீடின்றித் தொடர்ந்து நடைபெறுவது; வளர்ச்சி நோக்கிச் செல்வது; மாற்றங்களைத் தரவல்லது. மாறுதல் இயற்கை நியதி. இந்த இயற்கை நியதியின் வழி மனித குல வரலாறு பெற்ற மாறுதல்கள் பலப்பல. சிலபொழுது வரலாறு நெறியல்லா நெறியதனை நெறியென்று கருதித் தடம்பிறழ்ந்து செல்லுதலும் உண்டு. சில சமயங்களில் வரலாற்றுப் போக்கின் எதிர்விளைவுகளைத் தாங்கிக்கொள்ள ஆற்றலில்லாமல் தேங்கி நிற்பதும் உண்டு. இத்தகைய சூழ்நிலைகளில் தடம் பிறழ்ந்த சமுதாயத்தை, நன்னெறியாகிய தடத்தில் நெறிப் படுத்தவும் தேங்கியிருக்கின்ற மனித குலத்திற்கு உந்து சக்தியாக விளங்கி உந்திச் செலுத்தி வழி நடத்தவும் சிந்தனையாளர்கள் உருவாகின்றனர். அங்ஙனம் தோன்றிய சிந்தனையாளர்களில் திருவள்ளுவரும் ஒருவர்.

திருவள்ளுவர், திருக்குறள் என்ற மறையைத் தந்தார். திருக்குறள் தமிழினத்துத் தோன்றலாகிய திருவள்ளுவர் தந்ததாலும், தமிழ் மொழியில் அமைந்ததாலும் தமிழ் மறை ஆயினும் திருக்குறள் உலகந்தழீஇய ஒட்பமுடையது; நாடு, இனம், மொழி, சமயம் முதலிய எல்லைகளைக் கடந்து மனித குலத்தின் மேம்பாட்டையே மையமாகக் கொண்டு விளங்குவது. திருக்குறள் வேற்றுமைகளை விளைவிக்காதவாறு ஒரு நாட்டையோ, ஒரு மொழியையோ, ஓரினத்தையோ, ஒரு கடவுளையோ சிறப்பித்துக் கூறவில்லை.

உலகிலேயே முதன்முதலில் தோன்றிய சமயச்சார்பற்ற உலகந்தழீஇய பொது நூல் திருக்குறளேயாம். அதனால் அது உலகப் பொதுமறை; மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் வளப்படுத்தத் தோன்றிய புதுமறை; பொது மறை. திருவள்ளுவர் சென்ற கால வரலாற்று நிகழ்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் எண்ணிக் குறைகளை நிறை களாக்கும் நோக்கத்துடன் தமது நூலைச் செய்துள்ளார். திருவள்ளுவருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் அவர் கடவுளையே எல்லாமாக நினைந்து நூல் செய்ய வில்லை. திருவள்ளுவர் அரசனை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனாலும் எல்லா உரிமைகளும் அதிகாரங்களும் அரசனுக்கே என்ற கொள்கையை அவர் ஒப்பவில்லை. திருக்குறளின் அனைத்துக் கோட்பாடுகளுக்கும் நீதி சார்ந்த அறமே அடிப்படை.

இன்றைய ஆய்வுக்குரிய பேச்சு, திருவள்ளுவர் காட்டும் அரசியல். அரசியல் மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம்; கொள்கை; அரசியல் என்பது வாழும் முறை (Way of life) அல்லது வாழ்க்கை முறை (Way of living) ஆகும். அஃதொரு சமுதாய வாழ்க்கை முறை. அரசியல் சமுதாய வாழ்க்கைக்கு ஒழுங்கமைதியைத் தருவது. ஒருவருக்கு மேற்பட்ட புலர் கூடி வாழ்வதற்கும் பொருளியல் ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழி வகுத்துத் துணை செய்கிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் திருவள்ளுவர் தோன்றித் திருக்குறள் செய்தார். திருவள்ளுவர் தோன்றிய நூற்றாண்டுக்கு முந்திய நூற்றாண்டுகளில் உலக நாடுகளில் பல்வேறு அரசியல் சிந்தனையாளர்கள் தோன்றியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கன்பூசியஸ், சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், சிசரோ ஆகியவர்கள். கௌடில்யர் செய்த அர்த்தசாத்திரம் வட இந்தியாவில் ஆட்சி நூலாக அமைந்திருந்தது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் திருவள்ளுவருக்கு முன்பு சீரான அரசியல்

கோட்பாடுகளை முறைப்படுத்தி விளங்கும் நூல் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் மிகச் சிறந்த அரசியல் நெறி முறைகள் தமிழகத்தில் விளங்கின. தமிழக அரசுகள் மிகச்சிறந்த பேரரசுகளாக விளங்கின என்பதை வரலாறு மூலம் உய்த்துணர முடிகிறது. முறையான அரசியல் நூல் தோன்றாவிடினும் சங்க காலத்தில் விளங்கிய தமிழறிஞர்கள் தமிழக அரசர்களுக்கு அவ்வப்பொழுது எடுத்துக்கூறிய அறிவுரைகள் இலக்கியங்களாக உருப்பெற்றுள்ளன. ஆக, தமிழக அரசர்கள் சங்ககாலத் தமிழறிஞர்களின் அறிவுரை வழியும், வழி வழியாக வந்த சிறப்புடை மரபுகள் வழியும் நல்லாட்சி செய்தனர் என்று தெரிகிறது.

"நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே
நினவ கூறுவ லெனவ கேண்மதி
அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாசு விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப் பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக் கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தருஉங் கொற்றமு முழுபடை"

"ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயி னீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது

*பகடுபுறந் தருநர் பார மோம்பிக்*
*குடிபுறந் தருகுவை யாயினின்*
*அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே."* (புறம் 25)

அதனாலேயே திருக்குறள் விரிவான அரசியல் கோட்பாடுகளை நடைமுறை விதிகளை எடுத்துக் கூறாமல் பொது நெறிகளை மட்டுமே விளக்குவதாகத் தோன்றியது போலும், அரிஸ்டாடில் போன்றவர்கள் மன்னன் அதிகாரத்திற்கு அரண் செய்யும் வகையிலேயே நெறி வகுத்தனர். அர்த்தசாத்திரமும் அந்நெறியதே. இவை மட்டுமல்ல; மக்கள் உரிமைகளைக்கூட இவர்கள் உறுதிப்படுத்தவில்லை. இனப் பிரிவுகளைப் படைத்து அவ்வழியிலேயே வேறுபட்ட உரிமைகளை வழங்கினர். ஏன்? மக்களுக்கு அடிமை வாழ்க்கையே கூட வழங்கினர். வள்ளுவர் அடிமை வகுப்பு என்பதையே ஒப்புக்கொள்ள வில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

*"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்"* (972)

என்பது குறள். பிறப்பில் உரிமைகள் அனைவருக்கும் சமம் என்பது வள்ளுவர் கண்ட நெறி. பிறப்பில் சாதிகள் இல்லை; பிறப்பிலேயே பணக்காரன் இல்லை; ஏழை இல்லை என்பதாகும். திருக்குறள் முடியாட்சியை ஏற்றுக்கொண்டது. ஆனாலும் முடியாட்சியின் தடையிலா அதிகாரத்தை வள்ளுவம் ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசியல் என்பது ஒரு வாழ்வியல் தத்துவம், கொள்கை, கோட்பாடு. வள்ளுவத்தின் அரசியலுக்கு ஆதாரம் அறமேயாம். திருக்குறள் அரசியலை முறையாக விளக்குகிறது. மனிதகுலப் பொருளியல் ஒழுக்க முறைகளை முறைப்படுத்தி, வளம், வறுமையென்ற வேறுபாடுகளை அகற்றிப் பொருளின் காரணமாகத் தோன்றும் ஒழுக்கச் சிதைவுகளை நீக்கி, நிறையான ஒரு சமுதாயத்தைப்

படைக்கத் தோன்றும் அரசியலுக்குப் பொருளியலே அடிப்படை. அதனால் திருக்குறள் பொருட்பாலில் அரசியல் பேசுகிறது. மனிதன் பிறந்து மொழி பயின்று, கலைஞானம் கற்று, வாழ்வாங்கு வாழ்ந்து, முழுமையுறுவதற்குப் பொருளே துணை செய்கிறது. அரசியலை முறையாக அறிந்து வளர்ந்த மனிதர்களே எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கமுடியும். அறிவியலில், பொருளியலில், அரசியலில் முறையாக வளர்ந்த மனிதர்களே சமயத்துறையிலும் சிறந்து விளங்க முடியும்; மனிதகுலம் நன்னிலையடையும். ஆதலால் "அரசியல் ஒரு சிலரால் ஏற்றுக்கொள்ளத்தக்கது; எல்லார்க்கும் உரியதன்று" என்பது திருவள்ளுவருக்கு உடன்பாடன்று. வள்ளுவர் அரசியலை ஓர் வாழ்வியலாகக் கருதி, அதற்குச் சமுதாய அறத்தை ஆதாரமாக அமைத்தார். தற்கால அரசியலாசிரியர்கள் கருத்தும் இதுவே, ஆகையால் வாழ்வியலில் ஈடுபட்டுள்ள எல்லாருக்கும் அரசியல் உரியது. பொதுவானது, அரசாங்கத்தில் தமக்குள்ள உரிமை, பங்கு கடமை, மற்றவர்களோடு உள்ள தொடர்புகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதற்கு வாழ்வியலாகிய இன்று அரசியலே வழிகாட்டி.

அறம் என்பது மனித வாழ்வில் தீமைகளை அகற்றித் துன்பங்களை விலக்கி இன்பத்தைத் தருவது. இந்த அறநெறி மனித வாழ்வின் படிப்பினைகளிலிருந்தே தோன்றி வரலாற்றுக்கு வளமூட்டுகிறது. இந்த அறநெறிகளில் மனிதகுலம் ஒன்றி நின்று வாழ்வதை உறுதிப்படுத்தத்தான் அரசியல் தோன்றுகிறது; தொண்டு செய்கிறது. அரசியல் தத்துவங்கள் மனித உலக வரலாற்றின் நிகழ்வுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன. சிறந்த அரசியல் நிலவும் நாட்டில் ஒழுங்குகள் நிலவும்; ஒழுக்கங்கள் விளங்கித் தோன்றும்; அமைதி நிலவும்; வாழ்க்கையின் துய்ப்புக்குரியன அனைத்தும் எளிதில் கிடைக்கும்; அறிவுத்துறை மேம்பட்டு விளக்கமுறும், ஆங்குப் பகை ஒடுங்கிப் பண்பாடு விளங்கும். அரசியலின் பயன்

அரசியலை நடத்துபவர்களுக்கன்று; மக்களுக்கேயாம். ஆனால் இத்தகைய உயர்ந்த அரசியல் தத்துவங்களால் வையகம் பெற்ற பயன்களைவிடத் துன்பமே மிகுதியாக அமைந்துவிட்டது. ஏன்? ஆட்சிபுரிவோர்கள் தடம் புரண்டு அதிகாரப் பற்றுடையவர்களாகி ஆட்சி நடத்தியதனா லேயாம்.

> "நாட்டு மாந்த ரெல்லாம் – தம்போல்
> நரர்கள் என்று கருதார்
> ஆட்டு மந்தையாம் என்(று) – உலகை
> அரசர் எண்ணி விட்டார்
>
> காட்டும் உண்மை நூல்கள் – பலதாம்
> காட்டி னார்க ளேனும்
> நாட்டு ராஜ நீதி – மனிதர்
> நன்கு செய்ய வில்லை"

என்ற பாரதி வாக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. ஆயினும் மனிதகுல வரலாறு தொடங்கிய காலம் தொட்டு அரசில்லாமல் நாடுகள் இருந்ததில்லை. அஃது, ஒரு வளர்ச்சிமிக்க சமுதாயத்திற்கு அடையாளம். மதகுரு ஆட்சியில் தொடங்கித் தலைவன் ஆட்சியில் நடந்து முடியாட்சியில் தங்கிப் பின் முடிமன்னர் மதகுரு கூட்டாட்சியில் இயங்கி, யாதொரு ஆட்சியும் பயன் படாமற் போகவே மக்கள் தங்களுக்காகத் தங்களால் நடத்தப்படுகிற மக்களாட்சியை அமைத்தனர். தமிழகத்தைப் பொறுத்தவரை முடிமன்னராட்சி போற்றுதற்குரிய வண்ணமே இருந்தது. இங்கிலாந்து, பிரெஞ்சு நாட்டு மன்னர்களின் ஆட்சியை நோக்க ஆயிரம் மடங்கு தமிழ் மன்னர்களின் ஆட்சி விழுமியது. உலக அரசியல் வரலாற்றிலேயே நீதிக்காகத் தன் உயிரையே கொடுத்த தமிழ்நாட்டு அரசர்கள் போல் யாண்டும் இல்லை. ஆதலால் நல்ல முடியரசு திகழ்ந்த நாட்டில் தோன்றிய திருவள்ளுவர் அறத்தோடு கூடிய முடியாட்சியையே ஏற்றுக்கொள்கிறார். திருக்குறள் காட்டும்

அரசின் தலைவன் முடிமன்னனே. திருக்குறள் அரசனை ஏற்றுக் கொண்டாலும், மற்ற நாடுகள் அரசனை ஏற்றுக்கொண்ட முறைக்கும் இதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. உலக நாடுகளில், அரசனைக் கடவுளின் பிரதிநிதி என்றும், அரசனின் உரிமை கடவுளால் வழங்கப்பெற்றது என்றும், அவனுடைய ஆணை கடவுளின் ஆணை என்றும் நம்பிய நாடுகள் உண்டு. இங்கிலாந்து நாட்டில் (Divine Theory of Right) சிறப்பான இடம் பெற்றதால் ஏற்பட்ட அரசியல் கலகங்கள் நினைவிற் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகளாகும். திருக்குறள் அரசனைக் கடவுளின் பிரதிநிதி என்று நம்பவுமில்லை; ஏற்றுக் கொள்ளவுமில்லை.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (388)

என்று திருக்குறள் பேசுகிறது. இத்திருக்குறளை அணுகி நோக்குபவர்க்கு அரசனை இறைவன் என்று போற்றுதல் திருவள்ளுவருக்கு உடன்பாடு இல்லை. "இறையென்று வைக்கப்படும்" என்பது ஒரு உபசார வழக்கேயாம். செங் கோன்மையின் காரணமாக இறை இடத்தில் மக்களால் வைக்கப்பெற்றுப் போற்றப்படுதல் என்பதே கருத்து. குடிமக்கள் அரசை அவாவித் தழுவி வாழவேண்டும் என்ற நிலையில்தான் பல அரசுகள் விளங்கின. விளங்குகின்றன. அரசை மக்கள் தழுவி வாழவேண்டியதில்லை; அரசுதான் மக்களைத் தழுவி நிற்கவேண்டும் என்று வள்ளுவம் வழி நடத்துகிறது. அரசை மக்கள் தழுவி வாழும் நெறி சிறந்த அரசியல் நெறியாகாது. அரசைத் தழுவி வாழ்ந்தால்தான் வாழ்வு நடக்கும் என்றால் அது கொடுங்கோன்மை. குடிமக்களைத் தழுவி நிற்கும் அரசில், மக்கள் உரிமையுடையவர்கள். மக்கள் நலனை அரசு நாளும் போற்றுகிறது; வளர்க்கிறது; பாதுகாக்கிறது. ஆங்குப் பொதுமை நிலவும்; செங்கோன்மையும் நடுவு நிலையும்

உடைய நல்லாட்சி அமையும். ஆட்சியைத் தக்க அமைச்சர்களின் ஆலோசனைப்படி பெரியோரின் துணைகொண்டும் பெருமைக்குரியவாறு ஆட்சியை நடத்தவேண்டும். இது வள்ளுவம் ஆட்சிக்கு அமைத்த இரண்டு பாதுகாப்பு ஆகும். அரசை — அரசின் நடைமுறைகளை விமர்சனம் செய்ய வள்ளுவம் உரிமை வழங்குகிறது. அரசின் தவறுகளை எடுத்துக் கடிந்து கூறத்தக்க அமைச்சர்களைப் பெறாதுபோனால் அந்த அரசு பகைவரின்றியே அழியும் என்றும் கூறுகின்றது.

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்." (448)

ஆம். இடித்துக் கூறுதல் என்பது தடம்புரண்ட ஆட்சியாளரைத் தடுத்து நிறுத்தி உரிய தடத்திற் செலுத்து வதேயாகும். அங்ஙனம் எடுத்துக்கூறுதல் செவிக்குச் சுவை யில்லாமல் இருக்கலாம். ஆயினும் ஆட்சியாளர்கள் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். அப்படித் தாங்கினால் தான் தரணியைத் தாங்கி ஆட்சி நடத்த இயலும் என்பது வள்ளுவத்தின் அரசியல் முடிவு.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" (389)

என்பது திருக்குறள். ஏன்? முறையாக நடைபெறாத ஆட்சியை மாற்றலாம்; மாற்றமுடியும்; ஆட்சியாளர்கள் ஆட்சியை இழப்பர் என்று திருக்குறள் அரசியல் ஆட்சி மாற்றத்திற்குரிய உரிமையையும் வழங்குகிறது.

"கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு". (554)

வள்ளுவம் காட்டும் அரசு குடியாட்சி தழுவிய முடியாட்சியாகும். இங்கிலாந்து நாட்டில் இன்று நிலவும் குடியாட்சி முறை தழுவிய முடியாட்சியை நினைவில்

கொள்க. பண்டையத் தமிழக ஆட்சியில் முறைப்படுத்தப் பெற்ற பாராளுமன்றங்கள் இல்லை. ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற அமைப்புத்தானிருந்தன. சங்ககாலச் சான்றோர்கள் பாராளுமன்றங்கள் செய்த பணியைவிடச் சிறப்பான பணியை அரசியலுக்குச் செய்துள்ளனர். அவர்கள் அரசுக்கு எடுத்துக்கூறிய அறிவுரைகள் இன்றைக்கும் பயனுடையன. அரசை நடத்த நிதி தேவை. நிதியை மக்களிடத்தில் வரியாக வசூலிப்பதென்பது பொதுவான அரசியல் நியதி. ஆட்சிமுறை; இங்ஙனம் வரி விதித்து வசூலிப்பதில் வரியின் மிகுதி, வரியை முறையாக வசூலிக்காமை ஆகிய குற்றங்கள் அரசிடம் கண்ட பொழுது.

"காய்நெல் லறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே"

(புறம் 184)

என்று பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பிக்குச் செவி யறிவுறூஉவாக இடித்துரைத்தமை காண்க, குடி மக்களின்வருவாயில் ஆறில் ஒரு பங்கை அரசு வரியாகப் பெறலாம் என்று திருக்குறள் உரையாசிரியர் கூறுவர், ஆனால் திருக்குறள் குடிமக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை, வரியின் அளவை அறுதியிட்டுக் கூறவில்லை. செப்பமான அரசியல் நூல் செய்த திருவள்ளுவர் வரி — வரியின் அளவுபற்றிக் குறிப்பிடாதது ஏன்? அரசிற்குரிய

நிதியைப் பற்றிக் கூறுமிடத்திலும் வரியைப் பற்றிய குறிப்பு இல்லை. சுங்கம் வசூலிக்கும் முறை கூறப்பெற்றுள்ளது.

"உறுபொருளு முல்கு பொருளுந்த னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (756)

என்ற திருக்குறள் கருத்து அறியத்தக்கது. நாட்டின் குடிமக்கள் அவரவருடைய பொருளியல் தகுதிக்கேற்றவாறு அவர்களே வலிய அரசிற்குரிய வரியைச் செலுத்த வேண்டும் என்பதே வள்ளுவத்தின் கொள்கை,

ஏனெனில் ஆட்சியுரிமையையும் படைக்கலத்தையும் பெற்றிருக்கும் அரசன், மக்களிடத்தில் பொருளை இரப்பது போலக் கேட்டாலும் அது கொடுமை என்று வள்ளுவம் தெளிவாக வரையறுத்துக் கூறுகிறது, இரப்பவன் அரசனாக இருப்பதால் இரப்பதற்காகக் கொடுக்காமல் போனால் அரசால் என்ன தீங்கு விளையுமோ என்றஞ்சி மக்கள் கொடுப்பார்கள். அது கொடுமையிலும் கொடுமை என்பது வள்ளுவத்தின் கருத்து.

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" (552)

என்பது திருக்குறள். இன்று இந்தக் கொடுமை மலிந்திருக் கிறது. பிறிதொரு பார்வையில் அரசன் வேண்டுகோளின் மீது பணம் கொடுப்பவர்கள் அரசை — அரசின் எந்திரத்தை நடுநிலை பிறழ்ந்த முறையில் தங்களுடைய பொருளாக்கத்திற்கும் தங்களோடு இசைந்து வாராதாரை ஒறுத்தலுக்கும் பயன்படுத்துவர். இதன் மூலம் அரசின் செயல்முறை பிறழும். இன்று இம்முறை பிறழ்வுகளின் மூலம் தான் இந்தியநாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து பணவீக்கமும் அவ்வழி விலை ஏற்றங்களும் ஏற்பட்டு மக்களைத் துன்புறுத்துகின்றன என்பதை மறுப்பார் யார்? அதோடு திருக்குறள் நின்றுவிடவில்லை, நல்லரசு இல்லாத

நாட்டில் வறுமையைவிடச் செல்வம் துன்பம் தரக்கூடியது என்றும் கூறுகிறது.

> "இன்மையின் இன்னா(து) உடைமை முறைசெய்யா
> மன்னவன் கோல்கீழ்ப் படின்." (558)

இதன் பொருள் என்ன? முறைகேடான அரசு தகாத வழிகளில் பொருளுடையாரைத் துன்புறுத்திப் பொருளைக் கொள்ளும் என்பது தானே! அரசு, குடிமக்களிடத்தில் பொருளைக் கேட்டுப் பெறுவதை வள்ளுவம் தடை செய்வதால், மக்களே அரசுக்குரிய வரியை வலிய வழங்க வேண்டும் என்பது உய்த்துணரப்படுகிறது.

> "பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
> இறையொருங்கு நேர்வது நாடு" (733)

என்ற குறள் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

அரசு, குடிமக்கள் இடையில் உள்ள பொருளியல் ஒழுங்கு முறைகளைக் கண்டோம். குடிமக்களுக்கு என்ன நெறிமுறைகளை வள்ளுவம் கூறுகிறது? வள்ளுவம் காட்டும் அரசு குடிமக்களைத் தழுவிய முடி அரசு! ஆட்சி, சிக்கலின்றி இயங்குவதற்காக ஒரு தலைவன் ஆட்சியில் அமர்ந்துள்ளான். ஆனாலும் ஆட்சியின் பொறுப்புகள் அந்த நாட்டின் மக்கள் அனைவரிடமும் பகிர்ந்தளிக்கப்பெற்றுள்ளன என்றே கருத வேண்டும். 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற பாரதியின் வாக்குக்குரிய பொருளும் இதுவே. ஆதலால் அரசியலில் சொல்லப் பெற்றுள்ள அதிகாரங்களில் மிகச் சிலவே ஆட்சித் தலைவனுக்கு உரியனவாக உள்ளன. மிகப்பல ஆட்சியை நடத்தும் அரசனுக்கும், அவனுடைய குடிமக்களுக்கும் பொதுவானவை. மக்களின் இயக்கத்திற்கும் பொறுப்புகளை நிறைவேற்றும் உணர்வுக்கும், முயற்சிக்கும் அரசு மறைமுக மாகத் தூண்டுகோலாகவும் துணை நிற்பதாகவும் அமைவதால் பொதுவாகக் கூறப்பெற்றன. செங்கோன்மை

(அதி. 55) கொடுங்கோன்மை (அதி. 56) வெருவந்த செய்யாமை (அதி. 57) கண்ணோட்டம் (அதி. 58) ஒற்றாடல் (அதி. 77) படைச்செருக்கு (அதி. 78) ஆகிய அதிகாரங்கள் அரசுக்கே யுரியன. மற்றவை அரசவைக்கும் மக்களுக்கும் உரியன. ஆதலால் "பொருள் செயல் வகை" என்ற அதிகாரத்திலும் வேறு சில அதிகாரங்களிலும் சொல்லப்படும் பொருள் செய்யும் நெறியும் முறையும் குடிமக்களுக்கும் உரியவை, சொத்துரிமைபற்றித் திருக்குறள் அரசியல் என்ன கூறுகிறது? மனிதகுல வரலாற்றில் தொன்மைக் காலத்தில் பொது வுடைமை முறையும் பின் தனி உடைமையும் அதன்பின் தனி உடைமை பொது உடைமை ஆகிய இரண்டும் கலந்த கலப்புப் பொருளாதாரமும் தோன்றிச் செயல்பட்டு வருகிறது. கார்ல் மார்க்ஸ் — தனி உடைமைச் சமுதாயம் மனித குலத்தின் முன்னேற்றத்திற்கும் ஒழுக்கத் திற்கும் அமைதிக்கும் இடையூறாவது என்று கூறியுள்ளார். வரலாற்று உண்மைகளையும் — மானிட சாதியின் உயர்வு — நெகிழ்வுகளையும் கற்றறிவார்க்கு மார்க்சியம் முரண்பட்ட தன்று; உடன்பாடுடையதேயாம். அணுகுமுறைகளில் — நடைமுறைகளில் மாற்றம் ஏற்படலாம். தவறு இல்லை. முதலில் உடமை என்றால் என்ன? பொருள் என்றால் என்ன? பொருள் இருவகைப்படும். ஒன்று தனிநிலையில் மனிதன் துய்த்து மகிழ்தற்குரிய உடைமைகள் பொருள்கள் (Personal Property) ஆகும். பிறிதொன்று மனிதன் அறிவையும் உழைப்பையும் பயன்படுத்திப் பொருள் உற்பத்தி செய்வதற்குரிய அடிப்படை உரிமைகள் அதாவது உற்பத்திக் கேந்திரங்கள் (Private Property) ஆகும். இவ்விரண்டில் முதலாவதாக உள்ள உடைமைகளை மனிதர்கள் தமக்கு உரிமையாகப் பெறுவதிலும் அனுபவிப்பதிலும் அவர் களுடைய வழி வழி தலைமுறையினருக்குக் கொடுப்பதிலும் தவறில்லை; இரண்டாவது வகையினதாகிய உற்பத்திக் கேந்திரங்களைத் தனி மனிதர் உரிமைப்படுத்திக் கொள்ளுதல்

நன்றன்று. பொருள் என்றால் என்ன? நிலம், தொழிற் சாலைகள் ஆகிய உற்பத்திக்கேந்திரங்களையும் பணத்தையும் பொருள் என்று ஏற்கவில்லை. பொருள் என்பது மனிதகுலம் உண்டு, தின்று, உடுத்துத் துய்த்து மகிழ்வதற்குரிய பொருள்களேயாம். இதனை,

> *"............................................................ யாஅம் இரப்பவை*
> *பொருளும் பொன்னும் போகமுமல்ல..............."*
>
> (பரிபாடல் 5, 78, 79)

என்னும் பரிபாடல் அடிகளில் பொருளும் பொன்னும் பிரித்து ஓதப்பெற்றுள்ளது காண்க. திருக்குறள்,

> *"பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை"* (247)

என்று கூறி இருப்பது அறிக. இங்குப் பொருள் என்பது மனித குலத்தின் நுகர்வுப் பொருள்களையே குறிக்கும். உணவும், தண்ணீரும் போன்ற பொருள்கள் இல்லை யானால் உலகில் வாழ்தல் இயலாது, ஆதலால் இவ்வுலகம் இல் என்றார், *"செய்க பொருளை" (குறள் 759)* என்று வள்ளுவம் ஆணையிடுகிறது. பொருள்களின் மாற்றுப் பதிவுகளாக விளங்கும் நாணயங்களை அரசு மட்டுமே அச்சடித்து வழங்க முடியும். ஒவ்வொரு குடிமகனும் நாணயங்களைச் செய்தால் எது நாணயமான நாணயம்? எது நாணயமற்ற நாணயம் என்பது தெரியாமற் போய்க் கறுப்புப் பணம், கணக்கில் வாரா மூலதனம் சிலரிடத்தில் குவிந்து நாட்டை அழிக்கும். ஆதலால் செய்க பொருளை என்பதற்கு உண்டு தின்று உடுத்து மகிழ்வதற்குரிய பொருள்களைச் செய்து குவிப்பா யாக என்றே பொருள் கொள்ள வேண்டும்.

மனித குலத்திற்குத் தனி உடைமை உரிமையைத் திருக்குறள் வழங்கவில்லை. திருக்குறள் பொது உடைமையே ஏற்றுப் போற்றியுள்ளது. வள்ளுவம் பல்வேறு உடைமைகளை வகுத்துக் கூறியுள்ளது. ஆனால் பொருளுடைமை என்று ஓர்

அதிகாரம் செய்யவில்லை—ஏன்? பொருளியில் பற்றிய கருத்துக்களைப் பொருளுடைமை என்று பேசாது, "பொருள் செயல் வகை" என்று கூறுவதின் விளக்கம் என்ன? பொருள் இயற்கையில் வந்து அமைவதன்று. பரம்பரையாகவும் கிடைக்கக்கூடாதது. பொருள் செயற்பாலதாகிய முயற்சியின் பாற்பட்டது என்பது தெளிவு. அது மட்டுமின்றி "ஊக்க முடைமை" அதிகாரத்தில் "உள்ளம் உடைமை" என்று கூறி உழைக்கும் உள்ளமே உடைமை என்றும் கூறி உறுதிப்படுத்துகிறது. மனிதனுக்குரிய செல்வம் அவனுடைய அறிவு உழைப்புக் கரங்களின் வழி வரவேண்டும் என்பது தான் இயற்கை நியதி; அரசியல் நெறி, உடைமைகள் பரம்பரையாக வருவதை வள்ளுவம் ஏற்கவில்லை; அதுமட்டுமல்ல. ஒருவருடைய உழைப்பின் பயன் இன்னொருவருக்கு உடைமையாவதையும் வள்ளுவம் மறுக்கிறது. அதனால் ஒவ்வொரு குடிமகனையும் உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும் என்றே திருக்குறள் ஆற்றுப் படுத்துகிறது, "உள்ளம் உடைமை உடைமை", "செய்க பொருளை", "தாளாற்றித் தந்த பொருள்" என்ற குறள்வரிகள் நினைவுகூரத்தக்கன. ஒருவர் உழைப்பிலிருந்து மற்றொருவர் முறைகேடாகப் பொருள் செய்து வாழ்தல் பழித்தொடர் புடையன என்று இழித்துக் கூறி மறுக்கிறது. இதனை,

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (44)

"சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று" (660)

என்னும் குறள்கள் வழி அறிக. பொருள் செய்யும் முயற்சியில் பழி எது? செல்வத்தை உற்பத்தி செய்தவனுக்கு உழைப்புக்கும் உற்பத்திக்கும் ஏற்பப் பங்களிக்காமை, பழியாகும். நெறிமுறை பிறழ்ந்து வாழும் ஒருவன் செல்வத்தைக் குவித்து வைத்துள்ளான் நாளும் உழைத்து வாழும் செந்நெறியில்

நிற்கும் ஒருவன் வறுமையில் அல்லற்படுகிறான். இந்த முரண்பட்ட காட்சி அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது. இந்த முரண்பட்ட நிலை ஏன்? இதற்குத் திருக்குறள் தந்துள்ள விடை அருமையானது; சிந்தனைக்குரியது; செயற்பாட்டிற் குரியது. இம் முறைபிறழ்வு — இயற்கை; நியதி; கடவுளின் செயல்; முற்பிறப்பின் பயன் — என்றெல்லாம் திருக்குறள் சமாதானம் கூறவில்லை; முறைபிறழ்வை நியாயப்படுத்த வில்லை. இந்த முரண்பாட்டில் நியாயமில்லை; விதிகள் இல்லை. கடவுளுக்குச் சம்மதமில்லாதது. ஆதலால் முரண் பட்ட நிலையினை ஆராய்ந்து சோதனை செய்க. முறைப் படுத்துக என்றே குறள் கூறுகிறது.

> *"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
> *கேடும் நினைக்கப் படும்"* (169)

என்பது குறள். நினைக்கப்படும் — ஆழமான பொருட் செறிவுடைய சொல். உழைப்பின் வழியதாகவே செல்வம் வருதல் வேண்டும். இது பொது நியதி; பொதுவுடைமை விதி; பொருள் வளர்ச்சிக்குரிய விதியும் கூட, ஆதலால் செல்வத்தை உற்பத்தி செய்துவரும் உழைப்பாளிகளை வள்ளுவம் வாழ்த்துகிறது; உழைப்பாளிகளுக்குப் புகழ்ப் பரணி பாடுகிறது. உழைப்பாளிகள் அல்லாதவர்களை வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழுது உணவு வாங்கி உயிர் பிழைப்போர் என்பது போலக் கொச்சைப்படுத்திப் பேசுகிறது.

> *"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
> *தொழுதுண்டு பின்செல் பவர்"* (1033)

என்று கூறுகிறது. மேலும் திருக்குறள் தோன்றிய காலத்தில் உழவுத் தொழிலே பெரிய தொழில், திருக்குறள் நிலவுடைமை உரிமைபற்றிக் கூறுவது ஆய்விற்குரிய செய்தி. நிலத்தில் உழுது மனித உலகம் உண்டு மகிழக்கூடிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து அளிக்கும் உழைப்பாளிகள் உழவர்கள்.

உழவர்களுக்கும் அவர்கள் உழும் நிலத்திற்கும் இடையில் உள்ள உறவு எப்படி அமையவேண்டும் என்பதைத் திருக்குறள் அழகாகக் கூறியுள்ளது. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவுபோல அமைய வேண்டுமாம். இது வள்ளுவத்தின் கருத்து. வீடு நோக்கி வராத தலைமகனுடன் தலைமகள் ஊடிநிற்பாள்; அதுபோல நாள்தோறும் விளை நிலத்திற்கு வராத நில உரிமை யுடையானை நோக்கி நிலமகளும் ஊடிநிற்பாள்; இந்த ஊடலால் விளைபொருள் குன்றும் என்று எச்சரிக்கை செய்கிறார். விளைபொருள் குன்றும்பொழுது நிலம் வளமின்றிக் களர் நிலமாகும். உரியார் காணாத நிலம் எல்லாம் களர் நிலம் ஆயிற்றுப்போலும். நாள்தோறும் நிலத்தின் பக்கம் வாராதார் நில உரிமை பெறுதற்கு உரியரல்லர். நிலத்தை ஒருவர் உரிமையாக வைத்துக் கொண்டு அதைக் குத்தகைக்கும் வாரத்திற்கும் விடுதல் கூடாது என்று குறள் நெறி கூறுகிறது. இந்நூற்றாண்டில் பொருளியல் வல்லுநர்கள் கூறும் (Absentee Landlord) என்ற கொள்கை வள்ளுவம் கண்டு காட்டிய கொள்கை யாகும். ஆதலால் வள்ளுவம் காட்டும் பொருளியலில் அவரவர் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப உழைத்து, உரிய பயன்களைப் பெற்று வாழவேண்டும் என்ற நியதியே வற்புறுத்தப் பெறுகிறது.

உற்பத்தியாகும் பொருள்களை முறையாகப் பங்கீடு செய்வது என்பது பொருளியலின் விதி. செல்வம் பங்கீடு இல்லாத நாட்டில் வறுமை — வளம் என்ற வேறுபாடு இருக்கும். அவ்வழி ஒழுக்கங்கள் சிதையும்; அமைதி குன்றும். பொருள் பங்கீடு முறையை நடைமுறைப் படுத்துதல் அரசின் ஒரு நீங்காத கடமையாகும்.

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு"*

(385)

என்பது குறள். பொருட் செல்வத்தை வகுத்தளித்தல் என்பது அரசின் தலையாய பணி; கடமை. இந்தப் பணி செம்மையாக நடைபெறாத நாட்டில் சிலர் ஆரத் துய்ப்பர்; பலர் நல்குரவால் வாடுவர். முறையான பங்கீட்டு முறை உள்ள நாட்டில் தான் செல்வத்தை உற்பத்தி செய்தற்குரிய கிளர்ந்தெழு எழுச்சியும், உற்பத்திப் பெருக்கமும், ஒழுக்க நெறிக்கோட்பாடுகளும், அரசின் விதிமுறைகளை மீறாத குடிகளும் அமைய முடியும். பொருளை வகுத்தளிக்கும் வழியில் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். தேவைக் கேற்ற ஊதியம் என்ற சமநிலைச் சமுதாயம் அமையத் துணை செய்யும். உழைத்தற்கியலாத உடல் ஊனமுற்றோர் முதியோர் ஆகியோர் பேணப்பெறுவர். மேலும் புதிய பொருள்களை உற்பத்தி செய்யப் புதிய திட்டங்கள் தயாரிக்கப்பெற்று அத்திட்டங்களின் நிறைவேற்றுப் பணிக்கும் நிதி ஒதுக்கப்பெறும். இன்று பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள குறை, பொருட் பங்கீட்டுமுறை சீராக நடைமுறைப்படுத்தப் பெறாததேயாம். வல்லவர்களும், அரசின் கடைக்கண் பார்வையில் குளிப்பவர்களும் அரசு உறுப்புகளுக்கு இரைபோட்டு இங்கிதமாக நடக்கத் தெரிந்தவர்களும் கோடி கோடியாக அடுக்கி எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அதேபோழ்து, அறுபது விழுக் காட்டுக்கும் மேற்பட்ட மக்கள் ஒரு வேளை உணவுகூட உறுதியாகப் பெற முடியாத நிலையில் அலமருகின்றனர். இது குறித்து "எதிர் காலங்களுக்கிடையே உராய்வுகள்" பற்றி ஆராய உலகளவில் அமைத்த குழுவின் "ஆய்வறிக்கை" இந்திய மக்களில் சரிபாதி பேர் கொடிய வறுமையில் உழலும் காட்சியை 20 ஆண்டுகளில் காணலாம் என்று கூறியுள்ளதை அறிக. இந்த நிலையில் 1955ஆம் ஆண்டிலிருந்து "சோஷலிச பஜனை" பல்லவி அனுபல்லவியாகப் பாடப்பெற்று வருகிறது. யாதொன்றும் நடந்தபாடில்லை. சுரண்டல் பொருளாதாரமே வளர்கிறது. சில தர்மச் செயல்கள் கடன்

வழங்குதலும், குடியிருப்புக்கள் அமைத்துத் தருதலும் வாழ்க்கையை வளர்த்துவிடா. ஏழை மக்களைப் பொறுத்த வரையில் இன்னும் விடியவில்லை. அதாவது நள்ளிரவில் சுதந்திரம் வந்தது. அந்தச் சுதந்திரத் தேவியின் ஒளிக் கற்றைகள் குடிசைகளில் வீசவில்லை; மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் பக்கமே வீசுகிறது. இந்த நிலை மாற வள்ளுவத்தின் சமநிலைப் பொருளியல் கொள்கை நடை முறைப்படுத்தப்பெற வேண்டும். பொருளாதார சமத்துவம் இல்லாத அரசும் சமுதாயமும் அல்லலுறுதல் கண்கூடு. இங்ஙனம் அல்லலுறுதல் தவிர்க்க முடியாதது.

ஒரு நாட்டின் குடிமக்கள் ஒழுங்கு முறைகளின் வழி கடமைகளை இயற்றுதல் வேண்டும். அவ்வழி ஒழுக்க நெறியில் நிற்கும் பண்பும் தேவை. ஒழுக்கமுடைமையே குடிமைப் பண்பின் இலக்கணம். தாமாக ஒழுக்க நெறியை மேற்கொள்ளுதல் அரிது. அப்படியே ஒரோவழி முயன்றாலும் சூழ்நிலை நல்லொழுக்கத்துக்கு இசைந்ததாக அமைவது இல்லை. நாட்டின் அரசு குடிமக்கள் நல்லொழுக்கத்தை ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு சூழலை உருவாக்கி வழி நடத்தவேண்டும். இதனைப் புறநானூறு 'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' என்று கூறுகிறது. அரசின் நடைமுறைகளும் சமுதாயத்தின் சூழலும்தான் ஒழுக்க நெறிக்குரிய அடிப்படைத் தேவை. அரசு குடிமக்களின் குற்றங்களைக்கண்டு தண்டம் வழங்குவதற்கு முன்பு ஆராயவேண்டும். அக்குற்றங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த தன் ஆட்சியின் குற்றங்களை ஆராய்ந்து கண்டு கொள்ளவேண்டும். அவ்வண்ணம் ஆராய்ந்தறிந்து கொண்டு ஆட்சியின் குற்றங்களை நீக்கிக் கொள்ளுதல் அரசுக்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது என்று கூறுகிறது.

*"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
*என்குற்றம் ஆகும் இறைக்கு"* (436)

என்பது குறள். குடிமக்களிடத்தில் அழுக்காறு, அவா, வெகுளி, பகை, வெஃகுதல் முதலிய ஒழுக்கக் கேடுகள் தோன்றுதற்குரிய களம் எது? ஒரு நாட்டில் வாழும் மக்களிடையில் அருவருக்கத் தக்கவாறு வளம் — வறுமை என்ற வேறுபாடுகள் நிலவுதல் தானே? பாவேந்தன் பாரதிதாசன்,

> "பொருளாளி திருடர்களை விளைவிக் கின்றான்
> பொதுவுடைமையோன் திருட்டைக் களைவிக் கின்றான்"
> (பாண்டியன் பரிசு இயல் 17–2)

என்று கூறியதையும் நினைவில் கொள்க. ஒழுக்கக் கேடு திடீரென்று தோன்றுதல் இயற்கை அன்று; தோன்றாது. மனிதர்கள் நல்லவர்களாகவே பிறக்கிறார்கள். சமுதாய அமைப்பு அவர்களைக் கெட்டவர்களாக்குகிறது.

> "நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
> இனத்தியல்ப தாகும் அறிவு" (452)

என்ற குறள் எண்ணத்தக்கது. கள்ளுண்ணல் கூடாது. கள்ளுண்பது ஒழுக்கக்கேடு. திருக்குறள் கள்ளுண்ணாமை என்றே ஒரு அதிகாரம் பெற்றுள்ளது. ஆனால் மதுவிலக்கு வெற்றி பெறத்தக்க சமுதாய அமைப்புத் தோன்றாமல் அமையாமல் மதுவிலக்கு வெற்றி பெறாது. மாறாகச் சிறைச்சாலைகளே நிறையும். உடல் உழைப்பாளிகள் தமது உழைப்பில் செலவாகும் சக்தியைத் திரும்பப் பெறத்தக்க நிலையில் ஊட்டச் சத்துள்ள உணவு கிடைப்பதில்லை. ஊதியம் குறைவு; குடும்பமோ பெரிது. பெரிய குடும்பம் வேறு அமைதியைக் கெடுக்கிறது. செலவழிக்கப்படுகிற சக்தி திரும்ப ஈடுசெய்யப்பெறாத நிலையில் சோர்வு களைப்பு அவர்களை வருத்துகிறது. அவற்றைத் தற்காலிகமாகவேனும் மாற்றிக்கொண்டு மறக்கலாமா? தூங்கலாமா? என்று எண்ணுகின்றனர்; குடிக்கின்றனர். குடியின் பின் விளைவு உடல் நலத்தைக் கெடுக்கும் என்பதை அவர்கள்

உணர்வதில்லை. வளமான வாழ்வு பெறாதவர்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். சிந்திக்க முடிவதில்லை. அவர்களுக்குத் தற்காலிக நலன்களே முக்கியம். அது அவர்கள் குறையன்று. சமுதாய அமைப்பு முறை அவர்களை அப்படி உருவாக்கி உள்ளது. சமுதாய அமைப்புக் காரணமாகச் சிலர் மனஅமைதி இழக்கின்றனர். அவர்கள் தீவிரமாகச் சிந்தித்து முயன்று சூழ்நிலைகளை மாற்றிக் கொள்ளாமல் மனக்கவலையை மாற்றிக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாதவர்கள்; உணர்ச்சி வசப்படுகிற வர்கள். சமுதாய அமைப்பு உணர்ச்சிக்குத் தீனி போடுகிறது. அது ஆறுதல் தருவதில்லை; அமைதியைத் தருவதில்லை; பழித்துக் கூறும்; தூற்றும். அது வளர்ச்சியடையாத சமுதாய இயற்கை; அச்சமுதாயத்தினர் பேச வேண்டுவன பேச மாட்டார்கள்; தத்தம் மனத்தளவே பேசுவார்கள். இவ்வாறு பாதிப்புக்கு ஆளானவர்கள் மனவமைதியைப் பெறக் கள்ளுண்கின்றனர். இந்த ஒழுக்கக்கேடு முற்றாக நீக்கப்பட வேண்டுமானால் திறமைக்கேற்ற உழைப்பு வேண்டும். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கவேண்டும். நல்ல வண்ணம் உண்டு மகிழ்ந்து வாழ — நுகர்வுப் பொருள்கள் எளிதில் நியாய விலையில் கிடைக்கவேண்டும். ஊதியத் திற்கும் நல் வாழ்க்கைக்கும் இடையில் உள்ள இடைவெளி சுருங்கவேண்டும். மனித வாழ்க்கை சோற்றினால் மட்டும் ஆனதல்ல. உள்ளத்திற்குக் களிப்பும் மகிழ்ச்சியும் தேவை. களிப்பை மகிழ்ச்சியைத் தரக்கூடிய அமைப்புக்கள் நிறையத் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக இவர்களை மகிழ்விப்ப தற்கு என்றே அமையக்கூடிய குடும்பங்களும், நட்புக்களும் சமுதாயமும் அரசும் அமையவேண்டும். இங்ஙனம் அமைந்துள்ள வாழ்க்கை முறை, சமுதாய முறை எப்போது இருந்தது? எப்போது வரும்? ஒழுக்கத்தின் ஊற்றுக்களனாக அமைந்து ஒழுக்கத்தை உறுதிப்படுத்தி வளர்க்கும் பொறுப்பு சமுதாயத்தினுடையதாகும்; அரசினுடையதாகும். இந்த

நெறிமுறைப்படி அமையாத அரசுக்கு நாட்டு மக்களின் ஒழுக்கக் கேடுகளுக்குத் தண்டனைகள் விதிக்கும் சட்டங்களை இயற்ற உரிமை இல்லை; தண்டனைகள் வழங்க உரிமையில்லை. அப்படியே அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்தால் அரசு கெடும். இது திருக்குறள் காட்டும் அரசியல் நெறியின் சிறப்பு. குடிமக்களிடத்தில் ஒழுக்கக்கேடுகள் தோன்றுதலுக்கேற்ற நெறி பிறழ்ந்த ஆட்சிமுறை என்று ஆட்சித்தலைவர் அறிந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் இருக்குமானால் அரசு முதலில் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் ஒழுக்கநெறி வளரும். அரசும் அரசாக இருக்கும். அரசு தண்டனைகள் வழங்கு வதற்கு முன்பு குடிமக்களுடைய வாழ்க்கை உரிமைகளை வழங்கவேண்டும். ஒரோவழி அரசின் வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்தாமல் வரையறைகளை மீறி ஒழுக்க மில்லாதவனாக ஒருவன் நடந்து கொண்டாலும் அவன் அழியத்தக்க வகையில் தண்டித்தல் கூடாது. தண்டனை அழித்தலுக்கல்ல; திருத்தப்பாட்டினையே நோக்கமாகக் கொண்டது. குற்றங்களுக்குரிய தண்டனைகள் வழங்குதலில் மனிதர்களுக்கிடையில் வேறுபாடு காட்டக்கூடாது; ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற அநீதி திருக்குறள் ஏற்றுக் கொள்ளாத ஒன்று. அரசு வழங்கும் தண்டனை அச்சத்தைத் தோற்றுவிக்க வேண்டும்; ஆனால் அழித்துவிடக்கூடாது என்று குறள் கூறுகிறது.

> "கடிதோச்சி மெல்ல எறிக; நெடிதாக்கம்
> நீங்காமை வேண்டு பவர்" (562)

என்று நயம்படக் கூறுவார்.

யாதொன்றுக்கும் தகுதியில்லாத கயவரைக்கூடத் திருவள்ளுவர் அழிக்கச் சொல்லவில்லை. கொல்வதை ஒத்த துன்பங்களைத் தந்து அவர்களைத் திருத்திப் பயன்படுத்த வேண்டும், என்பதே வள்ளுவத்தின் நோக்கம். இது,

*"சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்*
*கொல்லப் பயன்படும் கீழ்"* (178)

என்ற வள்ளுவம் வழி உணரப் பெறுகிறது. திருவள்ளுவர் உறுப்புக்கள் அழித்தல், நாடு கடத்துதல், தூக்குத் தண்டனை முதலிய கொடிய தண்டனைகள் வழங்க உடன்படவில்லை என்பது பெறப்படுகிறது.

மனிதகுலம் பொருளியல் முயற்சியில் ஈடுபடவும் ஒழுக்க நெறியில் நிற்கவும் அறிய வேண்டும். வாழ்க்கையைச் செப்பமுற அமைக்கும் அடிப்படை மூலங்களில் கல்வியே தலையாயது. 'காலத்தினால் செய்த நன்றி' என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது கல்விக் கொடையைத் தான் போலும். கல்வி மக்களின் அடிப்படை உரிமை. அதை வழங்குவது அரசின் தலையாய கடமை. பல்வேறு துறைகளில் சிறப்புற்றிருந்த பழந்தமிழகப் பேரரசுகள் மக்களின் அடிப்படைத் தேவையான கல்வியை வழங்குவதில் ஏன் போதிய ஆர்வம் காட்டவில்லை என்பது விளங்கிக்கொள்ள முடியாத, புரியாத புதிராக இருக்கிறது. சங்க காலத்தில் கல்வி கற்கும் முயற்சி மக்களின் பாற்பட்டதாகத்தான் இருந்திருக்கிறது. பாண்டியன் அறிவுடைநம்பி பாடியதாக உள்ள புறநானூற்றுப் பாடல்,

*"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே*
*பிறப்பு ஓரன்ன உடன்வயிற் றுள்ளும்*
*சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்*
*ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்*
*மூத்தோன் வருக என்னாது அவருள்*
*அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்*
*வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"* (புறம் 173)

ஆய்வுக்குரியது. பாண்டியன் அறிவுடைநம்பி அரசன். அவன் கல்வி கற்கும் முயற்சியை, கல்வி கற்பதற்குரிய சாதனங்களை மக்களே அமைத்துக்கொண்டு கற்க வேண்டும் என்று கூறியுள்ளான். பாண்டியன் அறிவுடை நம்பியின் காலம் கி.பி, இரண்டாம் நூற்றாண்டு. அவன் காலத்தில் மக்களை நாற்பாலாகப் பிரித்தல் என்ற அயல் வழக்கு நுழைந்து விட்டதா? அதனால் கீழ்ப்பால் மக்கள், கல்வி உரிமையை இழந்திருந்தார்களா? மேற்பால் மக்கள் வழிவழியின் காரணமாகவும் கற்றுக்கொண்டார்களா? என்பனவெல்லாம் நுணுகி ஆராய்ந்தறியத்தக்க செய்திகள். சங்ககாலப் பெரும் புலவர்கள் தற்செயலாகத் தோன்றி வளர்ந்த தமிழறிஞர்கள் போலும். ஆனால் திருவள்ளுவர் கல்வியை 'அரசியல் பட்டியலில் சேர்த்துள்ளார். அதனாலேயே ஆட்சியாளர் கல்வி கற்றலும், ஆட்சியின் உறுப்பாகிய குடிமக்களுக்குக் கல்வியைக் கற்பித்தலும் அரசின் நீங்காத கடமை என்று வள்ளுவம் வலியுறுத்துகிறது. குடி மக்களின் அடிப்படை உரிமை யாகிய கல்வி உரிமையை வழங்காத அரசு பாரதி காலம் வரை நாடு விடுதலை பெறாத காலம் வரை இருந்திருக்கிறது. பாரதி,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"

(வெள்ளைத்தாமரை 9)

என்ற பாடலில் "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று பாடுவது இக் கருத்தை வலியுறுத்துகிறது. இன்றும் ஏழை பெறும் கல்வி, வாய்ப்பும் வசதியும் உடையவர் பெறும் கல்வி வேறுபட்ட நிலையினதே; தரத்தில் மலையும் மடுவும்போல அமைந்து கிடக்கிறது. நாடு விடுதலை பெற்ற

பிறகு சுதந்திரக் குடியரசு ஆரம்பக் கல்வியை இலவச மாக்கியது; கட்டாயமாக்கியது; படிப்படியாக உயர்நிலைக் கல்வி, கல்லூரி புதுமுகக் கல்வி வரை இலவசமாகியது. இதுபோக சமுதாயத்தில் கல்வி உரிமையையும் மற்ற உரிமை களையும் முற்றாக இழந்து, கடைகோடியிலிருந்த மக்களை முன்னணிக்குக் கொண்டு வந்து முன் வரிசையில் நிறுத்தத் தக்கவகையில், தாழ்த்தப்பட்டோர் பிற்பட்டோர் ஆகிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உணவு — உறையுள் உதவிப் பணம் வழங்கிக் கல்லூரிப் பட்டப்படிப்பு, மேற்பட்டப்படிப்பு வரை கற்க வாய்ப்பு வழங்கப்பெற்று வருகிறது. சுதந்திரக் குடியரசின் இந்தச் சாதனைகள் மறக்க முடியாதன; மறுக்க முடியாதன. மேலும் மேலும் வழிவழி யாகத் திருக்கோயில்கள் எடுத்து அறம் செய்த தனவணிகர் குடும்பத்தைச் சேர்ந்த செட்டிநாட்டரசர் அவர்கள் ஒரு பல்கலைக் கழகத்தையே அமைத்துக் கல்விக்கொடை வழங்கிவருவதை நெஞ்சுநெகிழ்ந்த உணர்வுடன் பாராட்டுகின்றோம். கல்வித் திட்டங்கள் இவ்வளவு சீர்மையாக அமைந்திருப்பினும் நடைமுறையில் குறைகள் இல்லாமல் இல்லை. இக்குறைகள் ஆட்சியினிடத்தில் பெரும்பாலும் இல்லை. அரசு, தன் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அமைத்துக்கொண்டி ருக்கிற உறுப்பு களில் நிர்வாக எந்திரத்தில் உள்ள குறைகளே யாகும். எல்லாச் சிற்றூர்களிலும் உள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களையும் பள்ளிக்கு வரவேண்டிய வயது வந்த அனைத்துப் பிள்ளைகளும் பள்ளிக்கு வந்துவிட்டார் களா? என்று ஆண்டுதோறும் அரசு கேட்கிறது. அவர்கள் முறையான கணக்கெடுத்துக் கொடுக்காமல் 'ஆம்' என்று தவறான தகவல் தருகிறார்கள். ஆனால் உண்மையில் கிராமங்களில் பள்ளிக்கு வரவேண்டிய வயதுவந்த குழந்தை களில் குறைந்தது பத்து விழுக்காட்டினர் பள்ளிக்கு வராமல் இருப்பார்கள் என்றே நாம் நம்புகின்றோம். மற்றக் குழந்தைகள் பள்ளிக்கு வருவது மட்டுமன்று, பள்ளியில்

தொடர்ந்து சீராக ஐந்தாம் வகுப்பு வரையிலாவது கற்க வேண்டும். இதற்குரிய சூழல் இன்னமும் கிராமங்களில் தோன்றவில்லை. இன்றைய சூழ்நிலையில் கல்விப் பரம்பரை பெரும்பாலோருக்கு இல்லை. சுற்றச் சூழ்நிலைகளும் மோசம். ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் — மாணவர் விகிதாசாரமோ, கற்பிக்கும் விதிகளுக்குப் புறம்பாக அமைந்துள்ளது. ஆரம்பப் பாடசாலைக்கு நியமிக்கப்பெறும் ஆசிரியரின் கல்வித்தரமோ சொல்லித் தெரியவேண்டிய தில்லை. கல்வியின் அடிக்கல்லாக விளங்கும் ஆரம்பக் கல்வியில் நாமும் நம் அரசும் செலுத்தும் அக்கறை போதாது. அதன் காரணமாக எவ்வளவுதான் வாய்ப்புகள், வசதிகள் இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட சமுதா யத்தைச் சேர்ந்தவர்கள் கல்விப் பயணத்தில் இடையில் நின்று போகிறவர்கள் எண்ணிக்கையே மிகுதி. கல்விப் பயணத்தில் இடைமுறிவுகளைத் தவிர்த்தால்தான் வருங்கால வரலாறு சிறப்புறும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ‘கற்க’ என்றார் வள்ளுவர். கற்க என்றால் எந்தவித சமாதானமும் கூறாமல் கற்க என்பதே கருத்து. கற்பதற்குரிய வசதிகளை அமைத்து வழங்கவேண்டிய பொறுப்பு அரசினு டையது என்றே வள்ளுவம் கூறுகிறது. மேலும், கல்வியைச் சாதி, இனவேறுபாடின்றிப் பொதுமை யாக்கிய பெருமையை எண்ணிப் பாராட்டுதல் வேண்டும். திருக்குறள் அரசியலில், சமாதானம் வற்புறுத்தப்படுகிறது. போருக்குக் காரணமாகிய பகையைத் தவிர்க்க வேண்டுமென்று ஓர் அதிகாரம் எடுத்துக் கூறுகிறது. ‘இகல்’ என்ற அதிகாரத்தில் பகைவாராமல் தவிர்க்கவேண்டும்; பகை வருவதற்குரிய சூழ்நிலைகள் தோன்றினாலும் தவிர்த்தல் வேண்டும்; அங்ஙனமே வந்துவிட் டாலும் மாறுகொண்டு பகை வளர்க்காது ஒதுங்கிப்போக வேண்டும் என்றெல்லாம் சமாதான வாழ்க்கைக்கு வழி காட்டப்படுகிறது. ஆம், உலக வரலாற்றுப் பக்கங்களில் பாதியைப் போர் விழுங்கிக் கொண்டிருக்கிறது. புகழ்பூத்த

தமிழகத்தின் வரலாற்றைத் தமிழரசர்கள் தம்முள் பொருதியே அழித்தனர்; அழிந்தனர். தமிழகத்தின் மூன்று பேரரசு களிடையே ஒருமைப் பாட்டை உண்டாக்கச் சங்ககாலச் சான்றோர்களாகிய கோவூர்கிழார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார், ஒளவையார் முதலியோர் செய்த முயற்சிகள் முழுமையாகப் பயனளிக்க வில்லை. சமாதானத் தூதுவராகக் கோவூர்கிழார் பாடியபாட்டு பாருள்ளளவும், மனித உலகம் உள்ளளவும் நிற்கும்.

*"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்*
*கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்*
*நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொடு*
*பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே*
*ஒருவீர் தோற்பினும் தோற்பது உம்குடியே*
*இருவீர் வேறல் இயற்கையு மன்றே; அதனால்*
*குடிப் பொரு ளன்றுநும் செய்தி கொடித்தேர்*
*நும்மோ ரன்ன வேந்தர்க்கு*
*மெய்யமலி உவகை செய்யும்இவ் விகலே".* (புறம் 45)

என்பது அவர் பாடல். இப்பாடல் கற்பிக்கும் பாடத்தை இன்றுவரை தமிழர்கள் உணரவில்லையே. அன்று 1800 ஆண்டுகட்கு முன் நாவடக்கமில்லாது பெரிய வடபுலத்து மன்னர்களைப் போலவே தமிழினத்தை இழித்தும் பழித்தும் பேசிக் கொடுந் துன்பங்களை விளைவித்தவர்களிடம் தமிழ்த்தலைவர்கள் தம்முள்ளிருக்கும் மாறுபாட்டைத் திருத்திக்கொள்ளாமல் சார்தலும் அவ்வழி தமிழினத்திற்கு அழிவினைத் தேடிக்கொள்ளுதலும் இன்றும் நிகழ்கின்றன. இளங்கோவடிகள், மூவேந்தரை ஒருமைப்படுத்தவே சிலப்பதிகாரம் இயற்றினார். ஆனால் அவரது முயற்சியைச் செங்குட்டுவனே முறியடித்து விட்டான். முன்பு மூவருள் ஒருவனாக விளங்கிய செங்குட்டுவன்,

*"இமயத் தாபதர் எமக்குஈங்கு உணர்த்திய*
*அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி*

*நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்குஅஃது*
*எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தருஉம்"*

(சிலம்பு 3–26, வரி 9–12)

என்று கூறினான். வடபுலத்து வெற்றிக்குப் பிறகு மூவரில் விஞ்சியவன் என்று உணர்வுக்கு இரையாகிவிட்டான். அதனால் போர்க்கைதிகளைச் சோழன், பாண்டியன் அவைக்களத்திற்கு அனுப்பி அவர்களின் புழுக்கத்தைப் பெறுகிறான். இளங்கோவடிகளின் தமிழினத்தின் ஒருமைப்பாடுபற்றிய நினைவு பயன்படாக் கனவுகளாகிப் போயின. 'ஆனால் இளங்கோவடிகள் தோற்ற இடத்தில் இருபதாம் நூற்றாண்டில் ஒருவர் வெற்றிபெற்றார். ஆம்! அந்த வெற்றி தமிழக வரலாற்றிலேயே சிறப்புடைய வெற்றி.

*"துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்"* (159)

என்ற திருக்குறளுக்கு ஏற்ப அவர் வாழ்ந்ததால் வரலாற்றில் வெற்றி பெற்றார். இழித்தும் பழித்தும் பேசிய பேச்சுக்களுக்கெல்லாம் அவர் எதிர்ப் பேசவே இல்லை.

*"இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே*
*மிகல்ஊக்கும் தன்மை யவர்"* (855)

என்பது குறள்.

இந்தத் திருக்குறளுக்கு ஏற்ப அவர்மீது காரண மில்லாமல் 'இகல்' கொண்டு அவருடைய முன்னேற்றத் திற்குத் தடைக் கற்களைப் பரப்பினாலும் மாறுகொண்டு எதிர்தாக்குதல் செய்யாது சாய்ந்தொழுகினார்.

*"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து*
*மானம் கருதக் கெடும்"* (1028)

என்ற குறள் நெறியின்படி தமிழினத்தாரிடத்தில் தமிழினத் தலைவர்களிடத்தில் பொய்ம்மையான மானத்தைப் பெரிது எனக் கருதாது அவர் ஒழுகிய பெருந்தன்மையை,

சான்றாண்மையைத் தமிழக வரலாறு என்றென்றும் போற்றும், தம்மோடு இகல்கொண்டு பொருதியும் பகைத்தும் இடர்விளைவித்த அவர்களையும் உள்ளிட்டு மாபெரும் தலைமையையே தந்த அந்தத் தமிழ்த்தாயின் தலைமகனின் பெயர் சொல்ல இன்று நாட்டில் யாருளர்? ஒருவருமில்லை. திருக்குறள் போரைத் தவிர்க்கிறது. தவிர்க்கும்படி அறிவுறுத்துகிறது. போரின் கொடுமையை எழுத்தில் எழுதமுடியுமா? இரண்டாம் உலகப் போரைப் பற்றி அறிஞர்கள் அடியிற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

"It has been calculated for example, that the resources swallowed up by the Second World-war were enough for building a fire-room house for each family in the world and also a hospital in each town with a population of every 5000 people and to maintain all these hospitals for ten years. Thus the resources washed on one world war would be enough for medically solving the housing and health problems that today are so acute for the majority of man kind."

- (Fundamentals of Marxism - Leninism. Page 713)

திருக்குறளின் நோக்கம் சமாதானமேயாம் என்பதனை,

"இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்" (851)

"பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை" (852)

"இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்" (853)

"இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்" (854)

என்ற குறள்கள் வாயிலாக அறியலாம்.

ஆதலால் போரில் காலம், பொருள், ஆற்றல் செலவழிப்பது திருக்குறளுக்கு உடன்பாடன்று. போரைத் தவிர்த்தலே திருக்குறளுக்கு நோக்கம். போர் தவிர்க்க முடியாததாகிவிட்டதா? அப்படியே போர் தவிர்க்க முடியாதது ஆகிவிட்டால் வலிமையுடையாருடன் தான் போர் செய்யவேண்டும். வலிமை இல்லாதார் மேல் போர் தொடுத்தல் கூடாது. வியட்நாமுக்கும் அமெரிக்காவுக்கும் என்ன ஒப்புமை இருக்கிறது? இத்தகைய போர்கள் சால்பில்லாத போர்கள் என்பதை வள்ளுவம் அன்றே உணர்த்தியிருக்கிறது. மெலியார்மேல் போர் தொடுத்தால் சான்றாண்மை சறுக்கும்; சீலம் சீரழியும். தம்மின் வலியார்மேல் போர்தொடுத்தால் தமக்கே அழிவு வந்துறும். ஆதலால் "பகைத்திறம் தெளிதல்", "பகைமாட்சி" என்றெல்லாம் ஓதிப் போர் தொடுத்தலுக்கும் கூட நெறிமுறைகள் கூறும் திருக்குறள் சமாதானத்தையே விரும்புகிறது. உலக நாடுகளிடையே சமாதானக் கொள்கை பொதுக்கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பெறுதல் வேண்டும். உலக நாடுகள் படைக் குறைப்பு ஒப்பந்தங்களை இயற்றிக்கொண்டு நடைமுறைப் படுத்தவேண்டும். அங்ஙனமின்றி ஒருநாடோ அல்லது சில நாடுகளோ படையைக் குறைத்துக் கொள்ளுதல் இயலாது. "படைக்குறைப்பு" என்பது எல்லா நாடுகளும் மனம் ஒப்பிச் செய்யவேண்டிய ஒன்று. இன்று உலக வல்லரசுகளில் சமாதானப்பேச்சு ஒருபுறம் நடக்கிறது; படைப்பெருக்கமும் ஒருபுறமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வளர்முக நாடுகளில் ஒன்றாகிய நமது பாரதமும் பாதுகாப்புக்கு, படைப்பெருக்கத்திற்குப் பலநூறு கோடிகளைச் செலவழிக்கிறது. இன்றைய உலகச் சூழ்நிலையில் கிழக்காசியா — இந்துமாக்கடல் பகுதிகளில் நிலவும் போர்ப்பதட்ட நிலையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டால் நமது படைச்செலவு தவிர்க்கமுடியாதது; தவிர்க்கக் கூடாதது. உலக வல்லரசுகளின் மனச்சான்று நன்றாக இல்லை. ஆதலால்

இந்தியா படைப்பலத்தை வளர்த்துப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகிறது; தவிர்க்க முடியாதது.

திருவள்ளுவர் 'படைமாட்சி' யென்று தனி அதிகாரமே அமைத்து ஓதுகிறார்.

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை" (765)

என்ற குறளில் அஞ்சாத தன்மையுடைய படை வலிமையை வலியுறுத்துகிறார். படை, போர் முனையில் செருக்கு உடையதாக மேவி, எதிர்த்தாக்குதல் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (774)

என்பது திருக்குறள் காட்டும் வீரத்தின் இலக்கணம். இத்தகைய வீரம் பழைய போர் முறையில் அமைந்திருந்தது. இன்றைய போர்முறையோ பெரும்பாலும் மறைவான போர்முறை. போர் முறையில் விஞ்ஞானம் நெறி பிறழ்வையும், முறை பிறழ்வையும் தந்திருப்பதை எண்ணி வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

போரில் படைக்கு அடுத்த இடத்தை வகிப்பது அரணேயாம். அரண் தற்காப்புக்கும் பயன்படுகிறது; மேவிச் சென்று தாக்கவும் பயன்படுகிறது. பழங்கால அரண் அமைப்பில் திருக்குறள் காட்டும் அரண் மிகச் சிறப் புடையது. அளத்தற்கியலாத உயரமுடைய மதில்; அவ்வளவு உயரமுடைய மதில் சுவர்களைச் செப்பமுடன் அமைந்த அடிப்படையுடன் கட்டும் கட்டடக்கலை அறிவு அன்று இருந்தது. அதனைச் சுற்றி ஆழம் மிக்குடைய நீர்ப்பரப்பு; அதனைச் சுற்றிச் செறிந்த காடு; நடக்க இயலாத பொதிமணற் பரப்பு; மலை; காடு; அகழி; மதில் என முறைப்படுத்தி வள்ளுவம் கூறுகிறது. இடம் நோக்கி

அமைதலில் மாறலாம். அரண் அமைவாக அமைந்துவிடில் நாடு, பகைவர் தாக்குதலுக்கு எளிதில் ஆளாகாது. பல ஆண்டுகள் அமைதியாக வாழ முடியும். அப்படி வாழுதற்குரிய முறையில் அரண் அமைய வேண்டும் என்றும் திருக்குறள் கூறுகிறது.

*"எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்*
*நல்லாள் உடையது அரண்"* (746)

என்று மேலும் கூறுகிறது. பாரியின் பறம்புமலை இத்தகைய அரணுடையதாக இருந்தது என்று புறநானூறு பேசும்.

*"அளிதோ தானே பாரியது பறம்பே*
*நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்*
*உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே*
*ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே*

*இரண்டே தீஞ்சுவைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே*
*மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே*
*நான்கே அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து*
*தனிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே*
*வான்க ணற்றவன் மலையே வானத்து*
*மீன்க ணற்றதன் சுனையே ஆங்கு*
*மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்*

*"புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்"*
*தாளிற் கொள்ளலிர் வாளில் தாரலன்"* (புறம் 109)

அதனால் மூவேந்தர்கள் பல ஆண்டுகள் பொருதியும் எளிதில் பறம்பு மலை கைப்பற்றப்படவில்லை. நிலத்து வழிப்போர் அமையின், திருக்குறள் காட்டும் அரண் மிகச் சிறந்த பாதுகாப்புடையது. திருக்குறளுக்குப் பின்னே இளங்கோவடிகள் காலத்தில் அரணில் பொறியியல் அமைப்பு வந்துவிட்டது. அரணைப்பற்றிப் பல்வேறு வகையாகத் திருவள்ளுவம் வலியுறுத்திக் கூறினாலும்

வினைத் திறமுடைய தலைவன் இல்லாவிடில் அரணின் பயன் முழுமையுறாது என்றும் கூறுகிறது.

ஆட்சிக்கு அமைச்சரவை இன்றியமையாதது. ஏன்? தனி மனிதன் ஒருவன், நுண்ணறிவுடையவனாகவும் செயல்திறம் மிக்கவனாகவும் இருந்தால் ஆட்சிக்குப் போதாதா? போதாது. ஆட்சியில் பல்வேறு பொறுப்புகளை கடமைகளை நிறைவேற்ற ஆட்சியை எதிர் நோக்கிவரும் சிக்கல்களுக்குத் தீர்வுகாண எவ்வளவுதான் சிறந்த நுண்ணறிவுடையவனாக இருந்தாலும் ஒருவனின் அறிவு மட்டும் அதுவும் சிறப்பாகப் பட்டறிவு மட்டும் போதாது; அதோடு இன்ப துன்பங்கள் வழி அலைக்கப்படும் போது, தனி மனிதனின் அறிவு சோர்வுபடும். பாண்டியன் நெடுஞ்செழியனின் அறிவு கோப்பெருந்தேவியின் ஊடல் காரணமாகச் சோர்வுபட்டதை ஓர்க. அதனாலன்றோ வள்ளுவம் "பொச்சாவாமை" என்னும் ஓர் அதிகாரம் பேசுகிறது. நேரடியாக இன்ப துன்பங்களால் தாக்கப்படாமல் இருப்பவர்களுக்கு அறிவு சோர்வுபடுவதற்கு வாய்ப்பில்லை. அதோடு ஆட்சியின் பல்வேறு துறைகளை நுணுகி ஆராய்ந்தறிய ஒருவருக்குப் போதிய காலம் இராது. ஆதலால் ஒரு நேரத்தில் பலதுறைச் சிந்தனையும் பன்முகப் பணியும் நடைபெற அமைச்சரவை தேவை. வள்ளுவம் காட்டும் அமைச்சரவை சிறப்புடையது. வள்ளுவத்தின் வழியில் அமைச்சரவை அமைந்து செயற்படின் நாட்டுக்கு யாதொரு குறையும் வாராது. அமைச்சராய் அமைவோர்க்கு இயற்கையான நுண்ணறிவு தேவை; நூலறிவும் தேவை.

*"மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு அதிநுட்பம்*
*யாவுள முன்நிற் பவை"* (636)

இத்திருக்குறளில் மதிநுட்பத்தை முதன்மைப் படுத்தி யிருத்தல் சிறப்பு. நுண்ணறிவு நூலறிவையும் திரிபிலாது பெறுதற்குத் துணை செய்யும். ஒரோவழி நூல்கள் கூறும் வழி

பயன்படாது போகலாம். இது காலத்தைப் பொறுத்தது. அப்பொழுதும் எது செய்யத் தக்கதென்று இயற்கை நுண்ணறிவால் முடிவு செய்யாமல், நூலினைப் படித்து, தொங்கிக்கொண்டிருப்பது முன்னேற்றத்திற்குத் துணை செய்யாது. இன்றுங்கூட, காலத்தின் நடை முறைகள் மாறியும் அந்த மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாது நடைமுறைக்கு ஒவ்வாத, வராத, வர முடியாத, வரக்கூடாத, பழைய நூற்கருத்துக்களின் வழியே நின்றொழுக வேண்டு மென்று வற்புறுத்தி வளரும் சமுதாயத்தைத் தேக்கமடையச் செய்கின்றனர் சிலர். இது கொடுமையிலும் கொடுமை. ஏன்? ஒரு காலச் சூழ்நிலையில் தயாரிக்கப்பெற்ற அறிக்கையை மையமாகக் கொண்டே பின் வளர்ந்துள்ள சமுதாயப் பொருளாதார மாற்றங்களை அறிந்து கொள்ளாமல் ஆணைகள் பிறப்பிக்கப்படுவதை இன்றும் காண்கிறோமே! ஆண்டுக்கு ஆண்டு பணப்புழக்கங்கள் அதிகரித்து விலை வாசிகள் கூடிப் பணத்தின் மதிப்புக் குறைந்தும் வருவதைப் பார்க்கிறோம். ஐந்து ஆண்டுகளுக்கு முன் சராசரி நூறு ரூபாய் வருவாய் பெற்றவன் வாழ்க்கை வசதிகளை யுடையவன் என்று கருதப்பெற்றான். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு குறைந்தது நானூறு முதல் ஐந்நூறு ரூபாயாவது வருவாய் பெறுவதுதான் வாழ்க்கை வசதிகளுக்கு உரிய அளவாகும். இத்தகைய நிதியியல் மாற்றங்களை நுனித்தறிய இயற்கையான மதிநுட்பம் தேவை. நூல்கள் பல கற்றாலும் இயற்கையாய் நுண்ணறிவு அமையாது போனால் கற்ற நூலறிவும்கூடச் சிறப்புற்று விளங்குவதில்லை. அவர்கள் கற்ற நூலின் அறிவுக்கு முரண்பட்ட வகையில் அவர்களுடைய உண்மை அறிவு செயற்படும் என்று வள்ளுவம் கூறுகிறது. ஆதலால் நாட்டின் அமைச்சரா வோருக்கு இயற்கையில் அமைந்த நுண்ணறிவு தேவை. அதனால்தான் போலும் மக்களாட்சி முறையில் நாட்டின் அமைச்சராவோருக்கு நூலறிவுத் தகுதி வற்புறுத்தப் பெறுவதில்லை, இயற்கை

நுண்ணறிவே போதும் என்ற எண்ணத்தில் அரசியல் சட்டம் அமைந்திருக்கிறது.

அமைச்சராவோர் அரசுக்கும் குடிமக்களுக்கும் உறுதியான முறையில் அறிவுரை வழங்கிக் குற்றம் வராது காக்க வேண்டும். அமைச்சர், அரசன் அல்லது நாட்டு மக்களுக்குச் சிறு சிறு நயப்புகள் மூலம் மகிழ்வித்துப் பிழைப்பு நடத்தக்கூடாது. தெளிவான, நெடிய நலம் தரத்தக்க உறுதிமொழிகளைக் கூறவேண்டும். அதுவே சிறப்புடைய அமைச்சரின் கடமை என்று வள்ளுவம் கூறுகிறது.

அடுத்து அரசுக்கு இன்றியமையாது வேண்டுவது நட்பு. ஆட்சியில் அமைந்துள்ளோருக்குரிய நட்பு இருவகை; ஒரு நட்பு நாடளவில் தழுவியதாகிய அயல்நாடுகளின் நட்பு. பிறிதொரு நட்பு ஆட்சித் தலைவனுக்குரிய தனியுரிமை நட்பு. இவ்விரு நட்பும் சிறப்புற அமையின் எந்த ஆட்சித் தலைவனும் ஆட்சியைச் சிறப்புற இயற்ற இயலும். நாட்டளவில் நட்பு என்பது பொருள்துறை மாற்றங்கள் அல்லது செல்வப் பெருக்கம் அமைதற்குத் துணை செய்யும். அதாவது ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொர்ருள்களை வாங்கிப் பயன்படுத்தும் நாடுகள், நர்ட்டுக்குத் தேவையான பொருள்களை வழங்கி உதவி செய்யும் தகுதியுடைய நாடுகள் ஆகியன நட்புறுப்பு நாடுகளாக அமையவேண்டும். இந்தியாவில் அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருந்த குடியாட்சி சிதைவதற்குக் காரணமாயிருந்த பி.எல். 480 போன்ற செயல்முறைகளை வற்புறுத்தாத நாடுகளே சிறந்த நட்புறுப்பு நாடுகள், பி. எல். 480 மூலம் இந்த நாட்டின் அரசுக்குத் தொடர்பில்லாமலே தனித்துப் புழங்க உரிமை பெற்ற கோடிக்கணக்கான பணம் இந்த நாட்டின் சிறந்த அரசியல் தலைவர்களைத் தேர்தலில் தோற்கடிக்கவும் நாட்டின் அரசியற் கட்சிகளைப் பிரிவினைப் படுத்திப் பல குழுக்கள் தோற்றுவிக்கவும் பயன்பட்டிருக்கிறது. அவற்றின் விளைவே இன்றைய சீரழிவு. அதுமட்டுமா? நம்முடைய

பகைநாடென அறிவிக்கப்பட்ட நாட்டுக்கும் படைக் கருவிகளைக் கொடுத்தல், நமக்குத் தராதிருத்தல், இவ்விரு நாடுகளுக்கிடையே போர் நடப்பதை விரும்புதல் போன்றவை நட்புறுப்பு நாடுகளுக்கு இலக்கணமல்ல. வள்ளுவம் கூறும் நட்பில் நாட்டுறுப்பு நட்பு நிலைமை உய்த்தறிந்து இசைந்தவாறு பொருள் கொள்ளுதல் வேண்டும். அடுத்து அரசுக்கு அமைந்த அமைச்சர்கள் நெருங்கிய நட்பினராதல் இயலாது. நெருங்கிய நட்பினராய் அமைச்சர்கள் ஆகிவிட்டால் நல்ல அமைச்சராகவும் இருக்க இயலாது. நட்பு உவப்பன கூறி, உவப்பன செய்து, நெறிப்படுத்தி உடன் வாழும் இயல்புடையது. உடன் வாழ்தல் என்பது உணர்வின் வழியது என்பதை அறிக. தெளிவாகச் சொன்னால் ஒரு தலைமகனுக்குக் காதல் வழியமைந்த தலைவியை விடவும் நட்புச் சிறப்புடையது. அதனால் அன்றோ வள்ளுவம்.

*"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்*
*வினைக்கரிய யாவுள காப்பு"* (781)

என்று இயம்புகிறது. சிறந்த நட்பு, செய்யும் செயல்களுக்கெல்லாம் பாதுகாப்பு என்று திருக்குறள் ஐயத்திற்கிடமின்றிக் கூறுகிறது. ஒரு ஆட்சித் தலைவனின் செயல்களை அவனுக்கு உடனாக நின்று சோர்வின்றித் திருத்தமுற நடத்தித் தருவது நட்பு. அவனுக்கு வேறாக நின்று அறிவுரைகள் வாயிலாகச் செப்பமுறச் செயற் படுத்துவது அமைச்சு. ஆதலால் ஆட்சித் தலைவனின் மிகச் சிறந்த உறுப்பாகிய நட்பை ஆட்சியின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாய் அமையக்கூடிய நட்பை, ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும் என்ற எச்சரிக்கையைச் செய்ய "நட்பாராய்தல்" என்றே ஓர் அதிகாரம் அமைக்கப் பெற்றுள்ளது. "அமைச்சு ஆராய்தல்" என்றொரு அதிகாரம் இல்லாததை அறிக. நட்பு நெஞ்சுக்கு நெகிழ்ச்சி தருவது; மனத்தை இன்புறுத்துவது.

இதுவே நட்பின் நோக்கம்; கடமை. சிரித்துப் பேசி மகிழ்வது நட்பின் நோக்கமன்று, இதனைப் "புணர்ச்சி பழகுதல் வேண்டா" என்று கூறிக்காட்டுவார். "உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும்" என்று நட்பு அகநிலை வளர்ச்சிக்கு உறுப்பாம் என்பதை உணர்த்துகிறார். இன்று பேசிப் பழகாது போனால் நட்பில்லையென்றும் குறைந்த அளவு கடிதங்கள் பரிமாற்றம் இல்லாது போனாலும் நட்பே இல்லையென்றும் கருதப்பெறுகிறது. ஒருவன் உணர்ச்சிக்கு, அவ்வுணர்ச்சியின் வழிப்பட்ட இலட்சியங்களுக்கு ஒருவரை ஒருவர் அறியாமலே பழகாமலே துணையாய் அமையமுடியும்; நல்வழியில் அமைந்தும் ஆக்கம் தரமுடியும்; அயல்வழிச் செல்லாமலும் தடுக்க முடியும். அங்ஙனம் அமைவதே சிறந்த நட்பு. கோப்பெருஞ் சோழன்-பிசிராந்தையார் நட்பை எண்ணிப் பார்ப்போமாக. யாதொரு நேரிடைத் தொடர்பும் பழக்கமும் இல்லாத அவர்கள் நட்பின் மாட்சிமை என்ன? உயிரில் கலந்த, உணர்வுடைய, உயிர் நட்பாக விளங்கியது. இன்றோ அத்தகைய சிறப்புடைய நட்பு அமையாமல் சமுதாயம் துன்புறுகிறது. எங்கும் வன்கண்மையும், புறம்பேசுதலும், காட்டிக்கொடுத்தலும் ஆகிய நட்பின் தன்மைக்கு மாறான செயல்கள் நாட்டில் நடைபெற்று வருகின்றன. ஏதிலான் ஆரத் — தமர் பசிப்பச் செய்யும் பழி வினைகள் மலிந்து வருகின்றன. இது வளர்ச்சியை அவாவி நிற்கும் சமுதாயத்திற்கு நன்றன்று. நேற்று நட்பு இன்று பகை என்றால் நட்பின் இலக்கணமும் நடை முறையில் இல்லை. பகைத்திறம் தெளியும் தெளிவும் இல்லை என்பது தானே பொருள்? சிறந்த நட்பு வளரும் தன்மையது. நட்பிற்காக நட்பு — இதுவே நட்பின் இலக்கணம். உயர் இலட்சியத்திற்காக நட்பு; நட்பு உதவி பெறுவதற்கன்று; நட்பு உதவி செய்வதற்கு; துணைதேடிப் பெறுவது நட்பல்ல; 'துணையாக அமையத் துடிப்பது நட்பு'. இத்தகு நட்பு நெறி நாளும் வளரும்; நட்பின் திறன் வளரும்; இன்பம் மலரும்; வரலாறு சிறக்கும். சிறந்த

நூல்களைப் பயிலுந்தொறும் இன்பம் கிடைக்கிறது. படித்த நூல்தானே என்று ஒதுக்கமுடியாது. கற்குந்தொறும் புதிய புதிய பொருள் இன்பம் தந்து அறிவின் ஆக்கம் தொடர்ந்து வளர்கிறது. கற்கக் கற்க, கங்கு கரையற்ற புதிய புதிய புத்தறிவு உணர்வுகளைத் தரும். அங்ஙனம் தருவன தாம் சிறந்த நூல்கள். இத்தகைய சிறந்த நூல் உலகத்தில் மக்களாகப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழியிலும் தோன்றாமல் தமிழிலேயே தோன்றியிருப்பது பழங்காலத் தமிழகத்தின் வரலாறு தந்த சிறப்பு. அந்நூல் எது? திருக்குறளைத் தவிர வேறு எது? ஒரு மறைநெறியை வளராமல் தடுக்க நான்மறைகள் முற்றுகையிட்டன என்றால் அந்த ஒரு மறையின் அருமைப்பாட்டை என்னென்று கூறுவது? புகழ் பூத்து விளங்கிய பழந்தமிழகத்தின் வாழ்க்கை நெறியைத் தமிழினம் மீண்டும் காண நான்மறைநெறிகள் துணை செய்யா, தமிழினத்துக்கு ஒரு மறையாக, மனித உலகத்துக்குப் பொது மறையாக, விளங்கும் திருக்குறளே துணை செய்ய முடியும். இதனை உணரும் நாளே தமிழகத்தின் புதிய வரலாறு தொடங்கும் பொற்காலம்.

> "நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடை யாளர் தொடர்பு" (783)

என்பது திருக்குறள். நவில் தொறும் நயம் தரும் நூல் திருக்குறளேயாம். திருக்குறளைப் பயிலப் பயில இயல்பிற் பெறாத நுண்ணறிவுகூடத் தலைப்படுகிறது; வள்ளுவம் காட்டும் நூலறிவும் சிறக்கிறது; இன்புறுத்தி இனிய வாழ்வை அமைக்கிறது. பண்புடையாளர் நட்பும் அத்தகையது. பண்புடையாளனின் நட்பு பயிலுந்தொறும் புதுநல இன்பம் தரும்; வளரும். உண்மையிற் சொன்னால் இன்றைய சூழ்நிலையில் நம்மில் யாருக்குமே நண்பர்கள் இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. தெரிந்தவர்கள் பலர் இருக்கி றார்கள்; வேண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள்; உடனிருப்ப வர்களும் சிலர் இருக்கிறார்கள். இவர்களில் யார் நண்பர்?

அறிஞர் அண்ணாவுடன் சிலர் உடனிருந்து அவரின் சிறப்புடை நண்பர்போலப் பழகி அவரின் குறைகளை எழுதிக்காட்டினாரே, அவர் நண்பரா? தோழரா? இல்லை, பகைவரா? இம் மூவரிலும் அவர் சேரமாட்டார். பகைவர் கூட வெளிப்படையாகப் பகைப்பதால் நம்மை எளிதில் பழிதூற்றமுடியாது. நமக்குத் தீங்கு செய்யமுடியாது. இவர் இம் மூவரிலும் இல்லையானால் வேறு யார்? இந்தப் பட்டியலில் வைத்தெண்ணப்படத் தகுதியில்லாதவர்கள் கயமை (எண் 108) அதிகாரத்தில் சேர்க்கப்பட வேண்டி யவர்கள். சிறந்த நட்பு, பிறைநிலாப் போல வளருமாம். நிலா குளிர்ச்சியைத் தருவது; உணர்வைத் தூண்டி வளர்ப்பது; இன்புறுத்துவது; பைங்கூழ்களை வளர்ப்பது, இத்தனை பணிகளையும் நட்புச் செய்யவேண்டும். நட்பு உவப்பனவே செய்யுமா? ஆம், உவப்பனவே செய்யும்.

மிகுதிக்கண் மேற்சென்றிடித்தலும் உவப்புத்தானா? ஆம், அப்பொழுதும் உவப்புத்தான். நட்பிற்குரியோன் சோர்வின் காரணமாக நெறியல்லா நெறியில் செல்லும் பொழுது அவனை இடித்துத் திருத்தலும் நெறி நிறுத்தும் பணிதானே தவிர அது பழி கூறுவதன்று. இடித்துக் கூறுதல் என்பது வேறு; பழிதூற்றுதல் குற்றங்களை விரித்தல் என்பது வேறு. அங்ஙனம் இடித்துக்கூறுதல் கூட அயலார் யாருக்கும் தெரியா வகையில் நிகழும். அதனால்தான் போலும் தமிழ் இலக்கியங்களில் இத்தகைய நட்புக்குரிய இலக்கியத்தை நாம் மிகுதியாகப் பார்க்க முடியவில்லை. அகநிலை வழிப்பட்ட காதலை விரித்துரைத்த அளவிற்குக்கூட இத்தகைய நட்புகளை — விரித்துரைக்கும் இலக்கியங்கள் தோன்ற வில்லையே. அயலறியாது நட்பில் திருத்தம் காணவேண்டும் என்ற மரபினைப் போற்றிய நட்பு முறைதான் காரணம் போலும். சிறந்த நட்பு இயல்பான உதவிகளின் வழி நிகழ்வது; அதாவது தூண்டும் தொழிற்பாடின்றியும் கைம்மாறு முதலிய உறுபயன் விளைவுகளால் நிகழாமலும் இயல்பில் நிகழ்வதே

நட்பு. அதுவே சிறந்த நட்புச் செய்யும் உதவி. நட்பு என்பது வள்ளுவத்தின் பார்வையில் ஒரு தலைமகனுக்கு மிகமிக நெருக்கமான உள் சுற்றத்தில் அமைகிறது. ஆங்கு நிகழும் பொருளியல் எடுப்புகளும், வைப்புகளும் கொள்ளுதலும், கொடுத்தலும் ஆகியன உரிமைச் சுற்றம்போல் நிகழ்வன. அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப் பெறுவதில்லை. நட்புச் செய்யப்பெறும் ஒருவனுக்கு அவனுடைய இலட்சியம் மிக்க வாழ்க்கையில் எதிர்ப்படும் இடர்ப்பாடுகளில் அவனுக்குத் துணையாய் அமைவதே நட்பின் தலையாய கடமையும் ஒழுக்கமும் ஆகும். கட்டியிருக்கும் ஆடை இறுக்கம் தளர்ந்து நெகிழ்கிறது. இங்ஙனம் நெகிழ்தல் இயற்கை. செயல்வினை களின் காரணமாக உடல் உறுப்புகள் அசைவதால் உடை நெகிழ்தல் தவிர்க்க இயலாதது. மிக இறுக்கமாகக் கட்டுதல் உடல் நலத்திற்கு உரியதன்று. உடலுயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒழுக்கம் என்ற ஆடையை உயிர் உடுத்துக்கொள்கிறது. பலருடன் தொடர்பு கொண்டு பல்வேறு செயல்களில் ஈடுபடும் வாழ்க்கையில் ஓரோவழி நன்னோக்கத்தின் காரணமாகக்கூட ஒழுக்க நெகிழ்வுகள் ஏற்படுதல் உண்டு. வள்ளுவமே ஓரோவழி ஒழுக்க நெகிழ்வு களை ஒழுக்க அமைதியாக ஏற்றுக் கொள்வதை எண்ணுக. "வாய்மையே ஒழுக்கம்" பொய்ம்மை ஒழுக்கமாகாது. ஆனாலும் வாழும் சமுதாயத்தின் சூழ்நிலை, பணி செய்யப்படுவோரின் மனப்பாங்கு ஆகிய சூழ்நிலை களில் பொய்ம்மையும்கூட வாய்மையாகக் கருதப்பெறும் என்ற ஒழுக்க அமைதியின் அருமைப்பாடு சமுதாய இயல் அறிந்தோர்க்கு விளங்கும். ஒழுக்க நெறிகள் ஏற்றுப் போற்றப்பட வேண்டியவை. ஆனாலும் சமுதாயத்தின் இயல்பான முன்னேற்றத்திற்கு அவை ஓரோவழி தடையாக அமையுமாயின் நெகிழ்ந்து கொடுத்து எடுத்தணைப்பது இன்றியமையாதது. மக்களுக்காக ஒழுக்கமே தவிர ஒழுக்கத்திற்காக மக்கள் அல்ல. இடையில் கட்டிய ஆடை

நெகிழ்கிறது. நெகிழ்ந்து கீழே விழுந்துவிட்டது. உடனே உடலின் மற்ற உறுப்புகள் சிறப்பாகக் கைகள் உடையை இழந்த இடையைக் கண்டு நகைத்துக் கைகொட்டிச் சிரிப்பதில்லை. அல்லது அந்தச் சூழ்நிலையில் கண்பார்த்து மூளைக்குத் தகவலைத்த ந்து ஆணை வரவேண்டுமென்று கைகள் காத்திருப்பதில்லை. அல்லது உடையை இழந்த இடை வாயின் துணைகொண்டு ஆடை வேண்டுமென்று இரந்து கேட்க, அந்த ஒலியலை செவிப்புலன் வழியாக மூளைக்குச் சென்று முளைஆணை பிறப்பிக்கவேண்டும் என்றும் காத்திருப்பதில்லை, ஏன்? உடையை இழந்த இடையை இடைசார்புடைய மானத்தைக் காப்பாற்ற ஆடையைக்கூட உடனடியாக நம்பி நகர்வதில்லை. இடர்ப்பாடுற்ற சூழ்நிலையில் முதல் உதவி செய்யும் செயல்முறை திருக்குறள் காலத்திலேயே நடைமுறையில் இருந்ததுபோலும், உடையை இழந்தது முன்பா? கைகள் விரைந்து துணை செய்தது முன்பா? என்று கால ஆராய்ச்சி செய்யத்தக்க வகையில் கைகள் விரைந்து சென்று மறைக்க வேண்டிய பகுதியைக் கைகளே மறைத்துத் துணைசெய்கிறது. அதன்பிறகுதான் முறையாக உடலுறுப்புகள் இயங்கி உடையும் வந்துசேரும். சிறந்த நட்பும் இத்தகையதே. சிறந்த நண்பன் நட்புச் செய்யப்படுபவரின் நெறி பிறழ்ந்த நிலையை முதலில் சென்று மறைப்பான்; பின் அறிவுறுத்தி அவனை நெறியில் நிறுத்துவான்.

> "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு" (788)

என்ற திருக்குறள் நட்பு செயற்படுமாறு காட்டுவதாகும்.

இத்தகைய நட்பு நாட்டின் ஆட்சித் தலைவர்களுக்குத் தேவை. இன்றைய சமுதாயம் இத்தகைய நண்பர்களை வழங்குமா? வழங்க வேண்டும். ஆட்சியின் சிறப்புக்கு நல்ல குடிமக்கள் தேவை. நற்குடி மக்கள் அமைய நல்லாட்சி

தேவை. எது முதலில்? எது இரண்டாவது நிலையில்? முடியாட்சிக் காலத்தில் நல்ல குடிமக்கள் ஆட்சியின் வழி அமைவர். "அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்ற பழமொழி அறிக. குடியாட்சிக் காலத்தில் நல்லாட்சி அமைய நல்ல குடிமக்கள் தேவை. "வாக்காளர்களின் நாணயத்திற்கும், தரத்திற்கும் ஏற்பத் தேர்ந்தெடுக்கப் பெறுபவர்களுடைய தரமும் தகுதியும் அமையும்" என்றார் பெர்னார்ட் ஷா. திருவள்ளுவர் சிறப்புடைய சில நெறிகளை அதற்கென்று அமைந்த அதிகாரத்தில் மட்டுமல்லாது வேறு அதிகாரங் களிலும் எடுத்துக்கூறி வலியுறுத்தும் இயல்புடையாரார்; உதாரணமாக,

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)

என்ற திருக்குறளைப் பொதுநோக்கில் பார்த்தால் ஈதல் அல்லது ஒப்பரவறிதல் அதிகாரத்தைச் சேர்ந்த குறள் போலத் தோன்றும். ஆனால் இந்தத் திருக்குறள் அமைந்திருக்கும் அதிகாரம் 'கொல்லாமை' யாகும். இத் திருக்குறளைக் கொல்லாமை அதிகாரத்தில் ஓதி அறிவுறுத்தும் செய்தி சிந்தனைக்குரியது. வாழப் பிறந்தோருக்கு வாழ்வளிக்கா மலும் அவர்களைச் சாகடிப்பதும் 'கொலையே' என்று வள்ளுவம் கருதுகிறது.

வையத்து மாந்தர்க்கெல்லாம் வாழ்வளிப்பதற்குரிய செல்வப் பங்கீட்டு முறையை முறையாக நடைமுறைப்படுத்தி வாழ்வளிக்காதது கொலை செய்யும் குற்றத்திற்கு ஒப்பானது என்று கூறும் குறள் நெறியை சமுதாயப் பொது நெறியை உலக அரசுகள் நடைமுறைப்படுத்துமானால் எங்கிருந்து வரும் வறுமை? அடுத்து 'குடிமை' அதிகாரம். இன்றைய கல்வித் திட்டத்தில் 'குடிமைப் பயிற்சி' (citizenship) என்ற பயிற்சி இருக்கிறது. வள்ளுவம் கண்டதே இந்தக் குடிமைப் பயிற்சி. ஆனால் குடிமை என்ற அதிகாரத்தில் குடிமைக்குரிய

தகுதிகளை வரையறுத்துக் கூறுவதை விட ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறுவது வலியுறுத்துவது போல அமைந்துள்ளது. ஒழுக்க நெறிகளின் தோற்றக்களனே சமுதாயம் தானே! பலர்கூடி இசைந்து வாழுதற்குத் துணை செய்யும் நெறிகள் தாமே ஒழுக்க நெறிகள். அங்ஙனமில்லாது சமுதாயத்தின் ஒரு பகுதிகளை ஓதுக்கியும் அகநிலைகளில் நீங்காத உட்பகையையும் அவ்வழிப் புலன்களையும் வழங்கும் 'ஆசாரம்' என்ற பெயரில் வந்த முறைகள் ஒழுக்கமா? என்றைக்கு வள்ளுவத்தின் ஒழுக்க நெறிகளை மறந்து இடையில் வந்த ஆசாரங்களை ஏற்றுக் கொண்டோமோ அன்றைக்கே தமிழினம் தாழ்ந்தது. மற்றவர்களை வருத்தாது, துன்புறுத்தாது, அவர்கள் உவந்துமகிழும் வண்ணம் வாழ்தலே ஒழுக்கமுடைய வாழ்க்கை. அதுவே ஒழுக்கங்களுக் கெல்லாம் தலையாய ஒழுக்கம். கள்ளுண்ணல் போன்ற ஒழுக்கக்கேடுகள் ஒழுக்கமின்மையானதற்கே காரணம் அறிவு மயங்கி மற்றவர்களுக்குத் துன்பம் விளை வித்தலால்தானே! ஆக, சமுதாயத்தில் பலரோடு கூடி இசைந்து வாழ்தல் என்பது தலையாய ஒழுக்கம். மனிதகுலக் கூட்டுச்சமுதாயம் அமையவேண்டும். நாடு, மொழி, இனம், சமயம், சாதி வேறுபாடுகள் அற்ற ஒருவன் தோற்ற வேண்டும். தமிழினத்தின் தனிக் கவிஞனெனப் பாராட்டப்பெறும் புரட்சிகள் பாரதிதாசன்கூட வளர வளர உலகைநோக்கிச் சிந்தனையை விரித்துள்ளான். பாரதிதாசன் தொடக்க காலத்தில் தமிழினத்தின் கவிஞனாக விளங்கியது உண்மை. அவனுடைய வளர்ச்சியில் அவன் பாரதியை விடவும் உலகைநோக்கி நடந்தவன் என்பதை இனவழிப்பட்ட காய்ச்சலின் காரணமாக நாடு அறியவில்லை; உணரவில்லை.

*உன் வீடு – உனது பக்கத்து வீட்டின்*
*இடையில் வைத்த சுவரை இடித்து*
*வீதிகள் இடையில் திரையை விலக்கி*

*நாட்டொடு நாட்டை இணைத்து மேலே*
*ஏறு ..........................................................*

*..........................................................*

*அறிவை விரிவு செய்! அகண்ட மாக்கு*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!*
*அணைந்து கொள்! உனைச் சங்கமாக்கு*
*மானிட சமுத்திரமே நானென்று கூவு!*
*பிறப்பிலே எங்கும் பேத மில்லை*
*உலகம் உண்ண உடுத்த உடுப்பாய்*
*புகல்வேன்! உடைமை மக்களுக்குப் பொது*
*புவியை நடத்து பொருவில் நடத்து*

(பாரதிதாசன் கவிதைகள் 1 தொகுதி ப 54)

என்பது பாரதிதாசன் பாடல்.

ஆதலால் ஒழுக்கம் என்பது தன்னுடைய நாட்டொடு தன்னோடு வாழ்கின்ற மக்களோடு இசைந்து வாழ்தலே ஒழுக்க நெறியாகும். உடலுறுப்புகளின் பசியம் தோன்றத் தான் செய்யும். இது மாறாத இயற்கைநியதி. இவைகளை வைத்து மட்டும் குடிமக்கள் தரத்தினை உரிமைகளை நிர்ணயித்தல் கூடாது. வளரும் காலத்திற்கேற்ப அந்தக் காலச் சூழ்நிலைகளுக்கு இசைந்த அறிவும் உணர்வும் ஒழுக்க அமைவும் உணர்ந்திருக்கிறதா என்று ஆராயவேண்டாமா? முடியாட்சி துன்பம் விளைவித்ததை உணர்ந்து குடியாட்சி அமைத்த பிறகு குடியாட்சியின் தலைவராக வந்து அமர்வோர் பலர் முன்னிலையில் முடி சூடிக்கொள்ளும் நிகழ்ச்சிகள் நடத்தலும், முடியாட்சி மன்னர்களைப்போல மக்கள் மன்றத்தில் நடந்துகொள்ளுதலும் இவர்கள், தாம் வாழும் காலத்திற்கிசைந்தவாறு வளர்ச்சியடையவில்லை என்பதைப் புலப்படுத்தவில்லையா? ஆதலால் நாட்டு மக்களோடு அவர்க்ள் உரிமைகளுக்கெல்லாம் தான் ஒப்புறுதி யளித்துப் பாதுகாப்பளிக்கத்தக்க வகையில் வாழவேண்டும்.

நல்லகுடிமக்கள் நாட்டில் சிறந்து விளங்கினால் வழிவழியாக அந்தப் பண்பாடு சிறந்து விளக்கமுற்று வளர்ந்துவரும்.

திருக்குறளுக்குச் சாதிமுறை உடன்பாடன்று. சாதிமுறை அயல்வழக்கு. சாதி முறையில் பிறப்பே ஆட்சி செய்யும். பிறப்பே சாதிமுறையை உறுதிப்படுத்தும். அந்நெறியல்லா முறைப்படி இழிவாகப் பிறந்தவனானாலும் அவன் கல்வி கேள்விகளால் மாறி வளரும் வளர்ச்சியைச் சாதிமுறை ஏற்பதில்லை; இல்லை. அங்ஙனம் பிறந்தவர்கள் கல்வி கேள்வி பெறுவதற்குரிய உரிமையும் பெறமாட்டார்கள். இந்தக் கொடுமையான, வள்ளுவத்திற்கு முரணான சாதி முறைகள் தாம் பிற்காலத் தமிழகத்தை நிலை அழியச் செய்தன; இன்றும் அழித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சாதிமுறைகள் வள்ளுவத்திற்கு முற்றாக உடன்பாடில்லை. ஆனால் குடி, குலம் ஆகியவற்றில் வள்ளுவம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. இன்றைய மனிதஇயல் விஞ்ஞான நுண்ணறிவும்கூட குடி, குலம் ஆகியவற்றின் வழி இயல்பில் அமையும் சில திறன்களை ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால் இது தேக்கமுடைய மனப்போக்கு அல்ல. வளர்ச்சிக்குச் சில தலைமுறைகள் ஆகும் என்பதே இந்த விஞ்ஞானக் கருத்தின் முடிவு. சிறந்த பெற்றோர்களுக்குப் பிறந்து சிறந்து சுற்றச் சூழலில் வளரும் குழந்தைகள் சில நல்லியல்புகளை எளிதில் பெறுவர். இது குல அமைப்பு.

> "..................... பெறுதற்கரியதம்
> குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கு எலாம்" (கம்ப, நாட்டு 38)

என்று கம்பனும் கூறுவான். குடி அதனினும் விரிந்தது. அதுமொழிவழிப்பட்ட ஒரு நாட்டு வழிப்பட்ட சூழலைக் குறிப்பது. அக் குடிமக்களின் சீலங்கள் எளிதில் அடுத்த தலைமுறையினருக்குக் கிடைக்கும் என்ற படிப்பினையைக் குடிமை என்ற அதிகாரத்தில் திருக்குறள் விரித்துக்கூறுகிறது.

ஒரு நாட்டுக்கு வளத்தையும் பெருமையையும் சேர்ப்பவர்கள் அந்நாட்டுக் குடிமக்களேயாவர். சிறந்த குடிமக்கள் அமையாத நாட்டில் இயற்கை யமைவுகளைக் கூடப் பயன்படுத்தாமல் துன்புறுவர். அதனால் வள்ளுவம் காட்டும் குடிமைப் பண்புகளை இந்திய நாடு முறைபிறழாது நடைமுறைப் படுத்துமானால் புரட்சியில் வளர்ந்த நாடுகளை விடவும் மேலான சிறப்படையக்கூடும்.

ஒரு நாட்டு அரசியல் சிறப்பாக அமைய நல்ல நாடு அமையவேண்டும். நல்ல நாடு அமைய நல்லாட்சி வேண்டும். இதில் எது முதலில் அமையவேண்டும்? இதில் முதல்நிலைத் தகுதியுடையது நன்மக்களும் நல்லாட்சியுமேயாம். நாட்டுக்கென்று தனி இயல்பில்லை, அதற்கென்று இயல்புகளைச் சேர்ப்பது மக்களும் ஆட்சியுமேயாம். இதனை,

> *"நாடா கொன்றோ காடா கொன்றோ*
> *அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
> *எவ்வழி நல்லவர் ஆடவர்*
> *அவ்வழி நல்லை வாழிய நிலனே"* (புறம் 187)

என்ற புறநானூற்றுப்பாடல் வழி அறிக.

ஒரு சிறந்த நாட்டுக்கு முதல் இலக்கணம் வறுமை யின்மைதான். "பொன் வேண்டேன், பொருள் வேண்டேன்" என்று பாடிய மாணிக்கவாசகரும்கூட வறுமையை "நல் குரவு என்னும் தொல்விடம்" என்று குறிப்பிடுகிறார். வறுமையிற் கொடுமை எது? என்று வினவுகிறார் திருவள்ளுவர்.

> *"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
> *இன்மையே இன்னா தது"* (1041)

என்பது குறள். "நெருப்பினுள்ளும் தூங்கலாம். ஆனால் வறுமையோடு வாழ்தல் அரிது" என்று வள்ளுவம் கூறுகிறது. நேற்று வறுமை இருந்திருக்கலாம். ஆனால் இன்றும்

வறுமையா? என்று வள்ளுவர் கேட்கும் கேள்வியில் ஆயிரமாயிரம் சிந்தனைப் புதிர்கள் அடங்கி யுள்ளன.

> "இன்றும் வருவது கொல்லோ? நெருநலும்
> கொன்றது போலும் நிரப்பு" (1058)

என்பது திருக்குறள். "இன்றும் வருவது கொல்லோ" அம்மம்ம. வினாவில் தான் எவ்வளவு அழுத்தம்? சாடுதல்? நினைந்து பார்க்க நெஞ்சில்லாமல் போய் விட்டதோ? 'இன்றும் வருவது கொல்லோ' என்ற வினாவில் திருவள்ளுவர் எதை எதைச் சாடுகிறார் என்று கூர்ந்து நோக்குங்கள். நேற்று வறுமை இருந்தது; அது நேற்றைய தவறாக இருந்து தொலையட்டும். நேற்றைப் பட்டறிவு என்னாயிற்று? நேற்றிருந்த வறுமையை மாற்றி ஒருவருக்கொருவர் துணை நின்று வாழத்தானே சமுதாய அமைப்பு தோன்றிற்று? அந்தச் சமுதாய அமைப்பு இன்று உயிர்ப்போடிருக்கிறதா? உணர்வோடு தொழிற்படுகிறதா? அது ஏற்றுத் தாங்கி வளர்ப்பதற்குப் பதிலாகக் கேவலமாகப் பழிக்கிறதே! ஏழை என்று ஏளனம் செய்கிறதே! ஏளனத்திற்குப் பயந்து ஒளிந்து வாழக் கடனாளியாக்குகிறதே! கடன் வாங்கும் திறனில்லை யானால் மரண வழிக்குச் செலுத்துகிறதே! இன்றைய சமுதாய அமைப்பு, தாங்கும் அமைப்பாக இல்லை. அது சுழன்றடிக்கும் சாட்டைபோல் இருக்கிறது. இது சமுதாய அமைப்பன்று. இஃதொரு கூட்டம். அவ்வளவுதான். பயன் என்ன? இந்த வறுமையை மாற்றத்தானே மனிதகுலத்தின் தலைவனாகக் கடவுளைக் கண்டோம். அவன் தந்தை தாய்; அவன் மக்கள் நாம்; அவனுடைய பிள்ளைகளில் வல்லார் மாட்டார் என்ற வேறுபாடு இல்லை. இந்தப் பொது நெறிகண்டு கூடியுழைத்து உண்டு மகிழத்தானே கடவுள் நெறியைக் கண்டோம். அதைக்கண்ட பிறகும் இன்னும் வறுமையென்றால் அக்கடவுள் நெறி என்னாயிற்று? ஆம். கடவுள் புரோகிதர்களிடத்தில் சிக்கிவிட்டார். சாமிவரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தருவதில்லை. காரணம்

பூசாரிக்குப் பணப்பெட்டி நிறைய வேண்டும். அவர் வல்லார் பக்கம் சார்ந்து மாட்டாதாரை ஒதுக்கி வல்லாரின் செல்வக் குவிப்புக்குக் கடவுளைக் காட்டி நியாயம் கற்பித்துக் கொழுத்து வளர்கின்றார். கடவுள் நம்பிக்கையுடையோரின், நீதிக்குப் புறம்பான இச்செயல்தானே, நாத்திகத்தைத் தோற்று வித்தது? கடவுள் நெறி தோன்றிய பிறகும் "இன்றும் வருவது கொல்லோ?" என்றால் கடவுள் நெறி எதற்காக? அது கிடக்கட்டும். தமக்கு எவ்வளவுதான் பற்றிருந்தாலும் கடவுள் நெறியின் வழியும் கடவுள் தன்மையுடைய நீதியின் சார்பிலும் இயங்க மனமில்லாமல் கடவுளுக்கு அர்ச்சனைகள் செய்து கொண்டே கடவுள் தன்மைக்கு மாறான செயல்களே நடைபெற்றன. அதனால் அரசியல் நெறியைக் கண்டோம். மனிதர்களின் உறவுகளுக்கும், பொருளியல் நெறிகளுக்கும் ஒழுங்கு முறைகளைக் கண்டோம். வல்லார்க்கும், மாட்டார்க்கும் ஒத்த வாய்ப்புகளும், வாழ்வும், நியாயமும், நீதியும் வழங்கவே அரசியல்முறை தோன்றியது. அது தோன்றியும் என்னாயிற்று? அரசியல் வாய்ப்புடையார் வீட்டின் வாசலில் காத்துக்கிடக்கும் சேவகத் தொழில் செய்வதாக மாறிவிட்டதே! எங்கு நாட்டின் நிதியியலை முறைப்படுத்தி நிர்வகிக்கின்ற அரசு தோன்றவில்லையோ, அங்கு அரசை ஆட்டிப் படைக்கின்ற தனியார் நிதிக் குவியல் தோன்றும் என்ற சிந்தனைக்குரிய வாக்கு நினைவிற் கொள்ளத்தக்கது. அதனாலன்றோ முறையான நிதியியல் ஆட்சியியல் நடத்தாது நாட்டில் வறுமையாளர்களை வளர்த்து மக்களை இரந்து வாழ்பவர்களாக ஆக்கும் அரசு 'பரந்து கெடுக' என்றது வள்ளுவம்.

> "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்" (1062)

என்பது குறள். இங்கு "இயற்றியான்" என்ற சொல் கடவுளைக் குறிக்காது. கடவுள் என்பது குணமேயாம்; குணியன்று. பண்பேயாம், பண்பியன்று. "இயற்றியான்"

என்பதால் குணங்களாகவே விளங்கும் கடவுளைக் குறிக்காது அரசையே குறிக்கும். நாட்டை வளமுள்ள நாடாக ஆக்க வேண்டும். நம்முடைய தேவைகளை நிறைவு செய்யும் நாடாக வளர்க்க வேண்டும்; தம் தேவைகளுக்கு அயல்நாடுகளை நோக்கிச் செல்லாதவாறு தன்னிறைவுடைய நாடாக்க வேண்டும் என்பார்.

"நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு" (739)

என்று வள்ளுவம் கூறும். நாட்டில் மக்கள் தாழ்விலாச் செல்வராக விளங்கவேண்டும். தாழ்விலாச் செல்வர் என்பது அருமையான குறிப்புச் சொல். குடிமக்கள் பெற்றிருக்கிற செல்வம், அவர்கள் திறனுக்குத்தக்கவாறு அமையவேண்டும். அவர்களுடைய உழைப்புத் திறனால் படைத்துக் குவிக்கப்படும் செல்வம், மற்றவர்களால் கொள்ளை போகக்கூடாது. திறனுக்கேற்ற செல்வம்; செல்வத்துக் கேற்றதிறமை; தராசில் நிற்பதுபோல் ஒருபால் கோடாது நிற்க வேண்டும். செல்வத்திற்கேற்ற திறனில்லாது போனால் சுரண்டுமுறை, அதாவது பிறர் பங்கைத் திருடி வைத்துக் கொள்ளும் முறை அங்கு உள்ளது என்பது பெறப்படும். எனவே வள்ளுவம் படைக்கும் நாட்டில் தாழ்விலாச் செல்வரே இருப்பர். அங்குத் திறனுக்கு ஏற்ற செல்வமும் கிடைக்கும்; செல்வத்துக்கேற்ற திறனும் அமையும். இத்தகைய நாடே நாடு.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மூதறிஞர்; அறநெறியாளர்; அரசியல் சிந்தனையாளர். அவர் கண்டு காட்டியுள்ள அரசு ஒட்பமும் திட்பமுமுடைய அரசு. அவரது அரசியல் சிந்தனைகள் இன்றைக்கும் எதிர்வரும் காலத்திற்கும்கூட நன்மை தருவன. திருவள்ளுவர் வழியில் இந்த நாட்டை அமைத்து வழி நடத்த முயன்றிருந்தால் பிரெஞ்சு புரட்சிக்கும் சோவியத் புரட்சிக்கும் முன்னோடியாகத் தமிழகத்தில் சமுதாயப்புரட்சி

தோன்றியிருக்கமுடியும்; ஆனால் அந்த நல்லூழ் இந்த நாட்டுக்குக் கிடைக்கவில்லை. வள்ளுவம் தோன்றிய காலத்தில் இலைமறை காயாகவும் அதற்குப் பிறகு வெளிப்படையாகவும் செழுந்தமிழ் வழக்காகிய வள்ளுவம் மறந்து போகும் அளவுக்கு அயல்வழக்குப் புகுந்து ஊடாடியது. மார்க்சுக்கு லெனின் கிடைத்ததைப்போல வள்ளுவத்திற்குச் சரியான செயல் மாணாக்கர்கள் கிடைக்கவில்லை. பரிமேலழகர் முதல் இன்றுவரை உரைவிரிக்கும் மாணாக்கர்களே இருந்து வருகின்றனர். வள்ளுவத்திற்கு வரலாறு படைக்கும் மாணாக்கர்கள் கிடைக்கவில்லை; பின்பற்றுவோர் கிடைக்கவில்லை. இன்றும் தமிழ்நாட்டில் படிக்கும் நூலாக, உரைவிரித்துரைக்கும் நூலாக, பட்டிமன்றத்திற்குரிய நூலாகத் திருக்குறள் விளங்கு கிறதேயன்றி அஃதொரு அரசியல் நூலாக, ஓரினத்தை வழி நடத்தும் நூலாக இடம் பெறவில்லை. குருநானக்கின் சீக்கிய வேதம் இன்று பாஞ்சாலத்து மக்களை வழி நடத்தும் மறை; சட்டமும்கூட அதுதான். அந்தச் சட்டத்திற்கு முரணில் லாமல்தான் இந்திய அரசியற்சட்டம் செயற்படவேண்டும். இது அவர்கள் பெற்ற வெற்றி. முகமதியரும் அத்தகைய வெற்றி பெற்றுள்ளார்கள். கிறித்தவர்களும் வெற்றி பெற்றுள் ளார்கள். அவர்கள் மறைவழிதான் அவர்கள் வாழ்க்கை. ஆனால் தமிழ் மக்கள் தம்மை இழிநிலையில் கற்பித்துக்கூறும் இந்து சட்டத்தின் வழிதான் இன்று வழி நடத்தப் படுகிறார்கள். வள்ளுவத்தின் வழியில் அல்ல என்பதை உணர்க.

தமிழினம் தன் தனித் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளுதல் உலகத்தின் பொதுமைக்கு இடையூறன்று. தனித்தன்மை எதனோடும் இசைந்து வாழும். ஆனால் கலப்பு, தீமையைத் தரும். ஆதலால் வள்ளுவத்தின் வழியில் அறநெறியில் நல்லாட்சி கண்டு உலகிற்கோர் புதிய சமுதாயமாய் நாம் வாழத் தலைப்படவேண்டும். இதுவே வள்ளுவத்தைப் போற்றும் முறை.

# குறட் செல்வம் திறனாய்வு

## இன்பமே எந்நாளும் துன்பமில்லை

உயிரினம் அவாக்களால் உந்தப்பெற்று, விருப்பு வெறுப்புகளுக்குள்ளாவது இயற்கை. ஆசைகள் விருப்பு வெறுப்புகளின் தாய். விருப்பு வெறுப்புகள் வினைகளின் நிலைக்களன். வினைகள் இன்ப துன்பத்திற்குக் காரணம். இன்ப துன்பங்கள் பிறப்பிற்கு அடிப்படை. பிறப்பு துன்பத்தோடு தொடர்புடையது. ஆனாலும், பிறப்பின் வழிப்பட்ட இவ் வாழ்க்கையின் இலட்சியம் பிறப்பிலிருந்தும், அவ்வழி வரும் துன்பத்திலிருந்தும் விடுதலை பெறுவது. ஒன்றின் இயல்பு ஒன்றாக இருக்குமானால் அதனோடு அதற்கு மாறுபட்ட இயல்பொன்றை முறையாகக் கூட்டு வித்தால் அவ்வியல்பு மாறும்—வளரும்.

உயிரின், மேற்கூறிய இயல்பை மாற்றி, அன்பின் வழிப் பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தூய்மை யான நல்வாழ்க்கையைப் பெறச்செய்ய வேண்டுமானால் இயல்பிலேயே விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட கடவுளோடு—சிவ பரம்பொருளோடு இந்த் உயிருக்குத் தொடர்பு ஏற்பட வேண்டும். அத் தொடர்பின் வழி, உயிர் மாட்டுள்ள குற்றங்கள் குறைந்து நிறைவு பெருகும். அவ்வழி உயிர்கட்கு எங்கும் எப்பொழுதும் இன்பமே கிடைக்கும். இக் குறிப்பினையே அப்பரடிகள் "இன்பமே எந்நாளும் துன்ப மில்லை" என்று குறிப்பிடுகின்றார். இக் கருத்தினையே

திருவள்ளுவரும் "யாண்டும் இடும்பை இல" என்று பேசுகின்றார்.

ஆதலால் வாழ்க்கையில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேண்டுதல் வேண்டாமை பாராட்டுவது சமய ஒழுக்கமாக மாட்டாது. வேற்றுமைகளைக் கடந்த விழுமிய மனித குல ஒருமைப்பாடே சமய உலகத்தின் நியதி. ஆதலால், அன்றாட வாழ்க்கையில், இந்தச் சமய சமுதாய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து உய்தி பெறுவோமாக!

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

## வாழும் ஒழுக்கமும்

திருவள்ளுவர் மனித குலத்தின் ஒழுக்க நெறியை உயர்த்த நூல் செய்தவர். அவர் செய்த திருக்குறள் ஒரு முழு ஒழுக்க நூல். பல்வேறு வகையான துறைகளில் ஈடுபட்டிருப்ப வர்களுக்கும் உரிய இயல்பான ஒழுக்கத்தை வலியுறுத்தி உள்ளார். ஆனாலும் திருவள்ளுவர் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும்பொழுது நாட்டின் நடைமுறையை யதார்த்த நிலையை மறந்து விட்டு உபதேசிக்கவில்லை. சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்தே சொல்லுகிறார். பொதுவாக ஒழுக்கத்தைப்பற்றி உபதேசிப்பது எளிமையானதொன்று. ஆனாலும், அதைத் தன் வாழ்வில் கடைப்பிடிப்பதும், மற்றவர் கடைப்பிடித்து ஒழுகுதற்குரிய முறையில் சூழ்நிலையை உருவாக்குவதும் அவசியமாகும்.

பெரும்பான்மையான மனிதர்கள் இயல்பில் நல்ல வர்கள். ஆனாலும் தவறுகள் செய்தற்குக் காரணம் அவர்களின் சூழ்நிலையேயாகும். உதாரணமாகக் களவு, பொய், வெஃகுதல், அழுக்காறு ஆகிய ஒழுக்கக் கேடுகள் மனித குலத்தில் தோன்றிய செயற்கைத் தவறுகளே. ஏன்?

வாழ்க்கைக்குரிய இன்றியமையாத தேவைகளை மனிதன் பெற்று விட்டால், இக்குறைகள் குறையும்—இல்லாமலே கூடப் போகலாம். மேலும், செல்வ உலகத்தில் அருவருக்கத் தக்க வகையில்—விபத்துக்களை உண்டாக்கக் கூடிய வகையில் மேடு பள்ளங்கள் இருப்பதும் குறைகளை வளர்க்கத் தக்க சூழலே. ஆதலால் எல்லோரும் எல்லாச் செல்வங்களும் உடையவர்களாக வாழும் சூழல் அமைந்த சமநிலைச் சமுதாயம் அமைய வேண்டும். இத்தகு சமுதாயத்தை, இருப்பதை விநியோகிப்பதன் மூலம் அமைக்க முடியாது. இம்முறையில் வறுமையைத்தான் பங்கிட முடியும். எனவே, வளத்தைப் பெருக்கும் முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும். இவ்வாறு வளத்தைப் பெருக்கும் முயற்சியில் மனித குலத்திற்குத் துணை நிற்க வேண்டியது—துணை நிற்பது மழையேயாகும். மழையின்றேல் மண்ணில் வளமில்லை. ஊற்று வளமும் குன்றும். இதன் பயனாக வறுமையே தோன்றும். பசிப்பிணியால் உந்தப் பெற்ற மக்கள் ஒழுக்கக் கேடான செயல்களிலும் ஈடுபடுவார்கள். ஆதலால், மனிதகுல ஒழுக்கத்திற்கு மழையே இன்றியமையாதது என்கிறார் திருவள்ளுவர்.

"நீரின் றமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு" (20)

என்பது திருக்குறள். இக் குறட்பாவை மேற்கூறியவாறு சிந்தனை செய்யாமல், "வான் இன்றி மழையில்லை" என்று பொருள் காண்பது நிறைவாகாது.

மேலும், ஒழுக்கச் சூழல் காண, குளித்தலும் தண்ணீர் குடித்தலும் அவசியமாகும். மனித உடலின் வெப்ப நிலை அதிகமாகும் சூழ்நிலை ஒழுக்கக் கேடுகளையும் விளைவிக் கிறது. உடலின் வெப்பநிலையை அளவோடு வைத்துக் கொள்ளத் தண்ணீரில் குளித்தலும், தண்ணீரைக் குடித்தலும் அவசியம். அதனாலன்றோ உடல்நலம் பற்றிய நூல்கள்

பலகாலும் குளித்தலையும், தண்ணீர் குடித்தலையும் வற்புறுத்துகின்றன. நல்ல உடல், நல்ல மனம் ஆகியவை ஒழுக்கத்தின் விளை நிலங்கள். எனவே, வான் இவ்வுலகிற்குத் தண்ணீர் வளம் தருவதோடு, ஒழுக்கம் சிறக்கவும் உதவுகிறது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்." (131)

## உணர்வார் கண்ணே உலகு

உயிர் ஓர் அறிவுப் பொருள். உயிரின் இயல்பு பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தின் வழிச் செல்வதன்று. வெள்ளத்தை எதிர்த்து நீந்துவது உயிரின் கடமை. ஆனால் நடைமுறையில் கோடானுகோடி உயிர்கள் இங்ஙனம் வாழ்வதில்லை. இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களின் கூட்டினால் ஆனது. இப்பருவுலக நடைமுறைக்கும், உயிரியல் வளர்ச்சிக்கும் நிறையத் தொடர்புண்டு. உயிரின் அனுபவ வாயில்கள் புலன்கள். புலன்களின் அனுபவக் கருவிகள் பொறிகள். அனுபவக் களம் ஐம்பூதங்களாய் உலகமும், பூதங்களின் வழித்தாய உணர்வுகளுமாம். பூதங்கள்—அவைகளாலாய உணர்வுகள் வழியே உயிர்கள் செல்லுமாயின், இம்மையிலும் பயனில்லை, மறுமையிலும் பயனில்லை. அதற்கு மாறாக அவற்றின் கூறுபாடுகளை அறிந்து, அவைகளைத் தூய்மை செய்து, உணர்ந்து உணர்வு கொண்டு அனுபவிக்கும்பொழுது வாழ்வின் குறிக்கோள் கைகூடுகிறது. அவர்கள் பக்கத்தில் உலகம் நிலைபெற்றிருக்கும். இக் கருத்தினையே திருவள்ளுவர்.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு." (27)

என்று பேசுகின்றார்.

# மனத் தூய்மையே அறம்

கருதியதை முடிப்பதற்குரிய வழிவகைகளைக் காட்டுவதில் திருவள்ளுவர் வல்லவர். ஒன்றினைச் சாதித்துக் கொள்வதன் மூலம் பலவற்றை அடைந்து அனுபவிக்கும் வண்ணம் வழி காட்டுவதில் வல்லவர் அவர். அறம் செய்தல் பற்றிப் பல்வேறு வகையான கருத்துக்கள் இவ்வுலகில் உண்டு. "அறத்தைச் செய்க" என்று ஆணையிடுவது பிறமொழிகளின் மரபு. "அறம் செய விரும்பு" என்பது தமிழ் மொழியின் மரபு.

மனம், மொழி, மெய்—இவற்றின் துணைகொண்டு அறம் இயற்ற வேண்டும்; செய்ய வேண்டும். இவற்றுள் மொழி யால்—மெய்யால் செய்யக்கூடிய அறங்களில் பொய்ம்மையும் வஞ்சனையும் இருக்கக்கூடும். மனத்தால் எண்ணிச் செய்யக் கூடிய அறமே சிறந்தது. மொழியும் மெய்யும் இரட்டை வேடம் போட முடியும். ஆனால் மனத்தால் இரட்டை வேடம் போட முடியாது. அதன் இயற்கை இயல்பு ஒரு தன்மைத்தாக இருக்கிறது. செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். நாம் செய்யும் செயல்கள் பலவற்றில் தூய்மை காண வேண்டும் என்று தனித்தனியாக முயல்வதைவிட செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி மனத்தை மாசின்றி வைத்துக் கொள்வது நல்லது; சிறந்தது. இதன் மூலம் நாம் செய்யும் அறங்களும் மிகச் சிறந்து விளங்கும்.

மேலும், வாழ்வியல் முறை எண்ணத்தின் வழி இயங்கி பயன்கூட்டுவிக்குமே அன்றி செயல்கள் வழி மட்டுமல்ல. மனத்தூய்மை இன்றிச் செய்யப்பெறும் அறங்கள் செய்பவர்க்கும் பயன் தராது; செய்யப் பெறுவோர்க்கும் பயன் தராது. மனத்தூய்மை வாழ்க்கை முழுவதையுமே சாதித்துத் தரக்கூடியது. அதை முயன்று பெறுவதே அறம்.

மற்றவை எல்லாம் ஆரவாரத் தன்மையுடையன என்றே திருவள்ளுவர் கூறுகிறார்.

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற." (34)

## அறமும் சிவிகையும்

திருவள்ளுவர் முற்போக்கான கருத்துக்களையுடையவர். அவர் சமுதாயத்தின் குணங்களையும் குறைகளையும் நடுநிலை உணர்வோடு விமரிசனம் செய்கிறார். அந்த விமரிசனப் போக்கில் பழமையை ஏற்றுக் கொண்டதும் உண்டு; பழமையைச் சாடியதுமுண்டு.

ஒருவன் பல்லக்கிலே போகிறான். இன்னொருவன் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போகிறான். பல்லக்கில் ஏறிச் செல்பவன் அறம் பண்ணினான் என்றும், பல்லக்கைத் தூக்கிச் செல்வோன் அறம் செய்யாதவன் என்றும், அதன் பயனாகவே பல்லக்கைச் சுமந்து செல்லுகிறான் என்றும் சொல்லுவது தமிழகத்தின் பழைய பழக்கங்களில் ஒன்று. "அறத்தாறிது என வேண்டா" என்ற இந்தக் குறளுக்குக் கூட அந்தப் பழைய வழக்குப்படியே பலர் பொருள் கொண்டுள்ளார்கள். ஆனால், திருவள்ளுவரின் கருத்து அஃதன்று. திருவள்ளுவர் பல்லக்கில் சவாரி செய்வதையும், பல்லக்கைத் தூக்குவதையும் காரணமாகக் காட்டி, அறத்தாறுதான் இந்த வேற்றுமைக்குக் காரணம் என்று சொல்லாதே என்று சொல்லுகின்றார். "இதுவென வேண்டா" என்ற சொற்றொடர் இந்தப் பொருளையே தருகிறது.

சிவிகை ஊர்தலுக்கும், தூக்குதலுக்கும், அறத்திற்கும் உறவில்லை. காசுக்குத்தான் உறவு. நிறையச் செல்வம் உடையவர்கள் — ஜமீன்தார்கள் — ஜமீன்தாரிணிகள் ஆகியோர் கூலி கொடுத்துத் தூக்கச் செய்து போகிறார்கள். இஃதெப்படி அறமாகும்?

செல்வமுடைமையும் அறமன்று. 'பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள' என்று பின்னே வள்ளுவர் பேசுகிறார். அதனால், சிவிகை ஊர்தல்—தாங்குதல் என்ற வாழ்க்கை வேறுபாடுகள் உலகியலாலும் செல்வ வேறுபாட்டாலும் தோன்றுவதே தவிர, அறத்தின்பாற் பட்டதன்று என்பதே திருவள்ளுவரின் தெளிந்த கருத்து.

ஒரோ வழி அறத்தின் காரணமாகவும் சிவிகை ஊர்தலும் உண்டு. சிவிகை தாங்குதலும் உண்டு. அப்பொழுது சிவிகை ஊர்கிறவர்களும் சிவிகை தாங்குகிறவர்களும் ஒத்த உணர்வினராய்...ஒத்த தகுதியுடையவராய் இருப்பர். அங்கு ஒருவருக்கொருவர் பெருமைப்படுத்திக் கொள்ளும் பண்பாட்டின் வழியிலேயே சிவிகை தாங்குதல் நிகழ்கிறது. அங்கு சிவிகை தாங்குதலும் அறமேயாம். இக்காட்சியைத் திருஞான சம்பந்தர் ஊர்ந்த சிவிகையைத் திருநாவுக்கரசர் தாங்கியதிலிருந்து நன்கு உணரலாம்.

*"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை.* (37)

## மனையறத்தார் கடமை

**வா**ழ்க்கை குறிக்கோள் உடையது. தோழமை கொள்வதும் துணை நிற்பதும் துயர் துடைப்பதும் வாழ்க்கையின் இன்றியமையாத பணிகள். இப்பணிகளற்ற வாழ்க்கை வாழ்க்கையாகாது. மனிதன் ஊன் உண்பதும் காதற் பெண்டுடன் களித்து மகிழ்ந்து மனையில் வாழ்வதும் குறிக்கோள் பாதையில் இனிதே நடைபோடத்தான். இன்று பலர் உண்பதே தொழிலாகக் கொண்டு இருக்கின்றனர்; பெண்ணின்பமே இன்பமெனக் கருதுகின்றனர். இவர்கள் உருவத்தால் மனிதர்கள்; உணர்ச்சியில் விலங்குகள். வனத்திடை வாழ்வதற்குத் தப்பிப்போய் நாட்டில் நடமாடுகின்றனர். வள்ளுவம் வாழ்வாங்கு வாழும் நெறியுணர்த்தும்

நூல். வாழும் மனிதனுக்குத் துறைதோறும் கடமைகளுண்டு. சில துறைகளைத் திருவள்ளுவரே எடுத்து விளக்குகின்றார். உழைப்பையே உயர்துணையாகக் கொண்டு பொருள்பல செய்து குவித்துப் பகுத்துண்டு பல்லுயிரோம்பி வாழ்தல், வாழ்வாங்கு வாழும் நெறியாகும். இங்ஙனம் பொதுவகையாக மட்டும் கூறாமல் பகுதி பிரித்தும் கூறுகிறார்.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை." (42)

துறந்தார் என்பவர் யார்? கனிந்த கனியென உள்ளத்தாற் பழுத்து யாதொரு பற்றுமின்றிப் புகழ் இதழ்களில் நாட்டமின்றிப் பழுத்த மனத்தடியாராக வாழ்பவர்களே துறவிகள். அவர்கள் உள்ளம் கருணையின் ஊற்று; நாடெலாம் வாழக் கருதும் பேருள்ளம். அவர்களைப் பாதுகாப்பது நாட்டின் பாதுகாப்பாகும்; மனையறத்தின் மங்கலத்திற்கு அரணாகும். துறந்தாரோ உரிமையுடையதென யாதொன்றையும் பெற்றிலர்; ஓடும் பொன்னும் ஒக்க நோக்கி வாழும் சீலமுடையார்; கந்தை ஆடையும் மிகையெனக் கருதுவோர். ஆதலால் அவர்களுக்காக அவர்கள் நலங்கருதி, மனையறம் நிகழ்த்துவோர் பணி செய்தல் பாங்காகும். இந்தத் திருக்குறள் நெறியையே திருத்தொண்டர் புராணம் விளக்கி அருளுகிறது.

அடுத்துப் பேணத் தக்கவர் "துவ்வாதவர்". திருவள்ளுவர் துவ்வாதவர் என்ற ஓரினத்தைப், பேணுதற் குரியவராக விளக்கி அறம் வகுத்தல் மிக உயர்ந்த பெரு நெறியாகும். உயிர்களின் இயற்கை துய்த்தலாகும். உயிர்கள் துப்பானவற்றைத் துய்த்து வேட்கை தணிந்துழியே நலமுறு கின்றன. இதுவே சமயத்தின் அடிப்படை நியதி. துய்த்து அனுபவிக்கப் பிறந்த உயிர்களுக்குத் துய்ப்பன வழங்காமல் ஏழ்மையில் அவலமுறச் செய்துவிட்டு துய்க்கும் நெறிக்கும் அப்பாற்பட்ட இறைவன் முன்னே துய்த்தற்குரிய பொருள்

களைப் படைப்பது பேதைமையேயாம். அதுமட்டுமின்றி ஏமாற்றமுமாகும். இறைவன், துய்த்தற்குரிய பொருள்களைப் படைத்துக் காப்பது உயிர்கள் துய்த்து மகிழ்ந்து, உய்தி பெறுதற்காகவேயாம். அங்ஙனம் துய்த்தற்குரிய புலன்களைப் பெற்றிருந்தும் துய்த்தற்குரிய வாயில்களாகிய பொறிகளைப் பெற்றிருந்தும் இறைவன் கருணையால் துய்த்தற்குரிய பொருள்களைப் பெற்றிருந்தும், பலர் துய்க்கும் வழியின்றித் தொல்லைப்படுகிறார்கள். தன்னலச்செறிவின் காரண மாகவும், துய்த்தல் துறத்தலுக்கு வாயில் என்ற அறிவின்மை யினாலும், இறைநெறி பல்லுயிரையும் பேணிப் பாதுகாக்கும் நெறியே யென்ற உணர்வின்மையினாலும் இந்த அவலங்கள் ஏற்படுகின்றன. மனையறத்தைப் பெயரளவிலன்றி உண்மை யிலேயே அறமாக நிகழ்த்த வேண்டுமாயின் துவ்வாதவரைப் பேண வேண்டும்.

அடுத்துப் பேணத் தக்கவராக வருபவர் இறந்தாராவர். அதாவது நம்முடைய தமிழ் மரபுப்படி, அவாவும் வேட்கையும் தணிந்துழிதான் உயிர் நிலையான நிலையை எய்துகின்றது. அதுவரையில் பிறப்பு இறப்புச் சுழலில் சிக்கிச் சுழல்கிறது. சில சமயங்களில் பருவுடலோடு இந்த உலகிடை நடமாடித் துய்த்து மகிழும்; சில பொழுது பருவுடலினின்று பிரிந்து இறந்துபட்டதாகக் கருதப்பட்டாலும் நுண்ணுட லோடு உலவிப் பொறிகளால் துய்க்காமல் புலன்களால் மட்டும் துய்க்கும். அங்ஙனம் பருவுடல் இறந்துபட்டு நுண்ணுடலில் திரியும் இறந்தார்க்கும் இல்வாழ்வோர் துணையாக நின்று, நீத்தார் நினைவு நாட்கள் கொண்டாடு வதன் மூலம் அவர்களுடைய துய்ப்புக்குத் துணை நின்று அவ்வழி வேட்கை தணியச் செய்யவேண்டும். இங்ஙனம் நுண்ணுடலில் வாழ்வோர் உலகியலில் இறந்து பட்டா ரென்று கருதப்பெற்றாலும் உண்மையில் இறந்தவர்களாகார். இவர்கள் நிலை பரிதாபகரமானது. துய்ப்பார்வத்தைத் தூண்டும் புலன்கள் செத்தபாடில்லை. ஆனால் துய்ப்பன

வற்றைத் தேடிப் பெறுதற்குரிய கருவிகளாகிய பொறிகளோ இல்லை. புலன்கள் எண்ணும், கற்பனை செய்யும்; ஆசைப்படும். ஆனால் தாமே அடைதற்குரிய ஆற்றல் அவர்களுக்கில்லை. ஆதலால், அந்த உயிர்களின் துய்ப்பு நலன்களைப் பாதுகாப்பது இல்வாழ்வோரின் கடமை யாகிறது.

"இறந்தார்" என்ற சொல்லில் உள்ள றகரத்தை இடையின 'ரகரமாகக் கொண்டாலும் யாப்பில் பிழை யில்லை. அப்படி "இரந்தார்" என்று கொண்டால் யாதொரு பற்றுக்கோடுமின்றி — உடலில் உறுப்புக் குறையினராக— உடற் தொழிற்பாடு செய்ய முடியாமல் பிறரை நோக்கி வாழ வேண்டிய நிலையில் இராது நிற்பாரைக் குறிக்கும்.

இன்றைய உலகில் இரப்பாரினம் கண்டு கொள்ள முடியாமல் குழம்பிக் கிடக்கிறது. யாதோர் உடற் குறையுமின்றி உழைப்பிற்கேற்ற முழுத் தகுதியுடையதாய் உடல் விளக்கமுற இருந்தும் கருவி கரணங்கள் யாதொரு பிழையுமின்றி இயங்கினாலும் உழைக்கும் சுபாவம் இன்மையின் காரணமாக இரந்து வாழ்கின்ற "சுகவாழ்வினர்" பலரைச் சந்திக்கிறோம். மனத்தால் துறவாது துறவை வாழ்க்கையின் வாயிலாகக் கருதி மேற்கொண்டோர் பலரும் இரவலர்களாக ஆங்காங்குத் திரிவதைப் பார்க்கின்றோம். துறவி இரக்க மாட்டான்.

துறவி இரவலன் ஆதல் இடும்பைக்கு வழி வகுக்கும். உடல் கட்டுக்கோப்புடையவன் அந்தப் பெயரைச் சொல்லி அழைக்காமல் ஏய்த்து வாழ்ந்தாலும் இரத்தலோடொக்கும். ஆனால் இத்தகையோரை இரவலர் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. நல்லூழின்மையின் காரணத்தாலோ அல்லது இயற்கையின் கொடுமையினாலோ உடற்குறை யுடைய ராயிருப்போரே இரவலர் ஆவர். அவர் தமக்குங்கூட என்றும் இரந்து வாழ்தல் ஏற்ற நெறியன்று. இரத்தல் வாழ்க்கைக்காக

அன்று. வாழ்க்கையை வகைபட நடத்துவதற்குரிய முதலை இரத்தலே இரத்தலாகும். பின் அம்முதலைக் கொண்டு இயன்ற தொழில் செய்து முதலை உண்ணாது வருவாயை உண்டு மகிழ்ந்து வாழ்தலே ஏற்றமுறை. இந்த அடிப்படையில் இரப்பவராயிருப்பவர்க்கு உற்றுழி உதவுவதும் மனையறத் தார்க்குரிய மாண்புள்ள கடமை.

இங்ஙனம் பலருக்கும் துணை நின்று வாழச் செய்வது, வாழ்தலே இயல்புடைய இல்லறம் என்றார் வள்ளுவர். இன்றோ, பலருக்கு பால்வேறுபட்ட இருவர் கூடி ஒரு வீட்டில் உண்டு உடுத்தி வாழ்ந்து மக்களைப் பெருக்கி வாழ்தலே மனையறம் என்றாகிவிட்டது. அதனாலேதான் துன்பம் சூழ்ந்து வருத்துகிறது. வள்ளுவம் காணும் மனையறம் வையகத்தில் மலர்ந்தால் துன்பம் நீங்கும்; இன்பம் பொங்கும்.

## மனிதன் தெய்வமாகலாம்

**வா**ழ்க்கை மிகவும் சுவையுடைய ஒன்று. வாழ்வது என்பதும் ஒரு கலையே. மனிதன் முறையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அந்த முறையான வாழ்க்கையை— வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையைக் கற்றுக் கொடுப்பதே சமய நெறியின் விழுமிய பயன்.

வாழ்க்கைக் கலையில் கைவந்தவர் திருவள்ளுவர். அவர், இந்த வையகத்து மக்களெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து வளமுறவே திருக்குறளைச் செய்தார்.

உலகியலில், மக்களிற் பலர் தெய்வத்தைத் தேடிச் செல்வதைப் பார்க்கிறோம். அதே நேரத்தில், தெய்வத் தன்மைகளைப் போற்றிப் புகழ்ந்து தங்கள் வாழ்க்கையில் அவற்றை மேற்கொள்ளாத நிலைமையையும் பார்க்கிறோம்.

இயற்கையில் மானிட யாக்கைகளுக்குள் யாதொரு வேற்றுமையுமில்லை. உயிர்களுக்குள்ளும் பொதுவில்

வேற்றுமையில்லை; தகுதிப்பாட்டிலேயே வேற்றுமை உண்டு. வீணை பொதுவாக இருந்தாலும் மிழற்றுபவனின் திறமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப இசைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதைப் பார்க்கிறோம். மிழற்றத் தெரிந்தவர் வீணையை மிழற்றினால் இன்னிசை பரவும். மிழற்றத் தெரியாதவர் மிழற்றினால் அபசுரமே பிறக்கும்.

வீணை போன்றதே மானிட யாக்கை. அந்த யாக்கையை அறிவின் விளக்கமாகவும் ஆக்கலாம். அன்பின் விளைநிலமாகவும் ஆக்கலாம். அருள் ஒழுக்கத்தின் செயற்பாடாகவும் ஆக்கலாம். அங்ஙனமின்றிக் குப்பைத் தொட்டியைவிடக் கேடானதாகவும் ஆக்கலாம். அது இயக்குவோரின் ஆற்றலையும் தகுதிப்பாட்டையும் பொறுத்தது. இதையுணர்ந்தே,

*நல்லதோர் வீணைசெய்தே – அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?*

*.........................................................*

*வல்லமை தாராயோ? – இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே!*

என்று கேட்கிறார் பாரதியார்.

காடுகளைக் கழனிகளாக்கிப் பயன் காண்பது மனித ஆற்றல். கல்லைப் பேசும் பொற்சிற்பமாக்கிக் கவின் செய்வது மனித ஆற்றல். இவைபோன்றே, குறைமலிந்த மனித வாழ்க்கையை நிறைவுடையதாக்கித் தெய்வத்தின் நலம் பொதுளச் செய்வதும் மனித ஆற்றலேயாகும். ஏன்? மனிதனே தெய்வமாகலாம்; வாழ்வாங்கு வாழ்ந்தால்! ஆம்! தெய்வமாக மதிக்கப் பெறுவான். இத்தகு பேராற்றல் அவனுக்குள்ளே அடங்கிக் கிடக்கிறது. "தெய்வம் நீ என்றுணர்" என்று நமக்கு உணர்வூட்டுகிறார் பாரதியார். 'கை வருந்தி உழைப்பவர் தெய்வம்' என்கிறார்.

இந்தப் பேருண்மைகளை உள்ளடக்கியே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு,

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்."*

(1001)

*என்றார் திருவள்ளுவர்.*

## பெய்யும் மழை

**தெ**ய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்ற திருக்குறள் இன்றைய யுகத்தில் விவாதத்திற்குரிய குறளாக இருக்கிறது. சிறந்த கற்புடைய பெண்ணுக்கு இலக்கணம் வடித்துத் தருவது இந்தக் குறள். ஒருவருக் கொருவர் நம்பிக்கையும் கடமைப்பாடும் தாங்கியதே நல்வாழ்வு. இந்த உயரிய வாழ்க்கை நெறியில் உலக மனித சமுதாயம் செல்லும்வரை இன்பமே; எந்நாளும் துன்ப மில்லை. கணவனுக்கு மனைவி நம்பிக்கைக்குரியவளாக இருக்க வேண்டும். மனைவிக்குக் கணவன் நம்பிக்கைக்குரிய வனாக இருக்க வேண்டும். நண்பனுக்கு நண்பன் நம்பிக்கைக் குரியவனாக இருக்கவேண்டும். ஏவல் கொள்வோர் - ஏவல் செய்வோர் இவர்களுக்கிடேயேயும் நம்பிக்கை நிலவ வேண்டும்; கடப்பாட்டு நெறி உயிர்ப்போடிருக்க வேண்டும். இந்நெறிமுறை பிறழும் காலங்களிலெல்லாம் மனித உலகம் துன்பத்தால் சூழப்படுகிறது. பெண்ணினத்துக் கற்பை மட்டும் பெரிதுபடுத்தியதற்குக் காரணம், பெண்ணிடத்து நம்பிக்கை மோசம் ஏற்படும்பொழுது, ஏற்படும் ஏமாற்றமும் பகையும் அளத்தற்கரியதா யிருப்பதேயாகும். நிலப் பிரபுத்துவ சமுதாயமும், தனியுடைமை ஆதிக்கமும், பெண்ணடிமைத் தனமும் பரவலாக இருப்பதன் காரணமாகப் பெண்ணின் ஒழுக்கக்கேடு மட்டும் பெரிதுபடுத்தப்படுகிறது. அதனால், மற்ற இனத்திற்குத் தேவையில்லையென்று கொள்ளக் கூடாது. ஆதலால் மனித சமூகத்தின் எல்லா உறவுகளிலும் நம்பிக்கையும் கடமைப்பாட்டுணர்வும் நிலவ வேண்டும்.

சிறந்த கற்புடைய பெண் தெய்வம் தொழமாட்டாள். தெய்வம் கடவுளாகாது. தெய்வம் என்ற சொல்லைப் பெரும்பாலும் சிறு தெய்வங்கள் மேற்றே அறிஞர்கள் ஏற்றுவர். கணவனைக் கூட்டுவிக்கும் காமதேவதையைத் தொழுதலையே "பீடன்று" என்று மறுத்தாள் கண்ணகி. காரணம், தெய்வத்தைத் தொழும்பொழுது தன் கணவனின் குற்றத்தைக் கூறித் தொழவேண்டும். தன்னுடைய கணவனின் பழியை மற்றவர் அறியக்கூறுதலும் தூற்றுதலும் கற்புடைப் பெண்ணுக்கு அழகல்ல. அதனையே, பிறிதோரிடத்தும் திருவள்ளுவர், சொல் காத்தலையும் பெண்ணுக்குக் கடமை யாக்கினார். ஆதலால், தெய்வம் தொழுகின்ற பழக்கத்தைக் கற்புடைப் பெண்ணுக்கு திருக்குறள் விலக்குகிறது.

"கொழுநன் தொழுதொழுவாள்" என்பது கற்புடைய பெண்ணின் அடுத்த இலக்கணம். திருக்குறளின் சொல் லமைப்பு ஆழ்ந்த சிந்தனைக்குரியது. "தொழுதல் என்பதற்கு உடலால் செய்யும் வணக்கம் என்பது மட்டும் பொருள் அன்று. உள்ளத்தால் உணர்வில் ஒன்றாகி—உணர்வு தலை காட்டும்பொழுதெல்லாம் இனந்தெரியாத பணிவும், பரிவும் கொண்டு வாழ்தலென்றும் பொருள் கொள்ள வேண்டும். "தொழுது எழுவாள்" என்ற சொல்முறை வைப்பு இந்தப் பொருளையே சிறப்பாகத் தருகிறது. உடல் வணக்கம் என்றே பொருள் கொள்வதாயின் "எழுந்து தொழுதல்" என்ற முறைவைப்பு இருக்க வேண்டும்.

அடுத்து, உணர்வில் கலந்து ஒன்றான பெண்ணுக்கு கணவனின் இயல்பு, குறை, நிறை, தேவை அனைத்தும் தெரியும். அவனுக்கு எது, எப்பொழுது தேவையோ, அப்பொழுது அவ்வண்ணம் அவள் துணை செய்வாள். வேளாண்மை செய்த ஒருவன் விரும்பியபொழுது மழை பெய்தால் அம்மழையினால் அவனடைந்த வேளாண்மைப் பொருள் பெருக்கமும், மன மகிழ்வும் அளவிடற்கரியன. அது போலவே, உற்ற இடத்து உரியவாறு துணை செய்யும்

வாழ்க்கைத் துணைவியின் மூலம் கணவன் காரியங்களின் சாதனையைப் பெறுகிறான்; மகிழ்வு கலந்த இன்பமும் பெறுகிறான்; புகழும் பீடு நடையும் பெறுகிறான்; வேண்டிய பொழுது பெய்யும் மழைபோல வேண்டியபொழுது உதவி செய்வாள். அதிலும் நுட்பமிருக்கிறது. வேண்டாத பொழுது மழை பெய்யக்கூடாது. அதுபோலவே கணவன் வேண்டாத பொழுதும் மேவித் துணை செய்யக்கூடாது. அங்ஙனம் செய்யப்புகின் அடக்கமின்மையாகவும், தன் முனைப்பாகவும் கருதப்பெற்று உறவு கெடும். ஆதலால் "பெய்யெனப் பெய்யும் மழை" யென்ற சொற்றொடர், சிந்தனைக்கு இன்பம் தருவது. வேண்டியபொழுது காலந் தாழ்த்தாமலும் உடனடியாகப் பெய்யும் மழையும் சிறப்புக்குரியது. அது போலவே கணவனுக்கு வேண்டிய பொழுது உடனடியாகத் துணை செய்யாமல் "இதோ வருகிறேன்" என்றோ "இப்பொழு தென்ன அவசரம்?" என்றோ நீட்டித்துக் காலந்தாழ்த்தாமல் உதவி செய்யும் பெண்ணே உயரிய வாழ்க்கைத் துணைவி யாவாள்.

சிறு தெய்வங்களைத் தொழாது கணவனுடன் ஒன்றிய உணர்வால் ஒன்றித்து வாழ்தலின் காரணமாக உணர்வு நிறைந்த உறக்கத்தினின்று கண் துயில் நீங்கியவுடனேயே கணவனை உள்ளத்தால் நினைந்து, உணர்வால் தொழுது எழுகின்ற பெண், வேளாண்மை செய்தவன் வேண்டிய வாறு பெய்யும் மழை வேளாளனுக்குப் பயன்படுவதைப் போல இந்தப் பெண், தன்னைக்கொண்ட கணவனுக்கு ஒப்பற்ற வாழ்க்கைத் துணைவியாக விளங்குவாள்.

*"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"*

# தலையாய கற்பு

உலகியல் வாழ்க்கையில் உறவின் சிறப்பே தலைதூக்கி நிற்கிறது. நட்பு, காதல் ஆகிய எத்துறை உறவானாலும் சரி, இயற்கையில் அமைந்ததாக இருப்பின் சிறப்புடையதேயாம். செயற்கை முறையில் ஏற்பட்டு வரும் நட்பும், காதலும் சிறப்புடையன அல்ல. மேலும் இத்தகு உறவு வெஃகுதலைப் பெருக்கி, அழுக்காற்றை வளர்த்துத் துன்பியல் பிரிவைத் தரும். முன்னையதில் காவல் இல்லை. பின்னையதில் காவலே உண்டு.

திருவள்ளுவர் இயற்கையைத் தழுவிய இயல்பாய் அமைகின்ற ஒழுகலாறுகளையே எடுத்துக் கூறுகின்றார். மனித சமுதாயத்தின் இனிய ஒழுக்கங்களுள் ஒன்று கற்பு நெறி. மனித இனம் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தபிறகு கால்கொண்ட ஒழுக்க நெறி கற்பு நெறி.

அடுத்து, பல்வேறு தீமைகளைத் தோற்றுவிப்பது காமம். பகை, போர் முதலியனவும் கூட காமத்தால் விளைதலுண்டு. இத்தகு துன்பங்களின் முடிவிலேயே கற்பொழுக்கம் வகுக்கப் பெற்றது.

கற்புநெறியை இயல்பிலேயே ஒழுக்கமாகக் கொள்ளுதலே சிறப்பு. அஃதன்றிச் செய்கை முறையில் கற்பொழுக்கத்தைக் காக்க முற்படுவதில் சிறப்பில்லை. காவல் மூலம் காக்கப் பெறும் கற்பு நிலைத்து நிற்காது. சந்தர்ப்பம் வரும் பொழுது கெடும். அதனாலேயே எதிர்த் தாக்குதல் வந்த பொழுதும் காக்கப் பெற்ற கற்பைப் பெரிதெனப் புகழ்ந்து பேசுகின்றன நமது காவியங்கள்.

"இதயத்தால் விரும்பிக் காக்கும் கற்பே தலையாய கற்பு" என்று திருவள்ளுவர் போற்றுகின்றார்.

> *"சிறைகாக்கும் காப்புஎவன் செயும் மகளிர்*
> *நிறைகாக்கும் காப்பே தலை."* (57)

# அறிவறிந்த மக்கட்பேறு

**வீ**டும் நாடும் சிறப்பது நன்மக்களாலேயாம். நன் மக்களின் தோற்றத்திற்கு நிலைக்களன் மனையற வாழ்க்கை. வாழ்க்கைத் துணை நலத்தைத் தொடர்ந்து திருவள்ளுவர் “மக்கட் பேறு' பேசுகின்றார். ஒன்றிற்கொன்று தொடர்பிருக் கிறது. நன்மக்கட்பேறு வேண்டுமானால் தலைவனும் தலை வியும் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். ஒழுக்கம், பண்பு போன்றவை வழி வழி வளரக்கூடியன. அதனாலன்றோ கம்பன் ‘குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிகட்கெல்லாம், என்று பேசுகின்றான். திருவள்ளுவரும் ‘குலமுடையான் கண்ணே யுள' என்கிறார்.

பொதுவாக பால்வேறுபட்ட இருவர்—ஒருவன் ஒருத்தி கூடி வாழ்ந்தாலே குழந்தை பிறக்கும்—மக்கட்பேறு கிடைக்கும். அஃது இயற்கை. ஆனால், திருவள்ளுவர் இத்தகு இயற்கையான மக்கட் பேற்றினைப் பாராட்டிப் பேசவில்லை. அவர் விரும்புவதெல்லாம் ‘அறிவறிந்த மக்கட்பேறு’. இந்த அறிவறிந்த மக்கட் பேற்றினைப் பெற விரும்பும் தலைவனும், தலைவியும் தங்களை முதலில் செழுமைப் படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் சீலத்தாற் சிறந்த வாழ்வு நடத்துதல் வேண்டும். வித்தின் இயல்பு — நிலத்தின் இயல்பு ஆகிய வற்றைச் சார்ந்தே பயிரின் இயல்பு பயிரின் — நலம்.

அடுத்து, இன்பத்திற்காக மட்டுமே மனைவாழ்க்கை யல்ல. இலட்சியத்தை நோக்கி நடைபோடும் வாழ்க்கையில்— வழியிலே களைப்புத் தோன்றாமல் பயணம் செய்யவே உலகியல் இன்பங்கள். மனைவாழ்க்கையும் அத்தகைத்தே. சிலர் கருதுவது போன்று அது தீமையுமன்று—சிற்றின்பமு மன்று. எனினும், இலட்சியத்தை மறந்த நிலையில்— இங்கேயே தங்கிக் கிடக்கும்போது சான்றோரால் அது தவறு எனக் கண்டிக்கப்பெற்று வந்திருக்கிறது. வாழ்க்கையின்

இலட்சியம் துன்பங்களினின்றும் விடுதலை பெறுதல். பிறப்பு இறப்புச் சுழற்சியினின்றும் நீங்கி திருவருட் சார்பு பெறுதல். இந்நோக்கத்தை நோக்கிப் பயணம் செய்யும்போதே, பிற உயிர்களுக்குத் தொண்டு செய்தலும் இணைக்கப் பெறுகிறது. மனையறத்தில் தலைவன், தலைவியாக இருந்து ஒருவருக் கொருவர் உதவி, இன்பம் பெற்று வாழ்தல் அமைப்பு.

இந்த அமைப்பிலேயே, இலட்சிய உணர்வோடு கூடிய வாழ்வியற் பயணம் செய்ய உதவும் மனித உடம்பைப் பெறாத உயிர்களுக்கு—துணை செய்யக் கூடிய மனித உடம்பைப் பெறாமல் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் உயிர்களுக்கு மனித உடம்பைத் தந்து உதவி செய்யக்கூடிய அரிய சாதனமாகவும் மனைவாழ்க்கை பயன்படுகிறது. ஆதலால், மனைவாழ்க்கையைச் சாதாரண ஒன்றாகக் கருதாமல் அதையே 'தவம்' செய்யும் சாதனமாகக் கருதிப் பயன்படுத்தினால் அறிவுறிந்த மக்கட்பேறு கிடைக்கும்.

திருஞானசம்பந்தரை ஈன்றெடுத்த குடும்பம் மனை யறத்திலேயே தவம் செய்த குடும்பம். சிவநெறி வளர்க்கும் திருப்பிள்ளை வேண்டும் என்ற குறிப்பிட்ட குறிக்கோளோடு தவம் செய்தே அவர்கள் அப்பேற்றினைப் பெற்றார்கள். இத்தகு நோன்பினை எல்லாக் குடும்பங்களுமே நோற்க வேண்டும்.

திருவள்ளுவர் அறிவறியும் மக்கட்பேறு என்று கூறாமல் 'அறிவறிந்த மக்கட்பேறு' என்று கூறியமையான், "தந்தை தாயாரின் முயற்சியால் கருவிலேயே அறிவறிந்த" என்ற குறிப்பினை உணர்த்துகின்றார். கருவிலே அறிவுடையவர்கள் —இளமைப் பருவத்திலேயே—குழந்தைப் பருவத்திலேயே கூர்ந்த மதியுடையராகத் திகழ்கின்றார்கள். திருஞான சம்பந்தர் தம் மூன்றாவதாண்டிலேயே திருநெறித் தமிழைப் பாடியது நினைவு கூரத்தக்கது.

கவிஞன் பாரதியும், பிறப்பிலேயே கம்பன், வள்ளுவன், இளங்கோ போன்றவர்கள் கருவிலேயே அறிவுடையர் என்று குறிப்பிடுகின்றார். இதனையே வள்ளுவர்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற." (61)

என்ற குறட்பா வாயிலாக உணர்த்துகின்றார்.

## வெய்யிலும் அறமும்

**கா**ய்கதிர்ச் செல்வன் ஆக்கத்தின் சின்னம். இருள் நீக்கி ஒளி தருவது கதிரொளி; மடிநீக்கி ஏற்றத்திற்குரிய எழுச்சியை ஈவது ஞாயிறு. செந்நெல்லும் செங்கதிரும் பயனுறச் செய்வதும் செங்கதிரோன் ஒளியே யாம்! எழுகின்ற ஞாயிற்றின் ஒளி இருள்நீக்கும்—ஒளி பெருக்கும்—உறுதி பயக்கும்—வாழ்வளிக்கும்! எனினும், எலும்பில்லாத புழுக் களை அது தாக்கி வருத்தும்! வெயிலின் கொடுமையி னின்றும், தற்காத்துக் கொள்ள எலும்பு தேவை. எலும்பிருந் தால் தற்காத்துக் கொள்வது மட்டுமின்றிக் கதிரவனின் ஒளி கொண்டு வாழவும் முடியும்.

அந்நியை நீக்கி நீதியை நிலை நிறுத்துவது அறம். துன்பத்தை நீக்கி இன்பத்தை நிலைபெறச் செய்வது அறம். அறத்திற்கு விலை அன்பேயாகும். அன்புடையோருக்கு அறம் தென்றல்! அன்பில்லாதவர்களுக்கு அது வருத்தும் வாடை—துன்பப் புயல்! ஏன்? அன்பின் விளைவு அறம். அன்பின் பயன் அறம். அன்பு பண்பு, அறம் பயன்! இன்பத்தின் தாய் அன்பு. அன்பில்லாமல் மனித குலத்திற்குத் தீமை செய்து வாழ்பவனை அறக் கடவுள் வருத்தும். இதிகாச உலகில் இராவணனும், பௌராணிய உலகில் பத்மாசுரனும்,

அரசியல் உலகில் ஜார் மன்னனும் இதற்கு எடுத்துக் காட்டாவர்.

வெய்யிலின் காய்ச்சலிலிருந்து ஒரோவழி தப்பித்துக் கொள்ள முடியும். வெளியில் தலைகாட்டாமல் மண்ணிற்கு உள்ளேயே புழு வாழுமானால் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் அறக்கடவுளின் காட்சியிலிருந்து அன்பில்லாத மனிதன் தப்பித்துக் கொள்ள முடியாது. அறக்கடவுள் எல்லாமாய்—முழுவதுமாய் இலங்குகிறார். அவரது பார்வை ஆழ்ந்தகன்றது. ஆதலால், அன்புடையராக வாழ்தலும், அறக் கடவுளின் கருணையில் வளர்தலும் நமது கடமை.

அன்புடையராக வாழ்தலின் மூலம் தற்காத்துக் கொள்ளுதல் முன்னேறுதல், இன்பந் துய்த்தல், திருவருள் நிலை பெறுதல் ஆகிய பேறுகள் கிடைக்கின்றன. அன் பின்மையால் இவற்றை இழக்கிறோம். அழிவும் ஏற்படுகிறது.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்." (77)

## மனிதனும் மரமும்

**வ**றண்ட பாலைவனம்!

நீரூற்றின் சாயலே இல்லாத நிலப் பரப்பு. அந்தப் பாலைவனத்தில் ஒரு பட்டமரம்! அது தளிர்த்தது!

என்ன திகைக்கிறீர்களா? நாம் சொல்வது வியப்பாக இருக்கிறதா?

ஆம்! மேலே சொன்னவை நடக்கக் கூடாதவை. நடக்க முடியாதவை என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள்! அது போலவே, அகவாழ்வில் அன்பைப் பேணி வளர்க்காதவர் களுக்கு வாழ்க்கையில் முன்னேற்றமில்லை! அவர்கள் செல்வத்தால் செழிக்க முடியாது! புகழால் பீடுநடை போட முடியாது!

தமிழின் மரபுப்படி நிலம் நான்குதான். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியன. ஐந்தாவது நிலம் ஒன்றுண்டு! அதுதான் பாலை. ஆனால் பாலை, இயல்பாக இருப்பதல்ல. நான்கு நிலங்களின் திரிபாலும் மாறுபாட்டாலும் தோன்றுவதுதான் பாலை.

இத்தகு மாறுபாட்டின்—திரிபின் காரணமாக வளம் தருகின்ற பொருள்களின் உறவிலிருந்து நிலம் ஒதுங்கு வதனால், வளத்தைப் பெறவோ, தரவோ முடியாத வறட்சி நிலை ஏற்பட்டு விடுகிறது. வளம் பெறுதலும் தருதலும் ஆகிய சூழல் அல்லது கடமைப்பாடு என்ற இயற்கை நியதியி லிருந்து மரம் விலகி விடுதலின் காரணமாகப் பயன் தராத— பெறாத நிலையில் அது வற்றிப் போய் விடுகிறது.

அதுபோலவே, கொண்டும் கொடுத்தலும், அன்பும் உறவும் காட்டிக் கூடிவாழ வேண்டிய மனிதன், அன்பு காட்டும் ஒழுக்க நெறியிலிருந்து விலகியவனின் சுற்றுச்சூழல் வறண்ட பாலைவனமாகி விடுகிறது. அன்பைச் சொரிதற் குரிய வாய்ப்பையும், அன்பைப் பெறுதற்குரிய வாய்ப்பையும் அவன் இழந்து விடுகின்றமையின் காரணமாக வற்றல் மரம் போலச் சாரமற்றவன் ஆகிவிடுகிறான்.

வற்றல் மரம் எப்படித் தளிர்க்காதோ, அது போலவே மனத்தகத்தே அன்பில்லாதவனின் வாழ்க்கை சிறக்காது. ஆதலால், மற்றவர்களிடத்தே மனங் கலந்த அன்பு காட்டுவதே வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுதற்குரிய வழி என்பது வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி. ஆம்; பிறரை வாழ்வித்து வாழ்தலும், மகிழ்வித்து மகிழ்தலுமே நல் வாழ்க்கையின் இயல்பு என்ற உண்மையினை அழகாக உவமையின் மூலம் வள்ளுவர் நமக்கு உணர்த்துகின்றார். இதோ குறளைப் பாருங்கள்.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று." (78)

# விருந்தோம்பல் வேண்டுமோ?

தமிழர் நாகரிகத்தின் மிகச் சிறந்த ஒழுக்கம் விருந்தோம்புதல். உண்பதன்முன், தன் வீட்டு முகப்பில் உணவருந்த வேண்டியவர்கள் யாரேனும் உளரோ என்று பார்த்து, அவ்வாறு எவரேனும் இருந்தால் அவர்களை அழைத்து உண்பித்துப் பின்னர் தாம் உண்பதென்பது தமிழர்களின் விழுமிய ஒழுக்கம். விருந்தினர்கள் சுதந்திர மாக—உரிமையுடன் வந்து தங்க திண்ணைகள் அமைத்து வீடு கட்டுவது நமது மரபு.

திருமூலர் திருமந்திரம்,

"யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி"

என்று வரையறுத் தோதுகிறது.

விருந்தோம்பும் சால்பினர் வாழும் ஊரில் அடிக்கடி அயலூர்ச் சான்றோர் வருவர். அவ்வழிச் சிறந்த அறிஞர்கள், புலவர்கள், முனிவர்கள் ஆகியோருடைய உறவும் உள்ளக் கருத்தும் எளிதிற் சமுதாயத்திற்குக் கிடைக்கும். வந்தோரை உண்பித்தலின் காரணமாக அவ்வூரின் புகழும் பரவும்.

இத்தகு சிறப்புக்களுக்குக் காரணமாகத் திகழ்கின்ற நல்லோரின் கழனிகள் நல்லோரின் உடைமைகள் உரிமை யால் ஒருவருடையவையாக இருப்பினும் அதன் விளைவுகள் பலருக்கும் பயன்படுவதன் காரணமாக உரிமையாளரைவிட ஊரினரே அவர்தம் உடைமைகளைக் காப்பாற்றுவதில் அக்கறை காட்டுவார்கள். அவர்களே விருந்தோம்பி வேளாண்மை செய்வோரின் நிலங்களை வளப்படுத்து வதோடு மட்டுமின்றி, விதைகளும் தூவுவார்கள். அங்கே, உடைமை உரிமை உணர்வு—இன்மையுணர்வு இரண்டுக்கும் மோதல் ஏற்படாது. ஏற்பட்டால் ஒரு சிறந்த சமுதாய அமைப்பே கால் கொள்ளுகிறது. அதனாலேயே திருவள்ளுவர்.

*"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்."* (85)

என்று கேட்கின்றார். இக்கருத்தினில் நம்பிக்கையில்லாதோர் சில பேர் இது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதாகக் கருதினார்கள்.

பாவேந்தர் பாரதிதாசன்கூட இதில் நம்பிக்கையில் லாமல், "மிடல்" என்பதனை வேலி என்று பொருள் கொண்டு வேலியிட வேண்டுமோ? என்று பொருள் கண்டிருக்கிறார். அதிலும் அவர் ஊரின் நல்லெண்ணத்தில் துளியும் ஐயப்படவில்லை. அத்தகைய பண்பாடுடையவர் களின் நிலத்துக்கு வேலியடைக்க வேண்டியதில்லை—ஊரே காப்பாற்றும் என்று கூறுகிறார். அவர் அத்தகு கருத்துக் கொண்டதற்குக் காரணம், நிலம் விதை போடாமலேயே விளையும் என்று வள்ளுவர் சொல்லியிருப்பதாகக் கருதியதே போலும்!

திருவள்ளுவர் அப்படிச் சொல்லவில்லை. நிலத்தை யுடையவர்கள் விதை பாவ வேண்டுமோ என்ற குறிப்பிலேயே திருவள்ளுவர் பேசுகிறார் என்று கருதுவதில் தவறில்லை.

## இம்மையும் மறுமையும் இன்பந் தரும்

**ம**னித வாழ்வின் இலட்சியம் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுதல். சில ஒழுக்கங்கள் இம்மைப் பயன் மட்டுமே தரும். மிகச் சிலவே இம்மை மறுமை ஆகிய இரண்டுக்கும் இன்பந் தரும். இருமையும் இன்பந் தரும் அம் மிகச் சிலவற்றுள்ளும், பெரும் முயற்சியின்றி எளிமையில் கைவரக் கூடிய ஒழுக்கம் இனியவை கூறல்.

மனித குலத்தின் உறவுக்கும் இன்பத்திற்கும் அடிப்படை இனியவை கூறலேயாகும். இனியவை கூறலினும்

இனிய வார்த்தைகளைப் பேசலினும், அகமும் புறமும் ஒத்துப் பேசுதல் பெருந் தவ ஒழுக்கமாகும். சிலர் உதட்டில் இனிய வார்த்தைகளைப் பேசுவர். ஆனாலும் அகத்தே கருப்பு வைத்து வாழ்வர். அதனாலேயே திருவள்ளுவர் 'சிறுமையுள் நீங்கிய இன்சொல்' என்று குறிப்பிடுகின்றார்.

இதற்குச் சிறுமைப் பண்புகள் நீங்கிய மனிதன் சொல்லும் இன்சொல் என்றும் பொருள் காணலாம். சொல்லும் சொற்களுள் விளைவினால் தீமையில்லாத—தீமை பயவாத நற்சொல்லும் இன்சொல்லேயாம். சிறுமை—சிறுமிய மரபுகள் அகத்திலும் கூடா—செயல்களிலும் கூடா. சிறுமையினின்றே சிறுமை தோன்றும். பிறருக்குச் சிறுமை தரத்தக்க செயலைச் செய்கின்றவனும் சிறுமை உடையவனே யாம்.

இனிய பண்புகளிலிருந்தே இனிமை பிறக்கிறது. இனிமை—இனிய சொற்கள் இம்மை வாழ்வில் நண்பர்களைக் கூட்டுவிக்கும்; துன்பத்தை நீக்கும். இன்பத்தைப் பெருக்கும். அவ்வழி மறுமையும் கூட்டுவிக்கும்; மறுமை இன்பத்தை அளிக்கவல்ல இறைவனும் இனிமை தவழும் புன்சிரிப்பையுடையவன். ஆதலால், வருந்தி உழைத்துப் பெறக் கூடிய மறுமை இன்பத்தையும் இனிய சொற்களை வழங்குவதன் மூலம் எளிதிற் பெற்றுவிட முடியும் என்பதும் திருவள்ளுவர் கருத்து.

ஆனால் உலகியலில் இந்த இனிய — எளிய பண்பு கூட வளராதது வியப்பாக இருக்கிறது.

*"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்*
*இம்மையும் இன்பந் தரும்."* (98)

## செய்ந்நன்றி

இறைமை என்பது நற்குணங்கள் பலவற்றின் கூட்டு. குணங்கள் பண்பு; இறைவன் பண்பி. நற்குணங்கள் பல

வற்றுள்ளும் தலையாயது நன்றியறிதல். சிசிரோ என்ற பேரறிஞன் 'நற்குணங்களுக்கெல்லாம் தலையாக விளங்கும் நற்குணம் நன்றி காட்டுதல்' என்றும் எல்லாக் கடமைகளுக்கும் மூலமுதல் நன்றி காட்டும் குணம் என்றும் கூறிச் சிறப்பிக்கிறார். அதாவது, ஒருவர் செய்த நன்மையை—உதவியைப் பாராட்டி நினைவிற் கொண்டு கடமைகளாற்றுதல். நன்றி காட்டும் ஒழுக்கம் சொல்லி வரக்கூடிய தன்று. இயல்பாகவே மனிதன் கொண்டு ஒழுக வேண்டிய ஓர் ஒழுக்கம். அதனாலன்றோ திருவள்ளுவர் 'செய்ந் நன்றி யறிதல்' என்றே குறிப்பிட்டார்.

வாதவூரடிகள் தமது தேனமுதத் திருவாசகத்தில் அடிக்கடி நாயினை இழுப்பார். நாயினுங் கடையேன் என்ற சொற்றொடர் பெருகிக் கிடக்கின்றது திருவாசகத்தில். ஆதாவது, நாய்க்கு நன்றிகாட்டும் உணர்ச்சி உண்டு. பகுத்தறிவு படைத்த மனிதனாகிய எனக்கு அக்கீழான நாய்க்குள்ள குணமும் இல்லாமற் போயிற்றே என்பது குறிப்பு. நாயும்கூட மனிதனை நோக்க நன்றி காட்டும் உணர்ச்சியில் பாராட்டக்கூடியதே யன்றி அதனிடத்திலும் முழுமையாக நன்றி காட்டும் பண்பில்லை.

இறைவனின் திருவருளைப் பெறுதற்குரிய வாயில்கள் கருணை காட்டுதல், நன்றி காட்டுதல் ஆகியவைகளேயாம். இறைவன் மகிழ்வுடன் தங்கியிருக்கும் இடங்கள், ஒன்று சொர்க்கம் அல்லது விண்ணுலகம். மற்றொன்று அமைதியான நன்றி காட்டும் பண்பிற் சிறந்த உள்ளம். ஆதலால் நன்றியறிதல்—நன்றி காட்டுதல் என்பது உலகியல் ஒழுக்கம் மட்டுமன்று, அருளியல் ஒழுக்கமுமாகும்.

உலகில் செய்யக்கூடாத பாவங்கள் பல. அவற்றை யெல்லாமே செய்தாலும், வருந்துதல், நோன்பிருத்தல் முதலியவைகள் மூலம் கழுவாய் தேடிக்கொள்ளலாம் என்றும் நன்றி மறக்கும் தவறு செய்தால் கழுவாய்

இல்லையென்றும் கூறுகிறது தமிழரின் வாழ்வியல் காட்டும் புறநானூறு.

*"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்*
*மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்*
*பார்ப்பார் தப்பிய கொடுமை யோர்க்கும்*
*வழுவாய் மருங்கில் கழுவாய் உளவென"*

என்று கூறி, நிலமே நடுக்குற்றுப் பெயர்ந்தாலும் நன்றி மறக்கக் கூடாதென வலியுறுத்துகிறது; அது.

*"நிலம்புடை பெயர் வதாயினு மொருவன்*
*செய்திகொன் றோர்க்கு உய்தி இல்லென*
*அறம்பா டிற்றே ஆயிழை கணவ"*

என்றும் பேசுகிறது.

கற்றோர் ஏத்தும் கலித்தொகையும், "ஒருவன் தனக்கு இடர்வந்துற்ற போது உதவியவர்க்கு அவருக்குத் தேவைப் படும் காலத்தே உதவாது போனால், தானே தானாகத் தேய்வான்" என்று கூறுகிறது. நன்றி கொன்ற பாவம் இவ்வுடல் ஒழிந்த பிறகும்கூட உயிரைத் தொடர்ந்து நின்று துன்புறுத்தும் என்றும் கலித்தொகை கூறுகிறது.

*"கற்பித்தான் நெஞ்சழுங்கப்*
*பகர்ந்துண்ணான் விச்சைக்கட்*
*டப்பித்தான் பொருளே போற்*
*றமியவே தேயுமா*
*ஒற்கத்துள் உதவியார்க்*
*குதவாதான் மற்றவன்*
*எச்சத்துள் ஆயினும் அஃது*
*எறியாது விடாதே காண்".*

கவியரசன் கம்பன் "உதவி கொன்றோர் உய்தற்கு உபாயமே இல்லை" என்று கூறுகின்றான். திருவள்ளுவர்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ வகுத்துக் காட்டிய அறநெறி களுள் செய்ந்நன்றி மறவாமை ஒன்று. திருவள்ளுவர்,

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு." (110)

என்ற குறட்பாவில் பயன்களை அல்லது விளைவுகளை அறுதியிட்டு உறுதியாகக் கூறுவது உணர்ந் தின்புறத்தக்கது.

எந்நன்றி என்பதன் மூலம், நன்றல்லா எல்லாவற்றினை யும் உள்ளடக்கினார். கொன்றார்க்கும் என்பதிலுள்ள உம்மை நன்றல்லாதனவற்றைச் செய்யக்கூடாது என்பதையும் உணர்த்துகிறது. உய்வுண்டாம் என்ற சொல்வழி 'உய்தல் கூடும்' என்று பொருள் கொள்ள முடிகிறதே யன்றி, உறுதிப் பாடில்லை. 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை' என்பதில் தெளிவும் உறுதியும் இருக்கக் காண்கிறோம், உய்வில்லை என்பதனாலேயே பல பிறப்புக்களிலும் உய்வில்லை என்பதும் பெறப்படுகிறது.

ஆதலால், நாம் அனைவரும் நன்றியறிந்து கடமைப் பாடுடையவர்களாக வாழ வேண்டும். நமக்கு இந்த வாழ்க்கையைக் கொடுத்த இறைவனுக்கு நன்றிக்கடப் பாடாக அவனை வாழ்த்துதல் வேண்டும். வாழ்த்துதல் மட்டும் இறைவனை மகிழ்விக்காது. அவன் உவக்கக்கூடிய வகையில் அவனுடைய அருமைக் காரியப்பாடாக இருக்கின்ற உயிரினங்களுக்குத் தொண்டு செய்தலும் ஒருவகை வழிபாடேயாகும். பல்வேறு உயிர்வர்க்கத்தின் உழைப்பினாலும், உதவியினாலுமே நாம் வாழ்கின்றோம். மீண்டும் அந்த உயிர்வர்க்கத்திற்கு நாம் உதவி செய்ய வேண்டாமா என்ன? அதுவே நன்றி காட்டும் பண்பு. அதுவே சிறந்த இறை வழிபாடு.

ஆண்டவன் எண்ணத்தோடு அல்லது திருவருட் சிந்தனையோடு தொண்டு செய்யவேண்டும். நன்றி காட்டு தலும் ஒருவகை வழிபாடேயாகும்.

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு." (107)

## எச்சத்தாற் காணப்படும்

மனித குலத்தின் விழுமிய சிறப்புக்களுள் ஒன்று தன்னை அவ்வப்பொழுது நினைந்தும், நினைவுறுத்தியும் ஒழுக்க நெறிப் படுத்திக் கொள்வதாகும். இவ்வாறு ஒழுக்க நெறிப்படுத்திக் கொள்ளும் முயற்சிக்கு இன்றியமையாத தேவை பகுத்தறிவு. இங்கு பகுத்தறிவு என்பது நன்மை தீமைகளின் கூறுபாடுகளை ஆராய்தலும், அறிதலும் ஆகும். அங்ஙனம் ஆராய்ந்தறிகின்ற போழ்து, சார்பின்றி ஆராய்தல் வேண்டும். செய்திக்கு உரியாரிடத்திலும், அச்செய்தியால் விளையக்கூடிய பலாபலன்களிலும் பற்றுதல் இருக்குமானால் பகுத்தறிவுத் தரத்துடன் செயல்பட முடியாது. ஒன்றை அல்லது ஒருவரைச் சார்ந்து நின்று ஆராய்வதற்குப் பகுத்தறிவு என்று பெயரில்லை. எந்த விதமான சார்பும் பற்றுக்கோடும் விருப்பும் வெறுப்பும் இன்றிச் செய்தியைச் செய்தி அளவிலேயே ஆராய்ந்து அறிதலும், அவற்றை வலியுறுத்தலும் தம்மைச் சார்ந்தோரை வழி நடத்துதலும் போற்றுதலுக்குரிய பண்பாடாகும். இப்பண்பாட்டையே "நடுவு நிலைமை" என்ற அறநூல்களும் ஒழுக்க நூல்களும் வலியுறுத்துகின்றன.

திருவள்ளுவர் நடுவு நிலைமை என்றே ஒரு அதிகாரம் வைத்தார் நடுவு நிலைமைக் கொள்கையை மேற்கொண்டொழுகுதலை "தவம்" என்று கூடச் சொல்லலாம். நடுவு நிலைமைக் கொள்கையை ஏற்றுக் கோடலில் வருகிற இடுக்கண்களைத் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலிலே பேராசிரியர் விளக்குகின்றார்.

*செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்*
*நெஞ்சோர்ந் தோடா நிலைமை.*

என்று காட்டி, "அது காமம் வெகுளி மயக்கம் நீங்கினோர் கண்ணே நிகழ்வது" என்றும் பேசுகின்றார்.

நடுவு நிலைமைக் கொள்கையுடையோர் விருப்பு வெறுப்புக்களினின்றும் விடுதலை பெறுதல் வேண்டும். இறைவனும் "வேண்டுதல் வேண்டாமை இலன்" அன்றோ? அவ் இறைவனை வாழ்த்து வணங்குகிறவர்களுக்கும் இக் குணவியல்பு இன்றியமையாததுதானே! நடுவு நிலைமைக் குணம் இல்லார், நல்லவர்களாக இல்லாததோடு மட்டு மின்றித் தீயவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் தீயவர் களாக இருப்பதோடு மட்டுமின்றி மற்றவர்களையும் கெடுத்து அறமில்லாத வழிகளில் செலுத்துவார்கள்.

அரசு அமைச்சின் வழி. அமைச்சு கெட அரசு கெடும். கெட்ட அரசு-கொடுங்கோல் அரசு. கதிரவன் கடுகிக் காய் கின்ற காய்ச்சல் பயிர்களைச் சுடுதல் போன்று மக்களைச் சுடும். ஆதலால், அமைச்சர் நடுவு நிலைமை உடையோரா யிருத்தல் வேண்டும், இக்கருத்தினைப் பாலைக் கலி,

"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதுரர்ந்த மன்னவன் கோல்போல் ஞாயிறு
கடுகுபு கதிர்முட்டிக் காய்சினந் தெரிதலின்"

என்று பேசுகிறது.

நியாயம், நியாயமின்மை ஆகியவற்றிற்குக் கருவி நடுவு நிலைமையுணர்வேயாகும். செல்வர்க்கும், வறியர்க்கும் ஒப்ப நியாயம் வழங்குவதே வாழ்வியல் முறை. இதனை,

"முறை தெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்
இறை தெரியா நேரொக்கல் வேண்டும்"

என்று பழமொழி பேசுகிறது. ஆனால் உலகியலில் இன்று செய்தியை ஆராய்வதற்குப் பதிலாகச் செய்தி யாரால் சொல்லப்படுகிறது என்றே பார்க்கப்பெறுகிறது. மேலும் 'செய்தியைச் சொல்லுகிறவர்கள் செய்தும் காட்ட

வேண்டும்—அப்பொழுது தான் சொல்லலாம்” என்றும் சொல்லப்பெறுகிறது. தீமையின் அனுபவத்தின் விளைவில் தான் நன்மை அரும்புகிறது. ஆனாலும், அந்த நன்மையைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்த அந்தத் தீய அனுபவத்தில் எப்படி நன்மையைக் காண முடியும்? அதனால் ஆராய்வு செய்தி பற்றியதாகவே இருத்தல் வேண்டும்.

நடுவுநிலைமைக் கொள்கை பண்படாத சமுதாயத்தில்—நட்புலகின் தொடக்கத்தில் இன்பம் இருக்காது. மாறாகத் துன்பம் தரும். நண்பர்களும் பகைவர்களாவர். எனினும், தொடர்ந்து நடுவு நிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித் தொழுகின் இறுதியில் இன்பம் வந்தெய்தும். தன்னுடைய வாழ்க்கை—தன்னலம் ஆகியவற்றைவிடக் கொள்கைக்கும் சீலத்திற்குமே உய்வு தந்து ஒழுகுதல் வேண்டும். அங்ஙனம் ஒழுகிய ஒருவன் அக்கொள்கையின் காரணமாகவே இறந்து பட்டாலும் கூட உலகத்து மக்கள் அக்கொள்கைக்கும் சீலத்திற்குமே உயர்வு தந்து ஒழுகுதல் வேண்டும். அங்ஙனம் ஒழுகிய ஒருவன் அக்கொள்கையின் காரணமாகவே இறந்து பட்டாலும்கூட “அக்கொள்கைகள் தங்கி நின்று விளக்கம் பெற வாய்ப்பில்லாது போயிற்றே” என்று உலகத்து மக்கள் இரக்கமுறுதலின் மூலம் புகழ் சேர்ப்பர். நடுவு நிலைமையை “நன்னர் நடுவு” என்று நெய்தற் கலி பாராட்டுகிறது. அதாவது, “நன்மையை உடைய நடுவு நிலைமை” என்கிறது. திருவள்ளுவர்,

> “தக்கார் தகவிலர் என்ப தவரவர்
> எச்சத்தாற் காணப் படும்.” (114)

என்கிறார். இக்குறட் பாவுக்கு உரை கண்ட பரிமேலழகர் எச்சத்தை நன்மக்கள் மீதேற்றினார். அதோடு இயற்கைக்கு மாறாக—உடற்கூற்றுக்கு முரண்பாடாக மக்கட்பேறு உண்டாதலையும் இல்லாமற் போதலையும் உள்ளடக்கியும்

உரை கண்டுள்ளார். நன்மக்கள் என்ற உரை ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியது. பின்னையது ஏற்றற்கில்லை. மணக்குடவர் ஆரவாரத் தொழிலின் மீதேற்றினார். காளிங்கர் ஒழுக்கத்தின்பாற் படுத்தினார். மேற்கண்ட உரைகள் அனைத்தும் ஆராய்ச்சிக்குரியனவாகவே தோன்றுகின்றன. திருவள்ளுவரின் திருவுள்ளத்தைக் கண்ட அமைதி தோன்றவில்லை. மேலும், உரையாசிரியர்கள் தத்தம் காலத்தே வழக்கில் இருந்த செய்திகளின் சார்பிலேயே உரை எழுதியிருக்கின்றனர்.

இலக்கண மரபுப்படி எஞ்சுதல் எச்சம். ஒருவனுடைய மரணத்திற்குப் பிறகு அவனுடையதாக இந்த உலகில் எஞ்சுவது அவனுடைய புகழ் அல்லது பழியேயாகும். நடுவு நிலைமை கொண்டொழுகியோருக்குப் புகழ் நிற்கும். அல்லாதோர்க்குப் பழி நிற்கும். வரலாற்றுப் போக்கிலும் இவ்விரண்டு காட்சிகளையும் பார்க்கிறோம். பாரியின் புகழ் எஞ்சி இன்றும் உலவுகிறது. அழுக்காற்றின் காரணமாக நடுவிகந்து பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்ட மூவேந்தரின் இகழ்ச்சியும்—பழியும் இன்றும் எஞ்சி நிற்கிறது. ஆதலால்,

*"தக்கார் தகவிலர் என்ப தவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்."* (114)

என்ற குறட்பாவுக்கு—எச்சத்தாற் காணப்படும் என்பதற்கு அவர்களுக்குப் பின் எஞ்சி நிற்கின்ற புகழ் அல்லது பழி இவையே அவர்களின் நடுவு நிலைமைச் சிறப்பைக் காட்டும் என்று பொருள் காண்பதே சிறப்பாகத் தெரிகிறது.

## எல்லார்க்கும் நன்றாம் பணிதல்

**ம**னிதனைக் கெடுதலில் வீழ்த்தும் குணக் கேடுகளில் தலையாயது ஆணவம். ஆணவத்தின் வழிப்பட்டது அகங்காரம். அகங்கார குணம் படைத்தவன் பிறரை மதிக்க

மாட்டான். நல்ல வார்த்தைகள் பேச மாட்டான். இழித்துப் பேசுதலையும், பழித்துக் கூறுதலையுமே தொழிலாகக் கொள்வான். அதன் காரணமாகப் பகை வளர்ப்பான்; நண்பர்களை இழப்பான். தான் உயர்ந்தவன் என்ற நம்பிக்கை அவனிடத்தில் இருப்பதனால், வளர்ச்சிக்குரிய கூறுபாடுகள் அவனிடம் இரா. அவன் வாழ்க்கையில் மாறுதலும் இருக்காது—வளர்ச்சியும் இருக்காது. ஆணவத்தின் பகை அடக்கமுடைமை. அடக்கமுடைமையை அணிகலனாகக் கொண்டவர்களுக்கு ஆணவத்தின் வாசனையே இருக்காது. பணிவும் இன்சொல்லுமே அவர்கள்பால் குடிகொண்டிருக்கும்.

அடக்கமுடைமை என்பது அச்சத்தினால் பணிந்து செல்லும் கோழைத்தனத்தைக் குறிப்பதன்று. எதிர்த் தாக்குதல் செய்யும் ஆற்றல் இருந்தும், அதனைச் செய்யாமையே அடக்கமுடைமை! 'அறிவு, செல்வம் புகழ் ஆகியவைகள் இல்லாமற் போயினும் அடக்கமுடைமையின் காரணமாக மேற்கண்டவற்றைப் பெறுவதோடன்றிச் சிறப்பாகவும் வாழ முடியும்! ஆனால், மேற்கண்ட எல்லா வற்றையும் பெற்றிருந்தாலும் அடக்கம் இல்லாமற் போனால், அவர் பெற்றிருக்கிற அனைத்திலுமாய சிறப்புக்களையும் இழந்து இழிநிலை எய்துவார். ஆகையால், நற்குணங்களுள் மிகமிகச் சிறந்தது அடக்கம் உடைமை!

அடக்கமுடைமை எல்லோருக்கும் தேவை. எப்பொழுதும் தேவை. அதுவும் எல்லாவிதமான தகுதிப் பாடுகளும் இருக்கின்ற போழ்து, அடக்கமுடையராக இருத்தல் சிறப்பிற்கெல்லாம் சிறப்பு. 'ஒருவனுடைய இயல் பான பண்பை அவனுடைய செல்வம், புகழ், பதவி ஆகிய தகுதிப்பாடுகள் உயர்கின்ற போழ்து காணவேண்டும்' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. பொதுவாக அறிவினாலும், செல்வத்தினாலும், பதவியினாலும், தவத்தாலும் இன்ன பிறவற்றாலும் செருக்கு தோன்றுவதுண்டு. அறிவினால்

செருக்கடைந்து அடக்கப் பெற்றதற்குச் சான்று அருணந்தி சிவாச்சாரியார்; செல்வத்தால் செருக்கடைந்து அடக்கப் பெற்றதற்குச் சான்று ஜார் பேரரசன். பதவியினால் செருக்கடைந்து அடக்கப் பெற்றதற்குச் சான்று நான்முகன். தவத்தினால் செருக்கடைந்து அடக்கப் பெற்றதற்குச் சான்று கொங்கண மாமுனி. ஆதலால், திருவள்ளுவர் அறிவு, செல்வம், புகழ், பதவி முதலிய இல்லாதார் அடக்கப் பண்பில்லாதவராக இருப்பதைவிட இவையனைத்தும் உடையார் அடக்கப் பண்பில்லாதவராக இருப்பது ஆபத்தானது என்று குறிப்பிடுகிறார். ஆம், செல்வத்திற்குப் பிறிதொரு செல்வமாகத் திகழக் கூடியது அடக்கமுடைமை. ஆதலால், 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அடக்கமுடைமை விரிந்த ஒழுக்க நெறி. ஒழுக்கத்தின் பாற் பட்டதாகவும் அடக்கத்தினைக் கருதலாம். கற்றோர் போற்றும் கலித்தொகை, 'அடக்கம் அறிவால் சிறந்ததென ஆராயப் பெற்று முடிவு ஏற்றுக்கொள்ளப் பெற்றது' எனக் குறிப்பிடுகிறது. வேண்டியவாறு ஒழுகுதலை அடக்கமின்மை என்றும், ஆற்றல் இருந்தும் அடங்கி நிற்றலே அடக்க முடைமை என்றும் கலித்தொகை பேசுகிறது.

> புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள
> இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றி

என்பது கலித்தொகை. தோற்றத்தால் புரவலன்—வாரி வழங்குவதில் வள்ளல்—எனினும் இரந்து வாழ்வோர் கூறி இரக்கின்ற பணிவான மொழிகளைச் சொல்லிப் பழகுகின்றானாம். இதற்குப் பழங்கால அரசர்கள் புலவர் களிடத்தே பழகிய முறையைச் சான்றாகக் காட்டலாம்.

> "கொள்ளிக் கட்டை கூரையைக் கொளுத்தும் ஆற்றல் உடையது. ஆயினும் கூரையைக் கொளுத்துமுன், கூரையில் செருகப் பெற்ற பொழுது அது பலருக்குத்

> தெரிவதில்லை. அதுபோல அதியமான் மாற்றாரை வீழ்த்தும் வல்லமை யுடையோனாகக் களத்தே தோன்றி விளங்குவான். ஆயினும் தன்னுடைய நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் இருக்கும் பொழுது அடங்கியே இருப்பான்"

என்று அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாராட்டுகிறார்.

'இல்லிடைச் செருகிய ஞெலிகோல் போல' என்பது ஔவையின் வாக்கு. அடக்கமின்றி நடத்தலை 'தருக்கித் தலையில் நடந்தேன்' என்று மாணிக்கவாசகர் குறிப்பிடு கின்றார். தருக்கித் திரிவோரை 'நெறியில் நீங்கியோர்' என்று பேசுகின்றார் இளங்கோவடிகள். அதனாலன்றோ சிவநெறி விளக்க நூலாகிய சிவஞான சித்தியார். 'சைவ சீலங்களுள் முதன்மையாக எடுத்துக் கொள்ளக் கூடியது தாழ்ந்து செலல்' என்று குறிப்பிடுகின்றது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்

> 'தாழ்வெனுந் தன்மையோடு
> சைவமாம் சமயம் சாரும்
> ஊழ்பெறல் அரிது'

என்பது சித்தியார் வாக்கு.

ஆக, அடக்கமுடைமை ஓர் உலகியல் ஒழுக்கம். ஏன்? அருளியல் ஒழுக்கமும் கூட. அடக்கமுடைமை இம்மையில் ஏற்றம் தரும். இனிய புகழ் சேர்க்கும். மறுமையில் திருவடி இன்பம் தரும்.

> "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வம் தகைத்து." (125)

என்பது திருக்குறள்.

# குடிமை

ஒழுக்கம் என்பது ஒன்றல்ல — இரண்டல்ல. பல கூறுகளை உடையது. எனினும் இரண்டு பெரும் பிரிவாக ஒழுக்க நெறியை வகைப்படுத்தலாம். தனி மனிதன் தன்னுடைய வாழ்க்கை வட்டத்தில், தனக்காகக் கடைப்பிடிக்கும் ஒழுக்கம் ஒன்று. பிறிதொன்று, தனிமனிதன் தான் வாழும் சமுதாயத்தோடு தொடர்புகொள்ளும் முறையில் கடைப்பிடிக்கும் ஒழுக்கம். இந்த ஒழுக்கத்தைக் குடிமை ஒழுக்கம் என்று சொல்லலாம். இதையே தான் குடிமைப் பயிற்சி என்று தமிழிலும், Citizenship என்று ஆங்கிலத்திலும் வழங்குகிறார்கள்.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டுக் குடிமக்களின் சிறப்பாலேயே அமைகின்றது.

குடிமக்களின் நிலையுயர சமுதாயக் கூட்டு ஒருமைப் பாட்டுணர்வு இன்றியமையாதது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சமுதாய வாழ்வியல் நூலை ஆக்கித்தந்த திருவள்ளுவர் இதனைத் தெளிவாக வலியுறுத்துகின்றார். திருக்குறளின் ஒழிபியலே குடியியல் பேச எழுந்ததாகும்.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்." (133)

என்பது குறள். இக்குறளுக்குச் சாதிகள் வழிப்பட்ட நச்சு நாகரிகச் சூழலில் வாழ்ந்த பரிமேலழகர் சாதி முறைகளுக்கு உட்பட்டு உரை எழுதுகின்றார். ஒழுக்கத்திற்கு அவர் தரும் விளக்கம் "அவரவர் வருணத்திற்கேற்ற ஒழுக்கம்" என்பது. வள்ளுவத்தில் இல்லாத வருணத்தைக் கூட்டிக் கலக்க முயற்சிக்கிறார். ஆனால் திருவள்ளுவர் கருதிய கருத்து வேறு. ஒரு மனிதன் ஒரு பெரிய சமுதாயத்தில் ஓர் உறுப்பினனாக இருக்கவேண்டு மானால், அந்தச் சமுதாயம் முழுமைக்கும்

நலன்தரக் கூடியதென முடிவெடுக்கப் பெற்ற அடிப்படைச் சமுதாய ஒழுக்கங்களைக் கடைப் பிடிக்கவேண்டும். குடி என்பது நாட்டுக் குடிமகன் என்பதை உணர்த்துமே தவிரச் சாதியை உணர்த்தாது.

தனிமனித ஒழுக்கங்களைப் போலவே, நாட்டு ஒழுக்கங்கள் என்றும் சில உண்டு. சிறப்பாக இன்று நம் பாரத நாட்டை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தன்னுடைய உரிமையைப் பெற மூன்று ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும். இவை இன்றையச் சூழலில் பாரதநாட்டுச் சமுதாயப் பொது ஒழுக்கம்.

இந்த நாட்டில் வாழுகின்ற எல்லா மக்களும் சாதி, இன, மொழி, மத வேறுபாடின்றி 'ஒரே குலம்' என்று கருதிப் போற்றுவது முதல் ஒழுக்கம்.

தன்னிச்சை வழி இயங்காமல், பலர் கருத்தறிந்து, பலரின் முடிபுக்கிணங்கி வாழும் மக்களாட்சிப் பண்பு இரண்டாவது ஒழுக்கம். அடுத்து, இந்நாடு பொது வீடு-இவ் வீட்டிலுள்ள உடைமை அனைத்தும் எல்லோரும் அனுப வித்தற்கேயாம். சிலரிடத்துப் புளிச்ச ஏப்பமும், இன்னும் பலரிடத்தில் பசியேப்பமும் இருப்பது — இருக்க அனுமதிப்பது நியாயமுமல்ல — நீதியுமல்ல. ஆதலால், எல்லோரும் எல்லா நலன்களும் பெற்று அனுபவிக்கக் கூடிய சமவாய்ப்புச் சமுதாயத்தை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப வாழ்வை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது மூன்றாவது ஒழுக்கம். வாழ்வில் இம் மூன்றொழுக்கங்களையும் கடைப் பிடித்தொழுகுவோரே இந்தியக் குடியுரிமைக்கு ஏற்புடை யராவர். அவர்தம் பெயரே பாரத நாட்டு மக்கள் பட்டியலில் என்றும் நின்று விளங்கும். அப்படி வாழாதார் பெயர்கள் மக்கள் பட்டியலிலிருந்து விலக்கப்பெற்று, இழிதன்மை யுடைய 'கால்நடை'களின் கணக்கில் சேர்க்கப்படும். இக்

கருத்திலேயே 'ஒழுக்க முடைமை குடிமை' என்ற குறள் எழுந்தது.

## உண்மைக் குடிமக்கள் யார்?

மனித சமுதாய அமைப்பின் வழியிலேதான் நகர, நாட்டு அமைப்புகள் தோன்றுகின்றன. மனித சமுதாயம் நாடுகளை உருவாக்குகின்றது. காலப் போக்கில், நாட்டின் வழி மனித சமுதாயம் பெருமை பெறுகிறது; புகழ் பெறுகிறது. இந்த உணர்ச்சி வடிவத்தில் தோன்றுவதுதான் தாய்நாட்டுப் பற்று. ஒரு நாட்டின் குடியுரிமை பெற்று வாழுதல், மனிதனின் விழுமிய சிறப்புகளுள் ஒன்று. உலகில் பல்வேறு பகுதிகளில் குடியுரிமை பெறாத மக்கள் நாடற்றோர் என வாழ்கின் றார்கள். அது பீடன்று. மேலும் நிரந்தரமான நல்வாழ்வுக்கும் உத்தரவாதமில்லை.

ஒரு நாட்டின் சட்டபூர்வமான குடியுரிமை பெற்றால் மட்டும் போதாது. அந்நாட்டு மக்களின் மொத்த நலனை எண்ணத்திற் கொண்டு ஒழுகுகின்றவர்களாகவும் இருக்க வேண்டும். தனிமனித ஒழுக்கங்களைப் போல, நாட்டு ஒழுக்கங்கள் என்று சில இருக்கும். அவ்வொழுக்கங்களை மேற்கொண்டு ஒழுகுகின்றவர்களே உண்மையான குடிமக்கள்.

ஒரு நாட்டில் பிறந்து விட்டதனாலோ அல்லது மக்கள் தொகைக் கணக்கெடுப்பவர்கள் கணக்கில் சேர்த்து விட்ட மையினாலோ ஒருவர் ஒரு நாட்டின் உண்மையான குடிமகனாகி விடுவதில்லை.

முடியாட்சி நிலவிய காலத்தில் தோன்றிய திருக்குறள் சிறந்த குடிமக்கள் ஆட்சியைப் பற்றியும் கூறுகிறது. திருவள்ளுவர், நாட்டு ஒழுக்கம் பற்றி நகைச்சுவை ததும்பப் பேசுகின்றார். மக்கட் கணக்கு எழுதி வைக்கும் அலுவலர் மக்கள் வரிசையில் ஒருவர் பெயரை எழுதி வைத்திருந்தார்.

ஆனால், அவரிடத்திலோ, சமுதாய ஒழுக்கம், நாட்டு ஒழுக்கம், என்பது சிறிதளவும் இல்லை. அவர் சாதிப் பகையை வளர்ப்பார். ஒன்றுபட்டு வாழுதலுக்கு உலை வைப்பார். பிறர் கருத்தை அறிய மறுப்பார். தன் கருத்தையே சாதிப்பார். எல்லாரும் எல்லா நலன்களும் பெற்று வாழுகின்ற சமநிலைச் சமுதாயத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார். தன் லாபம் ஒன்றையே கருதுவார். சமுதாய பகை ஒழுக்கக் கேடுகளாகிய அழுக்காறு, வெஃகுதல், வெகுளி, புறங்கூறல், கலகம் செய்தல் ஆகியவற்றையே மேற்கொண்டு ஒழுகுவார். சமுதாய ஒழுக்கத்தைக் கட்டிக் காக்கின்ற அன்புடைமை, பொறையுடைமை, ஒப்புரவறிதல் ஆகிய இனிய ஒழுக்க நெறிகள் அவர் அறியாதன. இப்படிப்பட்ட ஒருவர் பெயர் மக்கள் கணக்கில் இருக்கிறது. திருவள்ளுவர் சொல்கிறார், மக்கள் கணக்கிலிருந்து அவர் பெயரை நீக்கி விடும்படி. நீக்கி விடுவது மட்டுமின்றி, இழிந்த உயிர்வர்க்கங் களுக்கு ஏதாவது கணக்கிருந்தால், அதில் சேர்த்துக் கொள்ளும் படியும் சொல்லுகின்றார்.

*"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கும்*
*இழிந்த பிறப்பாய் விடும்."*

(133)

குடிமைப் பண்பை எவ்வளவு அழகாகத் திருவள்ளுவர் விளக்குகிறார். பரந்த பாரத நாட்டு மக்களிடத்தில், சிறந்த குடிமக்கள் இயல்பு வளர்ந்து, நாட்டு ஒழுக்கம் சிறந்து வளர வேண்டும். பாரத நாட்டில் நாட்டு ஒழுக்கமாகச் சிலவற்றை நாம் நியதி செய்துகொண்டு அந்நெறியில் ஒழுக வேண்டும்.

பாரத நாடு மிகப் பெரிய நாடு. பல்வேறு சமய நெறிகளைக் கொண்டு ஒழுகுகிற நாடு. எனினும் மொழி, சமய வேற்றுமைகளைக் கடந்த ஓர் உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாட்டைக் கொள்வது நமது நாட்டொழுக்கங்களில் ஒன்று.

இரண்டாவதாக நாம் அனைவரும் விரும்பி, ஒரு பரிபூரண மக்களாட்சி முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். மக்களாட்சி முறைப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் சிந்திக்கவும் கருதவும் உரிமை உண்டு. அவ்வழி, அஃதாவது, கருத்து வேறுபாடுகளின் காரணமாகக் காழ்ப்பும் பகையும் காட்டுதல் கூடாது. அவ்வழி, கலகங்களும் தோன்றக் கூடாது. மக்களாட்சி முறை நிலவும் நாட்டில் கருத்து மாற்றம், மனமாற்ற முயற்சிகள் நடை பெற வேண்டுமே ஒழிய, பகைவழி முயற்சிகள் கூடாது.

மூன்றாவதாக, இந்நாடு கூட்டுக் குடும்ப அமைப்புடையது. இந்நாட்டின் உடைமைகள் அனைவர்க்கும் பொதுவுடைமை. இந்நாட்டின் செல்வ வாழ்வு சமநிலை உடையதாக இருக்க வேண்டும். எல்லாரும் எல்லா நலன்களும் பெற்று வாழும் சமநிலைச் சமுதாய அமைப்பை நாம் விரும்பி மேற்கொள்ள வேண்டும். இந்த மூன்று தலையாய ஒழுக்கங்களும் இன்றைய பாரத நாட்டின் நாட்டொழுக்கங்கள். இவ்வொழுக்கங்களை மனப்பூர்வமாக ஏற்று ஒழுகுபவர்களே திருவள்ளுவர் கருத்துப்படி இந்நாட்டின் உண்மையான குடிமக்கள் ஆவார்கள்.

## நிலத்தியல்பு

திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். கனவிலும், கற்பனையிலும் திளைக்கும் வாழ்க்கைப் போக்கைத் திருக்குறள் ஒதுக்கித் தள்ளுகிறது. மேலும், திருக்குறள் உணர்ச்சியைத் தொடுகிறது — தூண்டுகிறது — தூண்டி வளர்க்கிறது. எனினும், உணர்ச்சிகளால் மட்டும் நடத்தப் பெறும் வாழ்க்கை இயலை — வாழ்க்கைப் போக்கைத் திருக்குறள் மறுக்கிறது. இன்ப வேட்கை கொண்டு நடத்துகிற வாழ்க்கையை விடத் துன்பங்களால் தொடரப்பெற்ற வாழ்க்கையாயினும் நெறிமுறைப் பட்டதாக — வளர்ச்சி

யுடையதாக அமைவதே சிறந்தது என்பது திருவள்ளுவர் கருத்து.

திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறிகள் எளியன போலத் தோன்றும். ஆனாலும், உணர்ச்சி வசப்பட்ட மக்களுக்கு அவை அரியவாம். அறிவும் தெளிவும் கொண்ட மனிதர்களுக்குத் திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறிகள் எளியன. திருக்குறள் பொறையுடைமைப் பணபை மிகுதியும் வற்புறுத்துகின்றது. பொறையுடைமைப் பண்புக்கு திருக்குறள் கூறும் உவமை நிலம். நிலம் கொடிய கருவிகளால் தன்னைக் கொத்திக் கிளறிக் கொடுந்துன்பம் இழைப்பாரையும் வீழ்த்தாமல் தாங்குகிறது. தனது மாசற்ற மேனியில், மாசுகளை உண்டாக்கினாலும் பொறுத்தருளி அவர்கட்கும் வாழ்வு தருகிறது. பொறுப்பதோடு மட்டுமின்றி, அத்துன்பங் களையே தன்னுடைய செழிப்புக்கு உரியவைகளாக மாற்றிக் கொண்டு தன் பெருமையை உயர்த்தி வளம் பெருக்கித் தீங்கிழைத்தோருக்கும் உண்ண உணவும் பருக நீரும் தந்து வாழ்விக்கிறது ஆக, தீங்கு செய்தோரைப் பொறுத்தல், அத் தீங்குகளையே தன்னுடைய வளர்ச்சியின் நிலைக்களன் களாக மாற்றிக் கொண்டு வளர்தல், பொறுத்தலினும் மிஞ்சிய வாழ்விக்கும் பணியினைச் செய்தல் ஆகியவற்றால் நிலத்தின் பெருமை உயர்கிறது. அதுபோலவே, தீங்கு செய்வோரை எதிர்த்து அழித்தல் நலமன்று. அங்ஙனம் அழித்தால், தீங்கு செய்யப்பட்டார் மட்டும் அழிவதில்லை. தீங்கு செய்தாரின் நல்லியல்பும் கெட்டு — காலப் போக்கில் அவர்தம் செங்குருதி முறிந்து அழிவையும் அணைத்துக்கொள்ள நேரும்.

உலகியல் பரிணாமத் தத்துவப்படி, ஒன்றிலிருந்து பிறிதொன்று தோன்றாது. அழிவிலிருந்து அன்பு தோன்ற முடியாது — ஆக்கம் தோன்ற முடியாது. அழிவிலிருந்து அழிவே தோன்றும். பகைவரை ஒறுக்கத் தோன்றும் பகையுணர்ச்சி நம்மையும் அழித்தொழிக்கும். அதனா லன்றோ, புராணங்களிலும் கூட அசுரர்களின் அழிவு பேசப்

படவில்லை. அவர்களின் மனமாற்றமே பேசப்படுகிறது. பகைவர் நமக்குச் செய்யும் தீங்குகளால் நாம் அழிகிறோம் என்பது உண்மையன்று. நம்முடைய குறைகள் மிகுந்திருக்கு மானால் பகைவர்களுக்கு இடமேற்படும். இதற்கு மாறாக அவர்களால் நமக்கு விளையும் துன்பங் களையும் தொல்லை களையுமே வாயில்களாகக் கொண்டு புது அறிவும் புது முயற்சியும் செய்வோமாயின் கிளறிய நிலத்தில் பயிர் விளைவது போல நாமும் அறிவால் - ஆற்றலால் செழித்து வளர முடியும். நம்முடைய வளர்ச்சி மிகுகின்றபோது, பகைவர்களும் பகையாற்றல் ஒடுங்கி நம் நிழலில் வாழ முற்படுவர். நாமும் வாழ்வளிக்க முடியும்.

பழிவாங்குதல் பழியினைச் சுமத்தும் - புகழைக் கெடுக்கும். பொறுத்தல் புகழைத் தரும் - புதுமை நிறைந்த - பொலிவுடைய எதிர்காலத்தை உருவாக்கும். திருக்குறளைப் படித்துச் சிந்தனை செய்து வாழ்க்கையோ டிணைத்துச் செயல்படுத்த முயல்வோமாக!

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை." (151)

"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்." (154)

## ஏன் சுற்றம் கெடும்?

குற்றம் செய்தவனுக்குக் குற்றத்திற்குத் தண்டனை உண்டு. அதுதான் நியாயமும் நீதியும் கூட. ஆனால் திருவள்ளுவர் ஒருவன் செய்கின்ற குற்றத்திற்காக, அவனுடைய சுற்றம் முழுவதுமே உண்பதும் உடுப்பதும் இன்றிக் கெடும் என்று கூறியுள்ளார். இதில் என்ன நியாயத் தன்மை இருக்கிறது என்று ஆராய்தல் வேண்டும்.

ஒரு தனி மனிதன் உருவத்தால், தோற்றத்தால் தனிமனிதனைப் போலக் காட்சியளிக்கிறான். அவன் பருவுடல் தோற்றத்தால் தனி மனிதனே தவிர, உண்மையில், அவன் தனி மனிதனல்லன். ஒரு தனி மனிதனிடத்தில் முக்கியமாக விளங்குவன மனமும் உள்ளமுமேயாம். அதாவது மனச்சாட்சியும், உள்ளத்து உணர்வுமே மனிதனின் வாழ்வில் இன்றியமையாதன. உணர்வோ அறிவோ, ஒழுக்கமோ கூட, தனி மனிதனின் விளைவுகளுமல்ல; படைப்புக்களுமல்ல. அவற்றை அவன் வாழும் மனித சமுதாயத்திலிருந்தே எடுத்துக் கொள்கிறான். உள்ளுணர்வு களை உருவாக்குவதில், ஒரு தனிமனிதன் வாழும் சுற்றம் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. திருவள்ளுவர் "மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு இனத்துளதாகும் அறிவு" என்று கூறுகிறார். "குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிகளுக்கு எல்லாம்" என்று கம்பனும் பேசுவான். "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்" வாழும் ஊரில் வாழ்தல் மூப்பையும் தடுக்கும் என்று புறநானூறு பேசும்.

ஒருவன் ஒருவனுக்கு ஒன்றை வழங்க இருக்கிறான். அதை அழுகாறுடையவன் தடுக்கிறான். தடுக்கும் குணம் தன்னலத்தால் மட்டும் வந்து விடுவதில்லை. தன்னலத்தின் நோக்கம், தான் அனுபவிக்க வேண்டும் என்பதாகும். இங்கு அனுபவிக்க வேண்டுமென்று எடுத்துக் கொள்வதில்லை. மற்றவர்களுக்கு வழங்குவதைத்தான் அழுக்கா றுணர்வோடு தடுக்கிறான். அழுக்காற்றுக்கும் அவாவுக்கும் வேறுபாடுண்டு.

அழுக்காறு பிறர் துய்ப்பதைக் கண்டு பொறாதது. எனவே அவன் அனுபவிக்காமல் இருந்தாலும் இருப்பான்; மற்றவர்கள் அனுபவிக்கக் கூடாது என்றே எண்ணுவான். அழுக்காறுடையவன் தன்னையும் உயர்த்திக் கொள்ள மாட்டான். மற்றவர் உயர்வையும் தாழ்த்துவான். இந்த அழுக்காற்றுணர்வு இயல்பாக ஒரு மனிதனிடத்து வந்துவிடுவதில்லை. அவனுடைய குடும்பமும் சூழ்நிலையுமே

படைத்துக் கொடுக்கின்றன. ஆகவே அழுக்காற்றுக் குணத்தைக் கற்றுக் கொடுத்த சுற்றம் கெடும் என வள்ளுவர் கூறுகிறார்.

மேலும், ஒருவன் தன்னுடைய சுற்றத்திற்குத் தேவையாக இருக்கக் கூடும், என்ற எண்ணத்தில் அழுக்காறு கொள்கிறான். அந்த அழுக்காற்றுக்கும் காரணமாக இந்தச் சுற்றம் இருப்பதால் திருவள்ளுவர் சுற்றம் கெடும் என்று சொல்கிறார். ஆதலால் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழும் ஆர்வம் தனி மனிதனுக்குத் தேவையாக இருந்தாலுங்கூட, ஒழுக்க நெறிகளை, இளமையிலேயே படைத்துத் தருவது அவனுடைய சுற்றமேயாகும் என்பது தெளிவாகிறது. ஆதலால்,

> "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
> உண்பதூஉம் இன்றிக் கெடும்" (166)

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

## அழுக்காற்றை அகற்ற வழி

மனித வாழ்க்கையின் சிறப்பியல்கள் உணர்வுகளாலும் குணங்களாலும் அமைவனவேயாம். பல கற்கள் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கப் பெறுவதால் சுவர் எழுந்து வீடு உருவாகிறது. அவ்வீட்டின் நிழல் வாழ்வதற்கு இனிமையாக இருக்கிறது; பாதுகாப்பாக இருக்கிறது; அமைதியும் அளிக்கிறது. அதுபோல, பல்வேறு வகைப்பட்ட நல் உணர்வுகளாலும், குணங்களாலும் வளர்ந்த மனிதர்களின் வாழ்க்கை சமுதாயம் என்ற கட்டிடத்தை எழுப்புகிறது. அவ்வா றமைந்த சமுதாய அமைப்பு இனிய அமைதி கலந்த வாழ்க்கை அமைப்பைச் சமுதாயத்திற்குத் தருகிறது. நற்குணங்களிலும்கூட ஒன்றிலிருந்து தொடர்ச்சியாகப் பல நற்குணங்களை வ:ளர்க்கிற தாய்மை நிலையுடைய நற்குண முண்டு. அழுக்காறாமை, அதாவது பொறாமைப்

படாதிருத்தல் ஒரு முதனிலைத் தாய்மை நற்குணம். அழுக்காறாமையை மேற்கொண்டொழுகுவதன் மூலம் அவாவை அறுக்கலாம். ஆசைகளினின்று விடுதலை பெறலாம். ஏனெனில், ஆசையின் தாயே அழுக்காறு. ஆசையிலிருந்து விடுதலை பெறுவதால், வெகுளியினின்றும் விடுதலை பெறலாம். வெகுளியினின்று விலகினால் இன்னாச் சொற்களைப் பேசல், ஒறுத்தல் முதலிய பல்வேறு தீச் செயல்களினின்றும் விடுதலை பெறலாம். அழுக்காறு கொள்ளுதல் நரகத்தை இந்த நிலவுலகத்தில் உருவாக்குவதையே ஒக்கும்.

அழுக்காறு, கொண்டவரை மட்டும் அழிப்பதில்லை. யாரை நோக்கிக் கொள்ளப் படுகிறதோ அவர்களுக்கும் தீங்கு விளைவிக்கிறது. முடிவில் சமுதாயம் முழுவதுமே பற்றி எரிந்து விடும். தன்னைக் கொண்டவரையும் அழித்து, சமுதாயத்தையும் அழிக்கின்ற பேராற்றல் அழுக்காற்றிற் குண்டு. அதனால், பெறுதற்கரிய உயர்ந்த மாமேதைகளுக்கும் மகாத்மாக்களுக்கும் கூட துன்பம் விளைவிக்கப்படுகின்றது. ஏன்? கடைசியில் அவர்களை இழந்தே விடுகிறோம். உலக வரலாற்றில் நிகழ்ந்துள்ள போர்கள் யாவற்றுக்கும் அடிப்படை அழுக்காறேயாகும். இயேசு, நபிகள், சாக்ரடீஸ், அண்ணல் காந்தி அடிகள் ஆகியோரை எல்லாம் காலத்திற்கு முந்தியே நாம் இழந்ததற்குக் காரணம் அழுக்காறேயாகும். அதனாலன்றோ, எந்த நற்குணம் இருந்தாலும், இல்லையாயினும் அழுக்காறாமை ஒன்றைப் பெற்றிருப்பது பெரும்பேறு என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

திருவள்ளுவர் அழுக்காறாமை என ஓர் அதிகாரமே வகுத்து, பத்துக் குறட்பாக்களில் அழுக்காற்றின் தீமையை விளக்குகின்றார். உலகியல் வழக்காற்றுச் சொல்லால் அழுக்காற்றைப் "பாவி" என்று ஆத்திரத்தோடு குறிப்பிடு கின்றார் திருவள்ளுவர்.

"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்." (168)

என்பது திருக்குறள். பாவங்களுக்கெல்லாம் காரணமாக இருப்பதால் அழுக்காற்றைப் 'பாவி' என்று குறிப்பிடு கின்றார். அழுக்காறு வேறு - பாவி வேறல்ல, என்ற கருத்தை விளக்குவதற்காக "என ஒரு பாவி" என்று குறிப்பிட்டிருக்கிறார். சில தீமைகளை யாரை நோக்கிச் செலுத்தப்படுகிறதோ அவர்களுக்கே - செலுத்துவோர்க்குத் தீமை தராது; செலுத்தப்படுவோர்க்கே தீமை தரும். அழுக்காறோ பெரும்பாலும் செலுத்துவோர்க்கே அதிகத் தீமை தரும். அழுக்காற்றின் நிலைக்களன்கள் பெரும்பாலும் செல்வமுடைமை, அறிவுடைமை. புகழுடைமை ஆகியன வாம். இவற்றை, மற்றவர்கள் பெற்று விளங்குவதைக் கண்டு மனம் பொறுக்க மாட்டாமலும் அவற்றை அவர்களைப் போல நன்கு முயன்று பெறத் தமக்கு ஆற்றல் இல்லாமை யாலும் தோன்றுவதே அழுக்காறு. அழுக்காற்றின் காரண மாகப் பிறருடைய செல்வம், அறிவுடைமை, புகழுடைமை ஆகியவற்றிற்குக் குற்றம் குறைகளைக் கற்பித்து அழுக்காற்று நெஞ்சுடையோர் களங்கப்படுத்துவர். இதன் விளைவு, தன் முயற்சியை அழித்துக் கொள்ளுதல், பிறர் முயற்சிக்கும் ஊறு விளைவித்து அழித்தல், பொதுவில் - முடிவாக, முன்னேற்றமும் ஆக்கமும் தடைப்படுகின்றன. இதனை விளக்க வந்த திருவள்ளுவர் 'திருச் செற்றுத் தீயுழி உய்த்துவிடும்' என்றார். அழுக்காறுடையான் ஒருவன் செல்வத்தைப் பெறுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட மாட்டான். அவனுடைய முழுநேர வேலை குற்றங் காணல், தூற்றல், தீங்கு விளைவித்தல் ஆகியனவே. இத் தீயவரிடம் செல்வம் எப்படிச் சேரும்? ஆதலால் செல்வத்தை அழித்து என்றார். செல்வம் இன்மையின் காரணத்தாலும், அழுக்காற்றின் காரணத்தாலும் பல்வேறு தீச்செயல்களைச் செய்வதால் நரகத்திற்குச் செல்ல ஏதுவாகிறது. இதனைத்

தீயுழி உய்த்துவிடும் என்றார். இம்மைக்கு வேண்டிய செல்வம், மறுமைக்கு வேண்டிய வீடு இரண்டையும் கெடுத்தலால் அழுக்காறு கொடுமையினும் கொடுமை யானது. வள்ளுவரே 'பாவி' என்று வசைபாடுவாராயின் நம்நிலை என்ன?

அழுக்காறு கொள்ளுதல் தீது. முற்றிலும் உண்மை - முக்காலும் உண்மை. எந்த ஒரு தீமையும் தோன்றாமல் தடுப்பதும் பாதுகாக்க வழிவகை யுண்டல்லவா? அத் தீமை தோன்றாமல் தடுப்பதும் சமுதாய நெறியில் மிகச் சிறந்ததாகும். கயவர்களின் அழுக்காறு மாற்ற முடியாதது. அவர்கள் கொல்லத்தான் பயன்படுவார்கள். ஆனாலும், சாதாரண-நடுத்தர மக்களிடமிருந்து அழுக்காற்றை அகற்ற உடையோர் முயன்றால் முடியும். அழுக்காறு கொள்ளுதல் எப்படித் தீதோ அப்படியே பிறர் எளிதில் அழுக்காறு கொள்ளும்படி நடந்து கொள்ளுதலும் தீதாகும்.

அதனால் செல்வம் உடைமையினும் எளிய வாழ்க்கை - கொடுத்து உவந்து - ஒப்புரவு அறம்பேணி வாழ்தல் அவசியம். அறிவுடைமையில் த்ன்னடக்கம் தேவை. புகழை விரும்பாமல் அடக்கமாய் வாழ்தல் அவசியம். பிறர் புகழ்ந்து கூறும் சந்தர்ப்பங்களையெல்லாம் தவிர்க்க முயலவேண்டும். இங்ஙனம் வாழ்ந்தால் இல்லாதோரிடம் அழுக்காறு எழாமல் - தோன்றாமல் தவிர்க்கலாம். காரணம் அங்கு இன்மை அவ்வளவு பெரியதாகத் தோற்றம் அளிக்காது.

அழுக்காறாமைக் குணத்தை மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்கு முதன் முயற்சி மற்றவர்கள் எல்லாவற்றையும் பெற்று வாழ வேண்டும் என்று விரும்புதல் - பிறர் இன்பத்தில் தான் மகிழும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். காலப் போக்கில் அழுக்காறு அகலும் - அருளியல் தோன்றும்.

# முறை மாற்றம்

மனித குலத்தை அலைத்து வரும் தீமைகளுள் அழுக்காறு தலையாயது, அதுவே முதல் தீமை. அந்தத் தீமையிலிருந்தே பிற தீமைகள் தோன்றுகின்றன. அதனால் அன்றோ, திருவள்ளுவரும் "அழுக்காறு என ஒரு பாவி" என்று வன்மையாகப் பேசுகின்றார். அழுக்காறு எங்கும் தீது; எதிலும் தீது; எப்பொழுதும் தீது. ஆனால் ஒருசிலர் கல்வியில் - நன்மை செய்வதில் - புகழ் வேட்டலில் அழுக்காறு கொள்ளலாம் என்பது போலக் கூறிவருகின்றனர். ஆனால், எத்துறையிலும் அழுக்காறு கொள்ளுதல் தீதே, அதன் பயன் அழிவே. அழுக்காறுடையான் தான் ஒன்றைப்பெற அவாவ மாட்டான். பிறர் பெற்றிருப்பதை அழிக்கவே முயற்சிப்பான். அங்ஙனம், அழிக்க இயலாத போது அவன், பெற்றிருப் போருக்குக் குற்றங்கள் கற்பிப்பான். இந்த உலகை வருத்தும் தீமைகளுள் தீமை அழுக்காறேயாம். அழுக்காற்றைத் தொடர்ந்துதான் அவா பிறக்கிறது; அவாவைத் தொடர்ந்து தான் வெகுளி பிறக்கிறது; வெகுளியைத் தொடர்ந்து இன்னாச்சொல் - பகை முதலியன தோன்றுகின்றன. ஆக்கத் திற்குப் பயன்பட வேண்டிய காலமும், மனித சக்தியும் பயனின்றி அழிவுக்குத் துணை போவதாகி விடுகிறது. ஆதலால், அழுக்காறுடையான் ஒருபோதும் உயரமாட்டான். வறுமொழியாளர் அரங்கில் வாயடைக்கும்போது, உயர்த்திக் காட்டுதலைத் தவிர, வேறு எந்த வகையான உயர்வும் மறந்தும்கூடக் காணமுடியாது. "அழுக்காறுடையான்கண் ஆக்கம் போன்றில்லை" என்று திருக்குறள் தெளிவாக ஐயத்திற்கிடமின்றி ஓதுகிறது.

இங்ஙனம் ஓதிய திருக்குறள் பின்பு, "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப் படும்" என்று கூறுகிறது. இத் திருக்குறள் புதிர்போல அமைந் துள்ளது. திருவள்ளுவர் வினாவும் எழுப்பாமல், விடையும்

கூறாமல் ஐயத்தில் வைத்த திருக்குறள் இஃது ஒன்றேயாம். "நினைக்கப்படும" என்ற அளவிலேயே நிறுத்தப்பட்டிருப்பது ஆயிரம் ஆயிரம் சிந்தனையைத் தூண்டுகிறது. "நினைக்கப் படும்" என்ற சொல்லுக்கு; "ஆராயப்படும்" என்று கொண்டு ஆக்கமும் கேடும் ஊழின் வழிப்பட்டது, என்றெழுதியுள்ளார் பரிமேலழகர். "அழுக்காறுடையானது செல்வமும், செவ்வி யான் கேடும் நினைத்த அந்தப் பொழுதிலேயே அழியும் — அதாவது அவை நிலைத்து நில்லா" என்பது பரிதியார் உரை. பரிமேலழகர் உரையினும் பரிதியார் உரை சிறந்ததாக இருக்கிறது. ஆயினும், "நினைக்கப்படும்" என்ற சொல்லில் அமைந்திருக்கின்ற, உணர்வு அழுத்தத்திற்கு ஏற்றவாறு விளக்கமில்லை. "நினைக்கப்படும்" என்ற சொல்லில் ஒரு "கடுமை" தொனிக்கிறது. "ஆராய்க!"– அஃதோர் ஆணை! அரசிற்கிடப்பெற்ற ஆணை! சான்றோர் உலகுக்கு இடப்பெற்ற ஆணை! அழுக்காறுடையான் கண் ஆர்வம் இல்லை; ஆள்வினை இல்லை; அவ்வழி ஆக்கமும் இருத்தற்கு வாய்ப்பில்லை; ஆயினும், ஆக்கம் இருக்கிறது! அது எப்படி?

திருவள்ளுவர் ஊழ் தத்துவத்திற்கு உடன்பாடுடை யவரே! ஆயினும், இன்று திரித்துக் கூறப்படுகின்ற ஒருபால் சார்புடைய ஊழ்த் தத்துவம் - ஊழ்க்கொள்கை திருவள்ளுவர்க்கு உடன்பாடன்று. உடைமை, உடலோடு தொடர்புடையது. அது பிறப்பு மாறுபடும் பொழுது உயிரைத் தொடர்ந்து செல்லாது. உயிரைத் தொடர்ந்து நுண்ணுடம்பு சார்பினதாக நீங்காது செல்லக் கூடியவை அறிவு, ஆற்றல், சீலம், பண்பு முதலியனவேயாம். இதுதான் திருவள்ளுவர் கருத்து என்பதைப் பல்வேறு திருக்குறள்களின் மூலம் உணரமுடிகிறது. உயிர்ச்சார்புடைய நலன்கள் பற்றியே திருக்குறள் பல்வேறு அதிகாரங்களில் ஓதுகிறது. உடைமை அதாவது பொருளுடைமை என்று ஓர் அதிகாரமே வைக்கவில்லை. அதற்கு மாறாகப் "பொருள் செயல் வகை" வைத்தது அறிதற்குரியது. பொருள் ஊழின் வயப்பட்டு வந்து

அமையுமென்றால், அவர், பொருள் செயல் வகை என்று ஆணையிட்டுப் பொருள், பிறப்பால் அமைவதன்று, செயற்பாலதே, என்று விளக்கியிருக்கமாட்டார். அடுத்து ஊழ் அதிகாரத்திலும் கூட, "சூழின் துய்த்தல்" போன்ற வினைச்சொற்களின் அடிப்படையிலேயே ஊழின் வலி யுறுத்தல் பேசுகிறார்.

"ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்." (380)

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது." (377)

என்பன இங்கு நோக்கத் தக்கன.

ஆதலால், அவ்விய நெஞ்சத்தான் கண் ஆக்கம் முறையானதன்று. அதில் ஏதோ தவறு இருக்கின்றது; சூது இருக்கிறது; ஆராய்ந்து அவ்விய நெஞ்சத்தானிடம் உள்ள ஆக்கத்தை அகற்றுக! என்பதே வள்ளுவர் ஆணை! செவ்வி யான் — செம்மை நலமுடையான் — செம்மை நலத்துள் பிறரை வஞ்சித்து வாழாததும், பிறர் பங்கைத் திருடாததும் அடங்கும். காலம் என்ற களத்தில் நின்று உழைத்தல் உயர்ந்தோரியல்பு. இங்ஙனம் உழைத்திடும் உத்தமர்கள் வறுமையால் கேடுற்றிருப்பது புரியாத புதிர்! "ஆக்கத்திற்குரிய அனைத்துப் பண்புகளும் இருக்கக் கேடு எப்படி வந்தது? ஆராய்க!" என்று ஆணையிடுகிறார் வள்ளுவர். "ஆராய்ந்தால், செவ்வியார் கேடு நீதிக்கு முரண்பட்டது; நியாயத்திற்கு முரண்பட்டது என்பது புலப்படும். செவ்வியார் கேட்டினை உடன் அகற்றுக!" என்பது வள்ளுவரின் ஆணை!

செவ்வியான் கண் இருக்கவேண்டிய ஆக்கம், அவ்விய நெஞ்சத்தான் கண்ணும், அவ்விய நெஞ்சத்தான் கண் இருக்கவேண்டிய கேடு செவ்வியான் கண்ணும் இடம் மாறி விட்டன. இடம் மாறினமைக்குக் காரணம், அவ்விய

நெஞ்சத்தானின் தீய ஆற்றலும், செவ்வியானிடம் உள்ள வலிமையற்ற நற்பண்புகளுமாகும். சமூகத்தில் ஏற்பட்டுள்ள முறைப் பிறழ்ச்சியை மாற்றியமைப்பது அறிஞர் கடன்! அரசின் கடன்! என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிறைமொழி மாந்தராகிய திருவள்ளுவர் ஆணையிட்டது, இன்று உலக அரங்கில் செயற்படுகிறது. அதன் பயனாக நல்லவர்களாகிய உழைப்பாளர்களுக்கு உலகம் உரிய பங்கை — மரியாதையைத் தரச் சட்டங்கள் இயற்றுகின்றன — நெறிமுறைப்படுத்துகின்றன!

ஆதலால், அவ்விய நெஞ்சத்தான்கண் ஆக்கம் இருத்தல் இயல்புமன்று; அறமுமன்று, முறையுமன்று. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம், அறம் விழைவோரால் வெறுக்கத் தக்கது; மாற்றத்தக்கது. செவ்வியான் கேடு நீதியொடு படாதது; நெறிக்கு இசைவில்லாதது; மாற்ற வேண்டியது; மாற்றப்பட வேண்டியது. அன்றே சமூகநீதி விளங்கி மேன்மையுறும்! இதுவே திருவள்ளுவர் கருத்து!

## வெஃகாமை

பொருள் விருப்பமும் வேட்கையும் மனிதனின் இயல்பான உணர்ச்சி. பொருட்பேற்றைத் துறத்தல் அருமையினும் அருமை. இவ்வுலகு பொருளியலாலே நடைபெறுகிறது. அதனாலன்றோ, முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும் என்றார் மாணிக்கவாசகர். பொருள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சிறந்த வழி உழைப்போடு கூடிய முயற்சியேயாம். அஃதல்லாத வழியில் பொருள் வருதலைப் பொருள் வரவாகக் கருதப்பெற மாட்டாது. அந்தப் பொருளாக்கம் நீடித்தும் இருக்காது; நிலைபெற்றும் இருக்காது. பொருள் தேடுதற்குரிய நேரிய வழியை விட்டுவிட்டுப் பிறர் பொருளை எடுத்துக் கொள்ளும் தீய உணர்வே சாதாரணமாக மக்களிடம் மேலோங்கி

நிற்கிறது, இக்குறை ஏழைகளிடமும் உண்டு. செல்வந்தர்களிடமும் உண்டு. ஆதலால், பிறர் பொருளை வெளவக் கருதுதல் ஒழுக்க நெறிப் பட்டதன்று என்று திருக்குறள் பேசுகிறது.

"நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்." (171)

என்பது திருக்குறள். பிறர் பொருளை வெளவுதல் நடுவு நிலைமையாகிய நன்னெறியைக் கடந்தது என்று கூறுகிறார், திருவள்ளுவர். நடுவு நிலைமை என்பது, எடை காணவேண்டிய பொருள்களையும், எடை காட்டும் கற்களையும் ஒப்பத் தட்டுகளில் இட்டு எடை காண்பது போல ஏற்றத் தாழ்வின்மை. அதுபோல நம்முடைய விருப்பம், உரிமைகள் ஆகியவைகளோடு ஒப்பப் பிறருடைய விருப்பம், உரிமைகள் ஆகியவற்றையும் மதித்துக் கருதுதல் நடுவு நிலைமை ஒழுக்கமுமாகும். பிறருடைய பொருளை வெளவுதல் அல்லது வெளவக் கருதுதல் தவறு என்று வாளா கூறாது, நன்பொருள் என்று அடையிட்டுக் கூறியிருப்பது சிந்தனைக்குரியது. ஒருவர் பெற்றிருப்பதின் காரணமாகவே அது அவருடைய பொருளாகி விடாது. நெறியல்லா நெறி முறைகளில் பிறர் பொருளை அப்பொருளுடையார் வெளவிச் சேர்த்திருப்பாராயின் அஃதெப்படி அவருக்கு உரிமையாகும்? திருடர் கையிலிருக்கும் பொருள்கள் திருடருக்குச் சொந்தமாக மாட்டா. அவற்றை எந்த நேரத்திலும் திரும்பப் பெற உரிமையுண்டு. ஆதலால், ஏழைகளை வஞ்சிக்கும் பிறர் பொருள்களைச் சூழ்ச்சிகளின் வழியாகவும் பெற்ற ஒருவரிடமிருக்கும் பொருள்களை ஒருவர் வெளவக் கருதுதல் தவறென்று வள்ளுவர் கருதுகிறாரோ? காரணம் அப்பொருள் உடையாரிடம் உள்ள பொருளன்று. நல்வழியில் உழைப்பாலும் உயரிய முயற்சிகளாலும் ஒருவர் ஈட்டி வைத்திருக்கும் பொருள்களை வெளவக் கருதுதல் நன்றன்று. காரணம் அவர்களுடைய

பொருள் நன்பொருள். உழைப்பு என்ற உரிய சாசனத்தின் வழி கிடைத்த பொருள். அங்ஙனமின்றி, மறைமுகக் கொள்கைகளால் ஈட்டப் பெற்ற பொருள் "தீப்பொருள்". அது பூரண உரிமையாக மாட்டாது. அப்பொருள்களை வெளவக் கருதுதல் ஒரோவழி பொய்ம்மையும் வாய்ம்மையிடத்தாதல் போல, ஏற்றுக் கொள்ளப்படும் என்பது வள்ளுவர் கருத்தா? அங்ஙனமாயின், மனித சமுதாயத்தில் தோன்ற வேண்டிய சிறந்த பொருளாதாரப் புரட்சியின் அடிப்படைக் கருத்து இக்குறிகளிலே அமைந்து கிடக்கிறது.

விதையொன்று போடச் சுரை யொன்று முளைக்குமா? என்று சாதாரணமாக ஒரு பழமொழியுண்டு. வினைப்பயன் விளைவது உறுதி என்பது நம்முடைய மரபு. வினைப்பயன் என்பது, நம்முடைய சொந்தச் செயல்களின் பயன்களே யாகும். வெளவுதல் வழியாகப் பிறர் பொருளைக் கைப்பற்றுதல் பிறிதொரு தீமையைத் தோற்றுவிக்கவே செய்யும். யார் ஏமாற்றப்பட்டார்களோ அல்லது வஞ்சிக்கப் பட்டார்களோ அவர்கள் வெளவிப் பொருள் சேர்த்தானுக்கு நிரந்தரப் பகைவர்கள். அவர்களுடைய கை ஓங்குகிற போது, மீண்டும் தம் பொருளைச் சேர்த்துக் கொள்ளவும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவுமே முயற்சிப்பர். ஆக, தொடர்ச்சி துன்பமே தரும். இதனையே, "அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். தீமையிலிருந்து நன்மை தோன்ற முடியாது. ஆனாலும் ஒரு தீமையை ஒழிக்க இன்னொரு தீமையைக் கையாளுதல். அதுவும் தனிமனிதர்கள் தனக்குள்ளாகவே கையாளுதல் தவறு. நன்மை தராது. அதுமட்டுமன்று.— தீரா இடும்பையே தரும். இதனைத் தவிர்க்கவே நீதி தேவதை உருவாயிற்று. ஒரு மனிதன் தனக்கு இழைக்கப் பெற்ற அநீதியை நேரடியாக எதிர்க்கின்றபொழுது அநீதியான முறைகளையே கையாளு வான். நீதி தேவதை வழிச் செல்வானாயின் அநீதி

அகற்றப்படும். நீதி நிலைநிறுத்தப் பெறும். இவ் வழியில் விருப்பு வெறுப்புக்கள் குறையும். தங்கத்தின் தரத்தைக் காட்டும் உரைகல்லில் — கட்டளைக் கல்லில் தங்கத்தை உரசிப் பார்த்துக்கொள்ளும் பொழுது கொள்வோருக்கும், கொடுப்போருக்கும் இடையே இருந்த அவநம்பிக்கை அகன்று விடுகிறதல்லவா? அதுபோலவே, நீதியில் வைத்துப் பார்க்கும்பொழுது, மாறுபட்டவர்களின் மனமருட்சிகள் நீங்க வேண்டும். ஆனால் இப்பொழுது அப்படி நீங்குவதில்லை. ஒன்றன்பின் ஒன்றாகப் பல நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்துத் தொல்லைகள் தருவதைக்கூட ஒரு தொழிலாக, பழிவாங்கும் ஒரு கருவியாகக் கையாளு கிறார்கள். நீதி தேவதை நீதிமன்றங்கள் வழியாகவும் நீதி கிடைக்கும்படிச் செய்யலாம். நீதி வேட்கையுடைய பல மனிதர்களிடத்தே சிந்தனையைத் தூண்டி புரட்சியை விளைவித்து நீதியை நிலைநாட்டவும் செய்யலாம். இம்முறையே சாலச் சிறந்தது. காரணம், புரட்சி செய்தவர்கள் நீதியை உணர்கிறார்கள். இது ஒரு பெரும் படிப்பினை. அநீதிக்கு ஆளாகிறவன், தனி மனிதனல்லன். அவன் ஒப்பற்ற மானிடச் சமுதாயத்திற்கு உடைமையான ஓர் உறுப்பினன். அவனுடைய துன்பத்திற்காக அவனே நொந்து அழுதல் சமுதாய மரபன்று — என்ற சமுதாய உணர்ச்சி மேலோங்குகிறது. இன்று வளர்ந்து வரும் சமுதாயத்தின் நல்ல அறிகுறி, இந்த அடிப்படையில் தானே; இறந்த வீட்டில் ஊராரும், உற்றாரும் சேர்ந்து அழும் நடைமுறை தோன்றியிருக்க வேண்டும். கணவனை இழந்த பெண் அழுகிறாள். அவளுக்கு உண்மையிலேயே இழப்பு. அவளோடு கூடி இன்னும் பல பெண்களும் அழுகிறார்களே அவர்களுக்கு என்ன இழப்பு? அவள் ஒருத்தியினாலேயே அந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள அழுது தீர்க்க முடியாது என்பதனால் துன்பத்தில் பங்கு போட்டுக் கொண்டு அழுகிறார்கள். கணவனை இழந்தவள்

தன்னுடைய இழப்புக்காக அழுகிறாள். அவளோடு அழும் மற்றவர்கள் இழக்கக்கூடாத ஒன்றை இழக்காமல் இருப்பதற்காக அழுகிறார்கள். அந்த ஒன்றுதான் சமுதாய உணர்ச்சி என்பது. ஒருவன் பலரைத் துன்புறுத்தும் வழியில் வெளவிப் பொருள்களைச் சேர்ப்பானாயின் அப்பொருள் களைச் சமுதாய நீதியென்ற பெயரில் திரும்ப அவனிட மிருந்து எடுத்துக்கொள்ள சமுதாயத்திற்கு உரிமையுண்டு. அங்ஙன மெடுத்தல் வெளவுதலன்று என்ற குறிப்பில் நன்பொருள் வெஃகின் என்று கூறினாரோ என்பது ஆய்ந்து உணரத்தக்கது.

## புறஞ்சொல்லும் புன்மை

திருக்குறள் நடைமுறை வாழ்வியலின் விளைவுகளை விளக்கும் நூல். குற்றங்களையும் குணங்களையும் அவற்றின் காரண காரியங்களையும் தெளிவாக விளக்கி வழிகாட்டு கிறது. அதுமட்டுமன்று. ஒன்றின் முழுத்தன்மையையும் அளந்து காட்டுவதில் திருக்குறள் மிகச் சிறந்து விளங்குகிறது. மனித சமுதாயத்தில் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் பகை. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தல்–புறங்கூறி வாழ்தலின் மூலம் பொய் பெருகுகிறது; பகை வளர்கிறது; நட்பு கெடுகிறது; நல்லவை தேய்கிறது; அல்லவை பெருகுகிறது. புறங்கூறுதலைவிட மோசமான குணக்கேடு பிறிதொன் றில்லை என்று ஒழுக்க நூலார் வரையறுத்துக் காட்டு கின்றனர். 'புறங்கூறுதல்' வெறுப்பை வளர்க்கிறது. வெறுப்பு வேற்றுமைகளை விளைவிக்கிறது — வேற்றுமைகள் பிரிவினைகளை உண்டாக்குகின்றன! என்று குவாரில்ஸ் என்ற மேனாட்டு அறிஞர் கூறுகிறார்.

மனித இயலும், திருவருட் சிந்தனையும் இல்லாத மனிதர்கள் தீமைகலைளத் தோண்டி எடுக்கிறார்கள். அத்தீமைகளை உதட்டில் தாங்கிப் பகை என்னும் பெரு

நெருப்பை எரிக்கிறார்கள். தற்காலிகமாகப் பிறர் குற்றத்தில் குளிர் காய்கிறார்கள். ஆனால் அடையக் கூடிய பயனோ அழிவு! அழிவு! அழிவு!

அதனாலன்றோ அப்பர் அடிகளும்கூட சமுதாயத்தோடு பழகுதற்குரிய இனிய பழக்கமாக, குணங்களைச் சொல்லியும் குற்றங்களைப் பேசியும் வாழவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

சொல்லுதலுக்கும் பேசுதலுக்கும் இடையேயுள்ள வேற்றுமையைப் பற்றி நாம் சாதாரணமாக நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால் அப்பரடிகள் பெரிய வேற்றுமையைக் காண்கிறார். சொல்லுதல் என்பது பிறரிடத்தில் ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றிய குற்றங்களைச் சொல்லுதலைக் குறிக்கும். அவ்வாறு சொல்லுதல் குற்றம். சொல்லுதல் மட்டும் குற்றமன்று. அத்தகு சொல்லாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் குற்றம். அதனாலன்றோ, அறங்கூறவையில் இருபாலும் கேட்டு, மறுக்கவோ உடன்பாடாகவோ உரிய வாய்ப்புக்கள் முழுமையும் கொடுத்து, பின் அறங்கூறப் பெறுகிறது. ஆனால், இன்றோ புறங்கூறலே பெருகி வளர்ந்திருக்கிறது. அதையும் உண்மையென்று நம்பி உரியவரைக் கேட்காமலேகூட மாறுபாடும் சினமும் கொள்கிறவர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களிற்கூட இருக்கிறார்கள் என்றால் என்னென்று கூறுவது?

ஒருவர் இல்லாதபோது அவருடைய குற்றங்களைச் சொல்லுதல் — கூறுதல் புறங்கூறல் ஆகும். அதனைக் கூடாதென்று தேவாரம் கூறுகிறது. அடுத்து, ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையிலும் கூட புறங்கூறும் குற்றம் விளக்கப் பெறுகிறது. "தீக்குறளைச் சென்றோதோம்" என்பது ஆண்டாள் வாக்கு. குறளை என்பது கோள், புறம் ஆகிய சொற்களைக் குறிக்கும். அதுவும் தீக்குறளை என்று சொன்னது உண்மையல்லாத பொய்யை, தீமை பயக்கக்

கூடியதை வலியத் தாமே சென்று மற்றவர்களிடம் சொல்லுதலைக் குறிக்கும். அதனால், குற்றங்களைச் சொல்லுதல் தீது. குணங்களைச் சொல்லவேண்டும். குற்றங்களைப் பேசவேண்டும் என்கிறார் அப்பர் அடிகள். பேசுதல் என்பது நேரில் நின்று பேசுதலைக் குறிக்கும். ஒருவரை நேரில் சந்தித்துப் பேசும்பொழுது அவர்தம் குற்றங்களை இனிய முறையில் எடுத்துக்காட்டிப் பேச வேண்டும். அது குற்றமுடையார் திருந்துதற்கு வாய்ப்பாக இருக்கும். இதனையே திருவள்ளுவரும்,

*"கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க*
*முன்னின்று பின்னோக்காச் சொல்."* (184)

என்று குறிப்பிடுகின்றார்.

புறங்கூறுபவர்கள் — பிறர் குற்றம் பேசித் திரிபவர்கள் அறம் பேசுவது போல நடிப்பார்கள். நன்மைக்காகப் பரிந்து பேசுவதாகப் பாவனை காட்டுவார்கள். நடிப்பிலும் பாவனையிலும் மயங்குகிறவர்கள், அவர் கூற்று உண்மையோ என்று ஐயப்படுவார்கள். ஐயத்தின் வழி களங்கம் பிறக்கும். களங்கத்தின் வழி மனங்கலந்த நட்புக்கெடும். பிரிவர் — பேதுறுவர். அதனாலன்றோ தமிழ் மறை. 'ஆழ்க தீயது' என்றோதுகிறது. தீயவர் அழிதல் அன்று. அதனாலன்றோ, புராணங்களிலும்கூட, அரக்கர்கள் தீமையொழித்து நல்லவர்களாக மாறி வளர்ச்சியுற்றுத் திருவருளுக்குப் பாத்திர ரானார்கள் என்ற செய்தி பேசப் பெறுகிறது.

சொற்களால் பகை வளர்க்கும் ஒருவர் நெஞ்சம் எங்ஙனம் அறச்சார்புடையதாக இருக்க முடியும் என்பது வள்ளுவர் கேள்வி. புறங்கூறுபவர் சொல்லை நம்ப வேண்டாம்.

நெஞ்சத்தின் இயல்பு எதுவோ, அதை விளைவுகள் காட்டும். சொற்களெல்லாம் நெஞ்சத்தின் இயல்பு

முழுவதையும் காட்டுவதும் இல்லை. நமது தலைமுறைக் கவியரசு கவிஞர் கண்ணதாசன் அவர்கள்,

சொல்லில் வருவது பாதி—நெஞ்சில்
தூங்கிக் கிடப்பது மீதி

என்று குறிப்பிடுகிறார். அறநெஞ்சுடையார் குற்ற முடையோரைக் கூட எளிதில் பகைக்க மாட்டார்கள். காரணம், குற்றத்தைத் திருத்தமுடியும் என்று நம்புவார்கள். அதற்குரிய வழி வகைகளைக் கண்டு முயற்சிப்பார்கள். அறநெஞ்சுடையார்க்குக் குற்றத்தின் மீது வெறுப்பு இருக்குமேயன்றிக் குற்றமுடையார் மாட்டு வெறுப் பிருக்காது. அவனுடைய மனம் அறவழிப்பட்டதன்று. அவனுக்கு அறம் தெரியவே தெரியாது. அவன் மனம் தீது. கருதியது முடிக்க அறம் சொல்லிக்கொள்வது போலக் காட்டுகின்றான் என்று திருக்குறள் விளக்குகிறது. நீரில் நெருப்பிருக்காது என்பது போலப் புறம் சொல்லும் புன்மையவரிடத்து அறம் இருக்காது — இருக்கமுடியாது என்பதை யுணர்ந்து வாழ வேண்டும். புறம்கூறும் பழக்கத் தினின்றும் நம்மை விலக்கிக் கொள்ளவேண்டும். அதனைக் கேட்கும் பழக்கத்தையும் கைவிட வேண்டும்.

"அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்." (185)

## தீது உண்டோ?

மனித உலகத்தின் விழைவு இன்பமேயாம். உலகத்து இயற்கையும் இன்பமேயாம். இங்ஙனம் கூறுவது "இன்னாதம்ம இவ்வுலகம்" என்று முன்னோர் மொழிந்த கூற்றுக்கு முரணாகாதா? இயற்கை என்பது மாற்ற முடியாதது ஒன்றேயாம். மாற்றுதலுக்கும், மாறுதலுக்கும் உரியன எல்லாம் இயற்கையாகா. அவை ஒருவாறு செயற்கை யேயாம். அதனாலேயே "இன்னாதம்ம இவ்வுலகம்" என்று

மொழிந்தவர் அதனைத் தொடர்ந்து “இனிய காண்க” என்று ஆணையிட்டார்.

இன்னாதன எனக் கருதத் தக்கவை பெரும்பாலும் முறைகேடான தன்னலச் சார்புகளிலும், தற்சலுகைகளிலுமே தோன்றுகின்றன. முறைகேடான தன்னலச் சார்பு என்பது பிறர்க்குத் தீங்குகளைத் தந்து அவ்வழி தன்னலமாக விளங்குபவையாகும். ஆதலால் ஒரு தனி மனிதனிடத்தில் திடீரென்று குற்றங்கள் தோன்றிவிடா. அந்தக் குற்றங்களைத் தோற்றுவிப்பவர்கள் — குற்றங்கள் தோன்றுவதற்கு உரியவாறு வாழுகிறவர்கள் தங்களுடைய குற்றங்களை எண்ணிப் பார்க்காமல் தங்களுடைய குற்றங்களின் காரணமாகப் பிறரிடம் தோன்றும் குற்றங்களை மட்டுமே எடுத்துக் காட்டுகிறார்கள். காவிரியைத் தஞ்சையிலும் பார்க்கிறோம். திருச்சியிலும் பார்க்கிறோம். அதனால், காவிரி தஞ்சையிலோ திருச்சியிலோ தோன்றுகிறது என்று சொல்ல முடியாது. அது குடகு மலையில், தோன்றியே தஞ்சையையும், திருச்சியையும் வந்து சேர்ந்தது. அது போலவே குற்றங் களுக்குரிய காரணங்கள் தோன்றும் இடம் வேறு. குற்றங்கள் விளங்கிப் புலனாகின்ற இடம் வேறு.

உண்மையை ஒத்துக்கொள்ளும் சக்தி இல்லாதவர்கள் பொய்யைத் தோற்றுவிக்கிறார்கள். நியாயமான உரிமை களை ஏற்று வழங்காதவர்கள் பொய்யினைத் தோற்றுவிக் கிறார்கள். மற்றவர்களுடைய மன உணர்ச்சிகளை மதித்து உடன் படவோ அல்லது மாற்றவோ சக்தி அற்றவர்கள் ஒடுக்கம் கொள்கையின் மூலம் பொய்யினைத் தோற்றுவிக் கிறார்கள். இவறிக் கூட்டிச் செல்வம் சேர்ப்பவர்கள் — செல்வத்தின் பயனை மறைப்பதின் மூலம் கள்வர்களைத் தோற்றுவிக் கிறார்கள். அழிபசி தீர்க்கும் பொருள் வைப்புழித் தெரியாத புல்லறிவாளர்கள் களவினைத் தோற்றுவிக்கிறார்கள். மற்றவர்கள் அன்றாட வாழ்வுக்கே வறுமையில் ஆழ்ந்து அவலப்படும்பொழுது வளம்பல படைத்து ஆடம் பரமாக

வாழ்பவர்கள் அழுக்காற்றினைத் தோற்று விக்கிறார்கள். பலர் துய்க்காதனவற்றைப் பலர் அறியத் துய்த்து மகிழ்கிறார்கள். அவாவினைத் தோற்றுவிக்கிறார்கள். ஆதிக்கம் செலுத்துபவர்கள் அடிமைத் தனத்தையும அதுவே வளர்ந்துழி அடங்காமையும் தோற்றுவிக்கிறார்கள். இங்ஙனம் ஆய்வு செய்யின் குற்றங்களை உடையோரும் குற்றங்களைச் செய்வோரும் மட்டுமே பொறுப்பினர் ஆகார். அவர்களோடு தொடர்புடைய மற்றவர்களுக்கும், குறிப்பாகச் சமுதாய அமைப்பிற்கும் நிறையப் பொறுப்பும் பங்கும் உண்டு. இங்ஙனம் ஆராய்ந்து முடிவு செய்வதே நியதியும், நீதியும் ஆகும். இந்த ஒப்பற்ற நீதியைப் புதுமை என்றும், பொதுமை என்றும் இன்று பலர் கூறுகின்றனர். ஆனால் நமது வள்ளுவர் அன்றே கூறியுள்ளார்.

*"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு."*

(190)

என்பது குறள். இந்தக் குறள் நினைந்து நினைந்து உணரத் தக்க குறள். புதுமையும் புரட்சியும் நிறைந்த குறள். நிலைபெற்ற மனித உயிர்கள் உலகத்தைப் பற்றிப் பிடித்து அலைக்கும் பகைமைக்கும் ஒழுக்கக் கேட்டிற்கும் அருமருந்தென விளங்கும் குறள். ஏதிலார், அயலார் என்பது பொதுவான பொருள். சிறப்பாக மாறுபட்ட பகை உணர்ச்சி உடையவர் என்றும், பொருள் கொள்ளலாம். முதலில் ஒரு மனிதர் இன்னொரு மனிதரை அயலார் பகைவர் என்று கருதுதலே அடிப்படையில் தவறு. அங்ஙனம் கருதுகின்ற பகையினாலேயே நல்லனவும் தீயனவாகத் தோன்றும். அன்புடையார் மாட்டுத் தீமையே தோன்றினாலும், நன்மையே தோன்றும். ஆதலால் ஒருவன் பிறிதொருவனை ஏதிலானாகக் கருதுதல் மூலமே குற்றங்கள் தோன்றுவதற்குரிய களம் ஏற்பட்டுவிடுகிறது.

அடுத்து பிறரிடத்தில் காணப்படும் குற்றங்களுக்குத் தன்னிடத்தில் உள்ள குற்றங்கள் எவ்வளவுக்குக் காரணமாக அமைந்து கிடக்கின்றன என்பதைப் பார்க்கக்கூடிய தைரியம் ஏற்பட்டு சுய விமரிசனத்திற்கு உரிய அறிவு பெற்றுத் தன்னுடைய குற்றங்களை நீக்கிக் கொண்டால் பிறருடைய குற்றங்களும் நீங்கிப் போகும். அதன் மூலம் சமுதாயத்தில் குற்றங்கள் குறையும்; நிறை பெருகும்; பகை மாறும்; பண்பு வளரும். இதனையே இந்த அறநெறியை இந்தக் குறள் வலியுறுத்துகிறது. அதாவது ஒழுக்கக்கேடு என்பது ஒருவரை மையமாகக் கொண்டது மட்டுமன்று; பலரை — அதாவது மனித சமுதாயத்தை மையமாகக் கொண்டு வளருவதே ஒழுக்க நெறி.

இந்தக் குறள் புறங் கூறாமையில் இருக்கிறது. புறங் கூறுகிறவர்கள் நேரடியாகச் சொல்லுதற்குரிய ஆளுமையும் அசைவிலா உறுதியும் இன்மையின் காரணமாகவே புறங் கூறுகிறார்கள். புறங்கூறுவதே ஒரு குற்றம் என்று கருதும் அறிவு இருக்குமானால் புறங்கூறமாட்டார்கள். அவ்வழித் திரிபுகள் ஏற்படா. ஒரு தவற்றில் பலர் பங்கு ஏற்கக்கூடிய வாய்ப்பும் தடைப்படும். காலமும் மிஞ்சும். மனித சக்தியும் மிஞ்சும். பகையும் குறையும். எதிர்பார்க்கின்ற குறைகளும் நீங்கி, நிறைகளும் ஏற்படும்.

ஆதலால் பிறர் குற்றம் காண்பதற்கு முன் நமது குற்றத்தை நாமே பார்த்துக் கொள்வோமாக.

நாம் அனைவரும் நல்லவர்களாகி அவ்வழி மற்றவர் களையும் நல்லவர்களாக வாழச் செய்வோமாக!

## பயனில சொல்லாமை

இன்றைய உலகியலில் பேச்சு அதிகம். மனிதர்கள் தம்முள் ஒரு சிலர் கூடினாலும் பேசித் தீர்க்கிறார்கள். பலர் கூடினாலும் (கூட்டங்கள் என்ற பெயரில்) பேசித்

தீர்க்கிறார்கள். ஆக, கடந்த நூற்றாண்டைவிட, இந்த நூற்றாண்டில் பேச்சு அதிகம். வீட்டிலும் அதிகம். நாட்டிலும் அதிகம். இங்ஙனம் வளர்ந்துவரும் பேச்சு முறை ஆக்க வழிப்பட்டதாக — பெரும் பயன் தரத்தக்கதாக வளரு மானால் அது பாராட்டுதற்குரியதாகும். மனிதனிடத்தில் சொல்லாட்சி தோன்றியதே. பொருளை உணர்த்துவதற்குத் தான்! பொருள் வழிப் பயன் பெறுதலும், தருதலுமே சொல்லாட்சியின் இறுதி இலட்சியம். மேலும், உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டி உறவு முறையை வளர்த்துக் கொள்ளலே சொல்லாட்சி. மனிதர்களுக்குள் வளர்கின்ற பகை, பிளவு உணர்ச்சிக்குப் பெரும்பாலும் காரணம் தகுதியில்லாததோர், சொற்களைத் தகுதியில்லாத முறையில் கையாளுவதேயாம். இயற்கையமைப்பில் பல்வேறு தடைகளைக் கடந்து மனிதனின் வழிவழிப்பட்ட முயற்சி யால் தோன்றும் சொற்கள் பயனற்றவைகளாகப் போவதைப் பார்த்துத் திருவள்ளுவர் வருந்துகிறார். சொல்லாட்சியும் உழைப்பின் விளைவே. இத்தகு மேம்பட்ட சொல்லாட்சி பெரும்பான்மையான மக்கள் வாழ்வில் அவர்கட்கும் பிறருக்கும் பயனில்லாமலே அழிவதைப் பார்த்துக் கழிவிரக்கம் கொள்கிறார் திருவள்ளுவர்.

பயனற்ற சொற்களைப் பேசிப் பொழுது போக்கும் புல்லிய மாந்தரை இளங்கோவடிகள் 'வறுமொழியாளர்' என்று ஏசுகின்றார். திருவள்ளுவர் பயனற்ற சொற்களைக் கேட்டு மகிழ்வோரையும் கண்டிக்கின்றார்.

> 'பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
> மக்கட் பதடி எனல்." (196)

என்று கூறுகிறார். நெல்லோடுதான் பதரும் சேர்ந்திருக்கிறது. அதனாலேயே, அதுவும் நெல்லாகி விடுமா என்ன? பயன்படுத்துவோர் விழித்தெழும் வரையில் பதரும் நெல் லோடு சேர்ந்திருக்கும். பின்னர் பதர் தூற்றப்பெறும்.

நெல்லினின்றும் பிரிக்கப் பெற்றுக் கழிக்கப் பெறும். அது போலவே, பயனற்ற சொற்களைப் பேசிக் கொண்டு தம்மை உயர்ந்தார் போல — நீதிமான்களைப் போலக் கருதிக் கொண்டும் — காட்டிக் கொண்டும் சிலர் வாழ்கின்றார்கள். ஏன்? பலர் வாழ்கின்றார்கள். எனினும் தவறாகாது. ஆனாலும் காலம் வருகின்ற போழ்து, பயனில் சொல் பாராட்டித் திரிந்தவர்களை நாடு ஒதுக்கும்; ஒறுக்கும்.

ஒரு மனிதனுடைய உள்ளுணர்ச்சி எத்தகையது என்பதை அவனுடைய சொற்கள் காட்டும். நிலத்தின் இயல்பைத் தண்ணீர் காட்டுவது இயற்கை. அதுபோலவே, உணர்ச்சி, எண்ணம் ஆகியவற்றின் இயல்புகளைச் சொற்களே காட்டும். "பயனற்ற சொற்களை வழங்கு கின்றவன் அறிவுடையவனாகவோ, இனிய பண்புடைய வனாகவோ இருக்க முடியாது. நீதி நெறி வழிப்பட்ட வனாகவும் இருக்க முடியாது" என்று திருவள்ளுவர் கருதுகிறார். பயனில பாரித்து உரைக்கும் உரை நயனிலன் என்பது சொல்லும்—என்று திருக்குறளைக் கொண்டு கூட்டிப் பொருள் சொல்லும் போழ்து, அமுதினும் இனிதாக இருக்கிறது, கருத்துச் சுவை. சொல்லும் சொற்களோ பயனற்றவை. அதையும் சுருங்கச் சொல்லுகிறார்களா? உண்ட உணவு செரித்து அடுத்தவேளை பசி தோன்ற வேண்டுமே! அதுவரையில் பேச வேண்டும்; பேசித் தீர்க்க வேண்டும் என்ற உணர்ச்சியோடு தெருவோரத்தில்— திண்ணைகளில் உட்கார்ந்து வம்பு அளப்பவர்களுக்குக் காலத்தின் அருமை தெரியாது! ஆதலால், பயனற்ற சொற்களாக இருந்தும்கூட, விரித்துரைத்து மகிழும் இயல்பு இவரிடத்திலும் இருக்கிறது. இந்த அளவிலேயே திருவள்ளுவர் முடிவு கட்டச் சொல்கின்றார். என்ன முடிவு? பயனற்ற சொற்களைப் பேசித் திரிவோரை அறிவில்லாதவர் என்று கருதி எட்டடி தூரத்தே நிறுத்து; அல்லது நெருங்காதே. நெருங்கினாலும் காது கொடுத்து விடாதே! நீதியற்றவன்

என்று கருதி நீண்ட தூரத்தில் காணும் போழ்தே உன்னைக் காப்பாற்றிக் கொள் என்று திருவள்ளுவர் வலியுறுத்து கின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இக் கருத்து நடைமுறைக்கு வரவில்லை. எல்லார்க்கும் வாய் இருக்கிறது. எல்லாரும் பேசலாம் என்று பேசுகின்றார்கள். பொய்க்குப் புனைந்த வடிவம் கொடுத்து மெய்யாக்கு கின்றார்கள். பொழுது போகாதவர்கள், உழைத்து வாழும் அவசியம் இல்லாதவர்கள், தற்பெருமையில் களிக்கும் செல்வந்தர்கள், போக்கிரிகள் இன்றும் பயனில சொற்களைச் சொல்லிக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கின் றார்கள். இந்தச் சூழ்நிலையில் எங்ஙனம் மனிதகுலம் ஆற்றல் நிறைந்த முயற்சிகளில் ஈடுபட முடியும்? எப்படி, அவர் களிடையே நம்பிக்கையுணர்வு வளர முடியும்? சிந்தனை செய்து பாருங்கள். **"பயனற்ற சொற்களைப் பேசாதீர்கள். அது** போலவே, அவற்றைக் கேட்காதீர்கள்." இம்முயற்சியால் காலத்தின் அருமை வெளிப்படும். கருத்தில் தெளிவு ஏற்படும். நம்பிக்கை வளரும். நாடு செழிக்கும். மீண்டும் ஒரு தடவை அக்குறட்பாவைப் படித்து, நினைத்து அன்றாட வாழ்க்கைக்கு உரியதாக்கிக் கொள்ள முயற்சி செய்வோமாக.

*"நயனிலன் என்பது சொல்லும் பயனில*
*பாரித் துரைக்கும் உரை."*

(193)

## தீயும் தீவினையும்

**த**ற்காத்துக் கொள்ளுதல் என்பது இயல்பான உயிரியல் உணர்வு. உயிர்வர்க்கம் எல்லாமே தம்மைத் துன்பத்தினின்றும் மரணத்தினின்றும் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புகின்றன — முயற்சி செய்கின்றன. விலங்கியலில் உயிர் அறிவும் உணர்வும் மிகமிகக் குறைவு. மனித இயலிலும் உடலியலை விட உயிர் உணர்வும் அறிவுமே

மிகுந்து காணப் பெறுகின்றன. அது இயற்கை. பரிணாம வளர்ச்சியிலும் கூட இதுவே நியதி.

விலங்குகள் உடல் தற்காப்பிலேயே ஈடுபடும். உயிரியல் அறிவு கைவரப் பெற்றமையின் காரணமாக மனிதன் ஆன்மாவையும் தற்காத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறான். அதனாலேயே விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும், விருப்பம், சிந்தனை ஆகியவற்றோடு தொடர்பு படுத்தி வற்புறுத்தப் பெற்றன. 'தீவினை அச்சம்' என்றே திருக்குறள் அதிகார வைப்பு ஓதுகின்றது. தீவினை செய்தலில் அச்சமல்ல — தீவினை பற்றிய அளவிலேயே அச்சம்! பெரு வெள்ளத்தைக் கண்டு விலகி ஓடுதல் போன்றது. தீவினையுணர்வுகளினின்றும் அஞ்சி ஒதுங்கிக் கொள்ளுதல். தனக்குத்தான் உண்மையான அறிவொடுபட்ட விருப்பம் இருக்குமாயின் அவன் பிறருக்கு யாதொரு தீங்கும் — சிறியதேயாயினும் செய்யற்க என்று திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

*"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்*
*துன்னற்க தீவினைப் பால்."* (209)

என்பது திருவள்ளுவர் அருள்வாக்கு.

பிறருக்குத் தீங்கு செய்யும்போது — பிறருக்குத் துன்பம் உண்டாக்குவது போலத் தோன்றினாலும், அது பயன் விளையுங் காலத்துத் துன்பம் செய்தாருக்கும் துன்பம் தருதலின் தற்காத்துக் கொள்க என்ற கருத்து இங்கு பெறப் படுகிறது.

நாம் பிறிதொருவருக்குத் தீங்கு செய்யத் திட்டம் தீட்டலாம் — பேசலாம் — திட்டப்படி செய்யலாம். நம்மால் துன்பம் இழைக்கப் பெறுகிறவன் நம்முடைய துன்பத்தை அனுபவிக்கவும் செய்யலாம். அவன் திருப்பித் தீங்கு செய்யத் தெரியாதவனாக இருக்கலாம். செய்தற்குரிய ஆற்றல் அற்றவனாகக்கூட இருக்கலாம். ஆனாலும் அறக்கடவுள்

தீங்கு செய்தார்க்குத் தீங்கு செய்யத் திட்டமிடும்—சூழ்ந்து செய்யும். துன்பப்பட்டவன் பொறுப்பை அறக்கடவுள் எடுத்துக் கொள்ளும். பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் — ஆனால், பிறர் இழைக்கும் துன்பத்தால் அவதியுறுபவன் கேடும் இழப்பும் இல்லாமலேயே நலம் பெறுகிறான். காரணம், அறக்கடவுள் அவனுக்குப் பாதுகாப்பாக இயங்கு கிறது. அறக் கடவுளின் ஆற்றல் அளப்பரிது. ஆதலால், தீங்கிழைத்தவனை அது துன்புறுத்தியே தீரும். இதனை,

> *"மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்*
> *அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு."* (204)

என்று திருக்குறள் வலியுறுத்துகிறது.

இனி, பிறருக்குத் தீமை செய்ய நினைக்கின்ற அள விலேயே நினைக்கின்றவன் தீமையுறுகின்றான் என்பது சான்றோரின் அனுபவ உரை. "தீங்கு நினைக்கின்றவனுக்கே தீங்கு" ``Evil to him who evil thinks" என்பது ஆங்கிலப் பழமொழி. தனக்குத் தீங்கு நேராமல் இன்னொருவனுக்குத் தீங்கு செய்ய முடியாது என்று ஓர் அனுபவ உரையுண்டு.

திருவள்ளுவர், தீமையையும் தீயையும் ஒப்புநோக்கி தீச் செயலின் இழிநிலையை — அதன் கொடுமையை நமக்கு உணர்த்துகின்றார். தீ, வைத்த இடத்தில் மட்டுமே எரியும். தீ, வைக்கின்றவனின் கை, பற்றி எரிவதில்லை. தீ, வைக்கப்பெற்ற கூரை மட்டுமே பற்றி எரியும். இது ஒருபால் கேடு.

அது மட்டுமின்றி தீயினை யார் வைத்தாலும் வைத்தவர்களே அணைக்க வேண்டுமென்ற அவசிய மில்லாமல் மற்றவரும் அணைக்கலாம். ஏன்? இன்று தீயணைக்கும் படையே இருக்கிறது. ஆனால் ஒருவரிடம் உள்ள தீமையைப் பிறிதொருவர் தணிக்க முடிவதில்லை. ஆனால், முயலலாம். அந்த முயற்சி தூண்டுதலும் வழி நடத்தலும் என்ற அளவிலேயே அமையும். தீமையுடையவர் உணர்வசைந்து உடன்பட்டாலேயே மாறுதல் உண்டு.

அப்படியில்லையேல், ஒருவரிடமுள்ள தீமை தணிவதில்லை. இந்தச் சிறந்த நோக்கந்தான் தன்னிடமுள்ள தீமையைத் தானே உணர்ந்து நொந்து வருந்தி அழுது பாடித் தீமையிலிருந்து விடுதலைபெறச் சான்றோர்கள் முயன்றிருக் கிறார்கள். இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே சமயங்களில் பிரார்த்தனையும், வழிபாட்டுமுறைகளும் தோன்றின. உண்மையான பிரார்த்தனை என்பது ஒருயிர் தன்னையே நோக்கித் தன் தீமையைக் கழுவுதலேயாம். ஆனால், மனிதனின் வியாபாரப் புத்தியும், சோம்பலும் இந்தத் தூய சமயத்தையும் விட்டபாடில்லை. இதன் விளைவாகவே புரோகித சமயம் தோன்றிற்று. ஒருவருக்காகப் பிறிதொருவர் அழத் தொடங்கி விட்டனர். பாபர் போல அழுதால் பயனிருக்கலாம். அது உண்மையிலேயே அழுதது. ஆனால், இவர்கள் அழுவதோ பெறக்கூடிய காசுகளுக்கேயாம். காலப் போக்கில் அழுவதுகூட விடுபட்டுப் போயிற்று. அவர்கள் சமயத்தின் முதலாளிகளாகி விட்டார்கள். முழுநிலவை மறைத்த நிழலைக் கருதி முதலைக் கண்ணீர் வடித்துக் குளத்தில் மூழ்கும் மனிதர்கள் — நிறைவுடைய நன்னெறியாம் சமயத்தில் படிந்த தீமையை நினைத்து அழாதது ஏனோ? ஒருவனிடமுள்ள தீமையை அவனே உணர்ந்துதான் மாற்றிக்கொள்ள முடியும். பிறர் அணைக்கும் தீயைவிடத் தம்மிடமே பொறுப்புள்ள தீமை கொஞ்சம் சிக்க லானதேயாம்.

அதோடு, தீ எரியத் தொடங்கியவுடனேயே வெளிப் படையாகத் தெரிகிறது. ஆதலால், உடனடியாக அணைக்கும் முயற்சியும் தோன்றிவிடுகிறது. ஆனால், தீமையோ உடனடி யாகத் தெரிவதில்லை. உடனிருந்தும் ஒட்டியும், பச்சை உறவு காட்டியும் இன்ப நயங்காட்டியும் பையப் பைய அரித்துக் கெடுப்பது. பலர், தன்னிடமுள்ள தீமையையேகூட அறியாமையின் காரணமாக நன்றென்றே கருதிக் கொண்டி ருக்கிறார்கள். அல்லது "அவரிடமில்லையா? இவரிட

*மில்லையா? அதற்கு இது என்ன மோசம் போய்விட்டது?" என்று சமாதானம் கற்பித்துக் கொள்கிறார்கள். பலரிடம் வறுமை இருப்பதனால், வறுமையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றார்களோ? சிலரிடமுள்ள செல்வத்தில் தானே நாட்டம் வைக்கிறார்கள்! ஆதலால் வெளிப்பட இருந்து காட்டி, சீக்கிரத்தில் அணைக்கப்பெறும் தீயைவிட உள்ளிருந்து எரித்து அழிக்கும் தீமை மிகவும் கொடியது.*

*தீயினால் எரிவது வீடுகளேயாம். வீடுகள் மனிதனின் படைப்புகள். ஆனால் தீமையினால் அழிவதோ மனிதனே யாம். படைப்புப் பொருள்கள் அழிந்தால் திரும்பப் படைக்கலாம். படைப்புக்குரிய மனிதனே அழிந்து போனால்... இந்த வகையிலும் தீமை மிகக் கொடியது. தீயினால் விளையும் தீது ஒரோ வழி எல்லைக்குட்பட்ட தன்று. நில எல்லைக்கும் உட்பட்டதன்று. கால எல்லைக்கும் உட்பட்டதன்று. தீமை மனித சமுதாயத்தையே அழிக்க வல்லது. ஏழேழ் தலைமுறைக்கும் அழிக்கவல்லது. இந்த வகையிலும் தீயினும் தீமை கொடியது.*

தீ, கூரையிலிருந்தால் கேடு. ஆனால், அடுப்பிலிருந்தால் ஆக்கம். அணையா அடுப்பு, வளம் நிறைந்த மனையின் சிறப்பு. ஆதலால், அடுப்பிலிருக்க வேண்டும். ஆனால், தீமை யினால் ஒரு வழியிலும் பயனில்லை. எந்த அளவிலும் பயன் தராது. பயன் தருவதுபோலத் தோற்றமளித்தாலும் சர்க்கரைப்பாகு தடவிய நஞ்சுருண்டையேயாம். நாவில் கரும்பின் இனிமை தென்படும். உடனேயே உயிர் கொல்லும் நஞ்சும் தென்படும். தீமையினால் வரும் பயன் கள்ளுண்டு களித்தல், வரைவின் மகளிர் மயக்கு — எல்லாவற்றையும் விடப் பிணந்தழுவிய முயக்கு ஆகியன போலாம். ஆக ஒருபோதும் பயன்படாது. ஆதலால், தீயைவிடத் தீமை கொடியது. அதனாலன்றோ திருவள்ளுவர்,

> "தீயவை தீய பயத்தலால் தீயவை
> தீயினும் அஞ்சப் படும்." (202)

என்று குறிப்பிடுகின்றார். தீயவை தீய பயத்தலால் என்ற சொற்றொடரும், தீயினும் என்பதிலுள்ள உம்மையும் அறிவுக்கு விருந்து, ஆழச் சிந்திப்பாரின் அக உலகிற்குப் பாதுகாப்பு.

தீமை செய்வோர் தீமை செய்யட்டும். செய்து கொண்டே இருக்கட்டும். அதனால் நாய்கள் தாம் கக்கியவற்றைத் தாமே தின்பது போலத் தம்முடைய செயல்களின் விளைவுகளை, அவர்களே அனுபவிப்பார்கள். அறக்கடவுள் சூழ்ந்து ஊட்டுவிக்கும். ஆதலால், அச்சமின்மை பேசிய திருவள்ளுவர் அஞ்சச் சொல்லுகிறார். தீயனவற்றிற்கு அஞ்சச் சொல்கிறார். புறத்தில் தாக்கும் தீமைகளைக் கண்டு அஞ்சுவது போலவே, ஏன்; அதனினும் ஒருபடி மேலாக அகத்தில் தோன்றித் தாக்கும் தீமையைக் கண்டு அஞ்சச் சொல்கிறார். மடியில் தீயினை கட்டிக்கொண்டு, நானிலத்தில் நடப்பாரில்லை. அதுபோல் மனத்தில் தீமை தாங்கி நடப்பாருமில்லை என்கிற நிலை உருவாக வேண்டும். அதுவே வள்ளுவர் உலகம்.

## உயிர் வாழ்வான் யார்?

திருக்குறள் ஒரு சமுதாய ஒழுக்க அமைப்பு நூல். மனிதர்கள் தம்முள் கூடிவாழக் கடமைப்பட்டவர்கள். அதுவே, மனித நாகரிகத்தின் விழுமிய சிறப்பு. 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்கிறார் ஓர் ஆங்கிலப் பெரும்புலவர். விலங்குகளில் கூட்டு வாழ்க்கை இல்லை. ஒரோ வழி சில விலங்கினங்களிடத்தே கூட்டு வாழ்க்கைமுறை இருந்தாலும் கூட அது அச்சத்தின்பாற் பட்டதே யொழிய, அன்பிற்பாற் பட்டதன்று. சமுதாயக் கூட்டு வாழ்க்கையை வளர்ப்ப தென்பது மிக நுண்ணிய ஆற்றல். தம் இச்சைவழிச் செல்லும்

பொறிகளின் மீது தனியரசு செலுத்துவோரே பொது வாழ்விலும் கூட்டுப் பொதுவாழ்க்கையைத் திறமையாக நடத்த முடியும். சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு உரிய சிறந்த பண்புகளில் ஒன்று ஒப்புரவு அறிதல்.

ஒப்புரவறிதல் அதிகாரத்தில் வரும் குறட்பாக்களுக்கு உரையாசிரியர்கள் பெரும்பாலும் 'இல்லாதவர்களுக்குக் கொடுத்தல் — உதவி செய்தல்' என்ற தன்மையிலேயே பொருள் கண்டுள்ளனர். இல்லாதவர்களுக்குக் கொடுக்கும் பண்பை — இயல்பை, ஈகை என்ற தனி அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுகின்றார். ஈகை, ஒப்புரவறிதல் இவ்விரண்டும் ஒன்றுபோலத் தோற்றமளித்தாலும் ஆழமான கருத்து வேறுபாடு உடையன. ஈகை வழிப்பட்ட சமுதாயத்தில், உடையோர் — இல்லோர் என்ற வேற்றுமை விரிந்திருக்கும். அவ்வழிப் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தலைதூக்கி நிற்கும். ஒப்புரவறிதலில் உடையோர் இல்லோர் வேற்றுமையின்றி, உயர்வு தாழ்வு இன்றிக் கொடுத்தல் கடமை எனவும், கொள்ளல் உரிமை எனவும் கருதும் அடிப்படையிலேயே அந்த அதிகாரம் அமைந்துள்ளது.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்." (214)

என்பது திருக்குறள். இங்கு ஒத்தது என்ற சொல்லுக்கு வழக்கம்போல பரிமேலழகர் 'உலக நடையினை' என்று எழுதித் தப்பித்துக் கொண்டு விட்டார். அது நிறைவான கருத்தன்று. 'தன்னைப் போல் பிறரை நினை' என்பது ஒரு விழுமிய ஒழுக்க நெறிவாக்கு. இன்றையச் சமுதாயத்தில் பலர் தம்மோடு பிறர் ஒத்துவர வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர பிறரோடு தாம் ஒத்துப்போக வேண்டும் என்று கருதவில்லை. பலருக்கு எது ஒத்ததோ அதற்குச் சிலர் இணங்கியே வாழவேண்டும். அதுவே சமுதாய நியதி — ஒழுக்கம். அங்ஙனம் உணர்ந்து வாழ்

பவர்களே வாழ்பவர்கள். அவர்கள் வாழ்க்கையிலேயே இன்பமும் அமைதியும் இருக்கும். மற்றோர்க்கும் அவர்தம் வாழ்க்கையாற் பயனுண்டு. இங்ஙனம், ஒத்ததறிந்து ஒழுகத் தெரியாதவர்கள் வாழ்ந்தாலும் நடமாடினாலும் பிணம் என்றே கருதவேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. காரணம், பிணத்திற்கு மனித உருவ அமைப்பு இருந்தாலும் உணர்ச்சியில்லை. உதவும் பணியில்லை. அதுபோலவே, ஒத்ததறிந்து வாழும் இயல்பில்லாதவர்களுக்கும் அன்பு, சமுதாயம் ஆகிய உணர்ச்சிகள் இல்லை. அவர்களும் உதவ மாட்டார்கள். பிணத்தை நடுவீட்டில் நடுத்தெருவில் பல நாட்கள் வைப்பதரிது. காரணம் நாற்றமெடுக்கும். காற்றைக் கெடுக்கும். சமுதாயத்திற்கு நோய் தரும். அதுபோலவே, ஒத்ததறிந்து உதவி வாழமுடியாத மனிதன் நெஞ்சத்தால் நாற்றமெடுத்தவனாவான். பிணம்போல் நாறுவான். அந் நாற்றத்தைத் தன்னுடைய சொற்களாலும் செயல்களாலும் வெளிப்படுத்துவான். உபத்திரவம் செய்வான். பிணத்தை வீட்டிலிருந்து விரைவாக எடுத்துச் செல்வதுபோல், சமுதாயத்திலிருந்து இந்த மனிதர்களையும் விரைவில் எடுத்தாக வேண்டும்.

ஒத்தது அறிவான் என்று சொன்னமையால் தானே வலிய முயன்று அறிந்து செய்தலையே திருவள்ளுவர் இங்கு குறிப்பிடுகின்றார். இதையே (Volounteer Service) என்று குறிப்பிடுகிறார்கள்.

## இரப்பாரும் ஈவாரும்

**உ**யிர்கள் குறைகளினின்று விடுதலை பெற்று நிறைவைப் பெறவே மனித வாழ்க்கை தரப் பெற்றது. இந்த நிறைவைப் பெறும் சாதனங்களிற் சிறந்தது கிளர்ந்தெழும் அன்புடன் மற்றவர்களுக்கு உதவி செய்வது. அவ்வாறு செய்யும்போது உயிரின் தன்மை வளர்கிறது. சிறப்படைகிறது.

அப்பொழுதே உயிருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதன் காரணமாக உயிர், உயிர்த்துடிப்போடு வாழ்கிறது. ஓர் உயிர் நலம்பெற்ற உயிரோட்டத்தோடு கூடி வாழ வேண்டுமானால் அதற்கு உதவி செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகம் தேவை. அந்த வாய்ப்புகள் இல்லையானால், உயிரின் இயல்புகளும் ஆற்றல்களும் வெளிப்படுதற்கு வழியில்லாமற் போகும். அதனாலேயே திருவள்ளுவர், இரப்பாரே இல்லாத உலகம் உயிரற்ற பாவை சென்று வந்தாற் போன்றது என்றார்.

மனித உணர்வின் வெளிப்பாடுகள் துன்பங் கண்டபோது அழுதலும், இன்பங் கண்டபோது மகிழ்தலும் ஆகும். இத்தகு பண்பு தன்னளவினதாக இருக்கும்பொழுது பெரிதும் பயன்தராதது மட்டுமின்றி ஆக்கமில்லாமலும் போய்விடுகிறது. பிறர் துன்பங் கண்டு நோதலும், பிறர் இன்பங் கண்டு மகிழ்தலும் பண்பாட்டின் விளைவு; உயிர் வாழ்தற்குரிய வழி. இக் குறிப்பிலேயே திருவள்ளுவர் இரப்பாரும் இவ்வுலகில் இருத்தல் வேண்டும் என்று பேசுகின்றார். இரப்பார் ஏழைமையின் காரணமாக இரக்க வேண்டும் என்பதற்காக அல்ல. பிறரின் அன்பு உணர்ச்சியைத் தூண்டி உயிர்பெற்று வாழவும் . உய்தி பெறவுமேயாகும். இப் பார்வையோடு இரப்பாரைப் பார்த்தால் ஏழைமையின் துன்பமும் ஏளனமும் தோன்றாது. இடுவோர் இயல்பு, இரப்பாரின் துன்பம் மாற்றுவதாக இல்லாமற்போனால் இரப்போர் வாழ்க்கை கொடுமை யானது. ஈத்துவக்கும் இன்பம் பெற விழைவோர்க்கு இரப் பார் இல்லையானால் அவ் வின்பத்தைப் பெற முடியாமல் அன்றோ போய்விடும்! வைத்துடைமை வண்கணாளர் வாழும் நாட்டிலே இரப்பார் இருத்தலைவிட இறத்தலே நன்று என்று வள்ளுவரே வகுத்துப் பேசுகின்றார்.

ஆனால், வள்ளுவர் காலச் சூழல் வேறு. நாம் வாழும் சூழல் வேறு. வள்ளுவர் காலத்தில் பிறர் துன்பம் மாற்ற முடியாதபோது — பிறருக்கு உதவி செய்ய முடியாத இயல்பு

— வந்துற்றபோது தம்மைத்தாமே மாய்த்துக் கொண்ட காலம். இன்றோ பொருள் பெரிதாகி, ஈர நெஞ்சின்றி இவறிக் கூட்டிப் பொருள் சேர்க்கும் காலம். இந்தக் காலத்தில் இரப்போர் நிலை இரங்கத்தக்கதாக உள்ளது. முழங்கால் கடுக்க முயன்று ஏறி "முதலாளி" என்றாலும் காசு தராமல் "உடம்பு சரியில்லையா?" என்று கேட்கும் காலம். ஆதலின் இரப்போர் தொகை குறைவதே நல்லது. எனினும் உதவி, சேவைகளின் மூலம்தான் மனித உயிர்கள் வளர்ச்சியடைய முடியும்.

ஆதலால், இரப்பார் நிலையில் உள்ளார் இரக்காமலேயே வலியச் சென்று கொடுப்பது — அல்லது வாழ்விப்பது நலம் தரும். அத்தகு சமுதாயப் பணிமனைகள் நாடு முழுவதும் பெருக வேண்டும். இக் கருத்திலேயும் வள்ளுவர் கூறி உள்ளார்.

"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள." (223)

என்ற குறள் இக் குறிப்பினதே யாகும்.

## ஈதலும் இரத்தலும்

மனித குலம் பலவகையாலும் நெருங்கிய தொடர்பு கொண்டு ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழக்கூடியதே யாகும். அறம் விளக்கும் அறநூல்களும், ஒழுக்க நூல்களும், சமய நூல்களும் ஒருமுகமாக, ஈதலின் சிறப்பைப் பேசுகின்றன. தமிழ் இலக்கியங்கள்கூட ஈதலின் சிறப்பைப் பேசுகின்றன. காதலின்பத்தைவிட ஈதலால் பெறுகின்ற இன்பம் பெரிது என்பது தமிழர் கருத்து. ஈந்து வாழ முடியாத வாழ்க்கை மரணத்திலும் கொடுமையானது என்பது திருவள்ளுவர் கருத்து.

நல்ல மனம் படைத்தவர்கள், பிறருக்கு உதவி செய்வதைப் பெரும் பேறாகக் கருதுவார்கள். அப்படிப்பட்ட வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள். குறுந்தொகையில் தலைவன் பொருள்வயிற் பிரிகின்ற பொழுது, தலைவியிடத்தில் பொருள் திரட்டிக் கொண்டு கார்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாக உறுதி கூறிச் செல்கின்றான். அந்த உறுதிச் சொல்லை, நிறைவேற்றாமல் தவறிவிட்டால், "இரவலர் வாரா வைகல் பலவாகுக; யான் செலவுறுதகவே" என்று குறிப்பிடுகின்றான். கொடுத்து உவந்து வாழாத வாழ்க்கை, கொடிய துன்பமான வாழ்க்கை என்பது தமிழ்க் கருத்து.

சிலர் நாள்தோறும் பலர் தம்முடைய உதவியை நாடு தலைப் பேறாக — சிறப்பாகக் கருதுவர். இரத்தல் எவ்வளவு துன்பமோ அதுபோலவே இரக்கப்படுதலும் சான்றோர்க்குத் துன்பம் தரும். இரந்து கேட்பவர்களுடைய மனம் நிறைவு பெறும்வண்ணம் ஈவதுதான் ஈதலுக்குச் சிறப்பு. அங்ஙனம் இன்றி, ஏதோ பெயரளவில் கொடுப்பதும் இரந்தவர் களுடைய வறுமை நோய்க்கு மருந்தாகாவண்ணம் வழங்குதலும் சால்பல்ல. இரந்தார் பேராசைக்காரராக இருந்தால் இரக்கப்படுதலும் தீது. அதுமட்டுமின்றி தினைத் துணை நன்றி செய்யினும் அதைப் பனைத்துணையாகக் கொண்டு மனநிறைவு அமையத்தக்க பண்பாடு இல்லாதவர்களாக இருப்பின் ஈதலில் மகிழ்ச்சி ஏது?

அதனாலன்றோ, உதவியின் சிறப்பு உதவியின் தரத்தையும் தகுதியையும் பொறுத்ததல்ல — உதவியைப் பெறுவோரின் தகுதியைப் பொறுத்தது என்று திருக்குறள் கூறுகிறது. சான்றோர், நன்மனமுடையோர் ஒருவேளை உப்பில்லாக் கூழே குடித்திருந்தாலும் அதை என்றைக்கும் எண்ணிப் பார்ப்பர். அக் கூழ் இட்டவர்க்கு நல்லது எண்ணுவர். நல்லது செய்வர். அற்பமனத்தர் கீழ்மக்கள்

எவ்வளவு பெற்றாலும் பெற்றதைச் சுருக்கிப் பெறாததையே பெரிதுபடுத்திக் காட்டுவர். பெற்ற உதவிக்கு நன்றி செலுத்தும் இயல்பின்றி, பெறாது போனவைகளுக்குப் பகை காட்டுவர். ஆதலால், ஈதல் இழப்பே எனினும் வறியோர்க்கு ஈதல் வேண்டும். வறியோரினும் இன்றியமையாத் தேவை கிடைத்த வுடன் மனநிறைவு கொண்டு மகிழ்ந்து வாழத் தெரிந்த வர்களே இரப்பவர்களாக வந்தால் ஈதல் இனிது இனிது! மீண்டும் மீண்டும் பெற வேண்டும் என்ற பெருவேட்கை யுடையவர்களாக இரக்கப்படுதல் தீதேயாம்.

இன்றைய உலகில் தன் தேவைகள் மட்டுமே தெரிந்தவர்கள் பெருகி இருக்கிறார்கள். கொடுப்பவர் சக்தி அறிந்து கேட்பவர்கள் இல்லை. கிடைத்தமட்டும் பார்க்க லாம் என்ற உணர்ச்சியே மேலோங்கி நிற்கிறது. அதிலும் வறியவர்கள் மட்டும் இரப்பதில்லை. வாழ முடிந்தவர்களும் கூட இரக்கிறார்கள். கொடுப்பதன் மூலம் பெறுகிறவர் களுடைய இனிய மகிழ்ச்சி நிரம்பிய முகத்தைக் காண்ப தென்பது இன்றைக்கு அருமையாகிவிட்டது. அப்படியே ஒரோவழி கண்டாலும் நீரின்மேல் சலனத்தைப் போல சில பொழுதேயாம். வாங்கிக் கொண்டேயிருக்கும்போது மகிழ்ச்சி. ஒருநாள் தடைபட்டாலும் மகிழ்ச்சி மறைந்து ஆச்சரியம் தோன்றும்.

இந்த உலகத்தில் எப்படிப் பலர் கேட்கக் கொடுத்து வாழும் வாழ்க்கையை இன்பம் என்று கருத முடியும்? அதனாலன்றோ திருக்குறள்,

"இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு."

(224)

என்று உலக நடையை அறிந்து ஓதுகிறது.

# யாக்கை பொறுத்த நிலம்

"நாடென்ப நாடா வளத்தன" என்பது திருவள்ளுவர் வாக்கு. ஒரு நாடு பல்வளமும் கெழுமிய நாடாக இருத்தல் வேண்டும். இயல்பாக வளம் தருகின்ற நாடாகச் சில அமைந்து விடுவதுண்டு. நீர்வளமும், நிலவளமும் உள்ள நாடுகள் மட்டும் வளமுடையனவாக இருப்பதில்லை. அந்நாட்டில் வாழும் மக்களுக்கும் வளத்திற்கும் தொடர்புண்டு. அதனாலன்றோ புறநானூற்றுப் புலவர், நாடு நாடாக இருந்தாலென்ன? காடாக இருந்தாலென்ன? கவலையில்லை. அந் நாட்டில் வாழும் ஆடவர்கள் மட்டும் நல்லவர்களாக — உழைப்பாளிகளாக — உத்தமர்களாக இருப்பின் காடும் நாடாகும் — பள்ளமும் மேடாகும் என்றார். ஒரு நாட்டின் வளத்திற்கும், வறுமைக்கும், எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் அந்நாட்டு மக்களின் மனநிலையே அடிப்படையாக அமைகின்றது. கற்றோர் போற்றும் கலித்தொகையிலும்கூட மலைவாழ் மக்கள் அல்லன செய்து வாழ்தலின் மலைபடு வளம் சுருங்குகிறது என்று கூறப்பெறுகிறது.

ஒரு தாய், தான் பெற்றெடுத்து வளர்த்த அருமையான பிள்ளை புகழ்மிக்க வாழ்வு வாழவேண்டும் என்று விரும்புகிறாள். அந்நோக்கத்தோடு வளர்க்கிறாள். ஆனால் அவன் தவறுகள் பல செய்து தண்டனைக்கு ஆளானான் என்ற செய்தியை அந்தத் தாய் கேட்டால், அவள் நிலை என்னாகும்? துன்பத்தால் துடிதுடிப்பாள் — உணர்விழந்து ஊக்கமிழப்பாள். அவள் உள்ளமும் உடலும் கொதிகலனாக மாறும். இந்த நிலையில் அவளிடத்தில் எப்படி ஆக்கபூர்வமான செயற்பாட்டை எதிர்பார்க்க முடியும்? அதுபோல, நிலமகளும் ஓர் அன்னை, அவளுடைய

மணிவயிற்றில் கோடானு கோடி மக்கள் தோன்றி வளர்கிறார்கள்—வாழ்கிறார்கள். இனிய பல நறுஞ்சுவை உணவுகளை ஊட்டி வளர்க்கிறாள் நிலமகளாகிய அன்னை. தன்னுடைய மக்கள் அன்போடும், பணிவோடும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதே நிலமகளின் விருப்பம். அதற்கு மாறாக, இவர்கள் தம்முள் மோதிப் பகை வளர்த்துக் கொண்டு, தம்முடைய வாழ்க்கையையும், உலகியல் வாழ்க்கையையும் களங்கப்படுத்துவதைக் கண்டும் கேட்டும் கலங்குகிறாள் — கவலை கொள்கிறாள். நிலவளம் வெப்பத்தன்மை அடைகிறது! ஆறாத் துயரத்தில் நிலமகள் அழுந்துகின்றமையின் காரணமாக, நிலமகளின் வளம் குன்றும் என்பது திருவள்ளுவரின் கருத்து. "குற்றமற்ற நிலையில் குறைவிலாது வளம் பெருக்கும் நிலம்கூட வளம் சுருங்கும், புகழற்ற உடம்புகளை நிலமகள் தாங்கும்பொழுது" என்று குறிப்பிடுகிறார். இசையிலா யாக்கை என்று குறிப்பிட்டது, சிந்தனைக்குரிய செய்தி. உயிருடைய ஒருவன் அன்பு காட்டுவான்; அறஞ் செய்வான். புகழ்பட வாழ்வான். அஃதில்லையானால், உயிரற்றவன் என்பது தெளிவு. இக்குறிப்பினை 'இசையிலா யாக்கை' என்ற குறிப்பின் மூலம் உணர்த்துகிறார். உயிருள்ள மனிதனால் நிலத்திற்குப் பயனுண்டு. உயிரற்ற பிணத்தைத் தாங்குதலால், நிலத்திற்குப் பயனில்லை என்பதைக் குறிக்க, 'பொறுத்த நிலம்' என்று குறிப்பிட்டார். ஆக, மனிதர்கள் நல்வாழ்க்கையின் மூலம் தான் நிலத்தின் வளத்திற்கு அடிப்படையாக அமைய முடியும். இக் கருத்தினை,

> "வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
> யாக்கை பொறுத்த நிலம்" (239)

என்ற குறட்பாவின் மூலம் நமக்குத் தெளிவாக்குகிறார் திருவள்ளுவர்.

# செல்வத்துட் செல்வம்

உலகியல், அருளால் வந்த விளைவு. இவ்வுலகத்தின் தோற்றமும், வளர்ச்சியும்கூட அருள் ஆக்கத்தின் பொருட்டே யாம். இவ்வுலகைக் கவிந்து எழிலும், இனிமையும் தரும் இயற்கை அருளின் சின்னம். இயற்கைக்கு எழிலும் வளமும் வழங்கும் வான் மழையே அருளின் பொழிவு. 'அருளென்னப் பொழியேலோர் எம்பாவாய்' என்பது மணிமொழி. இத்தகு அருட் செல்வம் பலவற்றுள்ளும் சிறந்ததாகும். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் செல்வத்தைப்பற்றிய தவறான கருத்து மக்கள் மன்றத்தில் நிலவியது. அஃதாவது நிலம், வீடு, பொன் ஆகியவைகளையே செல்வம் எனக் கருதினர். அதனா லன்றோ இன்றையப் புற உலகில் செல்வம் நன்றாக வளர்ந் திருக்கிறது. அறிவுச் செல்வம், அருட் செல்வம் இரண்டும் செல்வம் என்ற நம்பிக்கையை மக்களிடத்தில் வளர்க்கத் திருவள்ளுவர் முயற்சித்தார். அது செல்வம் மட்டுமல்ல. செல்வத்துள்ளும் சிறந்தது — தலையாயது என்று வலியுறுத்துகின்றார். பொருட் செல்வம் ஈட்டும் பொழுதும் துன்பம் தரும் — இழப்பிலும் துன்பந்தரும். அதுமட்டுமின்றி, பொருட் செல்வம் அருளோடு — அருள் உணர்வோடு உறவு கொள்ளாத பொழுது குவியும். பயன்படாதவர்களிடம் தேங்கும். அவ்வழி அழுக்காறு, அவா, வெகுளி போன்ற குணக்கேடுகள் தோன்றத் துணைசெய்யும். அருட் செல்வமோ, எஞ்ஞான்றும் இன்பந்தருவது. உடையவருக்கும் இன்பம் தரும். மற்றோர்க்கும் இன்பம் தரும். அருட் செல்வத்தினால் — அருட் செல்வம் உடைமையினால் சான்றாண்மை வளரும்; புகழ் பெருகும். அருளுடையோர் நெஞ்சம் தண்ணென்றிருக்கும். அங்கு அன்பின் ஈரம், கருணையின் கசிவு, எப்பொழுதும் இருந்து கொண்டே யிருக்கும். இத்தகு அருட்செல்வம், பொருட் செல்வத்தைப் போல எளிதில் கிடைக்கக் கூடியதன்று. பலகாலும் முயன்று

பெறவேண்டிய பெரும் பேறு. அன்பு நெறியில் பல்லாண் டொழுகியவர்களுக்கே அருள் உணர்வு அரும்பும். உலகியலில் பொருள் உடையார் பலர். அருளுடையார் அருமையினும் அருமை. எனினும், வள்ளுவர் காலத்திலேயே ஒரு பொய்வாதம் தோன்றியிருந்திருக்கிறது. செல்வம் உடைமை புண்ணியத்தின் பயன் — அருளின் ஆக்கம் என்றெல்லாம் பிழைபடக் கருதி வந்திருக்கின்றனர். இதனைத் திருவள்ளுவர் கடுமையான குரலில் மறுக்கிறார். 'பொருட் செல்வம் பூரியர் கண்ணும் உள' என்று இடித்துக் கூறுவதன் மூலம், மனிதனின் தகுதிப்பாட்டுக்கு, பொருள் உடைமையைத் திருவள்ளுவர் அளவுகோலாகக் கையாள விரும்பவில்லை. திருவள்ளுவர் மனிதகுலத்தை ஒன்றாக இணைத்து 'ஓருலகம்' சமைப்பதையே இலட்சியமாகக் கொண்டவர். அத்தகைய இலட்சிய உலகத்தைப் படைப்பதற்கு அன்பும் அருளுமே இன்றியமையாத் தேவை. அவையே துணை செய்ய முடியும் என்று அவர் கருதினார். அந்த நம்பிக்கையில் தோன்றியதே திருக்குறள்.

வாழ்க்கையின் தொடக்க நிலை அன்பு. முழுநிலை அருள். இத்தகு அருள் உணர்வு துன்பத்தைக் கண்டால் துடிக்கும். துன்புறுத்தலுக்கு நாடு, இன மொழி வேறுபாடு ஏது? யார் துன்புற்றாலும், எவ்வுயிர் துன்புற்றாலும், இதயங்கலந்த அருள் உணர்வோடு துன்பம் துடைப்பவனே மனிதன். அதனாலன்றோ, வாடிய பயிரிலிருந்து, வாட்ட முறும் மக்கள்வரை, வாட்டம் நீக்கி வளம் சேர்க்கும் வான் மழை அருளாயிற்று! பற்றுக் கோடின்றி பாரில் உள்ள உயிர் அனைத்தும் துய்த்து வாழ்ந்து தூநெறிசேரத் துணைநிற்கும் இறைவனின் கருணை அருளாயிற்று. பொருட் செல்வம் தேடி அலையும் மனித உலகம் உடன் கருணையையும் நோக்கி அலையுமானால், பெரும் பயன் பெறும்; அமைதி நிலவும்; வந்த காரியமும் நிறைவுறும்.

ஈர நெஞ்சினர் இறைவனைக் காண்பார் என்றார் அப்பரடிகள். உமிழ்நீரால் தொண்டையை நனைத்து உலாவருதல் போல, பருகும் நீரால் வயிற்றை ஈரப்படுத்துவது போல, காய்ச்சற் பாட்டில் திகழும் இவ்வுடலை நீரில் அமிழ்த்தி நனைப்பதுபோல, நெஞ்சத்தையும் இனிய அருளில் நனைக்க முயற்சிப்போமாக!

## அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை!

மனித சமுதாய வாழ்க்கையின் இரட்டை நாடிகள் பொருளும் அருளும் ஆகும். இவை இரண்டும் முரண் பட்டன அல்ல. இணைந்த இரட்டைகளாம். ஒன்றின்றி ஒன்றில்லை. ஒன்றற்கொன்று அரணுமாகும். ஒன்று பிரிதொன்றைக் கொண்டு வந்து சேர்க்கும். இவ்விரட்டை எங்காவது பிரிந்து காணின், அது பொருளுமன்று; அருளு மன்று. அறியாதார் சிலர், அருள் உணர்ச்சியால் பொருளை இழக்க நேரிடும் என்பர். பொருள் இழத்தலே, மேலும் பெறுதற்குரிய வழி! ஆனால், சூதில் இழத்தல் இதில் சேராது. அருள் கருதி, பசித்தவர் பசிப்பிணி நீக்கப்பொருளை இழப்பவர் பொருளை இழப்பதில்லையே! இதனை வள்ளுவம், 'பொருள் வைப்புழி' என்றது.

பொருளில்லாருக்கு இவ்வுலகம் இல்லை. இது வள்ளுவத்தின் தெளிந்த முடிபு. ஆனால், இன்று நாட்டில் 'பொருள்' என்பதற்குப் பிழையான கருத்தே கொள்கின்றனர். பொருள் என்பது இன்று நாணயமாற்று விகிதத்தில் நம்மிடையே நடமாடுவதன்று. நாணயத்திற்குள்ள மதிப்பு அதில் கலந்திருக்கிற உலோகத்தைப் பொருத்ததன்று. ரூபாய் நோட்டுக்குள்ள மதிப்பு, அது செய்யப்பட்டுள்ள தாளுக்குரிய தன்று. அதனுடைய மதிப்பு, அதற்குப் பின்னணியாகவுள்ள மனிதர்களுடைய அனுபவத்திற்குள்ள பொருள்களை வைத்தேயாகும். இன்னும் தெளிவாகக் கூறினால் அப்

பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மனிதன் செலவழித்த அறிவு — உடல் உழைப்புக்களை மையமாகக் கொண்டதே யாகும். பொருள்களை உற்பத்தி செய்வதற்குரிய உழைக்கும் சக்தியை எவர் உடையவராக இருக்கிறாரோ அவரே அந்த அளவுக்குப் பொருள்களையோ நாணயங்களையோ, பெறவும் அனுபவிக்கவும் உரியவர் என்ற நியதியே உயர்ந்த ஒழுக்கமான நியதி. இந்த நியதி நின்று நிலவினால் நீதியும் நின்று நிலவும். இன்று நம்மிடையில் இந்த நியதியுமில்லை; நீதியுமில்லை! உழைப்பென்றால் இன்னதென்றே அறியாத ஒரு நூறு பேர்களிடம் பல நூறு கோடியல்லவா முடங்கிக் கிடந்திருக்கிறது! இந்த முடக்கத்தை உடைத்து, மக்கள் மன்றத்திற்கு 'மடைமாற்றிய பெருந்தகைமை சான்ற பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, இந்த நாட்டின் வரலாற்றில் புது யுகத்தைத் தோற்றுவித்து, புகழ் பெற்று விளங்குகிறார்கள்.

பொருள் என்பது மனிதன் உண்டு, தின்று, உடுத்தி அனுபவிக்கத் தக்கனவேயாம். உடல் — உயிர்க்கூட்டு நிலைபெற்றியங்க இந்த எந்திர வாழ்க்கைக்கும் எரிபொருள் தேவை. அதுவே தம் உணவு. உணவில்லாதார், இவ்வுலகத்தில் இவ்வுடலுடன் கூடி வாழ்ந்திடுதல் இயலாது. இதனையே திருவள்ளுவர் 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார். இவ்வுலகம் என்பது அண்மைச் சுட்டு. இவ்வுலகம் என்பது குடும்பத்தைக் குறிக்கும். பொருள் பெற்று கூடித் துய்த்து மகிழ்வதுதானே குடும்பம்! அஃதில்லையேல் குடும்பம் ஏது? அதனால், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றும் கூறலாம். அடுத்து 'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை" என்று கூறுகிறார் 'அவ்வுலகம்' என்பதை வீடு என்று பொருள் கொள்வது மரபு. அங்ஙனம் பொருள் கொள்வதில் தவறில்லை. ஆயினும், இந்த 'அவ்வுலகம்' என்பது கேள்விக்குறி! அஃது அறிவொடு படாதது. அதனால் ஆய்வு இருக்கவே செய்யும், அதைவிடச் சிறப்பாக அருளின் பொருள் விளக்கமாக விளங்கும் சிறந்த

பொருள் ஒன்று கொள்ளமுடியும். அவ்வுலகம் என்பது சேய்மைச் சுட்டு. குடும்பத்தினின்று விலகி, சற்றுத் தூரத்தில் இருப்பது. அதுவே மக்கட் சமுதாயம்! பொருளுடையான் அருள் உணர்ச்சியுடையவனாக — மக்கட் சமுதாயத்திற்குப் பயன்படும் வழியில் பயன்படுத்தத் தவறிவிடுவானானால் அவனுக்குச் சேய்மையில் விளங்கும் சமுதாயம், அவனை நினைத்துப் பார்க்கமாட்டாது. அவனை ஒரு பொருளாக மதிக்கமாட்டாது. சமுதாயத்தின் மத்தியில் அவனைப் பற்றிய பேச்சு இருக்காது. ஒரோ வழி இருந்தாலும் அது பேணுதற்குரிய பெருமையைத் தராது; சிறுமையையே தரும் அவ்வுலகம் என்பதற்குச் சமுதாயம் என்று பொருள் கொள்வதே ஐயத்திற்கிடமின்றித் தெளிவுபடுத்துவதாகவும், அருளுடைமை விளக்கத்தின் மையமாக இருக்கிற சமுதாயத்தைப்பற்றி நிற்பதாகவும் இருக்கிறது. இது சிறந்த கருத்தாகும்.

> "அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
> இவ்வுலக மில்லாகி யாங்கு." (247)

## பொருளைப் போற்று

திருவள்ளுவர், வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட கற்பனை உடையவரல்லர். அவருடைய சிந்தனைப் போக்கு வாழ்வியலை ஒட்டியே அமைந்திருந்தது. எதார்த்த உண்மைகளுக்கு அவர் மாறுபட்டவரல்லர். ஆதலால், மனித வாழ்க்கைக்கு மிகமிக இன்றியமையாததாகிய பொருளைப் பற்றிய திருவள்ளுவரின் கருத்து இரண்டுபட்டதன்று. குழப்பமானதுமன்று; மிக மிகத் தெளிவானது. பொருளின் அடித்தளத்திலேயே தனிமனிதனின் வாழ்க்கையையும், சமுதாயத்தின் வாழ்க்கையையும் காட்டுகின்றார். ஏன்? பழந்தமிழ் மரபும் அதுதானே! மனிதன் அடையக்கூடிய பேறுகள் நான்கு என்பது தமிழ்மறை. அவை அறம், பொருள், இன்பம், வீடு

என்பனவாகும். அவற்றுள் நடுவனதாகிய பொருள் எய்த இருதலையும் எய்தும் என்பது தமிழ்நூல் முடிபு. அதனாலன்றோ திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று முப்பால் நூல் செய்தார். வீடு பற்றி அவர் தனி இயல் அமைக்கவில்லை. காரணம், அறம், பொருள், இன்பம் ஆகியவை மனிதன்முயன்று செய்யக் கூடியவை — பெறக் கூடியவை. ஆனால் வீடு, அறம் பொருள் இன்பத்தை முறையாகச் செய்து அனுபவித்து வெற்றி பெற்றவர்களுக்கு இறைவனால் வழங்கப் பெறுவது. வாழும் மனிதர்க்கே திருவள்ளுவர் நூல் செய்தமையின் காரணமாக, வீடு பற்றிய தனிவியல் அமைக்கவில்லை. எனினும் ஒரோ வழி குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் ஒரு பொருளியல்துறை அறிஞர். பொருளின் தோற்றத்திற்குரிய நிலைக்களனான பாதுகாத்தல், பங்கீடு ஆகியவைபற்றித் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். பொருளில்லையானால், உலகியல் இல்லை என்று கூறுகிறார். வறட்சித் தன்மையுடைய மாயா வாதம், பௌத்தம், சமணம் ஆகிய சமயக் கருத்துக்கள் தமிழகத்தில் ஊடுருவத் தொடங்கியபிறகுதான் தமிழர் வாழ்வியல் கெட்டது; வாணிகம் வீழ்ந்தது. ஆட்சி அந்நியர் கைக்கு மாறியது. இந்த நிலையினை உணர்ந்த தமிழக சிவ நெறிச் சான்றோர்களாகிய மாணிக்கவாசகர், அப்பரடிகள், சுந்தரர் போன்றோர் பொருளின் மேம்பாட்டினை வலியுறுத்தினர். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பது மாணிக்கவாசகரின் வாக்கு. "ஏரி நிறைந்தனைய செல்வம் கண்டாய்" என்றும், "பொன்னானாய், மணியானாய்" என்றும் அப்பரடிகள் பாடுகின்றார். சுந்தரர் வாழ்க்கைக்கு இறைவன் பொற்காசு வழங்கியதைச் சேக்கிழார் சிந்தை இனிக்கப் பாடுகின்றார்.

பொருள் உலகியலின் அச்சு; அதை வைத்தே உலகியல் நடைபெறுகிறது. திருவள்ளுவர் பொருளைப் போற்ற

வேண்டும் என்று கூறுகின்றார். பொருளைப் போற்றுதல் என்றால், பொருளைப் பூசித்தல் என்பது பொருளன்று. பொருளைப் பாதுகாத்தல் என்பதுதான் பொருள். பாதுகாத்தல் என்றால் செல்வத்தின் பயனாகிய இன்பம் நுகர்தல், ஈத்துவந்து மகிழ்தல் ஆகியன செய்யாமல் பூட்டி வைத்துப் பாதுகாப்பது என்பதும் பொருளன்று. பொதுவாகவே, போற்றுதல் என்ற சொல்லுக்கு நிறைந்தபொருள் உண்டு. போற்றுதல் என்ற சொல்லிலேயே வளர்த்தல், பாதுகாத்தல் என்ற இரு கருத்துக்களும் அடங்கும்.

"பொருட் செல்வம் போற்றுவார் கண்ணே உள" என்கிறார் திருவள்ளுவர். பொருட் செல்வம் போற்றுதற்கு வேண்டிய முதற் குணம், பொருளின் மதிப்பினை — சிறப்பினை உள்ளவாறு உணர்தல். பொருள் என்றால், அது வளரும் இயல்புடையதேயன்றிக் குறையும் இயல்புடைய தன்று. பொருட் செல்வத்தை வாழ்க்கை என்ற களத்தில், உழைப்பு என்ற நீருற்றிச் சிக்கனம் என்ற வேலி கட்டிப் பாதுகாத்தல் வேண்டும். பொருளின் தாய் உழைப்பேயாகும். உழைப்பின்றேல் பொருள் இல்லை. வந்த பொருளைச் சிக்கன முறையில் பாதுகாக்க வேண்டும். அதனாலன்றோ, அப்பரடிகள், "ஏரி நிறைந்தனைய செல்வம் கண்டாய்" என்றார். ஏரிக்குக் கரைகட்டித் தண்ணீரைக் காப்பதுபோல், பொருளுக்குச் சிக்கனம் என்ற கரை தேவை. சிக்கனம் என்றால் கஞ்சத்தனம் என்று பொருளல்ல — அப்படிப் பொருள் கொள்ளக்கூடாது. ஒரு ரூபாய் செலவில் முடிக்கக்கூடிய காரியத்திற்கு இரண்டு ரூபாய் செலவு செய்வது பொருள் இழப்பிற்குரிய வழியாகும். அத்தகை யோரிடத்தில் செல்வம் தங்குவதில்லை. மேலும், பொருள் வருவதற்குரியனவாகக் கிடைத்துள்ள வாய்ப்புக்களை இழக்காமல் முறையாகப் பயன்படுத்திப் பொருளீட்ட வேண்டும். வாய்ப்புக்களை இழப்பதும் கூடப் பொருள் இழப்பேயாகும். அதுபோலவே ஒரு களம் — அதற்குப்

பயன்படுத்தக்கூடிய உழைப்பு ஆகியவை மூலம் எவ்வளவு பொருள் ஈட்டவேண்டுமோ, அவ்வளவையும் ஈட்ட வேண்டும். அதற்குக் குறைவாக ஈட்டுதலும் பொருள் இழப்பிற்குரிய வழியேயாகும். பொருள் இழப்பு ஒற்றையல்ல — அதைத் தொடர்ந்து வருகிற இழப்புக்கள் பல உண்டு. பொருள் இழப்பினைத் தொடர்ந்து சிறப்பிழத்தல், வறுமை, நோய், வாழ்க்கைச் சுமை ஆகியவையும் அவற்றினைத் தொடர்ந்து நரகமும் வரும்.

"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை" என்பதைத் திருவள்ளுவர் "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரத்தில் வைத்து விளக்கியுள்ளார். இது, பொருளாட்சியின் அவசியத்தை எளிதில் மனங்கொள்ள உணர்த்துதற்கேயாம்.

திருவள்ளுவர் 'புலால் மறுத்தல்' அதிகாரத்தை துறவற இயலில் வைத்துள்ளார். ஆனால், புலால் உண்ணாமை எல்லோரும் மேற்கொள்ளக்கூடிய ஒழுக்கமன்று என்று திருவள்ளுவர் கருதினார் போலும் எனக் கருதவும் இடமுண்டு. திருவள்ளுவர் இல்லற இயலிலும், குடியியலிலும் புலால் உண்ணாமையைக் கூறவில்லை. துறவிகள் அல்லா தார் புலால் உண்ணுதலுக்கு உடன்பட்டார் என்பது நமது கருத்து. தற்போது உலகத்தை நெருக்கடியில் ஆழ்த்தியுள்ள உணவுச் சிக்கல்களுக்குச் சரியான தீர்வு புலால் உண்ணுதலைப் பெருக்குதல் என்று அறிஞர்கள் கருது கிறார்கள். இன்றைய அறிஞர்களின் கருத்து இரண்டாயிர மாண்டுகளுக்கு முன் தோன்றிய திருவள்ளுவரின் சிந்தனை! ஆனாலும், துறவிகள் புலால் உண்ணக் கூடாது என்பது திருவள்ளுவரின் திட்டவட்டமான கருத்து. இன்றைய உலகியலில் உயிர்க்கொலையை அடியோடு எதிர்த்த புத்தரின் வழிவந்த பௌத்தத் துறவிகள் புலால் உண்ணலில் முதலிடம் வகிக்கிறார்கள். அருளொழுக்கத்தின் தாயகமாகிய தமிழகத் திற்கு அண்மையில் வந்திருந்த திபெத்தின் பௌத்தமதத் தலைவர் தலாய்லாமா இனிமேல் புலால் உண்பதில்லை

என்று நோன்பெடுத்துள்ளார். துறவிகளின் வாழ்க்கைக் கடமை புறநிலைத் தொடர்புடையது மட்டுமன்று. உள்ளுணர்வு சார்புடையது மாகும். சிறப்பாக அவர்கள் இதயத்தில் அருளுணர்வு இடம்பெற வேண்டும். அருள் என்பது யார் மாட்டும், எதன் மாட்டும் விருப்பு, வெறுப்புக்களின் கலவையில்லாத மாசற்ற பரிவும் பாசமும் காட்டுதலாகும். இத்தகு அருளுணர்வுடையோர் எங்ஙனம் கதறக்கதறக் கழுத்தையறுத்து இரத்தம் சொட்டச் சொட்ட இரக்கமின்றிப் புலாலை உண்பார்கள்? அப்படி உண்பவர் களை எங்ஙனம் அருளாட்சியுடையோராகக் கருத முடியும்? என்று வினவுகின்றார் திருவள்ளுவர். துறவற உலகிற்கு அருளாட்சியும், இல்லற உலகிற்குப் பொருளாட்சியும் இன்றியமையாதன. இவ்விரு வேறு உலகமும் தமக்குரிய அருளாட்சியையும், பொருளாட்சியையும் போற்றுமாயின், பொருளால் அருள் வளரும் — அருளால் இன்பம் பெருகும்!

> "பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
> ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு." (252)

## எது தவம்?

திருக்குறள் ஓர் ஒழுக்க நூல் — அற நூல். ஆயினும், விஞ்ஞானப் பார்வையில் தலைசிறந்து விளங்கும் நூல். திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறி அற நெறி. மனித இயல்புகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நடைமுறைப் படுத்தக்கூடியவையாகவே கூறப்பெற்றிருப்பது எண்ணி உணரத் தக்கது. வாழ்வியலுக்கு அப்பாற்பட்ட — நடைமுறை சாத்தியமற்ற ஒழுக்க நெறிகளைத் திருக்குறள் கூறவில்லை. "வாழ்வாங்கு வாழ்தல்" என்பதையே திருக்குறள் சிறந்த அறமாகப் பாராட்டுகிறது. அங்ஙனம் வாழ்பவர்கள் தெய்வமெனப் போற்றப்படுவார்கள் என்றும் திருக்குறள் கூறுகிறது.

வாழ்க்கை என்பது கடமை என்ற செயற்பாட்டுக் காகவே. சிறந்த சமய நெறியின்படியும் உயிர்கள் வாழ்க்கைக் களத்தில் கடமைகளைச் செய்வதன் மூலம் அறிவும் அனுபவமும் பெற்று இறுதியில் துன்பச் சூழலினின்றும் விடுதலை பெறுகின்றன என்றே கூறுகின்றது. சைவ நாயன்மார்கள் இத்தகு கடமைகளைச் செய்வதற்கு உயிர்கள் தமக்கு இயைபான களங்கள் அமைத்துக் கொள்ளுகின்றன. அத்தகு களங்களே இல்லறம் துறவறம் என்றமைகின்றன. இவை இரண்டும் கடமைகளின்பாற் பட்டனவே. இல்வாழ்வான் கடமைகள் சற்று தன்னலச் சார்பும், குடும்பச் சார்பும் தழுவியனவாக இருக்கும். இந்த வாழ்க்கைக்குச் சில விதிகள் உண்டு. துறவற வாழ்க்கைக்குத் தன்னலச் சார்பே இல்லாத — பிறர் நலம் கருதிச் செய்கின்ற கடமைகளே உண்டு. இங்கு விதிவிலக்குகள் மிக மிகக் குறைவு. ஏன்? இல்லையென்றே கூறலாம். ஆயினும், இவ்விருவகை வாழ்க்கையின் இலட்சியமும் கடமைகளைச் செய்தலே யாகும். துறவறம் அல்லது தவவாழ்க்கை என்றால் கடமை களினின்றும் விடுதலை பெறுதலல்ல. கதே என்ற தத்துவ ஞானி கூறியதுபோல, ஞானிகளின் கடமை உலகத்தைத் துறந்து ஓடி விடுவதன்று. உலகத்தோடு ஊடுருவி உண்ணின்று அதன் இயல்பறிந்து அதனுள் வீழாமல் — வீழ்பவர்களையும் காக்கப் பணிகள் செய்தலேயாகும்.

திருவள்ளுவர் துறவற இயலில் 'தவம்' என்ற அதிகாரத்தில்,

> "தவம்செய்வார் தங்கருமம் செய்வார் மற்றெல்லாம்
> அவம்செய்வார் ஆசையுட் பட்டு" (266)

என்று குறிப்பிடுகின்றார். இந்தத் திருக்குறளுக்கு உரை கண்டவர்கள், வாழ்க்கையைத் துறந்து தவம் செய்கின்ற வர்கள் தம்முடைய காரியத்தைச் செய்கிறார்கள் என்பது போலப் பொருள் காண்கிறார்கள். அங்ஙனம் செய்யாத

வர்கள் ஆசையுட்பட்டும் பாவம் செய்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். இந்தத் திருக்குறளுக்கு இன்னும் சற்று ஆழமாக — விரிந்த நிலையில் பொருள் காண்பது நல்லது. "தம் கருமம் செய்வார் தவம் செய்வார்" என்று கொண்டு கூட்டிப் பொருள் காண்பது சிறப்பாக இருக்கும். மனித வாழ்வியலில் அவர்களுக்கென்று கடமைகள் அமைந் துள்ளன. அவர்களும் அவரவர் கடமைகளை உணர்ந்து செய்யாமையினால் தம்மையும் கெடுத்துக் கொள்கிறார்கள். அவர்களோடு தொடர்புடையதாக இருக்கிற சமூகத்திற்கும் கேடு செய்கிறார்கள். இதன் விளைவாகச் சமூகச் சிக்கல்கள் பெருகி, அழுக்காறு, அவா, வெகுளி போன்ற இழி குணங்கள் பெருகி வளர்ந்து, மனித சமுதாயத்தை அலைக்கழிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, கடமைகளைச் செய்வதன் மூலமே உயிர்களைப் பரிணாம வளர்ச்சியில் ஈடுபடுத்தித் தகுதிப்படுத்தி ஆட்கொண்டருளும் இறைவனுடைய திருவுள்ளத்திற்கும் மாறாக வாழ்ந்து பாவத்தை விளைவித்துக் கொள்ளுகின்றனர். ஆதலால், தமக்குரிய கடமைகளைச் செய்தலையே திருவள்ளுவர் 'தவம்' என்று கருதுகின்றார். இல்லறத்தாராக இருப்பாராயின் தமது மனைவி மக்கள் சுற்றம் தழுவிப் பாதுகாத்து வாழ்தல் கடமை. துறவறத்தாராக இருப்பாராயின் மனித சமுதாயத்தையே தழுவி, அவர்கள் நன்னெறி நின்றொழுகி நல்லின்பத்தோடு வாழ சிந்தனை யாலும் செயலாலும் கடமைகளைச் செய்தல் வேண்டும். இஃதன்றி, உலகியலை ஒழித்த தவம் என்று பொருள் கொள்ளுதல் சிறப்புடையதன்று.

"கடமைகளை முறையாகச் செய்தல் சிறந்த கடவுள் வழிபாட்டுக்கு ஈடு அல்லது இணையானது" என்னும் பொருள்படச் சான்றோர் பலரும் பேசியிருக்கிறார்கள்.

'கடமையே மிகச் சிறந்த நோக்கம். ஏனெனில் அது கடவுட் கருத்தைத் தழுவியதாக இருக்கிறதுட என்று லக்கார் டயரும்,

'கடமையை விருப்பத்தோடு செய்பவர்களுக்குக் கடவுள் எப்பொழுதும் உதவியாக இருக்கிறார்' என்று கெய்லரும்.

கடமையைச் செய்யாமல் தட்டிக் கழித்தல் அறிவையும் மனத்தையும் பலவீனப்படுத்தித் தூய்மையான தவ வாழ்க்கையைப் புதைத்து விடுகிறது' என்று ட்ரயான் எட்வர்ட்ஸ் என்பாரும்,

'உயிர்கள் தம்முடைய கடமைகளை உடனடியாகச் செய்வதாக முடிவெடுத்துக் கொள்வது கடவுள் இதயத்தின் சந்நிதி' என்று பேகனும் பேசியிருக்கின்றனர்.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட சான்றோர்களின் வரலாற்றை நமக்கு அருளிய சேக்கிழார் பெருமானும் தவம் என்ற வாழ்க்கையை உலகியல் வாழ்க்கையோடு இணைத்துக் கூறுவதை நூல் முழுவதும் பரக்கக் காணலாம். சங்கிலியாருக்குச் சுந்தரரைச் சிவபெருமான் அறிமுகப்படுத்தும்போது, "மேருவரையின் மேம்பட்ட தவத்தினான்" என்று கூறுவதாக சேக்கிழார் பெருமான் சித்திரித்திருப்பது அறிந் தின்புறத்தக்கது.

ஆதலால், திருக்குறள் காட்டும் தவம், தத்தம் கடமைகளைச் செய்தல்; அவம் கடமைகளைச் செய்யாதொழித்துப் பிறவற்றைச் செய்தல்.

## காரணம் என்ன?

இந்த உலகில் செல்வந்தர்கள் மிகச் சிலரே உள்ளனர்; வறியவர்கள் பலர். இந்த அவல நிலை ஏன்? உலகு தொடங்கிய நாள்தொட்டு, எல்லாரும் செல்வந்தர்களாகவே விரும்புகின்றனர்; முயலுகின்றனர். சிலருக்கே வெற்றி கிடைக்கிறது. பலர் தோல்வியடைகின்றனர். இந்த வெற்றி

தோல்வியின் விளைவாக ஏற்பட்டுள்ள விளைவுகள் மனித சமுதாயத்தின் நல்வாழ்க்கைக்குக் கேடு பயப்பனவாகும். பல்வேறு ஒழுக்கத் தவறுகளைத் தோற்றுவிப்பனவாகவும் அமைந்துள்ளன. அதனாலேயே, செல்வம் உடைய சிலரை எதிர்த்துக் கிளர்ச்சிகளும், புரட்சிகளும் தோன்றின — தோன்றுகின்றன. இந்த அவல நிலை பற்றிய ஆய்வு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே திருக்குறளில் செய்யப் பெற்றுள்ளது. திருவள்ளுவர் ஒரு முற்போக்குக் கருத்துடைய கவிஞர் — பொருளியல் வல்லுநர் — நடைமுறைக்கு இயைந்த சித்தாந்தங்களைக் கண்டு சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டவர்.

செல்வம் உடையவராகச் சிலரும், இல்லாராகப் பலரும் இருப்பதற்குத் திருவள்ளுவர் காரணம் கூறுகிறார். அவர் கூறும் காரணம் புதிது — புகழுடையது. உலக அரங்கில் தோன்றிய முற்போக்குக் கருத்துக்கள் அனைத் தினும் ஆன்ற சிறப்புடையது. எனினும் வள்ளுவரை விளக்க வந்தவர்கள் அவர்தம் கருத்துக்கு மாறாக. பழைய பத்தாம்பசலிக் கொள்கைகளையே கூறி, அவருடைய புதுமைக்குத் திரையிட்டனர். இடைக் காலத்தில் செல்வம், ஆதிக்கம் ஆகியவற்றோடு இறுகப் பிணைத்துக் கொண்ட சமயக் கணக்கர்கள் செல்வம் முன்னைத் தவத்தின் பயன், வறுமை முன்னைத் தவமின்மையின் பயன் என்று மயக்க உணர்வோடு கூறி வைத்தனர். அதன் காரணமாகப் பொது மக்களிடத்தும்கூட செல்வம் முன்னைப் புண்ணியத்தின் பயன் — வறுமை பாவத்தின் பயன் என்ற கருத்து வேரூன்றி நிலவியது. திருவள்ளுவரோ, செல்வம் உடைமை புண்ணியத்தின் பயன் அன்று என்பதை உறுதியாக மறுக்கின்றனர். 'பொருட் செல்வம் பூரியர் கண்ணும் உள' என்று கூறுகின்றார். செல்வம் அற்றவர்கள், முயற்சியால் செல்வம் உடையவராக முடியும் என்பதையும் ஒத்துக் கொள்ளுகின்றார். 'பொருளற்றார் பூப்பர் ஒருகால்' என்று

குறிப்பிடுகின்றார். ஆதலால் திருவள்ளுவர், செல்வம் உடைமைக்கும், இன்மைக்கும் முன்னைத் தவத்தையோ, பயனையோ காரணமாக ஒத்துக் கொள்ளவில்லை.

*"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்."* (270)

என்பது குறள்.

நோன்பு முறை பலப்பல. எல்லா நோன்புகளினுள்ளும் மிகச் சிறந்தது செல்வத்தின்கண் உள்ள பற்று நீங்கி, அவ்வழி தான் பெற்ற செல்வத்தைப் பலருக்கும் வழங்கி அவர் தம் வறுமையை மாற்றுதல். அதனாலன்றோ, ஈகையிலுங்கூட,

*"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை*
*மாற்றுவார் ஆற்றலின் பின்"* (225)

என்று கூறுகின்றார்.

புறநானூற்றிலுங்கூட, கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி, இவ்வுலகம் உள்ளதாக விளங்குவதற்குப் பல்வேறு காரணங்களை வகுத்துக் கூறிவிட்டு இறுதி முடிவாக; 'தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்று கூறுகின்றார். அதாவது, தனக்கென முயற்சி செய்யாது பிறருக்கென முயன்று பொருள் ஈட்டி வாழ்விப்பான் உள்ளமையானே, உலகம் இருக்கிறது — நடைபெறுகிறது — இயங்குகிறது என்று குறிப்பிடுகின்றார்.

அகநானூற்றிலுங்கூட தலைமகள், தன் தலைவனுக்குத் தன்மீது உள்ள, காதலைவிடப் பொருளின்மீது காதல் அதிகம். ஆதலால், பொருள்வழியிற் பிரிந்து சென்றவன் திரும்பி வருவானோ மாட்டானோ என்று ஐயுறுகின்றாள். தலைமகனுக்குப் பொருள்மீது காதல் மிகுந்தமைக்குக் காரணம் தான் நுகர்ந்து வாழவேண்டும் என்பது அன்று. இல்லாதவர்களுக்கு வழங்கி, அவர்களது வறுமையைத்

தொலைக்கவேண்டும் என்பதேயாகும் என்றும் அவள் கூறுகின்றாள்.

*இரப்போர்க்கு இல்லென்று இயைவது கரத்தல்*
*வல்லர நெஞ்சம் வலிப்ப.*

"நம்மினும் பொருளே காதலர் காதல்" என்பது அகநானூறு. இங்கு, இயைவது என்று குறிப்பிட்டது பொருளுடைமையின் தகுதி மட்டுமன்று. அப்பொருளை ஈட்டக்கூடிய ஆற்றலையும் உட்படுத்தி நிற்கிறது. புறநானூறு தெளிவாகக் கூறுகிறது. "செல்வத்துப் பயனே ஈதல்" என்று. ஆதலால், செல்வத்தை ஈட்டுதலும், அச் செல்வத்தைப் பிறர்க்கு வழங்குதலும் ஒரு நோன்பாகும். இந்த நோன்பைச் செய்கின்றவர்கள் — நோற்பவர்கள் சிலரேயாக இருக்கிறார்கள். எனவே இலர் பலராக இருக்கிறார்கள். இந்த நோன்பை நோற்பார் பலரானால், செல்வம் உடையரும் பலராவார்கள். இதுதான் நியாயமான உரை. இன்றையப் பொருளியல் சிந்தனையுலகும், புதுமை உலகும் தெளிவாகப் பேசுகின்றன. "மனிதன் ஒரு சமுதாய உறுப்பினன்; அவனுடைய ஆற்றல் சமுதாயத்தின் பொதுவுடைமை. அவனுடைய ஆற்றலால் விளைகின்றவை அனைத்தையும் அனுபவிக்கச் சமுதாயத்திற்கு உரிமையுண்டு" என்பது. ஒருவர் தனது ஆற்றலால் செல்வம் ஈட்டினாலும் அவர் ஓரளவே அனுபவிக்கலாம். எஞ்சியதைச் சமுதாயத்திற்குத் தருதல் வேண்டும் என்று இன்றைய நியாயம் கூறுகிறது — நீதி பேசுகிறது — சட்டம் வழி வகுக்கின்றது. இக் கருத்தினையேதான் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் 'செல்வத்தை முயன்று ஈட்டிப் பலருக்கும் வழங்கும் நோன்பை நோற்பார் பலரானால் செல்வம் உடையாரும் பலராக இருப்பார்கள் அங்ஙனம் நோற்பார் சிலராயின் வறியவர் பலராவர் என்று தெளிவாகக் கூறினார்.

திருக்குறளைக் கீழ்க்கண்டவாறு இணைத்துப் பொருள் கொண்டு சிந்திக்கவும்.

"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்." (270)

இக்குறட்பாவில், "நோற்பார் சிலர்" என்று ஒரு பகுதியும், "பலர் நோலாதவர் இலர் பலர்" என்றும் கொண்டு கூட்டிப் பொருள் காணுதல் சாலும். குறட்பாவில் இலர் வெளிப்படையாகச் சொல்லப் பெற்றுள்ளது. உடைமை உய்த்துணர்விக்கப் பெற்றுள்ளது. நோற்பார் என்றும், சிலர் என்றும் இருப்பதால், நோற்பாரை உயர்வு கருதிய ஒருமையாக ஏற்றுக் கொண்டு பொருள் காணுதல் வேண்டும். அவ்வழி நோற்பாரும் சிலரும் ஒருவரேயல்லர்; நோற்பார் வேறு; சிலர் வேறு. நோலாதவர் வேறு; பலர் வேறு. உலகியலுங்கூட ஒரு மனிதனுடைய எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அவனைச் சார்ந்த சமுதாயம் பொறுப்புள்ள தாகிறது என்ற வழக்கின் அடிப்படையையும் இங்கு எண்ணிப்பார்க்க வேண்டும்.

மேற்கண்ட உரை துறவியலில் வரும் 'தவம்' என்ற அதிகாரத்திற்குப் பொருந்துமோ என்ற ஐயப்பாடு சிலருக்குத் தோன்றலாம். பொருந்தும் — முக்காலும் பொருந்தும் என்பதே நம்முடைய கருத்து. தவம் ஒழுக்கத்தின் முதற்படி. பொருட் பற்று நீங்குதலேயாம். அதனால், பொருந்தும். தவமுடையார்க்குப் பொருள் ஏது என்ற வினா எழலாம். தவமுடையார் தாமே நேரில் பொருள் ஈட்டாது போனாலும், அவர் தம் தவத்தினால் கவர்ச்சிக்கப்பட்டவர்கள் — நன்மைகளைப் பெற்றவர்கள் காணிக்கை தருவார்கள். அங்ஙனம், சாதாரண மக்களும் மன்னர்களும் கூடத் தந்துள்ளனர் என்பதை நமது நாட்டு வரலாறே பேசுகின்றது. அவ்வழித் தோன்றியவையே அறநிலையங்களும், திருமடங் களும். அங்ஙனம் தரும்பொழுது, அவற்றையும் வழங்கிப்

பிறரை வாழ்வித்துத் தான் வறியவராக வாழ்தலே தவத்திற்கு அழகு. இக்கருத்தினை அப்பரடிகள், "கந்தை மிகையாம் கருத்தும்" என்று பேசுகின்றார். இதனைச் சேக்கிழார் அடிகளும்,

*"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி*
*வீடும் வேண்டார் விரலின் விளங்கினார்."*

என்றும், அடுத்து,

*ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே*
*பாரம் ஈசன் பணியலா தொன்றில்லை*

என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆதலால், தவத்தினை மேற்கொண்டவர்களாவது தமக்குக் கிடைத்த செல்வத்தைப் பிறருக்கு வழங்கி மற்றவர்தம் வறுமையை மாற்றி — அல்லல் நீக்கி — அவலம் போக்க சிவ சிந்தனையில் ஈடுபட வேண்டியது அவசியம். எனவே, இவ்வுரை முற்றிலும் பொருந்துவதேயாகும்.

## மழித்தலும் நீட்டலும்!

**த**வம் ஒரு சோதனைப்பட்டறை. பட்டறையில் இடப்பட்ட பொன் தூய்மை பெற்று ஒளிர்தல் போல, தவத்தில் ஈடுபட்டோர் துன்பங்களால் தூய்மைப்படுத்தப் பெற்று, ஒளி பெற்றுத் திகழ்தல் வேண்டும். துன்பம் இருவகையது. ஒன்று உடல்வழி வரும் பசி, நோய் முதலியன. பிறிதொன்று உயிர்வழி விருப்பு வெறுப்புக்களால் வரும் உணர்வுகள் ஆசைகள் முதலியன. இவ்விருவகைத் துன்பங்களையுமே கவலையின்றி, மகிழ்வுடன் ஏற்று அனுபவித்துத் திருவருளை நினைந்து வாழ்தல் தவம். அதனாலன்றோ திருவள்ளுவர், "உற்ற நோய் நோன்றல்,

உயிர்க் குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு" என்று தெளிவாகத் தேற்றேகாரம் போட்டு அறிவுறுத்தினார். உற்ற நோய் நோற்றல் முதல் வகை. அந் நோயிலிருந்து விடுவித்துக் கொள்ள விரும்புதலும் விருப்பம், முயற்சி ஆகியவற்றின் காரணமாகப் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் பிறிதொரு வகை.

தவம் செய்யும் ஒரு பழக்கம் உடற் பழக்கம் — உயிர்ப் பழக்கமும்கூட. உடலையும், உள்ளத்தையும் முறைப்படி பழக்குதல் எளிதன்று. கிண்ணத்தில் தண்ணீரை நிரப்பி எடுத்துக் கொண்டு ஓடுவதுபோல, கிண்ணம் ஆடினாலும் தண்ணீரும் அலையும்; வெளியே சிந்தும். தண்ணீர் அலைந்தாலும் கிண்ணம் ஓரோ வழி ஆடும். ஓடுவதோ ஓட்டம். இந்த அமைப்பில் ஓடவும் வேண்டும். கிண்ணத்தை ஆடாமல் பாதுகாக்கவும் வேண்டும். அதனுள் இருக்கும் தண்ணீர் அலைந்து வழியாமல் பாதுகாக்கவும் வேண்டும். இத்தகையதே தவம் செய்யும் முயற்சி. நாம் வாழும் உலகியல் ஆசைகளால் நிறைந்து அலைவது. இதில் உடலையும் உயிரையும் ஒருங்கே பாதுகாக்க வேண்டும். உடல் கெட்டாலும் உயிர் கெடும் — உயிர் உணர்வு கெட்டாலும் உடல்கெடும். ஆதலால், உடலை, உயிர்நிலைப் பாதுகாப்பு என்று கருதுவதில் தவறில்லை. உடல்நிலை உயிர் உணர்ச்சி களைத் தோற்றுவிக்கும் நிலைக்களன். உடலியற் கூறுகளுக்கு ஏற்றவாறு, உயிர் உணர்ச்சிகள் தோன்றும் — வளரும். அதனாலன்றோ தவம் செய்வோர் உடல், ஆசைகளைத் தோற்றுவிக்கும் நிலைக்களனாக விளங்குவதை விரும்பு வதில்லை.

ஆதலால், உடலைத் தவத்தால் வருத்துவர். உடல் அழகினைக் கெடுத்துக் கொள்வர். இவ் வழித் தோன்றியதே மழித்தலும், நீட்டலும் ஆகிய செய்முறை. ஓரோ வழி

நீட்டல்மட்டும் தன் இயல்பாகவே நிகழ்தல் உண்டு. அதாவது தன்னையும், தன்னுடைய உடலையும் மறத்தலின் காரணமாகத் தோன்றுதல். எனினும் இங்கு 'நீளுதல் என்றின்றி நீட்டல் என்றே திருவள்ளுவர் வினைவழிப் படுத்திக் கூறியிருத்தலான் செய்முறை என்றே கொள்ளல் வேண்டும்.

திருவள்ளுவர் இச் செய்தவத்தின் முறையை மறப்பதுபோலப் பலர் கருதுகின்றனர். அதற்குக் காரணமாக இருப்பது,

> "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகு
> பழித்தது ஒழித்து விடின்." (280)

என்ற குறள். திருவள்ளுவர் உலகியல் முழுவதும் கண்டு உணர்ந்த சான்றோர் ஆதலின், அவர் முறையாகவே கூறியுள்ளார். அவர், மழித்தலையும் நீட்டலையும் முழுதுமாக மறுக்கவில்லை. அச் செயல் முறையைத் தன்னுடைய உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்திப் பழக்கத்திற்குச் சாதகமாகக் கைக் கொள்வதற்கு உடன்படுகிறார். தவம் முடிவல்ல — முயற்சியே. இம் முயற்சியில் வெற்றியடைவோர் சிலர்; தோல்வியுறுவோர் பலர். ஆனாலும் தவம் செய்வதை மனப்பூர்வமான இலட்சியமாக ஏற்றுக்கொண்டு, தவம் செய்யும்பொழுது ஏற்படும் வெற்றி தோல்விகள் வேறு.

அந் நிலையில் ஏற்படும் தோல்விகளை, தவறுகளைப் பற்றியதல்ல திருவள்ளுவரின் கவலை. தவம் செல்வாக் குடையது என்று கருதி அதனை மேற்கொள்வதின் மூலம், தம்முடைய உல்கியல் வேணவாக்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கருதி, உலகியல் வாழ்க்கையை இலட்சியமாகக் கொண்டு அதனையடைய தவத்தினை ஒரு கருவியாகத் திட்டமிட்டு வஞ்ச மனத்தோடு மேற்கொள் வாரைப் பற்றியதே திருவள்ளுவரின் கவலை. இதனை,

*"வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று"* (273)

*"தவம்மறைந்து அல்லவை செய்தல் புதர்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"* (274)

ஆகிய குறட்பாக்களில் வருகின்ற இரு உவமைகளும் திட்டமிட்டுச் செய்கின்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பனவாக இருப்பது அறிந்துணரத் தக்கது. ஆதலால், உலகியல் இன்பங்களை அடைவதை நோக்கமாகக் கொண்டு, தவ வேடம் பூண்டாலும் அதாவது தவம் செய்வதற்குத் துணை செய்யக்கூடிய மழித்தல், நீட்டல் ஆகிய சாதனங்களை மேற்கொண்டாலும் தாம் விரும்பிய — விருப்பு வெறுப்புகளுக்கு ஆளான உலகியலையே செய்வதால், திருவள்ளுவர் அவர்களை நோக்கி அறிவுறுத்துகின்றார். இன்றைய நிலையை நுண்ணியதாக உணர்ந்தவர்களுக்கு இந்த உரை விளங்கக் கூடும்.

உலகம் பழித்ததை ஒழிக்கவன்றோ தவம். அம் முயற்சிக்குரிய சாதனமல்லவா மழித்தலும், நீட்டலும். அங்ஙனமிருக்க உலகு பழிப்பதை ஒழிக்க விருப்பமேயின்றி அதனைச் செய்வதையே இலட்சியமாகக்கொண்டு சாதனங் களை மேற்கொண்டவர்களைப் பார்த்து திருவள்ளுவர் கூறுவது. உலகு பழிப்பதைச் செய்து கொள்வதற்குரிய சாதனம் அல்ல தவ வேடம். உலகு பழித்ததை ஒழித்துவிடின் சாதனமே வேண்டாம் என்ற குறிப்பிலேயே திருவள்ளுவர் பேசுகின்றார்.

உலகம் பழித்த தொழித்துவிடின் மழித்தலும், நீட்டலும் வேண்டா என்பதே திருவள்ளுவரின் தெளிவான கருத்து.

# அருளும் பொருளும்

மானிட வாழ்க்கை அருள் நலத்தால் சிறக்கவேண்டிய ஒன்று. அருளின்பம் அன்பினால் பெறக்கூடிய ஒன்று. ஒன்றினைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் காட்டப் பெறுவது அன்பு. யாதொரு குறிக்கோளுமின்றிக் காட்டப் பெறுவது அருள். இறைவன் உயிர்கள் மாட்டுக் காட்டுவது அருள். உயிர்கள் அருளைப் பெறுவதற்கு இறைவன்பாற் காட்டுவது அன்பு. இதனை,

*.............................. யாமிரப் பவை*
*பொன்னும் பொருளும் போகமு மல்ல*
*அருளும் அன்பும் அறனும் மூன்றும்."*

என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது. இறைவன் உயிர்களுக்கு யாதொன்றும் எதிர்பாராமலே அருள் வழங்குகின்றான். அதனாலேயே அவனுக்குப் 'பித்தன்' என்று பெயர் வந்தது. "குறியொன்றும் இல்லாத கூத்து" என்று திருவாசகம் பேசுகின்றது.

இறை நெறி நிற்போரும் அருள் நலம் கனிந்தவர்களாக இருப்பர். தேனிலோ, உப்பிலோ ஊறிய பொருள் அவற்றின் சுவையைப் பெறுவதுபோல இறைவனுடைய திருவருளை நினைந்து நினைந்து, அந்த இன்ப அனுபவத்தில் ஊறித் திளைத்தவர்கள் அருள் வசமாகி விடுவார்கள். அவர்களே அந்தணர்கள் — துறவிகள் — சான்றோர்கள் — அருளாளர்கள். இத்தகு சிறப்புடைய வாழ்க்கை எல்லாருக்கும் அமைவதன்று. பலர் அன்புடையராதல் உண்டு. மக்களிடத்திலும், இறைவனிடத்திலும் அன்பு காட்டுவார்கள். அருச்சனை செய்வார்கள். எனினும் இந்த அன்பு, அருள் கருதிச் செய்யப்படுவது அன்று. அவர்களின் நோக்கம் பொருள் ஒன்றுதான். பொருளைக் கவர்வதற்குத் திட்டமிட்டு அன்பு காட்டுவர். அதற்குப் பெயர் அன்பன்று — நடிப்பு,

அது கவிஞர் பட்டுக்கோட்டை சொன்னது போல, வெள்ளாட்டுக்கு இரை வைக்கும் மனிதர்களின் கருணையை ஒத்தது. பொருள் கருதி ஏற்படும் அன்பு தொடராது — நிலை பெறாது. அவர்கள் தாம் கருதியது முடிக்கக் காலத்தை எதிர்நோக்கி நிற்பர். அதாவது தம்மோடு பழகுகின்றவர்களின் மறதி, சோர்வு ஆகியவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். காலம் வாய்க்கும்போது கருதியதை முடித்துக் காற்றெனக் கடுகி விடுவர்

அத்தகையோரிடத்து ஒரு பொழுதும் அன்பு இருந்ததில்லை. ஒரு வெளிமயக்கு இருந்தது. அவ்வளவுதான். அவர்களின் நோக்கம், குறிக்கோள் பொருள் ஒன்றுதான். நேர் வழியில், உழைப்பால் பொருளீட்ட முடியாதவர்கள் இந்த மறைமுக வழியைக் கையாளுவர். அவர்களிடத்து அன்பு இல்லை. அருளும் கிடைக்காது. அவம் பெருகும்.

> "அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
> பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்" (285)

## துறவும் துய்த்தலும்

மனித குலத்தில் ஏக்கம் பெரும்பாலும் ஏன்? முழுமையும்கூட பொருளியலின் அடிப்படையிலேயே நிகழ்கிறது. பொருள், உலக இயக்கத்தின் அச்சாணியாக அமைந்து விளங்குகின்றது. மண்ணோடு தொடர்புடைய வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் பொருள் தேவை. அதனால் அன்றோ, ஞானநிலையில் நின்ற மாணிக்க வாசகரும், 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்றார். அருள் பழுத்த நெஞ்சினராய் அவர் எடுத்த திருப்பெருந்துறைக் கோயில் திருப்பணிக்கும் பொருள் வேண்டுவதாயிற்று. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மிக மிக இன்றியமையாது வேண்டப்படுவதாகிய இப் பொருளினிடத்து மக்களுக்குப் பற்றிருத்தல் இயற்கையேயாம்

— முரண்பாடன்று. எனினும், பொருளை நாம் அடையும் வழிவகைகளில் நன்றும் தீதும் தோன்றுகின்றன. பிறர் பொருளை விரும்புதலும், வழி தவறிய முறைகளில் பொருள் பெறுதலும் நேரிய வழியாகா.

துறவற இயலில் திருவள்ளுவர் கல்லாமையை வைத்திருக்கிறார். முறை வைப்பு திருவள்ளுவர் வைத்ததா, இல்லையா என்ற ஆராய்ச்சி ஒருபுறம் நடந்து கொண்டிருக் கிறது. அதன் முடிவு எப்படியாயினும், ஆகுக. திருவள்ளுவர் அதிகார முறைவைப்பைச் செய்யாமல் அவருக்குப்பின் வந்தோர் எவரேனும் செய்திருப்பாரேனும் முறை வைப்புக்கும் பொருள்காண வேண்டுமல்லவா? துறவி பொருட் பற்றிலாதவர்; பொருள் தேடும் முயற்சியினின்றும் தன்னை விடுதலை செய்து கொண்டவர். அத்தகைய வாழ்வில் களவுக்கு இடமேது? களவினும் இருவகையுண்டு. வறுமை யின் காரணமான ஏற்படும் களவுணர்ச்சி ஒருவகை. பொருள் வந்தடைந்தபின் அதைப் பாதுகாத்துத் தமக்கே அல்லது தம்மைச் சார்ந்த ஒரு சிலருக்கே உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று தோன்றும் களவுணர்ச்சி பிறிதொரு வகை. இவற்றில் முன்னையது பெருங்குற்றமன்று — மன்னித்தற் குரியது.

துறவிகள் சான்றோராக வாழ்வர். பலருடைய நலனுக்குப் பாதுகாப்பாளராகவும் இருக்க வேண்டியவர்கள். அதன் காரணமாகப் பொது மக்கள் தமது ஆன்ம நலன் உள்ளிட்ட பெருநலனைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் துறவிகளிடம் (தமக்குரியனவற்றை உரிய போழ்து செய்வார் என்று கருதி) நம்பிப் பொருளைக் கொடுத்து வைத்தல் உண்டு. பின்னர், தரையில் ஓடிய நீர், தரையினை ஈரமாக்குதல் போல, தீரத் துறவாதார் கையில் பொருள் புழங்கினாலும், பொருள்வழிப் பற்று அவர்களைச் சாரும்; அதுபோழ்துதான் துறவுடையவர்களைச் சார்புடைய பெருநிறுவனங்கள் தோன்றுகின்றன. நிறுவனங்களின்

தொடக்கம் அன்பு, அருள், துறவு ஆகியவைகளின் வழியதாகத் தோன்றிய பொதுமக்களின் நம்பிக்கை காலப் போக்கில் இது தலைகீழ்ப் பாடமாகி வரலாறு கறைபடுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, இப்படி ஒரு நிறுவனம் தோன்றியது. தோன்றுதற்குக் காரணமாக இருந்தவர் தமது கடைசிக் காலத்தில், அந்நிறுவனத்தைத் தம்முடைய நெருங்கிய உறவினர் ஒருவருக்கு (கொள்கைவழி உறவல்ல — குருதிவழி உறவு) எழுதி வைத்துவிட்டார். அறநிலையங்களின் அடிப்படை நம்பிக்கையேயாகும். ஆதலால் துறவு வழியில் பொருள் சேரும். அங்ஙனம், சேர்வதியற்கை. அங்ஙனம் சேர்ந்த பொருளை அதாவது, பிறர் நலனுக்காகத் தம்மிடம் விடப்பெற்றிருக்கும் பொருளைத் தமக்காக்கிக் கொள்ளு கின்ற கீழ்மையைத் துறவற இயலில் 'கள்ளாமை' என்ற அதிகாரத்தின் மூலம் கடிந்துரைக்கின்றது திருக்குறள்.

பாபிலோனியாவில் ஓர் அரிய அனுபவ வாக்கு உண்டு. "எவனொருவன் தன்னுடையதை உன்னுடைய தென்றும், உன்னுடையதை உன்னுடையதே என்றும் கூறுகின் றானோ அவன் சாது; எவனொருவன் தன்னுடையதாகத் தன்னுடையது என்றும், பிறருடையதைத் தன்னுடையது என்றும் கூறுகின்றானோ அவன் இழிந்தவன்" என்பதே அந்த அனுபவ வாக்கு. அதனால்தான் தமிழகத் திருமடங்களின் தலைவர்கள் பலகாலும் 'நாம்' என்றும், 'நம்முடையது' என்றும் வழங்கி வருகின்றனர் போலும்! இச்சொல் வழக்கு பொருள் விளக்கமாக வளர்ந்து, வாழ்க்கையில் பொதுளின் பெரும்பயன் விளையும். ஆதலால், துறவற இயலில் கள்ளாமை அதிகார இயல்பு இயல்புடையதேயாகும்.

*"அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்*
*கன்றிய காத லவர்."* (286)

என்ற திருக்குறள் சிந்தனைக்குரியது. முன்னர் விளக்கி யுள்ளது போல, பொருள் வரலாம். அங்ஙனம் வருவது

துறவிகளின் நலன் கருதி மட்டுமல்ல — பலர் நலன் கருதியேயாகும். ஆயினும், பலர் நலன் கருதிப் பொதுப் பணி ஆற்றுவோருக்கும் துறவுநெறி மேற்கொண்டோருக்கும்கூட வாழ்க்கையுண்டு — அவர்களுக்கும் தேவை யுண்டு. அத்தேவையை அவர்கள் அளவோடு அடைந்து அநுபவித்தல் தவறன்று. அங்ஙனமின்றிப் பொதுப் பணியின் பேரால் துறவு நிலையை முதலாகக் கொண்டு தோன்றிய பொருளைத் தவறான வழிகளிலும், தேவையற்ற ஆடம்பரங்களிலும் செலவழித்துத் துய்த்தலும் — அனுபவித் தலும், அவ்வழி அச்சம் தோன்றுதலால் தன்னலம் கருதித் தனி நிதி சேர்த்து வைத்துக் கொள்ளுதலும் களவேயாகும். ஆதலால், பெரும் பொருள் தேட வேண்டும் — அனுபவிக்க வேண்டும், என்ற விருப்பத்தோடு "தவம் மறைந்து அல்லவை செய்வார் அளவின்கண் நின்றொழுகார்". தம்முடைய வாழ்க்கைக்குத் தேவைகளை எளிய முறையில், அளவுக்கு உட்படுத்திக் கொள்ளமாட்டார்கள். அளவிறந்த ஆடை ஆபரணங்கள் சுகபோக வசதிகள் ஆகியவற்றில் வாழ் வார்கள். அவர்கள் மகிழ்வார்கள். ஆனால் அந்தப் பொருளின் தோற்றம் அவர்கள் மகிழ்தற்கல்ல — பிறரை மகிழ்வித்து வாழ. பிறரை மகிழ்விக்கத் தோன்றிய பொருளில் தாம் மகிழ்தல் துறவின்பாற்பட்டதன்று. இதனையே திருக்குறள் வலியுறுத்துகின்றது.

## அறிவிற்குப் பயன்

மனித வாழ்வுக்கு அறிவு இன்றியமையாத ஒன்று. வாழ்க்கையை நல்வழிப்படுத்துவது அறிவு. குழப்பத்தி னின்றும் தெளிவு தருவது அறிவு. வாழ்வுக்கு ஆக்கம் தருவது அறிவு. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டுவது அறிவு. அதனாலன்றோ திருவள்ளுவர் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று கூறினார். திருவள்ளுவர் அறிவு பெறும் முயற்சிகளைப் பலபடக் கூறுகின்றார். கற்க வேண்டுமென்று

வற்புறுத்துகின்றார். கற்க வாய்ப்பில்லாதவர்களுக்குக் கற்றிலராயினும் கேட்கவென்று அறிவுறுத்துகின்றார். இத்தகு அறிவு முயற்சி மானிட சாதியில் வளர்ந்து வந்திருக்கின்றது. இன்னமும் வளரும். இங்ஙனமெல்லாம் மானிடர் அறிவில் முயன்று அறிவு பெறுவது எதற்காக? ஏன்? என்ற கேள்விகள் கேட்கப்படாமலில்லை. அறிவு ஆராய்ச்சிக்காக மட்டும் தானா? அல்லது குற்றங்களே காணும் ஆராய்ச்சிக்காகவா? அதிலும், விவாதத்திற்காகத்தானா? அல்லது புலமைக் காச்சலில் சிக்கித் தவிப்பதற்காகவா? அல்லது குறைந்த நேரத்தில் எவ்வளவு அதிகப்படியான மக்களைக் கொன்று குவிக்கலாம் என்ற ஆராய்ச்சிக்காகவா? என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது. ஆம், இன்றைய உலகப்போக்கைக் கவனிக்குமிடத்து வேறு என்ன சொல்லமுடியும்?

ஆனால் பண்பட்ட அறிவு பகைமைக்கு அப்பாற்பட்டது. விவாதத்திற்குட்பட்டதல்ல. விளங்க வைக்கும் தகைமை உடையது. தண்ணளி மிக்கது. அறிவுடைமையைப் பற்றிப் பேசிய திருவள்ளுவர் அறிவினால் பெறும் பயன் பற்றியும் கூறுகின்றார். பயன்பட வாழ்தலே சிறப்புடைய தொன்று. பொருள் வேறு பயன் வேறு. அறிவுடைமை வேறு, அதன் பயன் வேறு. இந்தத் தத்துவம் தெளிவாக விளங்கிக்கொள்ளப் பெறுதல் வேண்டும். இந்திய அரசின் உறுதி முத்திரையிட்ட நாணயத்துக்குத் தனியே ஒரு மதிப்பில்லை. அந்த நாணயத்தைக் கொடுத்து அதற்கு மாறாகப் பெறக்கூடிய பொருளை வைத்துத்தான் (பண்டங்களை) நாணயத்துக்கு மதிப்பு. அது போலவே அறிவுக்கும் அறிவுடைமையின் பயனாகத் திருவள்ளுவர் காட்டுவது கருணையேயாகும்.

பழனி மலைமீது வீற்றிருந்தருளும் இறைவனை வழிபட ஒரு பக்தர் போகின்றார். அவர் செல்வமுடையவர். அவர் மலைமீது ஏறிச் செல்லும்போது படிகளின் ஓரத்தில் இருக்கும் நோய்வாய்ப்பட்டு அவதி உறுவோருக்கு அள்ளிக்

கொடுத்துக் கொண்டு போகின்றார். திருவள்ளுவர் இந்தக் காட்சியைப் பார்க்கின்றார். நாம் எல்லாம் நினைக்கின்றோம். இந்தச் செல்வர் பெருமகனை வள்ளுவர் பாராட்டுவார் என்று. ஆனால் வள்ளுவர் பாராட்டவில்லை. அச்செல்வப் பெருமான் நோயாளிகளுக்கு அள்ளிக் கொடுத்ததை வள்ளுவர் சடங்காகக் கருதுகிறார். செல்வத்தின் எக்களிப்பு என்று கருதுகின்றார். அல்லது பழக்கத்தின் வழிப்பட்ட செயல் மட்டுமே என்று கருதுகின்றார். அள்ளிக் கொடுத்த செயலுக்கும் நெஞ்சுக்கும் தொடர்பில்லை, என்று வள்ளுவர் கருதுகின்றார். அங்ஙனம் அள்ளிக்கொடுப்பதைவிட அந்த நோயாளிகளின் நோயின் வழிப்பட்ட துன்பு அனுபவத்தைத் தமதாக எண்ணி அனுபவித்து அவதிப்படுவோனை அன்பால் முழுக்காட்டுவதையே அறிவுடைமைக்கு ஏற்ற பயன்படுசெயலென்று வள்ளுவர் கருதுகின்றார். இதனை,

"அறிவினா லாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை" (315

என்று திருக்குறள் விளக்குகிறது.

## பகுத்துண்ணாமையும் கொலையே

திருக்குறள் அதிகார அமைப்புகளை உடையது. இந்த அதிகார அமைப்பினைத் திருவள்ளுவரே செய்தார் என்று கருதுவோரும் உண்டு. அங்ஙனமின்றி இந்த அதிகார முறை வைப்புகள் திருவள்ளுவரால் செய்யப் பெறவில்லையென்றும், பின் வந்த உரையாசிரியர்கள் செய்தனரென்றும் கூறுவாரும் உண்டு. யார் செய்தால் என்ன? அதிகார அமைப்பிற்கேற்றவாறு திருவள்ளுவர் குறள்களைப் பாடி வைத்தார் என்பது மறுக்க முடியாத உண்மை. இந்த அதிகார அமைப்பிலும் நிறைந்த பொருளாக்கமிருக்கிறது. பயன் இருக்கிறது. ஒரு செய்தியை ஒரு தடவைக்குப் பத்துத் தடவை

திரும்பத் திரும்ப நினைந்தாலேயே நெஞ்சகம் அந்த நெறியில் ஈடுபடுகிறது. அதனால் ஒரு நன்னெறியினைப் பல வகைகளில் — பல கோணங்களில் பல தடவை ஆராய்ந்து உணர்தலே வாழ்க்கைக்கு உற்றமுறையென்பதால் அதிகார அமைப்பு சாலச் சிறந்ததேயாம்.

இங்ஙனம் தனித்தனி நெறிகளுக்கேற்றவாறு திருக்குறள் அதிகாரங்கள் அமைந்துள்ளன. இத்தகைய அதிகார அமைப்பில் கொல்லாமையும் ஒன்று. உயிர்கள் உடம்பொடு தொடர்பு கொண்டு வாழ்க்கை நிகழ்த்தித் தம்மை வளர்த்து உயர்த்திக் கொள்ளும் சாதனமே வாழ்வியல். இந்த வாழ் வியலுக்கு ஏற்றவாறு இசைந்துள்ள உடம்பொடு உயிரிடை ஏற்பட்டுள்ள நட்பை — உறவைப் பாதுகாப்பது ஒரு பேரறம். ஆதலாலன்றோ, "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்றார் திருமூலர். உடம்பிற்கும் உயிர்க்கும் ஏற்பட்டுள்ள உறவை நீக்குதலையே கொலை என்று கூறுகிறோம். கொல்லப் பெறுதல் உடம்பேயாயினும் உயிர்க்கொலை என்றே கூறுகிறோம். காரணம் உடம்பு இவ்வழி உயிரின் இயக்கமும் — துய்த்தலும் நுகர்தலும் வளர்ச்சியும் — இல்லாது போதலினாலேயாம். அதுபோலவே உயிர்தாங்கி உலவும் உடலியக்கத்துக்கு எரிபொருளாகிய உணவினை வழங்குதலைப் பேரறம் என்றும் கூறுகிறோம். உணவு இல்வழி உடலியக்கமில்லை. உடலியங்காவழி உயிர்க்கும் இலாப மில்லை. அதனாலேயே உடல், உயிர் உறவு இயக்கத்தைப் பாதுகாக்கின்ற உணவு, மருந்து முதலியன வழங்கும் உடன்பாட்டு அறங்களாலும், அதுபோலவே உடல் உயிர் உறவை நீக்காமையைக் கொல்லாமை என்ற எதிர்மறை அறத்தாலும் மனித உலகம் போற்றுகிறது.

திருக்குறளில் கொல்லாமை என்று ஓர் அதிகாரமுண்டு. கொல்லுதலின் கொடுமையை வள்ளுவர் நினைந்து நினைந்து கொதித்துக் கண்டிக்கின்றார். இந்த

அதிகாரத்தில் முதற் குறளாகக் கொல்லாமையை அறம் என்று பொதுவாக உணர்த்தி அடுத்த குறளில்,

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்று ளெல்லாம் தலை"
>
> (322)

என்று கொல்லாமை நெறியை வற்புறுத்துகின்றார். இந்தக் குறளில் பலரோடு பங்கிட்டு உண்பதும், பல உயிர்களைப் பேணிக் காப்பதும் பேரறம் என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறளுக்கும் கொல்லாமைக்கும் என்ன தொடர்பு? இதனை விருந்தோம்பலில் கூறக் கூடாதா? அல்லது ஈதலில்தான் கூறக் கூடாதா? இங்ஙனம் அங்கெல்லாம் கூறாமல் கொல்லாமை அதிகாரத்தில் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பாங்கான நெறியைக் கூறியது ஏன்? கொல்லுதலும் குற்றமே. அதைவிடப் பெரிய கொலைக் குற்றம் உண்டி முதலியன வழங்கிக் காப்பாற்றாமல் சாகவிடுவதும் ஆகும் என்பதை உணர்த்த இங்கு கூறினார்.

கூடி வாழும் மனித சமுதாயத்தில் சமுதாயத்தின் ஒரு உறுப்பினராக விளங்கும் மனிதனுக்கு சமுதாய ரீதியாகக் கடமைகளும் உண்டு; உரிமைகளும் உண்டு. சமுதாயத்தில் ஒரு உறுப்பினனாகப் பிறந்த மனிதனைச் சோறு இன்றி சாகவிடும் சமுதாயம் கடமையுணர்வு இல்லாத சமுதாயமாகும். அதையே ஒரு கொலைகாரச் சமுதாயம் என்று கூறினாலும் பொருந்தும். கத்தியெடுத்துக் கொன்றால் மட்டுமே கொலையென்பதன்று, பெற்ற செல்வத்தைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்து பலரையும் பேணி வளர்க்காமல், சோறிட்டு மருந்து முதலியன வழங்கி பலரையும் பேணி வளர்த்துப் பாதுகாக்காமல் சாகடித்தலும் கொலைக் குற்றமே என்பதனை உணர்த்தவே, இந்தக் குறள் கொல்லாமை அதிகாரத்தில் அமைந்திருக்கிறது. இந்த அடிப்படையில் இன்று நம்முடைய நாட்டினை நோக்கிக்

கொலைகாரர்கள் மிகுதியும் உள்ளனரோ என்ற வினா எழுந்தால் மறுப்பார் யார்?

## இறப்பும் பிறப்பும்

மனிதன் ஓயாது உழைக்கும் இயல்பினன். பகலெல்லாம் உழைக்கின்றான். உழைப்பில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டால் ஓரளவே மனிதசக்தி செலவாகும். சூழ்நிலையின் காரணமாக விருப்பமின்றி உழைப்பில் ஈடுபட்டால் நிறைய மனித சக்தி வீணாகிறது. உழைப்பில் இழந்த மனித சக்தியை ஈடுசெய்ய மனிதன் உறங்குகின்றான். உறக்கம், அதியற்புதமான மருந்து. உழைப்பில் இழந்த சக்தியை ஈட்டித் தருவதுடன் சோர்வை யகற்றிச் சுறுசுறுப்பைத் தருகிறது. மனிதன் உறங்கிய பிறகு எழுச்சியுடன் எழுந்திருக்கின்றான். இது இந்தப் பருவுடலைப் பொறுத்த நிகழ்ச்சி முறை.

அதுபோலத்தான் ஆன்மாவும் அதன் நுண்ணுடலும் இப்பிறப்பில் பல்வேறு வகையான வேதனைகளுக்கு ஆளாகிறது. அதில் உயிருக்கு அலுப்பும் சோர்வும் ஏற்படுகிறது. அதனாலேயே பிறப்பைத் துன்பமென வர்ணிக்கின்றனர். இந்த ஆன்ம நுண்ணுடல் சம்பந்தமான துன்பங்கள் நீங்கவே, மனிதனுக்கு இறப்பு வருகிறது. சிந்தனையிலும் உணர்விலும் கிழடுதட்டித் துன்பத்தில் உழன்று அழுது கொண்டே சாகும் மனிதன் திரும்பவும் கிழடு இல்லாத — இளமை நலங்கள் செறிந்த உடலுடன் தன்னுடைய ஆன்மப் பயணத்தின் புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறான். ஆனாலும் முன்னைய அத்தியாயத்தின் துன்பச் சார்புகள் சூழ்நிலைக்கு அமுங்கிப் போகும். நினைவிற்கு வாரா முன்னைப் பயணத்தின் பயனாகப் பெற்ற அறிவும் பண்பும் மட்டும் கைகொடுக்கும். மீண்டும் வாழ்ந்து தன்னுடைய இலட்சியப் பயணத்தை அடைகின்றான். ஆதலால், ஒரு மனிதன் துன்பச் சூழலில் இறப்பது குறித்து

அவ்வளவாக வருந்த வேண்டிய அவசியமில்லை. அஃது அவனுக்கொரு கொடையே; இதனைத் திருவள்ளுவர்.

*"உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு"* (339)

என்று கூறுகின்றார். அன்றாட வாழ்க்கையில் உறக்கமும் விழிப்பும் எங்ஙனம் இயல்பாக நடைபெறுகிறதோ அது போன்ற இயல்பானதொன்று மரணமென்பது வள்ளுவர் கருத்து. இதனையே அப்பரடிகளும்,

*"துறக்கப் படாத உடலைத் துறந்துவெம் தூதுவரோடு*
*இறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து*
*பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்*
*மறப்பன் கொலோ என்றென் உள்ளங் கிடந்து மருகிடுமே."*

என்று பாடுகிறார்.

இதுபோலவே மிகப் பெரிய அளவில் தோன்றிய உலகம், திரும்பத் திரும்பத் தோன்றுதலுக்கு 'இளைப் பொழித்தல்' என்று மாதவச் சிவஞானமுனிவர் கூறுவர்.

ஆதலால், மரணம் பற்றிக் கவலைப்படுவதை விட வாழ்க்கையைப் பயனுடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்று கவலைப்பட்டு முயலுதலே முறையான வாழ்க்கை. ஆதலால், எல்லோருடைய மரணம் பற்றியும் அழுதல் நெறியன்று. முறையாக வாழத் தெரியாதவன் மரணத்திற்கு ஆட்படுதல் மீண்டும் புதிய வாய்ப்பு கிடைத்தற்கு ஏதுவாகும். ஆனால், இந்தப் பொதுவிதி நல்லோருக்கல்ல. அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களாதலால் மரணவாயிலில் அழமாட்டார்கள்; மகிழ்வார்கள்.

ஆனால், இந்த நிலத்தியலின் வாழ்க்கைக்கு வித்தென விளங்கும் நல்லவரை இழப்பது குறித்து அழுவார்கள். நாம் சிரிக்க மற்றவர்கள் அழ, வாழ்க்கை முடியுமானால் அது வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கை! நாம் அழவும் மற்றவர்கள்

சிரிக்கவும் வாழ்க்கை முடியுமானால் அஃது இரங்கத் தக்கது. இத்தகையோரின் மரணமும் வரவேற்கத் தக்கது.

## சார்புகெடின் நோயில்லை!

உலகியற்கையின் அமைப்பு இன்பமேயாம். உலகத்தின் தோற்றம், வைப்பு, நடைமுறை ஆகிய அனைத்தும் உயிர் இன்பத்தினை மையமாகக் கொண்டதேயாம். ஆக இன்பமே இயற்கை. துன்பமோ செயற்கை. ஆனால், துன்பத்தின் கர்த்தாக்களாகிய தீய மனிதர்கள் அல்லது அறியா மாந்தர்கள் துன்பமும் இயற்கையென்றே பறை சாற்றுகின்றனர். பலர் நம்பியும் விடுகின்றனர். துன்பத்தின் தொடக்கம் பருப் பொருளிலுமல்ல; பரந்த உலகத்திலுமல்ல. துன்பம் மிக நுண்ணிய இடத்தில் — நுண்ணிய அளவிலேயே தோன்றி வளர்கிறது. ஆனால், தோற்றம் நுண்ணிய இடத்திலேயாயினும் அது வளர்ந்து வளர்ந்து பரந்த இடத்தைப் பிடித்து விடுகிறது. துன்பம் ஒரு மனிதரிடத்துத் தோன்றி பல மனிதரைப் பற்றியதா? அல்லது பல மனிதரிடத்தில் ஒரே நேரத்தில் பற்றியதா? என்று ஆராய்ந்தால் ஒருமனிதரிடத்தில் தொடங்கித்தான் உலகைக் கவிழ்ந்து மூடியது என்று அறியலாம்.

ஒரு வீட்டின் கூரையில்பட்ட நுண்ணணுப் பிரமாணமான ஒரு நெருப்புப்பொறி, பல நூற்றுக்கணக்கான வீடுகளை எரித்தழிப்பதைப் போலத் துன்பமும் ஒரு முனையில் தோன்றிக் கவிந்திருக்க வேண்டும். துன்பம் காரியமேயாம். காரணமன்று. உடல், உணர்வு, அறிவு ஆகியவற்றை நிறைநல உழைப்பில் ஈடுபடுத்த மறுப்பவர்கள் காரியங்களைப் பற்றியே கவலைப்படுவார்கள். காரணங்களைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அவர்களுக்குக் காரியம் நடந்தால் சரி. காரணம் வேண்டிய அவசியமில்லை.

இந்த மனப்போக்கு உடையவர்களே உயர்ந்த மாளிகையைக் கட்டியவர்கள். மதிற் சுவர்களைக் கட்டியவர்கள், பூட்டுகளைப் படைத்துத் தந்தவர்கள். களவு, காவல் தத்துவத்தின் படைப்பாளர்கள். இவர்களே நியதியாகிய விதிக்கு இல்லாத வலிமையை உண்டாக்கியவர்கள். காரியங் களைப் பற்றிக் கவலைப்படுவது பயனற்றது. ஆனால், காரணங்களைப் பற்றிக் கவலைப்படுதல் வாழ்க்கையின் இன்றியமையாக் கடமை. துன்பத்தின் காரணம் தீமை. துன்பம் சேய்; தீமை தாய். அது என்ன தீது? தன்னையே சுற்றி வட்டமிடும் தீமை. ஒன்றைப் பிடித்துக் கொள்ளாமல் தன்னைத் தானே சுற்றினால் மயக்கம் வராதா? வேடிக்கைக்காக வேண்டுமானால் ஓரிரண்டு தடவை சுற்றலாம். பக்திக்காக வேண்டுமானால் இன்னும் சில தடவை சுற்றலாம். இந்த இரண்டு வகையில் சுற்றுவதற்கும் அடிப்படை உணர்வு உண்டு. அந்த உணர்வுக் கலப்பின் சிந்தனையை, நிறுத்திச் சுற்றினாலேயே பொருளுண்டு. மயக்கமும் வராது. உணர்வின் ஆற்றல், மயக்கத்தோடு போராடி மயக்கத்தின் ஆற்றலைத் தடுத்து நிறுத்தும். வெறும் சுற்று வெற்றுச் சுற்றேயாம். மயக்கத்தைத் தரும். அஃதென்ன உணர்வு? எல்லா உலகமும் ஒன்று. எவ்வுயிரும் எமதுயிர் என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டினை — மனிதகுல ஒருமைப்பாட் டுணர்வினை எண்ணி நினைந்து அதற்கேற்ப ஒழுக வேண்டுமென்ற விழுமிய விருப்பத்தைப் பெற்று அதை நிலைநிறுத்திக் கொள்ள, உலகின் சிறுவட்டமாகிய நான்கு திசைகளைத் திருப்பிச் சுற்றுதல் ஒரு பாடம்; ஒரு பயிற்சி முறை. முன்னையது உடற் பயிற்சி; பின்னையது உணர்வுப் பயிற்சி.

இங்ஙனம் காரணங்களை யறிந்து நெறி முறையில் நின்று வாழுதல் தீமையினின்றும் விடுதலை தரும். துன்பமும் மாறும், தீமைக்கெல்லாம் தீமை தன்னலமேயாம். தனது நலமின்றி மனிதன் வாழ முடியுமா? நியாயமான வினா. நலம்

வேறு. தன்னலம் வேறு. எல்லாரும் நலமுடையராகவே வாழவேண்டும். இஃதே இயற்கை. இதுவே பொதுவிதி. இதுவே மனித உலகத்தின் ஒழுக்கமும்கூட. நலம் இரு வகையன. தான் படைத்துக் கொள்ளும் இன்ப நலன், பிறர் படைத்து வழங்கும் இன்ப நலன். தான் படைத்துக் கொள்ளும் நலன்களாவன; அறிவு, அன்பு, ஆள்வினைத் திறன் முதலியனவாம். பிறர் வழங்கும் நலன்களாவன, தான் பேணப்படுதலும் போற்றப்படுதலுமாம். தன்னைத்தானே பேணிக் கொள்வதையிடப் பேணப்படல் சிறப்பாகும். தன்னலம் என்பது பிறருக்கு நலமின்மை விளைத்துத் தனக்கு வருகிற நலனே தன்னலம் என்று கூறப்பெறும். தன்னிடமுள்ள தன்னலச் சார்பினையறிந்து அச்சார்பு கெடவும் பிறர் நலம் பேணும் சார்பு பற்றி நின்று ஒழுகவும் எல்லோரும் முயன்றால் தனிமையிலும் துன்பமில்லை. பொதுவிலும் துன்பமில்லை; எங்கும் இன்பம். எல்லோருக்கும் இன்பம். எப்பொழுதும் இன்பம். இதனை,

> *"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்*
> *சார்தரா சார்தரும் நோய்"* (359)

என்று திருக்குறள் கூறுகிறது.

## இருவேறு உலகத்து இயற்கை

இந்த உலகில் அறிவுடையவர்கள் பலர் ஏழைகளாக இருக்கிறார்கள். அறிவில்லாதவர்கள் சிலர் செல்வந்தர்களாக இருக்கிறார்கள். இஃது உலகியலின் நியதி ஆகாது; நீதியும் ஆகாது. முறைகேடான ஓர் அமைப்பை — முறையை நியாயத் தன்மைப்படுத்துவது அநீதியேயாகும். வாழும் மனித உலகிற்கு அறம் பேசவந்த வள்ளுவர் மனித உலகத்தின் நலனையே நியாயமெனக் கருதுகிறார்; நீதி என்று கருதுகிறார். வழக்கில் பொய்மையாக இருந்தாலும் மனித உலகம் தீதற்ற

நன்மையே பெறுமானால் அதுவே முறையென உரை கண்டவர் வள்ளுவர். வள்ளுவம் மனிதகுலத்தின் நலனையே மையம்கொண்டு கால்பரவி நிற்கிறது.

இன்று அறிவுடையோர் ஏழையாக யிருக்கலாம். எத்தனையோ எழுத்தாளர்கள் — புலமை நலம் பெற்றவர்கள் பதிப்பாளர்களின் உடும்புப் பிடியில் சிக்கி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பதிப்பாளர் சம்பாதிப்பது பல ஆயிரங்கள்! படித்தவர் சம்பாதிப்பது சில நூறுகள். இந்தக் கொடுமைக்கு இன்னும் விடுதலை வரவில்லை. ஆனால், அறிவுடையோர் எல்லாரும் இப்படி இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. எழுத்தாளரும் பதிப்பாளரும் ஒருவராகவே விளங்கும் புலமைச் சான்றோர், இன்று இல்லையா? டாக்டர் மு.வ. அவர்கள் இல்லையா? அறிவு என்றால் ஒரு காலத்தில் இலக்கியப் புலமைமட்டுமே என்ற கருத்து இருந்தது. அதுபோலவே, செல்வம் என்றால் நிலவுடைமை என்ற கருத்தேயிருந்தது. நிலவுடைமை பரம்பரையானது. நிலவுடைமைச் செல்வமுடையோர் அறிவாற்றலோ தொழில் நுட்பமோ, தொழில் திறனோ உடையவர்களாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லாம லிருந்தது. முதற்காரணம் பரம்பரை. அடுத்த காரணம் அவர்கள் உழுவோரல்லர். வேளாண்மைக் கல்வியும் திறனும் உடையோரைக்கூட நில உடைமை முறை வற்றச் சிதறடித் திருக்கிறது. அந்த யுகத்திற்கு வேண்டுமானால் பழையமுறை பொருந்தும். அறிவு என்றால் ஒருதுறை அறிவு முழு அறிவாக முடியாது. அதிலும் உடல் தேவைக்குரிய பொருள்களை ஈட்டத்தெரியாத அறிவு முழுத் தன்மை உடையதாக ஆக முடியாது. நம்முடைய மொழியும் நம்முடைய இனமும் மற்றை நாடுகளைப்போல மேலோங்கி வளராததற்கே காரணம் அறிவும் உழைப்பும் இணைந்து செயல்படாததே யாகும். கருத்துக்கள் தோன்றியிருந்தாலும் வாழ்க்கையில் மாறுதல் இல்லை. இந்த முறைகெட்ட மரபை — அநீதியை

— நெறியல்லாத நெறியை வள்ளுவரும் நியாயப்படுத்தியிருக்கிறாரென்று கூறுவது வள்ளுவத்திற்குப் பெருமையன்று.

*"இருவேறு உலகத் தியற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு"*

(374)

என்ற குறளுக்கு அறிவும் செல்வமும் உலக இயற்கையில் மாறுபாடுடையன. இவ்விரண்டும் உடையவராக வாழ்வ தரிது என்பது புலால் வேட்கை யுடையவன் கடவுள் பெயரால் பலியிட்டதைப்போலவே யாகும். 'திரு' என்ற சொல்லுக்குக் 'கண்டோரால் விரும்பப்படும் தன்மை' என்று பொருள் கொண்டார் பேராசிரியர். இது மிகச் சிறந்த கருத்து. கண்டோரால் விரும்பப்படும் தன்மை யுடையவராக வாழ்தல் அரிய முயற்சியாகும். அறிவோ, ஆற்றலோ, வளம்பல உடைமையோ கண்டோரால் விரும்பத்தக்க வாழ்க்கையை வழங்கி விடுவதில்லை. தன்னலத் துறவும், பிறர் நலம் பேணும் வேட்கையும், மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்க்கும் உண்மையும் கொண்டு தொண்டலால் உயிர்க்கு ஊதியமில்லை என்று கருதிக் கருதி இனிய அன்பால் அருளார்வத்தால் பலரைத் தழுவி வாழும் வாழ்க்கையே பலரால் விரும்பப்பெறும் வாழ்க்கை. இதனையே, "திரு" என்றார். தெள்ளிய அறிவுடையோர் பலர் சமுதாய வாழ்க்கையில் தோற்று இருக்கின்றனர். அறிவின் காரணமாகவே பலரையும் ஆராய்ந்து பகை வளர்த்துக் கொண்டவர் இல்லையா? அறிவுடையோர் என்ற முனைப்பால் அழிந்தவர்க ளில்லையா? அறிவுடையோ ரெல்லாம் அன்புடையோராக இருப்பதில்லை என்ற ஐயத்தின் வினாவே,

*"அறிவினால் ஆகுவ துண்டோ? பிறிதின்நோய்*
*தந்நோய்போல் போற்றாக் கடை"*

(315)

என்ற குறள். ஆதலால் தெள்ளிய அறிவும் கண்டோரால் விரும்பப்படும் எளிமையும் ஏற்றப் பண்பும் ஒரு சேர உடையவராக வாழ்தல் அரிது.

மாணிக்கவாசகர் கடவுளைத் "திரு" என்றே அழைக்கிறார். "திருவே, என் செல்வமே" என்பது மணிமொழி. இறைவனை சிந்தித்தலுக்கும் அவன்றன் திருவருளைப் பெறுதலுக்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை. தெள்ளிய அறிவுடையோர் இறைவனைப்பற்றியே ஆராய்ந்தாலும்கூட இறைவனை ஆராய்கிறார்களே தவிர அனுபவிப்பதில்லை. எந்த ஒன்றையும் எப்பொழுதும் ஆராய்ந்துகொண்டேயிருப்பவர்களுக்கு அவர்கள் ஆராயும் பொருளில் ஒன்றி உடனாகும் வாய்ப்புக் கிடைக்காது. இறைவனும் அவனது இன்பமும் ஆய்வுக் கூடத்திற்கு உரியனவல்ல. அனுபவத்திற்கு உரியன. தெள்ளிய அறிவுடையோர் ஆராய்கிறார்கள்! ஆராய்கிறார்கள்! ஆனால், ஐயகோ, அவர்களுக்கு அனுபவமில்லை! இதனைத்தானே "கற்றதனால் ஆயபயனென்கொல்?" என்று வள்ளுவர் வினவுகிறார். மாணிக்கவாசகரும் "கற்றாரையான் வேண்டேன்" என்று ஒதுக்குகிறார். திருஞானசம்பந்தரும் 'தெளிவினுள் சிவமாகி' என்று குறிப்பிட்டுத் தெளிவு சிவமாதலிலேயே பயன் கூட்டுகிறது என்று அருளிச்செய்துள்ளார். ஆதலால், திரு வேறு தெள்ளியராதலும் வேறு" என்ற குறளுக்குக் கண்டோரால் விரும்பப்படும் தன்மையுடையாராதலும், தெள்ளிய அறிவுடையாராதலும் உலகியற்கையில் வேறுபட்டன என்றும், இறைவன் திருவருளைச் சிந்தித்துப் பெற்று அனுபவித்தலும் தெள்ளிய அறிவும் உலகியற்கையில் வேறுபட்டன என்பதுமே சிறந்த கருத்துக்களாகும். இந்த இரண்டு உணர்வுகளும் அதாவது கண்டோரால் விரும்பப்படும் தன்மையும், இறைவன்றன் திருவருளைப் பெற்று அனுபவித்தலும் தன் முயற்சியினாலேயே ஆகக்கூடியனவாகும்.

செல்வமுடையராதல் தன் முயற்சியின்றியே பிறர் முயற்சியினாலும் ஆகமுடியும். எப்படிச் செல்வந்தர்களானோம் என்று தெரியாமலே உலகத்தில் செல்வந்தர்கள் ஆனவர்களும் இருக்கிறார்கள். ஏன்? பரிசுச் சீட்டுக்கூட செல்வந்தன் ஆக்கிவிடுகிறதே! தெள்ளிய அறிவினைப் பெற்று அதனைச் சார திருவுடையோராகவும் ஆக முயலுவோமாக.

## கசடறக் கற்க

உயிர் வாழ்க்கையின் இன்றியமையாத் தேவை இன்பம். இன்பம் நேரிடையாகக் கிடைப்பதன்று. பிறர் வாயிலாக வந்து அமைவதேயாம். இன்பத்தினை வழங்கும் ஆற்றல் நல்லறிவுக்கே உண்டு. நல்லறிவைப் பெறுதற்குச் சாதனம் கல்வி. இன்று நம்மிடையில் கல்வி வேறு, அறிவு வேறு, என்ற உணர்வுகூட வளரவில்லை. கல்வி அறிவைப் பெறுதற்குரிய வாயிலேயாம். நம்முள் கற்றாரிலும் மூடர்கள் உண்டு. அவர்கள் எழுத்தெண்ணி ஒப்பிப்பர். எடுத்துக் காட்டுகள் ஏராளம் காட்டுவர். நமக்கே பிரமிப்பு ஏற்படும். ஆயினும் அண்டி நின்று பார்த்தால் கல்வியின் — கற்ற கல்வியின் அடையாளத்தைக்கூட அவர்தம் வாழ்க்கையில் பார்க்கமுடியாது. உண்ணும் உணவு செரித்துச் செங்குருதியாதல் வேண்டும். செங்குருதி வலிமையாகப் பயன்பட வேண்டும். இதுவே உணவின் பயன். அதுபோலவே கல்வி வாழ்க்கைப் பட்டறையில் அறிவாக மாறி ஒழுக்கமாகப் பயன் தரவேண்டும். இந்தப் பரிமாற்றங்கள் நடைபெறாது போனால் கல்வியாற் பயனில்லை.

கல்வி இருதரப்படும். ஒன்று பொதுக் கல்வி. மற்றொன்று சிறப்புக் கல்வி. பொதுக் கல்வி எல்லோருக்கும் தேவையான சில பொது அறிவு தரும் செய்திகளைக் கற்றுக்

கொள்வதாகும். சிறப்புக் கல்வி என்பது தன் தகுதியினை மேலும் உயர்த்திக் கொள்ளக் கற்பதாகும்.

ஒருவர்க்கு உடலில் நலமில்லையானால் மருத்துவரிடம் உடலைக் காட்டிச் சோதனை செய்தல் வேண்டும். மருத்துவர் உடலைச் சோதனை செய்து நோயுற்ற உடம்பினில் இன்னின்ன உயிர்ச்சத்து இல்லையென்று குறிப்பிடுவர். இல்லாத உயிர்ச்சத்தைப் பெறக்கூடிய உணவை — மருந்தைத் தேடியுண்டு இன்மையை ஈடு செய்து கொள்வது இயல்பு. அது போலவே நம்முடைய உயிரியலில் சில தகுதிக் குறைபாடுகள் இயல்பிலேயே உண்டு. அந்தத் தகுதிக் குறைபாடுகள் என்ன என்பதை நாமே நம்முடைய நேற்றைய வாழ்க்கையின் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். அல்லது நமது வாழ்க்கையில் நெருங்கிய தொடர்புடைய பெற்றோர், ஆசிரியர், நண்பர் ஆகியோர் மூலமாவது எந்தவகையில் நாம் தகுதிக் குறைபாடுடையோம் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இங்ஙனம் தெரிந்து கொண்ட பிறகு நம்முடைய உயிர்த் தகுதிக் குறைபாட்டை நீக்கி நிறை நலத்தை வழங்கக் கூடிய இலக்கியங்களை — கருத்துக்களைக் கற்றுத் தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதனை,

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"* (391)

என்ற குறளால் அறியலாம்.

இந்தக் குறளை, "கசடறக் கற்பவை கற்க" என்றும் "கசடறக் கற்க" என்றும் "கசடறக் கற்றபின் நிற்க அதற்குத் தக" வென்றும் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும். நம்முடைய மனக்குற்றம் இன்னதென்பதை அறிந்து கொண்டு அதனை நீக்குதற்குரிய நூல்களாகத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். எகிப்தியப் பழமொழி ஒன்று உண்டு. "நல்ல நூல்கள் உயிர்க்கு மருந்து போல்வன" என்பது அது. குற்றம்

நீங்குகிறவரையில் கற்க வேண்டும். குற்றம் நீங்கியபிறகு பெற்ற புதுநெறியில் நிலைத்து நின்று ஒழுகவேண்டும் என்பதே குறளின் திரண்ட கருத்து. இங்ஙனமின்றிக் "கசடறக் கற்க" என்பதற்கு ஐயந்திரிபறக் கற்க வேண்டுமென்று பொருள் கூறுவது பொருந்துமாயினும் சிறப்புடையதாகாது.

இந்தப் பார்வையில் வெகுளியுடையவர்கள், பொறை யுடைமையை வற்புறுத்தும் நூல்களையும், கோழைமைத் தன்மையுடையவர்கள் ஆள்வினையாற்றலைத் தரும் நூல்களையும், இன்னமும் அவரவர் தம் தம் நிலை நோக்கிக் கற்கவேண்டும். இங்ஙனம் கற்றால் தவறுகள் தொடர்ந்து வாரா. உலகில் தனிமனித வாழ்க்கையிலும், சமுதாயப் பொது வாழ்க்கையிலும் மாறுதல்கள் நிகழும். இத்தகு சிறந்த கல்வியை வழங்கும் கல்விக்கூடம் ஒன்று திறந்தால் ஒன்பது சிறைச்சாலையை மூடலாம் என்பது ஆன்றோர் கருத்து. ஆனால் இன்றோ கல்வியும் பெருகி வளர்கிறது. சட்டப் புத்தகங்களும் மலைபோல் குவிகின்றன. சிறைச்சாலைகளும் மூடப்பட்டபாடில்லை. காரணம் கசடறக் கல்வி இல்லா மையே யாகும்.

பல நூறு ஆயிரம் ஆண்டுகளாகக் கவிஞர்களின் பாட்டுடைப் பொருளும் மாறாமலே இருந்து வருகிறது. எழுத்தாளருக்கும் அதே கதிதான். ஏன்? சொற்பொழிவாளர் பரம்பரையும்கூட ஓராயிரம் ஆண்டுகளாக ஒரே மையத்தைத் தான் சுற்றி வருகிறார்கள். கடவுள் அவதாரங்களில்கூட வடிவ மாறுதல்கள் ஏற்பட்டாலும், நோக்க மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்தச் சமுதாயத்தில் சென்ற நூற்றாண்டில் குற்றமாகத் திகழ்ந்த ஒன்று, குற்றம் என்று கண்டு உணர்த்தப்பெற்ற ஒன்று இன்னமும் நீங்கின பாடில்லை. பலரறிய அதைக் குற்றம் என்று கற்றாலுங்கூடக் குற்றத்தை நீக்குவதில்லை. கற்றபடி நின்று ஒழுகுவதில்லை. இது ஒரு பாணி. அதனால் கவிஞர் உலகக் கருத்துச் சிந்தனையும் வளரவில்லை. நாடும் நாளும் வளரவில்லை.

ஆதலால் குற்றத்தை உணர்த்தி நீக்கும் கல்வியும் குற்றம் நீங்கி நின்றொழுகும் ஆற்றலைத் தரும் கல்வியும் வாழ்க்கையை வளப்படுத்தும் என்பது வள்ளுவத்தின் திரண்ட முடிபு.

## மொழியும் உறவும்

தமிழகத்தின் வரலாறு எவ்வளவுக்கெவ்வளவு பெருமைப்படத் தக்கதாக அமைந்திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு வருத்தப்படுதற்குரிய செய்திகளும் உள. தமிழர்கள் கடல்நாடு என்று கருதப் பெறுதற்குரிய இங்கிலாந்தைச் சேர்ந்த ஆங்கிலேயருக்கு முன்னோடியாகவே கடலில் கலம் செலுத்தியவர்கள். கடல் கடந்த நாடுகளோடு வாணிகம் செய்தவர்கள். சிறப்பாக இந்திய கிழக்காசிய நாடுகளைத் தன்னகத்தே கொண்ட பெருந்தமிழ்நாடு உடையவர்கள். இமயத்தின் மடியிலும், கங்கைக் கரையிலும், சிந்துநதியின் ஓரத்திலும் தமிழர்கள் உலாவினர் — வாழ்ந்தனர் என்று வரலாறு பேசுகின்றது. எனினும் இன்றையத் தமிழர்கள் நிலை என்ன? அந்தப் பழைய தமிழகம் எங்கு போயிற்று? தமிழர்கள் தங்களுடைய உறவு கலந்து வாழும் பண்பை வளர்த்துக் கொள்ளாமையின் காரணமாகவே, இவற்றை யெல்லாம் இழந்தனர் — இழந்து கொண்டிருக்கின்றனர் — இனியும் இழப்பர்போல் தோன்றுகிறது.

வேறுபட்ட பல்வேறு மனித இனத்தினரிடையேயும் அன்பைப் பெருக்கி உறவை வளர்ப்பது மொழியினாலாய விழுமிய பயன். மொழியின் இந்த விழுமிய நோக்கத்தைக் காலப் போக்கில் தமிழர்கள் மறந்தார்கள். நாம் வேறொரு வரோடு உறவு கொண்டு வாழ விரும்பினால், அவரைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். புரிந்துகொண்டு பேசிப் பழகி வாழ்வதற்கு நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள். ஆனால்

சிங்கள வர்களைப் புரிந்து கொண்டு பழக, இவர்கள் சிங்களத்தைப் படித்துக் கொள்ளவுமில்லை. அவர்கள் இவர்களைப் புரிந்துகொள்ள — பழக அவர்கட்குத் தமிழைக் கற்றுக் கொடுக்கவுமில்லை. இந்த நிலைமையில் மொழி அல்லது இனத்தினாலாய ஒற்றுமைகள் வளர்ந்து காலப் போக்கில் பகைமையாக மாறி உறவைக் கெடுத்துவிட்டது. நாம் எந்த நாட்டில் வாழுகிறோமோ, அந்த நாட்டை நம்முடைய நாடாக ஆக்கிக்கொள்ள முயலவேண்டும். அச்சாதனையை நாம் அடைவதற்காக அதற்குரிய வகையில் நமது கல்வியை அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஆங்கிலேயர்களும், ஆரியர்களும் எந்தெந்த நாடுகட்குச் சென்று வாணிகம் செய்தார்களோ அந்தந்த நாடுகளின் மொழிகளைப் படித்துக்கொள்வதில் அக்கறை காட்டி னார்கள். அதுபோலவே, ஆங்காங்குள்ள மக்கட்குத் தங்கள் மொழியைக் கற்றுக் கொடுப்பதிலும் அக்கறை காட்டி னார்கள். அதன் காரணமாகவே ஆங்கிலம் உலக மொழியா யிற்று. சமஸ்கிருதம் இந்திய மொழியாயிற்று. தமிழர்கள் தம் முயற்சியைச் செய்யாமையின் காரணமாக — தமிழ் மொழி தமிழ்நாட்டு மொழியாகக்கூடப் பூரணமாக இடம் பெற வில்லை. ஆதலால் தமிழர்கள் உலக அரங்கோடு — உலக மனித சமுதாயத்தோடு உறவு கொண்டு புகழ் பெற்று வாழ வேண்டுமானால், பல மொழிகளையும் பயில வேண்டும். பலமொழி வழிப்பட்ட மக்கட்கும் பைந்தமிழைக் கற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அன்றே உலகம் நம்வழி நடக்கும். இதனை வள்ளுவர்,

> "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு"
>
> (397)

என்று கூறியிருக்கிறார்.

# ஆள் முக்கியமல்ல

மனிதர்களுக்குள் பொருளியல் சண்டைகள் வருவது போலவே, கருத்துவழிச் சண்டைகளும் தோன்றுவதுண்டு. ஒருவருடைய கருத்தைவிட இன்னொருவருடைய கருத்து உயர்ந்தது என்கிற எண்ணம் தோன்றுகிறபோதும் தன் கருத்தை மற்றவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற முயற்சி தலைகாட்டுகிற பொழுதும் சண்டைகள் தோன்றுகின்றன. ஒரு கருத்தை ஏற்றுக் கொள்வது அல்லது மறுப்பது என்பதனை அக்கருத்தைச் சொல்லுகின்றவர்களை வைத்து மட்டும் முடிவெடுக்க முடியாது. எந்த ஓர் இனத்திற்கும் தன்னுடைய தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் இருப்பது மனித இயல்பை ஒட்டியதுதான்; தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்வதும் பிறருடைய கருத்தை ஏற்றுப் போற்ற மறுப்பதும் ஒன்றல்ல. தனித் தன்மையைக் காப்பாற்றாது போனாலும், ஒரு இனவழிப்பட்ட நாகரிகத்திற்கு — கலாச்சாரத்திற்கு அடிச்சுவடே இல்லாமற் போய்விடும். அது மட்டுமல்ல — நாடுகளுக்கும் சூழல்களுக்கும் ஏற்றவண்ணம் ஒழுக்கம், ஒழுக்கமின்மை களிற்கூட வேறுபாடுகள் நிலவுவது இயற்கை.

மகாபாரத கலாச்சாரத்தில் ஒருத்தி ஐவருக்கு மனைவியாக இருக்கமுடியும். அது சமுதாய ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பெற்ற ஒழுக்கம். இதை நாம் அநாகரிகம் என்று கூறுவதற்கில்லை. இதற்கு அடிப்படை அந்தச் சமுதாயத்தில் உள்ள ஆண் பெண்களின் விகிதாசார எண்ணிக்கையே யாகும். ஆனால் தமிழகத்தின் சூழ்நிலை வேறு. ஆதலால் பிறருடைய கருத்தைக் கேட்டு, சிந்தித்து, அக்கருத்து தன்னுடைய தனித் தன்மைக்கு இடையூறு செய்யாமல் — தன்னுடைய நாகரிகத்தை வளர்த்துச் செழுமைப்படுத்த

உதவுமானால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கக் கூடாது என்பதே வள்ளுவப் பெருந்தகையின் கருத்து.

திருவள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் சமய சமுதாயக் கருத்துக்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து மோதின. புத்தரின் கருத்துக்கள் பரவின. மகாவீரர் கருத்துக்கள் பரவின. ஆரிய மதக் கருத்துக்களும் பரவின. இக்கருத்துக் களைச் சார்ந்தோர் அனைவரும் தங்களைப் பல்லாற்றானும் உயர்த்திக் கொண்டு கூறினர். அந்தச் சூழலில்தான் திருவள்ளுவர், யார் சொல்லுகிறார் என்பது பற்றிக் கவலைப் படாதே! என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்து — தெளிந்து — அது உண்மையானதாக — வாழ்க்கைக்கு இயைபுடையதாக இருக்குமானால் ஏற்றுக் கொள் என்று கூறினார்.

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு"* (423)

## தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்க

அரசு பொறுப்புள்ள ஒன்று. அரசன் அதிகாரத்திற்கு எல்லைகளுண்டு. ஆனால் அரசினுடைய பொறுப்புகளும் கடமைகளும் மிகப் பரந்தன. நாட்டு மக்களிடையே நல்லொழுக்கமும் நன்னெறிச் சார்பும் நிலைபெற்றிருக்கும் படி செய்ய வேண்டிய பொறுப்பு அரசினுடையதேயாகும்.

அதனாலன்றோ 'நன்னடை நல்குதல் வேந்தர்க்குக் கடனே' என்று புறநானூறு பேசுகிறது. நன்னடை நல்குதல் என்றால் உத்தரவுகள் மூலம் என்பது பொருளன்று. சட்டங்கள் மூலமும் அன்று. கட்டுப்பாடுகள் மூலமும் அன்று. தண்டனைகள் மூலமும் அன்று. அரசன், தான் வாழ்தலின்மூலம் நாட்டு மக்களுக்கு நல்லொழுக்கத்தை எடுத்துத் தர வேண்டும். மேலும் நாட்டில் தனிமனிதனுடைய — சமுதாயத்தினுடைய ஒழுக்க நெறிகளைப் பற்றி உரத்துப்

பேசினால் போதாது. அல்லது தண்டனையைக் காட்டி அரசும், நரகத்தைக் காட்டி மதத் தலைவனும் மிரட்டினால் ஒழுக்கம் வளர்ந்து விடுமா என்ன? போக்குமடை கட்டாமல் அணையில் தண்ணீரைத் தேக்கினால் உடைப்பெடுப்பதைத் தவிர, வேறு வழியென்ன?

அதுபோலவே வாழ்க்கையின் தேவைகளைப் பெற்று சீராக வாழும் வழிவகைகளைக் காட்டாமல் — பெற துணை நிற்காமல் — அல்லலுற்று அழச் செய்தால் ஒழுக்கமா வளரும்? நரகத்தைத்தான் காட்டுங்களேன்?... ஒருக்காலும் முடியாது.

குற்றம் இருக்கிற இடம் மட்டுமே நமக்குத் தெரிகிறது. ஆனால் அந்தக் குற்றத்தின் பிறப்பிடம் நமக்குத் தெரிவ தில்லை. தெரிந்தாலும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள மறுக் கிறோம். காரணம் நாமேகூட அந்தக் குற்றங்கள் தோன்றக் காரணமாக இருப்பதனால்தான். பொய் சொல்வது குற்றம். ஆனால் அதைவிடப் பெரிய குற்றமுடையது பொய் சொல்ல உருவாக்கிய சமுதாயமேயாம். திருடுவது பெரிய குற்றம். ஆனால் அதைவிடப் பெரிய குற்றம் திருடக்கூடிய சூழலில் சமுதாயத்தை அமைத்திருக்கிறோம். அழுக்காறு கொள்வது குற்றம். ஆனால் அதைவிடப் பெரிய குற்றம் அழுக்காறு தோன்றுமளவுக்கு ஏகபோகமாக வாழ்வதை அனுமதிப்பது. மேற்கண்ட குற்றங்களின்றி சமுதாயத்தின் நடைமுறையை ஒழுங்குபடுத்தி எல்லோரும் எல்லாவற்றையும் பெற்று வாழும் இயல்புடைய சமுதாயமாக அமைப்பது அரசின் பொறுப்பு. ஆனால் இன்றோ அரசுகள் இந்தப் பொறுப்பினையா மேற்கொண்டு செய்கின்றன? இன்றோ அரசு வல்லாளர்கள் கையிலேயே சிக்கி அவர்கள் கைப்பொம்மையாக இருக்கிறது. அரசு நாட்டு மக்களிடையே குற்றத்தைப் பார்க்குமானால், அந்தக் குற்றம் மக்களிடையே தோன்றி வளர்வதற்கு அரசின் ஆட்சிமுறையின் குறைபாடே

காரணம் என்பதை அறியவேண்டும். இது முற்போக்கான அரசாங்கத்தின் கருத்தும் அமைப்புமாகும்.

ஆதலால் அரசு மக்களிடமுள்ள குற்றத்தைக் காணு மானால் அந்தக் குற்றங்கள் தோற்றுதற்குரிய தன்னுடைய குற்றத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாட்டு மக்களிடையே குற்றங்கள் தோன்றுவதற்குரிய வாய்ப்புகள் இல்லாமற் போகும். எவ்வளவு சிறந்த முற்போக் கான அரசியல் கருத்து என்பதை எண்ணி மகிழ்ந்து செயற் படுத்தவேண்டும். இதனை,

> "தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
> என்குற்ற மாகும் இறைக்கு" (436)

என்று திருக்குறள் பேசுகிறது.

அரசின் தன் குற்றம் நீங்கிய அளவிலேயே, பிறர் குற்றம் ஒன்று இல்லையென்பது உணரத்தக்கது. ஆனால் இன்றைய நடைமுறையில் அரசுகள் அதிகார அமைப்பின் மேல்மட்டங் களாக விளங்குகின்றனவே யொழிய, அறநெறியின் மேல்மட்ட அமைப்புகளாக விளங்கவில்லை. ஆட்சியின் வட்டங்களைச் சார்ந்தவர்களுக்கு இலாபம் இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள். பலரும் அந்த மையத்தைப் போட்டா போட்டி மனப்போக்குடன் வட்டமிடுகிறார்கள். அங்கு ஆர்ப்பாட்டமிருக்கிறது. ஆரவாரம் இருக்கிறது. போட்டா போட்டிகள் இருக்கின்றன. தந்திரங்களும் மந்திரங்களும் தலைகாட்டத் தொடங்கிவிட்டன. இவைகள் அரசு அறநெறிச் சார்பினின்றும் பிறக்கின்றனவோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. அதுமட்டுமின்றி அரசின் அறிக்கைகளும்கூட குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் அரசு சாதித்த சாதனைகளைப் பட்டியல் போட்டுக் காண்பிக் கின்றன. அதற்கு மாறாக மக்கள் மன்றத்தின் நிறைநல வளர்ச்சி குறித்து மதிப்பிடுவதில்லை.

பொதுவாக இன்று ஒரு அரசு மிகமிகச் சாதாரணமான காவல் உத்தியோகத்தையே வகிக்கிறது. ஆனால் அரசினுடைய பொறுப்போ தன் குடிமகனுடைய அறிவைத் தொட்டுத் தூண்டி வளர்ப்பது; ஆள்வினையாற்றலை வளர்ப்பது; ஒழுக்க நெறியில் நிறுத்துவது. என்னுடைய தேவைகளை நான்பெற என்னை முறையான வழியில் வழி நடத்துவது. பெற வேண்டுவனவற்றைப் பெற்று வாழத்துணை நின்று பாதுகாப்பது. இவ்வளவும் அரசின் பொறுப்பு. இத்தகைய எந்தவொரு பொறுப்பினின்றும் அரசு நழுவினால் மக்கள் மன்றத்தில் குற்றம் மலியும். குற்றத்தைக் கூறிப் பயனில்லை. அரசு குற்றமுடையதாக இருந்து கொண்டு மக்களுக்குத் தண்டனை வழங்குவது அறநெறியும் அன்று. அதனாலேயே தன் குற்றம் கண்டு தன்னுயிர் தந்தனன் பாண்டியன் நெடுஞ்செழியன். கோவலனிடத்தில் குற்றமில்லை. பாண்டியனிடத்திலிருந்த குற்றம் கோவல னிடத்தில் குற்றத்தை உண்டாக்கியது என்பதையும் அடியிற் கண்ட குறளையும் இணைத்து நோக்கினால் தமிழர் அரசியலின் விழுமிய சிறப்புக்கள் விளங்கும்.

*"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
*என்குற்ற மாகும் இறைக்கு"* (436)

என்பது திருக்குறள்.

## ஊழா? முயற்சியா?

'ஊழ் சர்வ சக்தி படைத்தது; அதை எதிர்த்து மனிதனால் ஒன்றும் செய்ய முடியாது; மனித ஆற்றலைவிட ஊழின் ஆற்றலே வலிமை படைத்தது' என்றெல்லாம் கருத்துக்கள் நிலவிய காலத்தில் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

பொதுவாக நம்முடைய மக்களிடத்தே இன்றுவரை விவாதத்திற்குரியதாக இருப்பது ஊழ் பெரிதா? உலையா முயற்சி பெரிதா? என்பதுதான். ஊழ் வலிமையானது என்ற கருத்தை வலியுறுத்துகிறவர்கள் கீழ்க்கண்ட சான்றுகளைக் காட்டுவார்கள்.

*கல்பொருந் திரங்கு மல்லற் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியிற் றெளிந்தனம்."*

— புறம்

ஆற்று வெள்ளத்தில் போகும் படகு வெள்ளத் துடனேயே அடித்துச் செல்லப்படும் என்பது உவமை. படகு ஆற்று வெள்ளத்தோடு அடித்துச் செல்லப் படுதலில் என்ன வியப்பு? அது சடப் பொருள்தானே? படகுக்கு ஏது பகுத்தறிவு? படகுக்கு ஏது சிந்தனை? ஏது அறிவு? ஏது செயல் திறன்? மனிதனோ சிந்திக்கும் ஆற்றல் பெற்றவன். அறிவும் செயல் திறனும் உடையவன். இவன் வெள்ளம் போகிற போக்கிலேயே இழுத்துச் செல்லப் பெறுவானானால் மதியிலி — நீந்தத் தெரியாதவன் — ஆற்றல் இல்லாத சோம்பேறி என்றுதான் கொள்ளவேண்டும். சக்தி படைத்த — மதியுடைய — நீந்தித் தெரிந்த மனிதன் படகில் இருந்தால் ஆற்றுப் போக்கை எதிர்த்தன்றோ செல்லுவான்?

திருவள்ளுவர் பெருமகனாரின் 'ஊழிற் பெருவலி யாவுள?' என்ற வினாவை எழுப்புவர் சிலர். ஆம். "ஊழிற் பெருவலி யாவுள?" என்பது வள்ளுவர் வாக்குத்தான். ஆனாலும் அவர் எடுத்துக்கொண்ட ஒரு பொருளை எப்படி முடிக்கிறார்? கருத்துக்கு எப்படி ஊட்டங் கொடுக்கிறார் என்றுதான் பார்க்கவேண்டும். அந்தக் குறளையே முடிக்கும் பொழுது 'ஊழ் முந்துறும்' என்கிறார்.

ஊழ், உன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் உன்னுடைய முயற்சியை முந்திக் கொண்டு வந்து நிற்கும்

என்கிறார். எனினும் ஊழ் வெற்றி பெற்றதாக அவர் சொல்லவில்லை. நீண்ட ஓட்டப் பந்தயத்தில் முதற் சுற்றில் சிலர் முந்தி ஓடி வருவதுண்டு. ஆனாலும் முதற் சுற்றில் முந்தி ஓடியவர்களே இறுதியிலும் வெற்றிபெற்று விடுகிறார்களா? இல்லையே! முதலில் பிந்தி ஓடியவர்கள் போகப் போகத் தமது ஆற்றலைப் பெருக்கி முந்தி ஓடியவர்களைப் பின்தள்ளி வெற்றிபெற்று விடுவதுண்டு. அதுபோலவே ஊழ் முந்தினாலும், அது மனிதனுடைய குறைவற்ற முயற்சியால் பின் தள்ளப் படுதற்குரியது — பின் தள்ள முடியும். அந்த ஆற்றலுக்கே முயற்சி என்று பெயர். முயற்சியைப் பற்றி வள்ளுவர் பேசும்போது,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழா துஞற்று பவர்" (620)

என்று குறிப்பிடுகிறார்.

> "தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருந்தக் கூலி தரும்." (619)

> "கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
> ஆற்றம் தலைப்பட்ட வர்க்கு." (269)

என்ற குறட்பாக்கள் முயற்சியின் பேராற்றலை வலியுறுத்து கின்றனவேயன்றி ஊழே வெற்றி காணும் என்று அறுதியிட்டு உணர்த்தவில்லையே!

புராண வழி பார்த்தாலும், ஊழின் வழி ஏற்பட்ட மரணத்தை முயற்சி வழி பெற்ற நோன்பின் பயனாக வென்ற மார்க்கண்டேயன் வரலாற்றை நாம் பார்க்கிறோம்.

நிலத்தினுடைய இழுப்பாற்றல் விண்ணோக்கிச் செல்லும் பொருளை இழுத்துத் தள்ளும் வலிமையுடைய தேயாயினும். அதையும் தடுத்து நிறுத்தி வானத்தே மனிதன் மிதக்கவில்லையா? ஆதலால், ஊழின் வலியைவிட, நமது

முயற்சியே வலிமையுடையது என்று கருதி முயற்சியுடைய வாழ்க்கையில் ஈடுபடுவோமாக!

*முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்!*

## சிரித்திடுக! சிந்தனை செய்க!

திருவள்ளுவர் வாழ்க்கையின் மாளிகையை முறையாக முழுதுறக் கட்டி முடிப்பதற்கு உரிய வழிவகைகளைக் கண்டவர். இன்ப மாளிகை அமைப்பதற்கு முன்பு துன்பம் உறவருதல் இயற்கை. துன்பத்தில் துவளுதல் கூடாது. துன்பம் வந்துற்ற பொழுது என்ன செய்யவேண்டும்? என்பதைத் திருவள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார். இதனை,

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்." (621)

என்று கூறுகிறார்.

துன்பம் வந்துற்ற பொழுது சிரித்திடுக. துன்பம் தொலைந்து அதனை அடுத்து இன்பம் வரும் என்பது வெளிப்படையான கருத்து. ஆனால், வெளிப்படையாகச் சொல்லப்படும் கருத்து திருக்குறளின் மாண்புக்கு இயைந்ததன்று. துன்பத்தைப் பார்த்துச் சிரித்தால் துன்பம் போகாது. அதோடு இங்குச் சிரித்தல் என்று மட்டும் பொருள்கொள்ள முடியாது. சிரிப்பில் பலவகையுண்டு. இங்குக் குறிப்பிடப் பெறும் சிரிப்பு 'நகுதல்" ஆகும். அதாவது பரிகாசச் சிரிப்பு. துன்பம் காரியம்; காரியமிருந்தால் அதற்கொரு காரணமுண்டு. துன்பத்திற்குரிய காரணம் நம்முடைய அறியாமை; செயமாட்டாமை. ஆள்வினையின்மை ஆகியவையேயாம். தன்னுடைய குறைகளை நினைத்துத் தன்னைத் தானே நொந்து சிரித்து விமர்சனம் செய்து கொண்டால், காரணங்கள் நீங்கும். அவ்வழி துன்பம்

தொலையும்; இன்பம் பெருகும். பொதுவாக ஏதாவது ஒரு துன்பம் வந்தபொழுது தலையிலடித்துக் கொண்டு அழுவது வழக்கம். தலையில் அடித்துக்கொள்ளும் வழக்கம் எப்படி யேற்பட்டதென்றால், தலைக்குள் இருக்கிற புத்தி வேலை செய்யாததால் துன்பம் வந்திருக்கிறதென்பதை உணர்ந்து புத்தி இயங்காமல் தேங்கிக் கிடப்பதைத் தெரிவிக்கத் தலையி லடித்துக்கொள்ளும் வழக்கம் வந்தது. இப்பொழுது பலர் தலையில் அடித்துக்கொண்டாலும் உள்ளே இருக்கும் புத்தி சற்றேனும் அசைந்து இயங்குவதாகத் தெரியவில்லை. ஆதலால், துன்பம் இயற்கையென்றோ, தலைவிதியென்றோ நம்பி வாளா கிடத்தல் கூடாது. துன்பத்திற்குரிய காரணங் களை அறிந்து மாற்ற வேண்டும். அதோடு, துன்பத்தை வெற்றுக் கவலையாக்கி வாழ்க்கையைச் சுமையாக்கிக் கொள்ளுதலும் கூடாது.

துன்பம் வந்தவுடன் தட்டிக் கழிக்காமல் ஏற்று அனுபவித்துக்கொண்டும் அந்த அனுபவத்தை ஆசிரியனாகக் கொண்டும் நேற்றைய தவறுகளுக்குரிய காரணங்களை மாற்றியும் புத்துணர்வோடு வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். அதுவே வாழ்க்கை இன்பமாவதற்கு உரிய சிறந்த வழி.

## அமைச்சுப் பண்பு

திருவள்ளுவர் ஒரு சிறந்த அரசியல் அறிஞர். அலை கடலனைய அவாக்களால் அலைமோதி ஒருவருக்கொருவர் பொருதிக் கொள்ளும் இயல்புடைய மனித சமூகத்தை நெறிப்படுத்துதல் எளியதொன்றன்று. அதுவும் செப்பமடை யாத சமூக அமைப்பு நிலைபெற்றிருக்கும் பொழுது மனித சமூகத்தை நெறிப்படுத்துதல் மேலும் கடுமையானதாக அமைகின்றது. நோய், நோய்க்கு மருந்தாதல் இயலாது. அதுபோலவே, ஆற்றலிலும், அரிய பண்புகளிலும், சீலத்திலும்

தொய்வுள்ளவர்கள் நொய்ந்து கிடக்கும் சமுதாயத்தை நடை முறைப்படுத்துதல் ஒரு பொழுதும் சாலாது. சிலபொழுது அடக்குமுறையால் — அச்சத்தால் அல்லது வரம்பிகந்த முறைகேடான கொடைகளால் — அரசு எந்திரம் ஓடலாம். ஆனாலும் அந்த ஓட்டம் நிலையானதுமன்று; நெடிது நிற்பது மன்று; சேம வைப்பிற்குரியது மன்று. மன்னராட்சிக் காலத்தில் மன்னருக்குச் செவியாகவும், கண்ணாகவும், கைகளாகவும் உடனிருந்து வழி நடத்தும் அமைச்சர்களே யிருந்தனர். இந்த மக்களாட்சித் தலைமுறையில் அமைச்சர்களே ஆளுநர். அமைச்சர்களுக்கு வேண்டிய சிறந்த தகுதிகளைத் திருவள்ளுவர் முறைப்படுத்திக் கூறுகிறார்.

வினை செய்தல் எளியதன்று. வினை செய்தல் இலட்சிய நோக்காக — அமையவேண்டும். இடையீடுகளில் திறனிழந்து நிற்றல் கூடாது. வினை செய்யும் ஆற்றலை ஐம்பொறிகளிலும் புலன்களிலும் உருவாக்கித் தேக்கிப் பயனுறத் தக்க வகையில் வளர்த்து, வினைவல்லாராக விளங்குதல் வேண்டும். வினையின் கண் இவர்க்குரிய வல்லமையை அவர் எடுத்துக் கூறி அறிமுகம் செய்துகொள்ளக் கூடியதாக அன்றி அவர் செய்த வினையின் பயனாக விளைந்த பயனும், சாதனையும் இவர் வினைவல்லார் என்பதைப் பறைசாற்ற வேண்டும்.

அமைச்சு ஒரு தொழில். பொறுப்புள்ள பணி. அவர்களின் கடமை குடிமக்களைக் காத்தல். அகத்தாலும் புறத்தாலும் குடிமக்கள் கேடுறாவண்ணம் பாதுகாக்கப் பெறவேண்டும். காத்தல் என்பதனால், காவல் என்ற பொருள் மட்டும் கொள்ளக்கூடாது. அஃது ஒரு பொருள் பொதிந்த சொல். பல நோக்குப் பொருள் பொதிந்த சொல். குடிமக்கள் முறையாக அகத்தாலும் புறத்தாலும் வளர வேண்டிய அளவுக்கு வளரத் துணை நிற்றலும் அமைச்சின் கடமை — ஏன்? இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டு விளங்கும் இறைவனுடைய உயர்நீதிமன்றத்திற்கு எந்த ஓர் உயிரும்

குற்றம் சுமந்து செல்லும்படியும் அமைச்சு அனுமதித்த லாகாது. குடிகளைக் காத்தல் என்ற குறிக்கோளை வள்ளுவத்தின் பார்வையில் முழுதும் தழுவிய அரசு தோன்றுதல் இயலுமா? நாட்டு நடப்பில் உள்ள நொய்வின் காரணமாகக் கோடனைய அரசின் பொறுப்பும் உயர்ந்திருக்கிறது.

சிறந்த அமைச்சு, குடிமக்களை மன நலத்துடனும், வளத்துடனும் பேணிப் பாதுகாக்க வேண்டும். மக்களுடைய வாழ்க்கைத் துய்ப்புக்குரிய நியாயமானவைகளை யெல்லாம் வழங்கி நல்குரவால் நலியாமல் பாதுகாக்க வேண்டும். அது மட்டுமன்று. ஒவ்வொரு மனிதனும் அளவு கடந்த ஆற்றல்களால் பெய்யப்பட்ட படைப்பின் வடிவமான மனிதனின் படைப்பாற்றலும், சக்தியும், குறையாமலும் வளர்ந்து படைப்புப் பல படைக்கும்படியும் பாதுகாக்க வேண்டும்.

அமைச்சுத் தொழில் பூண்பவர்களுக்குத் தேர்ந்த கல்வி தேவை. இயற்கை, பிறநாட்டு அரசுகள், மனிதகுலத்தின் வளர்ச்சி, வளர்ச்சியில் ஏற்படும் சிக்கல்கள் இவைக ளனைத் தையும் அவ்வப் பொழுது துறைபோகக் கற்று உணர்ந்த வரால்தான் அமைச்சுத் தொழிலைச் செம்மையாகச் செய்யமுடியும். அதிகாரம் எப்பொழுதோ உபயோகப்படுத்த வேண்டிய ஒரு சின்னமே தவிர அன்றாட வாழ்க்கையில், அது அரசால் பயன்படுத்தக்கூடிய தொன்றன்று. அப்படிப் பயன்படுத்தினாலும், அந்த அதிகாரம் காலப்போக்கில் தன்னுடைய சக்தியை இழந்துவிடும். ஆனால், சிறந்த கல்வியும் நடைமுறை அறிவும் அமைச்சுக்குத் தேவை.

அடுத்து எவ்வளவுதான் கற்றறிந்தாலும் நெஞ்சில் உறுதியில்லையானால், எந்த ஒரு காரியத்தையும் நிறைவேற்ற முடியாது. அச்சமும் சோர்வும் குடிகொள்ளும். அறிவினால் ஆராய்ந்து முடிவெடுத்த பிறகு உறுதியாகச் செயற்பட

வேண்டும். ஆக, அஞ்சாமையும் குடிப்பிறப் பிறப்பும் காக்குந் திறனும் கற்றறிந்த அறிவும் முயற்சியும் — ஆகிய இந்த ஐவகைப் பண்புகளும் அமைச்சரின் ஐம்புலன்களிலும் — ஐம்பொறிகளிலும் நிறைந்து நிலைபெற்றிருக்கவேண்டும். ஒருபொறி, சிறந்த பண்பிலீடுபட்டுப் பிறிதொருபொறி அதற்குத் தடையாக இருக்குமானால், செயற்பாட்டில் ஒருமை நிலவாது. செயலும் செப்பமாக அமையாது; பயனும் கிடைக்காது. ஆதலால் இந்தச் சிறந்த பண்புகள் ஐம்பொறிகளிலும் பெற்றிருக்கவேண்டும் என்று உரை காணுதலே சிறப்பு.

> *"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு*
> *ஐந்துடன் மாண்டது அமைச்சு"* (632)

என்பது குறள்.

## தாழ்விலாச் செல்வர்

திருவள்ளுவர் அறநெறியாளர்; அரசியலறிஞர்; பொருளியல் மேதை; சமுதாய இயல் அறிந்து இலக்கியம் படைத்த வல்லாளர். நாடு, மக்கள், அரசியல், சமுதாய அமைப்பு ஆகிய துறைகளில், அரிஸ்டாட்டில், பிளேட்டோ, ரூஸோ, கார்ல் மார்க்ஸ் ஆகிய பேரறிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர். ஏன்? அவர்களிலும் காலத்தால் முந்தித் தோன்றிய மூத்த அறிஞர் திருவள்ளுவர். இவர் இயற்றிய திருக்குறளை இலக்கியத் திறனாய்வு செய்தால் மட்டும்போதாது. சமுதாய இயல் ஒழுகலாற்றுத் துறையில் திறனாய்வு செய்தல் வேண்டும். அங்ஙனம் திறனாய்வு செய்யும்பொழுது, திருவள்ளுவர் காலத்தால் முந்தியவர் மட்டுமல்லர்; கருத்தாலும் மூத்தவர்; மிகமிக முற்போக்கானதொரு கருத்துலகைச் சார்ந்தவர் என்பது புலனாகும்.

நாட்டுக்கு இலக்கணம் படைக்கின்றார் திருவள்ளுவர். நாடு என்பது ஓர் ஒப்பற்ற அமைப்பு. அந்நாட்டில் வாழும் மக்களுக்கு வயிற்றுச் சோற்றுக்கு வறுமை யிருத்தல் கூடாது. ஆதலால் தள்ளா விளையுள் நாட்டுக்கு முதல் தேவை. நிலவளம் இன்றியமையாதது. நிலத்திற்கு இயல்பிலேயே ஒன்றைப் பதின் மடங்காகப் பெருக்கித் தரும் வளம் உண்டு. ஆயினும் பேணுவாரில்லையேல் அந்த வளம் வற்றிச் சுருங்கும். நாளுக்கு நாள் நிலத்திற்கு எரு முதலியன இட்டு வளம்குன்றாத நிலையில் பேணினால், இளமை குன்றாது. எழில் பூத்துக் குலுங்கிப் பயன் பல நல்கும். நிலத்திற்கு இளமை முறுக்கும் உண்டு. முதுமைத் தன்மையும் உண்டு. ஆனால் நிலத்தின் இளமையும் முதுமையும் பருவத்தால் வருவதன்று. பேணுதலால் இளமையும், பேணாமையினால் முதுமையும் வருகின்றன. சில நிலங்கள் தம்மைப் பேணு வாரின்மை காரணமாக — கொள்ளுதலின்றிக் கொடுப்ப தறியா மாக்களிடம் சிக்கியதன் காரணமாக வலி விழந்து — பொலிவிழந்து காட்சிதரும். ஆங்கு மரமும் புல்லாகக் காட்சியளிக்கும். நில்த்தின் வற்றல் தன்மையை — முதுமையை, ஆங்குத் தோன்றும் புல்லும் காட்டும். பசுமை யற்று வெளிறிக் காட்சியளிக்கும்.

இத்தகு நிலத்திற்குத் தள்ளாமை வந்து விட்டது என்றும் கூறலாம். நிலம் மாறா இளமையிலிருக்க வேண்டும். மனிதனின் செய்யும் முறைகளினால் செப்பமாக்கப் பெறு தலின் "செய்" என்ற பெயராலேயே நிலம் வழங்கப் பெறுகிறது. எண்களில் கூட்டல் — கழித்தல், பெருக்கல், வகுத்தலிற் பிழை வராதது போல, நன்முறையில், பேணப் பெற்ற நிலத்தில் எதிர்பார்ப்பதும் பிழையாது. நிலம் பிழைப்பின் மனிதனின் பிழையே காரணமாகும்.

சில நிலம், மனிதனை எதிர்பார்க்காமலேயே வளமாக இருக்கும். பெரும்பாலும் குறிஞ்சி நிலத்திற்கு இந்த இயல்பு உண்டு. "பல்வளம் கெழீஇய பாரியின் பறம்புமலை உழவர்

உழாதன நான்கு பயன் உடைத்து" என்று பாராட்டப் பெற்றுள்ளது. குறிஞ்சி நிலம் மலையும் மலைசார்ந்த இடமுமாகும். மலையோடு இணைந்தது சோலை. மலையிடை நிலவிவரும் மரங்கள், நிலத்தினின்றும் உரத்தை எடுத்துக் கொண்டு வளர்கின்றன. அந்நிலத்திற்குத் திரும்பவும் தம்முடைய சருகுகளை உரமாகத் தருகின்றன. அதுபோலவே தம்மை வளர்க்கும் நிலத்தைக் காய் கதிர் சுடாத வண்ணம், விரிந்த கிளைகளைப் பரப்பிப் பாதுகாத்து விடுகின்றன. தம்மிடம் பெய்த மழையை இறுக வைத்துப் பின்னர் அருஞ்சுனையாக மாற்றித் தரும் ஆற்றலும் மலைக்கு இருக்கிறது. உயர வளர்ந்தமையினாலும் மிக உயரிய பண்பாகிய தன்மையைப் பெற்றிருத்தலாலும், வானினைத் தடுத்து ஆட்கொண்டு மழை காண முடிகிறது. தண்ணளியிற் சிறந்த நெஞ்சமுடையார் பயன்பல காண்பர். இதுவே நெறியும் நியதியுமாகும். ஆதலின் குறிஞ்சி நிலத்திற்குப் பேணும் மனிதரின்றியே வளமுண்டு. மனிதன் அவற்றைப் பேணாமல் தள்ளினாலும், அவனை வெறுத்துத் தள்ளாவிளையுள் என்று பொருள் கொண்டால் பிழை யில்லை.

இங்ஙனம், கொள்ளலும், கொடுத்தலும் முறைமையி லுடைய கருப்பொருளை உடைமையினால் தான் போலும் குறிஞ்சி நிலத்திற்குரிய ஒழுக்கத்தை, இன்பம் கொடுத்தலும், கொள்ளுதலுமாகிய புணர்தல் என்று வகுத்தார்கள் போலும்!

அடுத்து, நிலத்திற்கு இன்றியமையாதது தக்கார் ஆவர். பொதுவாக மனித இனத்தில் "பகைப் பூண்டு" வேரூன்றி வளர்ந்து வந்திருக்கிறது. விருப்பு வெறுப்புக்களால் சமுதாயம் அலைக்கப்படுகிறது. காய்தல் உவத்தலின்றி மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்க்கும். தகைமையே தக்கார்க்கு இலக்கணமாகும். தக்காரையே சான்றோர் என்றும் அழைத்தல் மரபு. சான்றோருக்கு நபர்கள் முக்கியமல்லர். அவர்களுக்கு உற்றாருமில்லை; உறவினருமில்லை. அவர்

களுக்கு அன்பினைக் காட்டுதற்கு எல்லை வரம்புகள் கிடையா. அதனாலேயே தக்கார் தகவிலார் என்பதை எச்சத்தால் அறியும்படி வள்ளுவம் கூறிற்று. "எச்சம்" எஞ்சி நிற்கும் புகழ். தம் சுற்றத்தாரிடையே புகழ் பெற்று விளங்கு தற்குத் தகைமை வேண்டிய அவசியமில்லை. பரிவும், பாசமும் போதும். இன்று இதற்கே பஞ்சம்! ஆதலால் சாதி, இனம், மொழி, கட்சி வேறுபாடுகளின்றி அறம் நோக்கி மனித சமுதாயத்தினிடத்து அன்பு செலுத்துகின்ற தக்கார் நாட்டிடை இருந்தால் தான் மோதல்கள் தவிர்க்கப் பெறும். உறவு முறை வளரும். ஆதலால் தக்கார் நாட்டிற்கு இன்றியமையாதவர் என்றார்.

தள்ளா விளையுளைச் சார்ந்து தக்காரைச் சொன்ன தற்குக் காரணம் யாதெனின், தள்ளா விளையுள் இருந்தும், விளை பொருள் பல்கிப் பெருகியும், ஒருவரோடொருவர் உறவு கலந்து பங்கிட்டு உண்ணும் நெறி முறைக்கு அறநெறியிற் செலுத்தும், தக்கார் இலராயின் தள்ளா விளையுளால் ஆய பயன் இல்லாமற் போகிறது. அதனா லேயே தள்ளா விளையுளைச் சார்ந்து தக்காரைக் கூறினார்.

அடுத்து நாட்டிற்குத் தேவை தாழ்விலாச் செல்வர் என்பது வள்ளுவத்தின் கருத்து. 'குறைவுபடாச் செல்வ முடையார்' என்று பரிமேலழகர் எழுதுகிறார். செல்வம் குறை யாமல் இருக்க வேண்டுமென்பது வள்ளுவத்தின் கருத்தாக இருக்க முடியாது. அங்ஙனமாயின் 'நத்தம் போற்கேடு' என்ற குறளோடு முரண்படும். செல்வத்தின் பயன் ஈதலும், துய்த்தலுமேயாம். செல்வமுடையானை மருந்து மரம் போல வடுக்கள் பெற்றும், உறுப்புக்களை யிழந்தும், மனித குலத் திற்குப் பயன்பட வாழ்க என்று குறிப்பிடுவார். அதோடு தாழ்தல் என்ற சொல் 'குறைவு படுதல்' என்ற பொருளில் வழங்கப்படுதல் 'பெருவழக்கில் இல்லை. 'தாழ்தல்' என்ற சொல் பெரும்பாலும் துலாக் கோலில் — தூக்கும்போது தட்டுகள் உயர்தலும் தாழ்தலும் என்ற வழக்கு நிலவுகிறது.

துலாக் கோலின் தட்டுக்கள் சமமாக இல்லாமல் ஒன்று கீழிறங்குவதைத் 'தட்டு தாழ்கிறது' என்று சொல்லுதல் நாடறிந்த வழக்கு. ஒருவனுடைய உரிமையின் பாற்பட்ட செல்வமுடைமையை ஒரு தட்டிலும், பிறிதொரு தட்டில் அவனது தனித் திறன்களையும் இட்டுச் சீர்தூக்கும் பொழுதும் செல்வமுடைமைத் தட்டுக்கு. அவனுடைய திறன்களின் தட்டு தாழாமல் இருக்க வேண்டும். உழைக்கும் திறன், அறிவாற்றல் ஆகியவற்றினுடைய தகுதிக்கேற்பவே செல்வமுடைமை இருக்க வேண்டும். அப்படியாயின் திருவள்ளுவர் உழைப்பின் வழிவரும் செல்வமுடைமையைத் தான் செல்வமெனக் கருதுகிறார். வழி வழிச் செல்வ முடைமை வள்ளுவரால் மறுக்கப்படுகிறது. வள்ளுவர் காலத்தும் பொருட் செல்வம் யாதொரு திறனுமற்ற பூரியர் கண்ணும் இடம் பெற்றிருந்தமையை அவரே 'பொருட் செல்வம் பூரியர் கண்ணும் உள" என்று கூறுகிறார். ஆதலால் "தாழ்விலாச் செல்வர்" என்பதற்குத் தன்னுடைய உடைமையின் மதிப்புக்களை நோக்கத் தனித் திறன்களில் தாழாதவர்கள் — அதாவது செல்வமுடைமைக்குத் தகுதியானவர்கள் நாட்டுக்குத் தேவை என்பதாகும்.

செல்வத்தின் ஊற்று உழைப்புத் திறனேயாகும். இவ்வூற்றுடையோர் மேலும், மேலும் செல்வம் பெருக்குவர் என்பதனால், தேக்கமடையாத — தேக்கமடைய முடியாத மனிதனின் திறன்களை முதன்மைப்படுத்தியே "தாழ்விலாச் செல்வர்" என்று அருளினார்.

> *"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
> *செல்வரும் சேர்வது நாடு"*
>
> **(731)**

என்பது குறள்.

# வகுத்தான் யார்?

மனித வாழ்க்கையிலும், இலக்கியங்களிலும், தத்துவ நூல்களிலும் ஊழின் உண்மையும் வலிமையும் வலியுறுத்தப் பெறுகின்றன. அண்மைக்கால முற்போக்குச் சிந்தனை யாளர்கள் ஊழின் உண்மையை மறுக்கின்றனர். ஊழைப் பற்றிய தெளிவான அறிவின்மையால், மனித வாழ்க்கை யிலேயே குழப்பங்கள் ஏற்படுகின்றன. இது, தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

"ஊழின் உண்மை மறுக்க முடியாத ஒன்று. ஊழை மறுப்பதால் உலகாயதமே வளரும், பயனில்லை. ஊழ் தெய்வீக சக்தியுடையது. அது மாற்ற முடியாதது; அழிக்க முடியாதது" என்றெல்லாம் கருதுவது பேதைமை. ஊழ் உடல் தொடர்புடையதன்று. அஃது உயிர்த் தொடர்புடையது. உயிரின் நேற்றைய, அதற்கு முந்திய சிந்தனை — அதன் வழிப்பட்ட செயல் ஆகியவற்றின் பதிவுகளுக்கே ஊழ் என்று பெயர். ஒன்று, பிறிதொன்றின் விளைவு. விளைவற்ற சிந்தனையும், செயலும் உலகில் இல்லை. உயிர்கள் தாம் எண்ணிய — நினைத்த — உடலின் துணை கொண்டு செய்த செயல்களின் பயன்களை அவை அனுபவிக்கத் துணை நிற்பதற்கே ஊழ் என்று பெயர். நேற்றையச் சிந்தனை — செயல் நல்ல வண்ணமாக இருக்குமானால், நல்லூழ். அவை தீயனவாக இருக்குமானால் தீயூழ். 'விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா?' என்ற பழமொழியுங்கூட இந்தக் கருத்தினை வலியுறுத்துவதாகவே அமைந்திருக்கிறது.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (377)

என்ற திருக்குறள் ஊழின் வலிமையை உணர்த்தும் குறள். இந்தக் குறட்பாவில் 'வகுத்தான்' என்ற சொல்லுக்கு 'தெய்வம்' என்று பொருள் கொள்ளுகின்றார் பரிமேலழகர்.

ஊழிற்குத் தெய்வம் என்று மறுபெயர் உள்ளமையான், உரை பொருத்தமானதேயாம். ஆனாலும், தெய்வம் என்ற சொல்லை, கடவுள் என்ற வழக்கில் பொதுமக்கள் நம்புவதால் கடவுள் விட்ட வழி என்று கருதுகின்றார்கள். ஊழிற்கும் கடவுளுக்கும் உறவில்லை. ஊழிற்கு மனித ஆற்றலினும் மிகுந்த பேராற்றலும் இல்லை. 'வகுத்தான்' என்ற சொல் மனிதனையே குறிக்கும். மனிதன் தன் உள் உணர்வுகளால் என்ன நினைத்தானோ அச்செயல்களின் விளைவையே அவன் அனுபவிக்க வேண்டும். சில பொழுது உள் நினைப்பு ஒன்றாகவும் செயல் அதற்கு மாறுபட்டதாகவும் இருக்கும். பலன் நினைப்பிற்கேயன்றிச் செயலுக்கல்ல. இதனை மாதவச் சிவஞான முனிவரும் 'சிவச் சிந்தனையோடு செய்யும் பாவமும் அறமாகும். சிவச் சிந்தனையின்றிச் செய்யும் அறமும் பாவமாகும்' என்கிறார். செயலைவிட நினைவிற்கே வலிமை அதிகம். ஆதலால், ஒருவன் தன் உள்ளத்தால் ஒன்றை வகுத்துக்கொண்ட வழி நின்று வேறு வகையாக அனுபவிக்க முடியாது என்பதே இக்குறட்பாவின் கருத்து.

> "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (377)

## செய்க பொருளை

பொருளியல் சாத்திரம் மிகவும் நுட்பமானதொன்று. பொருளியல் பற்றிய அறிவு மக்களிடத்து மிகுந்தாலேயே நாட்டுப் பொருளியலின் தரம் நிலைபேறுடையதாக இருக்க முடியும். அரசு பணமுடைப்படுகிறது என்று சொன்னால், அரசுக்கு என்ன பணமுடை? அவர்கள்தாம் நோட்டு (Currency Notes) அடித்துக் கொள்ளலாமே என்று அறியாத மக்கள் சொல்லுகிறார்கள். நாட்டில் உள்ள பொருள் ஆக்கத்திற்கு ஏற்றவாறே நாணயங்களை- நோட்டுகளை

அரசு வெளியிட முடியும். பொருளின் மதிப்பைத் தாங்கி வருகின்ற ஒரு சின்னமே நாணயம். பொருளின்றிச் சின்னம் இருப்பின் மதிப்பிராது.

பழங்காலத் தமிழ் இலக்கியங்களிலும்கூட பொன் வேறு, பொருள் வேறு என்று பகுத்துப் பிரித்தே பேசப்பட்டு வந்திருக்கிறது. பரிபாடல் 'பொன் பொருள் போகம்' என்று முறை வைத்துப் பேசுகின்றது.

மக்களினத்தில் சுலபமான பொருள் கொடுக்கல் வாங்கலுக்காக (பரிவர்த்தனைக்காக) நாணயமாற்று முறை வந்ததேயொழிய நாணயத்தின் செல்வாக்குப் பெருகுவதற் காக அன்று. ஆனால் சாதாரண மக்களிடத்தில் நாணயத் திற்கு மதிப்புக் கூடி, பொருளுக்கு மதிப்புக் குறைந்து விட்டது. ரூ. 1000 பெருமதிப்புடைய மாடுகள் வைத்திருப்பவனை நாடு மதிப்பதில்லை. ஆனால் ஒரு தங்க மோதிரம் போட்டவனை நாடு மதிக்கிறது. 40 ரூபாய் விலை மதிப்புள்ள நெல்லை, அணிலும் எலியும் தின்ன, போதிய பாதுகாப்பின்றி வெளியில் போட்டிருக்கிறான். ஆனால் 25 பைசா நாண யத்தைத் துணியில் முடிந்து, பெட்டியில் பூட்டிப் பத்திரப் படுத்துகின்றான். மக்கள் இப்படியிருந்ததால் ஆட்சியாளர் வரிகள் மூலம் நாணயம் திரட்டிக் குவித்தனர். இப்படி நாணயத்தின் மதிப்புப் பெருகியதால் பொருள் செய்யும் விருப்புக் குறைந்து பணம் சம்பாதிக்கும் ஆசை பெருகியது. அதனால் மறைமுகமான சுரண்டல் முறைச் சமுதாயம் தோன்றியது. வட்டித் தொழில், வாணிகம் போன்ற அதிக உழைப்புத் தேவையில்லாத — உற்பத்திக்கே தொடர்பில்லாத — குறுகிய வழி முறைகளில் அல்லது இரவு முதலிய இழிவான வழிகளில் பணத்தை அடைய முயலும் எண்ணம் வளர்ந்தது. நாட்டின் பொருள் வளம் சீர்குலைந்தது. வறுமை பெருகியது. இதனையுணர்ந்த திருவள்ளுவர் பணத்தின் மீது இருக்கும் ஆசையைப் பொருள் உற்பத்தியின் மீது திருப்ப விரும்புகிறார். நாட்டின் முதல் மனிதனாகிய அரசனைப்

பார்த்துக் கேட்கிறார் — இல்லை — கோபக் குறியுடன் ஆணையிடுகிறார். 'வரி — வரி' என்று நாணயங்களை வாங்கிக் குவிப்பதற்குப் பதிலாக, அயல் நாடுகளிலிருந்தெல் லாம் செல்வத்தைக் கொண்டு வருவதற்குக் காரணமான — அவர்கள் விரும்பும் பொருள்களைச் செய்க! அவ்வழி நாட்டை நடத்துக என்று ஆணையிடுகின்றார். அப்பொழுது பகையொடுங்கும்! பார் செழிக்கும்!

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்" (759)

## சோரவிடுக!

ஒருவன் எத்தனையோ — எண்ணிக் காண முடியாத அருஞ் செயல்களைச் செய்ய மண்ணில் பிறந்தான். மக்கள் வாழ்க்கையே செயல் முடித்தலின் பாற்பட்டது; நற்செயலைச் செய்வதற்கே உயிர் வாழ வேண்டும். அழிவறிந்த ஆள்வினையும் செயலுமற்ற வாழ்க்கை வாழ்க்கையாமோ? கறங்கெனச் சுற்றும் கால தேவதையின் சுழலிற் பட்டு அழியும் வாழ்க்கை அவல வாழ்க்கை. இந்த வாழ்க்கையுடையவர்கள் உண்பதும் கேடு; உண்டு நடமாடித் திரிவதும் கேடு; இங்ஙனம், செயல் நிறைந்த வாழ்க்கையை மேற்கொள்ளவே ஒருவன் இன்னொருவனோடு உறவு கொள்ளுகிறான். இந்தப் பழக்கம் எந்த வகையில் அமைந்தாலும் — குருதி வழிப்பட்ட உறவானாலும் — தொழில் வழிப்பட்ட அலுவல் முறை யானாலும் — அல்லது இவ்விரண்டினும் வளர்ந்து மேம் பட்டதாகக் கருதப்பெறும் நட்பாயினும் அல்லது காதல் வழிப்பட்ட வாழ்க்கைத் துணையானாலும் எல்லாமே, ஒருவர் தாம் எண்ணிய கருமம் செய்து முடிக்க பெறுந் துணையேயாம். ஒரு வகையில் நட்பேயாகும். இந்த மனப்போக்கில் இன்றைய சமுதாயத்தில் சிலர் இணைந்து வாழும் இயல்புகளை ஆராய்ந்தால் வேதனையே மிகும்.

ஆங்கு, அந்த இணைப்பிலும் உறவிலும், குறிக்கோள் வேட்கை இல்லை. செயல் பற்றிய எண்ணமே இல்லை. பெரும்பாலும் வயிற்றுப் பிழைப்பைக் குறியாக வைத்தே நடைபெறுகின்றன. ஒரு பகுதி செல்வாக்குப் பெறும் நோக்கத்துடன் நடைபெறுகிறது. பிறிதொரு பகுதி யாதும் குறியற்ற இன்பப் பொழுது போக்காக அமைந்துவிடுகிறது. இந்த அடிப்படைகளில் ஏற்படும் உறவுகளினாலோ, நட்புகளினாலோ யாதொரு பயனுமில்லை. இத்தகைய நட்பு — காதல் உறவில் வீணாகும். காலமும் பொருளும், வெற்றடுப்பில் விறகெரித்தது போலாகும். அப்படியெரித்தாலும் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அணைத்தால் கரியாவது கிடைக்கும். இந்த உறவில் எதுவுமில்லை. இங்ஙனம் வீணாகும் உறவில் கூடி வாழ்வோரை வீடுகள்தோறும் பார்க்கிறோம்; மடங்கள்தோறும் பார்க்கிறோம்; தெருக்கோடிகளில் பார்க்கிறோம்; திண்ணைகளில் பார்க்கிறோம்; மன்ற மனைகளில் பார்க்கிறோம்; எங்கெங்கோ பார்க்கிறோம்!

இன்று எந்த ஒருவனும் தனித்திருப்பதில்லை. இந்த உயரிய பேராற்றலை மாந்தன் இழந்து எத்தனையோ நாளாயின. கூடிக் கூடிக் குலவுகின்றார்கள்; குழைகிறார்கள்; சிரித்துப் பேசுகிறார்கள்; என்னென்னவோ வேலை செய்வது போலக் கைகளும் வேலை செய்கின்றன. ஆனால் விளைந்த பயனோ, அம்மம்ம! நம்மைச் சூழ்ந்துள்ள வறுமையேயாம். வளத்தில் மட்டும் வறுமையன்று. அன்பிலும் வறுமை ஏற்பட்டிருக்கிறது! ஆதலாலன்றோ பலநாள் பழகிய பின்பும் பகைமை கால் கொள்கிறது; வஞ்சினம் மேலிடுகிறது; வாழ்க்கை சூறையாடப்படுகிறது. இத்தகு இயல்புகள் நிறைந்த மாந்தர் வாழ்க்கை — இல்லை! இல்லை! விலங்கு வாழ்க்கை மன்னிக்க முடியாத ஒன்று.

இப்படியெல்லாம் அழிவதற்கு எல்லோரும் செய்யத் தெரியாதவர்களா? அல்லது செய்யத்தான் முடியாதவர்களா? மக்களால் முடியாததொன்றும் உண்டோ?

மாந்தன் வளர்ந்தால் மாதேவனும் மடிதற்று முன்வந்து ஏவல் கேட்கிறான். இல்லத்தின் முன்பு எளிய பணியாளனாக நிற்கிறான். மாந்தனால் முடியும். நம்முடைய நண்பனாலேயே முடியும்; நம்முடைய அலுவலராலேயே முடியும்; நம்முடைய் உயிர்த் துணைகளாலேயே முடியும்; இது முக்காலும் உண்மை. ஆனால், அவர்கள் மனம் வைத்துச் செய்தால் தானே! அவர்களுக்குத் தான் செய்வதற்கு நோக்க மில்லையே! ஆதலால், என்னால் முடியுமா என்று வினாவு கிறார்கள்; முன் பட்டறிவு வேண்டாமா என்கிறார்கள்; வேலை அதிகம் என்று சொல்கிறார்கள்; சந்தர்ப்பம் கிடைக்க வில்லை என்கிறார்கள்; காலம் ஒத்துவரவில்லை என்கி றார்கள்; வீட்டில் இடர்ப்பாடாக இருக்கிறது என்கிறார்கள்; இடுக்கண் நீங்கி மன அமைதியாக இருந்தால் தானே வேலை பார்க்கலாம் என்கிறார்கள்; மனநிறைவு என்ற தேவதையே, உழைப்பாளரின் உளவழிபாட்டுத் தேவதை என்பதை அறியாமல், "ஒரு கை தட்டினால் ஒலியெழுப்புமோ? இரண்டு கைகளும் தட்டவேண்டாமா?" என்கிறார்கள்; முடிந்த வரையில் செய்திருக்கிறோம் என்கிறார்கள்; நம் முயற்சியில் இவ்வளவுதான் முடிந்தது என்கிறார்கள்; நம் முயற்சியில் இவ்வளவுதான் முடியும். இதற்கு மேல் முடியாது என்கிறார்கள்; தவறிப்போய்விட்டது என்கிறார்கள்; மறந்து போய்விட்டது என்கிறார்கள்; செய்யக்கூடாதென்றோ எண்ணுகிறோம் என்கிறார்கள்; உயிர் மேல் உயிர் வைத்திருப் பதாகக் கசக்கியெடுக்கும் கண்ணீரில் காட்டுகிறார்கள்; பெரிய கும்பிடு போடுகிறார்கள்; செயலாற்ற மாட்டாத சவலை வாழ்க்கை வாழ்வோர் கையாளும் முறைகளை முன்னே கண்டோம்!

மேலே கூறிய இயல்புகளுடையவர்களின் நட்பைத் திருவள்ளுவர், தீ நட்பு என்றே கூறுகிறார்.

> "ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
> சொல்லாடார் சோர விடல்" (818)

என்பது குறள். திருவள்ளுவர் தெளிவாகத் தொடங்குகின்றார். "ஒல்லும் கருமம்" என்று குறிப்பிடுகிறார். அதாவது அவர்கள் செய்து முடிக்கக்கூடிய கருமம் என்றே கூறுகிறார்; ஆனால் அவர்களுக்கோ மனமில்லை. தம் வலிமையை எளிமையாக்குகிறார். ஊதியம், பெருமை, பரிசு ஆகியன பெறுங்காலத்தில் தம்மை உயர்வுடையோ ராக்கிக் காட்ட முயலுபவர் கருமத்தின் முன்னே அதைச் செய்ய விருப்பமின்றி — கருமத்தைச் செய்யாது — சோம்பலைச் செய்தலினாலே அந்தச் சூழ்நிலையிலும் தன்னுடைய பொய்ப் பெருமையை வீழாது காக்க விரும்பிக் கருமத்தைக் கடுமையானதாக்குகிறார். எளிதில் முடியக்கூடிய ஒன்றை — முடியக்கூடாத ஒரு பெரிய காரியமாக முயன்று ஆக்குகிறார். அற்பக் கடமைகள் மலையென ஆக்கப்படுகின்றன. மலையனைய மாந்தன் அற்பமாகின்றான். கேட்பவர் மனங் குழம்பச் சிக்கல் இல்லாத கருமத்தைச் சிக்கலுடையதாக்கி "இது என்றும் . அது என்றும்" போட்டு உழப்பி, மயக்கமடையச் செய்கின்றனர். இத்தகையோர் நட்பைப் பெறற்க! அவரிடம் அத்தவறுகள் குறித்துப் பேசவேண்டா என்று ஆணையிடுகிறார் வள்ளுவர். ஏனெனில் எத்தனை தடவைதான் அறியச் சொன்னாலும், அவர்கள் அதுபோது அறிந்து கொண்டதுபோலத் தோன்றினும் பின்னும் அதை மறந்து தம் இயல்பிலேயே செல்வர். நட்பாய் ஒழுகுவர். ஆயினும் நட்பாய் விளங்க மாட்டார்கள். எடுத்து சொல்லித் திருத்த முயற்சி செய்வதன் மூலம் நாம் அந்த நட்பை இழக்க முடியாத ஒரு இக்கட்டான நிலைக்கு ஆளாகிறோம். காரணம், பாசம் வேர்விடும். பயனற்ற நட்பில் — உறவில் பாசம் வேர்விடுதல் நம்முடைய ஆற்றலையும் ஆக்கத்தையும் கெடுக்கும். ஆதலால், அத்தகையோர் நட்பை — உறவை ஒரு காலைக்கு ஒரு காலையாக ஓயவிட்டுப் பைய விலகிக் கொள்க! என்று கற்றுக் கொடுக்கிறார். நட்பு — உறவு என்ற ஒன்று உடனடியாக முறிதல் இயல்பன்றானமையின்

'சோரவிடுக' என்கிறார். பழகிய நட்பை — உறவை விலக்கவும் பலநாள் பிடிக்கும் என்பது பெறப்படுகிறது. இங்ஙனம் இந்தத் தெளிந்த வாழ்வியலை வடித்துத் தரும் வள்ளுவரின் பெருமை நினைந்து இன்புறத் தக்கது.

## நிலமும் உரிமையும்

மனித சமுதாய அமைப்பில் நிலவுடைமைச் சமுதாய அமைப்புத் தோன்றி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாயிற்று. வேறு உடைமைகள் உணர்வும், அறிவும் தோன்றுதற்கு முன்னே தோன்றியது நிலவுடைமைச் சமுதாய அமைப்பு. தொடக்கத்தில் உழைப்பின் வழியாகவே உரிமையும் கிடைத்திருக்கக்கூடும். காலப்போக்கில் உரிமையும், உழைப்பும் வேறுபட்டன ஆயின. உழைப்பாரிடத்தில் உரிமை யிருப்பதில்லை — உரிமையுடையார் உழைப்பதில்லை என்ற நிலைமை தோன்றிற்று. திருவள்ளுவர் காலத்தில் உரிமையும் உழைப்பும் பிரிக்கப்பெறவில்லை. உழைப்பாளரிடத்திலேயே நிலத்தின் உரிமையும் இருந்திருக்கிறது. நிலத்திற்கு உரிமை யுடையவனைக் "கிழவன்" என்று திருவள்ளுவர் குறிப்பிடு கின்றார். உழவு என்ற அதிகாரத்தில் உழவனைப் பற்றிப் பேசுகிறார். உழவனே உழுதுண்டு வாழ்கிறான். மற்றவர்கள் தொழுது பின் செல்கிறார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார். உழாதவன், அதாவது உழைக்காதவன் உண்பதற்கும் உரிமை யில்லாதவன். ஆயினும் தொழுது இரந்து செல்வதால் உழைக் காதவனுக்கும் பிழைப்பு நடக்கிறது.

வள்ளுவர், உழவனை — உழைத்து உற்பத்தி செய்ப வனைப் புகழ்ந்து பாராட்டுகின்றார். உழைக்காதவனை எள்ளி நகையாடுகிறார். "நிலமென்னும் நல்லாள் நகும்" என்று கூறி நகைக்கின்றார். இங்ஙனம், உழுபவனை உயர்த்திய திருவள்ளுவர், அவனையே நிலத்திற்குரிய கிழவனாகக் கருதி

யிருக்க வேண்டும். நிலவுடைமைச் சமுதாயமென்றும், உழவர் சமுதாயமென்றும் இரு வேறு பிரிவு திருவள்ளுவர் காலத்தி லிருக்க நியாயமில்லை. கணவனுக்கும் மனைவிக்குமுள்ள உரிமையைப் போன்றதோர் உரிமையை நிலத்திற்கும் கிழவனுக்கும் திருவள்ளுவர் கற்பிக்கின்றார். கணவனுக்கு மனைவி உரிமையுடையவள். அவனே, அவளை முழுதுறப் பயன்படுத்துதற்கு உடையவன். அதிலும் தமிழக மரபில் ஒருவர் மனைவியைப் பிறிதோர் ஆடவர் நெஞ்சினால் நினைத்தற்கும் உரிமையுடையவரல்லர். "மறந்தும் பிறர் நெஞ்சு புகாள்" என்று மணிமேகலை கூறும். "பிறர்மனை நயவாமை" என்றே ஓரதிகாரம் வைத்தார் வள்ளுவர் பெருமான். நிலத்திற்கும், அதன் உடைமையாளனுக்கும் உள்ள உரிமையைப் போன்றது என்று கூறுவதால் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பு நில உடைமைக்கும், உழைப்புக்கும் இடையில் மனிதர்கள் இல்லையென்பதும் திருவள்ளுவர் காலத்தில் பைய நில உடைமைச் சமுதாயம் தலைகாட்டியிருக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

நிலத்திற்கு உரியவன் நிலத்திற்குப் போகாதிருப்பா னாகில் வீட்டிற்கு வராத கணவனிடம் மனைவி கோபித்துக் கொள்வதைப்போல நிலமும் புலந்து விளையாது என்று வள்ளுவர் பேசுகிறார். "செல்லான் கிழவன் இருப்பின்" என்பது வள்ளுவர் வாக்கு. "செல்லான்" "இருப்பின்" என்ற சொற்கள் அவர் காலத்தில் கால்கொள்ளும் நில உடைமைச் சமுதாயத்தைத் தெளிவாக விளக்குகின்றன. நிலத்திற்கு உரிமையுடையவன் நிலத்தை நாள்தோறும் பேணுகின்ற வனாக இருக்கவேண்டும். இந்திய நாட்டின் வேளாண்மை குன்றி, உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கே காரணம், நிலவுடைமைச் சமுதாய அமைப்பேயாகும். உடைமை யாளன் எங்கோ வாழ்கிறான். உழைப்பாளன் கையில் காசில்லை. அவன் பரம்பரை ஏழை. செல்வத்தில் மட்டு மல்ல, சிந்தனையிலும்கூட. ஆதலால், தரமான வேளாண்மை

யில்லை; பொருள்வளம் குறைந்தது. நாள்தோறும் கணவனை இல்லில் கண்டு மகிழாத மனைவி, துன்புறுதல் இயற்கை. அவளைப் பேணுவார் யார்? அவரவர்களையே பேணிக் கொள்ளுதல் அண்மைக் காலத்து வழக்கு; சமுதாயச் சீர்கேட்டில் தோன்றிய வழக்கு. ஒருவர் பிறிதொருவரைப் பேணுதலே பெருமைக்குரியது. கணவன் மனைவியைப் பேணவும்; மனைவி, கணவனைப் பேணவும் கடமையை மேற்கொள்ளுகின்றனர். அள்ளி உண்பதைவிட ஊட்டி உண்பது சுவை. எடுத்து உண்பதைவிடக் கொடுத்து உண்பது சுவை. சிரித்து மகிழ்வதைவிடச் சிரிக்கக்கண்டு மகிழ்வது சிறப்பு. தன்னையே கண்ணாடியில் கண்டு மகிழ்வதைவிடத் தன்னைக் கண்டு மகிழும் பிறிதோ ருயிர் நிழலாடியைக் கண்டு மகிழ்தல் மகிழ்ச்சியு ளெல்லாம் தலை.

அதனாலன்றோ தமிழிலக்கிய மரபில் காதலர்ப் பிரிவு பேரிலக்கியங்களாக வடிவம் பெற்றன. "செல்லாமை உண்டேல் எனக்குரை" என்பது வள்ளுவர் கால வழக்கம். இன்றோ வையகத்தில் வழியனுப்பும் விழா நடத்துகிறார்கள்.

நில உடைமையும், உழைப்பும் பிரிக்கமுடியாத ஒன்று. தமிழ்ப் பண்பில் கணவன் மனைவி உறவு, மிகப் பழைய காலத்திலே தூய்மையானதாகக் கருதப் பெற்றது. ஒரு பிறப்பில் மட்டும் கணவன் மனைவி அல்லர். ஏழு பிறப்பிலும் கணவன் மனைவி என்பது தமிழர் கருத்து. ஒருவனுக்கே ஒருத்தி உரிமையுடையவள். அவனுக்கும் அவளுக்குமுள்ள உறவே கற்பு. அவள் கற்புடையவளாகவே இருந்தாள். இந்த அடிப்படையிலேயே இளங்கோவும் "கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி" என்று பாடுகிறார்.

தமிழ் மரபில் ஒருத்தி பலரை மணத்தலோ, ஒருத்தி பலருக்கு உரிமையாக இருத்தலோ அறவே இல்லை. பரத்தையர்கூட ஒருவனிடத்திலே இருந்தனர். மனைவியாக இல்லாத குறையே தவிர, பரத்தையரும் ஒருவனிடத்திலேயே

இருந்து வாழ்ந்தார்கள். பொதுமகளிர் வழக்கு மிகப் பிற்காலத்திலேயே தமிழ்ச் சமுதாயத்தில் கால்கொண்டது. ஒருத்தி பலருக்குப் பெண்டாக இருக்கலாம் என்ற இதிகாச மரபு தமிழகத்திற்கு வந்த பிறகே பொதுமகளிர் தோன்றியிருக்கவேண்டும். அதற்குச் சான்று, பரத்தையர் குலத்தைச் சார்ந்த மாதவி, சமூகப் பழக்கத்தால் மனைவியாக வாழவில்லையே தவிர, ஒரு சிறந்த மனைவியாகவே கடமையைச் செய்திருக்கிறாள். அந்த வகையில் கண்ணகி யையும் மாதவி விஞ்சியிருக்கிறாள். தென்றல் போலத் திரிந்த கோவலனைத் தன் வழிப்படுத்தியிருக்கிறாள். அதாவது தன்னைத் தவிர, வேறொரு பெண்ணை நாடச் செய்யாது செய்திருக்கிறாள். மாதவியைப் பிரிந்தவுடனும், வேறொரு பரத்தையை நாடாமல் கண்ணகியை நாடிவரச் செய்திருக் கிறாள். இந்த இடைக் காலத்தில் கோவலனை, மாதவி செழுமையுற வளர்த்திருக்கிறாள் என்பதை யார் மறுக்க முடியும்?

ஆதலால், கணவன் மனைவி உறவு பெண்ணைப் பொறுத்த வரையில் ஒருவனேதான். அதனாலேயே அவனைப் பிரிந்துழி பரிவும் புலம்பலும் ஏற்படுகிறது. பெண்ணுக்கும் பலராக ஆகுமானால் பிரிவுமில்லை, பரிவு மில்லை. கணவனைப் பிரிந்த காரிகையின் பரிவு நிறைந்த புலம்பலை, ஒருவன் ஒருத்தி என்ற மரபு வழிப்பட்ட இராம காதையில் பார்க்க முடிகிறது. இராமனைப் பிரிந்த சீதையின் பிரிவுக்கு — வருத்தத்திற்கு இணையேது, ஈடேது? அத்தகைய ஒரு பரிவையும் வருத்தத்தையும் நாம் பாஞ்சாலியிடத்துப் பார்க்க முடியவில்லை.

நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் நிலத்திற்குச் செல்லாது போனால் — கடமையின் காரணமாக வெளியிற் சென்ற கணவன் உரியபொழுது, வீட்டிற்கு வராது போனால் — கணவனிடத்தில் மனைவி புலத்தலைப் போல நிலமகளும் ஊடிப் பிணக்குக் கொள்ளும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

ஆதலால் நிலத்திற்கு நாள்தோறும் வருகின்றவனே — வந்து உழைப்பவனே நிலத்திற்கு உரிமையுடையவனாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார் என்பது தெளிவாகப் பெறப்படுகிறது. ஆக உழைப்பவர்களிடத்திலேயே உற்பத்தி கேந்திரங்கள் இருக்கவேண்டுமென்ற இன்றைய சமுதாயத்தின் முற்போக்குக் கருத்து திருவள்ளுவரால் அன்றே ஏற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது. இந்தத் திருக்குறள் சிறந்த எடுத்துக்காட்டு.

> "செல்லான் கிழவ னிருப்பின் நிலம்புலத்து
> இல்லாளின் ஊடி விடும்" (1039)

என்பது குறள்.

## அறம்சாரா வறுமைக்கு ஆதரவில்லை!

வறுமை மிகமிகக் கொடுமையானது. "பொன் வேண்டேன் பொருள் வேண்டேன்" என்ற மாணிக்கவாசகரும்கூட நல்குரவைத் "தொல்விடம்" என்று வருணித்தார். விடத்திலும் கொடியது வறுமை. வறுமை, நலத்தினைக் கெடுக்கும்; அறிவைப் பேதலிக்கச் செய்யும்; ஆற்றலைக் கெடுக்கும்; ஆள்வினையின் திறனைக் குறைக்கும்; மதிப்பைக் கெடுக்கும்; அவமதிப்பைத் தரும்; உறவைக் கெடுத்துப் பகையை வளர்க்கும். ஆதலால், வறுமை எந்தவகையிலும் கொடியது. அதனை எதிர்த்து முற்றாக ஒழிப்பது மனித குலத்திற்கு நல்லது.

ஆனால், வறுமைக்கு மாற்று, இரத்தலாக முடியாது. வறுமைக்கு மாற்று வளமேயாகும். இரத்தலின் மூலம் வறுமை தற்காலிகமாகவே மறைகிறது. அஃதொரு நிரந்தரமான மாற்றாக இருக்க முடியாது. வறுமைக்கு மாற்று, உழைப்பேயாம். உழைத்துச் செல்வம் பெருக்கினால் மட்டும் வறுமை போய்விடாது. திட்டமிட்ட வாழ்க்கை வேண்டும். பொருட்

செல்வத்தைப் போற்றவேண்டும். தேவைப் பட்டியல் பெருகினாலும் வறுமை வந்தடையும். ஊரைப் பார்த்தோ, நாட்டைப் பார்த்தோ நம்முடைய தேவையை உறுதி செய்துகொள்ள முடியாது. நம்முடைய தேவையை நிர்ணயிப்பதற்கு நம்முடைய உழைப்புத் திறனும், அவ்வழி படைக்கும் படைப்புமே மையமாக இருக்கவேண்டும்.

இரந்தோ, கையூட்டு வாங்கியோ, கடன் பெற்றோ அரிசிச் சோறு சாப்பிடுவதிலும் உழைத்து கேழ்வரகுக் களி சாப்பிடுவது பாவமாகாது. இயற்கையின் நியதி எல்லாத் தரப்பு மனிதர்களுக்கும் இடந் தருவதாகவே அமைந்திருக் கிறது. அரிசிச் சோற்றுக்குக் கேழ்வரகு உணவு ஊட்டச் சத்தில் இம்மியும் குறைந்ததன்று. இருக்கும் பிரச்சினை யெல்லாம் கௌரவம்தான். 'காபிக்கு' சோற்று நீரோ, நீர்மோரோ பயன் தருவதில் இம்மியும் குறைந்ததல்ல. ஆனால், இன்றைய சமூகத்தில் 'காபி' கௌரவப் பொருளாகி விட்டது. செல்வப் பற்றாக்குறை இருக்கும் நாட்டில், இத்தகைய மனப் போக்குகள் இருக்கும் வரையில் உடைமை இல்லாதவனுக்கும் வாழ்க்கையில்லை. உடைமையான வனுக்கும் வாழ்க்கையில்லை.

உழைக்காத — திட்டமிட்டு வாழாத சிலருக்கு உறவு — நட்பு — மரியாதை — தயவு — தாட்சண்யம் என்ற பெயரால் உடைமைக்காரர்கள் மூலம் வழங்கப்பெற்ற பொருள், மீண்டும் பொருளுற்பத்திக்குப் பயன்படாமையின் காரணமாக, உடைமையுடையவர்களையும் காலப்போக்கில் வறுமை வந்து வாட்டுகிறது. அதற்குப் பயந்து, கொடுக்கும் மனமுடையவர்கள்கூடக் காலப்போக்கில் மாறிவிடு கிறார்கள். அவர்களுக்கு அவர்களையே காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சி வந்துவிடுகிறது.

உடையவர்கள், இல்லாதவர்களுக்கு உழைத்துத் தொழில் செய்து முன்னேறுவதற்குரிய வாய்ப்புக்களைத்தான்

வழங்கலாம். முதலுதவியாகச் செல்வ உற்பத்திக்குப் பயன் படக்கூடிய களத்தினையும் கருவிகளையும் வழங்கலாம். சமூகத்தில், உடையவனுக்குரிய கடமை அது. வறியவன் தான் பெற்ற களத்தினையும் கருவியையும் முறையாகப் பயன் படுத்தித் திட்டமிட்டு உழைத்து உற்பத்தியைப் பெருக்கி நெறிபட வாழ்ந்து தன்னுடைய செல்வத் தகுதியை வளர்த்துப் பேணிக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இதுவே வாழ்க்கை முறை.

இப்படி வாழும் ஒருவருக்கு எதிர்பாராத செலவுகள் வந்தாலும் சமூகம் பொதுவாகவும், உடையவர்கள் தனிப் பட்ட முறையிலும் உதவி செய்து ஒத்துழைக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலேயே தமிழர் இல்லங்களில் நிகழும் திருமணங்கள் — மரணங்களில் 'மொய்' எழுதுதல் என்ற வழக்கம் ஏற்பட்டது. ஒருவன் செல்வமுடையவனாக இருப்பதை வறுமையுடையவர்கள் கண்டு, அந்தச் செல்வம் சேர்ந்ததற்குரிய நெறி முறைகளில் நியாயமானவைகளை, தான் ஏற்று நடவாமல் அழுக்காறு கொள்வதனால் மட்டும் பயன் விளையாது. அல்லது கொடுத் தால் என்ன, குறைந்தா போகிறது? என்று கருதுவதனாலோ கேட்பதனாலோ வறுமை தொலைந்துவிடாது.

செல்வம் என்பது உழைப்பினால் மட்டுமே உருவாவது. செல்வ உற்பத்திக்குப் பயன்படக்கூடிய களமும் கருவியும் இன்றைய சமூக அமைப்பின் காரணமாகச் சிலருக்கு இல்லா மலிருக்கலாம். ஆனால் சமூக உறவுகள் இன்னும் முற்றாக அழிந்துவிடவில்லை. களமும், கருவியும் உடையவர்களோடு அவை இல்லாதவர்கள் பூரணமாகத் தம்முடைய உழைப் பினை நல்கிச் செல்வத்தை உற்பத்தி செய்து, நியாயமான முறையில் உடையோன் — இல்லோன் என்ற மன வேறு பாடின்றித் தம்முட் பகிர்ந்து வாழ்வது அறவொழுக்கமாகும். இத்தகைய மனப்போக்கும் பரவலாக வளரவில்லை. செல்வ உற்பத்தியில் கவனம் செலுத்தாமல் உடையோனுக்கும்

இல்லோனுக்கும் இடையில் இன்று நிகழ்வது ஒருவரை யொருவர் எப்படி ஏமாற்றிக்கொள்வது என்பதேயாம். இதனால் என்ன பயன் விளைய முடியும்?

இன்று, பொதுப்படையாக உடையோனிடத்தி லிருக்கும் அளவுக்குச் சிக்கன மனப்பான்மை இல்லாதவர் களிடத்தில் இல்லை. உதாரணம், திரைப்படக் கொட்டகை களில்கூட மூன்றாம் வகுப்பே நிரம்பி வழிகிறது. இங்ஙனம் வரவுக்கு ஏற்பச் செலவு செய்யும் மனமில்லாதவர்க்கும் — செல்வத்தைப் போற்றி வாழாதார்க்கும் உதவி செய்தும் உயர்த்திவிட முடியாது. அவர்கள், பெறும் உதவியின் எல்லை யையும்கூடத் தம்முடைய தேவைக்கு ஏற்ப நீட்டி, பெற்றது கொண்டு அமைதி கொள்ளமாட்டார்கள். கொடுத்த வனுக்கும், கொடுத்து உயர்த்த முடிந்ததே என்ற மன நிறைவு இருக்காது. பெற்றவர்களுக்கும் எவ்வளவு பெற்றிருந்தாலும் பெற்றோம் என்ற மனநிறைவு இருக்காது. இத்தகைய மனப் போக்குகளின் காரணமாக வறுமை மாறாமலே நம்முடைய நாட்டில் நிரந்தரமாக இருந்து வருகிறது. இத்தகைய இழி மனப்போக்கு இருக்கும்பொழுது பொதுவுடைமைச் சமுதாயத்தைத் தோற்றுவித்தாலும் "உழைக்காது போனால் தண்டனையுண்டு" என்ற நியதியை வலியுறுத்தாவிடில் பயனில்லை. நம்முடைய நாட்டில் கூட்டுறவு — பொதுத் துறைத் தொழில்கள் வளமாக அமையாததோடன்றி ஊழலும் பெருகியிருப்பது இதற்கோர் எடுத்துக்காட்டு.

திருவள்ளுவர் சமுதாய ஒப்புரவு வாழ்க்கையை விரும்புவர். வறுமையை எதிர்ப்பவர். அதனாலன்றோ,

> *"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
> *கெடுக வுலகியற்றி யான்"* (1062)

என்று முழங்கினார். ஆயினும் ஒரு சிலருடைய வறுமையைக் கண்டு, திருவள்ளுவர் மனம் கொதிப்படைய வில்லை! அவர்களை அந்நியர்களாகவே பார்க்கச் சொல்லுகிறார்.

நம்மை மட்டுமல்ல. பெற்ற தாயைக்கூடத் தான் ஈன்ற மகனை அந்நியனைப்போலப் பார்க்கச் சொல்லுகிறார். இல்லை! பார்ப்பள் என்றே முடிவாகக் கூறுகிறார். “அறம்சாரா நல்குரவாளனை, ஈன்ற தாயும் பிறன் போலப் பார்ப்பாள்” என்பது வள்ளுவர் கூற்று.

அறம் என்ற சொல், ஆழமும் அகலமும் உடையது. வருவாய்த்துறையிலும், அறநெறிகள் உண்டு; செலவுத் துறையிலும் அறநெறிகள் உண்டு. முறையான உழைப்பின்றிச் சுரண்டுதல் மூலம் வரும் வருவாயும் இன்றில்லையானாலும், என்றோ ஒரு காலத்தில் வறுமைக்கே ஆளாக்கும். அதாவது சமூகத்தில் ஏமாற்றப்படுவோர்கள், விழித்துக் கொண்டவுடன் வருவாய் தடைப்படும்; வறுமை வந்தடையும். ஆதலால், உடற்சக்திக்கேற்றவாறு உழைத்தும் தம்முடைய நியாயமான பங்கைப் பெறுதல் அறவழிப்பட்ட வருவாயாகும். செலவை நிர்ணயிப்பதில் ஆசைத் தேவதையை அளவு கோலாகக் கொள்ளாமல் தன்னுடைய உழைக்கும் திறனையும் வருவாயையுமே மையமாகக்கொள்ள வேண்டும். அது மட்டுமின்றி ஒரு காசில் நடைபெறக் கூடிய காரியத்திற்குக் கூடுதலாகக் கொஞ்சம் செலவழித்தாலுங்கூட அஃது அறத்திற்கு மாறுபட்டது. எவ்வளவு குறைந்த தேவையில் வாழ முடியுமோ, அவ்வளவு குறைந்த தேவையில் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

அதுவே அறம்சார்ந்த வாழ்க்கை. இயற்கையாலோ, தெய்விகத்தாலோ, சமூக அநீதியாலோ வறுமை வந்திடின், அந்த வறுமையைத் துடைப்பது சமூகத்தின் பொறுப்பு. ஆனால், அறம்சாராத வாழ்க்கையின் மூலம் வறுமை வரின், ஈன்ற தாய்க்கும்கூடப் பொறுப்புக்களில்லை. அந்நியனைப் போலப் பாராது ஒதுக்கிவிடுதலே இயற்கையென்று வள்ளுவம் கூறுகிறது.

*"அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்"* (1047)

என்பது குறள்.

## கயமையின் காழ்ப்பு!

மனிதன் ஒரு விசித்திரமான பிறவி. மனிதப் பிறவி மற்ற உயிர்ப்பிறப்புக்களைவிட உயரியது; அறிவொடு தொடர் புடையது; ஆள் வினையுடையது; நெறிப்படுத்தப் பெறுவது. ஆயினும், மனிதனின் விழுமிய கருவிகளுள் தலையாயதாகிய உள்ளம் ஒழுங்காக இருந்தால் தான் எதுவும் சீராக அமையும். உள்ளமோ ஒரு தன்மையுடையதல்ல. ஆயினும் ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் மனிதன் செய்து கொள்ளக்கூடிய அன்றாடக் கடமை. அஃது ஒரு பொழுது இருந்ததைப் போல பிறிதொரு பொழுது இருப்பதில்லை. உள்ளத்திற்குத் தற் சார்பும் தன் முனைப்பும் இயற்கையிலே உண்டு. அதனை மாற்றிச் செழுமைப்படுத்திக் கொள்வது மனிதனின் கடமை. ஒவ்வொரு மனிதனின் உள்ளமும் அவனையே முதன்மைப் படுத்துகிறது. அதனாலேயே அழுக்காறும் ஆணவமும் தோன்றுகின்றன. ஒரு மனிதன் தனது உள்ளம் தன்னை முதன்மைப் படுத்துவது தனக்கு நல்லதல்ல என்பதை முதலில் உணர வேண்டும். அதற்கு மாறாகத் தமது உள்ளத்தை, மற்றவர்களை முதன்மைப் படுத்தப் பழக்க வேண்டும். இங்ஙனம் பழக்கிக் கொள்ப வர்கள் நல்லவர்களாக வாழ்வர்; அவர்களும் வாழ்வர்; மற்றவர்களுக்கும் வாழ்வு அளிப்பர். அங்ஙனமின்றித் தன்னையே மையமாகக் கொண்டு எண்ணி வாழ்பவர்கள் தங்களையும் கெடுத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களுக்கும் கேடு செய்கிறார்கள். இவர்களே கீழ்மக்கள்.

கீழ்மக்கள் மனித உருவில் நடமாடினாலும் அவர்கள் மனிதர்களல்ல. அவர்களுடைய பிறவிக்குணம் ஆங்காரமும்

தி-24.

அழுக்காறுமாகும். அவர்கள் மற்றவர்கள் மகிழ்வுடன் வாழ்தலைக் காணப் பொறார். மற்றவர் புகழினைக் கேட்கவும் பொறார். மற்றவர்கள் இனிது உண்டு, உடுத்து வாழ்தலைப் பார்த்து வெய்துயிர்த்து எரிச்சலடைவர். குற்ற மிலராகிக் குடிசெய்து வாழ்ந்தாலும் குற்றம் கண்டுபிடிப்பர். குணம் மறைத்துக் குற்றம் தூற்றுவர். இத்தகையோர் சமுதா யத்தின் எலும்புருக்கி நோயாவர். இவர்களிடத்தில் கொஞ் சமும் தயவு, தாட்சண்யம் காட்டக்கூடாது.

இத்தகைய மனிதர்கள் உழைப்பொடு தொடர்புடைய எந்த வேலையும் செய்யார். ஆங்காங்கிருந்து வருமொழி பேசி அரட்டையடித்து அயர்தலே இவர்கள் வேலை. இவர்கள் மற்றவர்கள் புகழுக்குக் களங்கம் படைப்பர். மற்றவர்கள் வாழ்விலும் மாசுகளைக் கற்பனை செய்து ஏற்றுவர். இத்தகை யோர்களாலேயே சமுதாயம் அடிக்கடி அலைப்புறுகிறது. இத்தகைய கீழ்மக்கள் எங்கு எந்தக் கோலத்தில் உலவினாலும் கண்ணோட்டமின்றிக் கடிந்து ஒதுக்குதல் கடமை.

"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்" (1079)

என்பது குறள்.

திருவள்ளுவர் இங்கு உடுப்பதையும் உண்பதையும் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். செல்வச் செழிப்பைக் கூடக் குறிப்பிடவில்லை. மேம்பாடான வாழ்க்கையைப் பற்றிக் கூடக் குறிப்பிடவில்லை. மிகச் சாதாரணமான உண்ண லையும் உடுத்தலையும் கண்டாலே காழ்ப்புற்றுக் குற்றம் காண்பர். திருவள்ளுவர் காலத்தில் உண்ணலும் உடுத்தலுமே ஒரு பெரிய கேள்விக் குறியாக இருந்திருக்கும்போல் தெரிகிறது. இன்றோ, உண்ணல் — உடுத்தல் மட்டுமல்ல, பதவி — புகழ் முதலியனவும் சேர்ந்திருக்கின்றன என்பது அறியத்தக்கது.

# தம் இல் இருந்துண்ணும் தனி இன்பம்!

உயிர்தங்கி நின்றுலவும் உடலியல் வாழ்க்கைக்கு உழைப்பு அணிகலனாகும்; அழகாகும். உழைப்பே மனிதனின் இயற்கைக் குணம். உழைத்து உலகிடைச் செல்வத்தைப் பெருக்கிப் பலருக்கு வழங்கிப் பயன்பட வாழ்தலும், தாம் துய்த்து வாழ்தலும் இன்றியமையாத குணமாகும். உழைத்து வாழும் இயல்புடைய சமுதாயத்தில் பரம்பரைச் சொத்துரிமை மதிப்பினைத் தராது. அதுமட்டு மின்றிச் சுரண்டி வாழும் தீய இயல்புடையவர்களும் இல்லாதொழிவார்கள். பரம்பரைச் சொத்துரிமை மனிதனின் இயல்பாய அறிவையும் ஊக்கத்தையும் உழைப்பாற்றலையும் காலத்திற்குக் காலம் கெடுத்து மனித சமுதாயத்திற்குத் தீங்கை விளைவிக்கிறது. சுரண்டி வாழ்பவனோ அறிவு, ஊக்கம், உழைப்பு ஆகியவற்றை இழப்பதோடுமட்டுமின்றி ஒழுக்கக் கேடுகளுக்கும் ஆளாகிறான்; மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கும் இயல்புடையவனாகிவிடுகிறான். காலப்போக்கில் இந்த இரண்டு வர்க்கத்தினரும் தம்மை வறுமையில் ஆழ்த்திக் கொள்வதோடன்றி வற்றாத வளங்கொழிக்கக்கூடிய நாட்டையும் வறிதாக்கிவிடுவர். அதனாலன்றோ, "வினையே ஆடவர்க் குயிரே" என்று குறுந்தொகை பேசிற்று. ஆடவன், ஆள்வினையுடையவன் ஆக்கப்பாடு உடைய வாழ்வுக் குரியவன். எவன் ஒருவனது வாழ்க்கையில் ஆள்வினைத் திறன் பெருகி வளர்ந்திருக்கிறதோ அவனே ஆடவன். ஆனால் இன்றோ, ஆள்வினையின்றி ஆயிழையைத் தேடி யலைந்து மக்கட்பெருக்கம் செய்து வறுமையுலகை வழங்கு வோரே ஆடவர் என்று பெயர் சொல்லித் திரிகின்றனர். ஐயகோ, கொடுமை!

தமிழின மரபில் பழங்காலத்தில் ஆடவன் ஒருவன் காதலியைப் பெறவேண்டுமென்றால் ஆள்வினைத் திறனையும், உழைப்பையும் விலையாகக் கொடுக்கவேண்டிய

திருந்தது. மிகப் பழங்காலத்தில் — இயற்கை உணவுகளை உண்டு வாழ்ந்த காலத்தில் துன்பம் தரும் வனவிலங்குகளை அழித்து வெற்றி கொள்ளுதல் விலையாகக் கருதப்பெற்றது. அப்பொழுதே, காதலிக்கு தான் அடித்துக்கொன்ற புலியின் பல்லை அணிகலனாக வழங்கிக் காதலியை அடையும் வழக்கம் ஏற்பட்டது. அந்தப் புலிப்பல் அணியும் வழக்கமே படிப்படியாகத் தேய்ந்து உருவம் மாறி இன்று தாலியாக இடம் பெற்றிருக்கிறது. தங்கம் யாருக்கோ சொந்தம்! பொற்கொல்லன் தாலி செய்கிறான்! புதுமணத் தம்பி தாராளமாக எடுத்துப்பூட்டி விடுகிறான்! அதற்கு அடுத்த கட்டத்தில் இயற்கையைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யும் தொழில் தோன்றி மனிதனிடத்தில் செய்தொழில் பெருகி வளர்ந்த பொழுது புலிப்பல்லுக்குப் பதில் காதலிக்குப் பொருள் வழங்கிக் காதலியை யடையும் வழக்கம் தோன்றிற்று. இந்த அடிப்படையிலேயே அகத்திணை இலக்கண இலக்கியங்களில் காதலியைக் காதலன் 'பொருள் வயிற்' பிரியும் துறை பேசப்படுகிறது. நெடுந்தொலைவிற் பிரிந்து சென்று பெரும்பொருள் ஈட்டிவந்து காதலிக்குத் தந்தே, காதலன் காதலியை அடைந்திருக்கிறான். ஆனால் இன்றோ, காதலன் தான் மணக்கப்போகும் பெண் வீட்டில் பொருள் கேட்டு வாங்கி பெண்ணைச் சார்ந்து வாழ்கிறான். இத்தகைய பேதைகளையும் பெருநிலம் தாங்குதல் பொறையுடைமை கருதிப்போலும்!

திருவள்ளுவர், காதல் வாழ்க்கையை அறநெறிப்படுத்தி அழகுற விளக்கியவர். காதலன் காதலியுடன் கூடி மகிழ்ந்து இன்புறுதலுக்கு வள்ளுவர் காட்டும் உவமை மிகமிக உயரியது. மனித சமுதாயத்தின் இன்பநுகர் உணர்ச்சியை எதிர்த்து அழிக்காமலும் ஒடுக்காமலும் அந்த இன்பத் துய்ப்பை அறவுணர்வின் பாற்பட்டதாகவும் சமுதாய நலத்தைப் பின்னணியாகக் கொண்டதாகவும் கொண்டு விளக்கும் திறனை என்னென்போம்!

மனிதன், எட்டடிக் குச்சு ஆனாலும் தானே முயன்று கட்டிய குடிசையில் வாழ்வதற்கு ஈடு ஏது? இணையேது? பலர், பரந்த இடத்தில் அடுக்கிய மாளிகையில் குடியிருக் கின்றனர். ஆனால் அஃது அவர்தம் சாதனையன்று, தன் உழைப்பின்றிப் பிறருழைப்பில் உருவாய உயரிய மாளிகையில் உலவி வாழ்வதிலும், தான் எழுப்பிய குடிசையில் வாழ்வது இன்பத்துள் இன்பமாகும். அடுத்து, தான் உழைத்து ஈட்டும் பொருளில் அறுசுவை உணவாக்கிப் பலருக்கு வழங்கி, அவர்கள் உண்ண மகிழ்ந்து தாம் உண்டு வாழ்தல் பெருமையுள் பெருமையாகும். இந்த இன்பம் காதலியின் பால்பெறும் இன்பத்தை நிகர்த்தது என்று இயைத்துக் காட்டுகிறார் வள்ளுவர். உடலுக்கு உழைப்பில் இன்பம்; உணர்வுக்கு ஒப்புரவில் இன்பம்; உயிருக்குக் காதலில் இன்பம். இம்மூன்றும் நிகழ நிழல்தந்து இன்பந்தந்து நிற்பது தன் குடிசை. இந்த இயைபுகளை எண்ணிப் பார்க்கும் பொழுது நெஞ்சம் உவகை கொள்கிறது. உடல், உழைப்பில் திளைத்து மகிழ்தலும்; உணர்வு ஒப்புரவில் கலந்து மகிழ்தலும்; உயிர், காதலில் கலந்து மகிழ்தலும் ஒரு சிறந்த தலைமகனின் சிறப்பு. இத்தகைய தலைசிறந்த ஆடவர் களாலேயே நிலவுலகம் செழிப்புறும்; துன்பம் தொலையும்; உறவு பெருகி வளரும்; காதலின்பம் விளையும். இதனை,

> "தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு" (1107)

என்ற திருக்குறளை நினைந்து இன்புறுக.

## அறிவின் இலக்கணம்!

திருவள்ளுவர் ஓர் இலக்கியப் படைப்பாளர் மட்டுமல்லர்; அறநூல் செய்த அறவோர் மட்டுமல்லர்; அவர் ஓர் அறிவுத் துறை அறிஞருமாவார். அவர் செய்த திருக்குறள் ஓர் உயிரியல் — அறிவியல் நூலாக விளங்குகிறது.

திருவள்ளுவர் ஒரு சிறந்த முற்போக்கு அறிஞர். இன்றைய உலகில், 'முற்போக்கு' 'பிற்போக்கு' என்ற வார்த்தைகள் சரளமாக அடிபடுகின்றன. காக்கை கறுப்பாகவும் இருக்க லாம் என்று கூறப்படுவதுகூட முற்போக்கு என்று பெயர் பெற்று விளங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால், திருவள்ளுவர் இந்த வகையினர் அல்லர். அவர் உண்மை யிலேயே ஒரு முற்போக்கு அணியைச் சார்ந்தவர். சமுதாயத்தில் பழைய பழக்க வழக்கங்களே சிறந்தவை என்று கண்மூடித் தனமாக நம்பும் மனப்போக்கு இன்னமும் இருந்துதான் வருகின்றது. நேற்றைய அறிவே, அறிவு என்றும், இன்றைய அறிவு பயனற்றது என்றும் கருதுபவர்கள் இன்றும் நம்மிடையில் பலரிருக்கின்றனர். முன்னோர் அறிவே, மூதறிவு என்றும், பின்னோர் பேதைகளென்றும் பேசுபவர்கள் சமுதாய அரங்குகளில் இல்லாமலா இருக்கிறார்கள்? ஆனால், நம்முடைய ஆன்றோர்கள் இங்ஙனம் கருதவில்லை. முன்னைப் பழமை எப்படிச் சிறந்ததோ, அதுபோலவே பின்னைப் புதுமையும் சிறந்தது என்றே திருவாசகம் கூறுகிறது. ஒரு மரம் என்றால், அதில் சருகுகள் விழும். பழுப்புகள் இருக்கும். இவையனைத்தும் ஒருசேர, ஒரு காலத்திலோ அல்லது ஒன்றன்பின் ஒன்றாகவோ தோன்றி விளங்கும். ஆதலால், பழமைக்கும் புதுமைக்கும் எப்பொழுதும் போர் வராது; போர் வரவும் கூடாது! இரவும் பகலும் போலப் பழமையும் புதுமையும் ஒன்றினையொன்று தொடர்ந்து வருவதே இயற்கை. தொன்மையானவை யெல்லாம் சிறப்புடையன என்று கருதவும் முடியாது. இன்று தோன்றுவனவெல்லாம் புதுமை என்று தள்ளவும் முடியாது. பழமைக்கும் புதுமைக்கும் இடையே நிகழும் போராட்டம் தான் தமிழர் சமயப் போராட்ட வரலாறாக வடிவம் பெற்றது.

திருவள்ளுவர் சிறந்த அறிவுக்கு இலக்கணம் வகுத்துத் தந்தார். நேற்றைய அறிவு இன்றையப் புதுமையை ஏற்றுக்

கொள்ள மறுத்தால் வாழ்க்கையில் உயிர்ப்பு இல்லை. வாழ்க்கை தேங்கிய குட்டையாகப் போய்விடும். தேங்கிய குட்டையின் தண்ணீர் குடிக்கவோ, குளிக்கவோ பயன் படாது. அதுபோலவே, சிந்தனையிலும் அறிவிலும் தேங்கிய மனிதர்கள் ஒருபோதும் பயன்படமாட்டார்கள். திருக்குறள் கருத்துப்படி அறிவுக்கு எல்லைக்கோடு இல்லை; அறிவின் இயல்பு மேலும் மேலும் வளர்தலுக்குரியது. இன்றைய அறிவை நோக்க நேற்றைய அறிவு அறியாமையாகத் தெரிய வேண்டும். அப்படித் தெரிந்தால்தான் மனிதன் சிந்திக்கிறான் என்பது வெளிப்படும். சிந்தித்துத் தன்னைச் செழுமைப் படுத்திக் கொள்ளாத மனிதன் காலத்தை வென்று நிற்ப தில்லை. மேலும் மேலும் வளராத அறிவு இன்பம் தராது. உலகியல் வரலாற்றிலேயே நேற்றைய அறிவை, வளரும் அறிவு வென்று விளங்குவதைத்தான் பார்க்கிறோம். விஞ்ஞானத்தின் சாதனைகூட இதுதானே!

நேற்று அம்புலி! முந்தாநாள் சந்திரன் தெய்வம்! அதற்கு முந்திய நாள் சந்திரன், பல மனைவிகளுள்ள குடும்ப நிலையினன் என்றிருந்த செய்திகளை அறியாமையாக்கி, முக்காடிட்டு, மூலையில் கிடத்திவிட்டு 'அப்போலோ' பறந் திருக்கிறது. சந்திரன் பூமியைப்போல் ஒரு கண்டம் என்று உலகத்திற்கு உணர்த்த! சென்ற சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, அணு என்றால் பிளக்க முடியாதது என்ற கருத்து விஞ்ஞானிகளிடையே நிலவியது. ஆனால், இந்த நூற்றாண்டில் அணுவைத் துகள்களாக உடைக்க முடியும் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள் ஆதலால், அறிவு நிலைத்த ஒன்றன்று; அது வளரும் தன்மையது. அறிவு வளர வேண்டுமென்றால் அக்கறையோடு நேற்றைய அறிவை ஆய்வு செய்து சமுதாயத்திற்குத் தீங்கு தராத வகையில் ஏற்றுக்கொள்ளும் துணிவுவேண்டும். காதல் வாழ்க்கையில், உணர்வு கலந்து ஒத்துக் கூடி வாழும் வாழ்க்கையில் இன்பம் மேலும் மேலும் கூடும். அந்த இன்ப வேட்கை தணியாது,

மேலும் மேலும் வளரும். சுவைக்கச் சுவைக்க நேற்றையச் சுவையினும் இன்றையச் சுவை மேம்பட்டு விளங்கும். தலைமகன் — தலைமகளிடையே மாறுபாடில்லாது போனாலும், காதற் சுவை புதிது புதிதாகத் தோன்றும். அது, காதலின் இயற்கை. அதுபோலத்தான் அறிவு இயல்பாகவே நாளுக்கு நாள் தழைத்து வளரும்.

ஆதலால் அறிவைத் தேங்கிக் கிடக்கும் குட்டையாக்கிக் கொள்ளாமல் மேலும் மேலும் புதிய சிந்தனையால் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதைத் திருவள்ளுவரின்,

*"அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறுஞ் சேயிழை மாட்டு"* (1110)

என்ற குறளால் அறியலாம்.

## ஒப்பற்ற உவமை!

ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்வது தமிழ் மரபின் ஐந்திணை ஒழுக்கம். அதாவது விழுமிய அன்பு வாழ்க்கை. ஒருவனும் ஒருத்தியுமாகக் கூடிக் கலந்து வாழும் வாழ்க்கையை விளக்கக் கவிஞர்கள் பல்வேறு உவமைகளை எடுத்துக்காட்டுகின்றனர். இன்று, 'மணியும் ஒளியும்போல', 'மலரும் மணமும் போல', 'தமிழும் இனிமையும் போல' என்றெல்லாம் எடுத்துக்காட்டிப் பேசுகின்றார்கள். இந்த எடுத்துக்காட்டு உவமைகள் ஒன்றினும் ஒன்று தரத்தில் தாழ்ந்ததாக இருக்கின்றன. ஒன்றில்லாமலும் ஒன்று இருக்கலாம். மலர் நீங்கிய வேறொரு பொருளிலும் மணம் உண்டு. மணி நீங்கிய வேறொரு பொருளிலும் ஒளியுண்டு. அதேபோல, இனிமை வேறொரு பொருளிலும் உண்டு.

காதல் வாழ்க்கையில் கிடைக்கும் இன்பம் பிற துறைகளில் கிடைக்கமுடியாது. காதல் வாழ்க்கையின் மூலம்

கிடைக்கக்கூடிய இன்பத்தை ஒருவன், ஒருத்தியில்லாமலும், ஒருத்தி, ஒருவன் இல்லாமலும் பெற முடியாது.

மணமற்ற மலர்களும் உண்டு. ஒளியற்ற மணிகளும் உண்டு. இன்சுவையற்ற தமிழும் உண்டு. அதுபோலக் காதல் வாழ்க்கை இருக்க முடியாது. காதல் வாழ்க்கை முழுமை யானது; தப்பாமல் இன்பம் தரவல்லது. ஆதலால், திருவள்ளுவர் இந்த இன்ப வாழ்க்கையை விளக்கப் புதிய முறையை எடுத்தாளுகின்றார். இந்த இனிய வாழ்க்கையின் இயல்பை, பொருள்களை மையமாகக் கொண்டல்லாமல், உணர்வையும், உறவையும், நட்பையும் மையமாகக் கொண்டு. விளக்குகிறார். உடலுக்கு, உயிர் இன்றியமையாதது. அதுபோலவே உயிர்க்கு உடலும் இன்றியமையாதது. ஒன்றை யன்றிப் பிறிதொன்றில்லை! ஒன்றின் பயன் பிறிதொன் றினைச் சார்ந்தேயிருக்கிறது. இன்புறுதலும், இன்புறுத்தலும் ஒன்றினுக்கொன்று செய்து கொள்கின்றன. உயிர், உணர்வால் உடலுக்கு இன்பம் தருகிறது. உடல் துய்த்தல் வழி உயிர்க்கு உணர்வைச் சேர்க்கிறது. உயிருணர்வின்றி, உடலின் இயக்கத் திற்குச் சுவையில்லை; இன்பமில்லை! உயிரின் பண்புகள் உடலின் இயக்கத்தினாலும், துய்த்தலினாலும் முழுத் தன்மை அடைகின்றன. இதனை உணர்ந்த திருவள்ளுவர்,

> "உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
> மடந்தையொ டெம்மிடை நட்பு" (1122)

என்று பேசுகிறார்.

உடலுக்கும் உயிருக்கும் இடையேயுற்ற நட்பே இந்த உலகில் மிகவுயரிய நட்பு; எந்தக் காரணத்தினாலும் பிரிக்க முடியாத நட்பு; இன்பமோ, துன்பமோ இரண்டுக்கும் இயைபானது. உடலுக்குற்ற துன்பத்தை உயிரே அனுபவிக் கிறது. உயிரைப் பிரிய நேரிட்டால் உடல் தன்னைப் பயனற்றதாக்கிக்கொண்டு எரியில் இடத்தக்க நிலைமையைத் தோற்றுவித்துக் கொள்கிறது. அறிவின் விளக்கமோ அல்லது

அன்பின் விளக்கமோ உயிரும் உடலும் ஒன்றியிருந்தால்தான் ஏற்பட முடிகிறது.

இங்கு, உடம்பு என்பதைப் பருவுடலாகக் கொள்ளாமல், நுண்ணுடலாகக் கொண்டால் மிகச் சிறந்த பொருள் கிடைக்கிறது. நுண்ணுடலும் உயிரும் எப்பொழுதும் பிரிவது இல்லை. தூய காதல் அதுபோலவேயாம். காதலர்கள் பிறப்புக்களுக்கு அப்பாற்பட்டும், காதலர்களாகவே மீண்டும் மீண்டும் பிறந்து வாழ்கின்றனர்.

அதாவது உயிரினுடைய அகக் கருவியாகிய புத்தி தத்துவத்திலேயே இந்த விழுமிய காதல் தோன்றித் தழைத்து வளர்ந்து அங்கேயே தங்குவதால், உலகியலில் ஏற்படும் மரணம், காதல் வாழ்க்கையை மறைத்து விடுவதில்லை. ஆதலால், காதல் வாழ்க்கை, நுண்ணுடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவினை யொத்ததாக அமைதல் வேண்டும். அத்தகைய காதல் வாழ்க்கையே தூய காதல் வாழ்க்கை. இந்தக் காதல் வாழ்க்கையையே தெய்வத் தன்மையுடையதாக ஆன்றோர் கருதுகின்றனர். உடற் சார்புடைய வாழ்க்கை காதலுமன்று; காமமுமன்று; தாழ்வான தீமை. நாடு முழுதும் சிறந்த காதல் வாழ்க்கை மலர்தல் வள்ளுவத்திற்குப் புகழைத் தரும்.

## வாழும் ஊர்!

மனிதர்களின் இன்ப வாழ்வுக்கு இன்றியமையாத் தேவைகள் பற்பல. ஒன்றிருந்து ஒன்றில்லையானாலும் வாழ்க்கை இன்பமாக இருக்காது. தேவை பலவற்றுள்ளும் தலையாயது அவன் வாழும் ஊரின் நல்லியல்பாகும். இன்று பல ஊர்கள் பெயரளவில் ஊர்களாக இருக்கின்றனவே தவிர, உண்மையில் ஊராக இல்லை. ஊர் என்றால் பலபேர் கூடி வாழும் இடம் என்று பொருள்படும். ஓர் ஊரில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்தது அறிந்து

உணர்வால் ஒன்றுபட்டுக் கூடித் தொழில் செய்து உறவு கலந்து உண்டு மகிழ்ந்தும், மகிழ்வித்தும் வாழும் மக்களையுடையதே ஊராகும். ஊரில், வடிவத்தால் பல்வேறு தனி மனிதர்கள் வாழ்ந்தாலும், உறவாலும் உற்று உதவும் பண்பாலும் வேறுபாடற்ற ஒரு சமுதாய உணர்வு நிலவ வேண்டும். பெயரளவில் பல்வேறு குடும்பங்களாக வாழ்ந்தாலும் அவர்களுக்கிடையில் ஒரு குடும்ப உணர்வு கால் கொண்டிருக்கவேண்டும். இத்தகைய ஊரே, ஊரெனப் படும்.

ஒரு மனிதனின் வாழ்க்கை வெற்றிக்கு, அவனுக்கு இயைபான பலர் வாழக்கூடிய ஊராக இருந்தாலொழிய அவன் முன்னேற முடியாது. அவன் வாழும் ஊரையும் முன்னேற்ற முடியாது. இவ்வியைபு யென்பது வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடிய வழிகளிலேயாம். தனிப்பட்ட வாழ்க்கை யிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி, ஒவ்வொரு மனிதனுக்கும் கூட்டு வாழ்க்கைப் பொறுப்பு இருக்கிறது. ஒருவருக்கொருவர் துணை நின்று தோளொடு தோள் கொடுத்து வாழ, ஓரூரில் இருக்கிறவர்கள் கற்றுக்கொள்ளத் தவறினால் ஆங்குத் துன்பமே நிலவும்; பண்புக்குப் பதில் பகைமை குடிகொள்ளும்; உழைப்புக்குப் பதில் உறிஞ்சி வாழ்தலே உருக்கொள்ளும்; வளத்திற்குப் பதில் வறுமை இடம் பெறும்; நெஞ்சு நிறைந்த அன்பு வழிப்பட்ட உறவுக்குப் பதில் வஞ்சினம் வேர்விடும்; ஊர், ஊராக விளங்காது. காலப்போக்கில் சுடுகாடாக மாறும். ஒத்த உணர்வு படைத்த இனம் இல்லாத ஊரில், ஒருவன் எந்தக் காரியத்தையும் வெற்றியுடன் செய்து முடிக்க முடியாது. சுருதியில்லாத பாட்டு உண்டா? பண் இல்லாத பாட்டு உண்டா? இருக்க முடியாது; இருந்தாலும் சுவைக்காது. அதுபோலத்தான் தமக்கு இனம் அல்லாத மக்களோடு கூடி வாழும் வாழ்க்கை கொடிய துன்பத்தைத் தரும். நம்முடைய இயல்பிற்கும் இலட்சியத்திற்கும் இசைவாகத் துணை நிற்கக் கூடிய

இனத்தைப் பெறுவோமானால், வாழ்க்கையில் எல்லா வெற்றிகளும் கிடைக்கும். அதனாலன்றோ, வறட்சித் தன்மையுடைய கிழத்தன்மை வராமல் வாழ, சான்றோர் வாழும் ஊரில் வாழ்தல் துணையென்று புறநானூறு பேசுகிறது.

ஆதலால், பொருளற்ற வாழ்க்கையைவிட — அழிவற்ற வாழ்க்கையைவிட — தமக்கு இனமல்லாதவர் வாழும் ஊரில் வாழ்தல் கொடுமையினும் கொடுமையானதாகும். நம்மோடு வாழ்பவர், நம்மொடு முரண்பட்ட இனமாக இருப்பின், நம்முடைய வாழ்க்கை வறிதே பாழாகப் போய்விடுகிறது. வித்துக்கு இனமாகிய மண் கிடைக்காது போனால், முளையும் இல்லை, செடியும் இல்லை; மரமும் இல்லை; பூத்துக் குலுங்குதலுமில்லை; வழிவழி வாழ்தலும் இல்லை. அதுபோலவே ஒவ்வொரு மனிதனுக்கும் ஒத்த இனமல்லாது போனால், ஊக்கமில்லை; உணர்வில்லை; உழைப்பில்லை; முன்னேற்றமில்லை. அவனுக்கும் பய னில்லை; அவனுடைய சமுதாயத்திற்கும் பயனில்லை. ஏன்? கடவுளுக்கேகூடப் பயனில்லை.

ஆதலால் நமக்கு ஒத்த இனமுள்ள ஊர்களைத் தேடி வாழ்தல் நல்லது. அங்ஙனம் இல்லாது போனால், நம்மோடு வாழ்பவர்களையாவது நமக்கு ஒத்த இனப்பண்பு உடையவர் களாக உருவாக்கிக் கொள்வது அவசியம். இங்கு இனம் என்பது புறத்தால் அல்ல; உணர்ச்சி வயப்பட்டதுமல்ல; தேர்ந்து தெளிந்த அறிவும், நல்லுணர்வும் இன்றியமையாதது. அவர்கள் கோவலன் மாட்டுக் கண்ணகி காட்டிய பரிவையும், பாண்டியன் நெடுஞ்செழியனிடத்தில் கண்ணகி காட்டிய வெகுளியையும் ஒத்து, நம்மிடத்தில் பரிவும், உரியபோது கண்டிப்பும் உடையவர்களாக இருக்கவேண்டும். விரைந்தோடும் வண்டிக்கும் தடைக் கருவி (பிரேக்) தேவையே. அதுபோல, முன்னேற்றத் திசையில் உந்திச் செலுத்தி — உரியபோது விபத்துக்களின்றித் தடுத்து நிறுத்திப்

பாதுகாப்புச் செய்யும் தகுதியுடையவர்களே உண்மையான இனம்.

காதலிக்குக் காதலனைப் பிரிந்து வாழ்தல் துன்பம் தருவது. அதற்கிணையான துன்பம் உலகத்தில் வேறு இல்லையென்பது தமிழிலக்கிய முடிவு. காதலி, காதலன் பிரிந்து வருந்தும் துன்பியல்பை வடித்துக் காட்டும் அகத்துறை இலக்கியங்கள் தமிழில் ஏராளம் உண்டு. "நிற்பிரியேன், பிரியின் தரியேன்" என்பதே காதலியின் சூளுரை. பிரிவுத் துன்பத்தைப் பிறிதோரிடத்தும் திருக்குறள் — தலைவி வாயிலாக,

"செல்லாமை உண்டேல் எமக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (1151)

என்று பேசுகிறது.

காதலி, காதலனைப் பிரிந்து வாழும் துன்பத்திற்கு இணையான துன்பமாக வேறொன்றையும் சொல்ல முடியாது. வேறு எதை இழந்தாலும் அல்லது பிரிந்தாலும் வேறொன்றின் மூலம் ஈடுசெய்து துன்பத்தை மாற்றிக் கொள்ளலாம். காதலர்ப் பிரிவில் அஃதிலாது. இயன்றால், அது காதலுமில்லை. ஆனால், காதல் பிரிவுத் துன்பத்திற்கு நிகராக இனமல்லாதவர் வாழும் ஊரில் வாழும் துன்பத்தைத் திருவள்ளுவர் இணைக்கின்றார். ஆம்! காதலின்பம் ஒரு வகையான உயிரின்பம். அந்த இன்பத் திற்குக்கூட இடையூறு செய்யாமல், துணை நிற்பதோடன்றி வேறு பிற துறைகளிலும் துணை நிற்கக்கூடிய இன்றியமை யாத ஒன்று இனமேயாகும். ஆதலால், நமது வாழ்க்கைக்கு ஒத்த இனத்தை ஊரில் உருவாக்கி ஒத்ததறிந்து வாழ்வோமாக.

தமக்கு இனமல்லாதவர்கள் வாழும் ஊரில் வாழ்தல் துன்பம். அதனினும் துன்பம், இன்பத்திற்குரிய காதலனைப் பிரிந்து வாழ்தல்.

*"இன்னா தினனில்லூரர் வாழ்தல் அதனினும்*
*இன்னா தினியார்ப் பிரிவு"* (1158)

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

## வாழ்வாரும் வீழ்வாரும்

**உ**லகப் பொதுமையிலிருந்தே தனிமையும் தோன்றியது. பொதுமை தாயென்றால், தனிமை சேய். பொதுமையும் தனிமையும் அன்பும் ஆர்வமும் உடைய இடத்தில் முரண்பாடுடையன அல்ல. அப்படியன்றி வறண்ட மனப் போக்கு உடையவரிடத்தில் தனிமையும் பொதுமையும் முரண்பாடுடையனவாகி, மோதத்தான் செய்கின்றன. வான் மழை வையகத்திற்குப் பொது. வான்மழைக்கு நாடு, மொழி, சமயம் ஆகிய வேறுபாடுகள் கிடையா. வையகத்தை வாழ்வித்து வாழும் வான் மழைக்கு ஈடேது? இணையேது? ஆதலாலன்றோ, வள்ளுவம் தனக்குவமை இல்லாதவனை வாழ்த்திய பிறகு, வான்மழையையும் சிறப்பித்துப் பேசுகிறது.

இந்தப் பரந்த வையகத்திற்கு வடிவமும், வண்ணமும், வளமும், உணர்வும் அனைத்தும் வழங்குவது வானின் கொடையேயாம். வானம் வழங்காதெனில், இந்தப் பாரினில் பசும் புல்தலையும் காண்பதரிது என்பது வள்ளுவம். ஏன்? மனிதனின் உயர்ந்த வானோர்க்கும் கூட பூசனை கிடைக்காது என்றும் வள்ளுவம் உணர்த்துகிறது. ஏன்? அலைகடலின் வளம்கூட, வானின் வளம் சுருங்கின், சுருங்கும் என்பது வள்ளுவத்தின் முடிவு. ஆதலாலன்றோ அருளாளர்களும் கூட வான்மழையை இறைவன் தன் திருவருளேயென்று போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

வான்மழை வையகத்திற்குப் பொதுவானாலும், பொருளறிந்து போற்றினால்தானே பயனுண்டு! வான்மழை பொழிகிறது. அங்ஙனம் பெய்யும் பொழுது வாரி பெருக்கி ஏரி நிறைத்துப் பயன் கொண்டால்தானே? அங்ஙனம் பயன்

கொள்ளாமல் மழை பெய்கிறது என்று கூறி வீட்டில் ஒரு மூலையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துத் தூங்கினால் வாரி வளம் பெருக்குமா? அல்லது வளம்தான் பெருகுமா? வான்மழை பயனுடையதே ஆயினும், பயன் படுத்துவோரின் திறனைப் பொறுத்தே மிகுதியும் பயன் படுகிறது. நிலம் உண்டு. ஆனால் தரிசு! நிலங்கள் தரிசாகக் கிடக்குமாயின் ஏது பயன்? வாழ்தல் ஒரு கலை; நுண்கலை; கவின்கலை, மானிடரில் சிலரே வாழ்கிறார்கள். மற்றவர்கள் வாழ்வதில்லை. ஊனுக்குரிய குற்றேவல் செய்கிறவர் களாகவே இருக்கிறார்கள்.

அதாவது, ஊனினுக் குணவளித்து வளர்த்து, அதனைச் சுமந்து உலாக்காட்டி, உறங்கல் செய்து ஏவல் செய்வார்கள். ஊனினால் ஆய பயனை அடையமாட்டார்கள். வாழ்தல் என்பது ஆற்றல் மிக்க ஒரு கலை. அப்படி வாழ்பவர்கள் வாழ்க்கையில் தெளிந்த சிந்தனையின் பதிவுகள் இருக்கும். காலமனைத்தும் கடமைகளாக வடிவுற்றிருக்கும். ஆன்ற அறிவும், ஆள்வினையும் வையகத்திற்கு வளம்பல சேர்க்கப் பயன்படும். அவர்தம் வாழ்க்கையில் துன்பமில்லை. 'இன்பமே எந்நாளும், துன்பமில்லை' என்ற அருள் வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்வர். வையகத்தையும் திகழவைப்பர். அதனால் வான் சிறப்புக்குப் பயனுண்டேயாயினும் அந்தப் பயனைத் தரத்தக்கவர்கள் வாழ்பவரே. வாழ்வார், வீழ்வார் இரண்டும் முரண்பட்ட சொற்கள். வாழ்வதற்குத் தன் முயற்சி தேவை. வீழ்தலுக்கு யாதொரு முயற்சியும் தேவையில்லை. அஃதியற்கை. பள்ளத்திலிருந்து மேட்டிற்குத் தண்ணீரை ஏற்றுதற்கு முயற்சி தேவை. ஆனால் மேட்டிலிருந்து பள்ளத்திற்குத் தண்ணீரைக் கொண்டு வர முயற்சியே தேவையில்லை. மனிதரில் பலர் வாழ்வது போலக் காட்டிச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை மாணிக்க வாசகரும், "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்று அழகுறக் காட்டுகின்றார். இந்த வையகம், வாழ்வார்களை

நம்பி இருக்கிறது. வையகத்திற்கு, இயல்பில் சில வளமுண் டாயினும், வாழ்வார்கள் இல்லையாயின், அவையும் பயன்ற்றுப் போகின்றன. அதனாலன்றோ திருவள்ளுவர் 'வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்' என்று கூறுகின்றார். வான்மழை பெய்யும் பொழுது வாழ்வார் மகிழ்ந்து முழுதாகப் பயன் துய்ப்பார். வாழாதார், மழையைக் கண்டால், நனைந்தாலுமேகூட உள்ளவாறு உரிய பயன் காணார்; பயனும் துய்த்தறியார். அதுபோலவே, காதல் வாழ்க்கையென்பது, அரிய ஒன்று. காதல் வாழ்க்கை செவ்வியதாக அமைய ஆற்றல் அதிகம் தேவை. காதல் வாழ்க்கை எளிதாகத் தோன்றலாம். ஆனால், அருமையானது. அஃது ஒரு பருப்பொருள் அன்று, நுண்பொருள். உடற்சார்பு உடையது அல்ல; உயிர்ச்சார்புடையது. அறியாமையின் பாற் பட்டதல்ல; அறிவின் பாற்பட்டது. இன்புறுதல் மட்டுமல்ல; இன்புறுத்தலும் இயைந்தது. மிக மிக மென்மையானது. வள்ளுவம் 'மலரினும் மெல்லிது காமம்; சிலரதன் செவ்வி தலைப்படுவார்' என்று கூறுகிறது. சார்பால் ஒரு வீட்டில் சேர்ந்து வாழ்வோர், காதலராகி விடமாட்டார்கள்.

கணவன் — மனைவி என்ற பெயர் பூண்டமையாலும் — மனைகளில் வாழ்கின்றமையாலும், மக்கள் பலரைத் தந்தமையினாலும், அவர்கள் காதலராகி விடமாட்டார்கள். அவையெல்லாம் ஊன் விளையாட்டாகவும் இருக்கலாம். ஊனைக் கடந்தது காதல். உயிர்கள் ஒன்றாதல் காதலின் சித்து. இங்ஙனம் காதல் செய்து வாழ்பவர்கள் வாழ்க்கையிலேயே கலவி, பயனுடையதாக, பொருளுடை யதாக உயிர் வாழ்க்கையைத் துளிர்க்கச் செய்கிறது. அப்பொழுதே விருப்பமும் விழுமியதாகி தவமும் கை கூடுகிறது. இத்தகு தவம் நிறைந்த நற்றவக் காதல் வாழ்க்கை, வள்ளுவம் காட்டும் காதல் வாழ்க்கை. வானம் எல்லோருக்கு மாகத்தான் பெய்கிறது. ஆனால் வாழ்வோரே பயன்படுத்திக் கொள்கிறார்கள். எல்லோருந்தான் கூடி வாழ்கிறார்கள்.

ஆனால் வாழ்வோரே காதலாக்குகின்றனர். மற்றவர்கள் காதற் பயனின்றி வையகத்திற்கு ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபடுகின்றனர். வையகத்திற்கு ஆள் சேர்ப்பதில் செயற்கை முறை வந்தாலும் வரலாம். ஆனால் உயிர்களைத் தழைக்கச் செய்து வளர்க்கும் காதலுக்கு மாற்றாகச் செயற்கைமுறை வரமுடியாது. அதனாலன்றோ பாரதியும்,

*"காதல் காதல் காதல்*
*காதல் போயின் காதல் போயின்*
*சாதல் சாதல் சாதல்"*

என்று கூறுகின்றார். ஆதலின் வையகத்தை வாழச் செய்யும் காதலே வள்ளுவம் காட்டும் காதல்.

*"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்; வீழ்வார்க்கு*
*வீழ்வார் அளிக்கும் அளி"* (1192)

என்பது குறள்.

## கனவுலக வாழ்க்கை

**ம**னித வாழ்க்கை விசித்திரமானது. நாழிகைக்கு நாழிகை ஆயிரம் ஆயிரம் ஆசைகளால் அலைமோதப் படுகின்றோம். இத்தகைய வாழ்க்கையில் கனவும் ஒரு முக்கிய மான இடத்தைப் பெறுகிறது. மனிதனுடைய ஆசை உலகம் அவன் அயர்ந்து உறங்கும்பொழுதும் விடுவதில்லை. உடல் உறங்கினாலும் உணர்வுப் புலன் வேலை செய்கிறது; கற்பனை செய்கிறது. வாழ்க்கையைப் பற்றிய கனவு காண்கிறது. இந்தக் கனவு, நடைமுறைக்கு வருமா? வராதா? என்பது ஆண்டாண்டுக் காலமாக நம்முடைய சமுதாயத்தில் கேட்கப்பட்டு வரும் கேள்வி. இதற்கு அறுதியிட்ட விடையை நாடு இன்னும் அறியவில்லை. ஆனாலும் விடை வராமலும் இல்லை.

சில கனவுகள் பயன்தரும் என்று கூறியுள்ளார்கள். அதாவது கனவு, நினைவுலகத்தின் விரிவாக அறிவுப்புல னொடு கூடிக் கண்ட கனவாக இருக்குமாயின் பயன்தரும். அதுவும் நாட்காலைக் கனவாக இருக்குமானால் முக்காலும் பயனளிக்கும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. அங்ஙன மின்றி நினைவுலகத்துக்குத் தொடர்பில்லாமல் — அறிவுப் புலனுக்கு இயைபின்றிக் காணப்பெறும் கனவுகள் பயன் தாரா. அதோடு கனவினை நினைவுலகத்துக்குக் கொண்டு வந்து செயற்படுத்தி இன்பம் காண வேண்டியவனும் மனிதனே! அதற்குரிய ஆன்ற அறிவும் ஆள்வினையும் இல்லாதவர்களின் கனவு, ஓர் அமாவாசைக் கற்பனையே. இந்தக் கனவுக்கு இனமில்லை; தோற்றக்கால்கள் இல்லை. அஃதொரு வெற்றுச் சூன்யமாகவே விளங்கும். இத்தகைய கனவு காண்போர் பெரும்பாலும் சோம்பேறிகள்; மூடர்கள்; காமுகர்கள்; தாமும் வாழாது மற்றவர்களையும் வாழவிடாது தடுப்பவர்கள்.

கனவு நினைவுலகத்திற்கு — நடைமுறைக்கு வராது போனால், துன்பம் தொலையாது; மாறாகப் பெருகும். இன்பத்தின் எல்லையைத் தீண்டுதல்கூட அரிது. ஆனால் கனவு, காண்கின்ற நேரத்தில் இன்பமாக இருக்கும். கனவு, காண்கின்ற நேரத்திற்கு இன்பமாக இருப்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டுவதன் மூலம், கனவுலகில் வாழ்வதை மறுக்கிறார். கனவு, நிலைத்த பயன் தராது. சிலர் கனவுலகத் திலேயே சஞ்சரித்துக் கொண்டிருப்பர். அவர்களுக்கு நிலையான ஒரு நினைவுலகம் இருப்பதே தெரியாது. பலர் சோம்பேறிகளாக ஆவதற்குக் கூடக் காரணம் கனவுதான்.

ஒருவர் பரிசுச் சீட்டில் ஐந்து இலட்சம் பரிசு விழுந்து விடுவதாகக் கனவு காணத் தொடங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கனவு, காணத் தொடங்கிய பொழுதிலிருந்தே அவருடைய உணர்வுகளும் அறிவுப் புலன்களும் நல்ல பகல் பொழுதில் கூட கண்முன்னும், கை

முன்னும் கிடக்கும் கடமைகளை விட்டு விட்டுப் பரிசு கிடைக்கும் கனவுலகத்திற்கு அழைத்துச் சென்றுவிடும். கனவில் பரிசு கிடைக்கும். பரிசுக்குரிய திட்டங்கள் தீட்டப்படும். கனவு கலைந்து நினைவுலகத்திற்கு வரும் பொழுது கூட அந்தக் கனவினுடைய சக்தி பரிசு கிடைத்துவிடும் என்பதை உறுதிப்படுத்தி உணர்வுகளைக் கெடுத்துக் கடமைகளைச் செய்யவொட்டாது தடுக்கும். ஆனால் பரிசோ விழவில்லை. இங்கோ வேலையும் கெட்டது. மீண்டும் மீளா வறுமை! ஆதலால் கனவு இம்மியும் நெடிய பயனைத் தராது; நிலைத்த பயனைத் தராது; வாழ்க்கையின் அனுபவத்திற்கு எதையும் கொண்டுவந்து சேர்க்காது. அதனாலன்றோ வள்ளுவம், 'கனவுந்தான் கண்டபொழுதே இனிது' என்று கூறுகிறது. அதாவது, கனவு கண்ட நேரத்திற்கே — அதுவும் உணர்ச்சிக்கு மட்டும் இன்பம். மற்றபடி யாதொரு பயனுமில்லை. இதனை,

> "நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
> கண்ட பொழுதே இனிது" (1215)

என்ற குறளால் உணரலாம்.

## குறளில் குடும்பக் கட்டுப்பாடு!

இன்று நாடு தழுவிய குடும்ப நலத்திட்டம் பேசப் பெறுகிறது; செயற்படுத்தப்பெற்று வருகிறது. செயற்கை முறையில் குடும்பத்தின் எண்ணிக்கை உயராமல் தடுத்து நிறுத்த அரசு ஆன முயற்சியெல்லாம் செய்து வருகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர் இந்தக் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிப் பேசியுள்ளார். ஆனால், அவர் முறை மிகமிக உயர்ந்தது. உள்ளத்திற்கு வலிமை தரவல்லது; உடல் நலத்தினைப் பேணத்தக்கது. ஆராக் காதலை அனுபவிக்கச் செய்வது; அன்பினைப் பெருக்கி வளர்ப்பது.

மனித வாழ்வின் இரட்டை நாடிகள் நட்பும், காதலும். இவ்விரண்டுமின்றி மனித வாழ்க்கை, இல்லை. அதனாலன்றோ பாரதி, "காதல் இன்றேல் சாதல்" என்று சொன்னான். மனிதன் முதலில் சந்திக்கும் காதல் நட்பேயாகும். காதல் என்ற சொல் பொதுவானதே. ஒருவருக்கு ஒன்றன்பால் ஏற்படும் ஆரா அன்பினை — தன்னலச் சார்பற்ற அன்பினை — இடையீடுகளைக் கடந்தும் காட்டப்படும் அன்பினை — மதிப்பு, அவமதிப்புகளைக் கடந்த அன்பினை தோளொடு தோள்மட்டுமல்ல, உயிருக்கு உயிரென ஒன்றித்து வளரும் அன்பினைக் காதல் என்று சிறப்பித்துக் கூறுவது வழக்கம். காதல் காழ்ப்பு அகற்றும்; கனிவினைத் தரும். காதல் உடம்பொடு பட்டதன்று; உயிர்த்தொடர்புடையது. காதல் உடம்பினை வளர்ப்பதன்று; வாயினால் சிரித்து மகிழ்தலுக்கன்று; உயிரைத் தழைக்கச் செய்து வளர்ப்பது காதல்; நெஞ்சு நிறைந்த களிப்புக்கும் கிளுகிளுப்புக்கும் பயன்படுவது காதல். இக்காதல் ஒருவருக்கு, எல்லாம்வல்ல இறைவனிடத்திலும் ஏற்படலாம். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று திருஞானசம்பந்தர் ஓதியுள்ளார். ஓர் ஆண், மற்றோர் ஆணிடத்தில் காட்டும் நட்பைக்கூட முற்றி முறுகி வளரும்போது காதல் என்று சிறப்பித்துக் கூறுகிற அருகிய வழக்குண்டு. ஆனால், உலகியலில் பெரும்பாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள அன்புணர்ச்சியைத்தான் காதல் என்று குறிப்பிடுவது பெருவழக்காகிவிட்டது. அதற்குக் காரணம் பிறதுறைக் காதல் உலகில் அருகிப் போனமையேதான். இறைவனிடத்தில் இன்று காதல் செய்வார் இருக்கிறார்களா? என்ற வினா எழுப்பின் விடை கிடைப்பதரிது. ஏன்? இல்லையென்றே துணிந்து கூறலாம். இறைவனிடத்தில் காதல் செய்வோர் உளராயின் இறைவன்தான் மண்ணில் விளையாடுவானே! நட்புலகிலும் கூடக் காதற்கிழமை

அனைய ஆழமான நட்பு அருமையாகவே இன்று காணப்படுகிறது.

ஆதலால் காதல் என்பது ஒரு சிறந்த கலை; அருளார்ந்த கலை. மனித உலகத்தை அரித்து அலைக்கும் தன்னலத் தொழுநோயை மாற்றிடும் மாமருந்து காதல். பால்வேறுபட்ட இருவர் திருமணம் என்ற ஒரு சடங்கின்மூலம் இணைக்கப் பெற்று, ஒரு மனையில் சமைத்து உண்டு இனம் பெருக்கி வாழ்வதைக் காதல் என்று கருதிவிட முடியாது. சமூகத்தின் நிர்ப்பந்தங்களும், வயிற்றின் பசியும், பால் பசியும் இவைகளை நிர்ப்பந்தமாகப் படைத்திருக்க லாம். காதல், கட்டுப்பாடுகளைக் கடந்தது. ஆனாலும் சிந்தனையின் வரம்புக்கும், சீலத்தின் மாண்புக்கும் நிறை நலத்திற்கும் கட்டுப்பட்டதே காதல்.

இந்தக் காதல், உடற் புணர்ச்சிகளை அவாவி நிற்பதன்று. அஃதில்லாதபோது, அந்தக் காதல் உணர்ச்சி மங்கி மறையாது. பற்றிப் படரும் கொம்பும் மாறாது. அந்தக் காதல் பிரிவில் பேதலிக்காது. பிரிவில், நெருங்கி நின்ற பொழுதினும் அதிகமாக வளரும். இந்தக் காதல் ஊடலில் குலையாது; உலைவின்றி வளரும். சிறந்த காதல் நினைத்த அளவிலேயே இன்பத்தைத் தரும். கண்களால் கண்டபொழுதே இன்பத்தைத் தரும்; நினைத்தலிலும் காண்டலிலும் இன்பம் பெறும் சிறந்தவர்களே காதல் நன்மக்கள். இதனை,

> "உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
> கள்ளுக்கில் காமத்திற் குண்டு" (1281)

என்றார் வள்ளுவர், நட்பியலிலும்,

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்" (785)

என்றும் கூறியுள்ளார். இன்றோ, புணர்ச்சியின்றேல் அது காதலில்லையென்று பலர் கருதுகின்றனர். அதனால் ஆழமான அன்பைச் சமூகம் இழக்கிறது. காதலிக்கப்படும் பொருள் எதிரே இருந்து அன்புணர்ச்சி தலைப்படுவது புலாலுடம்பின் கவர்ச்சி மிக்க தூண்டுதலாகவும் இருக்கலாம். உடனடியாக நிறைவேற்றத் துடிக்கும் அகோர உடற்பசியாக வும் இருக்கலாம். அது நெருப்புப்போன்றது. நெருப்பிற்படும் பொருள் எல்லாம் அழியும். இதனை யாரும் காதல் என்று சொல்வதில்லை. புறத் தூண்டுதலில்லாது நெடுந்தொலைவி லிருக்கும்பொழுது நெஞ்சத்திற்குள் 'உள்குதல்' என்ற அகத்தொழிற்பாட்டின்மூலம் காதல் செய்து இன்பம் ஆர்தலே உயரிய காதல். இந்தக் காதல் பழக்கம் கணவன் மனைவியரிடையே ஏற்படுமாயின் அன்பும் பெருகும்; நலன்களும் நாளும் வளரும்; குடும்ப நலனும் இயற்கை யிலமைந்த கடலணைபோல அணைகட்டும். ஆதலால், புணர்ச்சிகளின் வேட்கை தணிந்து நெஞ்சு நிறைந்த காதலில் மக்கள் உலகம் திளைத்து மகிழ வேண்டுமென்பதே வள்ளுவர் படைத்த காதல்!

## உற்ற துணை!

**வா**ழ்க்கை ஒரு போராட்டமே! தனிமனிதனின் பிறந்தநாள் தொட்டு வாழ்க்கைக் களத்தில் போராடி அடி அடியாக முன்னேறுகிறான். மனிதனைச் சூழ்ந்திருக்கும் பகையோ அளப்பில. அகத்திலும் புறத்திலும் பகையே சூழ்ந்திருக்கிறது. ஆயினும், மொத்தத்தில் ஆராயும்பொழுது, பகைப்புலத்தின் ஆற்றல், மனித ஆற்றலிலும் விஞ்சியதன்று. அகப் பகையே யானாலும் புறப் பகையே யானாலும் அவை இயற்கையல்ல. மனிதன் தன் அறியாமையை ஓயாது எதிர்க்கும் போர்க்குணத்துடன் போராடிக் கொண்டிருப் பானானால் இறுதியில் அவனுக்கு வெற்றியே கிடைக்கும். ஒருகால் வெற்றி கிடைக்காது போனாலும், பகையின் ஆற்றல்

தடுத்து நிறுத்தப்பெற்று வெற்றிக்குரிய வழி துலங்கும். வாழ்க்கைப் போராட்டத்தில் அன்றாடம் கணக்குப் பார்க்க முடியாது. ஆனால், கணக்குப் பார்க்காமலும் இருக்கக் கூடாது. வாழ்க்கைப் போராட்டத்தில் கிடைக்கும் வெற்றிகள் கட்புலனுக்கு வாராமலும் இருக்கலாம். தத்துவ வளர்ச்சிகள் - சமூக மனமாற்றங்கள் உடனடியாக 'பளிச்' சென்று வரக்கூடியவையல்ல. உடனடியாகக் கட்புலனுக்குத் தெரியும் பயன்கள் நெடிய பயனைத் தராது போகலாம். ஏன்? தற்காலிக நலன்களைத் தந்து போர்க் குணத்தை மாற்றினாலும் மாற்றலாம். எப்பொழுதும் சமுதாயத்தை வருத்திக் கொண்டிருக்கும் பிற்போக்கு சக்திகள் அடிப்படை மாற்றத்தை ஒத்திப்போடுவதற்காகத் தற்காலிக நலன்களைத் தாராளமாக வழங்கும். புகழ்ச் சொற்களால் அர்ச்சித்துப் புகழ்ப் போதையில் மயக்கும். கண்ணயர்ந்தால் கையூட்டும் தரும். தயவு — தாட்சண் யங்களுக்குக் கட்டுப்படுத்தும். இந்தக் கட்டங்களிலெல்லாம் புகழ்ப்போதை வசப்படா மலும், மயங்காமலும் இடையில் நிற்காமலும், ஓயாமலும் வாழ்க்கைக் களத்தில் போராடுபவன்தான் இலட்சியச் சார்புடைய — பயனுடைய வாழ்க்கை வாழுகிறான். இல்லையெனில், 'அவனும் வாழ்ந்தான்' என்ற அவலப் பேச்சே எழும்.

வாழ்க்கையில், எரியும் மின்மினிப் பூச்சியைப்போல சிலருக்கு இலட்சிய வேட்கையிருக்கிறது. ஆனால், பொருள் காட்டா ஆற்றலற்ற விளக்கே போல, அந்த இலட்சியம் கனலாகப் பற்றி எரிவதில்லை. இத்தகையோர் இலட்சியங்களைப் பற்றிக் கனவும் காண்பர். நிறையக் கயிறு திரிப்பர். ஆனாலும், செயலிருக்காது. ஏனென்று கேட்டால் "அது ஓட்டை, இது ஓட்டை" என்று சந்தர்ப்பங்களின் மீது பழியைப் போடுவர். "காலம் நன்றாக இல்லை. கலியுகம் அல்லவா?" என்று அங்கலாய்ப்பர். "நல்ல ஆட்கள் இல்லை" என்பார்கள். "காசில்லை" என்பார்கள். இப்படிச் சார்புகளின்

மீதே பழியைப் போடுவர். கொடி, கொம்பை நாடி வாழலாம். ஆனால், மனிதனுக்குச் சார்புகள் தேவை. அவன் தேடிப் பெறவேண்டிய ஒன்றும் சார்புதான். ஆயினும், சார்பையே கதியென நம்பி வாழ்வதும் சிறப்பன்று. புறச்சூழல்களையும், சார்புகளையும் கூட ஒரு மனிதன் உளமார முயன்றால் தனக்கியைந்தவாறு சீரமைத்துக் கொள்ள முடியும். ஆதலால்தான் திருவள்ளுவரும், “பொறியின்மையார்க்கும் பழியன்று” என்று எடுத்தோதுகின்றார்.

ஒரு மனிதன் தன்னுடைய வெற்றிக்கும் தோல்விக்கும் தன்னுடைய சார்புகளின் மீது குற்றம் சுமத்துவது அறிவும் அன்று; ஆள்வினையுமன்று; புகழும் அன்று. இந்தக் கருத்தைத்தான் நாட்டிடை வழங்கும் சாதாரணப் பழமொழி விளக்குகிறது. “ஐந்தும் உண்டானால், அறியாத பெண்ணும் கறி சமைப்பாள்” என்பது பழமொழி. அதாவது, பெண்ணின் சமையற்கலையில் திறனில்லை. சுவை தரும் பொருளனைத்தும் குறைவற இருப்பதால் அவளும் சமைத்தாள். ஐந்தில் ஒன்று குறைவாக இருந்தது. எனினும் அவள் தன் திறனால் சுவைபடச் சமைத்தாள் என்றாலே சமைத்த பெண்ணின் திறன் வெளிப்படுகிறது. அது போல் வேண்டிய அனைத்தும் ஒழுங்காக அமைத்துக் கொடுத்துச் செய்யச்சொல்லிப் பார்க்கட்டுமே! என்று கூறுவது ஆள்வினையன்று. இருப்பதை வைத்துக் கொண்டு தன் ஆற்றலால் சீர்பெறச் செய்வது தான் செயல்திறன் ஆகும்.

ஒரு மனிதன் தான் நடத்தும் வாழ்க்கைப் போராட்டத்துக்கு முதல் துணையெனக் கொள்ளத்தக்கது அவனுடைய நெஞ்சமேயாகும். ஐயோ, பாவம்! சிலருக்கு அப்படி நெஞ்சு என்று ஒரு பொருள் இருப்பதாகவே தெரியாது. சிலருக்கு அப்படி ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அது கடிவாளம் இல்லாத குதிரையாக இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மனிதன் அதை இழுத்துப் பிடித்து ஓரிடத்தில் நிறுத்தமுடியாமல்

அடிமையாகிக் கிடக்கிறான். இத்தகைய மனிதன் எப்படி வாழ்க்கைக் களத்தில் போராட முடியும்? அவனுக்குக் கடமைப்பட்ட — அவனுக்கு அடங்கி ஆட்படக் கூடிய நெஞ்சமே அவனுக்குத் துணையில்லையென்றால் அவன் கெட்டுவிட்டான் என்று பொருள். அவனுக்குக் கேளிர் கிடைக்கமாட்டார்கள்; உறவினர்கள் கிடைக்கமாட்டார்கள்; நண்பர்கள் கிடைக்க மாட்டார்கள். எனவே, வாழ்க்கையை அவன் முடித்துக் கொள்கிறான் என்பதே பொருள். ஆதலால், நெஞ்சை நன்முறையில் பழக்குக! நாள்தோறும் பழக்குக! நன்றில் நிலைநிற்கச் செய்திடுக! உற்ற துணையாக நெஞ்சத்தினைப் பெற்றிடுக! தன் நெஞ்சம் தனக்குத் துணையின்றேல் இந்த நீளுலகில் யாரும் உறவில்லை.

> *"அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே*
> *நீயெமக் காகா தது"* (1291)

என்பது குறள்.

## நெஞ்சமே துணை!

மனிதன் ஓர் அற்புதமான படைப்பு. உலகில் மிக உயர்ந்த படைப்பும் மனிதனே! தொன்மையில் உலகத்தைப் படைத்தவர் யாரோ? ஆனால், இன்று உலகியலைப் படைப்பவன் மனிதனே! நாள்தோறும் போராடிக் கொண்டிருக்கிறான். இந்தப் பழைய உலகத்திற்குப் புதுப்புது வடிவம் கொடுக்கிறான். அவனுடைய ரசனை உணர்ச்சிகளின் ஆற்றல்தான் என்ன? பேசும் மொழி படைத்தான், கனிந்துருகக் கலை படைத்தான். உணர்ச்சியில் திளைத்து மகிழக் காதலும் கண்டான். உணர்ச்சியினைத் தரமுடையதாக்கவும், மேலும் மேலும் உயர்வற உயர்ந்து விளங்கவும் கடவுளைக் கண்டான்.

இத்தகு சீரும் சிறப்புமுடைய மனிதப் படைப்பில் அவனுடைய உடலும் உள்ளமும் புகழ்பெற்று

விளங்குகின்றன. மானிட உடம்பு கட்டையா? அப்படிச் சொல்லுபவர் உணர்ச்சியற்ற மரக்கட்டைகள்! இது புழுக் கூடா? ஐயோ, பாவம்! புண்ணியத்தின் புண்ணியமாகிய சிவன் தந்த இந்தப் புகழ்க் கூட்டை — புண்ணியத்தின் கூட்டைப் புழுக் கூடு என்னலாமோ? அதைவிடப் பாவம் வேறொன்றில்லை. கையில் ஒரு காசு கிடைத்தால் பத்திரப் படுத்துவோருங்கூட விலைமதிப்பற்ற இந்த உடலை வருத்தும் நோய்களுக்கு ஆளாக்கி, நெறி கடந்ததனைப் பயன்படுத்தி அழிக்கின்றனர். திருமந்திரம் அருளிச்செய்த திருமூலரே, "உடம்பார் அழியின் உயிரா ரழிவர்" என்றார். அதுபோதாதென்று மேலும், "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!" என்றார். இங்கே வளர்த்தலென்பது சதை வளர்த்தலைக் குறிப்பிடுவதன்று. உயிர்க்குக் கருவியாக உடல் கிடைத்தது. கருவி, எளிதில் தாங்குதற்குரியதாக இருந்தாலே பயன்படும். சிலர், உடம்பிற்கு உயிரின் நலமறியாது, நாவின் சுவைக்கு அடிமையாகித் தீனி நிறையத் தின்று தொங்கு சதைகளை வளர்த்துக்கொண்டிருப்பர். உயிரின் ஆற்றல் இந்தத் தொங்கு சதைகளைத் தூக்குவதிலேயே வீணாகப் போகிறது. உடலினை அலட்சியப்படுத்துதலே உயரிய பண்பென்று கருதி, "நான் அதெல்லாம் பார்ப்பதில்லை, எதையும் சாப்பிடுவேன், எப்பொழுதும் சாப்பிடுவேன்" என்று மனித உருவில் விலங்காக வாழும் வேறு சிலர் கூறுவர். இன்னும் வேறு சிலர் காலத்தில் சுழன்கென இயங்கும் உலகியலைப் பார்த்தும் காலம் கருதாதவர்களாக இருக்கின்றனர். எல்லாம் வல்ல சிவபெருமான் காலங்கடந்தவர் என்பார்கள். இன்றைய மனித குலத்தில் பலர் காலங் கடந்தவர்கள். காலங் கடப்பதே அவர்கள் இயல்பு. கடிகாரங்கள் — மணிக் கூண்டுகள் — காலங் காட்டும் சங்கொலிகள் — இவ்வளவும் பல்கிப் பெருகியிருந்தும் இந்த உலகில் நம்மவர்களே காலங் கடத்த வல்லவர்கள். இதற்கொரு நோபல் பரிசு வைத்தால் நமது

நாட்டு ஆளே தட்டிக்கொண்டு வருவான். சிவபெருமான் காலங் கடந்தவன் என்பதற்குப் பொருள், அவன் காலத்தைவென்று நிற்கிறான் என்பதேயாகும். காலங்கடத்தி, காலத்தைப் பயனற்றதாக்குபவன் என்பதல்ல.

ஆதலால், உடலியக்கத்தையும் அதற்குரிய பழக்க வழக்கங்களையும் முறைப்படுத்திக் காலத்தில் செய்தல் அதிகப் பயனைத் தரும். குறிப்பாக ஒவ்வொரு தடவையும் முயற்சி செய்தற்குரிய ஆற்றல் வீண் போகாமல் தடுக்கலாம். இங்குத் திருமந்திரத்தில் 'உடம்பை வளர்த்தல்' என்பது உடற்கருவி பயன்படு திறனை வளர்த்தல் என்பதேயாகும். இந்த உடற்கருவி பார்வைக்கு எளிமையாகத் தோன்றினாலும் மாபெரும் தொழிற்கேந்திரங்களை உடையது. ஒன்றோ டொன்று உடன் நின்று தொடர்ச்சியாகத் தொழிற்படும் இயல்புடையது. கண் பார்த்தால் பார்வை அளவோடு நிற்பதில்லை. உடன் அறிவுப்புலன் வேலை செய்கிறது. கை, கால்களும் தேவைப்பட்டுழி வேலை செய்கின்றன. அவசியமிருந்தால் நினைவுப் புலனும் வேலை செய்யும். இங்ஙனம் கடிதில் ஒன்றோடொன்று துணை செய்து வேலை செய்யும் பொறி புலன்களின் கூட்டுறவே இந்த உடம்பு. இந்தக் கூட்டுறவு குலையும்பொழுதே நோய் என்று சொல்கிறோம். மனித குலத்திலும் கூட்டுறவு குலைந்தால், மனிதகுலம் வளர்ந்து வாழ்வதற்குப் பதில் அழியும். எந்த ஒன்றினுடைய முதல் இலட்சியமும் கூட்டுறவாகவே இருக்க வேண்டும். ஆனால் மனிதனின் தற்பெருமை உணர்வும், தன்னல உணர்வும் கூட்டுறவிற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

இத்தகைய விந்தைமிகு மனிதப் படைப்புக்கு மையமாக — நினைப்பின் களமாக — உணர்ச்சிகளின் ஊற்றுக் கண்ணாக — சீலங்களின் பிறப்பிடமாகத் திகழ்வது நெஞ்சமேயாம். புறக்கருவிகளில் கண் எங்ஙனம் சிறந்ததோ, அதேபோல, ஏன்? அதனையும்விட நெஞ்சு சிறந்தது.

ஏனெனில் கண்கருவி மட்டுமே. அதற்குக் கருத்தையோ அல்லது பண்பையோ அல்லது நோக்கத்தையோ சேர்ப்பது நெஞ்சமேயாம். ஆதலால் மனிதனின் ஈடு இணையற்ற உறுப்பு நெஞ்சு. மனிதன் வாழப்போகிறானா? வீழப் போகிறானா? என்பதை நிர்ணயிக்கக்கூடிய சக்தி நெஞ்சத்திற்கே உண்டு. மனிதன் அடையக்கூடியது நரகமா? சொர்க்கமா? என்பதை நிர்ணயிக்கக்கூடியது நெஞ்சமேயாம். இறைவனேகூட நெஞ்சத்தில் கோயில் கொள்ளவே விரும்பு கின்றான். இத்தகைய பேராற்றலுடைய நெஞ்சினிடத்து உறவும் உரிமையும் ஏற்படுத்திக் கொண்டு வாழ்தலே வெற்றிக்குரிய வழி.

இத்தகைய இனிய தத்துவத்தைத் திருவள்ளுவர் காமத்துப்பாலிலே அழகுற விளக்குகின்றார். காதல் உடல் வழிப்பட்டதன்று; உயிர் வழிப்பட்டது. பல்லூழிக்காலம் தொடரக்கூடியது. புணர்ச்சியில் மகிழ உடல் தேவை. உணர்ச்சியில் மகிழ உடல் தேவையில்லை. புணர்ச்சிக்குக் கால எல்லையுண்டு; நில எல்லையுண்டு. உணர்ச்சிக்கு இவ்விரண்டுமில்லை. புணர்ச்சியைவிட உணர்ச்சியே சிறந்தது. அதனால்தான் போலும் கூடலினும், ஊடல் இனிதென்றார் வள்ளுவர். கூடலில் இணைவது வியப்பன்று. ஊடலிலும் மாறுபடா அன்பும் உறவும் உடையராயிருத்தல் உணர்ச்சியின் நிறைவைக் காட்டும். அது மட்டுமின்றி உணர்ச்சி நிறைந்தவர்கள் ஊடல் கொள்ளும் பொழுது வடுக்காணார்; வசை பேசார், உணர்ச்சியற்றார், நெஞ்சிலே புண்படுத்துவர். ஆதலால் நெஞ்சினும் இனிய உறவில்லை. ஒரு மனிதன் எப்பாடுபட்டேனும் நெஞ்சினை உறவாக்கிக் கொள்ள வேண்டும். அதனால்தான் போலும், திருஞான சம்பந்தரும் 'நன்னெஞ்சே' என்று நெஞ்சை இரந்து கேட்டு தன்வயப்படுத்த முயலுகின்றார். எப்படியோ நிகழ்ந்து விட்டது? என்று சிலர் கூறுவர். அஃதொரு பொய். "நெஞ்சிற் சிறந்த கரியிலை" என்று கலித்தொகை கூறும். நெஞ்சறியாத

பொய்யில்லை, சூதில்லை. ஏன்? ஒரு மனிதன் தன் நெஞ்சறியாது எதையும் செய்ய முடியாது. வேறு எந்த உறுப்பையும் எதிலிருந்தும் மறைக்கலாம். ஆனால் நெஞ்சினிடமிருந்து எதையும் மறைக்க முடியாது. அதனால் தான் போலும் "தன் நெஞ்சறிவது பொய்யற்க!" என்றது வள்ளுவம். இஃதொரு நல்ல குறள். சிலர் பொய்யையே மெய்யாகக் கூறுவார்கள். மாணிக்கவாசகரும் 'பொய்யர் தம் மெய்யும்' என்றார். வாயிலிருந்து வெளிப்படும் ஒலி ஒரு பொய்க்கு மெய்ம்மைக் கோலம் தந்து உலவவிடுகிறது. அரங்கில் நிற்பவன் இராணியானாலும் ஒப்பனை அறையிலிருந்தவர்களுக்கு, அவள் நடிப்புக்கூலி வாங்கும் 'சிகப்பி' என்று தெரியாதா? என்ன? ஆதலால் மெய்போலப் பொய் கூறுபவரைப் பார்த்துத்தான் வள்ளுவர் நெஞ்சறிந்த பொய்யைக் கூறவேண்டாம் என்றார். 'கெட்டிக்காரன் புளுகு' என்பதும், பொய்யை மெய்யாக்கிய அறிவுப் புலனின் ஆற்றல் பற்றியதேயாம். ஆனாலும், நெஞ்சு எப்பொழுதுமே உள்ளதை வெளிப்படுத்திக் காட்டும் ஓர் உறுப்பாகும். அதற்கு உள்ளதை மறைக்கத் தெரியாது. ஒப்பனை செய்யவும் தெரியாது.

நெஞ்சமே நமக்கு உறவில்லாது போகும்பொழுது எப்படி அயலார் உறவிருக்க முடியும்? அயலார் உறவைப் பெற்றுத் தருவதும், பெற்ற உறவைப் பேணிக்காப்பதும், அன்புவழிப்பட்ட நெஞ்சங்களின் கடமையாகும். அந்த நெஞ்சு அது தவறும்பொழுது எங்ஙனம் அயலார் உறவாக இருப்பர். ஆதலால், இந்த உலகியலில் காதலில் வெற்றி பெறவேண்டுமானாலும் சரி, நட்பில் வெற்றிபெற வேண்டுமானாலும் சரி, அல்லது எடுக்கும் காரியங்களில் வெற்றிபெற வேண்டுமானால் சரி, முதலில் நெஞ்சை உறவுபடுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய நெஞ்சே நமக்கு உறவில்லாத வழி எதைத்தான் செய்ய முடியும்? என்பது வள்ளுவத்தின் வினா.

*"தஞ்சம் தமரல்ல ரேதிலார் தாமுடைய*
*நெஞ்சம் தமரல் வழி"* (1300)

என்பது குறள்.

## பிணங்கலும் இன்பம்!

**வா**ழ்க்கை, மிகமிக மென்மையானது; இன்பமே இயல்பாகவுடையது. தகுதி சான்றவர்களுக்கு வாழ்க்கை, புணர்ச்சியிலும் இன்பம் தரும்; பிணங்குதலிலும் இன்பம் தரும். தகுதிக் குறைவானவர்கள் புணர்ச்சியில் மட்டுமே இன்பம் காண்பர். பிணங்குதலைப் பெரும் பகையாகக் கருதுவர். வாழ்க்கை புணர்ச்சியிலேயே நிகழுமாயினும் நெடிய பயன் விளையாது. அது போலவே, பிணங்குதலில் பெரும்பொழுது கழியுமாயினும் பயனில்லை. இவ்விரண்டும் கலந்ததே வாழ்க்கை.

நிலத்தொடு தண்ணீர் கலக்கிறது; ஒன்றாகிறது. கட்புலனுக்காகும் நீர் வெள்ளம் நிலத்தின் இயல்பைப் பெற்று விளங்குகிறது. நிலத்தின் வண்ணத்தை நீர் அடைகிறது; நிலத்தின் சுவையையும் நீர் அடைகிறது. இதனையே

'செம்புலப் பெயல்நீர் போல'

என்று குறுந்தொகையும் பேசுகிறது. தண்ணீருக்கு வண்ணம் இல்லை; சுவையில்லை. ஆனால், செம்மண் தரையைச் சார்ந்த தண்ணீர், அச் செம்மண்ணின் வண்ணத்தையும் சுவையையும் பெற்று விளங்குகிறது. நிலத்திற்கும் நீருக்கும் உள்ள உறவைப் போல, உள்ளத்தால் ஒன்றாகிய உறவுடையோர், புணர்தலினும் இன்பம் காண்பர்; பிணங்குதலிலும் இன்பங் காண்பர். ஏன்? இத்தகையவர்கள் புணர்தலில் காணும் இன்பத்தை விடப் பிணங்குதலில் புத்தேள் நாட்டு இன்பத்திலும் சிறந்த இன்பத்தை அனுபவிப்பர். அன்பிற் கலந்து ஒன்றாய நெஞ்சுடை

யோர்க்குத் தன்னிடத்து அன்புடையோர் செய்யும் தவறுகள் தெரிவதில்லை. அதேகாலத்தில் தன்னுடைய தவறுகளைத் தெரிந்து ஒத்துக் கொள்ளும் சிறந்த குணமிருக்கும். தரத்திற் குறைந்தவர்களோ அல்லது அன்புணர்வு அற்றவர்களோ தங்களுடைய குறைகளை உணர்வதே இல்லை. மற்றவர்களுடைய குறையை மலையாக்குவர். உணர்வு கலந்த உறவு வளர்ச்சிக்கு, மற்றவர் குற்றம் பார்க்கும் குணம் கூடாது. அதேபோழ்து தன் குற்றத்தை உணரும் ஆற்றலிருக்க வேண்டும். யாதொரு சிறப்பும் இல்லாத குற்றங்களுடைய நம்மிடத்திலேயே இவ்வளவு அன்பைக் காட்டுகிறார்களே என்று உணரும் பொழுதுதான் அடக்கம் முகிழ்க்கிறது; அன்பு வளர்கிறது; இன்பம் கால்கொள்ளுகிறது; இத்தகு இயல்புடையவர்களிடையில் பிணங்குதல் ஏற்பட்டாலும் அதுவும் இன்பமே.

உறவுடையவர்கள் இன்னாமையைச் செய்தாலும் அஃதின்பமே யென்று, குறுந்தொகை பேசுகிறது. உறவுடையார் செய்வனவற்றுள் சில இன்னாதனவாகத் தோன்றினும், அவை முடிவில் இனியனவாகவே முடியும். காரணம், இனியனாக இருப்பவர். இன்னாதன செய்வதால் அந்தத் துன்பம் நிரந்தரமானதன்று. உறவுடையார் செய்யும் துன்பம் இனிய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகவும் இருக்கலாம். வரம்பிகந்து போகாமல் விதிக்கும் தடையாகவும் இருக்கலாம். புலன்களையும் உணர்வுகளையும் வளர்த்துச் செழுமைப்படுத்தவும் இன்னாதன செய்யலாம். ஆதலால், இனிய இயல்புடையோர் செய்யும் துன்பமும் இன்பமேயாம்.

"இனிய னாகலின் இனத்தி னியன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே.

என்பது குறுந்தொகை.

புத்தேள் நாட்டு இன்பம் என்றும் இன்பமாக இருப்பது. என்றும் இன்பமாக இருப்பதில் இன்பச் சுவை இருக்காது. பசிக்காது உண்டோர்க்கு பசியின் சுவையும் இல்லை; ஊணின் சுவையும் இல்லை. இத்தகையோர்க்கும் உடல் வாழ்க்கையும் சுவையாக இல்லாது சுமையாகவே இருக்கும். ஆதலால் புத்தேள் நாடு இன்பம் அன்று.

பிணங்கலில் இன்பங் காண்பதே இன்ப வாழ்க்கை! அன்பு வாழ்க்கை; காதல் வாழ்க்கை; நனி சிறந்த நல் வாழ்க்கை.

திருநீலகண்ட நாயனார் குடும்ப வாழ்க்கை இதற்கோர் எடுத்துக்காட்டு. திருநீலகண்டர் இளமையின் காரணமாக மனையறத்தில் வாழ்ந்தும், இன்பத்துறையில் எளியராகிப் பரத்தையின் பால் சென்றார். இதனையறிந்த திருநீலகண்டரின் மனைவி பிணங்கினார். பிணங்கி, “தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்” என்று ஆணை வைத்தார். ஆணை கேட்ட அடியவர் திருநீலகண்டர். இளமையின் காரணமாக எளியராய்ச் சென்றவராயிருந்தும் ஆணையின் காரணமாக மாதரை மனத்தாலும் நினையாத நோன்பு நெறிவாழ்க்கை மேற்கொண்டார். ஒரே வீட்டில் நாயனார் மனைவி, கணவனார்க்குரிய பணிவிடைகள் செய்தும், அயலவர் அறியாமல் புணர்ச்சியின்றி வேறு வேறாகப் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆங்குப் பிணக்கு இருந்தது உண்மை. ஆனாலும் அந்தப் பிணக்கு பகையை வளர்க்கவில்லை. அந்தப் பிணக்கு பக்கத்து வீட்டுக்கும் தெரியவில்லை. பரமன் ஒருவனுக்கே தெரிந்தது. இப்பிணக்கு பேரன்பினை இழக்கச் செய்யவில்லை. பேரின்பத்தையே வழங்கியது. இத்தகு நெறியில் காதல் வாழ்க்கையும் நட்பு வாழ்க்கையும் சிறக்குமானால், எங்கும் இன்பம் பெருகும். இதனை,

“புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து” (1323)

என்று குறள் கூறுகிறது.

தமிழ்மாமுனிவர்
தவத்திரு
# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

திருக்குறள்
இலக்கியம்
சமய இலக்கியம்
சமயம்
பொது